# முன்னுரை

## மகா மஹோபாத்தியாய
## டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்

**வா**ழ்க்கையில் தூய இன்பம் நிறைந்து விளங்கும் வண்ணம் வாழ்தலை யோக வாழ்க்கை யென்று கூறலாம். யோக மென்பது ஒரு சாராருக்கே உரிய ஒருவகைப் பயிற்சி அன்று. பற்றற்றான் பற்றினை யுடைய பக்தர்களும், வையத்தில் வாழ்வாங்கு வாழும் கர்ம வீரர்களும், மருணீங்கி மாசறு காட்சியை யுடைய ஞானியரும் சிறந்த யோகிகளே ஆவார்கள். இவர்களுள்ளும், வையத்தில் வாழ்வாங்கு வாழ்வோர் வாழ்க்கை இக்காலத்தில் மிகவும் அவசியமானது. இவ்வாழ்க்கை நெறியையும், பிற அரிய உண்மைகளை யும், அழகாகவும் இன்சுவையோடும் கூறுவது இந்த **யோக சித்தி** என்னும் சிறந்த அறநூல்.

இதன் ஆசிரியராகிய **ஸ்ரீ சுவாமி சுத்தானந்த பாரதியார்** அவர்கள், தூய வாழ்க்கையும், யோக சித்தியும், மதி நுட்பமும், பரந்த நூலறிவும் வாய்ந்தவர்களென்பது தமிழுலகம் நன்கறிந்ததே. இவர்களைப் போன்ற ஒருவரே இத்தகைய நூலை எழுதும் தகுதி உடையவ ராவர். இவர்கள் தமிழ்நாட்டுக்குப் பயன்படுமாறு தமிழில் எழுதிவரும் நூல்கள் இவர்களுடைய மகோபகாரத்தைத் தெரிவிக்கும்.

ஒவ்வோ ரியலிலும் ஐவைந்து குறள் வெண்பாக் களைக் கொண்ட நூலின் விரிவுரையாக இது விளங்கு கின்றது. பாரதியாரவர்கள் தம்முடைய பரந்த

நூலறிவால் உணர்ந்தவற்றையும், அநுபவத்தால் அறிந்தவற்றையும், படிப்போர் உள்ளத்திற் பதியும் வண்ணம் இந்நூலில் எழுதியிருக்கிறார்கள். பல சமயத்தினருடைய கொள்கைகளில் உள்ள சிறந்த பொருள்களை வேற்றுமை யின்றி எடுத்துக் காட்டும் இவர்கள் இயல்பும், ஞாபக சக்தியும் மிகவும் போற்றற்குரியன.

இப்புத்தகத்தைப் படிக்கும்போது, ஒரு மலையிலிருந்து வரும் பேராறு, வெள்ளம் புரண்டோடுவது போலச் சில சமயம் தோற்றுகிறது; சில சமயம், வாழ்க்கையிலுள்ள குப்பைகளைத் தன் வேகத்தில் போக்கும் பிரசண்டமாருதத்தின் நினைவு உண்டாகின்றது. அநுபவத்தில் உணர்ந்த உண்மைகளைப் பாரதியார் விளக்கும்போது, நம்முடைய ஹிருதயத்தை தொட்டுக்கொண்டு மெல்லென்ற தென்றல் தவழ்வது போன்ற உணர்ச்சி உண்டாகின்றது.

இந்நூலிலிருந்து பாரதியார் ஒரு வற்றாத இனிய தமிழ் ஊற்று என்பது புலப்படும். தமிழ்நாட்டினருடைய அறிவை மலரச் செய்வதற்கும், வாழ்க்கையைப் புனிதமாக்கி, அதைப் பயன்படும்படி செய்வதற்கும் அமைந்த இப்புத்தகம் யாவரும் வாங்கிப் படித்து இன்புறுதற்குரியது.

# அணிந்துரை

## திருவாளர் திரு. வி. கலியாணசுந்தரனார்

விடுதலை யென்றே படுதிரை வையம்
கூவுங் குரலால் மேவும் பயனென் ?
வழியும் உண்டு, விழியும் உண்டு :
நடையும் நாட்டமும் உடைமையே வேண்டும்.
நடக்குநர் சிலரே ; நாடுநர் சிலரே.
இருமையும் ஈண்டிய ஒருவன் இந்நாள்
உள்ளனன் புதுவையில் : உள்ளந் தெளிந்த
*அரவிந் தத்தேன் அருந்தும் வண்டெனச்
சொல்லப் படுவோன் ; அல்லல் தீர்ந்தோன் ;
ஆரியந் தமிழே சீரிய மொழிபல
ஆய்ந்தாய்ந் தியற்கையில் தோய்ந்திறை உண்மையில்
உறுதி கொண்ட விரதன் ; அந்தணன் ;
ஒருமையில் நிற்கும் பெருமை யாளன் ;
சித்தாந் தந்தேர் சுத்தா னந்தன்.
உற்ற அடைவை மற்றவ ரடைய
வளர்வழி விழியும் கிளர்நடை நாட்டமும்
முறைமுறை அரணே நிறைபடி பலவும்
கோலி எடுத்தனன் சீலநல் யோக
சித்தியால் ' யோக சித்தி ' என்றொரு
பந்தம் அறுக்குஞ் செந்தமிழ்க் கோயில் !
சேர்மின், விரைந்தே சேர்மின் !
கூடும் விடுதலை கூடும் இனிதே !

---

* ஸஹஸ்ரார சக்தித் தேன்.

## சிறப்புப் பாயிரம்

புத்தேரிப் புலவர்,

**சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்**

**ப**யன்றரு பனுவல் பற்பல கற்று
நயந்தர வுரைக்கும் நண்பனை யொத்தும்,
உலக வாழ்வின் உண்மையை உணர்த்தி
இகபர சுகங்க ளிரண்டையுந் தருமவ்
வழிகளை நன்கு வகுத்துக் காட்டும்
குணந்திகழ் ஞான குரவனை யொத்தும்,
உற்றுழி யுதவும் '**யோக சித்தி**' யாம்
இப்பெரு நூலை, யொப்பருந் தவத்தோர்,
உள்ளதை உள்ளவா றுணர்ந்த உரவோர்,
சுத்தமெய்ஞ் ஞானச் சுடரெனப் பொலிவோர்,
அரிய பெரிய அறவோர் உறவால்
சகச நிட்டையால் சாதன நெறியால்
தானே பொங்கித் ததும்பிய அறிவால்
முன்னை வழக்கம் முற்றுமா ராய்ந்து,
பின்னை வழக்கம் பிழையறத் தேர்ந்து,
போக்குதற் குரியவை போக்கியும், ஆதரித்
தாக்குதற் குரியவை யாக்கியும், அழகாய்
இக்கா லத்துக் கிசைந்தநன் முறையில்
கற்றவர் தமக்கும் கல்லா தவர்க்கும்
எளிதில் விளங்கிட இனிய மொழியால்

அந்த ணாளன், அருந்தவன், புதுவைச்
சுத்தா னந்த சுவாமி யன்பொடு
குறளை முறையுமாய்க் கூறின னென்றும்
அந்தமி லின்ப மடைந்திச்
செந்தமிழ் நாடு சிறப்புற் றோங்கவே!

## பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | |
| முன்னுரை—(டாக்டர் சாமிநாதையர்) | |
| அணிந்துரை—(திரு. வி. க.) | |
| சிறப்புப்பாயிரம் (தேசிக விநாயகம் பிள்ளை) | |
| சுத்தான்ம விளக்கம் | 1 |
| **க. கடவுளியல்** | (8—35) |
| 1. கடவுள் | 8 |
| 2. உள்ள பொருள் | 15 |
| 3. அருள் விளக்கம் | 21 |
| 4. வழிபாடு | 24 |
| 5. கடவுட்டன்மை | 30 |
| **உ. உலகியல்** | (36—60) |
| 1. உலகாலயம் | 36 |
| 2. உலகநிலை | 40 |
| 3. இயற்கை | 45 |
| 4. உலகுயிர் | 50 |
| 5. உலகவாழ்வு | 55 |
| **ந. அறவியல்** | (61—92) |
| 1. அறம் | 62 |
| 2. அற விரிவு | 67 |
| 3. அறத் தகுதி | 75 |
| 4. அற நெறி | 80 |
| 5. பொது நலம் | 87 |
| **ச. அறிவியல்** | (93—122) |
| 1. அறிவு | 95 |
| 2. கல்வி | 101 |
| 3. கற்ற பயன் | 107 |
| 4. ஆசான்-சீடன் | 110 |
| 5. கலை வளர்ச்சி | 116 |
| **ரு. அன்பியல்** | (123—151) |
| 1. அன்பு | 125 |
| 2. இனிமை | 130 |
| 3. இன்னாத செய்யாமை | 134 |
| 4. நட்புரிமை | 140 |
| 5. பொறுமை | 145 |
| **சா. நடை யியல்** | (152–177) |
| 1. ஒழுக்கம் | 152 |
| 2. தீயன விலக்கல் | 157 |
| 3. புன்மை விலக்கல் | 162 |
| 4. வாய்மை | 167 |
| 5. விந்தடக்கம் | 171 |
| **எ. இல்லற வியல்** | (178-207) |
| 1. இல்லறம் | 180 |
| 2. திருமணம் | 184 |
| 3. பெண்ணின் பெருமை | 189 |
| 4. ஆண்மை | 196 |
| 5. காதலின்பம் | 201 |
| **அ. குல வியல்** | (208—243) |
| 1. தாய் | 209 |
| 2. தாய்ப் பணி | 215 |
| 3. தந்தை | 218 |

# யோக சித்தி

## சுத்தான்ம விளக்கம்

வாழ்வு முழுதும் யோகமாக வேண்டும். யோகம் என்றால் ஒன்றிப்பு. ஒவ்வோருள்ளத்தும் தூய பேரின்பப் பொருள் உள்ளது. அது **சுத்தான்மா**. அதுவே மானிடத்தில் உயிர்க்குயிராக விளங்கும் கடவுள். மனமாயங் கடந்து உள்ளத்திற் கனலும் இன்பமயமே கடவுள். கடவுளைக் கலந்த வாழ்வு களிப்பு; பிரிந்த வாழ்வு கசப்பு. உட்பொருளான சுத்தான்மாவை ஒன்றி வாழ்தலே யோகம். அதன் உணர்வின்றி வாழ்தலே மோகம், சோகம். சுத்தான்மவுணர்வே உள்ளந்தோறும் இன்பவூற்று. அது பாய்ந்தால் வாழ்க்கை அமரானந்தக் கற்பகமாகும். அந்த அருளானந்த ஊற்றை இருளாணவ மனம் மூடிக்கொண்டிருக்கிறது. அசுத்த மனத்தால் சுத்தான்மா உணர்வாகாமல், மனித வாழ்வு கட்டுங் கவலையும் பற்றி மயங்குகிறது.

இருட்கடலில், மனித வாழ்வு சென்றுகொண்டிருக்கிறது. அது சித்தச் சுழல்களில், மனமாயப் புயல்களில், ஆசையாணவப் பாறைகளிற் பட்டுத்

தத்தளிக்கிறது. அகங்காரத் துடுப்பினால் அஃது இன்பத் துறை சேராது. துறைசேர்க்கும் முதல்வனை அது மறந்து பிரிந்திருக்கிறது. அவனை யறிந்து அவன் கையில் படகைத் தந்தால், அவனது அருள் துடுப்பு அதைப் பேரின்பத் துறை சேர்க்கும். பாசான்மாவான மானிடம் மனமாசகன்று, தன்னுட் கோயில்கொண்ட சுத்தான்மக் கடவுளைக் கலந்து நின்றால் கவலையற்ற, கட்டற்ற, தூய, பேரின்ப வாழ்வெய்தும்.

உள்ளமே விண்ணகம், சிற்சபை; சுத்தான்மாவே அதில் நடம்புரியும் இயற்கைக்கடவுள். அதையே காயத்ரி "அந்தப் பரமாத்ம ஞாயிறு (தத் ஸவிதுர் வரேண்யம்)" என்னும். அதுவே அருட்பெருஞ் சோதி. "அஃது இதயக்குகையிற் கனலும் இன்பத் தீ. அதுவே நமது உண்மை. அதை யறிவதே அறிவிற்கரசு; அறிந்தோன் அமரனாவான். அதை உள்ளத்திற் காணுந் தீரருக்கே அமைதியின்பம் உரியது" என்பதே 108 உபநிடதங்களின் சாரமுமாகும். "ஒன்றே கடவுள் (ஏகோதேவ); அஃது எல்லாருள்ளும் மறைந்துறைகின்றது (ஸர்வ பூதேஷு கூட:); அது ஸர்வ வ்யாபி; ஸர்வ பூதாந்தராத்மா. மானிடத்தில் உள்ள இந்த அந்தராத்மாவே சூரியனிடமும் ஒளியாயுள்ளது. அது சுத்தான்மா. அதுவே நீ (ஸ ஆத்மா; தத் சுக்ரம்; தத்வமஸி). அதை யறிந்த தீரன் அஞ்சான், கவலான்; 'யாதுங் கோயில் யாவருந் தானே' என்றுணர்வான்" என்று வேதங்கள் முறையிடுகின்றன. "இந்த இயற்கையுடல் இடம், க்ஷேத்திரம். அதில் நான் இடங்கொண்டுள்ளேன். நான் எல்லார் உள்ளத்தும் ஒளிரும் ஆத்மா" என்கிறார்

பகவான் கீதையில். "அறிஞர் பிரம்மத்தை ஆன்மா வாகவே அடைகின்றனர். இந்த ஆத்மா இதயத்தில் உள்ளது (ஹ்ருதிஹ்யேஷ ஆத்மா)" என்று பிரம்ம சூத்திரம் விளக்குகிறது. "உளன்கண்டாய் உள்ளுவார் உள்ளத்து. உள்ளத்தேவை நெஞ்சே யுயர்த்து! உட்கலந்தாருக்கு ஓர் அமுதே" என்று திருவாய்மொழி முறையிடுகிறது. "சிதம்பரமே, பரம்பரமே, சித் தத்தில் தித்திக்கும் தேனே, மன்றுள் ஒளியே, அம்பலத்தரசே, அமுதே, உடையாய், உடலிடங் கொண்டாய், உள்ளமே" என்று சித்தாந்த முத்தி முதல்வர் அதை அருமையாக உணர்கின்றனர். "உள்ளம் பெருங்கோயில். தெள்ளத் தெளிந்தார்க் குச் சீவன் சிவலிங்கம். ஆதி பராபரன் உறவாகி வந்தென் உளம்புகுந்தானே! ஊனறிந்துள்ளே யுயிர்க்கின்ற ஒண்சுடர். உள்ளம்விட் டோரடி நீங்கா வொருவன்" என்று திருமூலமந்திரம் அந்தச் சுத்தான்மாவை விளக்குகிறது.

'இந்தச் சுத்தான்மாவே நான்' என்றறிந்து, அதைப் பிரியா தொன்றிநிற்றலே யோகமாம். உடல், உயிர், மனம், உள்ளம் அனைத்திலும் அதனொளியை விளக்கி, மனித வாழ்வைச் சுத்த முக்த சமத்வச் சுடர் வாழ்வாக்குவதே யோக சித்தி. முதலில் சுத்தான்மக் கலப்பெய்த வேண்டும். அதனால் அருட்கனலாகிய சுத்த சக்தி நம்முட் பாய்ந்து பரவும். வாழ்விற்கு இன்றி யமையா ஒவ்வொரு நுட்பச் செயலையும் அந்தச் சக்தியால் மாசு நீக்கிச் சுத்தான்ம யோகமாகச் செய்யலாம். இவ்வாறு ஆண் பெண் அடங்கலும் சுத்தான்ம சேதனத்தில் வாழமுடியும். அன்பு, அறிவு, தொழில் எல்லாம் அந்த வுணர்வில் மலர

வேண்டும். அப்போது பேதபுத்தி யொழியும்; சாதி மத சாத்திர கோத்திர நாடு நிறப் பிரிவினைகளுக்கே இடமிராது. தானுன சுத்தான்மாவே அனைத்தும் என்றறிந்தால், யார் யாரை அஞ்சுவது, ஆளுவது, அடக்குவது, வேறுபடுத்துவது? தானே உலகம் என்றறிந்தபின் யார் யாருக்குத் தீங்கிழைக்க முடியும்? சுத்தான்ம வுணர்வு பெற்றவருக்கு மதநூல்களேயில்லாமல் அறவழி துலங்கும். சூரியமண்டலத்திற்கு விளக்குப் போடவேண்டுமா?

சாதனமில்லாத சாத்திரப்படிப்பு, சாரீரமில்லாத சங்கீதம் போலாகும். அறத்திற் கழகு அனுஷ்டானம். தருமத்திற் கழகு தரும சாதனம். சாதனமில்லாமல் வாய் முணுமுணுப்பும் ஐதிகச் சடங்குகளும் வலுத்துப்போய், அருளறிஞர் உபதேசங்கள் எல்லாம் சாதிமதச் சண்டைகளாகப் பெருகி, உலகைப்பிரித்துக் கலகக் காடாக்கின. "ஒற்றுமையாயிரு, அன்பு செய்; உண்மை பேசு; பகைவர்க்கும் பரிவு செய்; காமம் விலக்கு! கோபம் வேண்டா! பிறர்பொருளைத் திருடாதே! உயிர்க்கொலை பாவம். பொறுமையாயிரு!" என்று எல்லா மதங்களுந்தான் உபதேசிக்கின்றன. மதஸ்தாபனங்கள் ஏராளமாக உள்ளன. சர்வதேச மகாநாடுகளும், சர்வமத மகாநாடுகளும் கூடுகின்றன. சமூகச் சீர்திருத்தங்கள் வேறு அவரவர் மனப்படி நடக்கின்றன. எல்லாவற்றையும் உண்டு ஏப்பம் விடுகின்றன போர்வெறியும், போட்டி பொறாமைச் சண்டைகளும்! பையில் வேதம், கையில் வெடிகுண்டா யிருக்கிறது. மனப்புண், முகத்திலே தடவினுற் போகுமா? ஆசையாணவப் பேய்பிடித்தவர்க்கு அமைதி யின்ப

மேது? உள்ளமைதி யில்லாது உலகமைதி வராது. உள்ளொற்றுமை யில்லாது உலகொற்றுமை இயலாது. உள்ளுண்மை விளங்காது தெள்ளறி வெய்தாது. தன்னிடம் உள்ள இன்பத்தை யுணராது புலன்களால் எத்தனை போகபோக்கியங்களை நுகர்ந்தாலும், அவை இன்றினித்து நாளையே கைத்துப் போம். தர்க்க வாதங்களை நிறுத்துங்கள்; சாதி சமயப் பொருபொருப்புக்களைப் போக்குங்கள்; பேத புத்தியென்னும் பேயைத் துரத்தியொழியுங்கள்; ஆணவமனத்தைச் சிறுவையிடுங்கள்; பொறாமை யென்னும் புரட்சிக்காரனை யடக்குங்கள்; ஆங்கார மென்னும் அறிவிலியை விரட்டுங்கள்! புறந்திரியும் மனத்தை உட்குவித்திருங்கள்; உங்கள் உண்மையான சுத்தான்மாவை அறியுங்கள்; வாழ்வை அதனுடன் கலந்த யோகமாக்குங்கள்; சாதனஞ் செய்யுங்கள்! போர் போட்டி பொறாமைகள் ஒழியும். அமைதி பொலியும். அன்பு நிலவும். அறிவொளிரும். உழைப்பும் பிழைப்பும் பெருகும். நிலவளமும், பயிர் வளமும், தொழில்வளமும் பொலியும். சாதிசமயச் சண்டைகள் ஒழியும். சாத்திரச் சந்தடிகள் அடங்கும். அவரவர் மனச்சாட்சியே அவரவர்க்கு அறவழி துலக்கும். அவரவர் உள்ளமே அவரவர் கோயிலாகும். அவரவர் உள்ளத்தானுகிய சுத்தான்மாவே அவரவர் தெய்வமாகும். சுத்தசக்தி யுணர்வே வழிபாடாகும். ஒற்றுமையும், உயிரிரக்கமும் பெருகும். ஆண்பெண் வாழ்வு இல்லற யோகமாகும். ஆண்கள் நடமாடும் சாமிகோயிலாவர்; பெண்கள் அம்மன்கோயிலாவர். ஆண்மையின் அறிவொளியும் பெண்மையின் சக்திக்கனலும் சேர்ந்து வாழ்வைச்

சுத்தபோக யோகமாக்கும். அன்றே சஞ்சலச்சாத்தான் ஒழிவான்! அன்றே அருளரசிலகும்! அருட்புலவர் கண்டுணர்ந்த இந்தச் சுத்தான்ம ஞானத்தில் வேரூன்றி, மனிதவாழ்வு அன்புகிளைத்து, அறிவு மலர்ந்து, இன்பக்கனி பழுக்க வேண்டும். சுத்தான்ம யோகத்தால் வாழ்வெல்லாம் தெய்வ மின்சாரம் பரவும். உலகெல்லாம் ஒரு தெய்வ சங்கமாகி அருளும், அழகும், அறிவும், அன்பும், வாய்மையும், தூய்மையும், அறமும், ஆற்றலும், அமுதும், ஒளியும் நிலவும். நூறுபேர் இத்தகைய யோகசித்தி பெற்றால் அவர் யோக சக்தி ஆயிரக்கணக்கான பேர்களுக்குப் பரவும். தெய்வ சைதன்யம் ஒவ்வொரு பூரண யோகியின் மூலமும் உலகில் விளையாடும். எத்தொழிலைச் செய்தாலும், இறைவனிடம் மனம் ஈடுபட்டிருக்கும். ஒவ்வொருவரும் அனைவருக்காக, அனைவரும் ஒவ்வொருவருக்காக, எல்லாரும் இறைவனுக்காக வாழ்வர். இந்தச் சுத்தான்ம யோக சித்தி ஆண் பெண் அடங்கலுக்கும் பிறப்புரிமையும் பொதுவுடைமையுமாகும். இதைப் பெற்றவரே பிறந்த பயனெய்துவர். இந்த யோக சித்தியால் மனித சமுதாயம் மாறிப்பிறந்து தெய்வ சமுதாயமாகும்; உலகில் விண்ணரசொளிரும்.

இத்தகைய சுத்தான்மாவின் தன்மையும் விளக்கமும் **இன்ப மாலை**யிற் காண்க; அதைத் தியானத்தால் அடையும் வகையைத் **தியான மாலை**யிற் காண்க; அந்தச் சுத்தான்ம தருமத்தையும், அதை அனைவரும் வாழ்வின் ஒவ்வொரு நுட்பப்பகுதியிலும் அமைத்துப் பரிபூரணம் பெறும் பயிற்சி முறைகளையும் **யோக சித்தி** யென்னும் இந்நூல் விரிவாக விளக்கும்.

ஒவ்வொரு நாளும் அமைதியாக அமர்ந்து, அரை நாழிகை உட்குவிந்து, தியானம் செய்க! பிறகு இந்த **யோக சித்தியில்** ஒரு பக்கம் ஊன்றிப் படித்துச் சிந்திக்கவும்! அதன் கருத்தையே நாள்முழுதும் எத்தொழிலூடும் மனனஞ்செய்க! நாளடைவில் சாதனம் நிலைக்கும், சத்தியந் துலங்கும்.

**எல்லா வுலகிற்கும் இறைவ னொருவனே**
**எல்லா வுடலும் இறைவ னாலயமே**

என்ற உண்மை யாங்கும் யார்க்கும் இயல்பான காட்சியாகும்! சுத்தான்மா வாழ்க! சுத்தான்ம தருமம் வாழ்க! சுத்தான்ம சித்தர் வாழ்க!

ஓம் சுத்த சக்தி

# க. கடவுளியல்

கடவுள் உள்ளத்தான், உலகத்தான், ஒருவன், பரமன். கடவுட் பெருமை, இயல்பு, உண்மை, அருள்விளக்கம், வழிபாடு, கடவுட்டன்மை முதலியவற்றை இவ்வியல் விளக்கும் :

## 1. கடவுள்

ஓங்கார மாகி யொளியா யுயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு. 1

கடவுள் எங்கும் நிறைந்த ஓம் வடிவன், பிரணவ சொரூபி. அவன் அருளொளி; அவனே உயிர்க்குயிராக உள்ளந்தோறும் கோயில்கொண்ட சுத்தான்மா. அவன் எல்லாவற்றிலும் நீங்காதிருக்கிறான். தோன்றும் யாவும், எல்லா உடல்களும் நீங்கி மாறினாலும், அவன் நீங்காது, மாறாது, அசையாது உள்ளபடியிருக்கும் சுத்தமுக்த நித்தியன். அவன் வற்றா நிறையின்பன், பரிபூரணானந்தன், சுத்த சச்சிதானந்தன். இதுவே யோகிகள் அனுபவம். தியானம் நிலைத்ததும் சித்தசுத்தி யுண்டாகும். சுத்தத்தால் சத்தம் பிறக்கும். உள்ளே ஓம் என்றொரு நாதம் முரலும். "ஓமே பிரம்மம். ஓம் என்றே அவனைத் தியானிக்கவும். (ஓமிதிப்ரம்ம ; ஓமிதி த்யாயத ஆத்மானம்)" என்று வேதம் முழங்குகிறது. அ+உ+ம் என்ற மூன்றொலிகள் சேர்ந்து ஓமாகும். அ, அனைத்திற்கும் தாயொலி. அது சத், உண்மை, தன்மயம், தற்பரம், பரமான்மா

என்று பொருளாகும். உ, உலகான்மா, சிற்பரம், சின்மயம், சித்து, அறிவு, அருள், சக்தி எனப் பொருளாகும். ம், ஆனந்தம், இன்பம், ஜீவன் எனப்பொருளாம். சுத்தசச்சிதானந்தனை பரமாத்மன் தனது சிற்சக்தியால் ஆனந்த மயமாக எங்கும் நிறைந்து எல்லாம் ஆக்குவான். அவன் விழிப்பு, துயில், மறதியாகிய உணர்வுநிலை கடந்த துரியப் பொருள். ஜக - ஜீவ - பரம் அவனருள் விளக்கமே என்பது ஓங்காரப் பொருள். இடைவிடாத ஓங்கார தியான ஜபத்தால் ஆதார சக்கரங்கள் மலரும். புருவ நடுவிலுள்ள ஆஞ்ஞா சக்கரத்திற்குமேல் ஓர் ஒளிகாணும். அந்த ஒளியையே தியானித்தால், ஒரு மெல்லிய உயிர்க்கனல் நாடிகளிற் பாய்ந்து பரவும். கதகதவென்று அதை யோகிகள் எப்போதும் உணருவர். அதையே சத்திநிபாதம், குண்டலி, பிரம்மாகாரம், சுத்தசக்தி யென்பர். இக்கனல் தியானத்தை இயல்பாக்கி மனத்தைப் புறஞ்செல்ல விடாது உள்ளத்தில் இருத்தும். அதன் பிறகு உயிர்க்குயிரான, அந்தராத்மா அல்லது சுத்தாத்மா உணர்வாகும். சுத்தான்மாவில் மனம் லயித்ததும், ஒரு நொடிகூட அதை விட்டுப் பிரியாத சகச சமாதி யெய்தும். அப்போது உடல் ஒரு சட்டைபோலத் தோன்றும். நான் சுத்தான்மா என்ற அறிவு நீங்காது இயல்பாகும். "என்னைப் பிரம்மன் நீங்கான், நான் அவனை நீங்கேன்; அணுவில் அணுவாய், மகத்தில் மகத்தாய், அவன் யாதுமாய், யாங்குமாய், யாதிற்கும் அப்பாலாய் விளங்குகிறன்" என்னும் வேதவாக்கைச் சாட்சாத்கரிக்கலாம். அந்தச் சுத்தான்ம சாட்சாத்காரத்தால் இன்பநிறை வுண்டாகும். இவ்வாறு தியான

தாரணை, சமாதி, சகஜநிட்டைகளால் சுத்தான்ம சாட்சாத்காரம் பெற்ற யோகிகள் இறைவனை, 'ஓங்காரம், அருளொலி, உயிர்க்குயிரான அந்தராத்மா, கைவல்யம், நித்தியம், இன்ப நிறைவு' என்று அறிவர்.

**உள்ளத்தான், ஓங்கு முலகத்தான், பேரின்ப**
**வெள்ளத்தான் விண்ணின் விளக்கு.** 2

இறைவன் அனைவர் உள்ளத்திலும் சுத்தான்மாவாக விளங்குகிறான்; தனது அருளால் ஓங்கும் உலகில் விசுவாத்மாவாக, உலகநாதனாக விளையாடுகிறான். அவன் பேரின்பந் தரும் அருள்வெள்ளமாக, சுத்த சக்தியாக, பிராண சக்தியாக எங்கும் நிறைந்துள்ளான். அவன் பரமாகாயத்தின் அருட்பெருஞ் சோதிமணி விளக்காக விளங்குகிறான்.

'நான், எனது, எனக்கு' என்னும்போது எங்கே நெஞ்சைத் தொட்டுப் பேசுகிறோமோ அங்கே தான் உள்ளம் உள்ளது. சுத்தான்மா உள்ள இடம் உள்ளம். அஃது இரத்தாசயமன்று. அது மருத்துவர் கத்திக்கெய்தாத சூக்குமப் பொருள். உயிரிகளுக்கிடையே, நெஞ்சுக்குழியில், நாபிக்குச் சாண்மேலே, பதுமகோசம் போன்று உள்ளம் உள்ளது. அதன் நடுவே ஒரு நுண்குகையுள்ளது. அதில் கார்மேகத்திடையே மின்னற் கொடிபோன்று ஒரு கனற்கொழுந்து நடம் புரிவதை யோகியர் நண்குணர்வர். புலன்கள் மனத்தில் ஒடுங்கி, மனம் புத்தியில் ஒடுங்கி, புத்தி உள்ளத்தில் அடங்கிய உள்மோனத்தில் அந்தச் சுத்தான்மக் கனல் உணர்வாகும். உள்ளே சுத்தாத்மாவைக் கண்டவர் அதையே உலகான்மாவாகக் காண்பர். ஏனெனில், உள்ளிருப்பதே உலகிலும்; உலகான்மக் காட்சியாளர் விண்ணிலும் அப்பரமான்

மாவையே காண்பர். அவ்வாறு உள்ளான்மா, உலகான்மா, பரமான்மாவாக இறைவனைக் கண்ட யோகியர் எங்கும் அவனது பேரின்ப அருள் வெள்ளத்தையே உணர்வர். உள்ளம் உச்சி இரண்டும் தியான நிலயங்கள். உள்ளத்தில் தியானித்தால் இன்ப வெள்ளமாகும். உச்சியில், ஸஹஸ்ராரத்தில் தியானத்தை யூன்றினுல் அருட்பெருஞ்சோதி யறிவு மலரும். "விண்ணா சுன்னுள்" என்ருர் ஏகநாதர். ஸஹஸ்ராரமே அந்த விண். அதில் சுத்தான்மச் சுடர் நிலவுகிறது. அதையே பொன்னொளி, கதிர்நிறை சோதி, அருட்பெருஞ்சோதி, உயிர்க்குயிரான ஞாயிறு என்று முனிவர் கண்டனர். "பொள்ளற் குடத்திற் பொலிபெரும் விளக்கு" (நாளச் சித்ர கடோதர ஸ்தித மஹா தீபப்ரபா பாஸ்வரம்) என்று சங்கரர் சுத்தான்மாவை விளக்குகிருர்.

**எண்குணத்தான், ஏகனே, யெல்லா மடங்கவுளான்**
**புண்ணியனும் போதப் பொருள். 3**

அத்தகைய அருட்சோதி யின்பக் கடவுளின் தன்மைகள் எட்டு:—மாசறு தூய்மை, பேராற்றல், பேரறிவு, பேரின்பம், முற்றுணர்வு, சுதந்தரம், கட்டின்மை, இயல்பு திரியாது இருந்தவாறு இருத்தல். அத்தகைய பெருமைசான்ற இறைவன் ஒப்பற்ற ஒருவனே; அவனன்றி எதுவுமில்லை. அவனில் எல்லாம் அடங்கும். அவன் யாதிலும் அடங்காச் சுதந்தரன்; தாக்கற்ற தனி முதல். அவன் புண்ணியன், சுத்தன், தரும மூர்த்தி, கொடைவள்ளல். அறிஞர் அறியும் அறிவுப் பொருள் அவனே!

"இறைவன் துயரணுகாதவன், வினையிலி, இருவினைப் பயன்கள் அணுகாதவன், புருடோத்தமன்,

எல்லா மறிந்தவன், அகாலன், நித்தியன், அனைவருக்கும் அந்தர்குரு. அவனை 'ஓம்' என்னும் பிரணவம் குறிக்கும். அவன் எங்கும் நிறைந்தவன். அவனை ஓதியுணர்ந்து ஒன்றுவது யோகம்" (பதஞ்சலி). அவன் ஞானச் சுடராக உள்ளத்துள்ளான். மன விருள் அவனை மேகம்போலே மறைத்துக் கொண்டுள்ளது. அஞ்ஞானம் விலகினல் ஞானதித்யன் விளங்குவான். " அவன் சர்வேசுவரன், சர்வஞ்ஞன், அந்தர்யாமி, உயிர்களின் பிறப்பு வளர்ச்சி இறப்பிற்கெல்லாம் காரணன், சர்வாதாரன், பிரபு, விபு. அவனைச் சுத்தான்மா என்றறியும் தீரர் எத்துன்பமும் அடைவதில்லை (விபும், ஆத்மானம் மத்வா தீரோ நசோசதி)" என்று உபநிடதம் முறையிடுகிறது. உலகம் கடவுளின் அருள்விளக்கம், சக்தி விலாசம். அருட் சக்தியால் அவன் யாங்கும் யாதுமாயிருந்து, ஐந் தொழில் புரிந்தும் தாக்கற்றிருக்கிறன். ஐம்பூதம், இரவி, மதி, ஆன்மா ஆகியவை அவனுடைய அட்ட மூர்த்தங்களே. "சர்வபூதங்களும் என்னில் நிலை கொண்டன (மமஸ்த்தாநி சர்வ பூதானி) ; நானே உலகின் தோற்றமும் ஒடுக்கமும்" என்கிறர் கீதையில் பகவான்.

**காற்றைக் கனலைக் கதிரைக் கடலுலகைத்**
**தோற்றினு னன்பர் துணை.** 4

அன்பருக்குத் தோன்றியும் மறைந்தும் துணை புரிகிறன் பரமன். "தோன்றத்துணையா யிருந்தனன் தன்னடி யோங்களுக்கே" யென்றர் **அப்பர்.** உயிர்க்குலமெல்லாம் அவன் அருட்குலம், அன்புச் சேய்கள். அவன் தந்தை, அவனது சக்தி தாய். இரவியின் கதிர்கள் போன்று அவனிடமிருந்து

அருட்கதிர்கள் விரிகின்றன. அக் கதிர்கள் நுட்பமான ஆகாயமாகப் பரிணமிக்கின்றன. அதில் எண்ணரிய பரமாணுக்கள் (Electrons) சுழல்கின்றன. அவற்றின் வேகத்தால் காற்றும், காற்றின் வேகத்தால் தீயும், தீயின் வேகத்தால் நீரும், நீரின் வேகத்தால் மண்ணும், மண்ணின் இயல்பால் பயிர்களும் உண்டாகின்றன. பயிர்களை யுண்டு உயிர்கள் தழைக்கின்றன. இவ்வாறு எல்லாம் வல்ல ஒரு சக்தியிறைவன் சந்நிதிக்கே அனைத்தும் இயல்பாக உண்டாகின்றன. கடவுளின் சிருட்டித் தொழில் கருமான், தட்டான், குயவன், தச்சன் தொழிலைப்போல முயன்று சங்கற்பித்துச் செய்யப் படுவதன்று. மலையூற்றிற் பொங்கியெழும் தண்ணீர் இயல்பாகக் கீழிறங்கி, ஒரு வழிபற்றி, ஆறுகப் பரிணமித்துப் பயிர்களையும் உயிர்களையும் வளர்த்து, உடம்பு தோறும் உயிரெனத் திரிகிறது. அதுபோன்றே, இறைவனது சக்தி வெள்ளம் இயற்கை யுலகாகப் பரிணமித்தது. அதனைற்றான் இங்கே 'தோற்றிறன்' என்றது. ஒன்றிலிருந்து பல இடல்பாகக் கிளைத்துப் பரவுகின்றன. ஒன்றினின்றொன்று கிளைத்து ஒன்று பலவாக விரிகிறது. அந்தப் பரிணும சக்தி திருவருளினின்றே போந்தது. இவ்வாறு, உயிர்க்கக் காற்றையும், உயிர் இயங்கும் சக்திக்கனலையும், ஒளியும் மழையும் அளித்து உலகை இயல்பாகப் பேணும் கதிரவனையும், மழை மேகங்களுக்குப் பிறப்பிடமான கடலையும், இவை யனைத்தாலும் உயிர்வளமும் பயிர்வளமும் பெற்றுச் செழிக்கும் உலகையும் சக்தியிறைவன் தனது அருளினின்று தோன்றச் செய்தான். "தானே கடல் மலையாதியாய் நிற்கும். தானே யுலகின் தலைவனுமாமே" என்னும்

திருமந்திரம். "ஆகாசம் பிரம்ம சரீரம்; அதனின்று காற்று எழுந்தது. காற்றினின்று கனல் எழுந்தது. கனலினின்று நீர்; நீரினின்று தரை; தரையினின்று பயிர்; பயிரினின்று அன்னம்; அன்னத்தினின்று ஜீவன் எழுந்தன" என்னும் வேதம்.

**எல்லா மவனுடைமை; யெல்லா மவனாணை;**
**எல்லா மவன்; பொதுவென் றெண்.** 5

இவ்வாறு தோன்றும் உலகெல்லாம் அவனது சக்தி விரிவே. நிலமின்றிப் பயிரில்லை. கதிரவனின்றிக் கதிர்களும், ஒளியும், பகலும், உலகவாழ்வும் இல்லை. அதுபோன்றே இறைவனின்றி எதுவுமில்லை. ஆதாரம், ஆதேயம் எல்லாம் அவனே. ஆதலால், ஆராய்ந்து பார்த்தால், எல்லாப் பொருள்களும் அவனுடைமையே. அவனே **உடையான்**. தோன்றும் உலகும், தோன்றா வுலகும் நடப்பது அவனது ஆணையான பராசக்தியாலேதான். அவனது இச்சா கிரியா ஞான சக்தியினாலேதான் எண்ணரிய உலகங்கள் நடக்கின்றன. எல்லாம் அவனே. உருப்பொருட்களுட் கருப்பொருளா யிருப்பவன், உடல்களில் உயிராகவும், உயிர்களில் உயிர்க்குயிரான சுத்தான்மாவாகவும் நிறைந்தவன் அவனே. இயற்கை யுலகம் ஒரு மின்பொறி. இறைவனருள் மின்சாரம். அப்பொறி எத்தனை கோடி வியன்களைச் செய்தாலும் எல்லாம் அந்த மின்வன்மையாலன்றோ? எல்லாம் அருளால் ஆக்கி, அளித்து, மாற்றிப் புதுக்கும் இறைவன் அனைத்திற்கும் பொதுவாக எங்கும் நிறைந்திருக்கிறான். அவனை எண்ணுக; தியானஞ் செய்க! தியானத்தால் அவனை உள்ளே உணரலாம். "என்னின்றி யாதுமில்லை. கயிற்றில் மணிபோல் என்னுள் எல்லா வுலகங்களும்

குயிற்றப்பட்டுள்ளன" (கீதை). "அவனிச்சையின்றி ஓர் இலையும் அசையாது" (பைபிள்). "உலகமெல்லாம் இறைவன் உறையுள்" (உபநிடதம்). "எல்லாமுன் அடிமையே, எல்லாமுன் உடைமையே எல்லாமுன் செயலே, எங்கணும் வியாபி நீ" (தாயுமானவர்).

---

## 2. உள்ள பொருள்

பெயர்வடி வாதியதோர் பேதங் கடந்த
வுயர்பொருளொன் றுண்டென் றுணர். 1

பலபல பெயர்கள், பலபல வடிவுகள் முதலிய வேறுபாடுகளைத் தாண்டி, இவற்றிற்கெல்லாம் அப்பால், ஓர் உயர்ந்த பரம்பொருள் உள்ளதென்று உட்குவிந்து உணர்க!

நாமம், ரூபம், தேசம், காலம், வர்த்தமானங்களெல்லாம் அப்பொருளைப் பற்ற! பேதபுத்திக்கே பெயர் வடிவ வேறுபாடுகள். பச்சைக் கண்ணாடிக்காரனுக்குச் சூரியன் பச்சையாகத் தோன்றுகிறது. ஆனால், சூரியன் எப்போதும் வெண்சுடராகவே ஒளிர்கிறது. ஸன், ஸோலாய், ஸூரிஜ், ஆதித்யன் என்று அவரவர் மொழியில் பல ஒலிவேற்றுமைகளுடன் குறித்தாலும் கதிரவன் ஒன்றே. தண்ணீரைப் 'பாணி' என்றால் தண்மைக்குக் கேடுண்டோ? கல்லை நட்டுக் 'கறுப்பண்ணன்' என்பது மனித மதியே. ஒரு விக்கிரகத்தைக் காணும்போது அது கல்லையோ செம்பையோ அன்று; கடவுளின் எத்தன்மையை அவ்வுரு குறிக்கிறதோ அதையே பாவனை செய்க! கடவுளின் எண்ணற்ற பெருமைகளையே கலைச்சுவையுடன், பெரியார்கள் தியானத்திற்கு எளிதாகப் பல

உருவாக்கினுர்கள். இன்பச் சிவன், எல்லாம் வல்ல அல்லா, எங்கும் பரவிய விஷ்ணு, அழகிள முருகன் என்னும்பெயர்கள் பலவாயினும், அவை தனது அருளால் எல்லாம் புரிந்து, எங்கும் பரவி, ஒவ்வோருள்ளத்தும் கடவுளாக, சாட்சி சேதனனுக நிற்கும் ஒரு தூய பொருளேயே குறிக்கும். மயில் குயில் கோழி கிளி வடிவான மிட்டாய்களிலெல்லாம் இனிப்பு ஒன்றே. பூக்கள் மிகப்பல; தேன் சுவையொன்றே. பந்து, பாத்திரம், துருத்தி பலவாம்; அவற்றில் அடைபட்ட காற்று ஒன்றே. காற்று பந்தன்று, கலமன்று, துருத்தியன்று. அதுபோல உடல்கள் மிகப்பல. அனைத்திலும் உயிர்க்குயிரான சுத்தான்மா ஒன்று. முக்குணவுலகம் பலவிதம். நிர்க்குண பிரம்மம் ஒன்று. சாதிமத சாத்திர கோத்திரங்களெல்லாம் வெளி விவகாரங்களே. எத்தனையோ ராகதாளங்கள்; சுருதியொன்று, ஒரே ஓங்காரம். அதுபோல, வாழ்வின் வடிவங்கள் பல; உள்ளே அந்தர்யாமியாக வாழும் சுத்தான்மா ஒன்று. மனம் புறஞ் செல்லச் செல்ல வேறுபாடுகள் அதிகரிக்கும். மனம் உட்குவிந் தொடுங்கவொடுங்க ஒருமைப்பாடு தோன்றும். விளக்கைப் பார்த்தால் பலவாம்; வெளிச்சம் பார்த்தால் ஒன்று. உலகைப் பார்த்தால் பல; உள்ளம் பார்த்தால் ஒன்று. அந்த ஒன்று பலவாகத் தோன்றும். இயற்கைப் பொருள்களின் உள்ளந்தோறும் உள்ளதை உட்குவிந்து ஒவ்வொருவரும் உணர்க.

**பலர்பற் பலவாகப் பாரிற் பகர்வர் ;**
**உளனெருவ னென்றே யுணர். 2**

உலகம் பலகுண விரிவு. பல சமயத்தார், பல கொள்கையார் தத்தமது மனப்போக்கின்படி பல

பான்மையாகச் சொல்லுவர். அனைத்துள்ளும், புறமும் தானே தானாகத் தாக்கற்றிருக்கும் மெய்ப்பொருள் ஒன்றே என்றறிக!

உலகம் பல்வகைத் தோற்றமுள்ளது. நாடுகள் பல, நடையுடை பல; ஊர்கள் பல, உரைகள் பல; பழக்கமும் பகுப்பும் பான்மையும் பலபல. மதங்கள் பல, மதக்கிளைகள் பல. 'எனது, யான், எனக்கு' என்னும் முக்கோணக் குளத்தில் சாதிமத பேதங்கள் தேங்கி அலை மோதுகின்றன. உண்மையே கடவுள். ஆனால், 'எனது தான் உண்மை, மற்றவை பொய்' என்கிறது மாந்தரின் மனமாயை. தன்னதை யுயர்த்திப் பின்னதைத் தாழ்த்தி, என்னது உன்னதென்று இறுமாந்து போரிடுவதெல்லாம் மாந்தருட் புகுந்த ஆசை யாணவச் சாத்தானே! விகாரமனம் வேறுபாடுகளைக் கற்பிக்கிறது. எத்தனை வேறுபாடுகள்! எதைப் பற்றுவது? கொழுக்கட்டைகள் பல; பூரணம் ஒன்று. உடல்கள் பல, சுத்தான்மா ஒன்று. அதுவே உள்ளது. அஃதின்றி உடல் பிணம். அந்தச் சுத்தான்மாவை உள்ளொன்றி யுணர்க! பிறகு உலகளவு வேறுபாடுகளிலும் ஒருமையங் காணலாம். மண் ஒன்று, மரங்கள் பல. சத்தொன்று சகம் பல. நானாரெனக் கேட்டறிந்தால் நானாபேதம் போகும்.

**ஐங்கோட்டைக் குள்ளே யரசாளு மன்னவனை**
**ஐந்தடங்கி யன்பா லறி.** 3

அன்னம், பிராணம், மனம், விஞ்ஞானம், ஆனந்தம் என்னும் பஞ்சகோசக் கோட்டைக்குள் தானே தானாக நின்று இக்காயாபுரியைஆளுகின்ற சுத்தாத்மராஜனை, ஐம்புலன்களும் புறஞ்செல்லாதடங்கி மனம் குவிந்த தூய உள்ளன்பால் அறிக!

பூதம் மாத்திரை பொறி புலன்கள் அந்தக்கரணம் ஆகிய இவை அடங்கிய இயற்கையுடல் க்ஷேத்திரம், காயாபுரி. அதன் அரசன் சுத்தான்மா. அவனைச் சுற்றி ஐந்து கோட்டைகள் (பஞ்ச கோசங்கள்) உள்ளன. அவையாவன :—1. **அன்னமய கோசம்.** இஃது எலும்பு, நரம்பு, தசை, தோல் போர்த்த பரு உடல், தூலாதாரம், ஐம்பூதக்கூடு. சாதி, குலம், பெயர், வடிவு, நடையுடை, நிற வேறுபாடுகளெல்லாம் இக் கோசத்தன. 2. **பிராணமய கோசம்.** இது பிராணவாயுவும் கர்மேந்திரியமுங் கூடியது. இதுதான் உடலை மனத்துடன் இணைக்கும் உயிர்த்தொடர், வீரியகோசம். பசி, தாகம், காமம், வெகுளி முதலிய வீரியத் தினவுகள் இக்கோசத்திற் பிறக்கும். இக்கோசத்தைத் தருமசாதனங்களால் தூய்மையாக்குவது யோகத்திற் பெரிய காரியம். அன்னமய பிராணமய கோசங்களை வெல்லவதற்கே ஹடயோகம் ஏற்பட்டது. 3. **மனோமய கோசம்.** இது மனமும் ஞானேந்திரியமும் கூடியது. மனமே மாந்தர். மனம் 'எனது, நான்' எனும் ஆணவங்கொண்டது. இன்பதுன்ப அலைகள் வீசிக் கொந்தளிக்கும் எண்ணக்கடலே மனம். இம்மனத்தை வென்றாலொழிய அமைதியிராது. இதன் சித்த விருத்திகளை அடக்குவதே யோகமென்றார் பதஞ்சலி. 'நானார் ?' என்னும் ஆத்மவிசாரத்தாலும், பிராணாயாமம், தியானம், சமாதி, சாதனங்களாலும் மனம் அடங்கும். **இராஜயோக** சாதனம் மனத்தையடக்கி ஆன்மாவில் நிலைப்பிக்கும். 4. **விஞ்ஞானமய கோசம்** புத்தியும் ஞானேந்திரியமுங் கூடியது. இதில் 'நான் ஆத்மா' என்ற அறிவு தளிர்க்கும் 5. **ஆனந்தமய கோசம்** காரண சரீரமாகும். இதில் ஆத்மசுகம் புலனாகும்.

இதற்கு மேலுள்ள அறிவுண்மை அல்லது சித்சத்து நிலயமே சுத்தான்மாவின் அரியணை. 'இந்த ஐங் கோசங்களும் நானல்லன் ; நான் சுத்தான்மா' என்று எப்போதும் உள்ளடங்கித் தியானிக்க வேண்டும். அரசன் வேறு; அரண்மனை வேறு. பஞ்சகோசா தீதனை சுத்தான்மாவைக் கண்டதும் உலகெலாம் அதுவே காணும். தன்னைக் கண்டால் உலகெலாம் தானே. அப்போதுதான் சுத்தோஹம், சிவோ ஹம், சிவமயம், ஸோஹம், ஸர்வம் பிரம்ம மயம், ப்ரஹ்மைவாஹம், வாசுதேவமிதம் ஸர்வம் என்ற மந்திரங்கள் காட்சியாகும். பாச அன்பை மாற்றி மாசற்ற பதியன்பாக்கி, மனத்தைப் புறஞ்செல்லாது உள்ளிழுத்துத் தியானத்தில நிறுத்தலே உள் ளிறைவனை யறியும் வழியாகும்.

அருளாலே யுள்ளத் தறிவா யிலங்கும்
பொருளாலே யின்பப் பொலிவு. 4

மேற்சொன்ன பதியன்பின் தீவிரத்தால் எய்தும் அருளுணர்வால் உள்ளத்தில் அறிவாக, ஞானமய மாக ஒளிரும் சுத்தான்ம வத்துவால்தான் பேரின்பம், ஆத்ம சுகம் பொலிவாகும் ; விளங்கும்.

அன்புநீர் வார்த்தால் அருள் மலரும். மாசற்ற அன்பினல் மனம் பரமனிடம் ஒன்றுபடும் ; 'நான், எனது' என்னும் தனியகந்தை யொழியும் ; சித்தம் நிலைக்கும் ; அருளுணர்வாகும். மனம் புறந்திரிந்து சித் தம் சிதறுவதால் இந்த அருட்கனல் பலருக்கு உணர் வாகாதிருக்கிறது. உள்முகப்பட்டு தீவிரமான அன் புடன் இறைவனைத் தியானித்தால் அருளுணர்வாகும். அதையே குண்டலினி, பிரம்மாகாரம், சத்திநிபாதம் என்பர். எறும்பூறுவதுபோலே இது விறுவிறுப்புடன்

வெகு சுகமாக நம்முட் பரவும். அதையே கவனித்துக் கொண்டிருந்தாற் போதும். மனோலயம் ஏற்படும்; சுத்தான்ம ஞானம் சித்திக்கும். அந்த ஞானத்தால் நம்முள் உள்ள உண்மை யறிவின்பம் பொலிந்து விளங்கும். "நேயத்தேர் ஏறி நிமலன் அருள் பெற்றால், ஆயத்தேரேறி அவன் இவனாமே" என்றார் திருமூலயோகி.

**விழிமி னெழுமினுள்ளே விண்ணரசைக் கண்டு**
**செழிமின்சச் சித்தா னந்தம். 5**

மாயமன வுறக்கத்தினின்று விழித்தெழுங்கள்; உட்கண்ணைத் திறவுங்கள்; மனவகந்தையில் மயங்கிப் பாழாகாமல் எழுந்திருங்கள்! விண்ணரசு உங்களுள்ளே யுள்ளது. அதை ஆத்மத் தியானத்தாற் கண்டு சச்சிதானந்தச் செழிப்பெய்துங்கள்!

"விண்ணரசைப் பெறுக; மற்றவெல்லாம் தாமாக வந்தெய்தும்" என்றார் **ஏசுநாதர்**. அந்த விண்ணரசு எங்கேயுள்ளது? நம்முள். அதன் கூடம் இதயம். அதன் மாடம் ஸஹஸ்ராரம். அதையே "துரியமலை மேலிருக்கும் சோதிவளநாடு, ஏழ்நிலை மாடம், அருட்பெருஞ்சோதி நிலயம்" என்றார் **அருட்பிரகாசர்**. மனவிருளால் இந்தப் பரமசுக நிலயம் புலனாகாமல் உள்ளது. சித்தந் தெளிந்தாற் சிற்சபை காணும். ஆங்கே, உண்மையறி வின்பப்பொருள் திருநடம் புரியும். தாய் கையிற் குழந்தைபோல, திருவருளிறைவன் கரத்தில் தூய நல்லன்புடன் மனிதான்மா அடைக்கலம் புகவேண்டும். அவனருள் நம்மை மேன்மேலும் நடத்தி வானரசைத் துலக்கி, அதன் மன்னவனைக் கண்டு கலக்கப் பெருந்துணை செய்யும். உள்விழிப்புடன் தியானித்து ஒவ்வொரு

வாரும் விண்ணரசு பெற்ருல், உலகில் அதை வெகு எளிதாக நிலைநாட்டலாம்.

---

## 3. அருள் விளக்கம்

அறிவுச் சுடரோ னருட்கதிரா லெங்கும்
நிறைந்த நிறைவை நினை. 1

ஞானஜோதியாக சுத்தபரமாத்மா தன் அருட் சக்திக் கதிர்களைப் பரப்பி உலகுயிரெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பூரணத்தன்மையைத் தியானிக்கவும் !

"எழுகின்ற ஞாயிறேபோன்று நின்ற நின் தன்மை" என்ருர் மணிவாசகர். பரந்த விண்ணில் மோனமணி விளக்காகப் பற்றற்ற சாட்சியா யிருந்து, தன் கதிர்களைப் பரப்பி, உலகை நடத்தும் கதிரவனைத் தியானித்தாலே எல்லா வேதப்பொருளும் விளங்கும். அவ்வாறே யாக்ஞவல்கி ஞானவொளி பெற்ருர். ஆகாசத்தில் சூரியன்போலவே, சிதாகாசத்திலும் சுத்தாத்ம சூரியன் நிலவுகிருன். அவனே ஞானக் கதிரவன் ; அவன் கதிர்களே சக்தி. கடவுள் சத்தொளி ; சக்தி சிற்பிரகாசம். கற்கண்டில் இனிப்புப்போல கடவுளில் அருட்சக்தி. கடவுள் பூரணம் ; சக்தியும் பூரணம். அந்தப் பூரணத்தினின்று பரந்து விரிந்த எல்லையற்ற புவனமும் கடவுளின் பூரண நிறைவே. எதைக் காணினும் கடவுளின் பூரண நிறைவென்று கருதுக ! பாரிறைவன் பூரணன். பாரெல்லாம் அவனது பூரணசக்தி நிறைவு. கதிர் + அவன் = கதிரவன். அவன் தோய்வற்ற நிலைபொருள் ; கதிர் அவன் விளக்கம்.

**தாக்கற்று நோக்குந் தனித்தலைவன் சந்நிதிக்கே**
**யாக்கலோ டைந்தொழிலு மாம்.** 2

பற்றற்று, (தாக்கற்று) சர்வசாட்சியாகச் சிருட்டிப் பிரபஞ்சத்தைப் பார்க்கும் தானே தானை இறைவன் சந்நிதானப் பெருமைக்கே படைத்தல், காத்தல், அழித்தல், அடக்கல், அருளல் என்னும் ஐந் தொழிலும் இயல்பாக நிகழ்வதாகும்.

கதிரவன் உதித்தமாத்திரத்தில் கதிர்கள் பரவுகின்றன; தாமரை மலர்கிறது. உலகம் விழித்தெழுந்து பலதொழில்களைச் செய்கிறதன்றோ? சூரியக்கதிர் பரவியதும் புதுமலர் பூக்கிறது; வாழ்வுத்தேன் ஊறுகிறது; ஜீவ வண்டுகள் அதை யுண்டு வாழுகின்றன; பழைய மலர்கள் வாடி யுதிர்கின்றன. உதிர்ந்த மலர்கள் மண்ணோடு மண்ணாகின்றன; அம் மண்ணில் மீண்டும் புதிய மரமும் மலர்களும் உண்டாகின்றன. இவ்வாறு தான் இறைவன் சுத்த சூரியனாக, பற்றற்ற சாட்சியாக, நித்ய முக்தனாக உள்ள படியே யிருக்கிறான். அவனது சந்நிதிக்கே சக்திக் கதிர்கள் எங்கும் பரவி எல்லாம் புரிகின்றன. ஒவ்வோரணுவிலும் இந்த இரு தன்மைகளும் உள்ளன. ஒன்று நிலையாகச் சாட்சியாக இருக்கும் புருஷன்; மற்றொன்று இயங்கும் சக்தி. கடலாவி மேகப் படலமாகி, வான்பொழிந்து, உலகுயிர் தழைப்பதெல்லாம் கதிரால். அருட்கதி ரின்றேல் ஆடலுமில்லை.

**ஒன்றென்றுந் தோற்ற மொடுக்கமதி லேயென்றுங்**
**கண்டவனே காட்சிக் கிறை.** 3

மேற்சொன்ன ஐந்தொழிலும் புரிந்து உலகாடலை நடத்தும் அருட்சக்தி, தெய்வசக்தி ஒன்றே. உலகம் தோன்றி, வளர்ந்து, முதிர்ந்து அடங்குவதும்

அந்த ஒன்றிலேதான். இவ்வாறு இறைவன் சக்தி ஒன்றே எங்குமாய், எல்லாமாய், எதற்கும் பிறப்பிடமாய் ஒடுங்கிடமாய் நிற்பதென்று அறியும் ஞானியே அறிவிற் பெரியானவன்.

"உலகெலாம் நானே. எனது பரப் பிரகிருதியான சக்தியினின்றே உலகம் தோன்றி யடங்கும். அதுவே ஜீவபூதமாகி உலகை வகிக்கிறது" என்கிறார் பகவான் கீதையில். உலகம் இறைவன் அருளாடலே. உலகைத் தோற்றி, வளர்த்து, மாற்றி, ஒடுக்குவதெல்லாம் அருளான சிற்சக்தியே. முக்குண மாயையின் மூலம் உலகம் பலவேறு வினைச்சாலை யாகிறது. அறிவாளியானவன், 'இந்த உலகம் பிறந்திறந்து மாறும்; இஃது இயற்கையின் ஆடல்; நான் முக்குணவியற்கையைத் தாண்டிய சுத்தான்மா' என்றறிந்து, தன்னுளே தானாக நிலைத்திருப்பான். அகங் கிளம்பினாற் சகம்; அகமடங்கினாற் சுகம்.

**பிண்டத்தி லுள்ளான் பிரமாண்டத் திற்கோயில்**
**கொண்டுலவுந் தெய்வமெனக் கொள். 4**

அவ்வாறு இயற்கையின் விளையாட்டாகிய உலகிற்குச் சாட்சியாயிருக்கும் இறைவன் ஊன் பிண்டமாகிய இவ்வுடலில் உள்ளான். அவனே பிரமாண்டமாகிய உலகிலும் கோயில் கொண்டு திருவிளையாடல் புரியும்அருளிறைவன் என நம்புக! உடல் சிற்றுலகம். பிண்டத்தவனே அண்டத்தவனும். உடலுடையானே உலகுடையானும். உலகில் விசுவாத்மாபோல, உடலில் சுத்தாத்மா. "தோன்றும் உலகும் தோன்றாவுலகும் அவனேயானான்". (ஸச்சத்யச்சாபவத்). இம்மனிதனிடமுள்ள பொருளும் சூரியனிடமுள்ள

உட்பொருளும் ஒன்றே (ஸயஸ்சாயம் புருஷே யஸ்சா ஸாவாத்யே ஸ ஏக:) என்னும் உபநிடதம்.

**நானென்னு மாயை நலிய நலியவுனைத்**
**தான்கொண்டு போற்றுமருட் டாய். 5**

*நான் என்று இறுமாக்கும் ஆணவமாயை தேயத் தேய, தெய்வத் திருவருளன்னை உன்னைக் கைக்கொண்டு காத்துப் பரிபக்குவப் படுத்துவாள்.*

*அன்பு, அடைக்கலம், அடியார் கூட்டம், பெரியார் வணக்கம், தியான மோன ஞான விசாரங்களால் நானென்னும் ஆணவமாயம் நலியும். மனிதனுள் இரண்டு நான்கள் உள்ளன. ஒன்று* **ஆணவ நான்.** *அது செம்பிற் களிம்புபோல் மனத்தைப் பற்றி உண்மையை மறைக்கும்; யான் எனது எனக்கு என்று இறுமாந்து, எல்லாம் வல்ல இறைவனை மறக்கும். இந்த இறுமாக்கும்* **நான்** *அணுவணுவாகத் தேய்ந்து மறைந்தால், உண்மையான அன்புண்டாகும். அதனால் "***நான்***" என்றொரு பொருள் எழுந்து நம்மைத் தாங்கி நடத்தும். அப்போதே, "நீயே நான் என்று நினைப்பும் மறப்பும் அறத் தாயே அனைய அருள் தந்தாய் பராபரமே" என்னும்* **தாயுமானோபநிடதம்** *உணர்வாகும். ஆணவ மழிந்தால் அவனருள் விளங்கும்.*

---

## 4. வழிபாடு

**நேசம் பதிந்துள்ளே நின்றுருகி, நெஞ்சாரப்**
**பேசினாற் பேசும் பிரான். 1**

*உள்ளத்தில் அன்புறவு நன்றாக ஊன்றிப்பதிந்து, ஆங்கே நிலைத்து, இடைவிடாமல் மனங் கசிந்துருகி,*

நெஞ்சாரத் தன் ஆர்வங்களைக் கூறி முறையிட்டால் 'இதோ இருக்கிறேன்; அருளுகிறேன்!' என்று அந்தர்யாமியான இறைவன் பேசுவான்.

ஆர்வமுடன் கூவுக; அகக்கல் உருக முறையிடுக; காதலால் கசிந்துருகி ஓதுக! மனதார, உள்ளாழ்ந்த அன்புறவை நாட்டி, உள்ளத்தானைக் கூப்பிட்டால் ஆணவம் நலியும், அவனருள் பொலியும்:—'உள்ளத் தவிசில் உள்ளவா றிருக்கும் சுத்தனே, ஜீவசாட்சியே, உயிர்க்குயிரான ஒருவா, தலைவா! வணக்கம். அறிவிற்கறிவே, அன்பு நிறைவே, அருட்பாஞ் சுடரே, அகநாடகனே! எனது அகத்திரை நீக்கி உன் முகத்தினைக் காட்டு! கனியும் சுவையும், கனலும் ஒளியும், மதியும் நிலவும், வாடா மலரும் மணமும் போல, உன்னில் இணைபிரியாத இச்சா—கிரியா—ஞான சக்திக்கு வணக்கம். என் அம்மையப்பன், ஆசான், சுற்றம், நண்பர் எல்லாம் உனதருளே. உன்னருளாலே யுன்னைக் கண்டு உன்னறிவாயிருக்க என்னை வழிநடத்து! அருளிறைவனே! நீ என்னுள் உயிர்; அதனால் உயிர்க்கிறேன். நீ என் உள்ளரங்கில் நடமாடுகின்றாய்; அதனால் நான் உலகரங்கில் நடமாடுகின்றேன். என் கண்ணுறங்கும்போதும் என்னுள் விழித்திருக்கும் சாட்சியே! விழிப்பு - கனவு - மறதி - துரியம் - துரியாதீதம் ஆகிய அவத்தைகளெல்லாங் கடந்து யானே நீ யென்று எங்கும், எதிலும், எப்போதும், என்னுள்ளும், புறமும் உன்னோடு நீயாக வாழ அருள்! உயிர்மேனியனே, பாராலயத்திற் பலவாகப் பரந்து விளையாடும் அருட்சோதியே! என் உடல், உயிர் மனம், உள்ளம்,

அறிவு, இன்பம், உணர்வு, உண்மை, நினைப்பு, பேச்சு, பாட்டு, செயல், முயற்சி, கல்வி, கேள்வி எல்லாம் நின்னின்றெழுந்து, நின்னருளால் இவ்வுலகரங்கில் நின்னிச்சை புரிந்து, நின்னிற் கலக்க அருள்! எனது செயலெல்லாம் உனது திருவருள் விளக்கமாகுக! என் யோகமும், சுத்தபோகமும், யோகசித்தியும் நீயே. தஞ்சம், தஞ்சம் தலைவா! என்னை அணுவணுவாக மாசகற்றி உன்னிச்சைக்கே யாட்கொள்; என்னை உன்னுள் விழுங்கிவிடு; இந்த ஊன் வீட்டில் நீயே அரசாளு! தூய்மை, வாய்மை, பொறுமை, அன்பு, அடக்கம், நேர்மை, நேயம், அஞ்சாவுறுதி, அயரா முயற்சி, அடிமைத்தளையை அறுத்தெறி யாண்மை, மடமையிருளை மாற்றும் அறிவு, வறுமைத்துயரை நீக்கும் தொழில்வளம், பிணியறு முடலம், பிழையறு மனது, அருட்பொலிவு,—இவற்றால் என்னைப் பூரணமாக்கி, என் ஆதாரங்களை சக்திக்கனலூற்றாக்கி, உலகில் உனதிச்சையை நிறைவேற்றியதும் உன்னுட்கலந்து நீயாக அருள்! என் உள்ளமலரில் உள்ளன்பும், இன்பமும் பொங்குக! என் உச்சிமலரில் உன்னொளியும், அறிவும், அமைதியும் பொலிக! சுத்த பரிபூரண சச்சிதானந்தனே! என் மூச்சு உன்மூச்சு; என்பேச்சு உன்பேச்சு; என்பார்வை உன்பார்வை; என்பணி உன்பணி; என் மனம் உன்மனம்; என்னுடல் உன்னுடல், என்னுயிர் உன்னுயிர் ஆகி, நானற்று நீயாகவருள்! பார்வை நான், பார்ப்பான் நீ. நா நான், சுவை நீ. என்று நீ அன்று நான். ஓம் சுத்தசக்தி!' இவ்வாறு அவரவர் **தாய்மொழியில்** தெளிவாக வழுத்துக! திருவருள் பாலிக்கும்!

**அன்புண்மை யாக அமர்ந்த கடவுட்குன்**
**அன்புண்மை யால்வழிபா டாற்று.** 2

இறைவன் எவ்வடிவாக உள்ளான்? அன்பு வடிவாக, உண்மைச் சுடராக, சத்திய ஜோதியாக அனைவர் உள்ளத்தும் அமர்ந்துள்ளான். அவனை எத்தால் வழிபடவேண்டும்? உள்ளன்பாலும், மனச்சாட்சிக்கு விரோதமில்லாத உண்மையான சன்மார்க்க வாழ்வாலுமே வழிபடவேண்டும். இதயத்தை அன்பு மலராக்கி, வாழ்க்கையை உண்மை வழிபாடாக்குக! வழிபாடாவது வழிப்படுதல்; மனவிருள் வழிநீத்து இறைவன் அருள்வழிப்படுதலே வழிபாடு. அன்புறவாலும், சுத்தசத்திய சன்மார்க்க வாழ்வாலுமே அன்புண்மைக் கடவுளை யடையலாம். வாழ்வெலாம் அவனுக்கே வேள்வியாகுக!

**பற்றற்றுப் பற்றிப் பணிந்துணர்வா லர்ச்சித்துத்**
**தொட்டுநில் ; அஃதே துதி.** 3

நான், எனது என்னும் அகந்தைப்பற்றின்றி, எல்லாம் அவனே, யானும் அவனுடைமையே என்று உள்ளந்தோறும் நடனமாடும் இறைவன் திருவடி பற்றி, அதையே சரண்புகுந்து வணங்கி, அன்புணர்வால் அர்ச்சித்து, அத்திருவடியையே தியானத்தால் தொட்டு, உறவு கலந்து நின்றால், அதுவே சிறந்த தோத்திர வழிபாடாகும்.

இறைவனைப் பாடி யாடித் தோத்திரம் செய்வது அன்பெழுச்சி தரும். இறைவன் திருநாமங்களை முறைப்படி ஜபிப்பது சித்த சுத்தியைத் தரும்; ஓமொலி யெழுப்பும். ஜபம் மானஸீகமாகச் செய்தலே உயர்வு. இவற்றினும், சத்தம் பிறக்கும் இடமாகிய இதயத்தில் அடங்கித் தியானிப்பது பன்

மடங்குமேல். அதனால், மனோலயமும், ஆத்ம சாந்தமும் உண்டாகும். மனம் புறப்பற்றற்று, உள்ளாழ்ந்து, மாசற்று நிலைத்தால் ஓர் இன்பத் துடிப்பு உணர்வாகும். அதுவே **ஆடுந் திருவடி**. அதையே கவனித்துக் கொண்டிருந்தால், தியான தாரணை சமாதியெல்லாம் தம்மால் சித்திக்கும். அவ்வுணர்வே சிறந்த அர்ச்சனை மலராகும். அவ்வுணர்வால் உள்ளத் தானைத் தொட்டு நின்றால் அதுவே மிகச் சிறந்த வழிபாடாகும்.

**எனதேன தென்ன லிடராகு மென்றும்**
**அவனது வென்ன அருள்.**

'இஃது எனது பொருள், எனது செயல், எனதே பெரிது' என்னும் அகங்கார மமகாரங்களால்தான் எல்லா இடர்களும், பிரிவினைகளும், போட்டி பொறாமை, போர்வினைகளும் வருகின்றன. 'எல்லாம் அவன், அவனன்றி யாதுமில்லை. அதுவாகிய சுத்தான்மா அவனே, (அவன்+அது). இறைவனே எனக்கும், எதற்கும் முதல்வன். அவன் இச்சை என் மூலம் நிறைவேறுக!' என்று பணிவுடன் கருதினால் இறைவன் அருள் விளங்கும். அதனால் இருளாட்சி யொழிந்து உலகில் அருளாட்சி துலங்கும்.

கடவுளை நம்பினால் கடவுளருள் காக்கும். அகந்தையை நம்பி 'எனது, யான்' என்று இறுமாந்தால், மனமயக்கமும் வினைமயக்கமும் பெருகி, கவலைப் புயலால் எற்றுண்டு, வாழ்வுக் கப்பல் அல்லற்படும். அதனால்தான் **கண்ணன்** விஜயனை "என்னைச் சரண் புகு! உன்னைக் காப்பேன். என்னையே பணி; அன்புசெய்; யாது செயினும் எனக்கே வழிபாடாகச் செய்! யான் உன்னுள் இருக்கும் ஆன்மா.

என்னின் அன்னியம் யாங்கணும் இல்லை" என்று உபதேசித்தார். இயற்றுவதெல்லாம் இறை வழிபாடு ஆகுக! அகந்தை இருளாம்; அடைக்கலம் அருளாம்.

> **நம்மைக் கொடுத்தோர்க்குத் தன்னையே தந்தருளும்**
> **அம்மையப்ப னாணைவழி யாற்று.** 5

மேற்சொன்னவாறு எனது, யானற்று எல்லாம் அவனே என்னும் உணர்வால் தேக சுதந்தரம், போக சுதந்தரம், யோக சுதந்தரம் எல்லாம் அடைக்கலமாகக் கொடுத்தவருக்கு, இறைவன் சர்வ சக்திமானான தன்னையே தந்து அருள் செய்வான். அத்தகைய கருணைக் கடவுளே உலகின் தாயும் தகப்பனும் ஆவன். அவன் ஆணையாகிய அருளின் வழி பற்றி, சுத்த சன்மார்க்க தர்ம ஸாதனமாகவே உன் கடமைகளைச் செய்!

அருளிறைவன் உலகின் அம்மையப்பன். அவன் ஒவ்வோருள்ளத்தும் பேசுகிறான். அவன் நம் அன்பையும், அடைக்கலத்தையும் ஏற்று அருள்புரிகிறான். நாம் பேசவில்லை; அவனும் பேசவில்லை. நாம் அகங்கரிக்கிறோம்; அவன் மௌனமாயிருக்கிறான். நாம் ஆட்படவில்லை; அவன் ஆட்கொள்ளவில்லை. கேட்டாற் கொடுப்பான் வள்ளல். தட்டுக! அருட்கதவு திறப்பான். 'நான், எனது' என்று கிளம்பும் ஆணவ வாழ்வை அவனுக்கே ஊணாக்குக! 'உன்னிச்சை இதன் மூலம் நிறைவேறட்டும்!' என்று சரண்புகுந்தால் உடல், உயிர், மனம் அனைத்தும் அவனருட் பொலிவெய்தும். இன்னது செய் என்று பணித்து வினைத்திறனுந் தருவான். ஆணையும் ஆற்றலும் அளிப்பவன் இறைவன். அவ்வாறு அடைக்கலத்

தால் இறைவன் ஆணையும், ஆற்றலும், அருளும் பெற்றவர்களே உலகின் தீர்க்கதரிசிகள். பரமஹம்ஸர், நபிநாயகம் முதலிய அருட்புலவர் பெற்றதும், சொற்றதும் இறைவனருளாலேதான். "கடவுள் ஒருவனே; அனைத்தும் அவனையே சார்ந்து வாழும். அவன் பிறப்பிலி, அநாதி, ஒப்புயர்விலி. அவனே வணங்கத் தக்கவன். அவன் படைப்போன், காப்போன், முதல்வன், அனந்த ஞானி. அவனை நம்பி, அடைக்கலம் புகுந்து வழுத்துக!" என்பதே அல்குரான் சாரம்.

## 5. கடவுட்டன்மை

**மகிழ்விற் படைத்தளித்து மாற்றுங் கடவுள்,**
**அகத்தூய்மை யாலே யறி.**

இறைவன் தனது அருளின்பத்தில் அனைத்தையும் படைக்கிறான்; தனது ஆடலின்பத்தினால் அனைத்தையும் காக்கிறான். பழையன கழிந்து புதியன பொலிய அனைத்தையும் இடைவிடாது மாற்றுகிறான். அத்தகைய ஆடலிறைவனை மனத்தூய்மையாலே யறிக!

அறிதலே ஆதல். "பிரம்ம மறிந்தவன் பிரம்மமே யாகிறான் (ப்ரஹ்மவித் ப்ரஹ்மைவ பவதி)" என்கிறது வேதம். அவனைக் கண்டோர் அவன்மய மாவர். மாசறு மனத்தில் ஈசனொளிர்வான். குணதொந்த விகாரங்களில் உழலும் ஆசையாணவ மனமாயத்தால் உயிர்கள் தமது உண்மையான சுத்தனை மறந்து இடர்ப்படுகின்றன. ஆணவமாயங்கள் அனுபவத்தால் அணுவணுவாக நீங்கிச் சுத்தி பெறவே, அருளிறைவன் பிறவியென்னும் உலையிற் போட்டுப் புடம்

வைத்து ஆன்மாவை மாசறுத்துச் சொக்குப் பொன் ஆக்குகிறான். அழுக்கால் அழுக்கெடுப்பது போலவே, தனுகரணபுவன போகங்களைத் தந்து, அவற்றின் அனுபவத்தால் அவற்றினும் மேலான இன்பத்திற்கு ஆர்வமெழுப்புகிறான் இறைவன். "ஆனந்தத்தினின்றே உயிர்கள் தோன்றின. ஆனந்தத்திலேயே அவை உயிர்க்கின்றன. ஆனந்தத்திலேயே முடிவில் அவை கலக்கின்றன" என்கிறது தைத்திரீயம். ஆனந்தத்தில் தோன்றிய வுயிர் துன்புறலேன்? மனத்தழுக்கால், தனது ஆனந்தமான சுத்தான்மாவைக் காணாததால். சுத்தத்திற் சுத்தன் புலப்படுவான். அதனாலேதான் இங்குக் கடவுளறிவிற்கு அகத்தூய்மையை வற்புறுத்தியது. தூய வுள்ளம் தூயன் அரியணை.

**வாய்மை நலனொன்பு வன்றொண் டடக்கமிவை**
**தூயோனைச் சேருந் துணை.** 2

பொய்யாவொழுக்கம், புண்ணிய நல்வினை, மனமொழிமெய்த் தூய்மைக்கேற்ற தவவிரதங்கள், ஆற்றலுள்ள அருட்பணிகள், நான் என்னும் முனைப்பற்று எல்லாம் திருவருள் என்று அடங்கி நடத்தல் ஆகிய இச்சாதனங்கள் சுத்தனாகிய இறைவனைக் கூடும் துணையாகும்.

வாயின் தன்மை வாய்மை. தன் னெஞ்சறிவது பொய்யாமல், யாதொன்றுந் தீமையிலாமல், மாசற்ற நன்மை பயக்கும் பயனுரையே **வாய்மை** யென்பது வள்ளுவர் உள்ளம். **நலமாவது** ஆத்மலாபமும், ஆருயிர்க்குச் செய்யும் புண்ணியமும் ஆகும். மனிதசமுதாயம் வறுமை, மடமை, பயிணை நோயகன்று, தன்னறிவுடன், வாழ்வை யோகமாக்கித் தெய்வத்தன்மை பெற, மனமொழிமெய்களால் புண்ணியஞ் செய்தலே

நலம். மனம் புலன்கள் வழியே தாவித்திரிந்து அலையாமல், பிறருக்கு இன்னலிழைக்காமற் காப்பதே விரதம், நோன்பு. சத்திய விரதத்துடனும், வைராக்கியத்துடனும் ஆன்மாக்களை இறைவடிவாகவே கருதி அருட்பணி செய்தலே வன்றொண்டு. இருள் வழியினின்று விலக்கி, உயிர்கள் அருள்வழி வாழச்செய்தலே மிகச்சிறந்த தொண்டு. அத்தொண்டின்பால் வரும் இசைவசைகளால் மனவேறுபாடுறாது, 'நான் செய்தேன்' என்னும் அகந்தையில்லாமல், 'எல்லாம் திருவருட்செயல்' என்று பணிவோடிருத்தலே அடக்கம். 'நான், எனது, என்றல்' என்று ஆணவங் கிளம்பாமல் மனத்தை உள்ளிழுத்து நிறுத்தலே அடக்கம். இத்தன்மைகளைச் சாதனஞ் செய்தால் சித்த சுத்தியும் மனத்தெளிவும் உண்டாகிப் பரமபரிசுத்தனை இறைவனைத் தன்னுட் கலக்கும் இன்பமெய்தும். உள்ளத் தூய்மை, உடலில் மெய்மை, வாயில் வாய்மை-ஆத்மசித்திக்கு இவை இன்றியமையாதன.

**மெய்யன்பு நல்லுறுதி மேதக்க வொப்புரவாந்**
**துய்யவுளத் தொண்டர் துணை.** 3

உண்மைப்பொருளான கடவுளிடம் உள்ளன்பு, நல்ல சித்தவைராக்கியம், மேலான புண்ணியச் செயல், பொது நலம்—இவையே மாசற்ற மனமுடைய திருத்தொண்டர் துணையாகும்.

உலகில் அன்பு செய்யக்கூடிய ஒரே பொருள் ஒவ்வொருவருள்ளும் ஜீவசாட்சியாக விளங்கும் சுத்தான்மக் கடவுளே! பதியன்பே மெய்யன்பு; பாச அன்பு பொய்யன்பாகும். சுடரை ஒட்டியே விளக்கின் பயன்; சுத்தனை யொட்டியே உலகின் பயன். ஓர் உயிரை நேசிக்கும்போது அதனுள்

உயிர்க்குயிராகும் சுத்தான்மாவையே நேசிக்க வேண்டும். மனைவி கணவனை நேசிக்கும்போது அவனுள் உள்ள சுத்தான்மாவையே நேசிக்கிறாள். கணவன் மனைவியைக் காதலிக்கும்போது அவளுள் விளங்கும் சுத்தசக்தியையே காதலிக்கிறான். அன்பு உதட்டிலும், உடலிலும் காட்டினால் போதாது. நாடகக்காதலர் அன்பு நான்கு நாழிகையே. உள்ளுருகிய மெய்யன்பு சுத்தான்ம வுணர்வினின்றே யரும்பும். அதன் செயல்கள் சிரத்தையாக நடக்கும். நல்லன்பால் நல்லுறுதியுண்டாகும்; இறைவன் அருள் இறங்கிவரும். அந்த அன்புறுதியினாலேதான் ஒருவன் உண்மையான பரோபகாரம் செய்யமுடியும். பிறரைத் தானெனக் கருதும் பேரன்பு நிலையிலேதான் அருட்பணியும், ஒப்புரவும் சுயநலக் கலப்பின்றி நிலவும். பரோபகாரத்தால் தனியகந்தை யொழியும்; மனம் விசாலமாகும். எல்லாம் திருவருள், யாவரும் கோயில் என்னும் உண்மை விளங்கும்.

**காமம் வெகுளி கலக்கமி லாதமனச்**
**சேமத்தி னிறையைத் தேர்.** 4

கடவுளைக் காணாது மறைக்கும் மனவழுக்குகள் காமம், சினம், அச்சம் இம்மூன்றுமே. ஆசைவெறியும், சினவெறியும், அச்சமும், கலக்கமும் இல்லாத மனம் சுத்தமனமாகும். சுத்தமனம் நமக்குப் பெரிய பாதுகாப்பளிக்கும். அப் பாதுகாப்பினால் வாய்மனங் கடந்து நம்முள் விளங்கும் சுத்தனை அறியலாம்.

ஐம்புலன்கள் புறத்தே சிதறியோடுகின்றன. அவற்றின் பின்னே சஞ்சலமனம் ஓடுகிறது. உலக வாசனை அம் மனத்தைப் பற்றுகிறது; சித்தம் அலை

கிறது; அமைதி குலைகிறது; ஆசை வெறிகள் உட்புகுகின்றன. போலி யின்பங்களை யடைய மனம் கொந்தளிக்கிறது. தன் ஆசாபாசங்கள் நிறைவேறாவிடின், அவற்றிற்குத் தடையாக நிற்கும் பொருள்மீது சினவெறி யுண்டாகிறது. அச்சின வெறி கொலைக்கும் அஞ்சுவதில்லை. ஆசையாணவச் சினம் உள்ள மனத்தில் அச்சமும் இயல்பாயிருக்கும். அச்சத்தாற் கலக்கம் ஏற்படும்; நரம்புகள் தளர்ந்து போகும்; அற்பாயுளும் ஆகும்; புத்தி கலங்கும்; கவலைப்புயலில் வாழ்வு தத்தளிக்கும். சாதனங்களால் புலனடங்கித் தெளிந்த மனம் இறைவனை யறிய நமக்குப் பெரிய பாதுகாப்பாகும்.

**உள்ளப் பொதுவெளியி லோங்கு மணிவிளக்கை**
**யுள்ளலற வுள்ளுறவிற் காண்.** 5

உள்ளம் பொதுவெளி, அம்பலம், தகராகாய நிலயம். அதில், ஓங்கியொளிரும் ஆடாமணிவிளக்குள்ளது. அது சுத்தான்ம ஜோதி. அதை ஒவ்வொருவரும் காண்பது பிறப்புரிமை. எப்படிக் காண்பது? முதலில் **உள்ளல் அற**வேண்டும். அஃதாவது, பிற நினைப்புகளை விலக்க வேண்டும். "வலிவுள்ள சங்கற்ப விகற்பங்களை அறவே யொதுக்கி, மனத்தை இந்திரியங்களினின்று மீட்டு, சம நிலைப்படுத்தி, உள்ளே ஆன்மாவில் நிலைகொள்!" என்று **கீதை** யுபதேசிக்கிறது. இதுவே உள்ளல் அறுவது; சித்த சலனங்களையும், சங்கற்பக் குழாங்களையும் நீக்குவது. இதனால் திரையற்ற ஒளிக்கடல்போல மனம் சாந்தமாகும். இது முதற் பயிற்சி. இரண்டாவது, **உள்ளுறவு**. வெளியுறவினால் பற்றுண்டாகும்; உள்ளுறவினால் விடுதலையுண்டாகும். உள்ளே எதனுடன் உறவுசெய்வது?

சுத்தான்மாவுடன். எது உறவு செய்வது? சுத்த மனம். அந்த வுறவினால் என்ன பயன்? சுத்தான்மாவைக் காண்பதே, உணர்வதே, 'அது நான்' என்றறிவதே பயன்.

உள்ளமே பொன்னம்பலம், திருவரங்கம், சுத்த நிலயம். சங்கற்ப விகற்பங்களை விலக்கி, அதிலேயே தியானத்தை யூன்றினால், நமது ஸ்வரூபமான சுத்தான்மா விளங்கும். ஒரு நண்பனுடன் முதலில் மனவுறவு, பிறகு கடித வுறவு ஏற்படுகிறது. அதன் பிறகு பார்க்க வேண்டும் என்று விருப்பமுண்டாகி, ஒரு நாள் கண்ணுறவும் ஏற்படுகிறது. அதுபோலே, நேயம்பதிந்து நெஞ்சார நினைந்து, புறப்பற்றற்று, மனம் உள்ளே பற்றப்பற்ற பரம்பொருள் துலங்கும். "உள்நாடி யுள்ளே யொளிபெற நோக்கினால், கண்ணாடிபோலக் கலந்து நின்றானே! மனத்து விளக்கது மாயா விளக்கு" என்றார் திருமூல யோகி. அதுவே சுத்தான்ம மணிவிளக்கு. அதன் ஒளி பரவினால் மானிடம் தெய்வத்தன்மை யுறும்; உலகெலாம் தெய்வ சைதன்யம் விளங்கும்.

முதலாவது கடவுளியல் முற்றிற்று

# உ. உலகியல்

கடவுளறிவிற்கு அடுத்து, அவனது அருள்விளையாட்டரங்கமாகிய உலகையறிவோம்: சிலர் உலகைக் கடவுள் படைத்தார் என்பர். வேறு சிலர் உலகம் இயல்பாக உள்ளது, யாரும் அதைப் படைக்கவில்லை என்பர்: சிலர் உலகம் பொய்யென்பர், கனவென்பர்; சிலர் உலகம் மெய்யென்பர். இந்தத் தர்க்கவாதங்களால் உண்டாகும் சண்டையும், வீண்காலமும் கொஞ்சமல்ல. உலகை நாம் இறைவனருள் விளையாடும் எல்லையற்ற அரங்கமாகக் காண்போம். ஒவ்வோருயிருக்கும் அதில் ஒரு விளையாட்டம் உண்டு. 'உலகம் பொய்யா, மெய்யா?' என்று பேசிக் காலத்தை வீணாக்காமல், வந்த வினையை அறிந்து நிறைவேற்றிப் பூரணம்பெறுவதே மாந்தர் கடன். உலகம் இறை - இயற்கையின் இன்ப விரிவு. ஒரு பரமாத்மனே இயற்கையின் மூலம் உலகாகவும், உயிர்களின் மூலம் சுத்தாத்மாவாகவும் விளங்குகிறான். அவனது மூல சக்தியினின்று இவ்வாறு உலகம் பலவாகப் பரந்து கிளைவிரிந்துள்ளது. இவ்வுலகை நாம் பரிபூரணம் பெறுதற்கு ஒரு நிலைக்களனாகவே கொள்வோம்.

## 1. உலகாலயம்

உயிர்மேனி யாக்கொண்டே யோங்குமொரு சோதி
பயிலா லயமுலகு பார். 1

எல்லாவுயிர்க்குலங்களையும் தனது திருவுடலாகத் தாங்கி விளங்கும் ஓர் அருட்சோதியாண்டவன், நட

பாடும், விளையாடும் கோயிலே உலகம். இவ்வுண்மையை ஆராய்ந்து பார்க்கவும் :

இவ்வுலகம் அகண்டமான கோயில். அதில் அருளிறைவன் ஐந்தொழிலாடல் புரிகிறான். எல்லாவுயிர்களும் அவனது திருவுடலே. அஃதாவது, எல்லா உயிர்களும் அவனுடன் இணைபிரியாது சேர்ந்துள்ளன. அவனின்றித் தனியே எதற்கும் இருப்பில்லை. "அவனே அனைத்திற்கும் ஆன்மா. அவன் விசுவாத்மா, விராட் புருஷன். அவனே எல்லாம் (ஸ ஏவம் ஸர்வமிதி)" என்பது சுருதி. கண்ணனுடைய விசுவரூபத்தில் விசயன் எல்லா உயிருலகங்களையுங் கண்டான்! "எல்லா வுயிர்களிலும் நானேயிருக்கும் பான்மையைக் காணும் யோகி யாங்கிருப்பினும் என் வயினிருக்கிறான்" என்றான் கண்ணன். உயிர்களை இறைவன் திருமேனியாகக் காண்பவன், எவ்வுயிரையும் வருத்தான். இந்தப் பாவனையால் உலகில் அன்பும் உயிரிரக்கமும் பெருகும்; போர் நீங்கும்.

**ஆருயிர்கட் கோருயிரா யாங்காங்கு நின்றியங்கும்**<br>**பாரால யத்தானைப் பார்.** 2

இறைவன் பாராலயன்; உலகைக் கோயிலாகக் கொண்ட விசுவமூர்த்தி. அருமையான உயிர்க்குலங்களுக்கெல்லாம் அவனே உயிராயிருக்கிறான். எங்கெங்கே பார்த்தாலும் அங்கங்கே, இவ்வாறு உயிர்க்குயிராய், பாரான்மாவாய் நின்று நடமாடும், விளையாடும் அருட் பெருமானைப் பார்!

"நான் ஜீவபூதன்; ஜீவலோகம் எனது அம்சம். நானே பொறி புலன்களினின்று விஷயங்களை அனுபவிக்கிறேன். என் ஓஜஸால் எல்லா உயிர்களையும் தாங்குகிறேன். நானே ஓஷதிகளாகத் தழைக்கிறேன்.

இரவி, மதி, தீ, இவற்றின் ஒளி யெனதே. எல்லார் உள்ளும் யானே யுள்ளேன். என்னின்றி யாது மில்லை" என்கிருர் பகவான் கீதையில். ஒவ்வோருயி ருள்ளும் சாட்சியாயிருந்து இயற்கையின் ஆடலைக் கண்டு உவந்து தாங்கி நடத்துகிருன் இறைவன். "பிரம்மம் உண்மை. சர்வம் பிரம்மம். பிரம்மனை யன்றி ஜீவன் வேறில்லை"—சங்கரர்.

**விரிவா னுலகை விளங்கருளா லாடும்**
**பரமான்மா வாகவே பார்.** 3

எல்லையற்று விரிந்த ஆகாயம் சூழ்ந்த இந்த உலகை அருட்சக்தியால் எல்லாமாய், யாதுமாய் விளை யாடும் பரமாத்மாவாகவே கண்டு வணங்குக !

அமருங் கடவுள் பரமாத்மா, ஆடுங் கடவுள் பாராத்மா, உடல்கொண் டுலவுங்கடவுள் சுத் தாத்மா இயற்கையுலகம் இயங்குங் கடவுள். எல் லாம் அவன் மயம். கடல், மேகம், மழை, ஆறு, குளம், குட்டை, குடநீர் எல்லாம் ஒருநீரின் பல பெயர்வடிவ பேதங்களே. பார்க்கும் எதிலும் பரமனையே பார்க்கவேண்டும்.

**உலவுடலஞ் சிற்றுலகாம் ; உள்ளத்தான் கோமான் ;**
**நிலவியல்பே நீதி நெறி.** 4

நடமாடும் உடல் ஒரு சிறிய உலகாகும். அதன் அரசன் உள்ளத்தானுகிய சுத்தாத்மா. அந்த ஆத்ம ராஜனின் நீதிநெறி அவரவர் மனச்சாட்சியின் இயல்பேயாகும்.

உடல், உலகம் எல்லாம் ஐம்பூதத் தொகுப்பே. நமது உடல் உயிர்க்கும் உலகம். உடல் சுத்தான் மாவின் நிலைக்களன், க்ஷேத்திரம். 24 தத்துவங்கள்

இந்த இயற்கையுடலில் அடங்கியுள்ளன. அவை யாவன :—வான், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம் பூதங்கள் ; ஊறு, ஓசை, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய 5 தன்மாத்திரைகள் ; மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஞானேந்திரியங்கள் ; கை, கால், வாய், குறி, குதம் ஆகிய கன்மேந்திரியங்கள் ; மனம், புத்தி, அகங்காரம், ராஜஸ - தாமஸ - சாத்விகமாகிய முக்குண மாயை. இத்தனைத் தத்துவங்களும் சேர்ந்த இயற்கையுடல் சடந்தான். ஒரு யந்திரத்தில் உறுப் புக்கள்மட்டும் ஒழுங்காயிருந்தாற் போதா. அதை இயக்க ஒரு மின்சாரசக்தி வேண்டுமன்றோ? அச் சக்தியே திருவருள் ; அதையும் நடத்துவோன் இறை வன். அவன் உடலோன், உடையோன், க்ஷேத்ரக் ஞன், புருஷன், அரசன், சுத்தாத்மன். அவன் தோய்த லின்றி, சாட்சியாயிருந்து, இயற்கையின் ஆடலைத் தாங்கி, ஊக்கி, நுகர்ந்து மாசற்றிருக்கிறான். அந்த ஆத்மராஜனின் அறநூலே நமது மனச்சாட்சி. பாசான்மாவான மனிதன் ஆசையாணவத் தளைகளி னின்று விடுபட்டுச் சுத்தான்ம நிலைபெறும் தரும சாதனம் ஒவ்வொருவர் மனச்சாட்சியிலும் நிலவு கின்றதை உள்ளே காண்க!

இயற்கையே யாக்கை ; யிறைவனே யான்மா ;
உயிர்க்குல மோர்தொடர்பென் றுன். 5

பிரகிருதி நிலைக்களன், க்ஷேத்திரம், இறைவன், பரமன், சுத்தான்மா, க்ஷேத்ரக்ஞன். உயிர்க்குல மெல்லாம் ஒரே சங்கிலித்தொடர் என்றுணர்க!

இந்த இயற்கையுடல் நடமாடும் கோயில். அக் கோயிலில் சுத்தான்மக் கடவுளே உயிர்க்கிறான். "புருஷன், அந்தராத்மன், எப்போதும் ஜனங்களின்

இதயத்திருப்பவன்; அவனையறிந்த தூயர் இன்புறுவர். அவர்களுக்கே நிலையான அமைதியின்பம் எய்தும். உடல்தோறும் இந்த ஓர் ஆத்மாவே உள்ளான். தத்வமஸி, (தத் = அது, த்வம் = நீ, அஸி = ஆனாய்) நீ அந்த சுத்தான்மா" என்று வேதம் முறையிடுகிறது. கோடி மின் விளக்குகள் எரிந்தாலும், அவற்றின் சுடர்மணிகளெல்லாம் ஒரே மின்சக்தி விரிவேயல்லவோ? அதுபோலே, கோடி கோடி உடல்களிலும் அருளிறைவனே சுத்தான்மாவாக உள்ளான். ஆதலின், எல்லா உயிர்களும் ஒரு தொடர்புள்ள அருட்குலமே. ஆருடல் கோடி, ஆன்மா ஒன்றே.

## 2. உலக நிலை

உண்டில்லை யென்றேயாச் சண்டையேன்? உள்ளவரை
பண்டுலகிற் பாங்குற் றிரு. 1

'உலகம் உண்டு, இல்லை' என்று ஓயாது வாதம் புரிந்து காலத்தை வீணாக்குவதேன்? பழைமையான உலகத்தில், உயிர்கொண்டு உள்ளமட்டும், நல்லொழுக்கமும், நிறைமுறையான வாழ்வுங் கொண்டிரு!

பாங்கு என்றால் நன்மை, ஒப்பு, சமரஸம், அழகு, தகுதி, சௌக்கியம், ஒழுக்கம், தோழமை, இணக்கம், அன்பு என்று பலபொருளாகும். இக்குணங்கள் அமைந்து சுத்த முக்த ஸமத்வமாக வாழ்வதே மாந்தர் கடமை. அவ்வாறு வாழ்ந்தால், உள்ளமட்டும் உலகில் அமைதியாயிருந்து காலக்கணக்கை முடித்துச் செல்லலாம். 'உலகம் உண்டா இல்லையா?

அதைக்கடவுள் படைத்தாரா? இயல்பாயுள்ளதா?' என்ற வாதங்கள் படிப்பாளிகளின் பாதிநேரத்தைக் கொள்ளைகொண்டு பிரிவினைகளை யுண்டுபண்ணுகின்றன. உலகம் கனவு, பொய், மாயை, முயற்கொம்பு, கானல் என்று வாதமிடவும் வேண்டா. அதன் இரகசியம் சாதாரண மூளைக்கு எட்டாது. சுத்தான்ம சித்திபெற்று உலகெல்லாம் ஒருமயமாகக் காணும் யோகிக்கே உலகின் உண்மை பளிச்செனத் தெரியும். பெரும்புலவர்களே அதன் தன்மை யறிய முடியாமல் அநிர்வசநீயம், இன்னதென்று சொல்ல முடியாத இரகசியம், அவ்யக்த மாயாகாரியம் என்று முடிவு கட்டினர். உலகம் சக்தி விலாசம்; அருளரங்கம். அஃது உனக்கு முன்னிருந்தது; பின்னுமிருக்கும். ஆடுவோர் போவர் வருவர்; அரங்கம் என்றும் உள்ளது. அதில் உள்ளமட்டும் உனக்குரிய பணியை ஒழுங்காகச் செய்; உனது ஆத்ம பரிபூரணத்திற்குகந்த நிலைக்களனுக உலகைக் கருது! பெற்றோர்கள் உன்னைப் பள்ளிக்கூடத்திற் கனுப்பினுல், நன்கு படித்து அறிவை வளர்ப்பதை விட்டுவிட்டு, 'இந்தப் பள்ளிக்கூடம் செங்கற் கட்டிடந்தானே. ஒருநாள் இடிந்து மண்ணுவதுதானே! இதிற் படித்தென்ன பயன்? இந்தப் புத்தகத்தை ஒரு நாள் கறையான் தின்று விடுமே. இது அநித்தியந்தானே; இதைப் படிப்பதேன்?' என்று குறுக்குவாதம் பண்ணுதே! உன்னிடம் வாழ்வுத்தோட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. அதை நன்கு உழுது பண்படுத்திப் பூரணப்பயிர் விளைவி! 'இந்தப்பயிர் என்ன, இன்று முளைத்து நாளை முதிர்ந்து படுவதுதானே! இதையேன் விளைவிக்கவேண்டும்?'. என்னும் சோம்பேறி ஞானம்

வேண்டா! அஃது உலகைப் பாழாக்கும்; உன்னை அடிமைப் படுத்தும். அது நாட்டைக்கெடுத்துச் சோம்பேறி மடமாக்கும். அகந்தைப்பற்றை விடு; உலகிற்கு மன்னனை, அம்மையப்பனை இறைவனை நினை; யாங்கும், யாதும் அவனென் றுன்னு; இவ்வுலகும், வாழ்வும் உனது ஆத்ம பரிபூரணத்திற்காகவே அவன் கொடுத்த சாதனங்கள் என்றெண்ணு! பேச்சிலும், வாதத்திலும் வீண்காலம் போக்காதே! நிறைமுறையுடன் இறைவனுக்கே வேள்வியாகத் தூயவாழ்வு வாழ்ந்து, பிறரையும் வாழ்வி; உலகின் தோற்றம் மாற்றங்களை இறைவன் திருவிளையாடலாகவே காண்! அவனருளாணையை மனச்சாட்சியே சொல்லும். அதன்படி நட! மற்றெல்லாவற்றையும் இறைவன் இச்சைக்கே விட்டுவிடு! வாதிகளை விலக்கு; வாய்மையை உன்னுள்ளே துலக்கு!

**வகுக்கு மனமயக்கால் வையத்தைக் காணேல்;**
**உகக்கு மொளியறிவா லுன்.** 2

தனியகந்தை கொண்டு பிரித்தே நோக்கும் மனமாயத்தால் உலகைக் காணாதே! 'உலகம் திருவருளாடல்' எனக்கண்டு மகிழும் ஒள்ளிய அருளறிவால் அதை நினை!

மனம் அலையும், அகங்கரிக்கும், 'நான் நான்' என்று கிளம்பி எல்லாமான அருளிறைவனை மறக்கும்; பேத புத்தியைக் காட்டும். சாதிசமய சாத்திர கோத்திர நாடுநிற வேறுபாடுகளைக் கிளப்புவதெல்லாம் அறியா மனமே. அது பெயர்வடிவுகளைப் பற்றி உலகைப் பலவாக நோக்கும்; இன்பதுன்ப பந்த தொந்த இருவிகாரங்களில் உழலும். மனத்தை ஜீவ

சாட்சியான இறைவனுக்கு ஊணுக்குக; அவனருளைக் கூடுக! அருளறிவுண்டாகும்! அதன் ஒளியால் நோக்கினல் 'உலகம் கோயில், இறைவன் திருவிளையாடல்' எனக்காணும்.

**இருப்ப தொருபொருளே; யெல்லா மதுவே;**
**பிரிப்பதுபொய் மாயப் பிணி.** 3

உள்ளதெல்லாம் ஒரு பரமாத்மப் பொருளே. அதுவே தனது அருளாற்றலால் எல்லாமாய் விரிந்துள்ளது. இறைவனிடமிருந்து உலகைப் பிரித்து நோக்குவது பொய்யாகிய மனமயக்க நோய்தான்.

ஆணவமனமாயம் அனைத்தையும் பிரித்துப் பலவாகக் காணும்; கிளைவேறு மரம் வேறுகக் காணும்; கண்டதே காட்சி கொண்டதே கோலமெனத் திரியும். அதற்குப் புறப்பார்வைதான்; உட்பார்வையில்லை. அதன் மாயம் நம்மை மயக்கும்; அலைக்கும்; பிரிக்கும்; ஏமாற்றும்; பொய்க்கும். இம் மனத்தை உட்குவித்து, நான் என்று கிளம்பவிடாதடக்கி, எல்லாம் அவனே என்னும் உணர்விற் கரைத்தால் உலகம் ஒருமயம், சிவமயம், பிரம்மமயம், விஷ்ணுமயம், அல்லாமயம், அருட்சக்திமயமாகக் காணும். ஒரு பரம்பொருளே தனது சக்தியால் யாதும் ஆகி, யாங்கும் விளங்கும் உண்மை தெளிவாகும். உலகமும் உயிர்களும் திருவருள் விளக்கமே.

**ஆலுக்கும் பூசனிக்கும் ஆய்ந்து கனிகொடுத்த**
**ஞாலத்தான் வைப்பே நலம்.** 4

இறைவன் ஒவ்வொன்றிற்கும் தக்க படியளக்கிறன். ஆலமரத்திற்கும், பூசனிக் கொடிக்கும் கனியின் பருமனை ஆராய்ந்து அளந்து கொடுத்திருக்

கிறான். அவன் உலகுடையான் ; பாரிறைவன். அவன் வைத்த பான்மையே அதததற்கு நலமாகும்.

'இவ்வளவு பெரிய ஆலமரத்திற்கு இவ்வளவு சிறிய கனியா ? இவ்வளவு மெல்லிய பூசனிக் கொடிக்கு எவ்வளவு பெரிய கனி ! கடவுளின் ஓரகம் என்னே !' என்றொருவன் மனங்கசந்தான். 'இவ்வளவு பெரிய பழம் ஆலமரத்திற்கே யுரியது' என்று பூசனிப் பழமொன்றை ஆலமரக் கிளையிற் கட்டி அதன் நிழலிற் படுத்துறங்கினான். ஒரு காற்றடித்தது. பழம் தொப் பென்று அவன் முகத்தில் விழுந்து மூக்கை நசுக்கி விட்டது. அதன் பிறகு 'ஆண்டவன் கொடுத்ததே ஆளுக்குச் சரி' யென்றுணர்ந்தான் ! வல்லான் வகுத்ததே வாய்க்கால். அவன் முற்றறிஞன். அவன் அளந்த அளவே யளவு. அவன் எங்கு நம்மை வைத்தானோ அங்கிருந்து அவனடி பற்றிப் பணிவுடன் வாழ்ந்தால் நலமாகும். அவன் ஒவ்வொன்றிற்கும் ஆற்றலும், புலமையும் அளந்து கொடுத்திருக்கிறான். பிறரைப் பார்த்துப் பொறாமைப்பட்டு வீண்போது கழிக்காமல், ஒவ்வொருவரும் உள்ளாழ்ந்து தமது உள்ளத்துள்ள இறைவனை யறிந்து, அவன் கொடுத்த இயலாற்றலால் அவனையே உள்ளும் புறமும் வழி படுக !

**மாறித் திரிந்து வளர்மன் னுலகினிலே**
**மாறுத வொன்றை மதி.** 5

இந்த உலகம் ஒவ்வொரு நொடியும் புதிய மாறு பாடடையும் ; ஒன்று மற்றொன்றாகத் திரியும் ; இதில் ஒவ்வொன்றும் அததன் பரிணமத்திற்கு ஏற்றபடி மென்மேலும் வளர்ச்சி பெறும். இவ்வாறு நிலையின்றித் திரியும் உலகில், ஒவ்வொன்றுள்ளும் மாறுத,

நிலைபெயராத, நித்தியமான ஒரு சுத்தான்மவஸ்து உள்ளது. அதையே பொருளென மதி!

உலகம் மாறிமாறி நிலைபெறும் அருள் அரங்கம். அதன் காட்சிகள் விரைவாக மாறும். காட்சிகளே மாறுகின்றன; நாடகம் நடந்துகொண்டேதான் இருக்கிறது. இத்தனை விகாரங்களூடும் அழியா மெய்ப்பொருள் ஒன்றுள்ளது. கற்பத்திலும், ஊழியிலும் அஃது இருந்தவாறே யிருக்கிறது. முக்குணப் போர்க்களமாகிய உலகில், அது நிர்க்குணமாக ஒவ்வொருவர் உள்ளத்தும் வீற்றிருந்து, உடலாகிய தேரை ஓட்டுகிறது. அந்த நித்தியப் பொருளையே நீ என்றறி! உலகின் தோற்ற மாற்றங்களை ஐந்தொழில் நாடகமாக மதி; பார்ப்பவனாயிரு! பார்க்கும் நானு விகாரங்களால் கலங்காதிருக்கலாம்.

## 3. இயற்கை

**இயற்கையின் புத்தகமே யின்பாக நோக்கிற்**
**பயக்கு மறிவுப் பழம்.** 1

கான், மலை, ஆறு, கடல், வான், கதிர், மதி, மீன், காலை மாலை வனப்பு, தென்றல், மலர், உயிரினங்கள் இவையெல்லாம் நம்முன் விளங்கும் இயற்கையான புத்தகங்கள். இவற்றுடன் மனமொன்றி உள்ளுறவு பேண வேண்டும். இவற்றின் புத்தகத்தை (**புதிய உள்ளத்தை**)க் களிப்புடன், பரவசத்துடன், ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவ்வாறு இயற்கையின் மாசற்ற உள்ளத்துடன் ஒன்றிய ஆராய்ச்சி, நமக்கு அறிவென்னும் கனியைத் தரும்.

உலகின் மேதாவிகளும், அருட்புலவரும் இயற்கையின் உள்ளத்தையே நோக்கி அறிவுபெற்றனர். பள்ளிப் படிப்பைவிட ஷேக்ஸ்பியர் தாமிருந்த ஊரைச் சூழ்ந்துள்ள இயற்கை வனப்பையே கருத்தூன்றிக் கற்றார். தாகூரைப் பரவசப்படுத்தியவை கதிரெழுச்சியும், ஆற்று வனப்பும். காளிதாஸனைப் பரவசப்படுத்தியது மலைக் காட்சி. கம்பனை ஆக்கியது காவிரியின் அழகிய வனப்பு. முற்கால வேதரிஷிகள் பசியவனங்களில் இயற்கையுடன் உள்ளுறவு கொண்டே உபநிடத உண்மைகளை யருளினர். உலகின் அருமறைகளெல்லாம் இயற்கையின் மடியிற் பிறந்தனவே! கவிகளுடன் இயற்கை மௌனமாகப் பேசும். இயற்கையுடன் உள்ளுறவு பேணுக!

பேசாது பேசிப் பெருநல் லறிவுணர்த்தும்
ஆசா னியற்கையே யாம். 2

இயற்கை நம்மைப்போல வாய்திறந்து பேசுவதில்லை. ஆனால், அதற்கென ஒரு மௌன வாக்கு உண்டு. அதனால் அது தன்னுடன் உள்ளுறவு கொள்ளும் புலவர் உள்ளத்திற் பேசும். அதன் பேச்சானது எழுத்தில் எழுதிய நூல்களைவிடப் பெரிய, நல்ல, உத்தமமான உயர்வான அறிவை நமக்கு உள்ளார உணர்த்தும், விளக்கும். இவ்வாறு சூக்குமமாக அறிவளிக்கும் ஆசிரியன் இயற்கையொன்றே!

நூலாலும், கேள்வியாலும் பெறமுடியாத ஆழ்ந்த உண்மைகளை இயற்கை நமக்குத் தரும். இயற்கையின் உள்ளத்தில் இறைவனே யுள்ளான். கோடிக்கணக்கான விண்மீன்கள் அகண்ட வெளியில் யாத்திரை செய்கின்றன. இந்த நட்சத்திரக்

குளத்தில் வெள்ளியன்னம் போலச் சந்திரன் தவழு கிறது. பவழச் செவ்வாயினின்று தங்கநகை பொழிந்து காலைக்கன்னி வருகிறாள். அந்தளை விண் மீன்களும் தியானயோகிகள்போலக் கண்மூடிக் காலையொளியிற் கலந்து போகின்றன. உலகையாளக் கடவுள் அனுப்பிய பிரதிநிதிபோன்று சூரியன் உதிக்கிறான். உடனே, உலகம் விழித்தெழுந்து கோடிக்கணக்கான வினைமுயற்சிகளைச் செய்கிறது. மலர்கள் மலர்ந்து தேன்சொரிகின்றன. வண்டு களும் புட்களும் பாடுகின்றன. பனியுருகி ஆறாகப் பாய்கிறது. கடல் ஆவியாகி, மேகமாகி மழை பொழிகிறது. அனைத்திற்கும் கதிரவன் சாட்சியா யிருக்கிறான். அவனுடைய கதிர்கள் பரவி எல்லாத் தொழில்களையும் செய்கின்றன. இவ்வாறே, இறை வன் சாட்சியாயிருக்க, அவனது அருட்சக்தியும் உலகை நடத்துகிறது. பகல் முழுதும் உலகப்போர்க் களத்தில் கதிர்மேனி தோய்த்துச் செம்மேனியாகிச் செல்லுகிறான் கதிரவன். மாலையின் அமைதியில் மல் லிகை நகைக்கும் அழகே யழகு! அதனுடன் கொஞ்சி விளையாடும் தென்றலின் இன்பந்தான் என்னே! அதுபோல, நமது உள்ளம் இறைவன் திருவடி மலருடன் கொஞ்சி விளையாடி அருள் மணமேறுதா? அதோ! மலை தன்னுள் நிலைத்த யோகிபோல நிற்கிறது. அதன் உள்ளத்தைப் பாடி 'ஓம், ஓம் ஸோஹம்' என்று வருகிறதே அருவி! உயிர்களையும் பயிர்களையும் வளர்த்துக் கடலிற் கலந்து கடலாகும் ஆற்றைப்போல, உள்ளமட்டும் அன்பு கொண்டு உலகிற்கு இயன்ற தொண்டுசெய்து இறைவனுடன் இரண்டறக் கலக்கவேண்டும் மனித

வாழ்வு. உள்ளமட்டும் புன்னகை புரிந்து இறைவனுக்கே வழிபாடாக வாழும் மலர்களைப்போல, நமது வாழ்வும் இன்பதுன்பங்களில் வேறுபடாமல் உபசாந்தப் புன்னகையுடன் வாழ்ந்து இறைவனுக்கு அன்புமாலையாகுக! இவ்வாறு இயற்கைப் பொருட்களை யெல்லாம் ஆராய்ந்தால், பெரிய அத்யாத்ம வுண்மைகளையும், உலகவாழ்விற்கேற்ற உண்மைகளையும் அது நமக்குப் புகட்டும். இனிய கவிகள் இயற்கையின் மாணவரே.

**கதிராற் கடன்முகந்து, கார்மேக நல்கி,**
**யிதஞ்செய் யியற்கையென் றாய்!**

இயற்கை எம் அன்னை, இறைவன் தந்தை; இயற்கை உலகன்னை. அவள் உலகிற்கு இதஞ் செய்கிறாள்; இனியன செய்கிறாள். எப்படி? உலகம் வாழ முதலில் வேண்டுவது மழை. கதிரவன் கிரணங்களாற் கடலை முகந்து, மழை மேகத்தைத் தருகிறாள் இயற்கை. அந்தக் கார்மேகம் குளிர்காற்றுப்பட்டு மழை பொழிகிறது. மண் செழிக்கிறது. பயிர் தழைக்கிறது. உயிர் பிழைக்கிறது.

உலகம் இராட்டினம் போலச் சுழலுகிறது. அலை கடலில் கதிர்களைநீட்டி ஆவிநூலிழுத்து முகிலாடை நெய்கிறது சூரியனுள் விளங்கும் இயற்கை. இயற்கை யன்னையின் அருண்மழை உலகன்னைக்குப் பூவணி செய்த மரகதப் பட்டாடை யுடுத்துகிறது!

**ஓசைப் படாம லொருகோடி யற்புதஞ்செய்**
**தேசுற்றாள் சித்தாடுந் தாய்.**

சித்து விளையாடும் இயற்கையன்னை தேசு, அழகு, எழில், ஒளி, திறமை, பெருமை பொருந்தியவள்,

அவனுடைய மாயவித்தைகளின் அற்புதங்களைச் சொல்லி முடியாது! அவள் கோடிக் கணக்கான அற்புதங்களைச் செய்கிறாள். ஏதாவது சிறு காரியம் நிறைவேற்றினாலும் தற்பெருமை பேசுகிறான் மனிதன். இயற்கை யன்னை கோடிக் கணக்கான அற்புதங்களை ஓசைபடாமல், தம்பட்டமில்லாமல், ஆரவாரமில்லாமற் செய்கிறாள்.

அந்தரத்தில் இயற்கையின் கவர்ச்சித் தன்மையால் எண்ணிறந்த உலகங்களும் இரவிகளும் இயங்குகின்றன. எல்லாம் அகண்டசக்தியான இயற்கையின் ஆணைக்குட்பட்டு அணுப் பிசகாமல் நடக்கின்றன. உயிர்க் குலங்களின் உள்ளத்தில் இயற்புலமையிருந்து அவற்றை நடத்துகிறது. மனிதனும் தன்னடக்கத்துடன் இயற்கை வழிபற்றி வாழவேண்டும். அருவியின் பாட்டும், குருவியின் பாட்டும், மலர்த் தேனுண்ணும் வண்டின் பாட்டும், ஆர்கலி முழக்கமும், வான் மழைப் பாட்டும் இயற்கையின் வேதவொலியே. ஓசைப்படாமல் அற்புதஞ் செய்யும் இயற்கையின் உள்ளத்தையே இவை பாடுகின்றன. காலை புலர்வதும், கதிரவனெழுவதும், கடலாற் கதிரவன் கார்முகம் செய்வதும், வான்மழை பொழிவதும், வளநதி பாய்வதும், பயிர்கள் செழிப்பதும் உயிர்கள் பிழைப்பதும், வகைவகை யுயிரினம் வளர்ந்து தளர்வதும், இயற்புலன் வழியே இன்னுயிரியங்கலும், அற்புதம்! இயலற்புதம்! இயற்கை எதையும் வீணாக்குவதில்லை. உதவாக் குப்பையும் உரமாய் வளந்தரும். சேற்றிலுந் தாமரை செழித்து வளரும். இயற்கை போலே யியற்றுக வினைகள்!

**இயற்றுவ தெல்லா மியற்கையதைப் பற்றிப்**
**பயிற்றுக வாழ்வைப் பரிந்து. 5**

இயற்கை இறைவனார் அருள்விளக்கம். அதுவே உலகில் எல்லாத் தொழில்களையும் செய்கிறது. ஒவ்வொருவருள்ளும் இருந்து, இயற்கை 'இப்படிச் செய், அப்படிச்செய்!' என்று தூண்டுகிறது. அன்புடன் அதைப்பற்றி, அதன்வழியே வாழ்வைப் பயிற்றுக; பழக்குக!

"அனைவர் குணங்களின் மூலமும் பிரகிருதியே, இயற்கையே எல்லாம் செய்கிறது. அகங்காரமடையன் நான் செய்கிறேன் என்று மமதை கொள்ளுகிறான். உயிர்களெல்லாம் இயற்கை வழியே செல்லுகின்றன. அந்த இயற்கையை அடக்கமுடியாது. என் இயற்கை மூலமே உலகம் தோன்றி ஒடுங்குகிறது" என்கிறார் **கண்ண பரமாத்மா.** விலங்குகள் இயற்புலன் வழியே வாழ்ந்து உடலுறுதியுடன் இருக்கின்றன. இயல் வழியினின்று பிசகியே மனித வாழ்வு சிக்கலுற்று வருந்துகின்றது. இயற்கையை மீறினால் இடர்ப்படும் வாழ்வு. இயல்வழி நடந்தால் இன்புறும் வாழ்வு. இயற்கைக் கிணங்கினால் இயற்கையே தாய் போல நம்மை நடத்தும்.

---

## 4. உலகுயிர்

**ஒவ்வோ ருயிரு முலகின் வினைக்கணியாய்த்**
**தெய்வம் படைக்குமெனத் தேர். 1**

இறைவன் ஒவ்வோருயிரையும், உலகாலயத்தில் நிறைவேறவேண்டிய ஒரு காரியத்திற்கு அணியாகவே படைக்கிறான் என்றறிக!

உலகம் ஒரு பெரிய தொழிற்சாலை. அதில் எல்லையில்லா வினையணிகள் உள்ளன. ஒவ்வொரு ஜீவனுக்கும் இத்தொழிற்சாலையில் ஒரு பயனுள்ள வினையுள்ளது. உடல் வினைக்கோர் உடையாம். வினையினால் உடலனந்தம். தேன் சேர்க்கும் தேனீமுதல், அருள்விளக்கும் ஞானி வரை ஒவ்வோர் உயிருக்கும் ஒரு சிறப்பான காரியம் உள்ளது. ஊண் உறக்கம், ஊடல் கூடல், ஈனல் பேணல் ஆகியவை எல்லா உயிர்களுக்கும் பொதுவான தன்னல வினைகள். இவையன்றி ஒவ்வொன்றும் செய்யத்தக்க பொது நல வினைகள் உள்ளன. தூயமனத்துடன் தன்னியல்பைக் கேட்டால் அஃது 'இதுதான் உனக்குச் சிறப்பான வினை' என்று சொல்லித் தூண்டும். 'நீ உலகிற்குக் கவித்தொண்டு செய்; நீ தவம் புரிந்து ஆத்ம ஞானத்தைப் பரப்பு; நீ நாட்டு விடுதலைக்காக இந்தப் பணி செய்!' என்று இயற்கை தூண்டும். அதுவே ஒவ்வொருவர் சுபாவம், அல்லது சுதர்மமாகும். அகந்தையின்றி, பேர்புகழைக் கருதாமல், இறைவனிச்சைக்கே வேள்வியாக அப்பணியை உலகாலயத்தில் நிறைவேற்றுக; மனச்சாட்சி மகிழும்படி வினைசெய்க! செயற்பயனை இறைவனுக்கே நிவேதிக்க வேண்டும். செய்யுங் கைகளெல்லாம் விசுவாத்மனை இறைவனது சக்திக்கரங்கள் என்று கருதிப் பணிபுரிக!

**வினையளவே தோற்றம்; விமலனரு ளாலே**
**யனைத்துயிரும் வீடடைத லாம்.** 2

மேற்சொன்னவாறு இயற்றவேண்டிய வினையின் அளவே உயிர்கள் உலகிற் பிறந்து விளங்கும். வந்த வினையைச் செய்து, வினைத்தளை யற்று, இறை

வன் அருளால் எல்லாவுயிர்களும் கட்டுக்களினின்று விடுதலைபெற முடியும்.

வினையுள்ளமட்டும் பிறப்பிறப் பிருக்கும். வியாபாரமுள்ளவனுக்குப் போக்குவரத்து இருக்கும். வினையுதிர்ந்தால் விடுதலை பெறலாம். **சொந்தவினை, வந்தவினை** என இரண்டு வினைகள் உள்ளன: ஊண், உறக்கம், ஊடுதல், கூடுதல், பெறுதல், வளர்த்தல், அதற்காகப் பொருளீட்டல் எல்லாம் சொந்த வினைகள்; தன்னலத்திற்கான மாமூல் வினைகள். இவற்றிற்குமேல் உலகின் பொதுநலத்திற்கும், ஆத்ம சுத்திக்கும் செய்யு உயிர் வினை (Life mission) ஒன்றுள்ளது. காலத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்றபடி அஃது அமையும். அவ்வினையைச் சித்தசுத்தியுடன் வழிபாடாகச் செய்தால் மனிதன் புனிதனுவான். இறைவனருள் அவனை நடத்தும். "என்னை வழிபடு; எனக்கே வேள்வியாகச் செய்வன செய்; என்னைச் சரண்புகு; எனது நிமித்தகாரணமாயிரு! நானே உன்மூலம் செய்கிறேன்; நான் உன்னை மாசறுத்து விடுவிக்கிறேன்" என்கிருன் **கண்ணபிரான்.**

**போக்கு வரவற்ற பூரணனைக் கூடுதற்கே,**
**மீக்கூர்த்துச் செல்லுமுயிர் மேல்.** 3

மீக்கூர்த்தலாவது மேன்மேலும் வளர்ச்சிபெற்று அறிவில் முன்னேறல் (**The progressive evolution of consciousness**). இறப்பு, பிறப்பு, போக்குவரத்து இல்லாமல் தானேதானுக, தற்பரானந்தனுக விளங்கும் பரிபூரணனை இறைவனைக் கலக்கவே ஜீவாத்மா அறிவு முதிர்ந்து மேன்மேலும் உயரச் செல்லுகிறது.

உயிர் ஓர் உணர்ச்சி; சேதனம். அது கல்லில் உறங்குகிறது; புல்லில் உணர்கிறது; எறும்பில் முகருகிறது; விலங்கில் கண்டு, கேட்டு, முகர்ந்து, உண்டு, உணர்கிறது; மனிதனில் மனங்கொண்டு நினைக்கிறது. மனிதன் மனமாசகன்று, சித்தசுத்திபெற்று முக்குண விகாரமற்று, உள்ளத்தில் உள்ள சுத்தாத்மாவைக் கலந்து நின்ருல், வினைத்தளை யுதிரும்; விடுதலை பெற்று ஆன்ம நிறைவுற்றுப் பரிபூரணனை இறைவனைக் கூடலாம். "சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்ரும்" என்ருர் மாணிக்கவாசகர். ஆணவமாயம் அணுவணுவாகத் தேய்வதற்கே தனுகரணபுவன போகானுபவங்கள் பயனுவன. ஆணவந் தேயத்தேய அருளொளி பிறக்கும். அருளால் அறிவாம். அறிவால் இன்பமாகிய இறைவனைக் கலத்தலாம். இதுவே உயிரின் யாத்திரை யென்று வேதங்கள் கூறும்.

**பெண்ணின்றி ஆணில்லை; ஆணின்றிப் பெண்ணில்லை;**
**எண்ணிருவர் சேர்ந்தே யிகம்.** 4

இறை இயற்கை, சிவம் சக்தி, முதல்வன் ஆணை, பரம்பொருள் பராசக்தி எனத் தெய்வத் தத்துவங்கள் இணைபிரியாத இரண்டாயிருக்கின்றன. அதுபோலவே, உலகிலும் எல்லாத் தோற்றங்களும் ஆண்—பெண்ணுக விளங்குகின்றன. ஆண் பெண் என்னும் இரண்டு தத்துவங்களும் கூடித்தான் இவ்வுலக வாழ்வு நடக்கிறது. பெண்ணில்லாது ஆணுவது, ஆணில்லாது பெண்ணுவது உண்டாவதில்லை. இரண்டும் பிரிந்தால் வாழ்வுமில்லை; உலகுமில்லை. கதிரும் கதிரவனும்போலவே பெண்ணும் ஆணும் சமமான சம்பந்தமுள்ளவர். மானிடத்தின்

இரண்டு கூறுகளே ஆண்பெண். பெண் : சக்தி, வாழ்வின் விரிவு, பொலிவு, அழகு, அன்பு. ஆண்: அறிவு, இன்பம், ஆற்றல், வீரம். ஆண்களைச் சிவ மயமாகவும், பெண்களைப் பராசக்தியாகவும் காண்க! ஆண் பெண் ஒருமையைக் குறிக்கவே 'மங்கை பாகன், உமாபதி, இராதாகிருஷ்ணன், இலக்குமி நாராயணன்' என்று இறைவனைப் பெரியோர் வணங்கினர்.

**வேறுபா டெல்லாம் விகற்ப மனமயக்காம்**
**ஊறுபா டென்றுதறித் தள்.** 5

மனிதனுக்கு மனிதன் வேறுபடுத்தும் பிரிவினைக ளெல்லாம் விகற்பமுள்ள, பிழையுள்ள மனமயக்கமே யாகும். மனமயக்கத்தால் உண்டாகும் இந்த வேறு பாடுகளெல்லாம் மனிதசமுதாய ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் ஊறுபாடு செய்வன, இடை யூறுசெய்வன என உதறித்தள்ளு!

மனம் ஆணவப் பிண்டம். அது 'நான்' என் னும் தனிச் செருக்கினல் அனைத்தையும் பிரித்து, வேறுபடுத்தி, பேதபுத்திகொண்டே நோக்கும். ஒற் றுமை யுள்ளவிடத்தும் அது வேறுபாட்டைக் கற் பித்துப் புரட்சி செய்யும். உலகில் உண்டாகும் சாதி மத சாத்திரகோத்திர நாடுநிறச் சண்டைகளெல்லாம், போட்டி, பொறாமை, புகைச்சல், அடிதடிகளெல் லாம், எனது உனது, எனக்கு உனக்கென்னும் போராட்டங்களெல்லாம், மாயமனத்தினல் வளர் பவை. மனத்தைப் பற்றாமல் உள்ளத்திலுள்ள சர் வாந்தர்யாமியைக் கலந்து அவன் மயமாக உலகைக் கண்டு வாழ்ந்தால் மனிதசமுதாயம் இன்புறலாம். பலவேறு நாமரூபங்களுக்குள்ளும் உள்ளது ஒரே

சுத்தான்மா என்ற அனுபவம் முதிர்ந்தால், சாதிமதங்களே வேண்டியிரா. அவரவர் உள்ளுண்மையைப் பற்றி மனச்சாட்சிக்குப் பொருத்தமாக வாழலாம்.

---

## 5. உலக வாழ்வு

**தன்னியல் பாந்தெய்வத் தன்மை யறியாக்கால்,**
**என்னபய னிப்பிறவி யே ?** 1

பிறவிப் பயனென்ன? தனது இயல்பான, உண்மையான, தெய்வத்தன்மையை உள்ளாழ்ந்து அறியவேண்டும். இல்லாவிடில் இந்த உயர்வான மானிடப் பிறவி கிடைத்தும் பயனில்லாததாகும்.

உள்ளேயுள்ள தெய்வத்தன்மையின் சட்டையே மானிடம். உடம்பினில் கடவுளைக் காண்பதே வாழ்வின் பயனாகும். மனிதன் தேவனாகவேண்டும். அதற்கேற்ற தெய்வத்தன்மையான அருள், அன்பு, வாய்மை, தூய்மை, அறிவு, அமைதி, தவம், தியானம், தியாகம், யோகம் எல்லாவற்றையும் சாதனம் செய்யவேண்டும். அவ்வாறன்றிப் புலன்கள் வழியே சென்று, மனஞ் சிதறி, சித்தத்திரைகளால் எற்றுண்டு, தன் உண்மையை விட்டலையும் மனிதன், வாழ்வைக் கட்டிற்கும் கவலைக்கும் உள்ளாக்கி இடர்ப்படுகிறான். "தானாகிய கடவுளை அறியாதவன் ஆத்மஹத்தி செய்கிறான்" என்று வேதாந்தம் கூறுகிறது. பூரணம் பெறுக; பூரணப்படுத்துக! தெய்வத் தன்மை பெறுக; தெய்வவொளி பரப்புக! யோக சித்தியால் உலகை விண்ணகமாக்குக!

**ஆட்சிபெற் றுள்ளே யகில விளையாட்டைக்**
**காட்சிபோற் கண்டு களி.** 2

உன் உள்ளே, உள்ளத்தில் சுயாட்சி பெறு; உன்னை நீ அடக்கியாள்வாயாக! உன் மனத்தை வென்று அடக்கு; பிறகு உலக விளையாட்டை நாடகக் காட்சிபோலக் கண்டு மகிழ்வுறுவாயாக!

இயற்கை யுலகம் முக்குண நாடகம். கோடிக் கணக்கான வினையுடல்களைப் பூண்டு ஜீவாத்மா இந்த நாடகத்தை நடிக்கிறது. உலகம் ஒரு லீலை. மனோ ஜயம் பெற்ற யோகிகள் அதன் ஆடல்களைப் பற்றற்ற சாட்சியாகக் காண்பர். விசுவ லீலையில் அவர்கள் பங்குகொண்டு நடிக்கும்போதும், தாம் உள்ளே சஞ்சலமற்ற ஆத்மாராமராய், ஆத்ம சுகத்தில் ஆழ்ந் திருப்பர். அல்லாப் பண்டிகையில் புலிவேடம் போடுகிறவன், தன்னை அப்துல்காதர் என்று நன் கறிந்து, இப்புலிவேடத்தை ஆடலாகவே காண்பது போலவே, ஒவ்வொரு மனிதனும் மனமடக்கித் தனது ஆத்மஸ்வரூபத்தில் ஊன்றி, வினையுடலையும், அது நடிக்கும் முக்குண நாடகத்தையும் ஆடலாகக் காணவேண்டும்.

**எத்தனையோ காரியங்க ளிந்த வினையுலகில் ;**
**அத்தனையும் ஆடலெனக் காண். 3**

எல்லையற்ற தொழிற்சாலையாகிய இந்த உலகத் தில் எத்தனையோ காரியங்கள் நடக்கின்றன. நல்ல தும் பொல்லதும் அவரவர் குணங்களுக்கேற்றபடி நடக்கின்றன. அததனை வினைத் தொகுதிகளையும் அவ ரவர் சுபாவத்தின்படி இயற்கை புரியும் விளையாட் டென்றே சாட்சியாகக் காண்க!

உலகம் ஆடரங்கம்; லீலாலயம். உடல், அந்தக் கரணம்; உலக வாழ்வு, அதனுல் எய்தும் நுகர்ச்சி எல்லாவற்றையும், ஆன்மாக்கள் அனுபவித்து அனு

பலித்தூப் புடம் வைத்த தங்கம்போல ஆசையாணவ மாசற்றுக் கடவுட் கலப்பெய்தவே இறைவனிச்சை ஈந்தது. நன்மை தீமை, இன்பதுன்பங்கள் எல்லாம் ஒவ்வொரு பயனளிக்கின்றன. ஒவ்வோரனுபவமும். இன்னது செய்தால் நலம், இன்னது செய்தால் கெடுதலென்று பாடம் கற்பிக்கிறது. அவ்வாறு கற்றதைப் பயின்று மனத்தூய்மையும், வாய்மையும் ஓங்கி, முடிவில் 'வினையுடல் புனைந்தாடும் சூத்தான் மாவே நான், இந்த ஆட்டம் எனக்கு வேடமே' என்று பற்றற்றிருப்பதே இன்பம். பார்ப்பானைப் பார்க்கவேண்டும். ஒரு மாயாதீபத்திற்குள்ளே (Magic lantern) யுள்ள விளக்கே சூத்தான்மா. படப் பொறியின் உடலே (Mechanism of the lantern) இயற்கையுடல். படம் வினைக் காட்சிகள். திரை உலகம். கண்ணாடி ஐம்புலன்கள் வழியே செல்லும் மனம். இந்தப் படக்காட்சி முழுதும் விளக்கினால் இயலுகிறது. ஆனால், அது காட்சியின் இன்பதுன்பங்களிற் கலப்பதில்லை. திரையில் புலி கரடி வந்தால் விளக்குப் பயப்படுவதுமில்லை; திருமணக் கோலம் வந்தால் மகிழ்வதுமில்லை. அந்த விளக்குப்போலே, நம்முள்ளத்தில் ஆத்மா இருக்கிறது. அதுவே நீ யென்றறிந்து. புறவுலகக் காட்சிகளை ஆடலாகப் பார்!

**வினையுலகை யஞ்சாத வீரன்போல் வெல்க**
**மனவுறுதி யாலே மகிழ்ந்து.** 4

இந்த வினையுலகை மாயை, பந்தம் என்று அஞ்சி ஓடக்கூடாது. இதை அஞ்சாத வீரனைப்போல வெல்லவேண்டும். எதனால் வெல்வது? மனவுறுதியினால். மனவுறுதி எப்படி வரும்? 'இரு விகார

அலைகள் யானல்லன் ; நான் ஆழி, நான் எல்லையற்ற ஆத்மா ’ என்றறிந்தால் மனம் உறுதியாகும். ஆத்மஜயத்தால் உலகை வெல்லலாம். இறைவனை உள்ளே கண்டோருக்கு, இயற்கை அடிமையாகும். அருச்சுனன் வீரனே. ஆனால் அவன் மனம் குரு க்ஷேத்திரத்தில் பாசாபிமானத்தால் தளர்ந்தது. ‘ இருவிகாரப் போர்க்களத்தைப் பார்த்துத் தளராதே ! எழுந்து நில் ! போர் புரிந்து வெல் !” என்று கண்ணன் தைரியப்படுத்தி உலகில் முக்குணவியல்பின் போராட்டத்தையும், அவற்றில் ஒட்டாது சாட்சியாயிருக்கும் சுத்தான்ம நிச்சயத்தையும் விளக்கினான். பிறகே கீழே போட்ட வில்லையெடுத்து விஜயன் போர்புரிந்து வென்றான். அதனாலேதான், ‘அஞ்சாத வீரன்போல வினையுலகை வெல்க !’ என்பது. உலகில் அருளாட்சியை நிலைநாட்டிச் செய்யும் வினைகளையெல்லாம் இறைவனுக்கே வழிபாடாக்கவேண்டும். மனோஜயம் பெற்று விருப்பு வெறுப்பற்ற ஆத்ம வீரராலேதான் இச்செயல் கைகூடும்.

**அகிலவாழ் வத்தனையு மான்மவிரி வாக**
**நிகழுவதே யுண்மை நிறைவு.** 5

இந்த உலக வாழ்வெல்லாம் ஆத்மாவின் விரிவாக இயலுவதே உண்மையான பூரணத் தன்மையாகும். மனித வாழ்வு தெய்வ வாழ்வாக நிறைவேறவேண்டும். உலகம் ஆனந்த நிலயமாக வேண்டும். அதற்கு வழி யென்ன ? மனிதனிடம் குடிகொண்டுள்ள தெய்வானந்தத்தைத் தேடியடையவேண்டும். அந்தத் தெய்வானந்தமே சுத்தான்மாவாக ஒவ்வோருள்ளத்தும் விளங்குகின்றது. அகில வாழ்வை ஆன்ம விரிவாக்குவதாவது, வாழ்

விற்கு இன்றியமையாத கடமைகளை யெல்லாம் சுத்தான்மக் கலப்புடன் யோகயுக்தனைகச் செய்வது. "யோகயுக்தன் விசுத்தாத்மன், தன்னை வென்றவன், இந்திரியங்களைச் செயித்தவன், எல்லா வுயிர்களையும் தானெனக் காண்பவன், வினைகளைச் செய்தாலும் பந்தப் படமாட்டான். உண்பது உறங்குவதுகூட அந்தராத்மனுடன் கலந்த யோகமாக நிகழுக! எக்காலும் யோகயுக்தனை யிருப்பாயாக! தவத்தினும் அறிவினும் யோகமே பெரிது" என்று கண்ணன் அருளுகிறான்.

வாழ்வின் ஒவ்வொரு செயலையும் ஆத்மசித்திக்காகவே, உலகில் ஆத்ம சாந்தத்தையும், ஆத்ம சாம்ரராஜ்யத்தையும், அத்யாத்ம சித்தியையும் நிலைநாட்டவே செய்க! மனித சமுதாய வாழ்வெல்லாம் ஆன்மநேய வொருமைப்பாட்டுரிமை (Spiritual Commune) யாகவேண்டும். ஒவ்வொருவரும் சுத்தான்ம சித்தி பெற்று, அந்த உணர்வில் வாழ்ந்தால், அரசு குடி, ஆண்டை அடிமை, எசமான் சேவகன், முதலாளி தொழிலாளி, மேற்சாதி கீழ்ச்சாதி என்ற வேறுபாடுகளுக்கு இடமே யிராது. புறவிதிகளும், அரச தண்டமும் இன்றி அவரவர் மனச்சான்றின்படி அறவழி நடப்பர்; தம்மைப் போலவே பிறரைக் காண்பர்; பிறருக்குத் தீங்கிழைப்பது தமக்கே தீங்கென்றுணர்வர்; பிறர் நலம் தமது நலமென்றறிவர். மனிதனை மனிதன் சாதி குலம் நிறம் நாடு மதம் என்னும் வேறுபாடுகளாற் காணுது, ஆத்ம சமானமாகவே மதிப்பான்; உயிர்களை நடமாடும் தேவாலயங்களாகக் காண்பான்; உயிரிரக்கமும், உலகளாவிய அன்பும் அவனுக்கே இயல்பாகும். ஆண்பெண்

ணுறவும் மோகவுறவின்றி யோகவுறவாகும். மேலழு கில் மயங்காது, உள்ளழகைக் கண்டு கண்கள் இன் புறும். சமூகவாழ்வில் தன்னலவகந்தையும், தனிச் செருக்கும், பேராசையும், கொடுமையும் கொடுங் கோலும் இரா. இயற்கையந்திரமான உடலுக்கு இறைவனான சுத்தான்மாவே அரசனாவன். அப் போதே எல்லாரும் மன்னராகலாம். ஒவ்வொருவர் வாழ்வுஞ் செயலும் ஆன்மத் தொகுதிகளுக்கெல்லாம் பொதுநலமாகும். இத்தகைய ஆத்மசித்தியும், ஆத்ம ஸாம்ராச்சியமுமே உலகவாழ்வின் குறிக்கோள். இது யோகசித்தியால் இயலும்.

இரண்டாவது உலகியல் முற்றிற்று.

## ந. அறவியல்

ஆத்மபரிபூரணம் பெற்று உலகிலும் பூரண வாழ்வை நிலைநாட்டும் அறத்தை இவ்வியல் வகுக்கிறது. மனிதன் தன்னுள் உள்ள கடவுளை மன மாயத்தாற் பிரிந்து வாழுகிறான். அதனாலேயே எல்லாத் துயர்களும் வருகின்றன. மீண்டும் மனிதன் மனத்திரையை நீக்கி, மாசகன்று, தன் உள்ளத்துள்ள சுத்தான்மக் கடவுளைக் கூடி வாழவேண்டும். அதற்காகிய சுத்த சாதனங்களை வரையறுத்துக் கூறுவதே அறம். அறத்தால் இன்பமாம். இறை உயிர் உலகிற்குள்ள இணைப்பை அறம் விளக்கும். உலகையும் உயிரையும் கடவுளுணர்வில் நிலைநிறுத்துவதே தருமம். பேதபுத்தியாற் பிரிந்து நிற்கும் மனிதக் குலத்தை ஆன்மநேயத்தால் ஒன்றுசேர்ப்பிப்பதே அறம்; வேறுபடுத்துவது ஆசையாணவத்தால் உண்டாகும் மறம், அதருமம். மனமாயத் தளைகளை வேரறுத்து, நம்மை அந்தராத்மாவான இறைவனுடன் ஒன்று கூட்டுவதே அறம். இறைவனிடமிருந்து நம்மைப் பிரிப்பதெதுவும் மறம். மனித சமுதாயத்தில் தெய்வவொளி பாய்ச்சி அதை ஒரு தெய்வ சங்கமாக்க வேண்டும். அதன் வாழ்வு முற்றிலும் (தெருப்பெருக்குவது முதல் நாட்டாண்மை வரை) யோகமாக வேண்டும். இந்த அகண்ட யோகசித்திக்கு மனிதன் மனமாசகன்று சுத்தனாக வேண்டும்; ஆசையாணவத் தளைகளற்ற ஜீவன்முக்தனாகவேண்டும்; 'தானே பிறர்' எனக்காணும் சமத்துவனாக

வேண்டும். இந்தச் சுத்த முக்த ஸமத்துவ ஸாதனமே நாம் இங்கு விளக்கும் அறநெறி ; அறம் ஆண்டவன் சட்டம். தனது சட்டப்படி நடக்கும் குடியை நீதி மன்னன் போற்றுகிறான். கடவுள் மனச்சாட்சியி னின்று 'இன்னது அறம், செய்! இன்னது அதர் மம், செய்யாதே!' என்கிறார். அதன்படி கவனமாக நடந்தால் கடவுளருள் நமக்கு எல்லாப் பாதுகாப்புக் களையும் அளிக்கும். மனச்சாட்சியே மாந்தர் அறநூல். அதை மறுத்தால் துன்பம்; மதித்தால் இன்பம். சுத்தி, முக்தி, சமதி இம்மூன்றும் அறக்கடவுளின் உள்ளமும், உயிரும், விழியுமாகும். கண்ணாடி போலத் தெளிந்த உள்ளத்தில் கடவுள் விளங்கும். உரையில் வாய்மையும், உள்ளத்தில் உண்மையும், உடலில் மெய்ம்மையும் இருந்தால் சுத்த மனமும், சுத்த வாழ்வும் உண்டாகும். கண்ணிற் கருணையும், சமநோக்கும் இருந்தால் உலகெல்லாம் அன்புமய மாகும். இந்த அறநெறியைச் சாதனஞ் செய்யும் வழியைக் காண்க :

---

## 1. அறம்

தானு நிறைவுற்றுத் தன்னவரு மின்புறுதற்
கானவொழுக் காறே யறம். 1

மனிதனுக்கு இரண்டு கடமைகள் உள்ளன. ஒன்று தான் பூரணம் பெறுதல்; இரண்டு தன்னவ ராகிய மனிதசமுதாயம் பூரணம் பெறச் செய்தல். இந்த இரண்டு நிறைவேற்றத்திற்கும் ஏற்ற ஒழுக் காறே, சன்மார்க்கமே அறம் எனப்படும்.

நிறைவுறலாவது, மானிடத்தில் உள்ள மனமாசு

களைத் துடைத்துக் குறைகளை நீக்கிச் சுத்தான்ம பரி பூர்ணநிலை பெறுதலே. மனித வாழ்வு இருபான்மைத்து: ஒன்று தனிவாழ்வு (Individual life); மற்றொன்று கூட்ட வாழ்வு (Collective life or communal life). ஒன்று உள் வாழ்வு; மற்றொன்று லகவாழ்வு. உள்மனிதனே மனிதன், புருஷன். அவனை யறியாது எவ்வளவு சீருஞ் சிறப்பும், அறிவாற்றலும் பெற்றாலும் இன்ப மெய்தாது. இன்பத்தின் ஊற்று இதய பரமாத்மனே! மனிதனின் ஆதார கமலங்களில் தெய்வசக்திகள் அடைபட்டுள்ளன. தூய்மை, வாய்மை, பக்தி, ஞானவிசாரம், தியானம், தவம், மௌனம், ஸமதர்சனம், மந்திரஜபம், பிராணயாமம் முதலிய சாதனங்களால் அவற்றை மலர்ப்பித்துப் பூரணம் பெறவேண்டும். தன்னுள் உள்ள சுத்தாத்மனைக் கண்டு நிறைவுற்றபின், உலகையெல்லாம் அவன் மயமாகவே காணலாம். ஆருயிர்களை யெல்லாம் அவனது திருமேனியாகக் காணலாம். 'இல்லதும் உள்ளதும் அல்லதும் அவனுரு' என்பதைக் காணலாம். அப்போது தான் பெற்ற இன்பத்தைத் தன்னவரான மக்களும் பெறவேண்டுமென்னும் ஆர்வமுண்டாகும். தனது பூரண சக்தியைக் கொண்டு தன்னைச் சுற்றியுள்ள மனித சமுதாயம் பூரணம் பெறச் செய்வது ஓர் இன்றியமையாத கடமை யென்று தோன்றும். ஆத்மசித்தி மலையூற்றுப் போன்றது. அகிலசித்தி மலையருவி போன்றது. பூரணம் பெறுக; பூரணம் புரிக!

**மன்னு மனச்சாட்சி மன்னவன்சொல் லென்னவென**
**வுன்னி நடத்த லுயர்வு.** 2

நமது உள்ளம் அரியணை; அதில் மன்னனொருவன் மன்னியுள்ளான்; என்றும் நிலைபெற்றுள்ளான்.

அவன் நம்முடைய பேச்சுகளையும், நடத்தைகளையுட் உடனிருந்து கவனிக்கிருன். அவன் நலத்தைச் சொல்லுகிருன். அவன் என்ன சொல்லுகிருன் என்று நெஞ்சைத் தொட்டுப் பார்த்து ஆராய்ச்சியுடன் நடத்தலே மிகவும் மேலானது.

மனச்சாட்சியே நம் அரசன்; அவன் எப்போதும் உண்மையே பேசுவான்; உண்மை வழியே காட்டுவான். பொய்பேசினல் சவுக்கடி கொடுப்பான். மனச்சான்றின் வழி நடந்தால் மதக்கோட்பாடுகளே தேவையில்லை. மனச்சாட்சியே இயல்வழி. மனச்சாட்சியை எப்படி யறிவது?

'இவ்வழிச்செல்' லென்ருேன்றுள் ளெச்சரிக்கை செய்கின்ற
தவ்வழியி லச்சமறச் செல். 3

நமது உள்ளத்தே நின்று சூட்சுமமான ஒரு பொருள், 'இதோ இந்த வழியிலே நட, கவனம்!' என்று அடிக்கடி அறிவிக்கிறது; 'அந்தத் தப்பு வழியே செல்லாதே!' என்று எச்சரிக்கை செய்கிறது. அதுவே மனச்சாட்சி. அது சரியென்னும் வழியில் அஞ்சாது வீரவுறுதியுடன் செல்லுக!

மனச்சாட்சி சொல்வதை அஞ்சாது உறுதியுடன் செய்யவேண்டும். அதன்பால் வரும் இடர்களும் நன்மைக்கு வித்தாகும். கிரேக்க ஞானியான சோக்ரதர் இவ்வாறே மனச்சான்றை மதித்து ஆதன்ஸ் வாலிபருக்கு ஆத்மோபதேசஞ் செய்தார். அறியா மாந்தர் அவருக்கு நஞ்சீந்தனர். அதையும் புன்னகையோ டுண்டார் அந்த ஞானி. இன்று அவர் உலகின் உள்ளத்தில் விளங்குகிருர். அவருண்மையை உலகம் போற்றுகிறது. பிறர் மதிக்க, பெயர் புகழ் பட்டம்பெற, மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்

கலைச் செய்தால், பொய் சொன்னால், 'ஏன் தப்பு வழியிற் சென்றாய்? ஏன் பொய் சொன்னாய்?' என்று மனச்சாட்சி சூடு கொடுக்கும். 'ஐயோ! ஏன் பொய் சொன்னேம்!' என்று உள்ளே மனம் வேதனைப்படும். திருடன் திருட்டை யொளித்தால், 'அட களவாணிப் பயலே' என்று மனச்சாட்சி இடித்துரைக்கும். நல்லது செய்தால் 'சபாஷ்' என்று மனச்சாட்சி தட்டிக்கொடுக்கும். தன் மனச் சாட்சியே தரும விளக்கு.

அறமென் றறிந்ததனை யஞ்சாது செய்மின் ;
இறைவனருள் காக்கு மினிது. 4

இவ்வாறு மனச்சாட்சிக்குப் பொதுவாக 'இது தருமம், இது நியாயம், இஃது அறம்' என்று அறிந்ததைப் பிறர் இகழ்ச்சிக்கும், இடர்களுக்கும் பயப்படாமல், கலங்காமல் செய்மின்! அப்படிச் செய்யும் அறவோரை — தருமாத்மாக்களை — இறைவனருளே மகிழ்வுடன் நன்கு பாதுகாக்கும்.

அரிச்சந்திரன் பட்ட இடர்களெல்லாம் உண்மையைப் பெருமைப்படுத்தின. மனித சமுதாயம் சீர்குலைந்து வரும்போது மகான்கள் சிலர் தோன்றி, அறங்கூறி அதை நல்வழிப்படுத்த முயலுவர். அவர்களுக்குத் திருவருளே துணைசெய்யும். அறியாமாக்கள் அத்தகைய அறவோர்களுக்குப் பல இடரிழைப்பர். நல்லது சொன்ன நபிமணியைக் காப்பிரியர் கல்லாலடித்தனர். அன்புரைத்த ஏசுவைச் சிலுவையிலிட்டனர். இவ்விரு மஹான்களும் உலகின் நினைப்பிற் சிரஞ்சீவிகளாயினர். இவர்கள் சொன்ன உண்மைகள் என்றும் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாயின. சுத்தாத்மாக்களுள் அருட்சக்தி யிறங்கி

உலகிற்கு இனிது செய்யும். இதுதான் அவதார வுண்மை. அறஞ் செய்க! ஆண்டவன் காப்பான்! அவனருள் அன்பரைக் காக்கும். தருமபுத்திரரைக் கண்ணன் காத்த கருணையைக் கருதுக!

**இறந்தபின் னெப்படியோ; இக்கண் ணுலகிற்**
**சிறந்த திருவினையைச் செய்.**

உடல்பிரிந்தபின் ஜீவயாத்திரை எப்படியோ, அஃது எங்கே செல்லுமோ, எக்கதியாமோ, எவ்வுடலிற்புகுமோ நாம் உறுதியாக அறியோம். இதோ, கண்ணுற்காணும் இடமகன்ற உலகம் உள்ளது. அதில் மேலான திருவினைகளை, சுபகாரியங்களை, அறவினைகளைச் செய்க!

கண்கண்ட உலகில் உள்ளமட்டும் ஆத்மசாந்திக்கும் பொதுநலத்திற்கும் ஏற்ற நல்ல காரியங்களைச் செய்வதே சிறந்தது. உள்ளமட்டும் கடவுளன்பு, வழிபாடு, தியானம், ஞானவிசாரம், நன்னூலாராய்ச்சி, நல்லோர்கூட்டம் வகித்தல், அடியார் நேயம், ஆருயிர்த்தொண்டு, உயிரிரக்கம் ஆகிய சன்மார்க்கங்களைப் பயில்க! கற்றல், கற்பித்தல், மாணவருக்குக் கல்வி நிலயம் அமைத்தல், ஆசிரியர்களைப் போற்றல், நன்னூல்களை வெளியிடல், கலைவளர்ச்சி, புலவரைப் போற்றல், சாதுக்களுக்குத் தொண்டு செய்தல், முதியருக்குதவல், நொண்டி முடமானவர் இடர்ப்பட்டோர் சண்டையிற் புண்பட்டோர் முதலியோரை ஆதரித்தல், பசி தீர்த்தல், பசுக்காத்தல், நன்னீர்த்துறைகளமைத்தல், முதல் போட்டுப் பலருக்கு உபயோகமான தொழில்களை நிலைநாட்டி ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் பெருக்கல், நோய் தவிர்த்தல், இயற்கை வாழ்வுரைத்தல், தரை

வாணிபம் கப்பல் வாணிபம் புரிந்து வந்த பணத்தில் பத்தில் ஒரு பங்கு நல்ல தருமங்களுக்குச் செலவிடல், நாட்டின் விளைபொருட்களைக் கொண்டு பலவகைத் தொழில்களாற்றிச் சுதேசச் செல்வத்தைப் பெருக்கி வறுமை நீர்த்தல், வேளாண்மை செய்தல் முதலியன சிறந்த திருவினைகளாகும். 'வாழ்ந்த நாளெல்லாம் நல்லது செய்தோம், இன்ன அறவினையாற்றினோம், உயிர்நலம் புரிந்தோம்' என்ற மகிழ்வுடன் இறப்பது நல்லது.

---

## 2. அற விரிவு

**ஏதேது காலத்திற் கேற்றபொது நன்மையதை**
**வாதின்றி யாற்றி மகிழ். 1**

நல்வினை செய்வதில் காலத்தையுங் கருதவேண்டும். காலத்திற்கேற்ற பொதுநலம் எது எது என்று தோன்றுகிறதோ, அதனை வீண்வாதங்களிற் பொழுது போக்காமல் நிறைவேற்றி இன்புறுக!

அறம் இருவகை : ஒன்று எப்போதும் உள்ள ஆத்ம தருமம் ; மற்றொன்று காலத்திற்குத் தக்கபடி மாறும் யுக தருமம். உண்மை, மனமொழி மெய்த் தூய்மை, அன்பு, அருள், அடக்கம், கடவுளுறுதி— இவையெல்லாம் மனிதான்மா புனிதமுற இன்றியமையாத ஆத்ம தருமங்கள். ஆத்ம தருமத்தில் ஊன்றி நின்றுகொண்டு அவ்வக்கால முன்னேற்றத் திற்கு இன்றியமையாத யுகதருமத்தை நடத்தல் வேண்டும். **சத்தியயுகத்தில்**, மாந்தர் ஆத்மசித்தராக, இயல்பான ஆத்மதருமத்தில் ஒன்றுபட்டு வாழ்ந்தனர். **திரேதாயுகத்தில்**, ஆன்மநேயம் சிதைந்து மாந்தரை

அடக்கியாள ஒரு நீதியும், அதைக்காக்க ஒரு காவல னும் தோன்றினன். துவாபரயுகத்தில், மனிதன் இரு விகாரங்களுக்கு ஆளானன்; தருமபுத்திரருக்கும் துரி யோதனக் கும்பலுக்கும் குருக்ஷேத்திரப் போர் நிகழ்ந்தது. கலியுகத்தில், முன் கட்டுப்பாடுகளெல்லாம் குலேந்தன. சாதிதருமம், வர்ணதருமங்க ளெல்லாம் சிதைந்தன. மனிதன் தனது அறிவாராய்ச்சியால் எவ்வளவோ முன்னேறி வருகிருன். அந்த முன் னேற்ற வேகத்தில் பழைய ஏற்பாடுகளெல்லாம் தகர்ந்து போகின்றன; கட்டுப்பாடுகள் உடைகின் றன. மனிதன் சமுதாய வாழ்விற் சுயேச்சை பெற விரும்புகிருன்; சாதிமதத் தடைகளை யொழித்துச் சர்வசமரஸனக வாழ விரும்புகிருன்; தன்னல முக்தி யையும் தனிச்செருக்கையும் ஒழித்துக் கூட்டமாக, சங்கமாக, ஒற்றுமையாக வாழ விரும்புகிருன். வீட்டிலடைபட் டிருப்பதை விடுத்துப் பெண்மை நாட்டுப் பணிக்கு முன்வந்து வீரங் காட்டுகிறது. நாம் ஒரு புதிய யுகத்தின் வாயிற்படியில் நிற்கிரேம். மனிதன் மனிதனுக்கு எவ்வகையிலும் அடிமை யில்லை. நாட்டை நாடு அடக்கி யாளுவது, கொள்ளை யடிப்பது, அடக்குமுறைகளால் இடர்செய்வது எல்லாம் இனிப் பலியா. மனிதனிடமுள்ள சுதந்தர சக்தி விழித்தெழுந்தது. வறுமை, மடமைப்பிணி களை யொழிக்க மனிதான்மா அல்லும் பகலும், அறி வுந் தொழிலும் புதுப்புது விதமாக வளர்க்கிறது. ஆண் பெண் சமவுரிமை காலத்தின் இயல்பானது. சாதிமதத் தடைச்சுவர்களைத் தகர்க்க எங்கும் சமரஸ சன்மார்க்கங்களும், சுத்தசங்கங்களும் எழுந்துள் ளன. சுயேச்சாதிகாரத்தை வீழ்த்த சமதருமக்

கிளர்ச்சி நடக்கிறது. இனி வரும் மனித சமுதாயம் சுத்தான்ம வுணர்வில் நிலைகொண்டு, மனச்சாட்சி யையே அறவழியாகப் பற்றி, யார் கட்டுப்பாடும் இன்றிச் சுயேச்சையாக, உலகளாவிய நன்மைக் கும், ஒற்றுமைக்கும், பொதுநலப் பணிகள் செய்து வாழும். நடை உடை பாவனைகள், பேச்சு, எழுத்து, நினைப்பு, காரியமுறைகளெல்லாம் புதுமை பெறும். இப்போது, தனியுடைமை போய் உலகம் பொதுவுடைமை யாகி வருகிறது. இனி, அஃது அருளுடைமை யாகும். எவ்விதமான மனிதக் கட்டுப்பாடும் ஆதிக்கமுமில்லா மல், ஒவ்வொருவ ருள்ளும் விளங்கும் இறைவனருளே வாழ்வை நடத்தும். தம்மைப்போலப் பிறரும் நட மாடுங் கோயில்கள் என மதித்து மாந்தர் அகி லாத்ம வுணர்வில் (Cosmic Consciousness) வாழ்வர். அத்தகைய சுத்த முக்த ஸமத்வ ஸத்ய ஜோதி வாழ் விற்கே காலம் முன்னேறிச் செல்லுகிறது. அதற் கேற்றபடி ஒவ்வொர் ஆணும் பெண்ணும் வாழ் வைத் திருத்திக்கொள்ள வேண்டும். தன்னலம் விடுத்துப் பொதுநலம் பேணி மனிதசங்கம் தெய்வ நிலை பெறுவதற்கான அருள்வழிவாழ்வை மாந்தர் மேற்கொள்ளவேண்டும்.

**பழமை பழமையெனும் பல்லவியே பாடேல் ;**
**புதுமை புதுமையெனப் போ.** 2

'இது பழைய வழக்கம், பழைய ஆசாரம், முன்னோர் வகுத்தது' என்று திருப்பித் திருப்பிப் பல்லவி பாடிக்கொண்டு காலமுன்னேற்றத்தின் குறுக்கே நில்லாதே! 'புதுமை, புதுமை, புதுவாழ்வு, புதுநினைப்பு, புதிய சுயேச்சை வேண்டும்' என்று சொல்லி முன்னேறிச் செல்!

காலவெள்ளம் முன்செல்லுகிறது. அதிற் புதுப் புது ஊற்றுநீர்கள் வந்துசேர்கின்றன. பழைய தேக்கத்திலேயே பாசி பிடித்தலையேல்! அறிவாராய்ச்சி சண்டவேகத்தில் முன்னேறி வருகிறது. கட்டை வண்டி, குதிரை வண்டி, மிதிவண்டி, மோட்டார், புகைவண்டி, புகைக்கப்பல், நீர்மூழ்கி, எல்லாங் கடந்து விர்ர்ர்ரென்று வானை ஊடுருவி விரையும் ஆகாயக் கப்பலுக்கு வந்துவிட்டது யந்திர நாகரிகம். இப்போது, 'தீக்குச்சி அநாசாரம், முப்பாட்டன் போலே சக்கி முக்கி தட்டுவேன்' என்னலாமா? 'இராமர் வில்லினாலேதான் சண்டைசெய்தார்; ஜப்பான் 'டம்டமார்' குண்டு போட்டாலும் நான் அம்பைவிட்டுத்தான் எதிர்ப்பேன்; அது துரோணாச்சாரியார் அருச்சுனனுக்குக் கற்றுக் கொடுத்த வித்தையல்லவோ? நான் அதை மறப்பேனா?' என்னலாமா? 'எனது கொள்ளுத் தாத்தா காலத்திலே காசிக்கு நடந்துதான் சென்றார்கள்; நான் புகைவண்டி யேறமாட்டேன்' என்னலாமா? 'வேதரிஷிகள் ஓலையில் எழுதினர்; காகிதமும் அச்சும் எனக்கு வேண்டா' என்னலாமா? 'எனது முப்பாட்டன் கட்டைவண்டியிலேதான் போனான்; நான் மோட்டார் ஏறமாட்டேன்' என்னலாமா? முப்பதாம் பசலிப் பழக்கங்களில் அழுத்தம் செய்துகொண்டு, புதுப்புது அழகுடனும் ஆற்றலுடனும் முன்னேறும் காலவோட்டத்தின்முன் கைகட்டி நிற்பது பெரும் பேதைமை. முன்னேறிச் செல்லும் காலதருமத்தை முன்னின்று ஆளவேண்டும். இன்றேல், பின்னடைந்து வீழ்வோம். பழைய அத்யாத்ம தருமத்தைப் பல்லவியாகக் கொள்ளலாம். அஃது என்

றைக்கும் உள்ளது. அப் பல்லவிக்குமேல் காலத்திற் கேற்ற அனுபல்லவி, சரணம், ஸ்வர-ராகசஞ்சாரங் களை அமைத்து, சுதந்தரம் பெருகும் தாளமேளங் களை இணைத்து, புத்திசை பெருக்கி, மனித வாழ்வு அகண்டமான சுத்த முக்த ஸமத்வானந்தப் பாட்டாக வளரவேண்டும். தனிவாழ்வு, பொதுவாழ்வு இரண் டும் பூரணம் பெறவேண்டும். வாழ்வு ஒரு ஜீவநதி. காலவெள்ளத்திற் கேற்றபடி அதன் ஆழமும் அகல மும் அமையும். காலவெள்ளம் பழைய படுகையில் ஓடினாலும் குறுக்கேயுள்ள மணல் மேடுகளையும், கட்டுகளையும் உடைத்தெறிந்து முன்னேறும்; பாசி பிடித்த தேக்கங்களை யெல்லாம் அது வாரி விழுங்கி விடும். 'எனதே மதம்; எனதே சாதி; எனதே சமயம்; எனதே நாடு' என்னும் தன்னலவகந்தை இனிச் செல்லாது. மனக் கட்டுமானங்களால் வற் புறுத்தப்படும் விதி நியமனங்கள் இனிச் செல்லா. வேற்றுமைத் தடைகளைத் தகர்த்து, அகண்டாத்ம வொற்றுமைக்கே காலதேவி புதுமை முழக்கத்துடன் பவனி செல்லுகிறாள். பழைய நன்மைகளைக் கொண்டு காலத்திற்கேற்ற புதுப்பொலிவெய்துக! காலத்தால் அற்று, உளுத்துப்போன பழைய வழக்கங்களில் அழுத்தங்கொண்டு புதுநலத்தை யிழக்கக்கூடாது. புதுமை பொலிக; புதுமை வாழ்க!

**மோகரிக மின்றி, முரணற்ற முன்னேற்றம்**
**நாகரிக மென்றே நவில்.** 3

நாகரிகம் என்றால் என்ன? மோகரிகம், மன மயக்கம் இல்லாது, ஒருவருக்கொருவர் முரண்பட்டு, மாறுபட்டுப் போட்டி பொறாமைகளால் பகைத்துப் போராடாமல், மனித சமுதாயம் ஒன்றுபட்டு, அன்

பிலும் அறிவிலும் ஆன்மவுணர்விலும் வளர்ச்சி பெறும் முன்னேற்றமே நாகரிகம் என்று சொல்லுக!

பிற்போக்கான பிடிவாதங்களுடன் மனித வாழ்வின் முன்னேற்றத்தைத் தடுக்கும் எவையும் நாகரிகமாகா. நாகரிகம் என்பது இனிய நடைமுறை. அதனால் மனமயக்கம் இனமயக்கங்கள் ஒழிந்து, மனித சங்கம் ஒரு குலமாக முன்னேற முடியும். மனிதனிடமுள்ள தெய்வ சக்தியைப் பெருக்கி, மனமயக்கங்களால் வரும் ஆசாபாசங்கள், போட்டி பொறாமை, சிறுமை, மடமை, கொடுமைகளையொழித்து, கல்வி, கேள்வி, அறிவு, அன்பு, அருளுடைமை, ஆள்வினையுடைமை, பண்புடைமை, நாண், கண்ணோட்டம், நட்பு, ஒப்புரவு, பொறுமை, உரிமை, ஒற்றுமை, சர்வாத்ம தரிசனம், சுத்தசமரசம் ஆகியவற்றை வளர்த்து மனித சமுதாயத்திற்கு நலம்புரிவதே நாகரிகம். கொல்படை கொண்டு, ஆகாச குண்டுபோட்டு, இரத்தவெள்ளம் பெருக்கி, இலட்சக்கணக்கான உயிர்களை மடித்துப் பிறர் நாட்டைக் கவரும் அசுரக்கொடுமை காட்டுமிராண்டித்தனமான அநாகரிகம். தானும் வாழ்ந்து, பிறரையும் வாழவிடுவதே நாகரிகத்தின் முதற்படி. தேவைக்கு மேலாக இயந்திரப்பொருளைக் குவித்து எளிய நாடுகளைச் சந்தையாக்கிப் பொருளுறிஞ்சுதல், ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கு உழைப்பும் பிழைப்பும் தரக்கூடிய பணத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டல், பிறர் பசிக்கத் தான் பணங்குவித்தல், ஏழைகளை நசுக்கும் செல்வச் செருக்கு, போட்டி பொறாமைகளின் வாள்வீச்சு, சதைத் திமிர்கொண்டு தருமமழித்தல், கற்பழித்தல், ஊன்

மது அருந்தல், உயிர்க்கொலை, சூதாட்டம், புலன்களைக் கவரும் மாயங்களால் ஆளை அடிமைப்படுத்தல், வஞ்சமயக்கங்கள், இடம்பச்செருக்கு முதலிய தீமைகளெல்லாம் நாகரிகமான சமுதாயத்தில் இரா. நாகரிகன் ஐம்பிழை தவிர்த்த அருளாளன்; அவன் அன்புக்காந்தம், அறிவுக்கற்பகம், கொல்லாநலத்தன், குணமணிக் குன்று, சீரிய நண்பன், செருக்கறு நடையான், மாசறுமனத்தன், மயக்கறு சிந்தையன், அஞ்சுவதஞ்சுவோன், ஆற்றுவதாற்றுவோன், துணிந்த நலத்தான், பணிந்த பெருமையான், கற்பன கற்றுக் கேட்பனகேட்டுத் தக்கன செய்வான், தற்புகழில்லான், கடுமொழி யில்லான், கனிமொழியாளன், காலமும் ஞாலமுங் கருதி நடப்போன், நிறை வினையாளன், நேர்மையாளன், அடிமைத் தனத்தை அறவே யொழிப்பவன், அழகை மதிப்பவன், அணியுற வாழ்பவன், எளிமையை விரும்புவோன், ஈகையாளன், பெண்ணும் சக்தியைப் பெருமை செய்வோன், ஓயா துழைப்பவன், ஒப்புரவொழுகுவோன், பொதுநல வீரன், புவிக்கெலாமினியன்! இவ்வாறே, நாகரிகப் பெண்டிரும் அறிவும் அழகும், வாய்மையும் தூய்மையும், கற்பும் நாணும், இல்லற வொழுக்கமும் எளிய வாழ்வும், ஆன்மநேயமும் ஆருயிர்க்கன்புங் கொண்டு பொலிவர். நலம்புரி நடைமுறை நாகரிகமாம்.

**தொடர்ந்தாரின் றுன்பந் துடைக்காத செல்வன்**
**கடமை வழுவியோன் காண், 4**

இவ்வாறு நாகரிகம் பெற்ற செல்வன், சுக போகங்களைச் சுயநலத்திற்கே பயன் படுத்தாது, தன்னைத் தொடர்ந்த, தன்னினமான, மாந்தரின்

துன்பத்தைத் துடைக்கப் பயன்படுத்த வேண்டும்; அவர்களுக்குற்ற இடர்களைத் தன்னால் இயன்ற மட்டுந் தவிர்க்கவேண்டும். இன்றேல், அவன் தனக்குரிய கடமையினின்று வழுவியோனாவன்.

மனிதன் செய்யவேண்டிய நலம், அறம், உதவி, ஒப்புரவு ஆகியவை கடமையாகும். தேவையான பேருக்கு உதவவே இறைவன் செல்வந் தந்ததாகப் பணக்காரன் நினைக்கவேண்டும். உலகுயிர்களெல்லாம் ஒரு சங்கிலித் தொடரே. கோடிக் கணக்கான பெயர் வடிவ பேதங்களுக்குள்ளும் ஒரு சூத்தான் மாவே யுள்ளது. ஆதலால், மனிதன் பிறரையுந் தானாகவே மதிக்கவேண்டும்: பிறர் பசி தன்பசி, பிறர் துயர் தன்றுயர், பிறரின்பந் தன்னின்பம் என்று உணரவேண்டும். இரக்கமும், அன்புங் கொண்டு இடர்ப் பட்டோருக்குத் தேவையளவு ஒல்லும்வகை உதவ ஒவ்வொரு மனிதனும் கட்டுப் பட்டிருக்கிறான்.

**எதுதீ தெனநோக்கி யெள்ளற்க ; நன்மை**
**யதுபோற்ற லாற்ற லறிவு. 5**

நம்மைத் தொடர்ந்த மனித சமுதாயத்தினிடம் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்? பிறரிடம் எது கெடுதல் என்று நோட்டம் பார்த்து, குற்றமே பாராட்டி அவர்களை இகழக் கூடாது. பிறரிடம் எது நன்மை, எது உத்தமமான குணம் என்று கவனிக்கவேண்டும். அதை நாமும் பேணி, அதன் படி செய்து, நன்மை பெறுதலே அறிவாகும்.

பசித்தவன் அப்பத் தொளை யெண்ணான் ; அப்ப முண்பான் ; அவன் 'தோட்டத்தில் இத்தனைக் கனிகள் வெம்பின, இத்தனை அழுகின; இங்கே உரம்

நாற்ற மடிக்கிறது' என்று நோட்டம் பாரான்; கனி புண்பான். யோகசித்தி வேண்டுவோன், பூரண வாழ்வு வேண்டுவோன், பிறரைக் குறைபேசி வீண் காலம் போக்கான்; பிறரிடம் காணும் நன்மை யெதுவோ அதைக் கண்டு கருத்துடன் பயின்று நலமோங்குவான். பிறரிடம் ஒரு குறையிருந்தால் அது தன்னிடம் இருக்கிறதாவென்று சோதித்துத் திருத்திக்கொள்ளுவான். தனது தூயவாழ்வால் பிறருக்கு உதாரணமாக விளங்குவான். அதுவே அறிவாளிக்கு அழகாகும்.

---

## 3. அறத் தகுதி

**போக்கும் வரவும் பொழுதுமறி யோமதனால்**
**யாக்கையோ டேசெய் யறம்.** 1

இவ்வுடலிற் புகுந்த ஆன்மா எப்போது இதை விட்டுப் போகும், வேறு எந்த வுடலுடன் மீண்டு வரும் என்று நாம் அறியோம். இந்த உடல் உள்ள போதே நல்ல அறவினைகளைச் செய்க! தினந்தோறுந் தினகரன் வாள் போன்று நமது ஆயுளை அறுத்துக் கொண்டிருக்கிறான். இருவினைக்களனாகிய உலகரங்கில் காட்சிகளும் விளைவுகளும் திடீரென மாறும். நேற்றிருந்த ஊரை இன்றொரு பூகம்பம் தரை மட்டமாக்குகிறது. நேற்றுத் தலைநிமிர்ந்திருந்த நாட்டை இன்றொரு கொடும்போர் வந்து அழித்து அடிமையாக்குகிறது. நேற்று நம்முடன் இருந்தவரை இன்று காணோம். உலக மேடையில் உயிர்கள் தோன்றி விளையாடி, மறைகின்றன. நமது ஆட்டமும் ஒருநாள் முடிந்துபோவதே. காலத்

தின் மாயம் தணக்கிட லரிது. ஆதலால், உடலுள்ள போதே மனமாசு நீக்கிச் சுத்தான்ம சித்திபெறும் தருமத்தைச் சாதனம் செய்யவேண்டும்.

**உண்ண வுடுக்க வுவந்திருக்க நன்முயற்சி**
**பண்ண லறவாழ்வின் பண்பு. 2**

மனிதன் முதலில் சரீர தருமத்தைக் கவனிக்க வேண்டும் : உண்ண உடுக்க இருக்கப் போதுமான உணவு, ஆடை, மனை முதலிய சௌகரியங்களை நல்ல யோக்கியமான தொழின்முயற்சி செய்து பெற வேண்டும். இஃது, அறவழி வாழ்வின் மாண்பாகும். அறவோர் யாரையும் எதற்கும் பிச்சை கேட்கலாகாது; பிறர் பாடுபட்டதைத் தாம் சும்மாவிருந்து அனுபவிக்கக் கூடாது. வறுமையை நீக்கவேண்டியது அறவோரின் முதற் கடமை. வறட்சி, இடம்பம் இரண்டும் கூடா. பிறருக்கு இழிவாக அடிமைப் படாமல் ஒவ்வொருவனும் தன் தேவைகளை முறையான தொழிலால் அடைந்து, மீதி நேரத்தை அறிவு வளர்ச்சியிலும், சுத்தான்ம சாதனத்திலும், பொது நலப் பணியிலுங் கழிக்கலாம். தொழில் வகையை இந்நூலின் **தொழிலியலி**ற் காண்க.

**சோர்வு விடுத்துச் சுயேச்சை யடைந்துலகில்**
**வீரனாய் வாழ விரும்பு. 3**

மனத் தளர்வை நீக்கு ; எல்லாக் கட்டுகளினின்றும் விடுதலை பெறு ; இந்த வுலகில் வீரனாக, ஆத்ம தீரனாகப் பலருக்கும் பயன்படுமாறு வாழ விரும்பு !

மனிதனுக்குள் ஒரு **தீரன்** உள்ளான். அவனே உள் மனிதன், உண்மை மனிதன். அவனுக்குச் சோர்வில்லை, துயரில்லை, கட்டில்லை, கவலையில்லை. அவன் நித்திய முத்தன், சர்வ சுதந்தரன். இந்த

உடல் அவன் சட்டையே. 'அந்தச் சுத்தான்ம நிரனே நான்' என்று ஒவ்வொருவரும் காண்க! பிறகு, எதற்காக, யாருக்காக, யார் கவலைப்படுவது, கட்டுண்பது? இருவிகாரக் குழாங்களில் அலைந் துழலும் மனத்தாற் படரும் அழுக்கே கட்டுங் கவலை யும். தன்னை யறிந்தால் அச்சம், அடிமைத்தனம், கவலை, கட்டுகள் முதலிய பறந்தோடிப்போம். அடி மைத் தனத்திற்குக் கோடையிடி தன்னறிவே. வீரன் இயற்கையுலகை வென்று அருளறத்தை நிலைநாட்ட வேண்டும். தன்னறிவு, உலகறிவு, உள்வெற்றி, உலகவெற்றி, வாய்மை, வலிமை, ஆண்மை, பொறுமை, அஞ்சாமை, அன்பு, நீதி, நேர்மை, ஆட் சித் திறன், தியாகம், வினைத்திட்பம், மனத்திட்பம் முதலியன வீரர் தன்மைகள். தன்னலம் போற்றல், பொதுநலங் காத்தல், இன்னலை யொறுத்தல், இன் பமே செய்தல், தன்னுயி ரீந்தும் மன்னுயிர்ப் பேணல், கொடுமையைக் குமைத்தல், நல்லதை யமைத்தல், புண்ணியம் வளர்த்தல், அறவினை தன்னை அஞ்சா தியற்றல், இசைவசை யிரண்டும் சமமெனத் தாங்கல், இயற்றுவதியற்றல், ஆணவமின்றி அருட் பணி புரிதல், பயன்பற்றின்மை, விடுதலை பெறுதல், விடுதலை யீதல்—இவையே வீரரின் இன்னிய கடமை யாம். பாரின் சரிதை வீரர் சரிதையே. அப்பர், சங்கரர், புத்தர், நம்மாழ்வார், தாயுமானவர், வள்ளலார், பரம ஹம்ஸர் முதலிய பெரியார் ஞானவீரர். சிவாஜி, குரு கோவிந்தன், பிரதாப சிம்மன், திலகர், காந்தி முதலியோர் கர்மவீரர். வீரத் திருவினர் பார்நலக் காவலர்.

உலகோ ரருட்குலமா யொன்றியினி தோங்கு
நலமார் பொதுநிலையை நாட்டு. 4

இறைவன் தந்தை : அவனருளே தாய் ; உயிர்கள் அவனருள் மைந்தர். இவ்வாறு உலகமெல்லாம் ஓர் அருட்குலமாக, தெய்வஜாதியாக ஒற்றுமைப்பட்டு, மங்கலமாகச் செழித்தோங்க வேண்டும். அதற்கேற்ற பொதுநிலை வாழ்வை சர்வாத்ம சமரஸ உணர்ச்சிகொண்டு நிலைநாட்டுக! அதனால் எல்லா நன்மையும் உண்டாகும்.

"உலக வொற்றுமைக்காக ஞானவீரன் பணி புரியவேண்டும்" என்றான் கண்ணபிரான். சுத்த சமரஸ சன்மார்க்கமே உலகை ஒற்றுமைப்படுத்த வல்லது. உலகெலாம் ஓர் அகண்ட வீடு. உயிர்க்குல மெல்லாம் அதில் தத்தம் இயல்பிற்கேற்றவாறு உயிர்த் திருக்கச் சமவுரிமை பெற்றன. எல்லா வுயிர்க்கும் இறைவனே அம்மையப்பன். அவனி யெல்லாம் அவனருள் விரிவே. அவனே அனைவரிடமும் 'நான்' என்னும் உண்மையா யிருக்கிறான். தியானத்தால் அவனை நன்கு உள்ளே யுணரலாம். எல்லாருக்கும் பொதுப் பொருளான அந்த ஆத்ம தேவனே உண்மை மனிதன் என்றுணர்ந்தால், மாந்தரெல்லாரும் பல உடற்சட்டைகளைப் பூண்ட ஓர் ஆன்மத் தொகுதியாகவே விளங்குவர். இந்த ஆன்ம வொருமையே பொதுநிலை. அதை யறிந்தோ ரெல்லாம் உலகை அருளாடலாகவும், உயிர்களை அருட்குல மாகவுங் காண்பர். அத்தகைய சுத்தான்ம சமரஸத்தை நிலைநாட்டினால் சண்டைசச்சரவுகள் ஒழியும். இப் பொதுநிலைப் பணியை அவரவர் இயன்ற மட்டும் புரிக! அனைத்தினும் அரும்பணி அறிவுப் பணியே.

உள்ளொளியிற் பூத்த வுயிர்வாழ்விற் சாதிமதச்
சள்ளையிலை சச்சரவில் லை. 5

ஒவ்வொருவர் உள்ளத்தும் சுத்தான்மக் கதிர் நிலவுகிறது. அதுவே உள்ளொளி. அதனின்றே உயிர் வாழ்வு மலரவேண்டும். அத்தகைய வாழ்வே அத்யாத்ம வாழ்வு. அது சுத்த சமரஸ வாழ்வு.

என் சாதி, என் மதம் என்று மூடப் பிடிவாதங் கொண்டு தொல்லை செய்து உலகிற் சண்டை விளைக்கும் சாதிமதப் பூசல்கள் அத்தகைய சுத்தான்ம சமரஸ வாழ்விற்கில்லை.

தற்போது மாந்தர் வாழ்வு புறத்தினின்று மனத்தால் இயங்குவது; மனம் ஒன்றைப் பலவாகக் காட்டும் மாய்மாலக் கண்ணாடி. மனிதனின் உண்மை உள்ளான்மா; நாம் காணும் பெயர் வடிவத் தோற்றங்களெல்லாம் பௌதிகச் சட்டையே, இயற்கையுடலே, சடமே; அதற்குள் அறிவாய் நின்றியங்கும் உண்மைப் பொருள் சுத்தான்மா. 'அதுவே நான்; மற்றவை யெல்லாம் எனக்குப் புறம்பானவை.' என்றுணர்ந்து தன்னைவிடாது, அன்னிய மெண்ணாது, உலகின் இருவிகார நாடகத்தில் மனமயங்காதிருத்தலே உள்ளறிவில் வாழ்வு மலர்வதாகும். மனித வாழ்வு ஒரு பெரிய தாமரை மலர். அஃது உள்ளந்தோறும் ஒளிரும் அருட்கதிரில் மலர்ச்சி பெறும். ஒவ்வொரு ஜீவனும் இந்த உயிர்த்தாமரையின் இதழே. எல்லா இதழ்களும் சுத்தான்மப் பொருட்டில் ஒன்றியுள்ளன. இந்த ஒன்றிப்பை யுணர்ந்தால், பிறகு சாதி சமயச் சள்ளையும், சச்சரவும், பிரிவினையும் இரா. சாதி மதங்களின் குறிப்பென்ன? மாந்தர் பல பான்மையர். அவரவர் இயல்பிற்கேற்ற

வாறு அவரவருக்கியன்ற வழியில் மெய்ப்பொரு ளுடன் இரண்டறக் கலத்தலே எல்லாச் சமய நோக்கமும் ஆகும். ஒன்றைக் கூடவே எல்லாம் பலவழி பற்றுகின்றன. 'அந்த ஒன்றே பரம் பொருள்' என்றறிந்த பின்னே, தனித்தனியாக மாந்தரைப் பிரிக்கும் மனமயக்கமிராது. "மாலையிற் குயிற்றிய மணிகளைப் போலே, என்னில் எல்லாம் இணைந்தேயுள்ளன; என்னையின்றி யாது மில்லை" என்றருளினர் **பகவான் கீதையில்.** விதையினுள்ளே மரம் அடங்கியதுபோல, ஒவ்வொருவருள்ளும் இறை உயிர் உலகம் அடக்கம். விதையின் உள்ளிருந்தே மரம் தழைப்பதுபோல், ஆன்ம வுண்மையி னின்று வாழ்வு தழைக்கவேண்டும்.

---

## 4. அற நெறி

**விண்ணின் விரிந்த வியன்செய் யறநூலின்**
**உண்மை யுடுவிற் பல.** 1

அற்புதமான (வியன்செய்) அறநூல் வானினும் விரிந்தது. அதிற்காணும் இயலுண்மைகள் விண் மீன்களைவிட மிகப் பலவாம். 'உடு' என்றால் நட்சத் திரம்.

சுவடிகளிற் காண்பது முற்றுப்பெற்ற தரும சாத்திரமன்று. அறம், இறைவன் சட்டம்; அவ னுடைய ஐந்தொழிலும், அருளாட்சியும் அதன் படியே நடக்கின்றன. வானையே நூலாக்கி, நட்சத் திரக் கூட்டங்களையே மெய்ம் மொழிகளாக்கினல் அந்நூல் எவ்வளவு விரிவுடையதாமோ, அதனினும் விரிவுடையதாம் அறநூல். பல்லாண்டுகளுக் கொரு

முறை ஓர் அருட்புலவனுக்கு அந்த எல்லையற்ற அற நூலின் ஓர் உண்மை விளங்குகிறது. அந்த உண்மையே காலத்திற்கேற்றபடி மாந்தரை முன்னேற்ற உலகிற்குப் பயனுகிறது. உதாரணமாக, மஹாத்மா காந்தியின் மூலம் அஹிம்ஸா தருமம் விளங்கிப் பாரத நாட்டின் விடுதலைக்கு ஒரு புதிய வழி காட்டியது. 'பந்தமொழிந்தால் சுகம்' என்னு முண்மை புத்தர் மூலம் உலகிற் பரவியது. 'சாதிமத பேதமின்றி எல்லாரும் அருட்சோதியைப் பெற்றுத் தனிப்பெருங் கருணையுடன் எல்லாருக்கும் நல்லது செய்து சுத்த சமரஸ சன்மார்க்கத்தில் ஆன்மநேயராக வாழலாம்' என்ற மகத்தான உண்மை மஹாத்மா இராமலிங்கர் மூலம் விளங்கியது. தத்வமஸி (சாமி நீ) என்னும் அத்வைத வுண்மை சங்கரர் மூலம் உலகிற் பரவியது. வேதம், உபநிடதம், கீதை, பைபிள், குறள் எல்லாம் உண்மையான அருள் - அறநூலின் சில வரிகளே யாகும். இயற்கையுடன் உள்ளுறவு கூடியே அந்த அறநூலின் உண்மைகளை யறியமுடியும். வானின் விரிந்தது வாய்மை அறநூல்.

**அன்புண்மை யின்சொ லடக்கம் பொறுமையருள்**
**இன்பப் பொதுநெறியென் றெண்.** 2

எல்லாருக்கும் பொதுவாக அறநூல் சொல்லும் இன்பவழி :—(1) அன்பு : கடவுளன்பு, ஆருயிரன்பு. (2) உண்மை : மனச் சாட்சிக்கு இசைந்து, உள்ளத்தில் உண்மை, வாயில் வாய்மை, மெய்யில் மெய்மை கொண்டு நடத்தல். (3) இன்சொல் : வஞ்சம் பொருமை கடுமையில்லாது, பிறருக்கு நன்மை தரும் இனிய சொல், இதமொழி. (4) அடக்கம் : செருக்கு, தற்புகழ்

இல்லாமல், இடம்பம் இல்லாமல், அமைதியாக அறிந்து, திருவருளைப் பணிந்து நடத்தல். (5) பொறுமை: நன்முயற்சிகளில் எத்தனைச் சோதனைகள், இடர்கள் வரினும் வெற்றி தோல்விகளில் வேறுபடாமல் நிதானமாகப் பொறுமையாக நடத்தல், திதிட்சை. (6) அருள்: எல்லா வுயிர்களும் இறைவன் உடலே யென்றெண்ணி அனைத்திடமும் எல்லையற்ற கருணையும், இரக்கமும், நேயமும் கொண்டு அன்பு செய்தல்; இறைவன் திருவருளை 'வேண்டுதல்; இவையே, உலகோர் உய்யத் தத்துவப் பெரியாரும் வித்தகப் புலவரும் பலவாறாகச் சொன்ன உபதேசங்களின் சாரமாகும். இவற்றைச் சிந்தித்தொழுகுக! இவை விண்ணின்ப மளிப்பன.

> கொலைபுலை, கூத்தீ, குடிகளவு சூதாம்
> வலுத்த நரக வழி. 3

மேற்சொன்னவற்றிற்கு எதிராக மனித வாழ்வைத் துன்ப நரக மாக்க வழியாவன ஆறு இழி நடைகள் :—(1) கொலை: உயிர்க் கொலை கூடாது. சீவனைச் சிவமயமாகக் கருதவேண்டும். அஹிம்ஸா விரதமே அரிய பெரிய தருமமாகும். உயிர்க்கொலை செய்பவன் பாபங்களால் தற்கொலையே செய்து கொள்கிறான்; மனச் சாட்சி அவனை வாள் போன்று அறுக்கும். மன்னுயிரைத் தன்னுயிர் போலக் கருத வேண்டும். ஒரு தனி உயிரைக் கொல்வது கொலைப் பழி. மண் வெறி, நாட்டு வெறி பிடித்துக் குண்டு, பீரங்கி, புகை, நீர்மூழ்கிகளால் பல்லாயிரக் கணக்கான மாந்தரைக் கொன்றழித்தல் அரக்கத் தன்மையான படுகொலையாகும். கொலை தவிர்த்தால்

உலகிற் போர் மறையும். (2) புலை: புலாலுண்ணல், கொன்றதை யுண்ணல். உடலை வளர்க்கத் தாவரப் பொருள் இருக்கையில், பிற வுயிர்களைக் கொன்று அவற்றின் ஊனையுண்ணல் எவ்வளவு கொடுமை! விலங்குகளைக் கொன்றுண்பவனே மனிதரைக் கொல்லப் போர்வினை செய்கிறான். புலால் மறுத்தால் போர்கள் குறையும். சிறு தெய்வங்களுக்கு உயிர்ப்பலி, யாகப்பலி, மருந்திற்காகவும் ஏற்று மதிக்காகவும் உயிர்களைக் கொல்லல்—எல்லாம் கொடிய பாபம். ஊனுண்பவனிடம் அன்பு, அருள், அமைதி முதலிய நற் குணங்கள் இருப்ப தரிது. அவன் கொன்றுண்ணும் விலங்குகளின் தன்மைகளே, அவனுக்கும் இருக்கும்; தீனி போலே மானிடன். மனிதர்க் குணவு மரவகையே. (3) கூத்தி: வேசை யுறவு, விபசாரம்; மெலிவு, பிணி, துயர், வறுமை, சீரழிவு, அவமானம், கலகம், மயக்கம், சாவு முதலியவற்றிற்கு விபசாரம் காரணமாகும். காமவெறிகளை மனிதன் அடக்கியாள வேண்டும். விலங்குகளுக்குக் கூடக் காலநியதி யுண்டு. மரபு வளர்ச்சிக்காக மட்டும் அளிக்கப் பெற்ற இந்திரிய சக்தியை, உயிராற்றலை, சிற்றின்பச்சேற்றில் வீணாக இறைத்தல் தன்னைத் தானே நரகத்தில் தள்ளித் தற்கொலை புரிந்து கொள்வதற்குச் சமான மாகும். பரத்தை முயக்கம் இருட்பிணை முயக்காம். தரும பத்தினியுடன் கூடி இல்லறம் நடத்த வேண்டும். வேசை யென்னும் மாசு உலகிற் படரா தொழிய வேண்டும். (4) குடி: தென்னங் கள், ஈச்சங் கள், திராட்சைக் கள், விஸ்கி, பிராந்தி, தேயிலை, காப்பி, சுருட்டு முதலிய மயக்கப் பொருள்கள் நரம்பைத்

தளர்த்தும்; மனத்திட்பத்தைக் கெடுக்கும்; பிணி பல செய்யும். கள் நஞ்சு; அது வறுமையும் பிணியும் மதி மயக்கமுந் தந்து நடையைக் கெடுத்து, நாண மழித்துச் சீரழிக்கும். (5) களவு: மனத்தை, வாழ்வை, மானத்தைக் கெடுக்கும் கொடிய பாவம் களவு. பிறருக் குரியதைத் தன்னலங்கருதி அபகரித்தல் களவாகும். வஞ்சனை, கைக்கூலி, தந்திரக் கொடுமை, பிறரை நலித்துத் தான் பொருள் சேர்த்தல், பிறர் பொருள் வெளவல், பிறர் மனை விழைதல், பிறர் நாடு கவர்தல், பலபேருக்கு உழைப்பும் பிழைப்புந் தரத்தக்க செல்வத்தைப் பூட்டிவைக்கும் கருமித்தனம்—எல்லாம் திருட்டின்பாற் படும். மனம் நேர்மையற்ற வழியிற் செல்லுதலும் கள்ளமேயாகும். கள்ள மனத்திற்கு உள்ளே சவுக்கடி. (6) சூது: சகுனிவலை. சீட்டு, பகடை, உழக் குருட்டல், குதிரைப் பந்தயம், வீண்போது போக்கல்—எல்லாம் சூதாட்டமே. வீண் போது போக்கல், காலத்தைச் சூதாடலாகும்; பொய், வாய்ச்சூதாகும். சூதாட்டம் ஆசை காட்டி யிழுக்கும் வேசை போன்றது. அஃது, ஒன்றைத் தந்து நூற்றைப் பிடுங்கும். சீருஞ் செல்வமும், பண்பும் பரிசும் சூதாற் கெடும். இந்த ஆறு தீமைகளால் இருள், வறுமை, துன்பம், நோய், மதிமயக்கம், இடர், இன்னல்களெல்லாம் சூழ்ந்து மனித வாழ்வை நரகமாக்கும்.

**வசைசின வஞ்ச வழக்கற்றுத் தீய**
**நசையற்று நாணுற்று வாழ்.** 4

முன் சொன்ன ஆறு தீமைகளும் வாழ்வைக் கெடுக்கும். மனத்தைக் கெடுக்கும் தீமைகளைக்

நாண்மின்:— (1) வசை: மேற்சொன்ன குற்றங்களுடன், பிறரைப் பழித்தல், சொல்லாற் புண்படுத்தல், மரியாதைக் குறைவாகப் பேசுதல், பண்டமொருபுறம் இருக்கப் பழி யொருவர் மேற் சுமத்தல்—எல்லாம் வசையாம். (2) சினம்: கோபம்; இதனால் குணங் கெடும், மனங் கெடும், நரம்பு தளரும், ஆயுள் கெடும், ஆற்றல் கெடும். (3) வஞ்சம்: கபடம், சிறுமை, பொய், கொடுமை, மாயம், பிறரை ஏமாற்றல் வஞ்சனையாம். வஞ்சகனை மனச்சாட்சி சித்திரவதை செய்யும். வஞ்சம் வெளிப்பட்டால், உலகம் எள்ளி நகைத்துத் தண்டிக்கும். (4) வழக்கு: பொய்வழக்கு, வியாச்சியம், வம்பு இவற்றால் அமைதி கெடும். (5) தீயநசை: துராசை, காமக் குரோதாதிகள் இவை யெல்லாம் நீங்க வேண்டும். இவை நீங்குதற்கு வழியென்ன? நாணுறல்: அடக்கம், கௌரவம், மரியாதை, விநயம், பிறர் பழியும் தன்பழியும் அஞ்சல், நோகாது நோவுறுத்தாது பிறர் மனஞ் சுளிக்காது சீர்மையுடன் நடத்தல், வெட்டெனப் பேசாமை, சூதுவாதின்மை, நாய்ச்சினம் நரிவஞ்சம் பாம்புச் சீற்றம் அகங்கரிப்புகளின்றிப் பெருந்தன்மை பிடித் தொழுகல் முதலியன நாண் எனப்படும். நாணுள்ளவன் நாணயமுள்ளவன்; பிறர் நாணத் தக்கதைத் தான் நாணும் பண்பினன். தூற்றல், வசவு, சினவெறி, வஞ்சச் சூழ்ச்சி, பொய் வழக்கு, வீண் வம்பு, துராசை, பிறர் பொருளைக் கைப்பற்றச் சதியாலோசனை செய்தல், துரியோதனக் கொடுமை இவை யெல்லாம் 'நாண்' என்னும் ஒழுக்கத்தால் நீங்கும். நாகரிகத்தின் நல்லுயிர் நாணே.

மூவழுக்கு நீங்குகவே, முத்தூய்மை யோங்கிநர
தேவர்குலம் வாழ்க செழித்து.

மனிதனை இன்பநிலை சேராது தடுப்பன பழமை யான மூன்று அழுக்குகள் :—மோகவெறி, மாயா பாசம், தன்னல வகந்தை ஆகிய இவற்றை நீக்குக. எப்படி இவற்றை நீக்குவது ? முத்தூய்மை, அதாவது மன, மொழி, மெய்த்தூய்மை யோங்க வேண்டும் இவ்வாறு மலமொழிந்து அமலமானோர் தேவராவர். அத்தகைய சுத்த தேவர் குலம் உலகிற் செழித் தோங்குக !

சுத்த சாதனத்தால் மோகவெறி யொழியும். முக்தி சாதனத்தால் மாயாபாசம் நீங்கும். சமத்வ சாதனத்தால் தன்னல வகந்தை யொழியும். தூய நினைப்பும், தூயமொழியும், தூயசெயலும் மன மொழி மெய்த்தூய்மை நல்கும். சுத்தமானால் பெத்த மொழியும் ; முக்தி வளரும் ; மனிதன் தேவனாக லாம். உள்ளத்தூன்றி உலகில் உலாவல், அச்ச மின்மை, அகப்புறத் தூய்மை, தன்னறிவு, அமைதி, தவக்கனற் காந்தம், தானேயாகப் பிறரைக் காணல், அன்புப் பெருக்கம், அருட் பெருக்கம், தளராத் திண்மை, தரும வீரம், சினவெறி யில்லாச் செவ்விய சாந்தம், வெறுப்புஞ் செருக்கும் வீணு மின்மை, மாசறு தூய்மை, தேசுறு யாக்கை, புல னடக்கம், புந்தியி லுறுதி, சித்த நிலைப்பு, தேடாச் சுயேச்சை, வாடாக் களிப்பு, சக்திக்கனல் வளம், அகண்ட சேதனம் (Cosmic Consciousness)—இவையே தேவர்க் கினிய தன்மையாம்.

## 5. பொது நலம்

பிறர்க்கென வாழும் பெரியாரைச் சேருந் 1
துறக்கமுங் காணச் சுகம்,

துறக்கமாவது சுவர்க்கம், மோக்கம். அதன் இன்பம் பெரிதுதான். அதைவிடப் பெரிய இன்பம் ஒன்றுள்ளது; அதுவே, எல்லா வுயிர்களையும் தானென்றெண்ணி அன்பு செய்யும் ஆனந்தம்! அந்த இன்பம் யாரைச் சேரும்? தன்னலம் விட்டுப் பிறர் நலமே போற்றி அறப்பணி செய்து வாழும் பெரியாரையே அந்த இன்பம் தானுக வந்தெய்தும்.

மனிதன் தன்னைப் பூரணப் படுத்திக் கொண்டு, மனித சமுதாயம் இன்னலற்று இன்புறத் தொண்டு செய்யவேண்டும். வாழ்வாறு பூரண வெள்ளத்தால் நிரம்பி, உலகுயிர் செழிக்கப் பாய்ந்து, அருட் கடலைச் சேர்ந்து பேரின்ப மெய்த வேண்டும். எண்ணெயுந் திரியுங் குறைந்தாலும் பிறருக்கு வெளிச்சந் தருவதே விளக்கின் இன்பம். தான் அற்று மறைந் தாலும் மண் செழிக்கப் பொழிவதே கார்மேகத்தின் இன்பம். அது போல, அறவோர் யோக சித்தி பெற்று, சும்மா சமாதியில் லயித்துப் போகாமல், மனித ஜாதி மாசகன்று, சுத்த முக்த சமத்துவ சித்தி பெறும் பொருட்டு, அறிவாற்றலால் அன்புப் பணி செய்ய வேண்டும். அதனுல், உலகில் வறுமை, மடமை, அடிமைத்தனம், அச்சம், பிணி, போர், கொடுங்கோல், அசுரமாயங்கள் ஒழியும். தனக்கே முத்தி தேடிக் கொள்வதினும், தான் தகுதி பெற்றுப் பிறர் உய்ய வாழும் இன்பமே பெரும் பேரின்பமாம்.

**எத்துணை யாராய்ந் திவ்வுலகிற் கன்பு செயல்**
**அத்துணை யான்ம விரிவு. 2**

ஆன்மா ஓர் உடலிலேயே குறுகக்கூடாது: உலகளாவ விரிந்து விளங்கவேண்டும். அதற்கு வழி யென்ன? இவ் வுலகை இறைவன் ஆலயமாக, அவன் அருளா டரங்கமாகக் கருதி அதிலுள்ள உயிர்களுக்கு அன்பு செய்தல். அந்த அன்புத் தொண் டினைக் காலத்திற் கேற்றதாக ஆராய்ந்து, வகை யறிந்து, அமைதியாகச் செய்யவேண்டும். எவ்வள வுக் கெவ்வளவு அத்தகைய உலகளாவிய அன்பு செய்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு ஜீவான்மா அகிலான்மாவாக விரிந்து விளங்கும்.

அன்பின் அளவே ஆன்மா பரவும். மனிதன் அன்பு, மனைவி மக்கள், சுற்றம், ஊர், நாடு, உலகம் அளாவ மேன்மேலும் பெருகவேண்டும். உலகுயி ரெல்லாம் நாமாகிய ஆன்மத் தொகுதியே. நாம் எந்த ஆன்மாவால் உடல்கொண்டு வாழுகிறோமோ அந்த ஆன்மாவாலேயே எல்லா வுயிர்களும் வாழு கின்றன. ஞால வுயிர்கள் நாமலதில்லை. இந்த உல குணர்வு, அகில சேதனம். விசுவாத்ம சமதர்சனம் வந்ததும், தன்னை யன்றி அன்னியந் தோன்றாது. நோக்குமிட மெல்லாம் நாமே யாவோம். வாய்க் கால்நீர் ஆற்றுடன் கலந்து, ஆறு கடலுடன் கலந் தால் கடலாகிறது. அப்போது, மேகம், மழை, ஊற்று, ஆறு, குளம் எல்லாம் கடலாவிதான் என் றறியலாம். "சமதர்சன முள்ளவரே அறிஞர்" என் றார் பகவான் கீதையில். அன்பினால் அத்தகைய ஒருமை நோக்கம் உண்டாகும். அப்போது, பிறர் பசி தன் பசி, பிறர் துயர் தன்றுயர், பிறரின்பந் தன்னின்பம்,

பிறர்க்குதவி தனக்குதவி யென்றுணரலாம். அன்புப் பெருக்கால் ஆன்மப் பெருக்காம்.

**ஈசன் றிருமொழியை யெவ்வினத்தார் சொன்னாலும்**
**ஆசையுடன் கேட்ப தறிவு. 3**

சர்வாத்ம சமரஸத்திற்குச் சர்வ மத சமரஸம் துணை செய்யும். அருட் புலவர் வாக்கெல்லாம் ஈசன் றிருமொழிகளே. அவை உள்ளத்தி லுள்ள சுத்தான்மாவி னின்றே மலர்கின்றன. அத்திரு வாக்குகளை எங்கே, எவ்வினத்தார், எம்மதத்தார் சொன்னாலும் ஆசையுடனே, ஆர்வமுடனே விரும்பிக் கேட்பதே அறிவாகும்.

வேதம், உபநிடதம், பிரம சூத்திரம், கீதை, பாகவதம், சங்கரர் வாக்குகள், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, தாயுமானவர், திருவருட்பா, கிரந்த சாகெபு, பைபிள், குரான், புத்த தருமம், தத்வார்த்த சூத்திரம், ஜெந்தவெஸ்தா, திருக்குறள்—முதலிய தருமஸாதன நூல்களில் எதைக் கேட்டாலும், எதைப் பயின்றாலும் சுத்தான்ம நிலையும், தூய வாழ்வும் எய்தும். சாதிமத விழியாற் பாராது, எங்கும் ஒன்றான ஆன்ம விழியாற் காணவேண்டும். சிவன் கோயில், விஷ்ணு கோயில், சக்தி கோயில், மசூதி, சர்ச்சு, ஸ்தூபி, ஜைன மந்திரம் முதலியவற்றுள் எதிற் றொழுதாலும் உள்ளத்தில் உள்ள ஒன்றைத் தொழுவதாகவே கருதி மன விகார மற்றிருப்பதுதான் உண்மையான சமரஸம். **பகவத் கீதை** படிக்கிறவன் பாத்தியா ஓதுவதைக் கேட்டால் உடனே கண் மூடி உள்ளமாகிய காபாவிலுள்ள அல்லாவைத் தியானிக்க வேண்டும். **தேவாரம்**

படிக்கிறவன் சுவிசேஷ கீதங் கேட்டால், 'உள்ளத்தி லுள்ள பரமனே பரமபிதா' என்று தியானித்து அந்தக் கீதப் பொருளை உண்மையாக அனுபவிக்க வேண்டும். இத்தகைய சர்வமத சமரஸம் ஆன்ம விளக்கத்திற்கு அறிகுறியாகும்.

**அற்பம் பெரியதென் றெண்ணாம லன்புசெயு**
**நுட்ப வறிவுடைமை நோன்பு. 4**

மனிதன் ஒரு நோன்பு நோற்கவேண்டும்: எது சிறந்த நோன்பு? அன்பு செய்வதே. அன்பு எவ்வாறு செய்யவேண்டும? 'இது அற்பம், சிறியது, எளியது; அது பெரியது, வலியது, வளமை பெற்றது' என்றெண்ணாமல், வேறுபாடில்லாமல், சர்வசமரஸ நோக்குடன் அன்புசெய்யவேண்டும். அன்பு நோன்பே இன்ப நோன்பாம்.

உடல்களிற் சிறிது பெரிதுண்டு. உள்ளுயிர், அனைத்திலும் ஒன்றுதான் புல்முதல் புலவர் மட்டும் ஓரான்மாவே; அஃது, அறிவு வேறுபாட்டுடன் பலபடித்தாக வளர்ச்சிபெற்று, பலபல பெயர் வடிவங்களைத் தாங்கி நிலவுகின்றது. கல், புல், புழு, பூச்சி பறவை, விலங்கு, மனிதன், தேவர்—அனைவரிடமும் அன்புவைத்து அனைத்திற்கும் இனிது செய்க! பசித்து வரும் மனிதனுக்கு உணவு தருவதைப்போன்றே வாடித்தளரும் பயிருக்கு நன்னீர் வார்ப்பது நமது கடமை.

**கீண்மேற் பிறரொடுதான் கேண்மைதெவ் வொன்றெனவே**
**காண்போன் கருணைக் கடல். 5**

கருணை—இதுதான் மனிதத் தன்மையில் உயர்ந்தது. மனிதன் குறுகிய எண்ணங்களை விடுத்து, உலக

ளாவிய அருளுணர்வு பெறவேண்டும். கடலைப் போலக் கருணை வேண்டும். கடல் தனது ஆவியையே மேகங்களுக்கு ஊட்டி உலகிற்கு மழை பொழியச் செய்கிறது; சாதிமத வேறுபாடில்லாமல் தனது செல்வத்தை அனைவருக்குந் தருகிறது. அது போலவே, கருணைக்கடலா யிருக்கும் அறிவாளி, 'இவர் கீழோர், இவர் மேலோர், இவர் பிறர், இவர் என்னவர், இவன் நண்பன், அவன் பகைவன் (தெவ்)' என்று வேறுபாடுணராமல், அனைவரையும் ஒன்ருகவே, ஆத்மசமானராகவே காண்பான்.

சமத்வமே யோகம். தனியுயிர் உலகுயிருடன் கலந்து, இரண்டும் பரமாத்மாவுடன் கலந்து, எங்கும் யாதும் அவன்மயமாகக் காணலே உண்மையான சமத்துவமும், சமதர்சனமும், சமதருமமும் ஆகும். எளியன் வலியன், ஏழை செல்வன், தன்னவன் அன்னியன், பகைவன் நண்பன், கீழ்ச்சாதி மேற்சாதி என்னும் மனவிகார வேறுபாடுகள் இருக்குமட்டும் அமைதி வராது. பகைவன் யார்? உலகாடலில் நமக்கு எதிர்க் கட்சியில் ஆடும் நண்பனே யன்ரே? வழி தவறிய நன்மையே தீமையெனத் தோன்றுகிறது. இன்பத்தினின்று அடி சறுக்கியதே துன்பம். முக்குணங் கடந்த பக்குவப் பெரியோன் இயற்கை யுலகை யாடலெனக் காண்பான்; விருப்பு வெறுப்பிலன், தனிச்செருக்கில்லான், தன்னிலே தானுந் தத்துவ ஞானி, தன்னை அனைத்திலும் அனைத்தையுந் தன்னுளுங் காண்பவன், நேயரும் பகைவரும் நிகரெனக்கொள்வான், இருவிகாரத்தில் பற்றுமனத்தன், தன்னைக்கண்டு பின்னெலாந் தானெனக் காண்பான், உலகெலாம் பரந்த கருணை

பாளன்—அவனே சுத்தமுக்தசமத்துவ யோகி. அவ னுணர்வு அகிலாத்ம வுணர்வு (Cosmic Consciousness). யோகசித்தியின் உச்சநிலையாவது தன்னைத்தான் கண்டு, தானாக உலகுயிர்களைக் காணலே. அதற் கேற்ற அறவழி இவ்வியலில் விளக்கப் பெற்றது.

மூன்றாவது, அறவியல் முற்றிற்று.

T82.2043/ Su-26

# ௪. அறிவியல்

1842

அறம் அறிவைத் துலக்கும். அறிவு அறத்தை வளர்க்கும். உலகத் தோற்றங்கள் அறிவின் படிப்படியான பரிணாமங்களே (Evolutions). அறிவின் அளவே ஆருயிர்ப் பெருமை. புல்லினறிவு ஓரறிவு; விலங்கறிவு ஐம்புலனறிவு; மக்களறிவு பகுத்தறிவு; யோகியின் அறிவு தன்னறிவு, ஆத்மஞானம்; கடவுளறிவு முற்றறிவு. அறிவே உலகையாளும். அமைதி, இன்பம், ஆற்றல், வெற்றி எல்லாம் அறிவின் அளவேயாம். மனிதன் இரண்டு ஆட்சி பெறவேண்டும்: ஒன்று, தன்னாட்சி (சுயராஜ்யம்); மற்றொன்று, உலகாட்சி (சாம்ராஜ்யம்). தன்னாட்சியாவது, பொறிபுலன்களையடக்கி, மனங்குவித்து, ஆத்மசித்தி பெறுதல். உலகாட்சியாவது, ஆத்மசித்தியால் இயற்கையை வெல்லல். தன்னாட்சிக்குத் தன்னறிவு வேண்டும். உலகாட்சிக்கு உலகறிவு வேண்டும். தன்னறிவு மூல அறிவு. அத்துடன், கால அறிவும் யோகிக்கு வேண்டும். நித்தியமான ஆத்மஞானத்தில் ஊன்றி நின்றுகொண்டு, யோகியானவன் காலத்திற்கேற்ற புதுமைகளை முன்னேறிக் கையாளவேண்டும். பாரத மஹரிஷிகளின் அத்யாத்ம ஞானமும், ஐரோப்பியரின் இயற்கலை ஆராய்ச்சியும் சேர்ந்து புதிய தீரர்களையுண்டுபண்ணவேண்டும். உள்ளறிவின் அடிப்படைமேல் உலகறிவின் மாளிகை ஓங்கவேண்டும். அகவாழ்வுடன், புறவாழ்வையும் வெல்லவேண்டும். தன்

னறிவே முன்னறிவு ; கலை, கவிதை, ஆற்றல், புலமை, அமைதி, இன்பம் எல்லாம் அதனின்று மலரும். கதிரொளியால் முகை யவிழ்ந்ததும் தாமரை மகரந்தமும் மணமும் அழகும் எழிலுந் தருவதுபோலவே, ஆன்மவொளியால் உள்ளத் தாமரை மலரும்போது, அறிவும், புலமையும், சக்தியும் இயல்பாக உண்டாகும் ; அற்புதசக்திகள் அடைபட்டுக்கிடக்கும் ஆதார சக்கரங்கள் மலர்ச்சி பெறும். அந்நிலையில் ஒரு வருடம் கற்பதை ஒரு வாரத்திற் கற்றுப் புலமைபெறும் ஆற்றல் உண்டாகும். உள்ளக் கல்வியே உண்மைக் கல்வி. பிரமசரியம், தியானம், ஜபம், ஆகார சுத்தம், குருகுலக் கல்வி முதலியவை இத்தகைய புலமையைத் தூண்டும். ஞானசம்பந்தர், பரமஹம்ஸர், அருட்சோதி வள்ளலார், முகம்மது ரஸூல், ஏகநாதர் போன்ற மகான்கள் உள்ளக்கல்வி கற்றவரே. தன்னறிவைத் தூண்டும் உட்கல்வியால் புறக்கல்வியான சாத்திரங்களை எளிதில் அறிவதுடன், இடம், காலம், காரணம், கற்பனைகளையும் வெல்லலாம். நல்லாசான் போதனை, நல்லோர் கூட்டம், உள்ளாராய்ச்சி, கற்றுக் கேட்டுச் சிந்தித்தல் முதலியவற்றாலும், திருவருளாலும் அறிவு பழுக்கும். கல்விக்குயிர் தன்னறிவு ; உள்ளம், தூய நடை ; நரம்பு, தொழிற்புலமை ; இரத்தம், ஆற்றல் ; உடல், அழகுணர்ச்சி ; நுண்கலை, திறமை. இவ்வாறு உள்ளக் கல்வியும் உலகக் கல்வியும் சேர்ந்து அறிவை நிறைவாக்கும் வகையை இந்த இயலிற் காண்க.

# 1. அறிவு

**அறவின்பம், வாழ்வி னழகின்ப மெல்லாம்**
**அறவின்ப ஊற்றி னமிழ்து.** 1

அறவழி நடந்தால் இன்பமுண்டாகும். "அறத் தால் வருவதே யின்பம்." அந்த இன்ப வாழ்வில் ஓர் அழகின் இன்பம் பொலியும். இந்த அறவின்பத்தை யும் அழகின்பத்தையும் வளர்க்கும் அமுதம் ஒன் றுள்ளது. அதுவே அறிவின்பம் என்கிற ஊற்றின் அமுதம். அறிவின்பம் இல்லாத அஞ்ஞானிகளுக்கு அறத்தால் வரும் இன்ப வாழ்வில்லை.

அறமும், அறிவும் சேர்ந்த வாழ்வில் ஒரு புதிய கலை, அழகு பொலியும். அந்த அழகு, மனம் உயிர் உடலுக்கு இனிமையாகும். அறவிளக்கிற்கு நல் லறிவே சுடராம். அறிவு ஓர் அமுதவூற்று. அது, அறவழியே சென்று, வாழ்வென்னும் நிலத்திற் பொசிந்து, அந்நிலத்தை அழகுசெய்து இன்பங் கனி விக்கும். அறிவு, அறம், அழகு இம்மூன்றும் வாழ் வின் மூன்று உயிர் நாடிகள். தியானம், ஞான விசாரம், பக்தி, நிஷ்காம்ய கர்மம், ஒழுக்கம், கல்வி கேள்வி சிந்தனை, பெரியார் சேர்க்கை இவற்றால் அறிவு மலர்ச்சி பெறும். அறிவின்பம் என்னும் அமு தத்தால் வாழ்வு அழகின்பஞ் செழிக்கும்.

**எங்குற்றே மென்னசெய லெங்கேக லென்றறிவோன்**
**கங்குற் கடல்கடந்தோன் காண்.** 2

கங்குற் கடல் என்றால் இருட்கடல்; அஞ்ஞானக் கடல். அதைத் தாண்டினாலே சுகம் உண்டாகும். யார் அதைத் தாண்டவல்லவன்? 'இந்த உலகில்

நாம் ஒரு பட்சிபோலப் புகுந்துள்ளோமே. எங்கிருந்து நாம் வந்தோம்? என்ன செய்ய வந்தோம்? பிறகு எங்கு நாம் செல்லப் போகிறோம்?' என்று தன்னைத்தானே வினவி, (ஆத்மவிசாரஞ் செய்து) உண்மை யறிவோனே அறியாமை யென்னும் இருட் கடலைத் தாண்டியோனாவான்.

செய்க ஞானவிசாரம்:—நான் இந்த உலகில் இருக்கிறேன்; உலகம் நானா? இல்லை. நான் வீட்டில் இருக்கிறேன்; வீடு நானா? இல்லை. நான் இந்த உடலில் இருக்கிறேன்; உடல் என்னுடைமை. ஆனால் உடல் நானா? இல்லை. நானார்? உடலா, மூச்சா, மனமா, உலகா, மனையா? இவை மறையினும் நான் இருக்கிறேன். இவ்வுடல் மனம் எல்லாம் என் சட்டைகளே. இச்சட்டைகளைப் போட்டுலாவும் நான் சுத்தான்மா. இவை வினைச் சட்டைகள். எனக்கு ஒரு வினையுள்ளது. அதைச் செய்து தீர்க்கவே இந்த உலகாலயத்திற்கு இறைவனிச்சையால் யான் வந்தது. சித்தஞ் சலிக்காது, அமைதியாக இருந்து பார்த்தால், எனக்கொரு புலமை உள்ளதெனக் காணலாம். அந்தப் புலமையைக் கொண்டு பயன் கருதாது, விருப்பு வெறுப்பில்லாது, உலகாலயத்தில் வழிபாடாக அருட்பணி புரியவே நான் இங்கு இருக்கிறேன். மூவழுக்கற்று, முத்தூய்மை பெற்று, ஆத்ம பரிபூரணம் அடைந்து, குணதொந்த விகாரங்களிற் கட்டுப்படாமல், சீவன் முக்தனாயிருந்து, நமக்குள்ள இயற்புலமை கொண்டு ஆருயிர்ப்பணி செய்ய வேண்டும். அதனாற் சென்ம வினை யொழிந்து விடுதலை பெறலாம். முக்திபுருஷர் கூட இவ்வாறு பற்றற்ற பணிபுரிய வேண்டும். கைங்

காரியத்தால் சித்தசுத்தி யுண்டாகும். 'நான் ஆன்மா, இறைவன் பங்கு' என்பதை மறக்கக்கூடாது. அந்த அறிவினால் உலகிடர்களெல்லாம் நம்மை யொட்டாமல் விலகிப்போம். ஆன்மாவிற்குப் போக்குவரத்துக் கிடையாது; அது சுத்தம், நித்தியம், நிரஞ்சனம். போக்குவரத்துச் செய்வது வினையுடலே. வினையறிந்தாற்றினால் விடுதலை பெறலாம். 'நான் ஆன்மா; நான் இறைவனிடமிருந்து இந்த இறைவனாலயத்தில் ஒரு வினையை நிறைவேற்றிக் கர்மசுத்தி யடைய வந்தேன். அஃதானதும், எனது உண்மை வடிவை யறிந்து முத்தி பெற்று, மீண்டும் இறைவனுடன் கலப்பேன். இறையிற் போந்தேன், இறைபணி புரிந்தேன், இறையிற் கலந்தேன்' என்பதென் சரிதை.

> போக்குவர வற்ற பொருளான்மா ; நானதுவென்
> றேக்கமற் றின்புற் றிரு. 3

மேற்சொன்னவாறு இங்கு வந்து வாழ்ந்து செல்வதெல்லாம் இயற்கையுடலே, வினைச்சுமையே. நான் ஆன்மா; ஆன்மா போக்குவரவற்றுத் தானே தானகத் தாக்கற்றிருக்கும் நிலைப்பொருள். 'அதுவே நான்' என்று அறிந்து தெளிக! அந்த அறிவால், உலகின் முக்குண விகாரங்களால் வரும் ஏக்கம், கவலை, அச்சம் முதலியன அற்று, எப்போதும் தன்னுளே தானாக, உள்ளத்தில் உள்ளபடி யிருந்து இன்புறுக!

இன்பத்திற்கு ஒரே வழி நம்முள் இருக்கும் இன்பத்தை யடைவதே; அந்த இன்பப் பொருளே உயிர்க்குயிரான சுத்தான்மா. உலவுங் கோயிலுக்கு உள்ளம் சந்நிதி; அதிலே விளங்குவது ஆன்மத்தெய்வம்; அது நிலை பெற்றது, அழிவற்றது. இளமையும்

முதுமையும், இன்பமுந் துன்பமும், இறப்பும் பிறப்பும் இவ்வுடலுக்கே. பூதமும் கரணமும் புலன்களும் கொண்ட இயற்கை யுடலம் மாறும்; வீழும். இதில் சாட்சியா யிருந்த உண்மைப் பொருள் உள்ளபடி யிருக்கும். காற்றும், புனலும், கனலும், வாளும், கூற்றும் அதனைக் கொல்லுவதில்லை. பூதவுடல், அது பூணும் சட்டையே. ஆடை கிழிந்தால் ஆளுக்கென்ன? பழையது கிழிந்தாற் புதியது பெறுவோம். ஒரு வினைச்சட்டை கிழிந்தால் சங்கற்பமுள்ள மட்டும் வேறொரு வினைச்சட்டை வரும். உள் மனிதன் மாசற்ற ஆன்மா; ஆன்மா ஊனற்றது; ஊனமற்றது; தானே தானனது; பெரிதிற் பெரியது, சிறிதிற் சிறியது. **அஹமாத்மா, ஸோஹம்** (நான் அவன்) **தத்வமஸி,** (அது நீ), **ஓம் தத் ஸத்** (சச்சிதானந்தப் பொருளாகிய அதுவே உண்மை) என்னும் மகாமந்திரங்களெல்லாம் குறிக்கும் பொருள் உள்ளத்தில் உள்ள **சுத்தான்மா.** போக்குவரவு செய்வதெல்லாம் குணதொந்த விகாரங்களில் உழலும் வினை மனமே. 'நான் மனமுடல் கடந்த ஆன்மா. எனக்குக் கட்டுங் கவலையும், பிறப்பும் இறப்பும் இல்லை' என்று எப்போதும் கருதுக; ஏக்க மறுத்து மனமலையாது, அமைதியாக, 'யான் சுத்தான்மா; எனெனக் கின்னல்?' என்று எப்போதும் நிம்மதியா யிருந்து பயில்க! இந்த ஒரு சாதனமே அஷ்டாங்கயோகப் பயனளிக்கும்.

**யானு முலகு மறிவுண்மை யின்பமயம்;**
**ஏனச்ச மென்றெண்ணிப் பார். 4**

சுத்தான்மா நான்; விசுவான்மா உலகம். இரண்டும், உண்மை, அறிவு, இன்ப நிறைவு, சச்சிதானந்த

பயம். யான் எதுவோ அதுவாயிருக்கும் ஒன்றைக் கண்டு அச்சமேன்? சிங்கத்தைச் சிங்கம் அஞ்சுமா? அச்சம் ஏன்? எதை யார் அஞ்சுவது? நினைத்துப் பார்த்தால் அச்சத்திற்கு இடமே யில்லை. அச்சம் யாருக்கு? எனக்கா? யானார்? நான் ஆன்மா, புருஷன், தீரன், கட்டும் கவலையும் குணதொந்த விகாரமும் அற்ற சச்சிதானந்தப் பொருளன்றோ? எதைக் கண்டு அஞ்சுவது? உலகைக் கண்டா? நான் எதுவோ அதுதான் உலகும். பிண்டத்திலுள்ளதே அண்டத்தும்; சத்திலுள்ளதே சகத்தும். உள்ளான்மாவிஃவே உலகான்மா. கண்ணாடி வீட்டிற் புகுந்த நாய் சுவானநிழல்களுடன் சண்டை போட்டுக் குலைத்துச் சினப்பதுபோன்று, மதிமயக்கால் நாம் வேறு, உலகுயிர் வேறென்றெண்ணி அல்லற்படுகிறோம். ஒரு சிங்கம் ஆடுகளை வேட்டையாடும்போது குட்டிபோட்டு இறந்தது. அக்குட்டி ஆடுகளுடன் வளர்ந்து தன்னையும் ஆடாகவே கருதியது. ஒருநாள் ஒரு சிங்கம் வந்தது. ஆடுகள் ஓடின. சிங்கக் குட்டியும் அஞ்சியோடியது. "குட்டீ! நீ சிங்கம்; நானும் நீயும் ஓரினம்; அஞ்சாதே வா!" என்றது சிங்கம். "மாட்டவே மாட்டேன்" என்று ஓடியது குட்டி. சிங்கம் ஒரே தாவலில் குட்டியைப் பற்றி ஒரு குளத்தருகே கொணர்ந்து, "என் முகம் பார்; பிறகு இந்தத் தண்ணீரில் உன்முகச் சாயலையும் பார்!" என்றது. குட்டி பார்த்தது; தனது சுயரூபத்தைக் கண்டதும் அச்சமொழிந்து சிங்க கர்ஜனை செய்தது. யானை முலகிற்கு அஞ்சுதலேனோ?

நம்பு, நினை, முயல்; நாடொருமை; ஞானமாம்
இன்பம் பெருகு மினிது. 5

நான் சுத்தான்மா என்று நம்பு, உறுதிகொள்; அதையே நினை; உள்ளாழ்ந்து தியானி! முதலில் தியானம் ஓடாது, சித்தம் அலையும். சித்தத் திரைகளை வைராக்கியத்தாலும் அப்பியாசத்தாலும் அடக்க முயல்; சாதனஞ் செய்; வேறு நினைப்புக்களை விலக்கி ஒருமை நாடு; உள்ளே ஏகாக்கிரப்படு! மனம் வெளிச்சென்றால் கவலை; உட்குவிந்தாற் களிப்பு. மனம் உள்ளத்தில் நிலைத்தால் 'நான் ஆன்மா' என்ற ஞானம் உண்டாகும். அதன் இன்பம் நாளுக்குநாள் இனிதாகப் பெருகும்.

ஆத்ம ஞானம் எப்படி யடைவது? முதலில், நம்பிக்கை, சிரத்தை வேண்டும். "சிரத்தை யெப்படியோ அப்படியே மனிதன்" என்பது கீதாவாக்கியம். ஆத்ம ஞானிகளான அருட்புலவர் நோக்கிலும் உரையிலும் கருத்தூன்ற வேண்டும். பிறகு, வெளிச் செல்லும் புலன்களை உள்ளடக்கிச் சித்தத்திரைகளை விலக்கி, மனங்குவியும் பயிற்சி செய்யவேண்டும். மனத்தை உள்ளத்தில் தரித்தலே தாரணை. புறவிவகாரங்களை அல்லவென்றொதுக்கித் தானான ஆன்மப் பொருளை விடாதிருத்தலே தியானம். 'நான் ஆன்மா' என்றறிந்து, தன்னுள் தானாக நிலைப்பதே சமாதி. அந்நிலை வந்தால் உடல் சட்டைபோலத் தோன்றும். மனத்தில் நினைப்பதும், நாக்கிற் சுவைப்பதும், கண்ணிற் காண்பதும், காதாற் கேட்பதும், உயிரால் உயிர்ப்பதும் எல்லாம் ஆன்மா என்றறிவோம். உடல் விழும், உயிர்ப்பொடுங்கும், மனம் நலியும்; ஆனால் ஆன்மா மட்டும் என்றுமிருக்கும். ஏகாக்கிரத்தாலும், சித்தசுத்தி சாதனங்களாலும், தியானத்தாலும் இந்த ஆத்மஞானம் பெற்றவரே மனித சமுதாயத்தின்

இன்பக் கனிகள் ஆவர். மனித சமுதாயத்திற்கும் அவரது அருட்காந்தத்தால் இன்பம் பெருகும்.

---

## 2. கல்வி

**அறிவு தொழிலொழுக்க மாண்மை யழகாந்**
**திறமான கல்வித் திரு.** 1

மேற்சொன்னவாறு உள்ளிருந்து அறிவைக் கல்வி யெடுப்பதே கல்வியாம். மனிதனைப் பூரணப் படுத்தும் திறமை வாய்ந்த கல்வியின் ஐந்துயிர்களாவன :—(1) **அறிவு :** தன்னறிவு ; நூலறிவு. (2) **தொழில் :** வறுமையற்று வாழ ஒரு நல்ல தொழிற்றிறமை. (3) **ஒழுக்கம் :** ' அறவியலிலும் ' ' நடையியலிலும் ' காணும் நல்லொழுக்கம். (4) **ஆண்மை :** உடல் மன வுறுதி, ஆட்சித் திறமை, காரியத்திறமை, தைரியம் முதலிய வீரத் தன்மைகள். (5) **அழகு :** இசை காவியம் ஓவியம் ஆகிய அழகுக் கலைவளம்.

நல்லறிவு, நல்லொழுக்கம், நற்றொழில்வளம், நல்லாற்றல், நற்சுவையின்பம்—இவையே கல்வியின் ஐந் துறுப்புக்கள். இவற்றுள் ஒன்று குறைந்தாலும் கல்வி முற்றுப்பெறாது. மூளைப் படிப்புமட்டும் போதாது. புலவன் புத்தகப்பூச்சி யல்லன். **சிவாஜியும் பரமஹம்ஸரும்** எட்டுக் கல்வியின்றியே வீரவிளக்குகளாக, அருட்புலவராக விளங்கினர். கல்விக்கு, எண்ணெழுத்துக் கண்ணெனத்தகும் ; தன்னறிவு தலையெனத்தகும் ; ஒழுக்கம் உளமெனத்தகும் ; ஆற்றல் உடலெனத்தகும் ; அழகுக்கலை வடிவெனத்தகும். மனவிருளொழிக்கும் மாசிலா ஞானம், பெரியார்

சொல்லும் அரியநூற் பயிற்சி, உலகியல் வாணியச் உயிரியல் அறிவு, ஆடையுணவிற்காகிய நற்றொழில், வைரவுடலம் வாய்க்கப்பெறுதல், வீரத் திறமை, வித்தகப் பெருமை, அழகுக் கலைகள், அருட்பணி வளமை, ஆருயிர்க்கன்பு—இவை சீரிய கல்வியாம்.

**இயற்கைவளத் தோங்கி, யியற்புலனைத் தூண்டும் இயல்பான கல்வி யினிது.** 2

கல்வி எப்படி யிருக்கவேண்டும்? இயல்பா யிருக்கவேண்டும். அதாவது: உள்ளத்தில் உள்ள அறிவூற்றைத் திறந்து அதனின்று கல்வியறிவு மலரும் படி செய்யவேண்டும். வித்தினின்று கனிமரம் தளிர்த்தெழுவதுபோல ஆத்மசக்தியினின்று அறிவு முளைத்தெழுந்து, கலைக்கிளை பரவிச் செழித்து, சமுதாயத்திற்கு இன்பக் கனிகளைத் தரவேண்டும். 'கல்வி யென்பது உள்ளிருந்து மலர்விப்பதேயொழிய புறத்தினின்று உள்ளே திணிப்பதன்று' என்பது புகழ்பெற்ற மேனாட்டுக் கல்வியாளரான புரோபெல், பெஸ்தலோஜி, மாந்தெஸ்ஸோரி முதலியோர் கொள்கை. இத்தகைய இயற்கல்விக்கு வழி யென்ன? மாணவனிடம் உள்ள இயற்புலமையைத் தூண்டுதலே வழி. இயற்புலமையைத் தூண்ட வேண்டுவதென்ன? கல்வி இயற்கை வளத்தில் ஓங்கவேண்டும்.

மனம் ஒளிப்படக் கருவி (Camera) போன்றது. அதில் சுற்றுக்காட்சிகள் எளிதிற் பதியும். சந்தை, தீனிக்கடை, புகைவண்டி நிலயம், கடைகள், சிற்றின்பக் காட்சிகளுக்கிடையே கல்விமன்றம் அமைந்தால், மாணவர் நடையும், ஒழுக்கமும் கெட்டு வாழ்வே பாழாகக் காண்கிறோம். கான், மலை, சோலைகள், ஆறு

முதலிய மாசற்ற இயல்வனப்பிலகும் இடங்களில் கலாசாலைகள் அமையவேண்டும். வான், கதிர், மதி, விண்மீன், மேகம், மின்னல், மலை, நதி, வயல், மலர் வனப்பு, மைனா, தேனீ, வண்டு, எறும்பு, நாய், பூனை, மான், பசு, அன்னம், மயில், கிளி முதலியவை காணும் வேதங்கள்! இந்த இயற்கைப்பொருட்களின் உறவால் அறிவு மிகப்பெருகும். இயற்கையுறவால் இதயம் மலரும். இயற்கையின் உள்ளமே இருடிகள் வேதம். வியாசரும், வான்மீகியும், வேதரிஷிகளும் அமைதியான இயல்வனப்பில் மனங்குவிந்திருந்தே தமது இலக்கியத்தவத்தை நிறைவேற்றி உலகிற்கு அற்புதமான அறிவைத் தந்தனர். பாரத நாகரிகம் இயற்கை வனப்புள்ள இருடிவனங்களிலேயே பிறந்தது. இராமாயண பாரத வீரர்களும், ஹோமரின் வீரரும் இயற்கை வனங்களிலும் மலைகளிலும் கல்வி பயின்றவர்களே. இடம்பமான கட்டிடங்கள் வேண்டா. மாளிகைகள் எழுப்புவதினும், நாட்டிற்கு வீரமைந்தரை எழுப்புவதே நமது குறிப்பு: மாசற்ற இயல்வனப்பில் மழை வெயிலுக்கு அடக்கமாகப் போதுமான சிறுசிறு கட்டிடங்கள் அமைக்கவேண்டும். குருவின் வாழ்வே மாணவனுக்கு அனுபவ நீதி நூலாகவேண்டும். நெட்டுருப் போடுவதினும், சிந்திக்கச் செய்து, குறித்த பொருளை மாணவர் கருத்தினின்றே கேள்விகள்மூலம் உதிக்கச் செய்யவேண்டும். வானத்தைக் காட்டி வான நூலும் (Astronomy), இயல்வளங் காட்டிப் புவி நூலும், உயிரினங்களின் இயல்பைக் காட்டி உயிர் நூலும், செடிகொடிகளை வளர்க்கச்செய்து விவசாயஞ் செய்யச் சொல்லிச் செடிநூல் பயிர்நூலும்,

வாழ்ந்துகாட்டி நன்னடையிலக்கணமும், நியாய வழிபாடுகளால் சமயநூலும் புகட்டுதல் இயல்பான முறையாகும். தெள்ளறிவெல்லாம் உள்ளத் தூற்றே. இயற்கையின் அமைதியில் இதயம் மலரும்.

**ஆற்றல் மிகப்பெருக்கி யாளாக்குங் கல்வியினைப் போற்றுக வீரர் பொலிந்து.** 3

நாட்டில் ஞானவீரரும், தருமவீரரும், கருமவீரரும் பெருகவேண்டும். வழி யென்ன? நாட்டிற் கேற்ற கல்விமுறை வகுத்தல். கல்வி எப்படியிருக்க வேண்டும்? ஒவ்வொரு மாணவன் உள்ளத்தும், ஆதாரச் சக்கரங்களிலும் பொதிந்து கிடக்கும் ஆற்றலை, சக்தியை, புலமையை மிகவும் பெருக்கி, அவனை வீட்டிற்கும், நாட்டிற்கும், உலகிற்கும் நலமுற வாழும் ஆளாக்கவேண்டும். அத்தகைய கல்வியை வீரர் எழுந்து போற்ற வேண்டும். உண்மையான கல்வியைப் பரப்பும் வீரர் பொலிய வேண்டும். தீரர், தீரர், தீரரே வேண்டும்! சும்மா அறையில் கண்ட புத்தக மூட்டைகளை யேற்றிப் பயனில்லை. இயற்கைப் புலமையைக் கட்டவிழ்த்து, அறிவும், அழகும், ஆற்றலும், வீரமும், கலையும், தொழிலும், காரியவீறும், வாய்மையும், தூய்மையும், அன்பும், அருளும் பெற்ற தீரர்களை உண்டாக்க வேண்டும். பழைய காலப் பிரமசரிய குருகுலமுறையுடன் தற்கால ஆராய்ச்சி முறையும் (Experimental and Laboratory method) சேர்த்து ஒரு புதிய கல்வி முறையை வகுக்க வேண்டும். அத்தகையகல்வி முறை எமது "புதிய கல்வி முறை" யெனும் நூலில் விரிவாக விளக்கப்பெற்றிருக்கிறது. நமது நாட்

டின் அடிமைத்தளையை அறுத்துப் போக்கி யெறியும் ஆத்ம வீரரைப் படைக்க வேண்டும். மடமையிருளை எந்த மூலையிலும் இல்லாமல் ஓட்டும் அறிவுச் சுடர்களைப் படைக்க வேண்டும். வறுமைப் பகாசுரனை அடியோடே யொழிக்க, கோடிக்கணக்காகத் தொழில்களைச் செய்யும் கலை வீரரைப் படைக்கவேண்டும். அகந்தை, சிறுமை, பொறாமைகளை யொழிக்க, அறவோர் கூட்டத்தைப் படைக்க வேண்டும். வாய்மைத் தொண்டும், வளம்பெறு தொழிலும், தூய வாழ்வும், நோயிலா வுடலும், அறிவும், திறனும், ஆன்மவீரமும், தீரமும் பெருகும் கல்வியே சிறந்தது.

**மெய்யு மறிவுடனே மேலா முறுதிபெருப்**
**பொய்க்கல்வி யாலென் புகழ் ? 4**

அறிவுடனே, உடலும் மேலான உறுதிபெற வேண்டும். அப்படி யில்லாது மூளைச்சுமை யேற்றும் கல்வி பொய்க்கல்வி. அதனால் என்ன சிறப்புண்டாகும் ?

உள், புறம் இரண்டையும் வளர்ப்பதே கல்வி. மனிதனிடம் இரண்டு தத்துவங்கள் உள்ளன : ஒன்று சூக்கும தத்துவம் ; மற்றொன்று தூல தத்துவம். ஒன்று ஆன்மா ; மற்றொன்று யாக்கை. ஒன்று ஆதேயம் ; மற்றொன்று ஆதாரம். இரண்டும், புனலுந் தரையும், சுடரும் விளக்கும் போன்றன. உடல் உயிர்தாங்கி ; உடல் ஆத்மாலயம். உடம்பிலும் உத்தமனைக் காணவேண்டும். மாசற்ற மனத்தால் உடம்பு ஈசனைக் காட்டவேண்டும். சங்கரர் மாதிரி அறிவும், மத்வாசாரியார் மாதிரி உடலுறுதியும், இராமா

நுஜர் மாதிரி ஒழுக்கமும்வேண்டும். பீமனும், தருமனும், வியாசரும் ஒன்றுகூடி ஆற்றலும் அறமும் அறிவும் பொருந்திய புதிய ஜாதியைச் சிருட்டிக்க வேண்டும். நிறைமுறை வாழ்வால் நரைதிரையின்றி, இளமையின் பொலிவெய்தலாம். நோயும் சோம்பலும் நடுக்கமுங் கொண்டவன், தனக்கும் பிறர்க்கும் பயன்படமாட்டான். அவன் உலகச் சுமையாவான். "உடலுரம் பெறுதவன் உட்பொருள் காணுன்" என்பது சுருதி. "திண்மையுடலில் ஒண்மையறிவு" என்பது பழமொழி. பலமின்றி நலமில்லை. ஆதலால், அறிவை வளர்ப்பதுடன், உடல் வலிவையும் வளர்க்கவேண்டும்.

ஈகையு ளீகையா மின்கல்வி; பெற்றவனுக்
கேகுழி யெங்கு மிசை. 5

இத்தகைய தீரர் வளரும் இனிய கல்வியளித்தலே ஈகைகளிற் சிறந்தது. அத்தகைய கல்வி கொடுத்தவனுக்குப் பெரும் புகழாகும். அதைப் பெற்றவனுக்கும் எங்கே சென்றாலும் புகழாகும்.

கண்ணைத் திறக்கும் கல்வி யளித்தலே புண்ணியத்திற் சிறந்தது; இனிய கல்வியே மேலான ஈகை. கல்விக்குச் செல்வம் ஈந்தவனுக்கு இசையும், கல்வி ஏற்றவனுக்குப் பயனும் உண்டல்லவா? கல்விப் பணி எல்லையற்றது. குருகுலமமைத்தல், குருவைப் போற்றல், குமரரை யூட்டல், தேவைகளீதல், நன்னூல் வெளியிடல்; இவற்றுடன் புவிநூல், ஒளிநூல், பௌதிகம், இரசாயனம், செடிநூல், உயிர்நூல், பயிர்நூல், உலகநூல், நுண்கலை, எண்கலை, நாட்டு வரலாறு, வீரர் வரலாறு, பெரியார் வரலாறு முதலிய எத்தனையோ வகை வகையாக அறிவைத் தந்து சிறு

வரை ஆளாக்க வேண்டும். கல்வி கொடுத்தவன் கண்கொடுத்தவனும்.

---

## 3. கற்ற பயன்

கற்ற வழியாற்றக் கற்றோனே கற்றோனும் ;
மற்றவன் கற்ற மடம். 1

நமக்கு வேண்டுவது அனுட்டானக் கல்வி. கல்வியுடன், பயிற்சியும் நிகழவேண்டும். பாட்டும் குரலும் போலக் கல்வியும் பயிற்சியும். கற்றவழியே நின்றொழுகக் கற்றவனே கல்விமான். கற்றும் அதன் வழி நில்லாது முரணாகவாழ்பவன் படித்தமுட்டாள் ஆவன்; கல்வியை வாழ்விற் காட்டவேண்டும்; இன்றேல், வாழாக் கல்வி கற்றவனாவன். கல்வியை மனத்திற் சீரணித்து, வாழ்வில் ஊறச்செய்து, ஆசையாணவங்களை அடக்கியாளத் திறமை பெறவேண்டும். வேதம் படித்தும் வேசைமோகமும், தேவாரம் படித்தும் திருட்டுப் புத்தியும், குறள் படித்தும் குடி களவும், பைபிள் படித்தும் படுகொலை வெறியும், தாயுமானவர் படித்தும் தன்னலவகந்தையும், திருவாசகம் படித்தும் உருகாக் கல்நெஞ்சும், அறநூல் படித்தும் அசுத்தவாழ்வுங் கொண்டவன் ஆற்றுக்குப் போயும் சேற்றில் முழுகினவன் போலாவன். அறிவிற் கழகாம் அனுட்டானம்.

அருளற்ற மூளை யடைத்தநூற் குப்பை
பொருளற்ற வெற்றுரையைப் போன்ம். 2

அறிவின் பயன் அருள், ஜீவகாருண்யம். 'சீவன் சிவமயம்' என்றெண்ணி, உலகளாவிய உயி

நிரக்கங்கொண்டு, அறிவாளி தன்னலான தொண்டு செய்யவேண்டும். பசியென்றவனுக்குப் படித்த செல்வன் ஒரு பருக்கையேனும் கொடாதுபோனாற் பயனென்ன? "அறஞ்செயவிரும்பு" என்று படித்து விட்டு அறஞ்செயா இரும்பாயிருந்தாற் பயனென்ன? அப்படி அருளற்ற மூளையில் அடைபட்ட புத்தகக் குப்பையெல்லாம் பொருளற்ற, பயனற்ற, வெற்றுரைபோலாம். வாயினால் வைத்தியம் என்றால் நோய் தீருமா? மனிதன் தெய்வத்தன்மை பெறப் பெருந்துணையாவது அருள். அருளே புத்தர். அருளே மகாவீரர். அருளே அப்பர். அருளே கிறிஸ்து. இறைவன் அருள் வடிவாக நம்முள் உள்ளான். அருளை நாடி, அருளைத் தேடி, அருளைப் பாடி, அருளைக் கூடி, அருளால் இறைவனை அறிவதே இன்பம்! அருளுணர்வு தரா நூல்கள் வெறு நூல்களே. அருளை நேசி; அருளைப் பேசு; அருள்வழி காட்டும் அறிவு நூலைப் பயில்; அருள்வழி நில்! வாழ்வு அருளாடலாம். அருளில்லா மனம் இருள்வீடாகும். அதில் செருக்கும் வாதமும் குடிபுகும். அருளைப் பயில்க; அருள்வழி வாழ்க!

**புலனைவென் றேனே புலவனும்; பாட்டாற்**
**கலகலப்போன் பேச்சுக் கருவி. 3**

புத்தகங்களை உருப்போட்டுத் தள்ளிவிடலாம். புலன்களை யடக்கியாளுவதே மிகக் கடினமான வேலை. ஐம்புல னடக்கமே அறிவாளிக் கழகு. ஞானிக் கழகு மோன மனமாம். மனப் பாடத்தால் கல கல வென்று வார்த்தை கொட்டுவோன் கிராமபோனுக்கே சமானம். பேச்சுப்

பெட்டி ஊசி வைத்தபடி பேசிமுடிக்கிறது. மனமடங்காது, புலனை வெல்லாது, வாய்முழக்கம் செய்பவன் புலவனல்லன்; அவன் புத்தகப் படிப்பாளி. ஓதலினும் ஒழுக்கம் சிறந்தது. நாப்பறையினும் நன்னடை சிறந்தது. புலனை வென்றோன், பொய்யிருளொழித்தோன், மனங் குவிந்தோன், மமதையற்றவன், தன்னில் நிலைத்த சமநோக்காளன், அடக்கமும் பொறுமையும் அணிகலனுடையோன், அருள் வழி நிற்போன்—அவனே புலவன்.

**வெள்ளத் தனைய விரிநூ லளந்தாலும்**
**உள்ளத் துணர்வே யுயர்வு.** 4

வெள்ளம் வெள்ளமாக நூற்பெருக்கை மூளையால் அளந்தாலும், தனது உள்ளத்தில் எழும் கடவுளுணர்வே உயர்ந்த அறிவாகும்.

அச்சியந்திரம் எத்தனையோ மொழிகளில் உலப்பிலா நூல் வெள்ளங்களை, எண்ணிலாச் செய்தியிதழ்களை மடமட வென்று கொட்டுகிறது. எதைப் படிப்பது? படித்தாலும் என்ன? மனவமைதியாமா? மனத்தை நிறைப்பதினும் மனத்தைத் திறப்பதே நல்லது. உயர்ந்த அருணூல்களையே பயில்க; பயின்றதைச் சிந்தித்திடுக! அதன்படி வாழ்ந்து பயன் பெறுக; உளந்திறக்கப் பயில்க; உள்ளமே அறிவின் ஊற்று. உள்ள நூலைத் தியானத்தால் ஓதுக! அருட்புலவர் மொழிகளை உன்னியுன்னி உள்ளத்தை மலர்ப்பிக்கவேண்டும். மலர்ந்த உள்ளம் அருண்மணமும் அறிவுத் தேனும் அன்பழகுந் தரும். உள்ளத்துணர்வே உண்மையை விளக்கும்.

**கல்வியும் வாழ்வும் கவியுஞ் சுவையும்போற்**
**புல்லுவதே செல்வப் பொலிவு.** 5

கவிதையுடன் பொருட்சுவையும், சொற்சுவையும், அருட்சுவையும் பொருந்தி யிருக்கவேண்டும். யாப்பமைந்த சொற்றொடர் மட்டும் கவியாகாது. அதுபோல, வெறும் படிப்புமட்டும் கல்வியாகாது. கல்வியுடன் வாழ்வும் இணையவேண்டும். வாழாக் கல்வி வாழாப் பெண்போலாம். கல்வியும் அதன் வழி வாழ்வும் சேர்ந்தால் உலகம் எல்லாச் செல்வப் பொலிவு மெய்தும்.

கசடறக் கற்க, கசடற வாழ்க! வாழுங் கல்வியே வசையறுங் கல்வி. செல்வியும் கலையும் சேர்வதுபோலும் கல்வியும் ஒழுக்கமும் கசடறச் சேர்தல். அறிவும், ஆற்றலும், அருளும், அழகும், மங்கலவாழ்வும், வாய்மையும், தூய்மையும் அளிப்பதே உண்மைக் கல்வியாகும்.

---

## 4. ஆசான்—சீடன்

**ஆசா னருளு மழிவில் லறிவொளியே**
**காசினிக் காகுமுளக் கண்.** 1

அறிவைத் தூண்டும் ஆசான் வேண்டும். நல்லாசிரியன் அருளும் அழிவற்ற அறிவொளியே உலகிற்கு உள்விழியாம்.

உண்மையை யுணர்வது உள்ளக் கண்ணே. புறக்கண் ஊன் பிண்டமே. அதற்குப் பார்வை உள்ளத்தானல் உண்டாகிறது. கண்ணாற் காண்பவன் கண்ணன். உள்விழி திறப்பவன் நல்லாசிரியன். நல்லாசிரியன் எத்தகையன்? உள்ளத்தறிவும், உலகியலறிவும், சொல்லும் செயலும் பொருந்திய வாழ்வும்,

நன்னடை யொழுக்கமும், பன்னூற் புலமையும், அருங்கலைப் பெருக்குடன் அன்புப் பெருக்கும், பரந்த நோக்கமும், சிறந்த கொள்கையும், பிள்ளைகளி டையே பிள்ளைபோலுள்ளமும், பழகிய தாய்போற் பரிவும் பண்பும், அறிவைப் பக்குவம் அறிந்தருள் ஆற்றலும், நாட்டு மணிகளுக்கு ஊட்டும் ஆர்வமும், உதாரணமாகும் உத்தமவியல்பும், நலந்தீதறியச் செய்திடு நயமும், அழியாப்பொருளை விழிதிறந் துணர்த்தலுங் கொண்ட நல்லாசான் கும்பிடத்தக் கோன். ஆசான் அறிவொளி தேச விளக்கு.

**வானும் விளைநிலனும் வாரிதியும் வெற்பும்போல்**
**ஞானகுரு செய்யு நலம்.** 2

ஞானகுரு எல்லையற்ற நன்மை செய்கிறான். அவனாலேதான் ஒரு நாடு நலம்பெற்று வாழ்கிறது.

(1) எல்லையற்று விரிந்து, காற்றும் மழையும் அளித்து, உலகிற்கே சீவாதாரமாக விளங்கும் வானம்போல மெய்யாசிரியன் அருளும் அறிவும் மாந்தரை வாழவைக்கிறது. (2) விளைநிலம் பொறுமை யுடன் பாடுபடுவதற்கேற்ற பலன் அளிக்கிறது; எல்லாப் பயிர்களுக்கும் ஆதாரமாயிருக்கிறது. அது போல, பொறுமையுள்ள ஆசிரியன் மாணவன் சிரத் தைக் கேற்றபடி அறிவளிக்கிறான். அவன் அளிக் கும் பயிற்சிதான் சமுதாய நல்வாழ்விற்கு ஆதாரமா கும். (3) வாரிதியாவது ஆழி, கடல். ஆழிபோன்று அறிவாழ முடையான் ஆசான். ஆழச் செல்லச் செல்ல முத்தும் மணியும் பவளமும் தரும் கடலைப் போன்றே, எவ்வளவுக் கெவ்வளவு வணங்கிக் கருத் துடன் கற்கிறோமோ அவ்வளவுக் கவ்வளவு நிறைந்த

அறிவுச்செல்வத்தை யளிப்பவன் ஆசான். ஆழ்கடல் அமைதியா யிருப்பதுபோன்றே, ஆசான் முக்குண விகார அலைவீசும் உலகியல்பறிந்து, உள்ளத்தில் அமைதி கொண்டு வாழ்வான்; அவனுடன் உறையும் மாணவருக்கும் மனவமைதி யளிப்பான். கடல் தனது ஆவியைத் தந்து, மேகமாக்கி மழைபொழி விப்பது போன்றே, ஆசான் மதிப்பொலிவுள்ள மாண வனுக்குத் தனது அறிவைப் புகட்டி மாணவன் வாழ்வு செழிக்கச் செய்வான். (4) மாமலைபோல ஆசான் உள்ளம் தன்னறிவில் நிலைத்திருக்கும். மலை வளம் போலக் கலைவளந் தருவான் ஆசான். மலை அருவியைத் தந்து உலகை ஊட்டுவதுபோன்றே, ஞானகுரு அருளருவி தந்து மாந்தர் மனத்தையும் வாழ்வையும் வளஞ்செய்வான். சிற்பி சிலைவடிப்பது போலவே, குரு மாணவனின் உடல், மனம், உள் ளம், உயிர், ஆன்மா அனைத்தையும் கருத்துடன் ஒளியுறுத்துகிறான். வான்விரி வொத்த வாய்மை யறிவு, மழை போலருளல், நிலம்போற் பொறுமை, நேரிய வொழுக்கம், தராசுபோல் நிதானம், கொள் வோன் கொள்வகை குணித்துக் கொடுத்தல், மாண வன் உழைப்பை மதித்துப் போற்றல், ஆழிபோல் அருங்கலை யாழம், மலைபோல் மாண்பு, மலர்போற் புன்னகை, தாய்போ லுள்ளம், தந்தைபோற் பரிவு —இவை நல்லாசான் இலக்கணமாகும். அடித்தல், மிரட்டல், இடித்தல், வைதல், பணத்திற்காகக் குணத்தை யிழத்தல், ஓரகம், வெஞ்சினம், ஒழுக்கக் கேடு, தூங்கி விழுதல், ஏங்கித் தளர்தல், வாயடங் காமை, மனமடங்காமை, இழிகுணம் — இவை யெலாம் இழுக்காம் எவர்க்கும்.

**நாட்டிற் பெருந்தகையா ளெவ ரறிவை**
**யூட்டினன் பெற்றரி னாங்கு.** 3

ஒரு நாட்டில் பெருந்தகையாளன், புகழுக்குரியவன், மக்கள் மதிப்பிற்குரியவன், முதலில் யார்? நாளை வரும் வீரர்களுக்கு அறிவை யூட்டினவனே, அந்த ஆசிரியனே பெருந்தகையாளன்; அவனே பெற்றோரைவிடச் சிறந்தவன். எப்படி? பெற்றோர்கள் ஊனுடலைத்தான் பெற்றவர். பிள்ளைக்குப் புதிய ஞான வுடலைத் தந்து ஆளாக்குவோன் யார்? ஆசிரியன் அல்லனோ? பிள்ளையினிடம் எத்தனையோ குற்றங் குறைகள், மடமையிருள், நடைப்பிசகுகள் உள்ளன. அவற்றை யெல்லாம் கருத்துடன் திருத்தி அவனை ஆளாக்குவது யார்? ஆசிரியனே. இன்று குழந்தை, நாளை மனிதன். இன்று செடி, நாளை மரம். இற்றைச் சிறுவரே இனிவரும் பெரியார். ஒவ்வொரு குழந்தையும் உலகாலயத்தில் ஒரு குறித்தஅருட்பணிக்காகவே அவதரித்துள்ளது. குழந்தையின் கனிநகையில், கரவற்ற விழிகளில், மாசற்ற உள்ளத்தில் ஒரு கண்ணன், புத்தன், ஏசு, அப்பர், சம்பந்தர், ஒரு ராஜராஜன், ஒரு சிவாஜி கரந்துள்ளனர். மார்தின் லூதர் ஆசிரியராயிருக்கையில், தொப்பியை யெடுத்து, "வருங்கால அறிஞர், புலவர், நீதிவான்கள், வைத்தியர், வீரர், ஞானிகளாய் என்முன் விளங்கும் சிறிய பெரியாருக்கு வணக்கம்" என்று வகுப்பிற் புகுவாராம். சிறுவரின் அறிவையும் புலமையையும் தூண்டி ஒழுக்கத்தையுயர்த்தி, அவர் வாழ்வின் வடிவை யமைக்கும் சமுதாய மகாசிற்பி ஆசிரியனே. அவனுக்கே நாட்டில் முதல் மரியாதை யுரியது.

அழகுநிறை யாசானுக் கன்புடைமை யீந்து,
பழகிடலே நல்லறிவின் பண்பு.

மேற்சொன்ன அறிவழகும், குணவழகும் பொருந்திய ஆசிரியனுக்கு உள்ளன்பையும், தனக்கியன்ற காணிக்கையையும் தந்து, நல்ல அறிவைப் பயிலுவதே பண்பாகும்.

மாணவனுக்குக் குருவே அன்னை, குருவே தந்தை, குருவே நண்பன், குருவே இறைவன்; 'மடவிருளொழிக்கும் சுடர், ஞானப்பா லளிக்கும் காமதேனு' என்று குருவைப் போற்றி வணக்கத்துடன், உள்ளன்புடன் மாணவன் பிரமசரிய விரதங் கொண்டு கல்வி பயில்க! தன் பெற்றோர்க்கியலும் செல்வமே மாணவன் உடைமை. அதையே குரு தட்சிணையாகத் தரவேண்டும்; ஏழையானல் கட்டாயமில்லை. குரு கல்வியை விற்கும் வியாபாரியல்லன். *ஆருணியைப்போலப் பணிவும் சேவையும் செய்து மாணவன் கற்கவேண்டும். ஆனல், குருவின் குடும்பம் பிழைக்க வேண்டுமே? சமுதாயம் குருவின் காலட்சேபத்திற் கேற்ற மானியங்களைத் தரவேண்டும்; இயன்றவர் இயன்றதைச் செய்யவேண்டும். குருவின் பெண்ணுக்குக் கலியாணமானல் சமுதாயம் அதை நடத்திவைக்க வேண்டும். சிறுவரைப் பெரியாராகப் பயிற்றி நாட்டிற்கு அறிவுப் பணி செய்வதைத் தவிர ஆசானுக்கு வேறு கவலை கூடாது.

நாடிப் பணிந்தோதி, நற்சேர்க்கைத் தொண்டுடனே
சீடன்மெய் கற்றல் சிறப்பு.

---

* ஆருணி வரலாற்றைக் "கல்விக்கதிர்" என்னும் நூலிற் காண்க.

மாணவன் எப்படிக் கற்கவேண்டும்? ஆசிரியனிடம் விரும்பிச் சென்று, வணங்கி, அவன் சொற்கேட்டு, அவன் சொல்லுகிறபடி படித்து, அறிவும் ஒழுக்கமும் சான்ற நல்ல மாணவருடன் நட்புக்கொண்டு, குருவிற்கு வேண்டிய பணிவிடைகளைக் குறிப்பறிந்து செய்து, உண்மையான அறிவைக் கற்பது சிறந்த முறை.

நல்லாசான் கிடைப்பது வெகு அருமை. ஆசானைத் தேடி, விரும்பிச் செல்லவேண்டும் மாணவன். குருசேவையும் கல்வி யொழுக்கத்தைச் சேர்ந்தது. தாயும் தந்தையும் சுற்றமுந் தெய்வமும் ஆசான் என்றே நேசிக்கவேண்டும். ஆசிரியன் நடையைப் பார்த்து மாணவனும் நன்னடை பயில்வான். மாணவர் கண்டபேருடன் சேரக்கூடாது. சேர்க்கைவாசனை இயற்கையாக மாறிவிடும். இளமையில் ஒரு தீமை பிடிபட்டால் பிறகு அதை மாற்றுவதரிது; பழக்கம் வழக்கமாகி, சுபாவமாக மாறிவிடும். மாணவன் நன்றாகச் சோதித்தே பிறருடன் பழகவேண்டும். மாணவன் போக்குவரவு பேச்சு நடைகளையெல்லாம் ஆசிரியரும் பெற்றோரும் கவனித்துத் திருத்தவேண்டும். பழக்கத் தூய்மை, ஒழுக்கத் தூய்மை, உறக்கத் தூய்மை, உணவுத் தூய்மை, நினைவுத் தூய்மை, பேச்சுத் தூய்மை, செய்கைத் தூய்மை—இவை மாணவனுக்கு அவசியமாம். அடக்கம், புலனொடுக்கம், அயராமுயற்சி கொண்டு மாணவன் கல்வி பயிலவேண்டும். எதைக் கற்பது? தன்னைப் பூரணப்படுத்தக்கூடிய அனைத்தையும் மாணவன் கற்க! அத்யாத்ம ஞானம், தாய்மொழி, பொதுமொழி, எண், எழுத்து, க்ஷேத்திர கணிதம் (Geometry),

பீஜகணிதம் (Algebra), நாட்டு வரலாறு, ஞால வரலாறு, தமிழர் வரலாறு, பெரியார் வரலாறு, அருளாளர் வரலாறு, அருட்பாடல்கள், கம்பன், காளிதாஸன், துளஸிதாஸ், ஷேக்ஸ்பியர், மில்தன் போன்றோரின் உயர்ந்த காவியங்கள், அரசியல் நூல் பொருள் நூல், பௌதிகரசாயன தாவர நூல்கள் உயிர் நூல், உடலுறுதிநூல், சுரங்கநூல், மண்ணியல் நூல், உடற்கூறு, புவிநூல், வானநூல், பயிர்நூல், மண் இரும்பு பொன் வெள்ளி தங்கம் மரம் கண்ணாடி பட்டு பஞ்சு மயிர் முதலியவற்றாற் செய்யும் கைத்தொழில்கள், காவியம், ஓவியம், சிற்பம், இசை, நாடகம், நடனம், பக்தி-ஞான-கர்மயோக சாதனம், ராஜயோகம், இல்லறவொழுக்கம் முதலிய பயனுள்ள பயிற்சிகளைப் பெறலாம். அவரவர் இயல்பிற்கும், திறமைக்கும் இயற்புலமைக்கும் ஏற்ற கல்வி தர வேண்டும். பாடும் குயிலைக் காக்கைக் கூண்டில் அடைக்கக்கூடாது. ஒருவனுக்குச் சித்திரம் வருமானால் அதையே முதன்மையாகவும் மற்றப் பாடங்களைத் துணையாகவுங் கற்பிக்கவேண்டும். குருவைப் பணிந்து கொள்வன கொள்க!

---

## 5. கலை வளர்ச்சி

போற்றுக தாய்மொழியைப் பொன்போற் புந்நயங்கண்
டேற்றுக நாளு மெழில்.

தாய்மொழியைப் பொன்போல அருமையாய்ப் போற்றி வளர்க்கவும். பிறமொழிகளில் உள்ள நயங்களைக் கண்டு அவற்றைத் தக்கபடி சேர்த்து நாடோறும் தாய்மொழிக்கு எழில், ஒளி, மாற்று ஏற்றுக!

புட்டிப்பாலுக்கும் தாய்ப் பாலுக்கும் எவ்வளவு வித்தியாசமோ, அவ்வளவு வித்தியாசம் பிற மொழி யால் அறிவு பெறுதற்கும் தாய்மொழி மூலம் அறிவு வளர்ப்பதற்கும் உண்டு. ஒவ்வொருவனும் தன் சொந்தப்பற்களையும், இரைப்பையையுங் கொண்டே உணவைச் சீரணிப்பது போலவே, தாய்மொழியைக் கொண்டே அறிவைத் தனதாக்கிக் கொள்ள வேண் டும். பிறமொழியைத் திறமுடன் பேசினும் அம் மொழிக்குரியார் போல் அதிற் புலமைபெறுதல் அரிது. தாய்மொழியிலேதான் ஒருவன் கலைகளை எளிதிற் கற்கமுடியும். தமிழீர், தமிழீர், தமிழைப் போற்றுமின்! தமிழே யமுதம், தமிழே தாரகம்! அருளும், அழகும், அமுதச் சுவையும் தமிழ்ச் சொல் லானது! தமிழீர் அறிமின்! தமிழ்மொழி யுலகத் தாய்மொழியாகுக! பிறமொழி நயங்களைத் திறமுறச் சேர்த்துத் தன்னிகரில்லாத் தமிழ்க்கலை வளர்மின்! சித்திரக்கலையுடன் முத்தமிழோங்குக! பழஞ்சிறப் புடனே புதுநலங் கூட்டுக! நாளுந்தமிழ்மொழி யாளுக உலகை! முன்னே தமிழ்மொழி; பின்னே பொதுமொழி; அதன்பின் உலகுடன் பழகுவோர் நன்மொழி பயிலுக பைந்தமிழ்ச்சோலைக் குயில் களே! தமிழ் வளர்ச்சியைப் பற்றி எம் **பைந்தமிழ்ச் சோலை, தமிழுணர்ச்சி, தமிழ்க்கனல்** என்னும் நூல்களிற் காண்க! தன்னறம், தாய்மொழி, தாய்நாடு, இறைவனருள் வளமை இந்நான்கும் பெருகி, உல கில் அறிவும், உண்மையும், இன்பமும் வளர்க!

**அருளறிவி லூறி, யழகிற் றவழ்ந்து,**
**பொருள் செழித்த பொற்கவியைப் போற்று!** 2

ளுணர்வு, பாவனை, சித்தசுத்தி—இத்தனையும் சேர்ந்து அவரவர் தாய்மொழிகளில் உருக்கமான அருட் பாடல்களைப் பாடவேண்டும். இறைவன் திருநாமம், திருவிளையாடல்கள், திருவருட் பெருமைகளைப் பாடி, பாவனு ரஸங்களுடன் ஆடி அன்பைப் பெருக்கலாம். இந்த நோக்கத்துடனேதான் பண்டரிபுரத்தில் விட்டல் பஜனையும், வங்காளத்தில் சைதன்யர் ஏற்படுத்திய சங்கீர்த்தனமும், தென்னிந்தியாவில் போதேந்திர சுவாமிகள் ஏற்படுத்திய ஹரிபஜனை தீபப் பிரதட்சிணங்களும் இன்னும் நடந்து வருகின்றன. கலைக்கரசு நாடகம்; நவரசங்கொண்ட நாடகக் காட்சி புலன்களின் வழியே அறிவைப் புகட்டும். அரிச்சந்திர நாடகம், பிரகலாத நாடகம், இராம நாடகம், கிருஷ்ணலீலை, பாண்டவர் வனவாசம் முதலிய நாடகங்கள் நமது நாட்டில் பொதுஜனங் களுக்குத் தருமோபதேசஞ் செய்யப் பெருந்துணையா யிருக்கின்றன. நாடகக் காட்சி பொறிகளின் வழியே அறிவைப் புகட்டும்; உலகின் இன்பதுன்பங் களை எதிரே காட்டும்; முக்குணப்போர்களை முன்னே நடத்தும்; கடவுளின் பெருமையைக் கண்ணுர விளக் கும். நாடகக்கலை ஆடும் வேதமே. பண், பரதம், நாடகம் முதலிய கலை யிலக்கணங்களை "நாடகக் கலை விளக்க"த்திற் காண்க.

கண்ணைக் கருத்தைக் கைந்நயத்தை யின்புறுத்தும் ;
கண்போல நுண்கலையைக் கா. 4

காவியம், ஓவியம், பண், பரதம், நாடகம் முதலிய நுண்ணிய அழகுக் கலைகளைக் கண்போலப் போற்றி வளர்க்கவேண்டும். அவை கண்ணையும், கருத்தையும், கைத்திறனையும் இன்புறுத்துவன.

வாழ்விற்கு அழகும் விரிவும் இன்பமும் அளிப்

பன நுண்கலைகள். இவற்றின் பயனைக் கருதியே நம் பெரியார்கள் கோயில் வழிபாட்டுடன் இவற்றை யிணைத்துப் பக்திச் சாதனமாக்கினர். பாமாலை, சங்கீதம், நர்த்தனம், வாத்தியம், திருவிழாக் கொண்டாட்டம், சிற்பம், சித்திரம், அணிவேலை, அழகுக் கலைகளெல்லாம் இறைவனுக்கு வழிபாடாகச் செய்த பெருமை நம் பாரதநாட்டுப் பெரியாரைச் சேர்ந்தது. நம் கோயில்களும், திருவிழாக்களும் அருங்கலையின் தெய்விக விளக்கமாயிருக்கின்றன. தேர்ந்த கலைவாணருக்கு மானியங்கள் தந்து முன்னோர் ஆதரித்தனர். ஒருநாட்டு நாகரிகம் கலைவிளக்கத்தால் அறியப் பெறும்.

**மெல்லியர்க்கு மென்கலைகள்; வீரத் திறனுண்மைக்(கு)**
**எல்லார்க்கு மெண்ணெழுத்து மீ.** 5

ஆண் பெண் இருபாலாருக்கும் எண்ணும் எழுத்தும் பொதுவாயிருக்கவேண்டும். பெண்களுக்கு யாழ், பிடில், வாய்ப்பாட்டு, சித்திரம், அணிவேலைகள், வீட்டொழுக்கம், சமையல்போன்ற பயனுள்ள இனிய கலைகளைப் புகட்டுக! மெல்லியலாருக்குத் தளிரழகுள்ள மென்கலைகள் நலந்தரும். ஆண்களுக்கு ஆற்றலும், ஆண்மையும், பகைவரை வெல்லுந் திறனும், நாட்டைக் காக்கும் திண்மையும், பொதுநலத் திறனும் வளரும் வீர பலத்தைப் பெருக்குக!

எழுவயது முதல் பதினைந்து வயதுவரை இருபாலாரும் எழுதப் படிக்க, கணக்குப்போட, நல்ல இலக்கியங்களைச் சுவைக்கப் பயிலவேண்டும். அத்துடன், நாட்டு வரலாறு, பூகோளம், உடல்நுட்பம்,

பயனுள்ள பௌதிக ரஸாயன ஆராய்ச்சி, தாவர சாத்திரம், உயிர் நூல், மருத்துவம், இன்னிசை, சமய சாரம், ஆத்மஞானம் முதலியவற்றில் போதுமான தேர்ச்சி பெறவேண்டும். பிறகு, ஆண்களுக்கு வாழ்விற் பயனாகும் தொழிற்புலமையும், நாட்டைக் காக்கும் வீரத்திறனும் அளிக்கவேண்டும். பெண் மணிகளுக்கு இல்லறவொழுக்கம், மனைவாழ்வை இன் புறுத்தும் நுண்கலைகள், மருத்துவம், சேய்வளர்த் தல், சமையல், வீட்டொழுங்கு முதலிய பயனுள்ள பயிற்சிகளைத் தரவேண்டும். "கல்விக்கதிர்" என் னும் நூலில் "ஜப்பானில் பெண் கல்வி வளர்ச்சி" யென்னும் பகுதியைக் காண்க!

நாட்டில் வீறுற்ற ஆண்மையும், மாசற்ற பெண் மையும் திகழவேண்டும். உத்தமத் தாய்மாரைப் பயிற்றுவது சமுதாயத்திற்கு இன்றியமையாத கடமையாகும்.

இத்தகைய கல்வி மனத்திற்கும், புலன்களுக் கும், உடலுக்கும், சித்தத்திற்கும் நல்ல பயிற்சியளிக் கும். நம் பூரணயோகி கல்வி, கலைகளில் ஆழ்ந்த பயிற்சியுள்ளவன். அருளறிவும், அழகுக் கலையும், பொருளறிவும், நல்லொழுக்கமும் அவனிடம் பொருந்தி யிருக்கும். "கல்விக்கதிர்" என்னும் நூலில் ஆணுக்கும், பெண்ணுக்கும் நல்ல கல்விப் பயிற்சி தரும் வகையை விரிவாகக் காண்க! 21 வயது மட்டும் ஆண்களும், 16 வயதுமட்டும் பெண் களும் பிரமசரிய விரதத்துடன் கல்வி கற்று அறிவுத் தவம் புரிய வேண்டும்.

**நான்காவது, அறிவியல் முற்றிற்று.**

## ரு. அன்பியல்

"அன்பினால் மனிதன் சித்தன், அமுதன், இன்பனாகிறான். அன்பு அமுதமயமே. அன்பினால் மனிதன் ஆத்மானந்தனாகிறான்" என்று நாரத பக்தி சூத்திரம் சொல்லுகிறது. "இன்பமே, என்பெரும் அன்பே, அரும்பொனே, மணியே, என் அன்பே; அன்பே சிவமாவது" என்று அருட்புலவர் கூறினார். யோகசித்திக்கு அன்பு பெரிய சாதனம். இகபர வாழ்விற்கு அன்பு பெருந்துணையாகும். காதல், நட்பு, உறவு, பக்தி, அருள், ஈகை, இரக்கம், இணக்கம், கூட்டுறவு, ஒற்றுமை, கலையின்பம்—அனைத்திற்கும் அன்பே உயிர். உயிர் - உடல், இறை - உயிர், பெத்தன் - முத்தன், ஆண் - பெண், காதலன் - காதலி உறவுகளெல்லாம் அன்பினால் நிகழ்வன. காந்தம் இரும்பைக் கவர்வதும், கோளங்கள் பரிதியைச் சுற்றி வருவதும், வான் மழை பொழிந்து மண்செழிப்பதும் அன்பின் சக்தியால். அன்பே வாழ்வுக்கனல்; அன்பு இதய ஆற்று. அதுவே, காதலாக அரும்பி, இருவருள்ளத்தை யிணைத்துக் குலக்கிளை விரித்து, ஆருயிர் நேயமாகப் பூத்து, முடிவில் அனைத்துந் தானான இறைவனருளின்பமாகக் கனிகின்றது. அன்புள்ளம் மருத நிலம் போன்றது; அன்பற்ற மனம் சகாராப் பாலைவனம் போன்றது. பாலைவனத்திற்கூட அன்பு பசிய நிலமாக (Oasis) ஆங்காங்கே செழிக்கிறது. அன்பு மனம் கரும்பு; அன்பற்றது கொழுத்தாடை. அன்பு

கூழையும் அமுதாக்கும்! குடிலையும் மாளிகையாக்கும்; இடர்களையும் வெற்றிப்படிகளாக்கும்; இருளிலும் ஒளிகாட்டும்; கவலையை ஓட்டும்; கடவுளைக் காட்டும்.

பரபக்தி, அபரபக்தி இரண்டும் அன்பில் அடங்கும். உருவ வணக்கம், உள்வணக்கம், இரண்டறக் கலத்தல், ஜீவப்பிரமைக்கியம், சர்வாத்ம தரிசனம்—அனைத்திற்கும் அன்பே துணை. **நமச்சிவாய** என்று வணங்கலும், **சிவோஹம்** என்று ஒன்றுபடுதலும், பிறகு **எல்லாம் சிவமயமாகக்** காணலும் அன்பின் வளர்ச்சியாலேதான். 'எல்லாங் கடவுள், அவனன்றி யாதுமில்லை' என்னும் உணர்ச்சிகளெல்லாம் அன்பின் முதிர்ச்சியா லெய்தும். அன்பு புறஞ்சென்று, உருத்தொழுகையை இயலுவிக்கிறது; அன்பு உட்குவிந்து, அருத்தொழுகையை உள்ளே நிகழ்விக்கிறது. அன்பு உலகளாவி, எல்லாம் கடவுள் விளக்கமாகக் காண இயலுவிக்கிறது. உருத்தொழுகைஅபரபக்தி; உள்ளே தியானித்துக் கலத்தல் பரபக்தி. உருவணக்கம், மந்திரஜபம், பெரியார் வணக்கம், குருபக்தி, ஆலயவழிபாடு, நிமாஸ், தியானம்—அனைத்தும் ஓர் அன்புமயமான இறைவனையே அன்பினால் நாடுகின்றன. பூரணயோகி உள்ளிறைவனைக் கலந்து உலகாக நிற்கும் இறைவனையும் அன்பு செய்கிறான். உள் வாழ்விற்கும், உலக வாழ்விற்கும் உரிய அன்புப் பயிற்சியை இவ்வியல் விளக்கும்:

## 1. அன்பு

**அன்பே கடவுளா மன்பே யருஞ்சமயம்**
**அன்பே யறிவிற் கணி. 1**

அன்பே கடவுள் ஆம். அன்பே அரிய சமயநெறி. அன்பே அறிவிற்கு அழகு. காதலும் கவர்ச்சியும் நட்பும் விருப்பமும் அன்பினால் விளைவன. மணாளன் விரும்புவது மனைவியின் அன்பையே; மனைவி விரும்புவது மணாளன் அன்பையே. அறியாக் குழந்தையும் அன்பால் அழைத்தால் தாவிவந்து விளையாடும். வாழ்வை யியக்குவது ஓர் அன்புப்பொருள். அந்த அன்புப் பொருள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் வளர்கின்றது. அன்பின் பிறப்பிடம் உள்ளம்; அன்பின் சிகரமே கடவுள்; அன்பே சமயசாரம். கடவுளுக் கன்பு, ஆருயிர்க்கன்பு, பெரியார்க்கன்பு, பெற்றார்க் கன்பு, உற்றார்க்கன்பு, நண்பர்க்கன்பு, நாட்டிற் கன்பு, அருட்பணியன்பு—இவை எம்மதத்திற்கும் சம்மதமாம். அன்பிருந்தால் சாதிசமயவருண வேறுபாடுகளெல்லாம் மனத்தை விகாரப்படுத்தாதொழியும். **கண்ணப்பன், நந்தனார், திருநீலகண்டர், திருப்பாணாழ்வார், அப்பர், அப்பூதியடிகள், சம்பந்தர், சாக்கியர், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், கபீர், சோகமேளர்** முதலிய கடவுளன்பரெல்லாம் எக்குலத்தவ ரெனினும் அன்பினால் ஒரு குலமேயாவர்; அவரனைவரும் தொண்டர் குலமே. அழுக்குடன் வரும் குழந்தையையும் அன்பினால் அணைத்து, உடல் கழுவி அலங்கரிக்குந் தாயைப் போன்று, அன்புடன் வரும் ஆன்மாவை இறைவன் ஆட்கொண்டு குறை களைவான். அன்பு பொதுநோக் குடையது. அறிவிற்கழகு யாதையும் ஒன்றெனக்

காணல். அன்பின் முதிர்ச்சியால் இந்தச் சமதரிச னம் எய்தும். அறிவின் விளக்கம் அன்பு; அன்பின் முதிர்ச்சி அறிவு; அறிவின் பெருக்கால் அனைத்திட மும் அன்பு பரவும். அன்பால் அருளாம்; அருளால் அறிவாம்; அறிவால் இன்ப நிறைவாம்.

**அன்புள் ளிருந்தா லடவியிலு மச்சமிலை;**
**தன்போலுந் தங்குயிரெல் லாம். 2**

உள்ளத்தில் அன்பிருந்தால் காட்டுவழியே போகும்போதும் அச்சமில்லை. காட்டு விலங்குகளும் அன்பிற் கிணங்கும். அன்புநிறைந்த உள்ளமுடையவ னுக்கு உலகில் இருக்கும் உயிர்களெல்லாம் தன் னையே போலாம், **ஆத்ம சமானமாம்.**

மனத்திலே அன்பிருந்தால் அனைத்திலுந் தம் மையே காண்பர். கடுமனக் கள்வரும் அன்பிற் கிரங்குவர். காடு மலைகளில் தவம்புரியும் யோகி களைப் பாம்பு, புலி, நரிகளும் தீங்குசெய்வ தில்லை. மலைகளில் தவம்புரியும் நாட்களில் இர வில் வேங்கைகளும், நரிகளும், மலைப் பாம்பு களும், ஓநாய்களும் வரும். அவற்றை ஏதும் செய்யாமல், விரட்டாமல், 'அவையும் வெவ்வேறு வினையுடல் தாங்கிய நாமே' யென்று அன்புறவு கொண்டிருந்தால் அவை நம்மை யாதுஞ் செய்யாது சாதுவாகச் செல்லும். அன்புடன் அழைத்தால் புட் களும், குரங்குகளும் அருகே வந்து விளையாடும். 'இவனால் நமக்கு அபாயமில்லை, இவன் நம்மை நேசிக் கிறான்' என்று விலங்குகள் நன்கு அறிந்துகொள்ளு கின்றன. 'இவன் நம்மைக் கொல்லப் பார்க்கி றான்; இவனுள்ளத்தில் நம்மை வெறுக்கிறான்' என்

றறிந்தால் உடனே தற்காப்பிற்காக விலங்குகள் பாய்கின்றன. அன்புள்ள இடத்தில் அச்சமில்லை. அன்புகொண்ட அப்பர் தம்மைக் கொல்லவந்த மதயானையை நோக்கி, "அஞ்சுவதி யாதொன்றுமில்லை ; அஞ்ச வருவதுமில்லை" என்று பாடினர். மதயானை அப்பரை வணங்கியது. அன்புள்ளவனுக்கு அஹிம்ஸை இயல்பாகும். அவன் சிறு பூச்சி புழுக்களையும் பார்த்துக் கவனமாக நடப்பான். அவன் உயிர்களையெல்லாம் தானகவே காண்பான். 'பூதம், மாத்திரை, பொறிகள், அந்தக்கரணங்களுடன்கூடிய கோடானுகோடி இயற்கை யுடல்களுள்ளும் இருக்கும் ஜீவாத்மா ஒன்றே' யென்று அவன் உணர்வான். அகிலவுயிர்களும் அன்புக்கோவை யென்றுணர்வான். அன்பர், உயிர்க்கெலாம் நண்பராவர்.

**சுமையுமெளி தாகுஞ் சுடுபகைநட் பாகும் ;**
**நமனும்போ மன்பை நயந்து.** **3**

அன்பினல் தாங்கும் சுமையும் இலேசாகும். அன்பைக் காட்டினல் நம்மைச் சுட்டுக் கொல்லவரும் பகைவனும் நண்பனுவான். வந்த எமனும் அன்பை நயந்து, விரும்பி, மெச்சித் திரும்பிச் செல்வான்.

தாய்க்குக் குழந்தை சுமையில்லை ; கொடிக்குக் காய் கனமில்லை. அன்பினல், சதிபதிகள் குடும்பச் சுமையைப் பொறுமையுடன் தாங்குகின்றனர். கூலிக்குச் சுமக்கும் மூட்டைக்கு அளவுண்டு. அன்பிற் சுமக்கும் சுமைக்கு அளவில்லை. அன்பிற்கு ஓர் அதிசயமான ஆற்றலுண்டு. பகைவன் உள்ளத்தையும் அன்பு இளக்கும். அப்பரும், பிரகலாதனும், மகாத்மா காந்தியும் அன்புள்ள பொறுமையால் இடர்

களைத் தாங்கி வெற்றிபெற்றனர். அன்பினால் உள்ளம் சுத்தான்மாவிலும், விசுவான்மாவிலும், பரமான்மாவிலும் மேன்மேலும் ஈடுபட்டிருக்கும். அன்பினால் அமரத்தன்மை பெறலாம். அதனால், சாவின் அச்சம் ஒழியும்; அன்பர் ஆவி நித்தியமான இறைவனுடன் கலந்திருக்கும். வினையுடல் வீழ்ந்தாலும் அவர்களுக்குக் கவலையில்லை. அன்பினால், அன்பர் அன்பு மயனான அருளிறைவனுடன் இரண்டறக் கலந்து வாழுவர்; அவர்களுக்கு இந்த உலகச்சுமை கனக்காது. பகைவரும் அவரது அன்புக்காந்தத்தால் திருந்தி நண்பராவர். கூற்றும் அவரை வணங்கும்.

பொன்புக ழாலல்ல; பூதவுட லாலல்ல;
அன்பினா லாளை யறி. 4

செல்வத்தினாலன்று; பேர்புகழாலன்று; ஐம்பூதக் கூடாகிய உடலழகு, பருமனாலல்ல. அன்பின் பெருக்கத்தைக்கொண்டே ஓர் ஆள், 'இன்ன தரத்தான்' என்று அறிவாயாக!

பொன், பொருள், படிப்பு, வடிவழகு, பலம், புகழ், பட்டம், பதவி யெல்லாம் ஒருவன் பெற்றிருக்கலாம்; ஆனால், மனம் கருங்கல்லாயிருக்கலாம். அன்பில்லாதவன் பொருள் யாருக்கும் உதவாது. ஈயாச் செல்வன் இருந்தும் ஏழையே. புகழிருக்கலாம்; அத்துடன், பிறரை மதியாச்செருக்கும் சுயநலமும் இருந்தால் புகழாற் பயனில்லை. செருக்குறும் புகழ் சறுக்கி வீழும். உடல் மன்மதாகாரமாயிருக்கலாம்; உள்ளம் இராவணாகாரமா யிருந்தாற் பயனில்லை. உதட்டில் அமுதமும் உள்ளத்தில் நஞ்சுமாயிருக்கும் ஆட்களை நம்பலாகாது. உடல் சிறிதாயிருக்கலாம்;

அதில், ஒரு மகாத்மா குடிகொண்டிருக்கலாம். ஓர் ஏழை பெரிய பொதுநல வீரனுயிருக்கலாம். ஆதலால் வெளித்தோற்றத்தால் அல்ல, உள்ளன்பையும், அதனல் வளரும் அன்புச்செயல்களையுங் கொண்டுதான் ஓர் ஆளை மதிக்கவேண்டும். ஆளின்பெருமை அன்பின் அளவே.

**தாயன்பு காட்டித் தமர்பிறரென் ருேரமிலா**
**நேயனுக் குண்டோ நிகர் ?** 5

ஒருதாய் தனது குழந்தையை உள்ளன்போடு நேசிக்கின்ருளல்லளோ ? அத்தகை தூய அன்பை அனைத்துயிர்களிடமுங் காட்டித் தன்னவர், அன்னியர் என்று பட்சபாதமாய் நினையாத நேயனுக்குச் சமானம் உண்டோ ? இல்லை !

தன்னுடு பிறர்நாடு, தம்மவர் வேற்றவர், தனக்கு பிறருக்கு, தன்சாதி, பிறசாதி, தன்மதம், பிறமதம் என்ற வேறுபாடுகளெல்லாம் அன்பின்முன் சிதறிப் போம். தன் மைந்தர் எங்கிருந்தாலும் எத்தகையராலும் தாய் நேசிக்கிருள் ; மெலிந்த பிள்ளையைப் பரிந்து நேசிக்கிருள் ; தாயன்பு தூய அன்பு. அந்த அன்பு ஒவ்வோருள்ளத்திலும் ஊறினல், உலகெலாம் ஒரே அருட்குடும்பமாகக் காணும் ; பொதுநலமே தன்னலமாகும் ; உலகமே தன்வீடாகும். அன்பினல் ஆன்மநேயமும், ஆத்ம சமத்வமும் உண்டாகும். அன்பர் பிறர்க்கே வாழுவர் ; அன்பிலார் தமக்கே வாழுவர். உலக வீட்டிற்குத் தந்தை இறைவன். தாய் அவனருட் சக்தி. ஆருயிர்களெல்லாம் அருட்பிள்ளைகளே. அன்பு விரிவால் இவ்வுண்மை நன்கு விளங்கும். பேரன்பன் பாரன்பன். அன்பன் உள்ளம் யாங்கும் பரவும்.

## 2. இனிமை

**இன்சொல்லி னில்லை யியம்பி னிணங்காரின்**
**வன்சொல்லை மாற்று மருந்து.** 1

பகைவரின் (இணங்கார்) வன்சொல்லை மாற்றும் மருந்து இன்சொல்லேயாம்; சொல்லு மிடத்து, அதைவிட மேலானதொன்று வேறில்லை. பிறர் நலங் கருதி அவர் மனம் புண்படாதுரைக்கும் உண்மை யுரையே இன்சொல்லாம்.

கோபப்பாம்பும் குழலுக்கடங்கும். கொடுஞ் சொல்லாகிய பாம்பின் விஷத்தைத் தீர்க்கும் மந்திரம் மனங் குளிர்ந்த இன்சொல்லேயாம். கொதிக்கும் நெஞ்சையும் குளிர்மொழி யணைக்கும். அன்பு, அருள், அடக்கம், பொறுமை, அறிவு, தெளிவு, உண்மை, சமநோக்கு—இவற்றின் பயனாகவே இன் சொல் உதிக்கும், கனிமொழியாலே கன்மனம் இளகும்.

**கன்மீது கூர்செய்யுங் கத்திபோல், வன்சொல்லில்**
**இன்சொல்லைக் கூர்செய் யினிது.** 2

கல்லிலே தீட்டினால் கத்தி கூராகும். பொறுமை கொண்டு வன்சொல்லில் தீட்டினால் இன்சொல் கூர்மையாகி யொளிரும்.

இன்சொல்லை முரடர் வன்சொல்லிற் சாணை பிடிக்கவேண்டும். அப்படிக் கூரான இன்சொல் பகைமையை வெல்லும் ஆற்றலுள்ளதாம். சொல்லைக் கண்டபடி வீசுதல் சோர்வைத் தரும். சொல்லைப் பொறுத்தல் வெல்லுந் திறனும். நாரும் மண்ணும் போட்டுத் தேய்த்தால் பாத்திரம் பளிச்சிடுவதுபோ லச் சிறுமதியாளரின் கொடுமொழி பொறுக்கும்

பெரியார் பொறுமை மேன்மேலும் ஒளிபெறும். சொல்லின் ஆற்றல் மிகவும் பெரிது. போரும் அமை தியும், இன்பமுந் துன்பமும் சொல்லினல் வருவன. நால்வர் வாக்கிற் பிறந்த தமிழ்ச் சொற்கள் எத்த னையோ அற்புதங்களைச் செய்தன. சொல் கடவுளரு ளைத் தரும்; அறிவுந் திருவும், ஆற்றலும் வெற்றியும் அளிக்கும். பயனறிந்து சொல்வன சொல்க; பய னில சொல்லற்க; பெருக்கப் பேசலின் சுருக்கி விளக் குக; பொய், கோள், பொறாமை, குத்திரம், கொடுஞ் சொல்—இவற்றை அறியார் பேசினும் அடங்கி யகல்க! இன்சொலிருக்க வன்சொல் வேண்டா! கனியிருக்கக் கல்லுண்பாரோ? பருப்பை விடுத்து ஓட் டைக் கடிப்பரோ? மலரை விடுத்து முள்ளைக்கொள் வரோ? தீயன வேட்பதும், தீயன கேட்பதும், தீயன சொல்வதும் தீயன செய்வதாம். நல்லன வேட்பதும், நல்லன கேட்பதும், நல்லன சொல்வதும் நல்லன செய்வதாம். தீவினைபோலத் தீமொழி யஞ்சுக; சீறும் பிறர்க்கும் தீஞ்சொல் வழங்குக! பொறுக்கப் பொறுக்கப் பொலிவுறும் இன்சொல்.

**விருப்பினிய சொல்லேயாம் வெம்பகைவன் கோப**
**நெருப்பை யவித்திடுநன் னீர்.** 3

கொடிய பகைவனின் கோபத் தீயை அவித்திடும் நன்னீர் எது? அது, அனைவரும் பிரியப்படும் இனிய சொல்லே. நெருப்பை யணைப்பது நீர்; சினத்தைத் தணிப்பது தீஞ்சொல். அமைதியாகப் பதற்றமில்லா மல், காரணங் காட்டி, 'அப்பனே, இது நியாயம்; இது மனச்சாட்சிக்கு விரோதம்; இஃது உனக்கு நல் லது; இது கெட்டது; நீ நல்ல வழிக்கு வரவேண்டும்

என்றுதான் சொல்லுகிறேன்' என்று இதமாகப் பேசினால் யார் மனமும் இளகும். ஏனெனில், கள்ளன் மனத்திலும் கருணைத்தெய்வம் உள்ளது. நமது இன்சொல் எதிராளியின் உள்ளத்தைத் தொடவேண்டும். இன்சொல்லிற்கு மந்திரசக்தி யுண்டு. உண்மையறிவும், உள்ளத் தெளிவும், அஞ்சா வுறுதியும், ஆத்ம சக்தியும், ஆருயிர்க் கருணையும், அருளும், அன்பும், தூய வாழ்வும், நேயமனமும் உள்ள பெரியார் உரையே மந்திரம். அவரே நிறைமொழியாளர். நிறைமொழியாளர் உரைமொழி மந்திரம். திறனறிந்து, அறமறிந்து, பிறர் மனமறிந்து, இடனறிந்து, குணமறிந்து, கொள்வோன் கொள்வகை யறிந்து சொல்வன சொல்க ! பல சொல்வதினும் பயனுள்ள சில சொல்வதே சிறந்தது. பகர்வன பகர்ந்தாற் பகையும் இணங்கும்.

**மாற்ருன்செய் துன்பமெலா மன்னித்துத் தான்மறக்கும்**
**சீற்றமிலான் சீரியனே தேர். 4**

பகைவன் செய்யும் துன்பமனைத்தையும் மன்னித்து, உடனே அதை மறக்கும் சினமற்ற சாந்தன் சீரியனாவான் என்று தேர்க ! (மாற்ருன் = பகைவன். சீற்றம் = சினம்.)

மாற்ருன் யார் ? நமது மனத்துடன் மாறுபட்ட நண்பனே மாற்ருன். ஏன் அப்படி மாறுபட்டான் என்ருராய்ந்து, அவனது சீற்றம் நியாயமானால் நம்மேலுள்ள பிழைகளைத் திருத்திக் கொள்ளவேண்டும். தவருனல், 'இன்னது தவறு, இஃது இப்படி யிருந்தால் நன்ருயிருக்கும்' என்று இதமாகச் சொல்லவேண்டும். திரிந்த மனத்தை அறிந்து திருத்தவேண்

டும். மனந்திருந்திஞல் குணந்திருந்தும்; சினந்திருந்தும்; இனந்திருந்தும். 'அறியாமையாலன்ரே இவன் தவருகச் சினக்கிருன். நாம் யார், அவன் யார்? இருவர் உள்ளத்திலும் உள்ளது ஒன்றுதானே. அதையுணராமல், நம்மை அன்னியனுக எண்ணியன்ரே கொடுமை செய்கிருன்; நாமும் முனிந்தால் எரியில் எண்ணெய் வார்த்ததுபோலாகுமே. அவன் செய்யும் மனப்பிழையை நாமும் செய்யக்கூடாது' என மன்னித்து, 'அப்பனே, நீ சினப்பதால் நான்வருந்தவில்லை. உன் கடுஞ்சொற்களை மன்னித்தேன்; மறந்தேன். ஆஞல், உண்மையைச் சொல்லுகிறேன், நியாயம் இப்படி' என்று ஆத்திரப் படபடப்பில்லாமல் அடக்கமாகவும், அமைதியாகவும், இனிமையாகவும், பேசிஞல், எதிராளியின் மனங்கரையும். சினத்தைப் பொறுக்கும் செந்தண்மை. மனத்தைத் திருத்துவர் மாசறு பெரியார்.

**தன்பிழையைப் போக்கிப் பிறர்செய் பிழைதாங்கி**
**யன்புசெய்வா னன்பர்க் கிறை.** 5

தன்னிடமுள்ள குற்றத்தைப் போக்கிப் பிறர் தனக்குச் செய்யும் பிழையைப் பொறுத்து, எல்லாருக்கும் அன்பு செய்யும் பொறுமையாளனே அன்பரிற் சிறந்தோன் (இறை).

பிறரைத் திருத்துமுன் தன்னைப் பலவகையில் திருத்திக்கொள்ள வேண்டும். நிற்றலுக்குப் பிறகே தான் சொற்றல். பொய், சினம், வஞ்சம், பொருமை, தீமை, காமம், களவு, கைதவம், செருக்கு முதலிய பிழைகளை முற்றிலும் போக்குக! அன்பும், கருணையும் (Compassion), அருளும் (Benevolence),

ஈகையும், ஒருமை யுணர்ச்சியும், உள்ளத்தூய்மையும், இன்சொலும், எளிமையும், இரக்கமும், பொறுமை யும், பகைவரைப் பகையாப் பண்பும், நேர்மையுந் தேர்ந்தார் பிறரைத் திருத்திடத் தக்கோர். அத்த கைய பெரியார் ஆருயிர்களுக்கிரங்கி, அனைத்திலும் இறைவனைக் கண்டு, வரும் இடர்களையெல்லாம் வெற் றிக்கு உரமாகக்கொண்டு, முரட்டுப் பிள்ளையைத் தொடையிலிட்டேனும் பாலூட்டும் தாய்போலப் பொறுமையுடன் இன்சொல் வழங்கி அன்புப் பணி செய்வர். அவரே சிறந்த பொதுநலத் தொண்ட ராவர். அவர் மனித சமுதாயத்தில் உள்ள கடவு ளுக்கே பணிசெய்கின்றனர். அப்பர், ஏசுநாதர் போன்ற பெரியார் அப்படிப் பொறுமை யணிந்து அன்புப் பணி செய்தனர்.

---

## 3. இன்னாத செய்யாமை

**இன்னாத செய்யாமை யென்னு மொழுக்கந்தாம்**
**மன்னுயிர்க் கெல்லா மறை.** 1

உலகில் மன்னும் உயிர்களுக்கெல்லாம் ஒரு பொதுமறை யுள்ளது. அம்மறை, 'எவ்வுயிருக்கும் தீங்கு செய்யாமை' என்னும் சீவகாருண்ய வொழுக் கத்தினால் ஆவது.

புல் முதல் புருஷன் மட்டும் உயிர் ஒன்றுதான். உணர்விற்கும் அறிவிற்குந் தகுந்தபடி பரிணும பேதம் உள்ளது. செடிக்கும் இன்பதுன்பமுண்டு. வெடுக்கென்று கிள்ளினால் பூவுக்கும் வலிக்கும். அன் புடன் நீர்பாய்ச்சி வளர்த்தால் செடி புன்னகை காட்டி முகமலரும். ஓரறிவுயிரான செடிகொடி

களுக்கு இன்பதுன்ப வுணர்ச்சியுள்ளபோது, ஐம்புல வுணர்ச்சியுள்ள விலங்குகளுக்குப் பன்மடங்கு உணர்வதிகம். அவற்றினும் பன்மடங்கு ஆறறிவுள்ள மாந்தருக்கு உணர்வதிகம். எவ்வுயிருக்கும் இன்னலிழைக்க வேண்டா. தன்னைப்போலப் பிறரை மதித்தலும், வேதனை நீக்கலும் வேதப் பொருளாம். பண்படாத காட்டுவிலங்குகள் ஒன்றையொன்று பசிக்கொடுமையால் கொன்று தின்கின்றன. பகுத்தறிவும், ஜீவகாருண்ய வுணர்ச்சியும் உள்ள மனிதனும் அவ்வாறு செய்தல் கொடுமையாகும். அன்பும் அருளும் அஹிம்ஸையால் வளரும். கொல்லா நெறியே கொள்கைக்கினிது. இன்னலிழைத்தால் இன்னலே யெய்தும். இனியது செய்தால் இன்பம் பெறலாம்.

**கொல்லேன், விழையேன், குடிகளவு சூதெண்ணேன்,**
**பொய்யேனென் றேயுறுதி போற்று.** 2

'நான் எவ்வுயிரையுங் கொல்லேன்; பிறர் பொருளை விழையேன், அவாவேன்; பிறமாதரை இச்சியேன்; கட்குடி, புகைக்குடி, திருட்டு, சூதாட்டம் இவற்றைக் கனவிலும் நினையேன்; மனச்சாட்சிக்குப் பொய்யாக நடக்கமாட்டேன்' என்று உறுதி பூண்டு அவ்வுறுதியைக் காப்பாற்றுவாயாக!

கொலை, காமம், கட்குடி, களவு, பொய், சூது ஆகிய இந்த ஆறுதலைப்பாம்பே பாபம் என்பது. இதன் குட்டிகள் கணக்கில. இவற்றை யொழிக்க மனிதன் ஸர்ப்பயாகம் பண்ணவேண்டும். பிறர்க்குத் தீமை புரிய நினைப்பது, தனக்கே தீமையாம். "முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்." நிழலைப்

போல வினைப்பயன் தொடரும். இதமே வேண்டின் அதமே செய்யேல்! அன்பு செய்தலும், துன்பந் தவிர்த்தலும் உலக மதங்களின் உள்ளமாகும். பிறர் பொருளுக்குப் பேராசைப்படாமல், தத்தம் இயல்பிற் கேற்றபடி உழைத்து, வந்ததைக் கொண்டு சிந்தை மகிழ்க! பிறர்மனை, பிறர்சாமான், பிறர்பொருள் இவற்றிற்கு ஆசைப்படுவோன் அமைதியிழப்பான்; அல்லலிழைப்பான்; பழி சுமப்பான்; பாவியாவான். உலகில் ஒருவரை யொருவர் திருடாமல், வஞ்சியாமல், ஒருவருக்கொருவர் உதவியா யிருக்கவேண்டும். மது மதிமயக்கும். காமம் மனங் கலக்கும். களவு மானமழிக்கும்: உள்ளத்தாலும் கள்ளுகேல்! திருட்டுச் சொத்து திருட்டுப்போகும். ஊரைச் சுரண்டினால் உள்ளதும் போகும். பறித்தவன் பறி கொடுப்பான். சூதில் விழுந்தோன் தூண்டிற் புழுப்போல் துடிப்பான். வஞ்சிப்பவன் வஞ்சிக்கப் படுவான். திருடன் நெஞ்சில் திடுக்கம் ஓயாது. இத் தீய செயல்களை அறவேயொழித்தலே யோக சாதனத்தின் முதற்படியாகும். பொய்யொழுக்கங் களைத் தவிர்த்து மெய்யொழுக்கம் பூணவேண்டும். வாயினியல்பு வாய்மை. வாய்மையால் மனது தூய்மை யாகும். மேற்சொன்ன வழுக்களற்றதே வாய்மையொழுக்கம்.

**மனத்தி லிரக்கமிலா மக்களை மாக்க**
**வினத்தினுஞ் சேர்த்த லிழுக்கு.** 3

நெஞ்சில் ஈவிரக்கமற்ற மாந்தரை விலங்கினத் தினும் சேர்த்தல் தவறாகும். (மாக்கள்—விலங்குகள் இழுக்கு—தவறு.)

இரக்கமே மனிதத் தன்மை: இரக்கமில்லா தவனை விலங்கினும் கீழாக மதிக்கவேண்டும். பழக்கினால் விலங்கும் பண்பட நடக்கும். குற்றமற்ற பிராணிகளை மனிதன் வதைசெய்கிறான்; அழிக்கிறான்; உண்கிறான். பொறுமையுடன் உலகிற்குப் பாடுபடும் வாயில்லாப் பிராணிகளை மனிதன் கொலை செய்துண்கிறான். பசு பாலைத் தருகிறது. பொய்க் கன்று காட்டிக் கறந்து மனிதன் பாலைச் சாப்பிடுவ தன்றியும், பசுவையும் கொன்று சாப்பிடும் கொடுமைதானென்னே! ஆடுகள் பால் தரும்; கம்பளிக்கு மயிர் தரும்; வயலுக்கு உர மளிக்கும். அவை நம்மிடம் உணவுகூடக் கேட்ப தில்லை; இலை தழைகளைத் தின்று வாழ்கின்றன. இரக்கமின்றி ஆட்டையடித்துண்ணும் மனிதனை எந்த விலங்குடன் சேர்ப்பது? மாடு உழுகிறது; வண்டி இழுக்கிறது; சுமைதாங்குகிறது. குதிரை ஆளைச் சுமக்கிறது. கழுதை கடுமையான வெய் யிலிலும் பொதி சுமக்கிறது. பழகிய நல்லபாம்பு கண்ணுக்கு மையிடுகிறது; தீங்கற்று விளையாடுகிறது. புலி கரடி சிங்கங்களும் பழக்கினால் மனிதனுக்கு உட் பட்டு நடக்கின்றன. மனிதமனம் மனச்சாட்சியான தரும தேவதைக்கு அடங்கி நடவாது எவ்வளவு முரண்டு செய்கிறது! காமப்பன்றி, கோபப்பாம்பு, லோப வெறிநாய், வஞ்சநரி, ஆங்காரப்புலி முதலிய கொடு விலங்குகள் எத்தனையோ மனக்காட்டில் திரி கின்றன! அன்னம் பாலைக்கொண்டு நீரை விலக்கு கிறது; பரிசுத்தமான தாமரை மலர்களிடையே வாழுகிறது. காக்கை மாலை குளித்து மனைபுகும்; கிடைத்ததைக் கலந்துண்ணும். நாய் எக்கூட்டத்தி

னும் தலைவனையறியும்; நன்றியுடன் நடக்கும். இவ்வாறு ஒவ்வொரு புள்ளும் விலங்கும் ஒரு சிறந்த நற்குணமுள்ளதா யிருக்கிறது. மனிதனின் சிறப்பென்ன? அதுவே இரக்கம். அன்பும் இரக்கமும் ஆளுக் கழகு.

**கதறக்கொன் றூனுண்ணுங் காதகர்க்கே தன்பு ?**
**மதுவுண்பார்க் கேது மதி ?** 4

கதறக் கதற உயிர்களைக் கொன்றுண்ணும் கொலையாளிகளுக்கு அன்பு எப்படி யிருக்கும்? மதுவுண்டு மயங்கினவருக்கு நிலைத்த மதி ஏது?

மது மதியைக்கெடுக்கும்; ஊன் உயிரைக்கெடுக்கும். ஊனுண்டல் இன்றேல் உயிர்க்கொலை யில்லை. மனிதர்க்குரியது மரக்கறியுணவே. உதிர்கனி தானியம் உத்தம வுணவு. அவற்றையும் அளவுடன் உண்ணல்வேண்டும். ஒருணர்வுள்ள தாவரம் விடுத்து, ஐயுணர்வுள்ள ஆருயிரின் கழுத்தைக் கதறக்கதறக் கத்திகொண்டறுத்து, இரத்தம் வடித்துச் சமைத்துண்ணல் எவ்வளவு இரக்கமற்ற வன்செயல்? கொன்றவன், கண்டவன், விற்றவன், கொண்டவன், உண்டவன் அனைவரும் கொலையிற் பங்கு கொண்டவராவர். யாகக்கொலையும், சிறுதெய்வத்தின் பெயரால் ஆடு கோழி எருமைகளைப் பலியிடுவதும் மோகப் படுகொலையே. இன்னுயிரெல்லாம் இறைவன் மக்களே. பிள்ளையைக் கொல்லப் பெற்றார் பொறுப்பரோ? அததன் உயிர் அததற்கு அருமையன்றோ? தன்னுயிர் விரும்புவோர் பிறவுயிர்களைப் போற்றுக! இரத்தக் கறைகள் இன்றே யொழிக! போர்க்கொலை, ஆட்கொலை, பொங்கற்கொலைகள்,

வேள்விக்கொலைகள், மதவெறிக்கொலைகள், வயிற்றிற்காக வன்கொலைபுரிதல், இரத்தச் சோறு, பாபப் பொங்கல்—எல்லாம் ஒழிக! அன்பு பொழிக! ஊன்மது விலகுக, உயிரன்பிலகுக!

**கூற்று மிடுகாடுங் கூடிய மாக்களே**
**நாற்றவுட லுண்ணு நரர்.** 5

உயிர் பிரிந்த பிறகு, நாறிய உடல்களையுண்ணும் நரமனிதர் உயிர்களைக் கொல்லும் எமனும், உடல்களை விழுங்கும் சுடுகாடும் கூடிய மிருகங்களே யாவர்.

மனிதன் சாவை அஞ்சுகிறான்; தானே பிறவுயிர்களுக்கு நமனாகிறான்; தன்மேற் கத்தி பட்டால் 'ஐயோ' என்கிறான்; தீங்கற்றவுயிர்களை வாளால் அறுத்துண்கிறான்! ஊர்தோறும், நாடோறும் ஆயிரக்கணக்கான உயிர்களை வாளாலும், யந்திரங்களாலும் அறுத்துண்கிறான். வாயில்லாச் சீவர்களுக்கிழைக்கும் இக்கொடுமையே போராகக் கிளம்பி மனிதரைப் பழிவாங்குகிறது. சுடுகாட்டில் உறவினரைப் புதைக்கும்போது மனிதன் விம்மியழுகிறான். தன் வயிற்றுக்குழியில் தீங்கற்ற வுயிர்களின் பிணங்களை வாட்டி மசாலை சேர்த்துப் போட்டுப் புதைக்கும் போது அவன் மனம் ஏன் இளகுவதில்லை? ஆ! கொடுமை! கொடுமை! காய் கனி கிழங்கு தானியம் பருப்பு இவற்றால் ஆகிய உணவைப் பாருங்கள்; எவ்வளவு சுசிருசியாயுள்ளன! குடலும், குருதியும், கொழுப்பும், சதையும், மலமும் நாறும் உயிர்க் கொலைக்களனையும் பாருங்கள்; எவ்வளவு அருவருப்பா யிருக்கிறது! கொன்றுண்ணும் உயிர்களின் கண்ணீரும், கம்பலையும், பிணிதுயர் இடும்பைகளும்

சாபமும் எங்கேபோகும்? உண்பவன் இரத்தத்திற் கலந்து வாழ்வைப் பற்றும். மனிதா, பிணந்தின்னுதே! நீ இழைத்த தீவினைகள் போதும்! இனி இரக்கங் கொண்டு பிறவுயிர்களை உன்னுயிராகக் கருதி நட; பழிபாவத்திற் கஞ்சு; எல்லா வுயிர்களுக்கும் இதமே செய்! இதஞ்செய்யா விட்டாலும் அதஞ் செய் யாதே! பொல்லது போக்கு; நல்லது செய்!

---

## 4. நட்புரிமை

**மாணப் பெரியது மன்னே, மயக்குலகில்**
**ஆணவமில் லன்புத் தொடர்பு!** 1

'நான் எனக்கு, எனது' என்னும் ஆசையூட்டி மனத்தை மயக்கும் இந்த உலகில் தன்னலச் செருக் கற்ற, ஆணவமற்ற, அன்புள்ள நட்பு (தொடர்பு) மிக மிகப் பெரிது.

உண்மை நண்பன் உலகினும் பெரியான். அரிதி னரியது அன்புள்ள நட்பு. 'தாம், தமக்கு, தமது, தமர்' என்னும் தன்னலவுணர்ச்சி யொழிந்தாலே தான் உலகளாவிய அன்பும், உயிரளாவிய நட்பும் உண்டாகும். சிலர் தமது காரியம் ஆகவே தக்க மனிதரைக் காலைப் பிடிப்பர்; முகமனுரைப்பர்; வசப் படுத்துவர்; காரியம் ஆனதும் நழுவிச் செல்லுவர். உயிரும் உடம்புமே வினை தீர்ந்ததும் விட்டு நீங்குகின் றன. நன்றாக ஆராய்ந்தால், தாமே தமக்குத் தகை பெறு நண்பர். தம் அந்தக்கரணங்களைச் சுத்த மாக்கி நண்பராகக் கொண்டால் இன்புறலாம். அந்தக் கரணங்களுடனேயே ஜீவன் பிரிவதால் அதில் வளரும் அன்பும், நன்மையும் நமக்கு அரிய துணையாகும்.

மற்றபடி ஆசையாணவப் பற்றின்றி, ஈருடலில் ஓருயிராகி, உள்ளொன்றிய ஆன்மநேயர் உலகில் மிகவும் அரியர். அப்படி நல்ல நண்பர் வாய்த்தால் மனித வாழ்வு தெய்வ வாழ்வாகும். நல்ல நட்பின் இலக்கணமென்ன? உள்ளத்தொன்றி, உயிரிற் கலந்து, உடலிரண்டெனினும் உள்ளன்பொன்றாய், இன்பத்தின்கண் இன்பமுற்று, வெய்துயரிடையே கைபோலுதவி, வளர்பிறை போலத் தளர்வற வோங்கி, சிறுமையகற்றிப் பெருநெறிபற்றி, தற்புகழின்றிச் சமயத்துதவி, கோள்பொய்யின்றி வாழ்வை யுயர்த்தி, நீரிலே தாமரை, வானிலே நீலம், கதிரிடை வெப்பம், மதியிடைத் தண்போல் இணைபிரியாதார் குணமுறு நண்பரே.

**சீரியர் கேண்மை சிறிது கிடைத்தாலும்**
**ஆருயிர்க்கு நல்லமுத மாம். 2**

கல்வி கேள்வி யொழுக்கங்களில் ஓங்கிய சீரியர் நட்புச் சிறிது கிடைத்தாலும், அருமையான உயிர் வாழ்விற்கு நல்ல தேவாமிருதம்போல இன்பமாகும்.

உத்தமர் நட்பு மெத்தவுமினிதாம். பெரியார் உறவு பேதைமை யொழிக்கும். சிற்றினச் சேர்க்கை குற்றமே பெருக்கும். கற்றவர் கேண்மை கலையை வளர்க்கும். சேர்க்கையைப்போல வாழ்க்கையுமாகும். சீரிய பெரியார் நேயம் கிடைத்தால், அதனினும் பெரும் பேறில்லை. பெரியார் இயல் பென்ன? கடவுளுறுதி, கருணையுள்ளம், மங்கல வார்த்தை, மாசிலா வொழுக்கம், அகந்தை - அழுக்காறு - அவா - சினமின்மை, அன்பும்- அருளும் - பண்பும் - வாய்மையும் - உட்புறத் தூய்

மையும் - உயரிய நினைப்பும் கொண்ட நல் வாழ்வு, குலையா அமைதி, படபடப்பின்மை, சிடுசிடுப்பின்மை, தெள்ளிய இனிமை, ஒள்ளிய மதிநலம், ஆருயிரிரக்கம், ஆத்மநேயம், பிறர் நலம் பேணல் — இவை பெரியாரியல்பாம். இத்தகைய பெரியாரைத் தேடியடைந்து அன்பும் வணக்கமும் பூண்டு பழகப்பழகப் பளிச்சிடும் வாழ்வு.

**இடித்துத் திருத்து மிணக்க மினிது ;**
**கொடுத்தும் புன்கேண்மை கொடிது. 3**

இடித்துப் புத்திமதிசொல்லிக் குற்றத்தைத்திருத்தும் நட்பு மிகவும் இனிதாகும். தாம் விரும்பியதைக் கொடுத்தாலும், அற்பசகவாசம் கொடிய தீமை விளைக்கும். கொடுத்தலாவது ஈதல்—தாம் விரும்பியதை ஈதல்.

உள்ளே அனைத்தும் ஒள்ளிய ஆன்மாதான். எனினும், இயற்கை வேறுபாடுகள் உள்ளன. முக்குணமாயை கணக்கில்லா வடிவுகொண்டு ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருமாதிரி விளங்குகின்றது. இம் முக்குண வேறு பாடுகளே புலி, நரி, நாய், பேய், கள்ளன், வஞ்சகன், கடுமனக் கொலைஞன் ஆகும். உள்ளே அனைவரும் ஒன்றெனும் ஆன்மநேயம் வேண்டும். அத்துடன் குணமறிந்து புறத்தே பழக வேண்டும். செப்புப் பாத்திரத்தைத் திறந்தவெளியில் வைத்தால் துருவேறும். நாள்தோறும் அதைத்தேய்த்துக் கொண்டே யிருக்கவேண்டும். அதைப்போல, பக்தி, தியானம், நல்லோர் கூட்டம், குருசேவை முதலியவற்றால் மனத்தை நாடோறும் சுத்தமாக்கி வர வேண்டும். அவ்வாறு மனத்தூய்மையின் பொருட்டு

நம் குறைகளை இடித்துச் சொல்லிக் கண்டித்துத் திருத்தும் பெரியார் உறவே மிகவும் இனிதாம். அருளாளர் உதையும் ஆசிர்வாதமாம். புல்லர் நட்பு முதலில் இனிதாகத் தோன்றிப் பிறகு கைக்கும். புலியும் ஆன்மா, பசுவும் ஆன்மாதான். எனினும், இரண்டின் குணங்களும் வெவ்வேறு. புலி மேலே பாயும். பசு பாலீயும். நல்லோர் புல்லர் அனைவரும் ஆன்மமயமே. எனின், நல்லார் தன்மை நலஞ்செய்யும் பொல்லார் தன்மை தீங்கிழைக்கும். நாக்குச்சுவையும், நாரியர்மயக்கும், கண்காட்சிகளும் காட்டிப் புலன்களைக் கவர்ந்து கெடுக்கும் கயவரை யணுகேல்! அற்ப சுகத்திற் கடிமைகளான புல்லர் கேண்மை அல்லற்படுத்தும். உறுத்தித் திருத்தும் உத்தமர் கேண்மை மனத்திற் கினிது; வாழ்விற் கினிதாம்.

**உடல்பொரு ளாவி யுதவியுங் கொள்க**
**கடவுட் பெரியார் கழல். 4**

உன் உடல் பொருள் ஆவியைக் கொடுத்தேனும் தெய்வப்பெரியார் திருவடிநேயங் கொள்ளுக!

அளவறு கருணையும், களவறுநடையும், அறிவொளியூற்றும், அன்புவெள்ளமும், அருளார்மொழியும், தெருளார்மனமும், சமத்துவநோக்கும், சுத்தான்ம சித்தியும், கடவுட் கலப்பிற் கனிந்த சாந்தமும் பூண்ட பெரியார் பொன்னடி பணிவாம். செருக்கும், வெறுப்பும், சிறுமன வகந்தையும், கன்மப் பாசமும், காமவெறிகளும், மாய மயக்கும் மாற்றுதற்கரியவாம். கடவுட்பெரியார் கனல்விழி பட்டால் தீமைகளெல்லாந் தீருவதுறுதி. ஆணவம், மாயை, கன்மமற்றோரை நேரே இறைவன் நின்று ஆட்கொள்வான்;

ஆசாரியர் மூலம் பிறருக்கருள்வான். உண்மையே விரும்பி, உள்ளன்பீந்து, பணிவுடன் வேண்டும் பணி விடை செய்து, சிரத்தையுடனே செப்பியதாற்றி, திருவாய்மொழிகளைச் சிந்தித்தொழுகி, தியானமும் மோனமும் தவநெறி வாழ்வுங் கொண்டு, நன் மாணவன் குருபக்தி செய்க! உத்தமப் பெரியார்க்கு உயிரையுங் கொடுக்கலாம்.

**உயிரைக் கொடுத்து முயிர்பிரியா துள்ளத்**
**துயிரொன்றி நட்டா ருறவு.** 5

நட்பென்பது உள்ளத்திற் பற்ற வேண்டும்; உயிரிற் கலந்து ஒன்றவேண்டும். அப்படிப்பட்ட நண்பர் ஒருவருக்கொருவர் உயிர்கொடுப்பர். அதனல் அவருள்ளத்தில் உயிராய்க் கலந்து நிற்கும் அன்புறவு பிரியாது தொடரும். அஃதாவது, உயிர் பிரிந்தாலும் உண்மை நண்பர் நட்புரிமை பிரிவதில்லை. இன்னொரு பிறவியிலும் இருவரும் நண்பரா யிருப்பர்.

*இருமனப்பாசம், இரத்தக் கலப்பு, செல்வச் செழிப்பு, சிறந்த வண்மை, அழகு மயக்கம், அருங்கலை விருப்பம், ஆசைத் தினவு, பாசப்பற்று, ஆசை, தன்னலம், அச்சம், மயக்கம்—இவற்ருல் உறவுகள் எண்ணிலவுண்டாம். காமவுறவு கைத்துப் போகும். அரசர் சலுகையும் விரசமாய்ப் போகும். உயிர்க்குயிர் கலந்தார் உறவே நிலையாம். அதுவே ஆன்ம நேயமாகும். மெய்யுறவு ஆன்மவுறவே; மற்றதெல்லாம் மினுக்கே. ஆன்ம வுணர்வில் ஆழ்ந்து வேரூன்றி, அன்பாற் பெருகி, அனுபவங் கிளைத்து, இன்பதுன்ப வெயில் மழை தாங்கி, அருள்மலர்

*இருவிகாரமனம் (The mind of dualities.)

குலுங்கி, அறிவுகனிந்த கற்பகம்போல நிற்பது நட்பாம். அத்தகைய ஆன்மநேயத்தில் உதித்த இன்பக் கனிகள் தெய்வச் சுவை நல்கும். அன்பிற்காகவே அன்பாற்கலந்தவர், உடல் பிரிந்தாலும் உயிர்பிரியார்கள். அன்பர் உடலம் அந்தக்கரணமே. உள்ளொன்றானல் உயிரொன்றாகும். அத்தகைய இயல்பான நட்பால் இறப்பையும் வெல்லலாம்.

---

## 5. பொறுமை

**ஆற்றல் பொறையளவே யாகு மதனலே**
**யேற்றம் பெறுமெங்கு மே. 1**

ஒருவனுக்கு எவ்வளவு பொறுமை யுள்ளதோ அவ்வளவே ஒரு காரியத்தைச் சாதிக்கும் ஆற்றலும் இருக்கும். உறுதியான பொறுமையால் ஒருவனுக்கு எங்குமே மேன்மை கிடைக்கும்.

அன்பிற்கு ஆறு உறுப்புக்கள் உள்ளன: அன்பிற்கு ஆர்வம் உள்ளம், ஒற்றுமை உயிர்ப்பு, உண்மை கரணம், கண்ணோட்டம் விழிகள், தியாகம் உடலம், பொறுமையே நரம்பு. ஆன்மநேயமென்னும் ஊற்றினின்று பொசியும் அருவியே அன்பு. அன்பின் வெற்றி பொறுமையாலெய்தும். படபடப்பின்மை, இடம்பொருளறிதல், காலமறிதல், கருத்தி லுறுதி, உண்மைக்கு வெற்றி யுண்டென நம்புதல், அறிஞர் சொற்படிதல், அகந்தை யின்மை, போட்டி - பொருமை - பொய் - சினமின்மை, பகைவரின் வஞ்சத் தூண்டிலிற் படாமை, வீழினும் ஓங்கினும் விடாமுயற்சி, இடர்களை வெற்றிப் படி

களாய்க் கொள்ளல், பகைவரைப் பகையாது பழு தைத் திருத்தல், ஆன்ம நிச்சயம், அஞ்சாத் துணிவு, பொன்றவரினும் புன்னகைப் பொலிவு, எல்லாருக் கும் இன்பமே நினைத்தல்—இவையே பொறுமையின் இலக்கணமாகும். பொறுமையே வெற்றிப் பொன் முடி சூடும்.

**வாய்மை, பகையாமை, மாட்சி, மனப்பொறுமை**
**காய்வானைக் காயும் படை.** 2

நம்மைத் துன்புறுத்தும் பகைவனை (காய்வானை), அத்துன்பச் செயலினின்று ஒழிக்கும் (காயும்) படை கள் எவை? மனம் மொழி செயல்களில் உண்மை (வாய்மை), யாரையும் கறுக்கொண்டு பகையாமை, பெருந்தன்மை (மாட்சி), மனப்பொறுமை— இவையே பகைவரின் பகைமையை வெல்லும் நாற்படையாகும்.

வாழ்க்கை இன்பதுன்பப் போர்க்களம் : அதில், குணதொந்தங்கள் கணமும் உறங்காமற் போராடு கின்றன. ஒருவன் இவற்றை வென்று குணாதீதனாகு மட்டும் போராட்டம் நில்லாது. சண்டை சச்சரவு போட்டி பொறாமை பொய் திருட்டு வஞ்சம் சூது —இவையெல்லாம் உலகைப்பிடித்தாட்டும் ஆசை யாணவமாயத்தின் வலிய படைகள். இவையே, நம் முன் பகைவராக நிற்கின்றன. "ஆசைவடிவாகத் தீங்கு செய்யும் பகைவனை வெல்!" என்றார் **கண்ண பகவான். இராவணன் இராம விரோதியல்லன்** ; அவனுட் புகுந்த பெண்வெறியே தரும விரோதி. **கண்ணனைப்** பகைத்தது **கம்ஸனல்லன்** ; கம்சனுட் புகுந்த அச்சமே, அகந்தையே, ஆசைவெறியே. அனைவருள்ளும் மனச்

சாட்சியுள்ளது; அந்தராத்மன் உள்ளான். இந்த உண்மையின்மேற் படர்ந்த அறியாமையே தீமைக்குக் காரணம். மனத்திற் படர்ந்த தாமத விருளும், ராஜஸச் செருக்கும், ஆசையாணவ மாசுகளும் மனிதனை அரக்கனாக்குகின்றன. அகப்பகை வென்றாற் புறப்பகை யில்லை. அகப்பகையை வெல்ல வேண்டுமானால் மனச்சாட்சியின் கட்டளைப்படி தைரியமாக நடக்கவேண்டும்; அன்பை வளர்க்க வேண்டும். ஒருவன் நம்மைப் பகைத்தால், ஏன் பகைக்கிறான் என்று அறிய வேண்டும். குற்றம் அவன்மேலிருந்தால் நாமும் பகைக்காமல் 'ஐயோ, இப்பகையால் இவன் வாழ்க்கை கெடுகிறதே!' என்றிரங்கி, மருத்துவன் புண்ணாறுப்பது போலும், முள்ளெடுப்பது போலும் மறக்கருணை கொண்டு பழுதறுத்து நலம்புரியவேண்டும். 'உண்மை யின்னது' என்று சொல்ல வேண்டும். எதிரியைப் பகைக்காமல், 'அப்பனே, நீ என் நண்பன்; உனது நலத்திற்காகவே சொல்லுகிறேன்: உன்னிடம் இன்ன குற்றம் உள்ளது; திருத்திக்கொள்!' என்று சொல்ல வேண்டும். அவன் அகங்கரித்துத் தூற்றினால், நாமும் அச் சிறுமையைச் செய்யாமல், பெருந்தன்மையாயிருக்கவேண்டும். அவனுக்கு மீண்டும்மீண்டும் மரியாதையாகப் புத்தி சொல்லவேண்டும். கேளாது தீங்கு செய்தால், நாமும் தீங்கு செய்யாது மனப்பொறுமையுடனிருந்து உண்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். முடிவில் நியாயமுணர்ந்து, பகையொழிந்து, எதிரி இணங்கியே தீருவான். மனச்சாட்சி அவனைச் சும்மா விடாது. மாற்றான் பகையை மாற்றும் பொறுமை.

**பொறுமை புலிவெல்லும் புன்னகையால்; வாணப்**
**பொரிபோற் சினங்கரிந்து போம்.** 3

எத்துணை யிடர்கள்வரினும் பொறுமை தனது அமைதியான புன்னகையால் வெல்லும். ஆத்திரத்துடன் பகைக்கும் சினம் ஆகாசவாணப் பொரி போலப் 'புஸ்'ஸென்று கிளம்பிக் கரிந்து விழுந்து போகும். ஆணவச்செருக்கின் ஆத்திரக் கொதிப் பெலாம வாணம்போலே வான்சென் றுதிரும். பொறுமையின் புன்னகையே அறிவின் மணிச்சுடராகும். உலகவாழ்வு முக்குணப் புதர். அதில் நிதானமாகப் பார்த்து அடியெடுத்து வைத்துச் செல்லவேண்டும்; நிறைமுறை யறிந்து நன்னெறிபற்றிச் செல்லவேண்டும். எத்தனை யிடர்கள் வந்தாலும் 'எல்லாம் முக்குணமாயத்தின் முரண்கள்' என்றெண்ணி, அழிவற்ற ஆன்மாவில் உறுதியாக நிலைத்துப் பொறுமையுடன் முன்னேற வேண்டும். கார் மேகங்கள் மூடினும் சூரியன் அஞ்சியோடுவதில்லை; மேகங்கள் ஓடிப்போம். சூரியன் எப்போதும்போலப் புன்னகை புரிவான். இன்னலும் இடரும் சலித்து மறையும். பொறுமையின் புன்னகைமுன் இவையெல்லாம் விளக்கைப் பொருதும் விட்டில்கள் போலாம். தருமன் பொறுமை வெற்றிமுடி சூடியது. துரியோதனன் பொறுமை துள்ளிக் குதித்து, வஞ்சனை செய்து, பொருது மடிந்தது. யோகிக்கு அளவற்ற பொறுமை வேண்டும். வைராக்கியம், சித்தவுறுதி, மனத்திட்பம்—இவற்றிற்குப் பொறுமையே தாயகமாகும். பொறுமையின் பக்கமே அறமகள் இருப்பாள்.

**கனகன்சேய் போன்ற கருத்துறுதி யோடு**
**வினைத்தீமை யைப்பொறுத்து வெல்.** 4

**இரணியன்** *(கனகன்) மகனை* **பிரகலாதன்** *போல மனத்திற் கடவுளுறுதியுடன் மாற்றான் செயல்களி லுள்ள தீமையை ஆத்ம பலத்தினால் பொறுத்து வெல்லுவாயாக!*

*'ஆண்டவனுள்ளான், அன்பரைக் கைவிடான், அச்சமில்லை,' என்ற கருத்துறுதியே அடியார் வலிமை. மனிதன் பகைவனல்லன்; மனப்பேயே பகை. அதை அறப் போரில் வெல்க! வாய்மையே வச்சிராயுதம்; அன்பே அம்பு; பொறுமையே வில்; ஆத்மசக்தியே பீரங்கியினும் பெரிய படைக் கலன். இவற்றைக்கொண்டே அன்று* **பிரகலாதனும்,** *இன்று* **மகாத்மா காந்தியும்** *அசுரமாயத்தை வென்றனர். ஒவ்வொரு நூற்றாண்டிலும்* **இரணியன்** *வருகிறான். மனித சமுதாயத்திற் புகுந்த ஆணவத்திமிர்தான்* **இரணியாசுரன்.** *நாத்திகச் செருக்குற்ற* **இரணியன் நாரா யணனை** *நம்பிய தன் மகனைக் கொடுமை செய்தான்; அவனுக்கு நஞ்சிட்டான்; அவனை யானைக்காலில் வைத்திடறினான்; மலையினின்று உருட்டினான். அத் தனை யிடர்களும் யாக்கைக்கன்றி உள்ளேயிருக்கும் அந்தர்யாமிக்கன்று; 'அந்த அந்தர்யாமியே* **உண்மை—நான்'** *என்னும் உணர்வுகொண்டு பொறுத்தான்* **பிரகலாதன்.** *ஆணவச் சூலம் யாக்கையைக் குத்தும்; ஆன்மாமுன்னே அது மழுங்கிப்போகும். உலகப் போர்களையெல்லாம் ஆராய்ந்தால், ஒருவன் மனத் திலுள்ள '***நான்***' என்னும் ஆணவம், இன்னொருவர் மனத்திலுள்ள '***நான்***' என்னும் ஆணவத்துடன் கட்சிகட்டி வாள்வீசுவதேயாகும். 'குத்துவேன்,*

சொல்லுவேன்' என்பதெல்லாம் மனவகந்தை மற்றொருடலைப்பார்த்துச் சொல்லுவதே. குணதொந்த விகாரங்களாலான காரிய சரீரத்தைத் தாண்டி, காரண சரீரத்திலிருக்கும் சுத்தான்ம வுணர்வுடன் வாழ்ந்தால் மனப்பகை, சினப்பகை யெல்லாம் மாயமாய்ப் போகும். சுத்தோஹம் என்னும் அறிவை நட்டு, அன்புக்கயிற்றால் அலைமனத்தைக் கடைந்தால் இன்ப முதிக்கும். ஆத்ம விசாரமே அலைமனங் கடைதல்; ஆத்மாவின் அமரத்தன்மையில் உறுதியுண்டானால், ஆயிரம் இரணியக் கொடுங்கோலும் யாதும் செய்யமுடியாது. நாத்திகக் கொழுப்பும், அகந்தைத் திமிரும், ஆத்துமசக்திமுன் செயலற்றொழியும்.

**அப்பரைப் போன்றவுள் ளன்புப் பொறுமைக்குத்**
**தெப்பமாங் கல்லுமெனத் தேர்: 5**

அடியார்களில் பெரியாராகிய அப்பர் போன்று கடவுளன்பிற் செழித்த பொறுமை கொண்டவருக்குக் கல்லும் தெப்பமாகும் என்று அறிவாயாக!

உலக வாழ்க்கை முக்குணத் திரைகள் பொருதும் கருங்கடல். அதில், தெய்வசக்திக்கும் அசுரமாயத்திற்கும் போர் நடந்துகொண்டே யிருக்கிறது. ஒருபுறம் இன்பமெழுந்தால் மறுபுறம் துன்பமெழுகிறது; ஒருபுறம் கடிமணம், மறுபுறம் அடிதடி. பாடையொருபுறம், பல்லக்கொருபுறம். கன்மக் கல்லைக்கட்டி மனிதனை இந்த இன்பதுன்பத் திரைகளில் விடுத்துள்ளது உலகமாயை. மனத்தைக் காமியத்தில் வைத்தால் அந்தக்கல் நம்மைக் கடலில் ஆழ்த்திவிடும். நமது காமத்தையெல்லாம் கடவுட் காதலாக மாற்றி, இறைவனையே நம்பி அன்புசெய்து,

அவனது திருநாமத்தையே ஓதிக்கொண்டிருந்தால், துன்பக்கடலில் அழுந்தாது, திருவருளாற் கரை சேரலாம். அருளை நம்பினால் கன்மக்கல்லும் தோணி போலாகும். அருளுணர்வும், அடைக்கலமும், அன்பும், பொறுமையுமே அப்பருக்கு நீற்றறையை மாலை மதியம் போலக் குளிர்வித்தன; நஞ்சை அமுதாக்கின; மதவெறி யானையை வணங்கச் செய்தன; கல்லைத் தெப்பமாக்கின; முடிவில் பகைவனையும் அன்பனாக்கின. அன்புப்பொறுமை அருளால் வெல்லும்.

ஐந்தாவது, அன்பியல் முற்றிற்று.

# சா. நடை யியல்

அறிவு - அன்பின் விளக்கம் நன்னடை; நடை போல நலம். கல்விக்கறிகுறி நல்லொழுக்கம். தூய்மை, வாய்மை, அடக்கம், அன்பு, தன்னறிவு, சமநோக்கம், பொதுநலம், நன்றி, நாண், நேர்மை, சீர்மை—இவை நல்லொழுக்கத்தின்பாற் படும். யோகியின் உயிர் நல்லொழுக்கம். நல்லொழுக்கத்தின் இலக்கணம், அதைப் பயிலும் முறை, ஆகிய இரண்டையும் இவ்வியல் விளக்கும் :

## 1. ஒழுக்கம்

முகத்தில் விளங்கும் முறையான வாழ்வால்
அகத்தொளிரு மான்ம வழகு, 1

முறையான நல்லொழுக்க வாழ்வினுல் உள்ளத்தில் ஒளிரும் ஆத்மப் பிரகாசத்தின் அழகு ஒருவனுடைய முகத்தில் விளங்கும்.

அகத்தினழகு முகத்தில் விளங்கும். மனங்கோண முகங்கோணும்; மனம் மலர முகம் மலரும். காமம் வெகுளி கலக்கமற்ற தூய மனம் மாசற்ற கண்ணுடியைப் போன்றதாம். அதனூடு ஆன்ம வொளி நிலவும். அவ்வொளிக்கதிரே, 'தேஜஸ், ஓஜஸ், வர்ச்சஸ், எழில், காந்தி (Personal magnetism)' எனப் படுவது. ஆள் அண்டங் காக்கையா யிருந்தாலும் இந்த ஆத்ம தேஜஸால் ஒருவன் புதிய அழகும், பொலிவும் பெறுவான். வெறுந் தோலழகிற்கும் இதற்கும் வேற்றுமையுண்டு. சாயம் பூசி, பொய்ப்பல்

நகைத்து, அணிமணி மிளிறுக்கும் மேலழகு போலி யழகே. அணிமணியின்றி விண்மணி யொளிர்வது போல, உள்ளழகு மேலழகின்றியே பொலியும். ஒரு மின்சார சக்தியே ஒலிப்படம், மின்விளக்கு, மின்வண்டி, டிராம், மின்மணி, மின் பொறிகள் அனைத்தையும் இயக்குவதுபோல, ஓர் ஆத்ம சக்தியே உடல், உயிர், மனம் அனைத்தையும் இயக்கும். உள்ளாட வுடலாடும். இயற்கை யுடம்பை இயக்குவ தான்மா. சிவமின்றேற் சவம், குற்றமறுத்துக் குணக் கடலான நன்னடையாளர் முகத்தில் இந்த ஆத்ம சைதன்யம் புன்னகை வீசும். அறிவிற் புலமை, நெஞ்சில் அன்பு, நடையில் தூய்மை எல்லாம் இந்த ஆத்ம சைதன்யத்தால் வருவன. நன்னடையால் இச் சைதன்ய வொளி பெற்றவரிடம் ஒரு வசீகரமான காந்த சக்தி வீசும். அது சீவனில் உள்ள சிவம்.

> தெய்வ மிகழார்க்குத் தேவரெதிர் பேசார்க்குப்
> பொய்புகலார்க் காகும் புகழ். 2

தெய்வ நிந்தனை செய்யாமல், தெய்வத் தன்மை யுள்ள பெரியாரை எதிர்த்து வாதாடாமல், பொய் சொல்லாமல் நடந்தால் ஒருவனுக்குப் புகழாகும்.

கடவுளுறுதி, கடவுட்பெரியார் பரப்பும் உண்மையொளி, உண்மையான நடத்தை—இந்த மூன்றினாலேதான் உலகில் சன்மார்க்கம் பரவும். கடவுளை மறுப்பது தன்னையே மறுப்பதாகும். ஒவ் வொருவர் உள்ளத்தும் இருந்து இயற்கையுடலை நடத்துவோன் சுத்தான்மக் கடவுளே. அந்த ஆன்மாவின்றிப் புலன்கள் உணரா; மனம் நினையாது; மூளை அறியாது. அதுவே அறிவா யிருப்பது. அதை மறுத்தல் அறிவை மறுத்தலாம்.

ஒவ்வொருவருள்ளும் 'நான்' என்னும் தத்துவம் அதுவே. அதைப் பழித்தல் தன்னையே பழித்தலாகும். புலன்களையும் மனத்தையும் கடந்தொளிரும் அப் பொருளைக் கேவலம் சொற்போரால் அறியொணாது. சத்தம் போட்டுச் சாமி வராது; சத்தமடங்கினால் சாமி விளங்கும். உலகும் உயிரும் காரியம்; கடவுள் காரணம். இடம், காலம், கருவி, கற்பனை, தோற்றங்களெல்லாம் மாறி மறையினும், அவன் என்றும் தானேதானா யிருப்பான். கடவுளுறுதியாலேதான் உலகில் நீதி நிலைநிற்கும். தெய்வ நிந்தை அகந்தையாம். உள்ள பொருளை உள்ளத் துணர்ந்தோர், அதன் மயமென்றே யுலகினைக் காண்போர், அச்சம் மயக்கம் ஆணவ மற்றோர், பொய் பொறாமை புன்மைகளற்றோர், இனியர், தூயர், எல்லையில் அன்புளார்; அறிவும் அருளும், அமைதியும் தீரமும் செறிந்த நல்லோர் தேவ ராவர். அத்தகைய தெய்வப் பெரியார் வணக்கத்திற் குரியார். அவர் சொல்வது மந்திரம். எதிர்பேசி வாதாடாமல், அவர் உபதேசப்படி நடந்தால் நன்மை யுண்டு. இந்நன்னடைக்குப் பொய்யா வொழுக்கமே உயிர் போன்றது. தெய்வம் போற்றித் தேவரைப் பணிந்து, பொய்யை விலக்கிப் புகழ்பெற வாழ்க!

தன்னடை போற்றுதான் சான்றாண்மை பேசுங்கால்
மின்னைக் கரியெழுது மே. 3

சான்றாண்மை என்றால் மாண்பு, பொறுமை, பெருந்தன்மை, பெரியார் தன்மை, ஞானம். தனது ஒழுக்கத்தைக் காவாதவன், 'நான் பெரியவன்' என்று மார்தட்டிக்கொண்டு, பெரியாரியல்பான அறிவை விளக்கமுடியுமா? அப்படி அவன் விளக்க

முடியுமானால் சுடரோங்கும் மின்னலைக் கரியும் எழுத முடியும். கரி கரிக்கோடுதான் போடும்; மின்னலை எழுத முடியாது.

அன்னம்போலே ஆந்தை தவழுமா? காக்கை குயிலாகுமா? மின்மினி விண்மதியை வெல்லுமா? புன்னடை நன்னெறி காட்டுமா? ஒழுக்கம் போற்றி னால் ஒழுக்கமே சாற்றும். பேச்சு, பூச்சுக்களின்றி நல்லொழுக்கம் இயல்பாக விளங்கும்.

குற்ற மிரங்கிக் குறையற் றெழுந்திருமின்;
அற்றே நடையோங்கு மாறு. 4

ஒவ்வொரு நாளும் இரவில் படுக்குமுன்பு, அன்று செய்த குற்றத்தை நினைத்து வருந்தி, மனச் சாட்சியான தரும தேவதையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டும். காலையில், 'அக்குற்றத்தைச் செய்வதில்லை' என்ற உறுதியுடன் மாசற்றவனாக எழுந்திருக்க வேண்டும். நன்னடை வளர்க்கும் வழி யிதுவே. மனிதன் சுரங்கக் கட்டி. அதை மாற்று யர்ந்த பொன்னாக்க வேண்டும். அதற்கு அதை நல் லொழுக்கம் என்னும் உலையில் உருக்கியுருக்கித் தூய் மையாக்க வேண்டும். இந்த எண்சாண் மனையில் எத்தனையோ குறைகளும், பிணிகளும் குடிபுகுந்துள் ளன. தன்னலம், வஞ்சனை, ஆசை, ஆணவம், அழுக் காறு, பொய், பகை, காமக்குரோதாதிகள் முதலிய ஆயிரக்கணக்கான குற்றங் குறைகள் நிறைந்த இந்த மானிடவாழ்வை நாடோறும் மாசறுக்கவேண்டும். ஒழுக்கமென்னும் உளியாற் செதுக்கியே உயிரோவி யத்தை ஒளிபெறப் பொலிவிக்கவேண்டும். நாட் குறிப்புக்கள் எழுதிவருக! கண் விழித்தெழுந்தது முதல் கண் மூடியுறங்குமட்டும் செய்தவை, நினைத்

தவை, சொன்னவைகளில் உள்ள நன்மை தீமைகளை யெல்லாம் எழுதிவருக! 'இன்று, இன்னகுற்றம் செய்து விட்டோம். ஏன் செய்தோம்? சை, நாளை அப்படிச் செய்யக்கூடாது' என்று உறுதிகொள்ள வேண்டும். இன்று ஒருவர்மேல் பொய் கட்டிவிட்டிருந்தால், இரவில் வருந்தி, மறுநாள் யார்மேல் பொய் கட்டிவிட்டோமோ அவரிடம் சென்று, 'நேற்று நான் இன்னபிழை செய்துவிட்டேன்; மன்னிக்கவேண்டும்; இனிக் கவனமாக நடந்துகொள்ளுகிறேன்' என்று தைரியமாகச் சொல்லவேண்டும். அதனால் இருவருக்கும் நட்பாகும்; குற்றங் குறையும். மறைத்த குற்றம் மனத்திற் குடையும். ஒப்புக்கொண்டவன் தப்பிக்கொண்டவன்.

**காலையி லாற்றுங் கடமை வழுவார்க்கு**
**மாலையி லுண்டாம் மகிழ்வு.** 5

காலையில் எழுந்து தமக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறாதவர்கள், மாலையில் மகிழ்வெய்துவார்கள்.

நல்ல காலை, நல்ல மாலை. வாழ்விற்கேற்ற வனப்பு; செய்கைக்கேற்ற சிறப்பு. மனமாகிய செப்புப்பாத்திரத்தைக் களிம்புபிடிக்காமல் தினம் தூய வொழுக்கங்களால் தேய்த்துக்கொண்டே யிருக்க வேண்டும். காலை, நான்கு மணிக்கு எழுந்து பழக வேண்டும். பல்விளக்கிச் சிறிது தியானித்து, வெளியே கொஞ்சநேரம் காற்றுட உலாவிய பிறகு, யோகாசனங்களும் பிராணயாமமும் செய்யலாம்; அல்லது, வேறு தேகப்பயிற்சிகள் செய்யலாம். அதன்பின் நன்றாகத் தேய்த்துக்குளித்து, புதிய ஆடையணிந்து தனியாக அரைமணிநேரம் தியானம் செய்ய

லாம். அதன்பிறகு, வாழ்வைப் புனிதமாக்கும் அருள் வாக்குகளைப் படித்து, நாள்முழுதும் அதே சிந்தனையாயிருந்து அலுவல்களைப் பார்க்கலாம். காலையிற் பசித்தால் எட்டுமணிக்கு உண்ணலாம்; பிறகு அவரவர் தொழிலை நிம்மதியாகப் பார்க்கலாம். இதே மாதிரி மாலை ஐந்துமணிக்குமேல் உலாவிவந்து உடம்பைச் சுத்தம் செய்துகொண்டு தியானித்து உண்ட பிறகு, பெரியார் அருள்வாக்குகளைப் படிக்கலாம்; அருட்பாடல்களைப் பாடலாம். மனத்திற்கு நல்ல வேலை கொடுத்துக்கொண்டே யிருந்தால்தான் அது வசப்படும். காலையில் ஒருவன் மனம் எப்படியுள்ளதோ அப்படியே நாள்முழுதும் இருக்கும்: காலையில் ஒரு நல்ல காரியத்தைச் சுறுசுறுப்பாகத் தொடங்கினல் நாள்முழுதும் அதைச்செய்யும் ஏகாக்கிரம் உண்டாகும். காலையில் முழுங்காலைக் கட்டிக் கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், நாள் முழுதும் மனம் கவலைசுமக்கும். ஆதலால் காலைக் கடன்களைக் கருத்துடன் செய்க!

---

## 2. தீயன விலக்கல்

முரடர் துணையு முரண்பாடாஞ் சான்று
கரடியீ யோட்டுங் கதை. 1

பண்படாத முரடர் செய்யும் உதவியும் முரணான பயனை விளைவிக்கும். அதற்கு அத்தாட்சி கரடி ஈயோட்டிய கதை: ஒரு கிழக்கரடிக்கும் ஒரு தோட்டக்காரனுக்கும் சிநேகம் ஏற்பட்டது. கரடி தானே உணவைத் தேடிக்கொண்டது; தோட்டங் காத்தது; சொன்னபடி கேட்டது. ஒருநாள் காவற்காரன்

ஆழ்ந்து உறங்கினன். அவன்மேல் ஈக்கள் வந்து மொய்த்தன. கரடி ஈக்களை ஓட்டி ஓட்டிப் பார்த்தது. அவை அங்குமிங்கும் பறந்து, மீண்டும் காவற்காரன் மூக்கிலும், முகத்திலும் வந்து மொய்த்தன. கரடி கையினல் 'பட் பட்'டென்று ஈயை யோட்டியது. அடியெல்லாம் ஆள்மேலே பட்டது. ஈக்கள் தப்பியோடி மீண்டும் மூக்கில்வந்து மொய்த்தன. கரடி கோபம் பொங்கி, ஒரு பெரிய கல்லையெடுத்து ஈக்கள்மேல் ஓங்கியடித்தது. "ஐயோ!' என்றலறியெழுந்தான் தோட்டக்காரன். மூக்கு நசுங்கிப் போயிற்று. மண்டை உடைந்து இரத்தங் கொட்டியது. "ஏனிப்படி யென் மண்டையையுடைத்தாய்? துஷ்டா!" என்ருன் அம்மனிதன். "நான் ஈயைத்தானே அடித்தேன்" என்றது கரடி. இதுதான் மூரடர் நட்பால் விளையும் கேடு. குணமறிந்து கூடுக!

பேரைக் கெடுத்துப் பிணிசேர்க்கும் வேசைவழிச்
சேராரைச் சேருந் திரு. 2

வேசைவழிச் சேர்தலாவது, விபசாரஞ் செய்தல். அதனல் பேர்கெடும்; பழிவரும். விபசாரம் பிணிசேர்க்கும். கனவிலும் வேசைவழி மனஞ் சேராத தூயரை எல்லாத் திருவும் வந்து பொருந்தும். 'திரு' என்ருல் இலக்குமி, அழகு, செல்வம், தெய்வத் தன்மை, மேன்மை. வேசைவழிபற்றி யழிவோனை, அறிவு, செல்வம், பலம், பேர், புகழ், முகக்களை எல்லாம் நீங்கும். ஒருவன் தோய்ந்த தோளில் இன்னெருவன் தோய்வது எச்சிலுண்பதற்குச் சமானமாகும். பயங்கரமான வெட்டை, வெள்ளை, மேகம், சூலை, கட்டி, நீரிழிவு, சோகை முதலிய கணக்கற்ற நோய்கள் இந்த எச்சில் வியாபாரத்தால் வருவன.

ஒரு நொடி மதிமயக்கத்தால் மனிதன் எமன் வாயில் விழுகிறான். ஓர் அடிசறுக்கி, புலி நரி பாம்புகள் சீறும் இருட்கணவாயில் விழுகிறான் காமப்பித்தன். காமவுணர்ச்சி 16 வயதில் இயல்பாக உண்டாகும். அக்காலம், மனத்தைத் தூய பிரமசரிய வொழுக்கத்துடன் அத்யாத்மக் கல்வியிலும், கலைப் பயிற்சியிலும் செலுத்துவது நலம். 22 வயதிற்கு மேல் சுமார் 16 வயதுள்ள நங்கையைக் காதலித்து மணந்து ஒழுங்கான இல்லறம் நடத்தலாம். ஆண்பெண் இருவரும் உயிர்போலக் கற்பைக் காக்கவேண்டும். கற்புடன் கூடியதே உண்மையான காதலாம். விபசாரம் இயற்கைக்குச் செய்யும் அபசாரம்.

வேரோ டொழிக விலைவாழ்வு, வீட்டறத்திற்
சீரோங்கு பெண்டிர் சிறந்து. 3

சீர்மையோங்கும் பெண்கள் இல்லறத்திற் சிறந்து வாழ்க! அதனால், விலைவாழ்வு வேரோடொழிக! கெடுப்பாரிருந்தால் கெடுவாருண்டு. பெண்டிரெல்லாம் ஒழுங்கான இல்லறத்திற் கற்புடன் வாழ்ந்தால் வேசைத் தொழிலுக்கு இடமில்லை. தக்க வயதில் மணம்புரியாமை, மனமற்ற கட்டாயத் தாலி, ஈடற்ற இணைப்பு, கட்டற்ற காமவெறி, வறுமை, மனைவி இணங்காமை, கணவன் வீரியவலுவற்றிருத்தல், அலித்தன்மை, கோபம், தீய பழக்கம், கெட்ட சிநேகிதம், பெருந்தீனி, ஆசார அனுட்டானங்களின்றி மனம் கண்டபடி அலைதல், காம வுணர்ச்சியைப் பெருக்கும் காட்சிகள், மதியைக் கெடுக்கும் நூல்களைப் படித்தல் முதலியவற்றால் ஆண் பெண் இருவர் புத்தியும் மயங்கி விபசாரத்திற்கு இடமாகிறது. வேசைச்சுகம், விடச்சுகம் ; இனிக்கும் நஞ்சு ;

வேசை இழுக்கும் முதலை. கொஞ்சும் பாம்பு கொத்தும். வேசை விலைமகள், தாசி என்ற பெயரே இல்லாதொழிக! கோயில், சாமி, கலை, பாட்டு இவற்றின் பெயராலும் விலைமாதர் வேண்டுவதில்லை. பொட்டுக் கட்டல் ஒழிக! முற்காலம் சிறந்த நோக்கத்துடன் ஏற்பட்ட தேவதாசி நியமனம் இப்போது நமது சமுதாயத்தின் அழிவிற்கே வழியானது. தேவதாசிகள், வேசைகள் எல்லாரும் மணம்புரிந்து ஒரு கணவருடன் இல்லறத்தில் வாழ்க. விலைவாழ்வொழிந்து குலவாழ்வோங்குக!

வட்டாஞ் சகுனி வலைப்பட்டு மன்னவர்கள்
கெட்டாரம் மாயம் கெடு. 4

'வட்டு' என்பது சூதாட்டம். அது சகுனிவலை. அதில் விழுந்து பல அரசர் நாடு நகரிழந்து கெட்டனர். சூதாட்டம் ஒரு மாயம். அதை அடியோடு ஒழிக்க வேண்டும்.

மனித வாழ்வு எவ்வளவு விலை யுயர்ந்தது! ஒரு நொடி வீணுக்க எப்படித்தான் மனம் வருகிறதோ! மனமாசகன்று சுத்த நிலை பெறுவதன்றோ மனித வாழ்வின் பயன்; காலத்தை வீணுக்கல் வாழ்வைப் பணயம் வைத்துச் சூதாடலுக்குச் சமானமாகும். வம்பாடுவதும் வாய்ச் சூதாகும். பட்டை விரித்துப் பன்றிக்குப் போர்த்தலாமா? விலையுயர்ந்த காலத்தைச் சூதாட்டத்திற் செலவிடலாமா? மாயை எங்கும் வஞ்ச வலை விரித்துள்ளது. அதிற் சிக்காமல் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டும். சீட்டு, சூது, குதிரைப் பந்தயம் முதலிய எத்தனையோ வகையாகச் சூதாட்டம் நடக்கிறது. தருவது போலக் காட்டி இவை உள்ளதையும் பிடுங்கும்.

கவலை, துயர், குடி, அடிதடி, விபசாரம் முதலிய பல தீமைகள் சூதினால் உண்டாகும். நளனும், தருமனும் சூதினாற் கெட்டதை நினைக! சூதிற் பட்டோர் தூண்டில் மீன்போ லாவர். நல்லவர் கூட்டம், நன்னூற் பயிற்சி, பொதுநலப் பணிகள், புண்ணியச் செயல்களால் சூதாட்டங்களுக்கே நேர மில்லாமற் செய்க!

நடையை மதியை நலத்தைப் புகழைக்
குடியைக் கெடுக்குங் குடி. 5

கட் குடியானது ஒருவனுடைய ஒழுக்கத்தையும், மதியையும், நலத்தையும், புகழையும், குடித்தனத்தையும் கெடுக்கும்.

மனித சமுதாயத்திற் புகுந்த மற்றொரு சாத்தான் கட்குடி. உண்ண மரக்கறி யுணவும், குடிக்க நன்னீர், மோர், பால், பழ ரசங்களும் உள்ளன. இவற்றை விட்டு, மதி மயக்கி, ஆளைப் பொட்டலாக்கி அவமானப் படுத்தும் கள், விஸ்கி, பிராந்தி, கஞ்சா, அபின், சுருட்டு முதலிய பீடைகளை மனிதன் ஏன் தொடுகிறான்? நாளெல்லாம் பாடுபட்டு நாலணை ஈட்டும் ஏழைகளையும் இக் குடிச் சனியன் பிடித்து வாட்டி வறுமைக் குழியில் தள்ளுகிறதே! குடிகாரன் வீட்டில் ஓயாத சண்டை, சச்சரவு, வறுமை, வெறுமை, பொய், அடிதடி, வம்பு, வழக்கு......ஆ! மனம் வெடிக்கிறது! சிறிய குடில்; ஏழை மனைவி ‘பசி பசி’ யென் றலறும் நாலு பிள்ளைகளுடன் கணவனை எதிர்பார்த்து நிற்பாள். அவன் கூலிப் பணத்தைக் கள்ளுக் கடையில் உதறிவிட்டு, வெறிகொண்டு வந்து, கலகஞ் செய்து மனைவி மக்களை மிரட்டி அடிப்பான். அக் காட்சியை

எண்ணினல் இரத்தக் கண்ணீர் வருகிறது. பேயி னும், வெறி நாயினும் கொடியர் குடியர். பெட்டிச் சாராயம் உண்ணும் பணக்காரரும் நாளடைவில் மன வலியும் உடல் வலியும் ஆயுளுந் தேய்ந்து, கை சேர்ந்து கெடுவர். குடி மயக்கத்தால் நடக்கும் கொலை, களவு, விபசாரம், வீண் வழக்குகளுக்குக் கணக்கில்லை. தென்னஞ்சாற்றைப் புளிக்க வைத்துக் கள்ளாக்காமல் அப்படியே வெல்லஞ் செய்தால் குடியை யொழிக்கலாம். காங்கிரஸ் ஆட்சி செய்த மகத்தான புண்ணியம் மதுவிலக்கு. இப்புண்ணிய நாட்டில் எந்த மூலையிலும், கள்வாடை யில்லாது அடியோடு கள்ளரக்கன் ஒழிக!

---

## 3. புன்மை விலக்கல்

கோள்பொய் புகன்று குளிரவோ? வுன்னெஞ்சை
வாள்கொண் டறுக்குமனச் சான்று. 1

கோளும், பொய்யுஞ் சொல்லி நீ மகிழ்வும், ஆறுத லும் அடைவாயோ? முடியாது. உன்னெஞ்சை மனச்சாட்சி, 'ஏன் பிறர்வருந்தக் கோள், பொய் சொன்னாய்? என்று வாள்கொண்டு அறுக்கும்.

கோளும், பொய்யும் சொல்லிப் பெற்ற பொருள் நெருப்புக்கட்டிபோல நெஞ்சைச் சுடும்; கோட் சொல்லிக்கு உள்ளே கொறடாப்பூசை. பழிசுமத்து வோன் பழி சுமப்பான். பிறரை நிந்திக்கும் சிறுமதி யாளரை நீங்குக! நிந்தனை கேளேல்! பொய்யால் வாழ்ந்தாரில்லை; நிஜத்தால் வீழ்ந்தாரில்லை. பொய், கோள், வஞ்சனை, பொல்லாங்குகளை மனச்சாட்சி பலமாகக் கண்டிக்கும். குற்றமுள்ளவன் நெஞ்சை

மனச்சாட்சி குடையும். அசத்தியனை மனச்சாட்சி இரம்பம்போட் டறுக்கும். வாய்ப்பொய் மன வேதனை. மனச்சாட்சிக்கு அஞ்சி நடக்கவேண்டும்; அதுவே நம்முள்ளேயுள்ள தரும தேவதை.

காதலரை நாயின் கதைகட்டிச் சீரழிக்கும்
பாதகரைப் பார்ப்ப தொழி. 2

இரண்டு காதலர் இன்பமாக இல்லறம் நடத்தி வந்தனர். ஒரு பொறாமைக்காரன் அவர்களைப் பிரிக்கத் தலைப்பட்டான்; கணவன் வெளியே போயிருந்த சமயம் அந்த வீட்டிற்குத் துறவிவேடம் பூண்டு வந்தான். இல்லாள் துறவியை உபசரித்தாள். அவன், "அம்மா, தாங்கள் அருந்ததி; சீரும் செல்வமும், உயர்குலச் சிறப்பும் வாய்ந்த உத்தமி. ஐயோ! முற்பிறப்பில் உப்புக் குறவனாயிருந்தவனைக் கலியாணம் செய்துகொண்டீர்களே!" என்று மாய்மாலம் செய்து அழுதான். "என் கணவன் உப்புக்குறவன் என்று எப்படி யறிவது?" என்று கேட்டாள் அப் பேதை. "இரவில் அவன் காலை மெல்ல நக்கிப் பாருங்கள்; உப்பாயிருக்கும்" என்று சொன்னான்; பிறகு, அந்த அம்மாளின் கணவனிடம் சென்று, "ஐயா, தாங்கள் பரமசாது; தேவகுலம்; அந்தோ! முற்பிறப்பில் எச்சிலை யுண்டு திரிந்த ஒரு நாயை மனைவியாகக் கொண்டீர்களே!" என்றான். "அவள் நாயென்று எப்படித் தெரியும்?" என்று வினவினான் கணவன். "இரவில் தங்கள் காலை நக்குவாள் பாருங்கள்!" என்று சொல்லி மறைந்தான் அந்தப் போலித் துறவி. காதலர் உள்ளம் வேறுபட்டது. நள்ளிரவு; மனைவி மெல்லக் கணவன் காலை நக்கினாள். "சீசீ, நாயே!" என்று உதைத்தான் கணவன். "சீசீ, உப்புக்

குறவா!" என்று சினந்தாள் மனைவி. வீடு இரண்டானது; குடித்தனம் துண்டானது; குண்டுணிக்குக் கொண்டாட்டமானது. சில நாட்கள் சென்று ஒரு பெரியார் அவர் வீட்டிற்கு வந்து காதலர் மனவேறுபாட்டின் காரணத்தை யறிந்தார். "ஐயே, இது ஒரு பொறாமைக்காரன் செய்த திரிசமம். வேர்த்த கால் உப்பாகத்தானே யிருக்கும். உங்கள் மனத்தைக் கலைத்த இவனை யாரெனப் பாருங்கள்!" என்று அந்தப் போலித் துறவியைக் கைப்பற்றிக் காவியுடையை நீக்கினார். ஆள்யார்? தன்மேற் பொறாமை கொண்ட பகைவனே! "இனி இக்கயவன் சொல்லை நம்பவேண்டா" என்று பெரியார் காதலர் இருவரையும் சேர்ந்து வாழச் செய்தார். பொல்லார் பிரிப்பர்; நல்லார் கூட்டுவர். குலத்தைப் பிரிக்கும் கொடியரை நம்பேல்!

**தற்பெருமைத் தம்பட்டந் தன்னுள்ளே லொடலொட்டை;**
**அற்பமதி யாணவமுட் டை.** 3

தன் பெருமையை ஒலிக்கும் தம்பட்டம் உள்ளே வெறுமை, லொடலொட்டை. அற்பத்தனமான காரியங்களைச் செய்யும் சிறுமதி ஆணவச் சரக்கு நிறைந்த வீண்முட்டை.

உரத்த சத்தம் உள்ளே காலி; இதுவே தம்பட்டத்தின் இயல்பு. தற்பெருமை பேசுவோன் தனக்கு இல்லாத சிறப்பை இருப்பதாகப் பறையடித்துப் போலிப் புகழ் தேடுகிறான். உள்ளே அவன் வெறுங் குடுக்கை தான். நிறைகுடம் தளும்பாது. தம்மைப் பற்றிச் சான்றோர் புகழார். இலங்கையை யெரித்து வந்த வீர ஹனுமான் சிந்தாமணியைக் கொடுத்து, இராமன் முன் வணங்கி நின்றான்; 'அது செய்தேன், இது

செய்தேன்' என்று தன் வீரத்தைப்பற்றி அவன் பேசவில்லை. அவன் கணையாழி கொடுத்ததைச் சிந்தாமணியே காட்டியது; புரிந்த போரைப் புண்களே காட்டின; இலங்கை யெரிந்ததைப் புகையே காட்டிற்று; மாருதியின் வெற்றியை அவன் வரவே காட்டிற்று. வெற்றுரை பேசும் அற்ப மதியாளன் மூளை ஆணவ மூட்டை. அதை அவிழ்த்தால் அகங்காரச் சரடுகள் தவிர வேறிரா.

**கற்கண்டு போற்பேசிக் காறுது தீவைப்பார்**
**மற்கொண்ட மாற்றிற் கேடு. 4**

முன்னே கற்கண்டுபோல முகமன் பேசிப் பின்னே காறுதபோது கோட்சொல்லிப் பகைத் தீயைப் பற்றவைக்கும் வஞ்சகர், போர்புரியச் சேனை கொண்டு வரும் பகைவரைவிடக் கேடாவர்.

திறந்த பகை எளிது; கரந்த பகை கொடிது. புதர்ப் புலி பொல்லாதது. வாள்போற் பகையினும் கேள்போற் பகை கொடிது. துணைவன் போன்று நடித்துத் தூங்கும்போது கல்லைத் தூக்கிப்போடும் துஷ்டரைக் கண்டால் அஞ்சி யொதுங்குக! நாவிலே தேனும், மனத்திலே நஞ்சுமாயிருக்கும் நயவஞ்ச நரிகள் நம்மைப் புகழ்ந்துரைக்கும்போது கவனமாயிருக்கவேண்டும். அவர் நாத்தேனில் ஈ போல் விழாமல் தப்புக! அவர், 'துரையே, அரசே, தங்களைப்போலுண்டா!' என்று முன்னால் பேசிப் பின்னால், 'இரு பயலே! சொல்லுகிறேன்' என்று பல்லைக் கடித்துத் தூற்றுவர். எதிராளியிடம் போய்த் திரிவைத்துப் பகைத் தீ மூட்டுவர்; காரியமாக ஓரகம் பேசுவர். பச்சைப்புளுகர் இச்சகம் பேசுவர்; விற்

போல் வணங்கிக் கணைபோற் கொல்வர். வஞ்சகர் முகமன் நஞ்சினும் கொடிது.

**எள்ளி யிழித்த லிரத்தல், பிறர்பொருளைக்**
**கொள்ளைகொளல் புல்லர் குணம்.** 5

பிறரை நிந்தித்தல், கேலிசெய்தல், வேலைசெய்யச் சோம்பி யாசகம் வாங்கிப் பிழைத்தல், பிறர் பொருளைத் தந்திரமாகக் கொள்ளையடித்தல்—இவை யெல்லாம் புன்மதியாளரின் தீய குணங்களாம்.

நாம் இடறி விழுந்தால் சிறியார் சிரித்து நிற்பர்; பெரியார் கைகொடுப்பர். பெரியார் பிறர் வருந்தச் சகியார்; இரங்கி இயன்ற துணை செய்வர். அற்பர், 'அப்படித்தான் வேண்டும்' என்று பரிகாசம் செய்வர்; பிறர் குற்றம் பொறுத்துத் திருத்துவர் பெரியார். பிறரைத் தூற்றி ஊர் சிரிக்க வைப்பர் சிறியர்; நல்ல சாதுக்களையும் ஏளனம் செய்வர் சிறியர்: பேசினால் 'வாய் நீள' மென்பர்; மௌனமாக, அடக்கமாக இருந்தால், 'அகங்காரி, உருத்திராட்சப் பூனை' என்பர். பிச்சைப் பிழைப்பு ஒழிக! ஒவ்வொருவரும் உணவிற்காக நான்குமணி நேரமாவது உழைப்பது மதக் கோட்பாடாகவேண்டும். யாசகத் தொழிலை ஓர் அவமானமாக உணரவேண்டும். உலகில் கோடிக்கணக்கான நற்றொழில்கள் உள்ளன; யாதானும் ஒன்றைச் செய்து மானமாக வாழவேண்டும். தேவையளவு ஈட்டும் திறமை வந்தபிறகே இல்லறம் மேற்கொள்ளவேண்டும். காப்பாற்றும் திறமை வந்தபிறகே மக்களைப் பெறவேண்டும். 'வேலை கொடுங்கள்' என்று கேட்கலாம்; வாணிபத்திற்காக முதல் வாங்கலாம். படிக்கும் எளியர் ஆதரவு கேட்கலாம்; நாட்டுப் பொது நலத்திற்காகப் பொதுப்பணம்

வசூலிக்கலாம்; இவையல்லாமல், தொழிலுக்குச் சோம்பிப் பிச்சையெடுத்தல் குற்றமாகும். பிறர் பொருளை மேற்பார்ப்பதுபோலப் பையை நிரப்பல், உதவி செய்வதுபோல வந்து ஒளித்துக்கொண்டு போதல் — எல்லாம் பகற்கொள்ளையாகும். கொள்ளையில் வந்தது கொள்ளையிற் செல்லும். இந்த அதிகாரத்திற் சொல்லியுள்ள குற்றங்களை மனிதன் அறவே யொழிக்கவேண்டும். இன்றேல், சுத்தநிலை பெற முடியாது.

---

## 4. வாய்மை

தூய்மையும் வாய்மையுந் தோழ ரவர்நட்பு
வாய்ந்தவர்வாழ் வின்ப வனம். 1

மனோவாக்குக்காய சுத்தமும், சத்தியமும் ஒருவன் வாழ்விற்கு நல்ல நண்பராம். தூய்மை, வாய்மை என்னும் இரண்டு நல்லாரின் நட்பு வாய்ந்தவரது வாழ்க்கை பேரின்பச் சோலை யாகும்.

தூய்மையினின்று வாய்மை மலரும்; வாய்மை இடர்தவிர்த்து இன்பந் தரும். பொய்ம்மை பல துயர்களுக்கு இடமாம். உண்மையாளர் மனது நிம்மதியாக, சாந்தமாக இருக்கும்: அசத்தியருக்கு அமைதியிராது. செடியிலிருந்து இயல்பாக மலர்கள் பூப்பது போலத் தூயர் உள்ளத்தினின்று வாய்மை மலர்ந்து, அன்புமணம் வீசும்; அருள்தேன் சொரியும். வாய்மையும் தூய்மையும் மனிதவாழ்வைப் பழுதுநீக்கி, பல நற்குணங்களை வளர்த்துப் பேரின்பக் கனிபழுக்கும் கற்பகச் சோலை யாக்கும்.

‘இப்பொய்யே யின்றுரைத்தோ’ மென்று வருந்தியுட
னப்பொய்யை நீக்க லறிவு. 2

வாய்மையை வளர்ப்பதற்கு ஒரு சாதனம் செய்க! ஒரு பொய் பேசினேனுனால், ‘ஏனிந்தப் பொய்யைப் பேசினேன்?’ என்று மனமார வருந்தி, அந்தப் பொய்யை நீக்கல் அறிவுடைமையாகும். உண்மை உரைமணி; பொய், வாய்க் குப்பையாம். சத்திய சாதனம் மிகக் கடினமானது. மனத்திலிருப்பது, வாயில் வந்துவிடும்: மனங்கொதித்தால் வாய் கொதிக்கும்; மனமினித்தால் வாயினிக்கும். மனங் கோண வாய் கோணும்; மனந்தெளிய வாக்குத் தெளியும். அச்சம், பொறாமை, அகந்தை, பொய்ப் புகழ் வேட்கை—இவற்றுல் மனம் பொய்த்து வாய் பொய்க்கிறது. நாட்குறிப்பில் தான் பேசிய பொய் களை எழுதி, இரவில் தனியே அமர்ந்து ஒவ்வொரு பொய்யாக ஆராய்ந்து, ‘ஏன் இதைப் பேசினுய் மனமே? நான்தான் எடுத்தேன், செய்தேன், சொன் னேன் என்றுல் அவமானம்; பிறர் வைவர், மொத்து வர் என்ற அச்சத்தால் அன்றே பொய்யனுனுய்? இப்போது மனச்சாட்சி கொடுக்கும் பூசைக்கு என்ன சொல்வாய்? கடவுளையும், தருமதேவதையான மனச்சாட்சியையும் ஏமாற்றுவாயா? நாளையே உன் குற்றத்தை ஒப்புக்கொள்; இனிப் பொய் சொல் லாதே!’ என்று தன்னைத்தானே கண்டித்துக்கொள் ளுக; ஒரு பொய் சொன்னுல், அன்று உபவாசம் இருந்தேனும் மனத்தூய்மை பெறுக; அதன்பின் உண்மை விரதம் பூணுக!

பயனுள கூறும், பழிபகையைப் போக்கும்
நயனுள நாவி னியல்பு. 3

'நயம்' என்றால் நன்மை, இனிமை, அன்பு, அருள் எனப் பொருளாம். நயமுள்ள நாக்குப் பயனுள்ள சொற்களையே பேசும்; பிறரைப் பழிக்காது; பகை பேசாது.

மலரை மணத்தால் அறியலாம். மனிதனைப் பேச்சால் அறியலாம். மனத்தின் ஒலிபரப்பியே வாய். நாக்கு இனியதை யேற்றுக் கசப்பை யுமிழ்வது போலவும், ரசத்தை யேற்றுச் சக்கையைத் துப்புவது போலவும், இனிமையே பேசிக் கடுமொழிகளை விலக்கவேண்டும். பிறர் பேச்சில், சாரத்தைக் கொண்டு, வீணை சக்கையை ஒதுக்கவேண்டும். சொல் ஆக்கும், அழிக்கும்; ஓர் அரசை ஆளும்; பல்லாண்டுகள் வருந்திய துயரை ஓர் நொடியில் நீக்கும். அறிஞர் சொல்லே உலகை யாளுகிறது; மனித சமுதாயத்தை நடத்துகிறது; நாகரிகத்தை அமைக்கிறது. சொல்லின் உயர்திறனே **மந்திரம், வேதம்!** பெரியோர் நீண்ட மௌன விரதங்களாலும், அடக்கமான தவவிரதங்களாலும் தம்மைப் பூரணப் படுத்திக்கொண்டே, மனித சமுதாயத்தின் நன்மைக்காக உயர்ந்த உண்மையைப் பேசுவர். சிந்தித்து, நிறுத்து, அளவுடன் நயமாகப் பேசுக! வாட்புண் மாறும்; சொற்புண் மாறாது. சொல்லால் நட்புமாகும், பகையுமாகும். பழி, பகைச்சொற்கள் கூற்றினுங் கொடியன. மங்கலமான பேச்சில் வாயைப் பயிற்றவேண்டும். மங்கல முரைத்தல் வாய்மொழிக் கழகு.

**பக்குவத்திற் கேற்ற பயனுரையே பேசிடுக ;**
**மிக்கது,. மோனம் ; விரும்பு.** 4

கேட்போர் மனப்பக்குவத்திற் கேற்றபடி, பயனுள்ள சொல்லையே பேசுக! அதனினும், மௌனம் சிறந்தது. மோனத்தையே பெரும்பாலும் விரும்புக!

பேச்சினாலே மூச்சு வீணாகும்; மனம் சிதறும். யோகிக்குச் சாந்த மௌனம் இன்றியமையாதது. அவன் ஒரு வார்த்தை பேசினால், அதற்கு ஒரு காரியம் இருக்கவேண்டும்; சுருங்கச் சொல்லி விளங்க வைக்கவேண்டும். மௌனத்தின் ஆழத்திலிருந்துதான் உண்மையெனும் முத்துக்களை யெடுக்கலாம். சளசளவென்று கத்தை கத்தையாகப் பேசும் வாய் பொய்யையும் கக்கும். ஒரு வார்த்தையால் விளக்கக்கூடியதற்கு ஒன்பது வார்த்தை செலவிட வேண்டா. ஆள், அறிவு, மனப்போக்கு, குணம், நோக்கம், இடம், காலம், காரியம்—இவற்றை யறிந்து, அச்சாணிபோலத் திட்பநுட்பமாகப் பேச வேண்டும். ஞானியிடம் ஞானம், புலவனிடம் கலை, மாணவனிடம் கல்வி ஒழுக்கம், குழந்தைகளிடம் சிறு கதை நீதிமொழி, பெண்டிரிடம் மனைமாண்பு — இவ்வாறு அவரவர் பயிற்சி, முதிர்ச்சி, உணர்ச்சிகளுக்குத் தக்கவாறு பேசவேண்டும். வம்படிக்கும் வாயினும் ஊமையே மேல். ஓயாது பேசுவதால் தாது நட்டமாகும்; மார்பு நோய்கள் வரும்; உடல் தளரும். பேச்சு நிதானம் பெரும்பிழை போக்கும்.

**புறத்தூய்மை செய்யும் புனலைப்போ லுண்மை**
**மனத்தூய்மை செய்யு மருந்து.** 5

புறவுடலைச் சுத்தம் செய்வது நீர்தான். அதுபோல, மனத்தைச் சுத்தம் செய்யும் மருந்து உண்மையே யாம். உடலழுக்கை நீர்விட்டுக் கழுவுகிறோம். மனத்துள்ளே ஆசை, ஆணவம், பொறாமை,

பொய்மை ஆகிய பல அழுக்குகள் உள்ளன. அவையே வாழ்வை அசுத்தமாக்குகின்றன. எல்லா அழுக்குகளுக்கும் மருந்து, மாற்று, உண்மையே. வாய்மையால் சுத்த மனம் வாய்க்கும். அதனால், உள்ளம் கண்ணாடிபோலத் தெளிவுறும். அந்தத் தெளிந்த சாந்த நிலையில், சுத்தான்மா உணர்வாகும். அந்த உணர்வே அமுதமாகும். இயற்கை யுடல் போர்த்த சுத்தான்மாவே மனிதன்; மனிதனின் வாய்மை ஆன்மா; மற்றதெல்லாம் சட்டை. பொய்யே மனிதனுக்குக் கொடிய நோயாகி, மனத்தை அறுத்துக்கொண்டே யிருக்கும். வாய்மையால் மனம் அமைதியுறும். வாய்மையால் சக்தி யுண்டாகும்; வெற்றி யுண்டாகும். வாய்மையின் மிக்க வளமையொன் றில்லை.

---

## 5. விந்தடக்கம்

**சிந்தை யடக்கிச் சிறுபுலனைக் காத்தடக்கி,**
**விந்தை யடக்கிவளர் வீறு.** 1

'வீறு' என்றால் தேஜஸ், திண்மை, பொலிவு, அழகு, வலிவு, சக்தி எனப்பொருளாம். வீறு பெறுவதற்கு, விந்தடக்கம் இன்றியமையாதது. வீரியமே வீறு. விந்தை யடக்குவ தெப்படி? அங்குமிங்கும் ஓயாதலையும் சிந்தையை அடக்கினால், விந்தடங்கும். சிந்தை யடக்கலே பதஞ்சலியால் 'சித்தவிருத்தி நிரோதம்' எனப் பட்டது. சித்த ஜயம் பெறுவதெப்படி? புலன்கள் புறம் போதலை அடக்கி, உள்ளே திருப்ப வேண்டும்.

சிந்தை யவிழ்ந்தால் விந்தவிழும்; சிந்தை யடங்கினல் விந்தடங்கும். புலன்கள் வெளிச்சென்றலைந்து, உலக விவகாரங்களை உள்ளே கொண்டுவந்து மனத்தைக் கலக்குகின்றன. ஒவ்வொரு புலனுணர்வும், காட்சியாகிப் (Perception) பாவனை (Conception) யாகிறது. பாவனைகள், சித்தத்தில் குவிந்து, ஸம்ஸ்காரங்களாக (Mental Impressions) மாறுகின்றன. 'ஸம்ஸ்காரம்' என்ருல் பூர்வ வாஸனை. இந்த வாஸனைகள், ஆன்மாவைத் தொடர்ந்து சென்று, மறுபிறப்பிலும் சித்தத்தை ஆளுகின்றன. பூர்வ வாஸனைக்குத் தக்கபடியே ஒருவனுக்குக் குணமும், வாழ்வும் அமைகின்றன. கர்மங்களைப் பெருக்குவது வாஸனைகளே: இவை சித்தத்தை அலைக்கின்றன. சித்தம், உள்ளே யிருக்கும் பரம சுகப் பொருளைக் காணமுடியாது, புலன்களின் பாவையாகிப் புறஞ்சென்று விஷய சுகங்களைத் தேடுகிறது; பெண்ணிலுள்ள ஆன்மாவை அறியாது, உடலழகைக் கண்டு மயங்குகிறது; உள்ளின்பத்தை விட்டுப் புலனின்பத்தைத் தேடுகிறது. அதனல், இந்திரியம் சிதைந்தழிகிறது. சித்தத்தை உட்குவித்து, ஆன்மாவில் நிலைநிறுத்தப் பயிலவேண்டும். மௌனம், தனிமை, தியானம், ஆகார நியமனம், யோகாஸனங்கள், பிராணயாமம், ஞானவிசாரம், பக்தியோகம் முதலியவற்ருல் சித்த ஜயம் பெற்ருல், விந்தை வெளியேகாமல் தேஜஸாக மாற்றலாம்; மூலக்கனல் நம்முள் விழித்தெழும். அதனல் வீறுண்டாகும்.

**பிரம சரியம் பிழையின்றிப் போற்றின்**
**அரிய பயனெல்லா மாம். 2**

பிரமசரிய விரதத்தை மாசில்லாது காத்தால்

மனித வாழ்வில் அடையத்தக்க அரிய நன்மை யெல் லாங் கைகூடும்.

வாழ்வின் நற்பயனாகிய, 'அறம், பொருள், இன்பம், வீடு' ஆகியவற்றைப் பெறுதற்குப் பிரமசரியமே திறமை நல்கும். தூய பிரம்சரியம் ஜீவசக்தியைப் பெருக்கும். பொறிகளை யடக்கிச் சித்தத்தைத் தூய வழிகளிற் செலுத்தி, மனத்தை உள்ளிருக்கும் சுத்தப் பிரமத்தில் நிலைநிற்கச் செய்வதே பிரமசரியம்: ஐம் பொறி காத்தல், ஆகாரசுத்தம், உடல்மனத் தூய்மை, உரையைச் சுருக்கல், அலையாச் சித்தம், அறிவு வளர்ச்சி, குருவைப் பணிதல், குற்றங் கடிதல், கடவு ளன்புறுதி, காமங் கடிதல், மலர்போல் அழகை மாசறக் காணல், அரிவையர் தம்மை அன்னையாய் வணங்கல், இயற்கை யழகில் இருந்து கற்றல், மனக் கனவற்ற தனிச்சுக நித்திரை, ஒருமையுடனே இறை வனை வழிபடல், ஓங்கார ஜபம், யோக சாதனம்— இவற்றால் பிரமசரியம் இயலும். வீரம், தீரம், ஆற் றல், ஆயுள், பல்கலைப் புலமை, பன்னூலறிவு, பணி களில் வெற்றி, பழுதிலா வாழ்க்கை—எல்லாம் பிரம சரியத் தெய்தும். பிரமசரி யாசிரமத்தைப் பழுதில் லாமற் காத்தோருக்கே இல்லறம் இன்பமாகும்.

**ஆற்ற லறிவாயு ளாக்கைநல வாழ்வின்ப**
**வூற்றாகும் விந்துன் னுயிர்.** 3

ஆற்றல், அறிவு, நீண்ட ஆயுள், நல்ல கட்டுறுதி யுள்ள உடல், நல்ல சன்மார்க்க வாழ்வின் இன்பம், —இவை செழிக்கப் பாயும் ஊற்றே **இந்திரியம்** அல்லது **ஜீவசக்தி.** விந்து உயிருக்குச் சமானம்.

விந்தே அமுதம், தாது, காயகற்பம், ஜீவசக்தி, உயிராற்றல். மோகப் பிணியால் விந்து வீணாகித்

தேகப் பிணி பெருகும். ஒரு துளி தாது எண்பது துளி நல்ல இரத்தத்திற்குச் சமானமாகும். ஒவ்வொரு துளி தாதுவும் ஒவ்வோர் உயிர்த்துளியாகும். அதை, வீணாக்கல் உயிர்க்கொலையாகும். தாதழிவு தற்கொலையாம். அதனால் இரத்தம் கெட்டு வற்றிச் சூடேறி, வெட்டை முற்றி, ஆள் கட்டையிலேறும். உயிர்த்துளி வறண்டால் வாழ்வில்லை; அதை இழந்தால் இன்பமில்லை; அஃது அழிந்தால் ஆற்றலில்லை. மரபைப் பெருக்கவே இந்த உயிர்த்துளியைச் செலவிடவேண்டும். மற்றப்போது, அதைக் காக்க வேண்டும். இருட்சேட்டைகளாலும், காமவெறியாலும், விபசாரத்தாலும் விந்தை வீணாக்குவது தன்னையும், மரபையும் கெடுப்பதாகும். பெற்றோர், வயதான பிள்ளைகளுக்கு, முகக்குறி யறிந்து, உயிர்த் துளியின் சக்தியையும், அதை வீணாக்காமல் காக்கும் பயனையும் தெளிவாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தூய கல்வி, அறிவு, தொழில், கலை வளர்ச்சி, உடற் பயிற்சி முதலியவற்றில் சிறார் உள்ளத்தைத் திருப்பவேண்டும். பதினாறு வயதில் மனம் விஷய வஸ்துக்களைப் பார்த்து விகாரப்படத் தொடங்கும். அப்போதுதான், தீவிரமான கல்விப் பயிற்சி தர வேண்டும். தாது நட்டமாகும் குறிப்பறிந்து, நல்ல புத்தி சொல்லவேண்டும். காதல் நினைப்பு, காமக் காட்சி, காம நாடகம், காமுகர் நட்பு—இவற்றால் மனம் கெடும். உறுப்பு நோக்கல், ஏங்கியலைதல், தூங்கி விழுதல், முகப்பரு வெடித்தல், முகத்தில் வாட்டம், கண்கள் குழிதல், நடை தளர்தல், உடையுடல் வீச்சம், ஒன்றுந் தோன்றாது கவலைகொண்டிருத்தல், ஆத்திரம், பொறாமை, அசட்டுச் சிரிப்பு—

இவையெல்லாம் உயிர்த்துளி இழக்குங் குறிகளாம். உயிர்த்துளியைக் காக்கும் வகையென்ன? அற்றது போற்றி அளவுட னுண்ணல், நல்லுடற் பயிற்சி, ஞான விசாரம், தியானப் பயிற்சி, ஊன்-மது-புகைக் குடிமயக்குக ளொழித்தல், தூயர் நட்பு, துகளறு சிந்தை, கவலா நெஞ்சம், களிப்புறு மனது, தேசுறுங் கல்வி, தெய்வ பக்தி, இயற்கை வனப்பில் இயல்பான வாழ்க்கை—விந்தை யடக்கும் வித மிவையாகும். மாதம் இரண்டொரு முறை கனவில், சேட்டையில் லாமல், உடற்சூட்டினால், மலசலங் கழிவது போலச் சிறிது விந்திழிந்தால் அதையே நினைத்து ஏங்காமல், காலையிற் குளித்து, வில்வமும் மிளகும் சாப்பிட்டுப் பத்து மணிக்குக் கதிரில் முழுகிப் பிறகு நீரில் முழுக வேண்டும். 'சூரியா, வீறு தா!' என்று வணங்குக! உயிர்த்துளியை உயிர்போலக் காக்கவேண்டும்.

**ஆண்பெண் விலக்கில்லை ; யான்மப் பொதுவுறவு**
**பூண்டார்க்கு நீங்கும் புரை.** 4

ஆண் பெண் இருபாலாருக்கும் பிரமசரிய விதிகள் எவையும் விலக்கில்லை. கல்விப் பருவத்தில் இருவரும் பிரமசரிய விரதம் போற்றியே யாகவேண்டும். அதல்லாமலும், இல்லறத்திலும், நிறைமுறையான வாழ்வினால் உயிர்த்துளியைக் காக்கவேண்டும். இல்லற வாழ்வில், இருவருக்கும் உண்டாகும் காமம் மோகம் ஆகிய குற்றங்களைத் தவிர்க்கவேண்டும் அன்றோ? வழி? இருவரும் **ஆன்மப் பொதுவுறவு** பூண வேண்டும். அஃதாவது: ஒரே ஆன்மாதான் ஆண் சட்டை பூண்டு கணவனாகவும், பெண்சட்டை பூண்டு மனைவியாகவும் உள்ளது. அந்த ஆன்மா இருவர் உள்ளத்தும் உள்ளது. 'அதுவே தாம்' என்று கருதி,

மனம் அதிலே பதிந்தால் விகாரந் தோன்றாது. ஆணைச் சிவமாகவும், பெண்ணைச் சக்தியாகவுங் கருதுக! கேவலம் தோலழகையும் மேல்மினுக்கையும் பாராமல், உள்ளே கனலும் கடவுட் கனலைக் கருதுக! பெண்ணை அம்மன் கோயிலாகவும், ஆணைச் சாமி கோவிலாகவும் மதிக்கவேண்டும். பெண்ணைப் பழித்தலன்று, வெறுத்தலன்று, விலக்கலன்று, பெண்ணை மகா சக்தியாகப் போற்றுதலே மன விகாரங்களை யொறுக்கும் வழியாகும். ஆணும் பெண்ணும் அர்த்தநாரீசர்.

**'வன்னியாய்க் கற்ற வலியுடையார் போற்றுகவே**
**நன்மனை வாழ்க்கை நயம்.** 5

'வன்னி' யென்றால் பிரமசாரி. பிரமசரிய விரதம் பூண்டு, நல்லாசிரியரிடம், அறிவியலிற் சொல்லியவாறு கல்வி பயின்று அறிவாற்றல்களைப் பெற்றவாலிபர்கள், மங்கலமான, நல்ல, இல்லற வாழ்வு தரும் நயமான, மேன்மையான பயன்களைப் போற்றுக!

7 முதல் 18 வயது மட்டும் பிரமசரியம் பூண்டு, குருகுலவாசம் செய்து, அறிவு, தொழில், உடலுறுதி, நல்லொழுக்கம், ஆத்மஞானம், அழகுக் கலைகள் முதலியவற்றை வளர்க்க வேண்டும். இப்பருவமே வாழ்வின் அடிப்படையும், ஆதாரமும், வேரும் ஆகும். பிறகு, 22 வயது வரை, நாட்டிற்கும் வீட்டிற்கும் பயனுள்ள தீரனாக வாழ்வதற்கு வேண்டிய உடல் மனப்பயிற்சி, தொழிற்பயிற்சி, வீரப்பயிற்சி செய்க! பெண்டிரும், பதினைந்து வயது மட்டும், கன்னியறங்காத்துக் கற்கவேண்டும். பிறகு, இல்லறவொழுக்கமும், வீட்டு நிர்வாகமும் கற்று, வாழ்விற்குத் தயாராகவேண்டும். இல்லறப் பயிற்சி பெற்று,

அறிவாற்றல்களிற் சிறந்து, இயல்பான காதலால் இணைந்த வாலிபர்களே மணம்புரிந்து, மனைவாழ்வை மேற்கொள்ள வேண்டும். உடலுறுதி, உள்ளுறுதி, வீரியபலம், அறவொழுக்கம், குடும்பத்தைத் தாங்க வல்ல தொழிற்புலமை, தகுந்த கல்வியறிவு—இவை இல்லறக் காதலருக்கு இன்றியமையாதன. மனித மூளை இருவகை—முன்மூளை (Cerebrum), பின்மூளை (Cerebellum). முன்மூளை ஐம்பொறி மனம் சிந்தனைசக்தி அருட்புலமை, முதலியவற்றின் தாயகமாகும். இதைத் தகுந்த கல்வி யொழுக்கங்களாலும், யோகசாதனைத் தாலும் வளர்க்கவேண்டும். பின்மூளையில் ஞாபக சக்தி, முன்வினைப் பயன்கள், ஸம்ஸ்காரங்கள் எல்லாம் அடங்கியுள்ளன. நரம்புகளைச் சரியானபடி பயிற்றாமல் தளரவிட்டால், பின்மூளையி லுள்ள சங்கற்ப விகற்பங்கள் கிளம்பிக் கூத்தாடும். முன்மூளையில் பலமில்லாவிட்டால் இவை வாழ்வைக்கெடுக்கும்—பைத்தியம், சைத்தியம், பேயாட்டம், சங்காகோளாறு முதலியவற்றிற்கு முன்மூளை பலமில்லாது நரம்பு தளர்வதே காரணம். பெண்களுக்கு நரம்புத் தளர்ச்சியால் வரும் பேய்க்குணங்களின் காரணம் இதுவே. தூயசுற்றம், அறிவுப்பயிற்சி, பிரமசரியம், உயர்ந்த சிந்தனை, தெய்வபக்தி — இவையே அவற்றிற்கு மருந்தாகும். நல்ல காதலர் இல்லறம் புரியும் பண்பை இனிக் காண்போம்.

**ஆறவது, நடை யியல் முற்றிற்று.**

---

## எ. இல்லற வியல்

**யோ**கம் என்பது, துறவிகளுக்கு மட்டும் உரியதென்று நினைப்பது தவறாகும். இல்லறத்தாரும் யோக சித்தி பெறவேண்டும். ஆண் பெண் வாழ்வே சுத்த சக்தியோகமாக வேண்டும். ஆண்மைக்குரிய ஆற்றல், வீரியம், மனத்திட்பம், அறிவு—இவற்றுடன், பெண்மைக்குரிய மென்மை, அழகு அணி, சக்திக் கனல் ஆகியவையும் சேர்ந்தே வாழ்வு விரிவுபெற்று விளங்கும். அகில வாழ்வும் ஆண் பெண் குடித்தனம். இல்லற வொழுக்கம் தொல்லற வொழுக்கம். இல்லறமின்றி இயலா துலகம். உண்ணுங் காய்கனி தானியங்களும் தாவரங்களின் இல்லற வாழ்வால் வருவன. வீடு வாழ, நாடு வாழும்; வீடு சோர, நாடுஞ் சோரும். மண்ணுயர் பெருமை பெண்ணுயர் பெருமை. மங்கலமாக மனையற மோங்குக! இயல்பான இல்லறம் இன்பமே யளிக்கும். முன் சொன்னதுபோல, பிரமசரிய விரதம் பூண்டு, கற்ற வாலிபனும் கன்னிகையும் இல்லறப்பயிற்சி பெற்றபின், இயல்பான காதலால், அறிவும் அன்பும், மதியும் இதயமும் போலக்கூடி இல்லறம் நடத்தவேண்டும். இருவர் அன்பும் மைந்தரை மருவி சுற்றந் தழுவி, விருந்தை யூட்டி, வருந்துவோர்க் குதவி, ஆருயிரன்பாய்ப் பாரினிற் பரவும். அறத்தில் ஊன்றி, அன்பிற் கிளைப்பதே இல்லறம். அது, காதலர், பெரியார், முனிவர், முதியார், முன்னோர், விருந்தினர், மாணவர், உறவினர், வீரர் அனைவருக்கும்

T2 2:4391 4:5-26 (1942)

ஆதாரவாகும். அன்புப் பயிற்சியும், அறத்தின் விரிவும், அழகின் விளக்கமும், தொழிலின் பெருமையும், முயற்சியின் பெருக்கமும், இன்ப துன்பங்களின் அனுபவங்களும், எல்லாம் இல்லறத்தால் எய்துவன. குழலினும் இனிய மழலையாம் அமுதும், தங்கப் புதல்வர் தழைக்கும் மகிழ்வும், வாழ்க்கைத் துணைவியின் மங்கலத் திருவும், உலகை வளர்க்கும் உவப்பும் கடமையும் இல்லறத்தால் எய்தும். அமைதியும், கிளர்ச்சியும், அழுகையும் சிரிப்பும். நல்லதும் பொல்லதும், நட்பும் பகையும், வீறும் சோர்வும், களிப்பும் கைப்பும், பகலும் இரவும்போல வரும். இந்த இருவிகாரங்களிற் பற்றுமல், ஒரு விகாரமும் இல்லாத சுத்தான்ம வுணர்வில் வாழுதலே இல்லறத்தை யோகமாக்கும் வகை. "எதைச் செய்தாலும், எதை யுண்டாலும், எதை நினைத்தாலும் எனக்கே வழிபாடாக்கி, என்னுணர்வில் வாழ்வாயாக! விருப்பு வெறுப்பு, சினம் அச்சங்களைத் தவிர்த்து, என் மனத்தனாய், என்னில் நிலைத்து வினை வேள்வியைச் செய்; பலன்களை எனக்கே நிவேதி!" என்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார். சமத்வம், கர்மபலத் தியாகம், ஈசுவர சரணுகதி, காமக்குரோதங்களை அடக்கியாளும் திடசித்தம்-இவற்றைப் பிரமசரியாசிரமத்தில் பயின்று இல்லறம் புகுந்தால் அவ்வாழ்க்கை வெற்றி பெறும். யோகயுக்தனுக வாழவேண்டும். அதுவே, சுகதுக்கங்களிற் கட்டுப்படாது, சமநிலைச்சாந்தத்துடன் வாழும் வகை. "சாட்டையிற் பம்பர *சாலம் போல் எலாம், ஆட்டுவான் இறை என அறிந்து, நெஞ்சமே, தேட்டம் ஒன்றற அருட்

* நடிப்பு.

செயலில் நிற்றியேல், வீட்டறம் துறவறம் இரண்டும் மேன்மையே " என்றார் தாயுமானவர். முன்னியல்களிற் குறித்த பயிற்சிகளைப் பெற்று இல்லறம் புகவேண்டும். ஒரு நாட்டின் இன்பமும் புகழும் செழிப்பும் இல்லற வாழ்வைப் பொறுத்துள்ளன. ஆத்ம சுத்திக்கும், யோகசித்திக்கும், பந்தமுக்திக்கும், சர்வாத்ம சமத்துவத்திற்கும் ஏற்றதான இல்லறத்தின் தத்துவத்தை யறிவாம்.

---

## 1. இல்லறம்

**வீட்டின் விரிவே வியனுலக மாதலினால்,**
**வீட்டறத்தில் வெற்றி விளக்கு.** 1

பெருமையுள்ள உலகம் வீட்டின் விரிவேயாகும். அஃதாவது: மனைவாழ்வின் பெருக்கமே உலக வாழ்வாகும். ஆதலால், மனையறத்தில் வெற்றியை விளக்குக !

வீடுகளின் கூட்டமே நாடு. இல்லறவொழுக்கத்தின்படியே உலகின் பெருமையும் அமையும். ஆதலால், ஒவ்வொரு நாடும், இல்லறத்தைக் கண்போலக் காக்கவேண்டும். நாட்டின் வெற்றி முரசம், இல்லறவெற்றியின் எதிரொலியே. வீடு செழித்தால் நாடு செழிக்கும். அறம், அன்பு, நல்ல தொழில், மனப்பொருத்தம், வாய்மை, கற்பு, பாத்தூண், உடல் நலம், பொறுமை முதலியவற்றால் இல்லறவாழ்வு வெற்றி பெறும்.

**இல்லற மீசனரு ளெய்திய நல்லறமஃ**
**தில்லையெனி லில்லையுல கே.** 2

இறைவன் அருளைப் பெற்ற நல்லறமே இல்லறமாகும். அஃதில்லாவிடின் உலகமே யில்லையாகும். இறைவன் அருள் விளக்கமே ஆண்பெண் தோற்றமும் உலக விளையாடலும்; உயிர்ப் பெருக்கமே உலகின் பெருக்கம். இல்லறமின்றேல், உயிர்ப்பெருக்கம் இயலாது; மணவாழ்வின்றேல், மன்னுயிர் இல்லை. இறைவனும் அருளும் கூடி உலகாடலை நடத்துவது போலவே, ஆணும் பெண்ணும் கூடி மனைவாழ்வை நடத்த வேண்டும். உலகம் ஓர் எல்லையற்ற வீடு. அதன் அம்மையப்பன், அருளிறைவன். இறைவன், சாட்சியாயிருந்து உலகாடலைத் தாங்குகிறான். சக்தி அவன் இச்சையால் உலகை ஆக்கியளித்து மாற்றுகிறாள். வண்ணான் அழுக்கினால் அழுக்கெடுப்பதுபோலத் தனுகரண புவன போகாதியனுபவங்களைத் தந்து, நாளடைவில், காமம் வெகுளி கலக்கம் ஆணவம் கன்மம் ஆகிய மாசெலாம் போக்கிப் பாசான்மாவைச் சுத்தான்மா வாக்குகிறான் அருளிறைவன். அனுபவத்தால் ஆத்ம சுத்தி பெறுதற்கு ஒரு சாதகமே இல்லறம். இல்லறம் இல்லாவிட்டால் உலகமே யிராது.

**இல்லறமே வீட்டின்பம் ; இல்லாளு நல்வாழ்வும்**
**புல்லித் தழைக்கும் புகழ். 3**

மாசற்ற மனையறமே மோட்ச இன்பமாகும். அது, வீட்டிற் கரசியான இல்லாளும், நல்ல தரும சாதன வாழ்வும் சேர்ந்து தழைக்கும் அருஞ்செயலாகும். 'புகழ்' என்றால் சிறப்பு, பெருமை, கீர்த்தி எனப் பொருளாம்.

இல்லறத்தை இன்புறச் செய்ய இரண்டு துணைகள்

வேண்டும் : ஒன்று, கற்புள்ள இல்லாள் ; இரண்டு, அன்பும் அறமும் சேர்ந்த நல்வாழ்வு. இல்லாள், கன்னியர் குருகுலத்திற் கற்று இல்லறவொழுக்கம் பயின்றிருக்க வேண்டும். மணாளன் மகிழ மனையைப் போற்றல், மனைக்கு மங்கலத் திருவெனப் பொலிதல், மயங்கும் மணாளனின் மனப்பிழை திருத்தல், இன்றுணை வளித்தல், இனியன சொல்லல், இன்னிசை விருந்து, நல்ல நடத்தை, சிக்கன வாழ்க்கை, சீரிய சிந்தை, உண்ண வுடுக்க ஒரு தொழில் முயற்சி, நாளும் வேலையும் நன்கறிந் தொன்றல், பிள்ளைப் பேறு, பிள்ளை வளர்த்தல், கடவுளுணர்வுடன் கடமைக ளாற்றல்—இவற்றை நன்கு அறிந்தவள் இல்லிற் கரசி.

அறநெறிப்பட்ட இல்வாழ்வின் பண்பை யறிக :—ஆண்மையும் பெண்மையும் அழகுறக் கூடி, ஆன்ம வுறவுடன், ஆருயிர்க் கலப்புடன், காதலும் கற்பும் தீதறக் காத்து, மரபு வளரவே மனமுவந் தொன்றி, மங்கலமான மக்களை யீன்று, மாண்புறு வழியில் மக்களைப் பயிற்றி, பிழைப்பிற் கேற்ற வுழைப்பினைச் செய்து, வரவிற்கேற்ற செலவுக ளாற்றி, வந்த விருந்தை மகிழ்வுட னூட்டி, தாளாண்மையுடன் வேளாண்மை யாற்றி, கடவுளன்பைக் கருத்தில் வளர்த்து, தம்மைத் திருத்தித் தமரைப் போற்றி, பொதுநலம் புரிந்து, புண்ணியம் பெருகித் தாமும் வாழத் தாரணியெங்குந் தருமம் வாழத் தாங்குவ தில்லறம். வாழ்வாங்கு வாழ்ந்தால் மனையே விண்ணும்.

**நல்லாளைக் காதலித்து நம்பி நனிவாழ்க**
**வள்ளுவரும் வாசுகியும் போல்.**

நற்குணமும், நன்னடையும், உள்ளன்பும் கொண்ட நங்கையை (நல்லாளைச்), சிறந்த ஆண்மகன் (நம்பி) காதலித்து, வள்ளுவரும் வாசுகியும்போல, முறைப் படி, நன்றாக (நனி) இல்லறத்தில் வாழ்க!

அன்பும் அறமும் பூண்டு வாழ்வாங்கு மனையறத் தில் வாழும் வழியைத் திருக்குறளும், வள்ளுவர்-வாசுகி வாழ்வும் நன்கு விளக்குகின்றன. வள்ளுவரும் வாசுகி யும் உயிரும் உடம்பும் போல் உள்ளொன்றி வாழ்ந்தனர்; நெசவுத் தொழிலில் வந்ததைக் கொண்டு நேர்மையாக வாழ்ந்தனர். மணாளனுக் கினியதை வாசுகி செய்தாள்; மனைவிக்கினியதை வள்ளுவர் செய்தார். வாய்மையும் தூய்மையும், எளிமையும் இன்பமும், அன்பும் அறமும், கற்பும் பொறுமையும், பண்பும் பணிவும் பொலியும் இயல்பான மனைவாழ்வே வள்ளுவர் - வாசுகியாக உரு வெடுத்தது! இவர் இல்லற வேள்வியின் அவியன்றோ தெய்வத் திருக்குறள்! தோலழகன்று, செல்வமன்று; உள்ளன்பும், உயிர்க்கலப்பும், கற்புக் காந்தமும், தன்னுட் கணவனும் கணவனுள் தானும் நிறைந்து வாழும் நீங்கா வுறவும், அடிசிற் கினிமையும், அமு தத் தீஞ்சொலும், பூத்த மலர் போற் புன்னகை யழகும், தூய தொழிலும், தூய காதலும், அருந்து தல் பொருந்துதல் உறங்குதல் இவற்றில் நிறை முறை காத்தலும், நம்பியை நங்கை நம்பனென் றெண்ணலும், நங்கையை நம்பி சக்தியென் றெண் ணலும் இல்லற வாழ்வை இன்ப விண்ணாக்கும்.

**பூவோடு பொன்போற் பொருந்தி யறிவொளிரும்**
**ஆணோடு பெண்சக்தி யாம்.** 5

பொன்னணியுடன் (பூண்) நீங்காது ஒன்றான

பொன்போன்று, அறிவிற் சிறந்தோங்கும் ஆண் மகனுடன் பெண் சக்தியும் பொருந்தியதே இல்லற வாழ்க்கை யாகும்.

ஆண்மை பொன்; அதை நகாசு செய்து அழகான நகையாக்குவது பெண் சக்தி. பொன்னின்றிப் பூணில்லை; பொன் மட்டும் பூணாகாது. வாழ்விற்கு அழகும், ஒளியும், விரிவும், சக்திக் கனலும் ஏற்றுவது பெண். ஆண் அறிவு; பெண் அன்பழகு. ஆணின்றி வாழ்விற்கு ஆதார மில்லை; பெண்ணின்றி அதற்கு அழகும் விளக்கமும் இல்லை. ஆண் சலவைக் கல்; அதைச் செதுக்கி அழகுச் சிலையாக வடிப்பது பெண் சக்தியே! விளக்கும் சுடரும், கனலும் ஒளியும், மலரும் மணமும், வானும் நீலமும், நீருந் தரையும் போல, ஆண் பெண் தத்துவங்க ளிரண்டும் இணை பிரியாதனவாம்.

---

## 2. திருமணம்

காந்தமுனை மாறிக் கவர்வதைப் போலுமே
மாந்தருள் ஆண்பெண் மயக்கு. 1

ஒரு காந்த ஊசியின் வடமுனை மற்றொன்றின் தென் முனையைக் கவர்வது போலவே, மாந்தருள் ஆண் பெண் கலப்பும் உண்டாகிறது.

ஆணும் பெண்ணும் மானிடத்தின் இரண்டு தத்துவங்கள்: நீரும் நிலமும், மதியும் நிலவும், கதிரவனும் கதிரும் போல அவை யிரண்டும் ஒருமைப்பாடுடையன. பெண் நாதம்; ஆண் பிந்து: நாதபிந்து விளக்கமே உலக வாழ்க்கை. இரண்டின் கலப்பே இகம். 'வாழ்க்கை' யென்னும் மின்சாரப் பெட்

டியில் 'காதல்' என்றும் கந்தகத் திராவகம் ஊற்றி, ஆணாகிய செப்புத் தகடும், பெண்ணாகிய நுத்தநாகத் தகடும் இணைக்கப் பெற்றுள்ளன. அத் தகடுகள் தாம்பிரக் கம்பிகளால் பொருத்தப் பெற்றிருப்பது போலவே ஆண்மையும் பெண்மையும் சுத்த யோகத்தால் பொருத்தப் பெற்று அற்புதங்கள் புரிகின்றன. உலகை வளர்க்க மாயா சக்தி ஏவும் தடுக்க முடியாத சிருட்டிக் கனலே காதல்.

**காதல் மணமே கருத்திற் கினியமணம் ;**
**வாதாம் வலுமணமெல் லாம்.** 2

இயல்பான காதலால், இருவர் மனமொன்றிச் செய்து கொள்ளும் திருமணமே கருத்திற் கினிய கலியாணம். பிறர் கட்டாயத்தாற் செய்யப்படும் பலவந்தக் கலியாணம், மனப் பொருத்தம் இல்லாமல், வாது வழக்குகளில் முடியும்.

ஆண் பெண் வாழ்க்கை ஓர் அத்யாத்மக் கலை. மணையில் உட்கார்ந்தவ ரெல்லாம் வதுவரர் அல்லர். பணமும் பரிசும் உறவும் உடைமையும் கருதி, மனப் பொருத்தமும் ஆள் தகுதியும் பாராது, உலகறியாத சிறு பிள்ளைகளுக்குப் பலவந்தமாகக் கலியாணஞ் செய்தல், பின்னால் பல சிக்கல்களுக்கும், குடும்பக் கலகங்களுக்கும் இடமாகும். வலு மணம், இயற்கைக்கு விரோதமான மணமாகும். காம வெறியாற் கன்னியைக் கெடுத்தல், கள்ள வுறவு, பணத்திற்காக மனத்தை விற்றல், தூக்கிச் செல்லல், துரத்தியணைதல், தூங்கும் போது சூதாய்ப் புணர்தல், தன் மனை யிருக்கப் பிறர் மனை நோக்கல், மனமறக் கூடுதல், ஈடில்லாமல் இணைத்தல்—இவை யெலாம் வாழ்வைக் கெடுக்கும் வஞ்சனைகளாம். கள்ளப் புணர்ச்சி

கனவிலுந் தீது ; உண்மைக் காதல் உள்ளுயிர் பற்றும். குருகுலக் கல்வியும், தொழிற் பயிற்சியும், வீரப் பயிற்சியும் பெற்ற 22-வயது வாலிபன், இல்லற வொழுக்கங் கற்றுத் தேர்ந்த தூய கன்னிகை யொருத்தியைக் காண்கிறான் : இருவர் கண்களும் எதிர் நோக்குகின்றன. 'இவளே நமக்குரிய மனைவி, இல்லாள், காந்தை, தருமபத்தினி, வாழ்க்கைத் துணைவி, மங்கல சக்தி' யென்று ஆண் மகன் இயல்பா யறிகின்றான். 'இவனே நமக்குரிய கேள் வன், கொழுநன், காந்தன், கணவன், நாயகன், துணைவன், வல்லவன்' எனப் பெண்ணமுதம் அவனை இயல்பாகக் காதலிக்கிறாள். இருவர் உள்ளமும் ஒன்றுகின்றன. ஒருவரை யொருவர் நாணத்தாற் பார்க்கும் போது மனம் பரவச மடைகிறது. ஒருவ ருள் ஒருவர் உறைகின்றனர். ஒருவரின்றி மற்றொரு வர் வாழ முடியாதென் றுணர்கின்றனர் ; ஒருவரை யொருவர் ஆவலாகக் காண்கின்றனர் ; கண்ணும் கண்ணும் பொருந்து கின்றன. அறிந்த நாணம், நாணப் பார்வை, மெல்லணி முறுவல், நெருங்கிய நேயர்பால் நெஞ்சறிவித்தல், அன்புக் கடிதம் அணி யுற வரைதல், தூதனுப்பல், இனியன வழங்கல், இசை விருந் தளித்தல், தனித்துப் பேசல், தம்மனம் கலத்தல், பிறப்பு வளப்பம் பிழையறக் கூறல், ஒன்றி வாழும் உறுதி கொள்ளல், பெற்றோ ரிடத்திற் காதலைக் கூறல், பிறகே உலகம் அறியத் திருமணம் புரிதல்—இவ்வாறு படிப்படியாகக் காதல் வளர்ச்சி பெற்றுக் கடிமணத்திற்கு வழிகோலும். பெண் வளர்ச்சி மிக விரைவு. ஆதலால், ஆண் பெண்ணை விட ஐந்தாறு ஆண்டுகள் வயதில் பெரியவனா யிருத்

தல்வேண்டும்; வயதிற்கேற்ற வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பெண்ணுக்குப் பதினாறு வயதிலும், ஆணுக்கு இருபத்திரண்டு வயதிலும் மணம் புரியலாம். அதுகாறும் பிரமசரிய விரதங் காத்து அறிவாற்றல்களை வளர்க்க வேண்டும்.

**நல்ல குணமணியாய் நாணுடுத்த நல்லாளைக்**
**கொள்ளுக வாழ்வைக் குறித்து. 3**

'வாழ்வு' என்றால், வாழ்க்கைநலம், உயிர்ச் செழிப்பு, மங்கலம் எனப் பொருளாம். வாழ்வைக் கருதும் மனிதனுக்கு வாழ்வுத்துணை நலமான மனைவி வேண்டும். உத்தமமான குணங்களையே ஆபரணமாகக்கொண்டு, நாணத்தையே ஆடையாக அணிந்த நல்லாள் இயல்பாக உன்னைக் காதலித்தால் மணம் புரிந்து கொள்ளுக!

புண்படாப் பேச்சு, பொறுமை, நன்னடை, அணிச்செருக்கும் - அழகுச் செருக்கும் - இளமைச் செருக்கும் இன்மை, அடக்கம், அமைதி, சீர்மை, நேர்மை—இவையெல்லாம் நாணமாவன. தூயகற்பு, வாய்மையன்பு, உள்ளக்கலப்பு, உயர்ந்த நன்னடை, மென்மை, இனிமை, இடம்பமின்மை, மட்டு மரியாதை, மங்கல மனையை வகிக்குந் திறமை, கணவனே உயிரெனக் கருதுங் கற்பு, கல்வியறிவு, இல்லறப் பயிற்சி—இவையெலாம் பெண்ணுக்குப் பெருமை தரும் சிறந்த தன்மைகளாகும். குணவதியுடனே கூடி வாழ்க!

**ஆக்க லழகுசெய லன்பறிவு மெய்யுறுதி**
**காக்கலிவை பெண்டிர் கடன். 4**

சுசிருசியாக உணவாக்கல், வீட்டைச் சுத்தமாக்கி அழகுசெய்தல், கணவனிடமும், குழந்தை

களிடமும், சுற்றத்தாரிடமும், மற்றவரிடமும் அன்பு பேணல், கற்ற அறிவை மறவாமல் மேன்மேலும் வளர்த்தல், கற்பென்னும் உண்மையுறுதியை எந் நாளும் காத்தல், (அஃதாவது : கணவனுக்கு உண்மை யாக நடப்பதில் உறுதியாயிருத்தல்)—இவை குலப் பெண்டிர் கடமையாம்.

புன்னகை முகமும், மென்மையும், அன்ன நடை யும், அமுத மொழியும், கிளியினழகும், குயிலினிசை யும், கடலே யனைய கருணை விழியும், கார்போற் கூந்த லும், பேய்மதமற்ற தூய காதலும், பிரியா நேயமும் பெண்மைக் கழகாம். வீட்டைப் பெருக்கிக் கோலம் போடல், அழகுசெய்தல், மகான்கள் படத்தை அலங்கரித்தல், மலரணி செய்தல், தேய்ப்பது தேய்த் தல், தோய்ப்பது தோய்த்தல், உலர்த்துவ துலர்த்தல், குறித்த விடத்திற் குறித்ததை வைத்தல், பழகும் பொருளெலாம் பாங்காய் அடுக்கல், மூன்று வேளை யும் முறையாய்ச் சமைத்தல், கணவன் மகிழக் கனி வுடன் சோறிடல், பிள்ளைகள் நாளும் பெரியவராகப் பாட்டும் கதையும் பரிவுடன் சொல்லல், திருவிளக் கேற்றித் தெய்வம் வணங்கல், உள்ளமுருகக் கடவு ளைப் பாடல், எல்லா வுயிர்களும் இன்புற வேண்டல், அளவுட னருந்தல், அளவுட னுறங்கல், வந்த விருந்தை முகமலர்ந் தேற்றல், ஏழையெளியவர்க்கு இயன்றதைத் தருதல், வரவிற்கேற்ற செலவு செய் தல், அன்பையும் அறிவையும் அறத்தையும் வளர்த் தல், உயிர்நலம் பேணல், உடல்நலம் பேணல், மன நலம் பேணல், மகார்நலம் பேணல்—மணாளனுக் கிணங்கிய மங்கல மனைவியின் கடமைகள் இவையாம். இத்தகைய பத்தினி குலசக்தி யாவாள்.

**கற்புயிர் ; நாணழகு ; காரிகைக்கு நற்கணவன்**
**சொற்படிந லாகுஞ் சுகம்.** 5

*குலநலம் பேணும் பெண்ணிற்குக் கற்பே உயிராகும் ; நாணமே அழகாகும் ; அறிவொழுக்கங்களிற் சிறந்த கணவன் சொல்லிற்கு இணங்கி நடத்தலே சுகமாகும்.*

*உட்புற வொற்றுமை, தூயவுள்ளன்பு, குறிப்பறிந் தொழுகல், உயிரினும் அருமையாய்க் கணவனைப் பேணல், கொழுநனுக்காவன குறைவறச் செய்தல், அளவுடன் வாழ்தல், அகந்தையின்மை, இனிமையுரைத்தல், இனியன செய்தல், கணவன் தீயவழியில் நடந்தாலும் இதமாகத் திருத்தி நல்வழிப் படுத்தல், நல்ல அமைச்சனைப் போலே யோசனை சொல்லல், தாயைப்போலே நேயம்பேணல்—இவையெலாம் கற்புள்ள காரிகைக்கு அழகாம்.*

---

## 3. பெண்ணின் பெருமை

**மென்மை யுடலின்ப மேதக்க வாழ்வெல்லாம்**
**பெண்மை யுவந்தளிக்கும் பேறு.** 1

*மனத்திற்கு இதமான மெல்லிய தன்மை, உடலுக்கு இன்பந் தருதல், பெருமைபெற்ற வாழ்க்கை —இவையெல்லாம் பெண்மை மனமகிழ்ந்து அளிக்கும் பேறாகும். பேறு=வரம், செல்வம், நலம், பயன்.*

*பெண்ணின் தனிச்சிறப்பைப் போற்றி அதை வாழ்விற்குப் பயன்படுத்த வேண்டும். ஆண் பெண் இருவரும் பூரணம் பெறவேண்டும். ஒருவரை மற்றொருவர் துன்பக்குழியில் வீழ்த்தாது இன்பநிலைக்கு உயர்த்தவேண்டும். அத்தகைய சுத்தமுக்த சமத்வா*

னந்த யோகத்தில், பெண்ணுக்குத் தக்க இடமுண்டு. முற்கால இருடிகளெல்லாம் தம் பத்தினிகளுடனே தவம்புரிந்தவர்கள். மெல்லணி யின்பம், இதஞ்செயு மின்சொல், குயில்போ லின்னிசை, மயில்போற் சாயல், முத்துத் திருநகை, அன்புக் காந்தம், அள விலாப் பொறுமை, இதயநெகிழ்வு, இரக்கம், தியா கம், ஆண்மகன் வாழ்விற்கு அமுதம்போலுதவல், கணவனைப் பேணும் கற்பின் உறுதி, மனச்சோர் வகற்றி மணாளனைத் தேற்றல், முகமலர்ந்தூட்டல், மக்களை வளர்த்தல், மனைமாண்புறுத்தல்—இவை யெலாம் பெண்மையின் இணையிலாச் சிறப்பாம். புகழ், கல்வி, பலம், வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, ஆயுள்—இவை 16 வகைப்பட்ட பேறு அல்லது செல்வமாகும்.

**வாழ்க்கைத் துணையும், வகையும், விரிநலமும்**
**ஆக்கமும் பெண்சக்தி யாம்.** 2

வாழ்விற்கு அரிய துணையும், நிறைமுறையுடன் வாழும் வகையும், வாழ்க்கை கிளைத்து மலர்ந்து கனிந்து விரிவுபெற்று மங்கலம் பெருகும் நலமும், வாழ்க்கையின் வளமையும், சீரும், வளர்ச்சியும் பெண்சக்தியே யாகும்.

வருங்காலப் பூரணயோகிகள் பெண்வெறுப்புக் கொள்ளார்; பெண்ணைச் சக்தியென மதிப்பர். பெண் ணிடம் வணங்கத்தக்க பல நற்குணங்கள் உள்ளன; அவற்றைக்கொண்டு வாழ்வைப் புனிதமாக்கலாம். பெண்ணென்பது ஆசைதீர்க்கும் யந்திரமன்று; சமைத்துப்போடும் பொறியடுப்பன்று. மாதெனக்

காண்பது மகாசக்தி விளக்கம். வாழ்வின் வேரும் அடிமரமும் ஆண்; கிளை பெண்; மலர் கனியெல்லாம் இல்லற விளக்கம். வாழ்வின் அழகும் செழிப்பும் பெண்மையால் விளைவன. கற்புள்ள கணவனும் மனைவியும் காக்கும் இல்லறம் சிவசக்தி மந்திரமாகும். காதல் தளிர்த்து மலர்ந்து கனிவதும், கற்பின் மாண்பு விளங்குவதும், அன்பும் அறமும் தழைப்பதும், மரபு மங்கலமாகப் பெருகுவதும், சீரும் சிறப்பும் சேமமும் வெற்றியும் இல்லறவாழ்வில் எய்துவதும் பெண்சக்தியாலேதான். ஆண்பெண் தத்துவம் சிற்றின்பக் கண்களாற் கண்டறியமுடியாத உண்மை: அதிற் பல தெய்வ இரகசியங்கள் உள்ளன. பூரணம் பெறுவதற்கு ஆணிடம் ஓர் ஒளியும், பெண்ணிடம் ஒரு கனலும் உண்டு. "புருஷன் பிரகிருதி, சித்து அசித்து, க்ஷேத்ரக்ஞன் க்ஷேத்திரம்" என்ற பரம வேதாந்த தத்துவங்கள் ஆண் பெண் வடிவாக உலகில் உலாவுகின்றன. அப்பர் உலகமெங்கும் சிவசக்திக் கோலமாகக் கண்டார். உலகம் இறைவனின் சக்தி விளக்கம் ஆவது போலவே, இல்லறமும் வாழ்வும் பெண்ணின் அன்பு விளக்கமாகும். மனத்தை மயக்கும் ராஜஸ தாமஸ குணங்களாகிய மோகினிப் பிரகிருதியை வென்று, மனத்தெளிவும் ஆத்மசுத்தியும் அளிக்கும் சத்துவகுணமான திவ்யப் பிரகிருதியில் வாழ்ந்தால், ஆணும் பெண்ணும் தெய்வத்தன்மை பெறலாம். அதற்குப் பெண்மையும் பெருந்துணையாகும். புருஷன், பிரகிருதி, பரமாத்மா என மூன்று அத்யாத்ம தத்துவங்கள் இருப்பதுபோல, வாழ்வில் ஆண், பெண், சுத்தாத்மா என்னும் மூன்று தத்துவங்கள் உள்ளன. சுத்தான்ம உணர்வில் இருவர் வாழ்வும் ஊன்றினால் பூரணநிலை பெறலாம்.

**அறமன்பு மைங்கடனு மாற்றிடலுக் காதி**
**நிறைமனைவி யாகு நினை.** 3

அறம், அன்பு, ஐங்கடன்—இவை இல்லறத்தார் செய்ய வேண்டியவை. இவற்றை நன்கு செய்ய முதன்மையாயிருப்பவள் கற்பும், அறிவும் நிறைந்த மனைவியென்பதைக் கருதுக !

'அறம்' என்பது உடலறம் (சரீர தர்மம்), உயிரறம் (ஜீவகாருண்யம்), உலகறம் (பொதுநலம்), இல்லறம் (குடும்ப தர்மம்) என நான்கு வகைப்படும். சதிபதிகளின் உள்ளன்பு, மக்களன்பு, உறவினர்க் கன்பு, விருந்தினர்க்கன்பு, ஆருயிர்களுக்கன்பு, கடவுளன்பு—இவை அன்பின் விரிவாம். அறிவை வளர்த்தல், ஆற்றலை வளர்த்தல், குடும்பத்தைத் தாங்கல், பொது நலமாகும் புண்ணியஞ் செய்தல், சுத்தாத்ம சாதனம்—இவை ஐந்து கடமைகளாகும். மனைவி அறத்துணைவி, ஸஹதர்மசாரிணி ; தாரம் சக்தித் தாரை யளிப்பவள். கற்புள்ள இல்லாள் குண்டலிசக்தித் தாரையைத் தூய கணவனுக்கு அளித்து, வாழ்வையே சுத்த போகமாக மாற்ற வல்லவள். இல்லறம் ஒரு சுத்த சக்தி வேள்வியாகும்; ஞான - கர்ம யக்ஞம் ஆகும். கற்றல், கற்பித்தல் கல்விக்குப் பொருள் கொடுத்தல், நல்ல தொழிலால் சமுதாயத்திற்கு உதவல், வந்ததைப் பகுத்துண்ணல், காலை நண்பகல் மாலை இரவு நள்ளிரவு ஆகிய நேரங் களில் குடும்பத்துடன் இறைவனைத் தியானித்தல், மனமாசறுத்தல், மக்களை வளர்த்தல், உடலுயிர் பேணல், ஆருயிர்களுக்கிரங்கி அறவினை புரிதல், நாட்டுப் பணியாற்றல், சுத்தாத்ம வுணர்வுடன் உலகில் உலாவல் — இவையெல்லாம் இல்லறவேள்வியாம்.

இவ்வேள்வி நிறைவேறத் தருமபத்தினி இன்றியமையாத துணைவியாவள்.

பகட்டவணி கொள்ளாள், பதிக்கணி யாவாள்
அகந்நிற்கு வாய்த்ததிரு வாம். 4

பிறர் கண்டு மயங்கும்படி தனது அழகைப் பகட்டி மினுக்கமாட்டாள் கற்புள்ள மனைவி. அவள் தானே கணவனுக்கு விலையில்லாத ஆபரணம் ஆவாள். அத்தகைய உத்தமி வீட்டிற்கு வந்து வாய்த்த இலக்குமியாவாள். 'அணி' யென்றால் அழகு, பெருமை, அலங்காரம், ஆபரணம், நன்மை எனப் பொருளாம்; 'பொன்' என்றால் அழகு, இலக்குமி, பொலிவு, பிரகாசம் எனப்பொருளாம்.

பொன்னும் மணியும் பொருந்தியதுபோல், காதலும் கற்பும் பொருந்திய சதிபதிகள் ஒருவருக்கொருவர் உயிரணியாவர். ஒருவனுக்குப் பொன்னினும் பெரிய செல்வம் நன்மனையே. மாசற்ற பொன்னுக்கு மஞ்சட் பூச்சு வேண்டுமோ? வேண்டா. அதுபோலக் கற்பழகிற்குக் கலனழகு தேவையில்லை. மணாளன் இன்பமே மாதருக் கணிகலன். உடலை மறைக்கப் போதிய நல்லுடை, திருமங்கிலியம், முகத்தில் மஞ்சள் குங்குமம், மாசற்ற புன்னகை, நாவில் இனிமை, மனத்திற் பொறுமை—இவையே நங்கைக்கு இனிய நல்லணிகளாம். இயலழகே யழகு; பொன்னும் வைரமும், முகச்சாயமும் போட்டு மினுக்குதல் போலியழகே யாகும். விண்ணிற்கு இரவி மதி விண்மீன்கள் போலும், மரத்திற்கு மலர் கனிகளைப் போலும், இயற்கையில் ஒவ்வொன்றிற்கும் இயல்பான அணிகள் ஏற்பட்டுள்ளன. கட்டுள்ள உடலுறுதியும், ஆண்மையும்,

வீரமும், அறிவாற்றலும், அருட்பணியும் ஆண்மைக் கழகு; கற்பும், மங்கல மலர் நகையும், நாணமும், இனிமையும், மென்மையும் இல்லறத் திருவிற் கழகாம். பெண்கள் காதிலும் மூக்கிலும் கழுத்தி லும் மார்பிலும் காலிலும் நாட்டுச் செல்வம் உறங்கு கிறது. ஆயிரக்கணக்கான ஏழைகள் உழைப்பும் பிழைப்பும் பெற்று வாழக்கூடிய முதல், அணிமணிக ளாக மினுக்குகின்றன. அவற்ருல், எத்தனைத் திருட்டு, மோசம், கொலை, கொள்ளை, கள்ள விற்பனை, விப சாரம், கவலைச் சுமை, பொருள் நட்டம், வறுமை, சோம்பல், செருக்கு முதலிய தீமைகள் உண்டா கின்றன? மாதர் உடலில் மினுக்கும் நகைகளையெல் லாம் இன்றே எடுத்துத் தொழிலிற் போட்டால், நாட்டில் வறுமை யொழியும், கல்வியும் தொழில் வளமும் பெருகும். பொன்னகை யெல்லாம் போடுக தொழிலில்!

**பெண்ணிற் பிறங்கும் பெருங்கனலைப் புல்லினுல்**
**மண்வாழ்வு மங்கலவிண் ணும்.** 5

பராசக்தி வடிவான பெண்ணிடம் விளங்கும் மகத்தான மூலக் கனலை, சுத்த சாதன முறைகளாற் கூடினுல், மண்ணக வாழ்வு, எல்லா மங்கலமும் பொலியும் விண்ணக வாழ்வாக மாறும்.

'**கனல்**' என்பது சிற்சக்தி, குண்டலி, மூல வன்னி, அமுத தாரை, வல்லமை எனப்படும். அண் டத்தைப் படைத்ததும் பிண்டத்தைப் படைத்ததும் இந்தச் சக்திக் கனலே; இஃது ஆதாரங்களை நட்டு, யாக்கை மாளிகையை நன்கு அமைத்த பிறகு, மாந்த ரின் மூலாதாரத்தில் பாம்புபோலச் சுருண்டு உறங்கு கிறது. பெண்டிர் மூலாதாரத்தில் இக்கனல் எளிதில்

விழித்தெழும். பெண்டிரென்பது குண்டலிக் கனலே; ஆண் என்பது ஸஹஸ்ராரச் சிவனே; இருவருக்கும் பிரமசரிய வாழ்விலேயே மூலக் கனலும் ஸஹஸ்ரார ஜோதியும் விழித்தெழும் சாதனங்கள் அமைய வேண்டும். அதன் பிறகு மணவாழ்வு நடத்தினால், அது பேரின்பமாகும். குண்டலி சக்தி எழுந்து, ஆதார சக்கரங்களை ஊடுருவி மலர்த்தி, ஸஹஸ்ராரத்தி லுள்ள சிவதத்துவத்துடன் கூடி இன்புறும் நிலை வருமட்டும், கர்ப்பதானம் கூடாது. அதற்கேற்ற விரதங்களைச் சதிபதிகள் அனுட்டித்துவந்து சாதனம் நிறைவேறிய பிறகு, சந்ததியை இச்சித்துக் கூடினால் தெய்விக மைந்தர் பிறப்பர். அந்நிலையில் இந்திரியங்கள் நாம் சொன்னபடி கேட்கும்; மனம் நம் வசமிருக்கும்; ஆண் சத்தாகவும், பெண் சித்தாக வும், இருவரும் கூடி நடத்தும் தூயவாழ்க்கை ஆனந்தமாகவும் விளங்கும்; கீழியல்பிற் புத்தி செல்லாது; மேன்மேலும் உள்ளின்பத்திலேயே மனம் ஆழ்ந்து செல்லும். ஆகார நியமனம், ஆகார சுத்தம், மந்திர ஜபம், சுத்தத் தியானம், கணவன் மனைவியைச் சக்தி யன்னையாக மதித்தல், மனைவி கணவனைச் சுத்தனைப் போற்றல், விழைவினை யடக்கி விரதங் காத்தல், தூயநல்லொழுக்கம்—இவற்றால் சுமார் ஐந்தாண்டுகள் வைராக்கியமாக வாழ்ந்தால், இருவருள்ளும் உள்ள தெய்வக் கனலும், தெய்வ ஜோதியும் விழித்தெழும். அதன்பிறகு, மரபு விளங்க இரண்டு, அல்லது, நான்கு பிள்ளைகளைப் பெற்றதும் கருக்கணக்கை முடித்து, மீதி வாழ்வைச் சுத்தான்ம பரிபூரணத்திற்கே செலவிட வேண்டும். ஆணிலும் பெண்ணிலும் அற்புதமான தெய்வத் தன்

மைகள் உள்ளன ; ஒன்றினால் மற்றொன்று பூரணம் பெறலாம். குண்டலிக் கனல் விழித்தெழுந்து, இருவர் சாதனத்தினாலே மேலேறி, ஆதார கமலங்களை மலர்த்தி, ஸஹஸ்ராரத்திலுள்ள சிவனைக் கூடினால், பேரின்பத்தை இச்சிற்றுடல் வாழ்விலேயே பெறலாம். அந்த இன்பவாரிதியின்முன் சிற்றின்பம் ஓர் இன்பமாகவே தோன்றாது. அப்பேரின்பத்திற்குத் துணை செய்யும் ஓர் அற்புதக் கனல் பெண்ணிடமுள்ளது. அதை நிறைமுறையான சாதன வாழ்வாற் கூடுதலே உண்மையான திருமணமாகும்.

---

## 4. ஆண்மை

ஈட்டிமனை போற்ற லிசைபெருக நல்லறங்க
ளாற்றலிவை யாண்மைக் கழகு. 1

சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒரு நல்ல தொழிலால் பொருளை ஈட்டி, வீட்டைத் தாங்குதலும், தனது மரபின் புகழ் பெருக நல்ல அறங்களைச் செய்தலும் ஆண்மகனுக்கு அழகாகும்.

இல்லறத் திறமையும், இசைபெறு வாழ்வும், நல்லறப் பணியும், பொதுநலச் சேவையும் புருடனுக்கழகு. அறிவியலிற் சொல்லியபடி பிரமசரியம் பூண்டு கற்றதன் பயனாக, ஆண்மகன் சுதந்தரமாக ஒரு தொழில் செய்து பிழைக்கத் தகுதியுள்ளவனாகிறான். தொழிலில் வந்ததைக் கொண்டு, மனங்கோணாது மனைவியைப் பேணி, மக்களைப் போற்றி, முடிந்த மட்டும் உற்றார்க்குதவி, குலப்பெயர் வாழ நலஞ்செய வேண்டும்; ஆற்றலுக் கேற்றவாறு நாட்டிற்குப் பயனாகும் ஓர் அருட்பணி செய்யவேண்

டும். இருக்குமட்டும் அறவழியிற் புகழ்பெற வாழ வேண்டும்.

**இல்லாளோ டன்புற் றிணங்கி யறங்காக்க**
**வல்லான் மணவாள னாம்.** 2

வீட்டிற் கரசியான மனையாளுடன் உள்ளன்பு கொண்டு மனமிணங்கி, இல்லறத்தைக் காக்கும் நற்குண சீலனே இல்லிற்குரிய தலைவனாவான்.

அரசாட்சியும் சரி; மனையாட்சியுஞ் சரி. இணைந்த காதலர் இணங்கி வாழவேண்டும். மனைவி மதிக்க மணாளன் நடக்கவேண்டும். உண்ண உடுக்க உழைத்துக் கொணர்க; மனைவிமக்களை மகிழ்வுடன் பேணுக; நனிமுகங் காட்டி, இனியது சொல்லி, இங்கித மறிந்து பண்புடன் பழகுக. உப்புக் குறைந்தால் 'உப்பிடு' என்னாமல், சள்ளென விழுந்து, திட்டிச் சினவேல்; 'அமுதே, இன்பமே, அழகே' என்று அகங்குழைந்து வார்த்தையாடுக; வலுப் புணர்ச்சியும் வற்புறுத்தலும் இன்றி, உடல்நிலை மனநிலையறிந்து தன்னடக்கத்துடன் நடந்துகொள்க! பிறந்த வீட்டைப் பெருமைப்படுத்துக; குறைகூறாமல், 'இன்னது இன்ன மாதிரியிருந்தால் நல்லது' என்று இதமாய்ச் சொல்லுக; பெண்ணைப் பெருமைப்படுத்துக; செய்த சீர்களைச் செம்மையாய்ப் போற்றுக; பயனுள்ள வீட்டுப்பணிகளில் பங்கு கொள்க; நடந்து காட்டி நடக்கச் செய்க! பிற மாதரைக் கனவிலும் இச்சியாது, கற்புநிலையைக் காத்தொழுகுக; சந்தேகத்திற் கிடங்கொடாமல் கரவின்றி நடந்து கொள்க! காலை இருவரும் குடும்பத்துடன் தியான வழிபாட்டைச் செய்க; மாலையில்

விளக்கேற்றிக் கடவுள் வணக்கம் பாடித் தியானஞ் செய்க! இரவில் சித்தசுத்தியைத் தரும் பெரியார் நூல்களைப் பயின்று சிந்தித்தல் நலம். இந்த ஒழுங்கின்படி நடந்தால் சதிபதிகள் ஒற்றுமையாக வாழலாம். அரற்றல், வைதல், அடித்தல், இடித்தல், பிறந்த வீட்டை ஏளனஞ் செய்தல், காமவெறியிற் கடாப்போல் நடத்தல், அலித்தனம், மெலிவு, தீயவொழுக்கம், திருட்டுத்தீனி, தருக்கமாடல், செருக்குரைத்தல், சிறுமை, பொறாமை—இவற்றால் காதலர் இணக்கம் குறையும்; இல்லறம் அல்லற்படும்.

**மனைவியுடன் காதலாம்; மக்களுட னன்பாம்;**
**அனைவரொடுந் தண்ணருளே யாம்.** 3

தருமபத்தினியுடனே நிறைமுறையான காதலின்பந் துய்த்தல் அறமாகும். அருமை பெருமை பாராட்டி மக்களுடன் அன்பாயிருத்தல் இன்பமாகும். உலகிலுள்ள மாந்தர் அனைவரிடமும் கனிவுள்ள அருள்கொண்டு நடத்தல் கடமையாம்.

இல்லற வாழ்வினால் ஓர் உள்ளம் இன்னொருள்ளத்தைக் கூடி, சுற்றத்தாரிடம் பரவி, ஆருயிர்களிடம் விரிந்து உலகளாவுகிறது. காதல், அன்பு, அருள்—இம்மூன்றும் உள்ளத்தினின்று பெருகும் மூன்று இன்ப ஆறுகள். இவை, தனிமனிதன் வாழ்விற்கும், உலக வாழ்விற்கும் இன்பமாகும். இம் மூன்று சக்திகளாலே தான் உலகவாழ்வே நடக்கிறது. இவையே மாந்தர் ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும், அறநெறிக்குங் காரணமாவன. இம்மூன்று சக்திகளையும் இல்லறத்தார் பேணி வளர்க்க வேண்டும். ‘காதல்’ மலர், ‘அன்பு’ கனி,

'அருள்' அதனுள்ளிருந்து மீண்டும் மரபை வளர்க்கும் கருணை விதை! காதலின் மலர்களே நாட்டு மக்கள்; அன்பின் கனியே மனிதவாழ்க்கை; அருளின் சோலையே வாழ்வின்பம்! அன்பு பன்மடங்கு முற்றி அருளாகும். தன்னவரை அன்பு பேணும். மன்னுயிரெல்லாம் தன்னுயிரெனக் காணும் அருள். அருள் எல்லையற்ற இரக்கம். இதுவே, குணங்களில் மிகவும் உயர்ந்ததாம். புத்தர், மஹாவீரர், அப்பர் முதலிய மகான்கள் அருள்வடிவாக விளங்கினர்.

**தக்க மனையிருக்கச் சார்ந்தயலிற் சீரழிவான்**
**கக்கலை யுண்ணுங் கடை.** 4

தனது காதலின்பத்திற்குத் தகுந்த தருமபத்தினி யிருக்கும்போது, பிறமாதரைச் சார்ந்து சீரழியும் விபசாரன் ஒருவன், கக்கிய உணவையுண்ணும் நாயினுமிழிந்த கீழ்மகனாவான்.

அடக்கமுடியாத இயலுணர்ச்சிகளுள் ஆண் பெண் காதல் ஒன்று: அதை நிறைமுறையாக அனுபவித்து வெல்லுவதற்கே இல்லறம் ஏற்பட்டது. ஒரு மனைவியுடன் திருவுற வாழ்க; தாரமிருக்கத் தாரங் கெட்டலையேல்! அன்புமனைவியை அலட்சியஞ் செய்து, பிறமாதரை விழையும் காமவெறியன் கக்கலை யுண்ணும் கடைநாய் போல்வான். பொருத்தம் பார்த்தே புருடனைக் கொள்க; பிழையறப் பார்த்தே பெண்ணைக் கொள்க! கொண்டபின் கைவிட்டுப் பிறமாதரைப் பாரேல்! மனைவி, உண்மைக் கணவனுக்கு உயிரையுந் தருவாள்; ஆருயிர்க் காதலனுக்கு அன்புயி ராவாள்; கணவன் பிறமாதரை நினைப்பதாக அறிந்தால், வெந்து நொந்து, விசாரம் பெருகி, மனம்

பிடியாது மச்சரப்படுவாள். குடும்பக் கலகங்கள் இதனாற் பெருகித் தீங்கு விளையும். தன் மனைவி பர புருடனை விரும்பினால் கணவன் எப்படிக் கண்டிப்பானோ, அதே மாதிரி அவன் பிறமாதரை நினைக்கும் போது, 'சீ, பேய்மனமே! தங்கம் போலே பத்தினி யிருக்கையில், விபசாரம் செய்யத் துள்ளுகிறாயா? தூ! வெட்கமில்லையா? ஒருவன் தோய்ந்த தோளை விரும்பும் எச்சில் வியாபாரத்தை விடு!' என்று தன்னைத்தானே கண்டித்துத் திருத்த வேண்டும்.

**கண்ணொத்த வீட்டிற் கனதன மங்கலமாம்**
**மண்ணொத்த வான்பயிரைப் போல். 5**

இரண்டு கண்களும் ஒத்து ஒரு பொருளை ஒரே நோக்காகப் பார்ப்பது போன்று, சதிபதிகள் மாறுபாடில்லாமல் கண்ணொத்து ஒரே மனத்துடன் வாழும் வீட்டில், கனதன மங்கலங்களெல்லாம், மண்ணுடன் பொருந்தி வளரும் மரப்பயிரைப் போல வளர்ந்து வரும். மங்கலம் என்றால் ஆக்கம், பொலிவு, நலம், நற்செயல், தருமம், சிறப்பு எனப்பொருளாம்.

மண்ணுக்குத் தக்க மரம், கண்ணுக்குத் தக்க மனம், மனத்துக்குத் தக்க மனை வாய்க்கும். மண்ணொத்த பயிர் வளம்பெறும்; கண்ணொத்த காதலர் வாழ்வு களிப்புறும். 'அவள் அழகாயிருக்கிறாளே! அவன் மன்மதன் மாதிரி யிருக்கிறானே! நமக்கு வாய்த்தது நன்றாயில்லையே' என்று பக்கம் பாராது, கண்ணைக் காத்தல் காதலருக்கு இன்றியமையாத ஒழுக்கமாகும். மனமொத்த வீடு மங்கலமாகும். கணவன் வேறொரு பெண்ணை விரும்பி நோக்காமல், மனைவியும் வேறோர் ஆடவனை விரும்பி நோக்காமல்,

இருவரும் தம்முள் ஒருவரையொருவர் விரும்பிப் பார்க்கும் விடே கண்ணொத்த விடாம்.

---

## 5. காத லின்பம்

குலமோங்குஞ் சக்திக் கொழுந்தோங்குங் காதல்
நலமோங்க நாடோங்கு நாள். 1

காதலால் உயிர்க்குலம் ஓங்கும். நிறைமுறையான காதல் வாழ்வால் சக்திக்கனல் ஓங்கி வளரும். அத்தகைக் காதல் மாசற்று நலம்பெறச் செழித்தால், அந்நாளே மண்ணிலம் இன்பத்தில் ஓங்கும் நன்னாளாகும்.

மனமும் புலன்களும் அடங்காமல், இப்போது காதல் வாழ்விற் பல சிக்கல்கள் உண்டாகி, இல்லறத்தைப் பாழ் பண்ணிவிட்டன. காதல் ஓர் அரிய கலையாகும்; பெண் வடிவான சக்தி பூரணம்பெற ஆண் வடிவான சிவத்தை விரும்புவதே காதல். ஒன்றின் நிறைவு மற்றொன்றில் உள்ளது. மேலழகு தோலழகைப் பார்த்து விழையும் மனமயக்கம் நாளடைவில் அற்றுப்போம். ஆணிலுள்ள சுத்தன் பெண்ணிலுள்ள சக்தியை விரும்பும் சுத்தசக்திக் காதல், கீழியல்புகளை வென்று, தெய்வக்கனலாக மாறி, அமர வாழ் வளிக்கவல்லது. காதலை உலகிடம் திருப்பினால் உலகியல் வாழ்வாம். காதற்கனலை உள்ளே திருப்பினால் தெய்விக வாழ்வாம். குலக்கொடி, நிலக்கொடி, அறக்கொடி, ஆத்ம ஞானக்கொடி — அனைத்தும் வளரக் காதலென்னும் சக்தி பயனாகும். காதலை வழியறிந்து பயன்படுத்தினால், உலக வாழ்வு சீரும் செல்வமும், வீறும் அறிவும் பெருகி மங்கலமாகும்.

ஈதலிற் காதற் கிணையில்லை ; தன்முகிலும்,
வாதத்தான் மாறு படும். 2

உலகம் செழிக்கத் தன்னையே முற்றிலும் தந்துத வும் மழைமேகங்கள்கூடக் காற்றினால் மாறுபடும். காதல் உள்ளத்திற் பற்றினால் தன்னையே முற்றிலும் தரும். இந்த ஈகையில் காதலுக்கு இணையேயில்லை. குளிர்காற்று முகமன்சொல்லி யழைத்தால் முகில் மழை வழங்கும் ; ஆடிக்காற்றில் அஃது அலைந்து கலை யும். ஆனால், காதல் எதற்கும் அஞ்சாது, சலியாது தரும். குலமெதிர் நிற்கினும், கூற்றெதிர் நிற்கினும், எத்தனை இடர்கள்வரினும் காதலுறுதி கலையாதோங் கும். இடர்களையெல்லாம் உரமாகக்கொண்டு காதற் பயிர் செழிக்கும். காதலிக்குக் காதலன் உயிர் ; காதலனுக்குக் காதலியே உலகம். காதல் வீரத்தைத் தூண்டும் ; அச்சத்தை யோட்டும் ; ஆண்மையை வளர்க்கும். 'எப்படியாயினும் பிழைப்போம் ; நாம் இருவரும் ஒன்று யிருந்தாற் சரி' என்பர் உண்மைக் காதலர். காதலுறுதி சாதலையும் பொருட்படுத்தாது. இளமை யினிப்பதும், இகவாழ்வு சுவைப்பதுங் காத லால் ஆம். அழகுக் கலைகள், அமுதக் கவிகள், சங்கீ தம், நாட்டியம், நாடகம்—இவை தழைப்பதும் காத லுணர்ச்சியாலே தான். மலரும் கனியும் உலகிற் செழிப்பது காதலால். சோலையும், தென்றலும், அலைகடலும், இரவும், மலரும், குயிலிசையும், இயற்கை வனப்பும் இன்பமாவது காதல் நிறைவால். இவையெல்லாம் துன்பமாவது காதலின் ஏமாற்றத் தால். காதல் கவலையைக் கொடுக்கும் : கவலையைத் துடைத்துக் களிப்பையுங் கொடுக்கும். காதலால் இகபர சுகமாகும். அதை நாம் பயன்படுத்தும் வகை

யில் எல்லாம் உள்ளது. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி", இறைவனை ஓதி, நன்னெறி பெற்றனர் திருத்தொண்டர்.

புண்ணுற்று மோகப் புணர்வுற்று நொந்தழியும்
கண்ணற்ற காமக் கடா. 3

கண்ணற்று, ஆத்திர வெறியேறும் காமமாகிய கடா (விலங்கு), நெறியில்லாது மோகத்தினால் கண்டவரைச் சேர்ந்து புண்ணாகிப் பிணிசுமந்து நொந்து மெலிந்து நலமழியும்.

காதல் புனிதமானது; அஃது உள்ளத்தினின்று பிறப்பது. காமம் நரம்புகளின் அதிர்ச்சி. காதல் நாணத்துடன் பொறுக்கும். காதல் மலர் மணத் தென்றல் போலும்; காமம் கடற்புயல் போலும். காதல் துறை சேர்க்கும்; காமம் வாழ்வுப் படகைக் கவிழ்க்கும். காதல் நாண்வேலியுள் மேயும் மான் போலும்; காமம் கட்டுக்கடங்காத காட்டு மதயானை போலும். காதல் வீறு தரும்; காமம் சோர்வே தரும். காதல் குலத்தை வளர்க்கும்; காமம் குலத்தைக் கெடுக்கும்; வெறிகொண்ட கடா மாதிரிக் கண்ணறியாது கண்ட இடத்திற் பாய்ந்து அலைந்து, மோகப் பாறையில் முட்டிக் கட்டுக்கடங்காது திரியும். ஆசையை அடக்கமாட்டாதவன் கலியாணம் செய்து கொள்வது மிகவும் நல்லது. 'விலைப்பெண்' என்ற பெயரே யில்லாது நமது சமுதாயம் மாசற்றோங்குக! நெறியற்ற காம வெறியால் ஆண்மை யழியும், ஆற்றல் மெலியும், வீரியம் சிதையும், வெட்டை மீறும், வாழ்வு பாழாம். அச்சமும் இருளும், அழிவும்

இடர்களும், நோவும் சாவும் காயப் பித்தரைத் தொடரும்.

பெண்ணைப் பழிக்காதே ; பெண்ணை யிழிக்காதே ;
பெண்ணைப் பெருமைப் படுத்து. 4

பெண்ணைப் பழிக்காதே; உலகை வளர்க்கும் பெண்ணை இழிவாக்காதே! வாழ்வுத் துணைநலமாகிய பெண்ணைப் பெருமைப் படுத்துவாயாக!

வாழத்தெரியாது மாதரைப் பழித்தல் பேதைமை. மனத்திறலின்மை, வீரிய பலமின்மை, உழைக்கச் சோம்பல், பிழைப்பிற்கில்லா வறுமை, வாழ்வின் இரகசியத்தை யறியாமை, பெண்ணின் உண்மையறியாமை, பெண்மையைக் கேவலம் சிற்றின்ப யந்திரமாகக் கருதும் மாயம்—இவற்றால் பெண்வெறுப்பும், 'பெண்ணென்றால் மாயை, பந்தம்' என்னும் போலி ஞானமும் நாட்டில் வலுத்தன. கணவன் இறந்து போனால் உயிரோடிருக்கும் பெண்ணை உடன்கட்டையேற்றும் கொடுமைகூட ஒரு காலத்தில் இருந்தது. ராஜா ராம்மோஹன் ராயின் முயற்சியால் அது நின்றது. இப்போது, கைம்பெண்களை மொட்டையிட்டு, மூலையிலடைத்து, 'முண்டை, விதவை, அபசகுனம்' என்று கொடுமை செய்யும் மூடப்பழக்கமும் வீர வாலிபர் முயற்சியால் நீங்கி வருகிறது. ஆயுளெல்லாம் அடிமையாய் அழவோ பெண் பிறந்தது? மூலையிலடைத்தால் வயதும், இளமையும் அடங்கிப் போகுமா? விலை வாழ்வு, விபசாரம், சிசுக்கொலைகள், தற்கொலைகள் எல்லாம் பெண்ணுக்குச் செய்யும் கொடுமைகளால் வருவனவே. ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக அறிவாற்றல்களைப் பெருக்கி வாழவேண்டும்.

பெண்ணடிமையும், பெண்ணைப் பழித்தலும், பெண்ணை இழிவு செய்யும் அடக்குமுறைகளும் அடியோடழிய வேண்டும். வரதட்சிணை, விதவையாக்கல், விவரந்தெரிவதன்முன் கட்டாயக் கலியாணம்— இவையெல்லாம் சமுதாயத்தை விட்டொழிக! மனைவியை யிழந்தவனுக்கு மறுமணம் புரிந்துகொள்ள எவ்வளவு உரிமையுண்டோ, அவ்வளவு உரிமை கணவனை யிழந்த நங்கையருக்கும் மற்றொரு மணாளனை வரித்து இல்லறம் நடத்தவுண்டு. இல்லறத்தின் மேன்மையையும், வாழ்வாங்கு வாழும் வகையையும் எல்லாருக்கும் நன்றாக எடுத்துச் சொல்லி, நாட்டில் ஆண்மையுள்ள ஆணும், பெண்மை மிக்க பெண்ணும், நிறைமுறையாக வாழச் செய்யவேண்டும். ஒரு நாட்டிற்கு அத்யாத்ம ஞானமும், சமயநெறியும், அரசியல் விடுதலையும் எவ்வளவு அவசியமோ, அவ்வளவு நாட்டு மக்களுக்கு இல்லறத் திறமையும், பெண் சுதந்தரமும் அவசியமாகும். நல்ல ஆணும், நல்ல பெண்ணும் கூடி இல்லறத்தை நன்றாகக் காக்கும் நாட்டிலேதான் வீரதீரர்களும், வித்தகரும், தெய்வப் புலவரும் உண்டாவர்.

**காதலுல காக்குங் கனலதனை யீசன்பால்**
**ஈதலே யின்பமென் றெண்.** 5

பயிருக்கு வான்மழையைப் போல உயிருக்குக் காதல் ஆகும். காதல் சிருட்டிக்கனல். அது புனிதமான சக்தி.

இயல்பான பசிக்கு இயல்பான உணவுண்டால் சுகமாவதுபோல, இயல்பான காதலிற்கூடி இயல்பான இல்லறத்தை நுகர்ந்தால், ஆண் பெண் வாழ்வு

பூரணம் பெறும். அளவறியாமல், மதிமயங்கிப் புலன்களை அடக்கியாளாமல், கள்வெறியினும் கொடிய காமத்திற்கு அடிமைப்பட்டவன் புனிதமான இல்லறத்தில் அடியெடுத்து வைக்கத் தகுதியற்றவனாவன். இளமையில் நல்ல பயிற்சியில்லாமல், இருட்பழக்கமும், கள்ளவுறவுகளும் மணவாழ்வை இரண வாழ்வாக்குகின்றன. கருக்குலைவது, காய் விழுவது, செத்துப் பிறப்பது, சீவனற்றிருப்பது, மலடாவது—எல்லாம் காதலுக்குச் செய்யும் கொடுங் கோலின் பயனேயாம். "காம ரூபமாகிய துராசை பிடித்த பேயை வெல்!" என்றான் கண்ணன். ஆணும் பெண்ணும் முதலில் பருவ வுணர்ச்சிகளை அடக்கியாளக் கற்கவேண்டும்: ஆணைப் பெண், மானிடம் போர்த்த ஈசனாகவே காணவேண்டும்; பெண்ணை ஆண், மானிடம் போர்த்த பராசக்தியாகவே காணவேண்டும். ஆணிடம் உள்ள ஈசனையே பெண் காதலிக்க வேண்டும்; பெண்ணிடமுள்ள சக்தியை ஆண் வணங்க வேண்டும். காதலை யெல்லாம், உள்ளத்திற் கோயில் கொண்ட தெய்வப் பொருளின்பால் திருப்பவேண்டும்; அதுவே உண்மைக் காதல்; அதுவே உண்மையின்பம். காதலைப் புலன்கள் வழியே போக்கி, இந்திரியங்களை யடக்காமல் காமாந்தகாரத்திற் கட்டவிழ்த்துவிட்டால் வாழ்க்கை துன்ப நரகாகும்; பிணியும் சோர்வும் பெருகும். உள்ளடக்கி ஆன்மக் கலப் பெய்தினல், காதல் ஒரு சக்திக் கனலாக மாறி உறுதியும் பொலிவும் இன்பமும் அளிக்கும். கேவலம் தேக சம்பந்தத்திற்காகக் காமுகன் எப்படித் துடிக்கிருனே, அப்படியே அறிவாளி ஆத்ம சம்பந்தத்திற் காகத் துடிக்கவேண்டும். வாழ்க்கை அந்தராத்மா

வான ஈசனிடமிருந்தே மலர்ச்சிபெற்று, அவனுக்கே வேள்வியாகவேண்டும். அதற்கு, நம் புலன்கள், மனம், மனக்கிளர்ச்சிகள், உணர்ச்சிகள் அனைத்தை யும் அவனுக்கே அர்ப்பணமாக்கவேண்டும். உலகில் காதலிக்கத் தக்க பொருள் ஒன்று உண்டானால் அஃது அவரவர் உள்ளத்தில் ஜீவசாட்சியா யிருக்கும் சுத்தான் மாவே. அதுவே இரண்டு பூரண சக்திகளைக் கொண்டு ஆணாகவும் பெண்ணாகவும் விளங்குகின்றது. மலரும் நாரும் சேர்ந்து மாலையாவது போலே, வாழ்வின் மங் கல மலர்க் கும்பலாகிய பெண்மையும், அதற்கு ஆதார மாகிய ஆண்மையும் சேர்ந்து, ஒரு நீண்ட அன்பு மாலையாகி இறைவன் திருமார்பில் விளங்குக! நாத விந்துகள் ஓஜஸாகவும், தேஜஸாகவும், தவக்கனலாக வும் மாறி (Spiritual lustre and divine energism), மனித சமுதாயத்தில் அமரவாழ்வை விளக்குக! இவையே காதலின் இரகசியமும், இல்லற வாழ்வின் குறிப்பும் பயனுமாகும். காதலைக் கொண்டு கடவுளைச் சேர்வாம். பெண்ணால் தெய்வத் தன்மை பெறு வாம். இனி நிறைமுறையான காதலர் கூடிக் குலம் வளர்ப்பதைப் பற்றி யறிவாம்.

ஏழாவது, இல்லறவியல் முற்றிற்று.

# அ. குல வியல்

உலகில் பூரணமான தெய்வஜாதியை உண்டு பண்ணவேண்டும். உலகோர் ஒரு குலத் தெய்வ மைந்தராக வாழ வேண்டும். வாழ்வெல்லாம் அந்த ராத்மனுடன் கலந்த யோகமாக வேண்டும். அதற்குக் காதற்கனலைக் கடவுட் கனலாக்கிய பூரணமான தாய்தந்தையரை உண்டுபண்ண வேண்டும். சதி பதிகள் யோக யுக்தராக ஆன்மக் கலப்பில் வாழ வேண்டும். உடலும் உறுப்புக்களும் வளர்ச்சி பெற்றால்மட்டும் போதா; உடல் சட்டையே. அதனுள் உள்ள அந்தக்கரணங்களும் மாசற்றுப் பூரண வளர்ச்சி பெறவேண்டும். மூலக்கனல் விழித்து, சுத்தான்ம வுணர்ச்சி யெழுந்து, தியான சாதனத்தால் அதில் நன்கு நிலைத்த பிறகேதான் ஆணும் பெண்ணும் பூரண வளர்ச்சி பெற்றதாகக் கருதலாம். அந்நிலையிலே பூரண மைந்தர் பிறக்க முடியும். அத்தகைய பூரண நிலை யடைந்தபேர்கள் உலகை வளர்க்க முற்பட்டால் மனித குலம் தெய்வ குலமாகும். அத்தகைய குலத்தை வளர்க்கும் தத்துவமே இக் குலவியலில் விளக்கப்படுகிறது: குல வாழ்வே நில வாழ்வு; குலக்கற்பகம், அருளின்பக் கனி குலுங்கச் செழித்தோங்க வேண்டும். வாய்மை வாழ, மரபு செழிக்க, வையகம் வாழ இயல்பினால் ஆற்றும் குலவாழ்வின் பண்பை இக்குலவியலிற் காண்போம்.

## 1. தாய்

**எல்லார்க்கும் ஓரன்னை ஈச னருளன்னை**
**எல்லாரும் ஓர்குல மென் றெண். 1**

*ஈசன் அருளாகிய பராசக்தியன்னையே உலகுயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற அன்னையாவாள்: அவளே உலகத் தாய்; அவள் மைந்தரே 84 கோடி ஜீவராசிகளும் ஆவர். ஆதலால், எல்லா உயிர்களும் ஓர் அருட் குலமென்று கருதுக!*

*குலத்தைப்பற்றிப் பேசும்போது நம்முன் வருவது தாய்; உலகத் தாய். உயிர்க் குலத்தைத் தோற்றி வளர்க்கும் அருளன்னையை வணங்குவாம். அனைவரும் அவள் பிள்ளைகள். ஆதலால், அனைத்துயிர்களையும் கூடப்பிறந்தவர்போல மதித்து அன்புசெய்வாம்.*

**தாய்சக்தி வாழியநீ! தங்கக் குழந்தைகளால்**
**தேயம் வளர்க்குந் திரு. 2**

*ஒவ்வொருவரும் தாயை இவ்வாறு வாழ்த்துக:— 'பராசக்தி வடிவான எந்தாயே! நீயே பொன்னனை குழந்தைகளைப் பெற்றுப் பேணித் தேசத்தின் க்ஷேமத்தை மேன்மேலும் வளர்த்து வளம்பெறச் செய்கின்றாய்; நீயே தேசத் திரு! எந்தாய் வாழ்க!'*

**தாய்மா ரிடத்தாகுந் தன்னாட்டின் சீர்மையெலாஞ்**
**சேய்வடி வாகச் செறிந்து. 3**

*தனது நாட்டின் சீர்மையெல்லாம் குழந்தையின் வடிவாகச் சேர்ந்து நாட்டின் அன்னையரிடம் விளங்குவதாகும்.*

*'குழந்தை' யென்பது குட்டியுலகம். சேயின் பெருமையே தேசப் பெருமை. சேயைத் தருவது*

தாய். ஆதலால், ஒரு நாட்டின் சீரும், பெருமையும், வளமையும், சிறப்பும், நலமும், திருவும், வெற்றியும் தாய்மாரினின்றே வருவன. நாட்டினர் முதல் வேலை நல்ல தாய்மாரை யுண்டுபண்ணலே. பெண்களுக்குத் தூய கல்வி, நல்லொழுக்கம், உடலுறுதி, மனவுறுதி, உயர்ந்த நினைப்பு, இல்லறத் திறமை—இவை இன்றியமையாதன. நாட்டு வரலாறு, நற்புதல்வரைப் பெற்று வளர்க்கும் அறிவையும் அனுபவத்தையும் புகட்டும் வாழ்வு நூல், வீட்டு நிர்வாகம், கணவனை மகிழ்விக்கும் வகை, பாக சாத்திரம், தருமசாதன முறை ,யோகப்பயிற்சி—இவையெல்லாம் கன்னிப் பருவத்திலேயே பெண்களுக்குப் பயிற்றித் தாய்மாரைத் தயாராக்கவேண்டும். தாய் சிறக்கத் தாய்நிலம் சிறக்கும்.

**வீர மகனையே யீன்றெடுத்த மெல்லியட்கு**
**வேறுதவ மேனோ விளம்பு ? 4**

வீரப் புகழோங்கும் மைந்தனைப் பெற்ற தாயாகிய மென்கொடிக்கு, வேறு தவம் எதற்கு ? சொல் !

நல்ல மைந்தர் பிறப்பது பெற்றோரின் தூய வாழ்வையும், சித்த விருத்தியையும் பொறுத்திருக்கிறது. பிள்ளைப் பேறு நாட்டை வாழவைக்கும் ஒரு கடமையாகும். மற்றக் கடமைகளுக்குச் சாத்திரமும் நடைமுறைகளும் இருக்கின்றமை போலவே இதற்கும் உண்டு. நமது நாட்டு மகான்கள் இல்லறத்தாருக்கு நல்ல புதல்வர் பிறந்து நாடு தழைக்கக் காதல் விதிகளையும், சதிபதிகள் அனுட்டிக்க வேண்டிய விரத ஆசார நியமனங்களையும், சதிபதிகள் மகப்பேற்றிற்காகக் கூட வேண்டிய காலங்களையும் குறித்து அரிய நூல்களை எழுதி

யிருக்கிறார்கள். அவற்றின் சாரத்தையும், தற்காலத்தில் மேனாட்டார் எழுதியுள்ள காதல் சாத்திரங்களின் சாரத்தையும் ஆராய்ந்து இங்கே சுருக்கமாக உரைப்பாம் :

முன்னியலிற் சொன்னது போல, அறிவும் ஆண்மையும் மிக்க வாலிபனைக் காதலித்து, இல்லறப் பயிற்சி பெற்ற நங்கை மணக்கிறாள். இருவரும் அறிவியல், அன்பியல், நடையியல்களிற் கூறிய ஒழுக்கங்களை அனுட்டிக்க வேண்டும்; மனோவேகங்களை அடக்கி யாள வேண்டும். உடல்; அந்தக்கரணம் இரண்டும் மாசற்ற உறுதி பெற்ற பிறகே, பிள்ளைப் பேற்றை யடையத் தகும். மந்தம், மயக்கம், ஆத்திரம், காமவெறி—இவை யின்றி அமைதியாகவும், மனத் திண்மையுடனும், மகிழ்வுடனும் நல்ல வேளை பார்த்துச் சதிபதிகள் கூட வேண்டும். நோய், தளர்வு, கவலை, மனக்குறை, சோம்பல், ஏக்கம், வயிறு நிறைய உண்ட வேளை, பட்டப் பகல், அமாவாசை, பாட்டிமை, அட்டமி, சதுர்த்தசி, பௌர்ணமி, மாதவிடாயான ஆறு நாள்—இவற்றை விலக்கிக் கூட வேண்டும்: மாதவிடாயின் போது மூன்றரை நாட்கள், 25 அடி விலகி யிருக்க வேண்டும். அப்போது தீண்டினால் ஆணுக்கு ஆண்மை அழியும்! பெண்ணுக்குத் தீரா நோய்கள் உண்டாகும். இரட்டை நாளில் ஆணும், ஒற்றை நாளிற் பெண்ணும் பிறக்குமென்பர். கூடுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, தாதுக்களைப் பலப்படுத்தும் தூய வுண வுண்பதுடன், யோகாசனங்களும், பிராணாயாமமும் செய்யவேண்டும். ஒரு மாதமாவது பரிசுத்தமான பிரமசரிய விரதம் காத்த

பிறகே கூட வேண்டும். மலச்சிக்கல் கூடாது; இருந்தால் எனிமா வைத்துக் கொள்ள வேண்டும். கூடும் நாளில் இரவில் கனமான உணவு கூடாது. பால், பழம் மாலையில் அருந்தலாம். ஊன், மது, தாமத வுணவுகள் கண்டிப்பாகக் கூடா. அன்று, வேறு கவலைகளை யொழித்து, மௌன விரதம் இருந்து, ஆசாரமாக இறைவனைத் தியானம் செய்து, இருவரும் பின் வருமாறு மானசீகமாக வணங்க வேண்டும் :

'அருளிறைவனே! எங்கள் குலமும், நாடும் சீரோங்கி விளங்க, அறிவும் ஆற்றலும் ஆயுளும் ஒழுக்கமும் புலமையும் நிறைந்த தீர மைந்தனை யருளாய்! இராமன், கண்ணன், கந்தன், விஜயன், சிவாஜி, அப்பர், வள்ளுவர், கம்பர், இளங்கோ, ஏசுநாதர், புத்தர், தாயுமானவர், வள்ளலார், இராஜராஜன், அனபாயன், அக்பர், ஔவை, திலகவதி, மங்கையர்க்கரசி, சந்தனை, மீராபாய், ராதை, சீதை, பாஞ்சாலி போன்ற குழந்தைகளை எங்களுக்கு அருள்வாயாக!'

இவ்வாறு தியானித்து, மாலையில் திருவிளக் கேற்றி, அதற்குக் குங்கும மிட்டு, 'சுடரே, உன்னைப் போல எங்கள் குலத்தை விளக்க ஒரு சோதி மைந்தனை அருளுவாயாக!' என்று அருட் சோதியை வணங்கிய பின், பாலும் தேனும் நிவேதித்துண்டு, சதிபதிகள் அமர்ந்து, இஷ்ட தெய்வங்களின் உருவம், அல்லது அவரவருக்குப் பிடித்த பெரியார் உருவத்தை மனத்தில் ஆவாஹனம் செய்துகொண்டு, 'அருளிறைவனே! எங்கள் இல்லறம் விளங்கி யோங்க, அறிவும், ஆற்றலும், ஆண்மையும், தீரமும், வீரமும், தெய்வப் புலமையும், பொது நலத்

திறமையும், அன்பும், சர்வாத்ம நேயமுங் கொண்ட தெய்விக மைந்தனை........, புனிதமான மகளை...... சிவாஜி போன்ற வீரப் புதல்வனை,........... ஔவை போன்ற அமுதக் கன்னியை அருள்வாயாக! எமது வாழ்வெல்லாம் உனக்கே நிவேதனமாகுக! எமது மரபுக் கற்பகம் தெய்வக் கனிகளைத் தருக! உன்னருளே எமது பிள்ளையாகுக!'' என்று வழுத்தித் தியானித்த பிறகு, பஞ்சணை மீதேற வேண்டும். இருவர் மனமும் ஒத்து, உயர்ந்த நினைப்புடன் தாம் மைந்தராகப் பெறக் கருதும் வீர வடிவத்தில் லயித்திருக்க வேண்டும். ஒத்துக் கூடினால் முத்துக் குழந்தை; உத்தம நாளும், உரிய வேளையும், உள்ளமைதியும், மன மகிழ்ச்சியும், உன்னத நினைப்பும், உடலுறுதியும், தாது வளமும் சரியா யிருக்கும் போது மேற்சொன்னபடி கூடினால், உத்தமப் பிள்ளை யுதிக்கும்.

சோறூட்டும் போதன்பாய்ச் சொல்லிவாழ் வின்கடமை
வீரத்தா யூட்டும் விறல். 5

சோறூட்டும் போதே அன்பாக மனித வாழ்வின் பயன், கடமை முதலியவற்றைக் கதைகளாகச் சொல்லி வீரத்தாய், பிள்ளைக்கு வீரமும் பலமும் தைரியமும் ஊட்டுவாள். பிள்ளை வளர்த்தல் ஒரு பெரிய தருமமாகும்; அதில் தாய்க்கே பொறுப்பதிகம். அவளே, நடமாடுங் கோயிலான உடலை ஊட்டி, விளையாட்டுக் காட்டி, அழகும், ஆற்றலும் பொலிய அமைக்கிறாள். தாய்ப்பாலே குழந்தைக்கு உயிர்த் தாரை; தாய்க்கு நல்ல ஊட்டங் கொடுக்க வேண்டும். தாய்ப் பாலே குழந்தையின் உடலையும் நரம்புகளையும் அமைப்பது; பால் கொடுக்கும் போது

கோப தாபங்கள் ஆயாசங்கள் இல்லாமல் திருவருட் சிந்தனையுட னிருக்க வேண்டும். 'நாளூட்டும் ஒவ்வொரு துளிப் பாலும் ஞானசம்பந்தப் பாலாகிக் குழந்தைக்கு அறிவும் பலமும் நல்குக!' என்று தாய் நினைக்க வேண்டும். முலைப்பா லில்லாவிட்டால் பெட்டிப்பால் கொடுக்க வேண்டா; நல்ல காராம் பசுவின் பால், அல்லது வெள்ளாட்டுப் பால் புகட்டலாம்; அல்லது, ஏழைகள் கேப்பைக் கஞ்சியைப் பக்குவமாகக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு மிகத் தூய வுணவே கொடுக்க வேண்டும். குழந்தை, 'அம்மா, அப்பா' என்று பேசத் தொடங்கும் போது, திவ்ய நாமங்களையும், மகான்களின் பெயர்களையும் உச்சரிக்கப் பயிற்றுக! குழந்தை சோறுண்ணும் பருவம் எய்தியதும், சிறு சிறு கதைகள் சொல்லிக் கொண்டே வேடிக்கையாகச் சோறூட்ட வேண்டும். இரவில் படுக்கப் போகும் போது, குழந்தை அக் கதைகளைத் திருப்பிச் சொல்ல வேண்டும். குழந்தையின் வாக்கியங்களைத் திருத்தி மறுப்படியும் சொல்லச் சொல்ல வேண்டும். 'இந்தக் கதையிலே இன்னார் செய்த மாதிரி நடக்க வேண்டும்; இன்னார் போல நடக்கக் கூடாது' என்று குழந்தையாகச் சொல்லும்படி கேள்வி போட வேண்டும். அம்புலி காட்டி அமுதூட்டும் போதே, சுற்றிலும், வானிலும் உள்ள இயற்கைக் காட்சிகளைக் காட்டிச் சொற்கள் பயிற்ற வேண்டும். பகலில் வேடிக்கையாகச் சில காரியங்களை யேவி, வினைச் சொற்கள் பயிற்ற வேண்டும். தீச்சொல், தீய நடத்தைகளை அவ்வப்போது அன்பாகச் சொல்லி, மறுத்து, அவற்றிற்கு எதிரான நல்ல சொல், நல்ல நடத்தைகளைப் பழக்க வேண்டும்;

நல்ல காட்சிகளைக் காட்ட வேண்டும். உலக மகான்கள், வீரர், அறிஞர், பொது நலத் தொண்டர், தெய்வங்கள் முதலியோரின் படங்களைக் காட்டி, இனிமையான கதைகளைச் சொல்லலாம். இவ்வகையாக ஐந்து வயது மட்டும் குழந்தைகளைத் தாயார் உயர்ந்த எண்ணங்களைச் சோற்றுடன் ஊட்டிப் பயிற்ற வேண்டும். குழந்தை பிறந்த போதே அதன் கலவியும் தொடங்குகிறது. தாயே குழந்தையின் முதற் குரு.

---

## 2. தாய்ப் பணி

சாவையு மஞ்சாது தாயின் பணிபுரிவோம் ;
ஆவிக் குரியா ளவள் ! 1

கூற்றைக்கூட அஞ்சாமல் எதிர்த்துப் பொருது, எமது அன்னையின் நற்பணியைப் புரிவோம். எமது உயிரைத் தந்த அவளுக்கு, அத்தகைய தியாகம் செய்தல் தகுந்ததேயாகும்.

பெற்ற தாயினும் பெரியதொன்றில்லை ; அன்னையின் பெருமைக்கு அளவில்லை : மேரி, மாயாதேவி, கோசலை, தேவகி, ஜீஜாபாய், இவர்களின் வரப்பிரசாதங்களல்லரோ கிறிஸ்துவும், புத்தனும், இராமனும், கண்ணனும், சிவாஜியும் ! நாட்டுத்தாயின் ஆவேசத்தாலன்றோ வீர தீரர்கள் உதிக்கின்றார்கள் ! காலைக் கடன்களை முடித்து, நாண்மலர் கொய்து, தாயின் பாதங்களில் அருச்சித்து மைந்தர் வணங்குக : 'தாயே, உன்னில் உள்ள மஹா சக்திக்கு வணக்கம். உன் பிள்ளையாகிய நான் அறிவிலும் அன்பிலும் ஓங்கி, நமது குலப் புகழையும், நாட்டின் புகழையும் விளக்கும் வீரனை

வாழ உனது அருளை வேண்டுகிறேன். எந்தாய் வாழ்க!' என்று அன்னையைத் தொழுக! தாயின் ஆசிபெற்ற மைந்தர் தருமவீரராவர். தாய்த்தொண்டு, தாய்நாட்டுத்தொண்டு—இரண்டும் தெய்வத்தொண் டெனச் செய்க!

**அன்னை யளித்தவுட லன்னை யளித்தவுயிர்**
**அன்னை யருட்பணிக்கே யாம்.** 2

அன்னை பெற்ற இந்த இயற்கையுடலும், அன்னை கொடுத்த இந்த உயிரும் அன்னையின் அருட்பணிக்கே ஏற்றவையாகும். பெற்ற தாயும், தேசத் தாயும் பெருமை பெறவே, உடலில் உயிருள்ள மட்டும் பயனுள்ள பணிகளைச் செய்து அறநெறியில் வாழ்வோம்.

**மழையின் விளைநிலமு மன்னுயிரும் வாழ்வுந்**
**தழைவது தாயன்பாற் றன்.** 3

மழையினால் பயிர் விளையும் மண்ணிலமும், நிலை பெற்ற உயிர்க்குலமும், உயிர்வாழ்வும் தழைத்தமை அன்னையின் அன்பினாலேதான். மண்ணிலத்தின் மீதுள்ள அன்பினால், வானம் உவரியை ஆவியாக்கி, மேகங்களைக் கூட்டி மழை பொழிகிறது. மண்ணிலத் தாயின் அன்பினாலேதான் உயிர்கள் உண்டு பிழைக்கப் பயிர் பச்சைகள் உண்டாகின்றன. பயிர்களில் பெண்பூக்கள் காற்றாலும், வண்டினாலும் ஆண் பூக்களின் தாதுக்களைப் பெற்றுக் கருத்தரித்துக் காயாகி, கனியாகி, விதையாகி, விதையினின்று தமது செடிக்குலத்தை வளர்ந்தோங்கச் செய்கின் றன. பயிர்களை உண்டு உயிர்கள் செழிக்கின்றன. உலகுயிர்கள் தாய்ப்பாலுண்டு தாய்க்கரத்தில் வளர்

கின்றன. உலகமே தாயின் மடிமேல் குழந்தையாக அமர்ந்துள்ளது. காலைக் கதிரும், கண்குளிர் மதியும், வசந்தக் காற்றும், வருண மலர்களும், இயற்கை வனப்பும், இன்னிசை யமுதும், ஆவின் பாலும், சோலை நிழலும், நிஞ்சுனை நீரும், சக்திக் கனலும், திருவுடைப் பெண்டிரும், தீரரும் வீரரும், வித்தகப் புலவரும் தழைப்பது **பராசக்தி அன்னையின் அன்பினால்.** அன்னையன்பு வாழ்க !

**அன்போடு கொஞ்சி, அமுதிட்ட பொற்கையைப்**
**பின்பற்றி முன்னேறு வாம். 4**

நம்மை அன்புடன் கொஞ்சி அமுதிட்டு வளர்த்த தாயின் பொற்கரத்தைப் பின்பற்றி, உலகில் முன்னேறுவாம். நம்மை அன்புடன் ஊட்டி, 'என் கண்ணே, செல்வமே !' என்று பாராட்டிச் சீராட்டி ஆசிகூறி வளர்த்த அன்னையின் திருக்கரத்தைப்போல, நாம் உலகில் எல்லாருக்கும் இதமான தருமத்தையும் பொதுநலத்தையும் வளர்த்து முன்னேறுவாம்.

**தாய்சொல்லு மம்மொழியே தம்மக்க ளுஞ்சொல்வர் ;**
**தாய்நன்று சொல்லத் தகும். 5**

தாய் பேசும் வார்த்தையையே பிள்ளைகளும் பேசுவர். ஆதலால், தாயார் மங்கலமான சொற்களையே பேசத்தகும். சுமார் எட்டு வயது மட்டும் தாயிடமே குழந்தை வளரும். தாயின் பேச்சு நடையெல்லாம் குழந்தைக்கும் பிடிபடும். 'தாயைப் போல் பிள்ளை ; நூலைப்போல் சேலை' என்பர். இளம் வயதிற் பிடிபட்ட பழக்கங்கள் வழக்கங்களாக, இயல்பாக மாறும். ஆதலால், தாய் பேச்சிலும் நடையிலும், குழந்தைக்கு அரிய உதாரணமாயிருக்க

வேண்டும். அசங்கியம், அமங்கலம், ஆத்திரச் சண்டை, அடுத்தவர் வம்பு, பொறாமைப் பேச்சு, வசவு, நிந்தை, பொய்— இவை தாய்மாரிடையே சாரா தொழிக! மந்திரம்போன்ற வாய்ச்சொல் வேண்டும். குழந்தைகளிடம், தெளிந்த தூய மொழிகளை இனிமையாகப் பேச வேண்டும். நாமாவளி, சிறுசிறுதோத்திரங்கள், சிறுகதைகள், நீதிகள், வீரர் செயல்கள், பெரியார் பெருமை, இயற்கையழகைப் பற்றிய வருணனைகள் இவற்றைக் குழந்தைகள் முன்னே சொல்லலாம். 'அறிவும், அருளும், அன்பும், ஆயுளும், ஆற்றலும், ஆண்மையும், வீரத்திருவும், உண்மையொழுக்கமும், உயிரிரக்கமும், பொதுநலத்திறனும், புண்ணிய வாழ்வு மோங்கி நான் தீரனுகுக!' என்று ஒவ்வொரு சேயும் ஜபம் செய்யும்படி தாய்மார் பயிற்றவேண்டும். உயர்ந்த நினைப்பும், உயர்ந்த பேச்சும் உயர்ந்த பிள்ளைகளை நாட்டிற் களிக்கும்.

## 3. தந்தை

தந்தை செயலே தனயன் செயலாகும்;
தந்தைக் கொழுக்கந் தலை. 1

தகப்பனுர் செய்கிறபடியே பிள்ளையும் செய்வான்; ஆதலால், தகப்பனுருக்கு நல்லொழுக்கம் முதன்மையானது.

தகப்பன் குலத்தலைவன் ஆவன். 'தகப்பனைப் போல் பிள்ளை' என்பது பழமொழி. தந்தை நல்வழி நடந்தால் தனது குலத்தையே நல்வழிப்படுத்துவான்; தந்தை கெட்ட வழியில் நடந்தால், குலத்தையே கெடுத்தவனுவான். தன் பெற்ருேரை அவமதித்தல்,

பெரியாரை நிந்தித்தல், இறுமாத்தல், இழிவுரை பேசல், அன்பில்லாது மனைவியை வைதல், அடித்தல், குழந்தைகளை வெடுக்கென்று பேசல், வீட்டுப் பொருளை விலைகட்டிதல், பத்தினி நோகப் பரத்தை யைக் கூடல், கள்வெறி கொண்டு சள்ளை செய்தல், பேய்போல் அரற்றல், காமவெறியாற் கண்கெட் டலைதல், வீண் விவகாரத்தில் காலத்தைப் போக்கல், வீட்டிற் சாமான்க ளிராதபோது தான் மட்டும் சோற்றுக் கடையில் வயிற்றை நிரப்பி வருதல், சீட்டாடல், பொடிப்புறிஞ்சுதல், அயலாருடன் சண் டை போடல்— இவையெல்லாம் தந்தைக்கு ஆகாத் திய நடத்தைகளாகும். தெய்வச் சிந்தனை, பூஜைபுரஸ்காரம், அருட்பாடல்களைப் பாடல், பஜனை, நல்லார் கூட்டம், பெரி யாரை உபசரித்தல், பெற்றோரைநன்குமதித்தல், மனைவி யுடன் ஒற்றுமையாயிருந்து இங்கிதமறிந்து நடத்தல், குழந்தைகளிடம் அன்பா யிருத்தல், வந்ததைக் கொண்டு மானமாகப் பிழைத்தல், இனிய மொழி களைப் பேசல், மகான்களைப்பற்றிப் பேசல், குழந்தை களுக்குச் சிறு கதைகளைச் சொல்லி நல்வழி பயிற்றல் —இவையெல்லாம் தந்தைக்குரிய கடமைகளாகும். தந்தை வழியே மைந்தன் வருவான். தந்தை நல்வழி செல்க!

சுற்றம் புலன்வழியே தோய்ந்து மனம்பற்றும்;
சுற்றத்தைச் சுத்தமுறச் செய். 2

'சுற்றம்' என்றால் தன்னைச் சுற்றியுள்ள காட்சி கள், நண்பர், உறவினர், கூட்டம், சுற்றிலும் தான் காணும் பழக்க வழக்கங்கள் என்று பொருளாம். 'தோய்ந்து' என்றால் படிந்து, கலந்து, பொருந்தி எனப் பொருளாம். சுற்றம் ஐம்புலன்கள் வழியே

ழுலேயிற் படிந்து மனத்தைப் பலமாகப் பற்றும். தன்னைச் சுற்றியுள்ள மாந்தர் நடையுடை பாவனை பேச்சு செய்கைகள் பரிசுத்தமா யிருக்கும்படி செய்யவும்.

மனம் புகைப்படக்கருவி போன்றது. ஐம்புலக் காட்சிகள் மனத்திற் பற்றிச் சித்தத்தில் பொருந்திச் சிந்தனையாகும். எத்தனையோ பிறவிகளில் ஏற்பட்ட சிந்தனைகளே ஜன்மவாசனைகளாக மாறி உண்மைப் பொருளை உணரவொட்டாது மனத்தைச் சுழற்றி மாயஞ் செய்வன. என்றோ புரிந்த தீவினைகளை இன்று மனம் இழுத்துவந்து நமது அமைதியைப் பாழாக்கு கிறது. மனத்தை முன்னிலைப் படுத்தாது, தன்னிலைப் படுத்தவே சுத்தயோகிகள் மாசற்ற சுத்தாத்மாக் களின் உறவை அல்லது மோனத்தனிமையை நாடு வது. தூய சுற்றம் தூய வாழ்வைத் தரும். தீய சுற்றம் தீயவாழ்வாகும். சுற்றத்தின்படியே வாழ் வமையும். பூஜை யறைக்கும், புழைக்கடைக்கும் எவ வளவு வேற்றுமையுள்ளதோ, அவ்வளவு வேற்றுமை, ஒழுக்கம் நிறைந்த சுற்றத்திற்கும், வம்பும் வழக்கும் பெருக்கும் சுற்றத்திற்கும் உள்ளது. புலனுவது (Sensation), காட்சியாகி (Perception), நினைவாகி (Conception), கருத்தாகி (Thought impression), காரிய மாகி (Action), இயல்பாகி (Nature) விடுகிறது. குழந் தைகளைத் தூய சுற்றத்தில் வளர்க்கவேண்டும். குழந்தைகளை நல்ல முறையில் வளர்க்கும் குழந்தைச் சாலைகளை நாட்டில் அமைக்கவேண்டும். **பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா** முதலிய நாடுகளில் மூன்று வயது முதலே குழந்தைகளை நன்கு பழக்கக் குழந்தைச் சாலைகள் உள்ளன. பகலில் வேலை செய்யும் தொழி

லாளர் தம் குழந்தைகளை அங்கேதான் விட்டுச் செல்வர். **கல்விக் கதிரில்** அதன் விவரங் காண்க ! மூன்று வயதுமுதல் பத்து வயதுவரை குழந்தைகளுக்கு மிகவும் பரிசுத்தமான காட்சிகளே தென்படும்படியாக நடக்கவேண்டும்.

**பெற்றோருங் கூடப் பிறந்தோரும் போலநீ**
**உற்றமனை நாடுலகு முன். 3**

பெற்றோரையும் உடன்பிறந்தாரையும்போல், உன் மனையையும் (சுற்றத்தாரையும்), நாட்டையும் (நாட்டிலுள்ளவரையும்), உலகோரையும் கருதுவாயாக ; வீடு, நாடு, உலகு மூன்றும் உறவாகும் என்று நினைப்பாயாக !

ஆருல கெல்லாம் ஆன்ம விரிவே : அன்பின் வடிவான அந்த ஆன்மாவே பல உடல்களைப் போர்த்து, ஆணாகிப் பெண்ணாகிப் பெற்றோராகிப் பிள்ளைகளாகிச் சுற்றமாகிக் குலமாகி, ஊராகி, நாடாகி, உலகமாக விரிந்தது. அன்பு பெருகப் பெருக அனைத்துயிரும் ஒரு குலமாகக் காணும். சுத்தான்ம சித்தருக்குத் தானன்றி உலகு வேறில்லை ; அவருக்கு வீட்டுத் தாய், நாட்டுத் தாய், ஞாலத் தாய் எல்லாம் ஒரே அன்புத் தாயாக விளங்கும் ; ஆருலகெல்லாம் அருள்வீடாகும். ஜகவுயிரெல்லாம் சங்கிலித் தொடர்பாம். சாதிமத நிற வேறுபாடுகளின்றி, 'எனது உன'தென்னும் இறுமாப்பின்றி, ஒவ்வொருவரும் வீட்டைப்போல நாட்டையும், நாட்டைப்போல உலகையும் விரும்பித் தம்மாலான தொண்டு செய்யக் கடவர்.

**குலனென் றணங்குங் குரிசிலும் பொன்செய்**
**நிலனும் விதையும் நிகர். 4**

தன் குலத்திற்கு வந்து சேரும் பெண்ணணங்கும் ஆண்மையிற் சிறந்த தன் மைந்தனும், பொன் போலத் தானியங்களை விளையச் செய்யும் நிலமும் அதில் இடும் வித்தும் போல்வர்; ஆணிற் சிறந்தவன் குரிசில்.

தந்தை தன் குரிசிலுக்கு நல்ல இடம் பார்த்து ஒரு நங்கையை மண முடிக்கிறான். இவ்வாறு தன்னையும் தன் மனைவியையும் போல், தன் மைந்தனும் நாட்டுப் பெண்ணும் சதிபதிகளாக இல்லறத்தை நடாத்துகின்றனர். அவர்களைத் தந்தை எவ்வாறு கருத வேண்டும்? நாட்டுப் பெண்ணைத் தன் மரபிற்கு நிலமாகவும், மகனை அதில் இடும் வித்தாகவும் மதிக்கவேண்டும். அவர்கள் க்ஷேமமாக இல்லறம் நடத்தி மரபை வாழ வைக்கும்படி அவர்களுக்கு உதவிகள் செய்யவேண்டும். இல்லறம் நடத்தும் சதிபதிகள் எல்லாருமே நிலமும் வித்தும் போல்வர் என்றும் பொருளாம்.

**அறிவுந் திருவும் அறநெறியும் அன்புந்**
**திறனும் பெருகுக நின் சேய்!** 5

உனது சேயைக் கருத்துடன் போற்றி வளர்க்க வேண்டும். நல்ல கல்வியறிவும், அழகும், தெய்விகப் பொலிவும், அறநெறியொழுக்கமும், எவ்வுயிர்க்கும் அன்பு செய்யுந் திறமையும் உனது பிள்ளைக்குப் பெருகி யோங்குக!

**அறிவியலிற்** சொல்லியபடி பிள்ளைகளின் அறிவை வளர்க்கவேண்டும்; அவர்களுக்குத் தக்க உடற்பயிற்சியினால் பலமும் வனப்பும் அளிக்க வேண்டும்; தக்க தொழிற்பயிற்சியால் இல்லறத்தைத் தாங்குதற்கேற்ற செல்வத்தை யீட்டச் செய்யவேண்டும்; மனை

யிலும், ஊரிலும், நாட்டிலும் நல்லவன் என்று பேரெடுக்க அறவியலிலும் நடையியலிலும் கூறிய ஒழுக்கங்களைப் பயிற்றவேண்டும். அன்பியலிற் சொல்லியபடி தன் வீட்டார், நாட்டார், உலகோர், அனைவரிடமும் அன்புடன் நடக்கும் ஆற்றலையும் பெருக்கவேண்டும். இது தந்தையின் கடமையாகும்.

---

## 4. சேய்

**' இன்றுசேய் நாளையே யிப்புவியின் கையாகும் '**
**என்றுசேய் போற்ற லினிது.** 1

இன்றைக்குக் கைக்குழந்தையா யிருப்பது வளர்ந்து மனிதனாகி, நாளையே இவ்வுலகின் பணிகளைப் புரியும் கைபோலுதவும். இந்த நினைப்புடன் குழந்தையைப் போற்றி வளர்த்தல் இனிதாகும்.

குழந்தையென்பது உலகக் குஞ்சு (Worldling). ஒவ்வொரு குழந்தையிடமும் ஒரு தனிப் புலமை யுள்ளது. அதை நல்ல பயிற்சிகளால் விளக்கி, வீட்டிற்கும் நாட்டிற்கும் பயன்படச் செய்யவேண்டும். இன்று பிள்ளை நாளைப் பெரியோன்.

**இல்விளக் காகு மினிய புதல்வர்க்குக்**
**கல்வியறி வாற்றலாங் கண்.** 2

வீடு விளங்கும் விளக்குப்போல்வர் மக்கள். அவர்கள்நன்கு செழித்தோங்கி ஆளாகவேண்டும். அவர்கள் வளர்ச்சிக்குக் கண்ணாயிருப்பன இரண்டு: (1) கல்வி யறிவு, (2) உடல், உயிர், மனத்தின் ஆற்றல், பலம்.

மணிப் புதல்வர் மரபின் விளக்குகள்; இல்லறத்தின் புத்துயிர்கள். பொன்னினும் புதல்வரே அரியர்.

வீட்டுக்கு நான்கு பிள்ளைகள் இருந்தாலே இல்லறம் இனிக்கும். குலவிளக்குகளான மக்களுக்கு அறிவும் ஆற்றலும் இரு கண்களாம்.

**நன்மக்க ளின்பெருமை நாட்டிற்கெல் லாம்பெருமை ;**
**வன்மக்கள் வீட்டின் வசை. 3**

நல்ல பண்புடைய மக்களின் பெருமை நாட்டிற்கெல்லாம் புகழாகும். முரட்டுப் பிடிவாதமும், கெட்ட நடத்தையும் உள்ள பொல்லா மக்கள் வீட்டிற்கு இகழ்ச்சியாவர்.

அச்சம், அழுக்காறு, அகந்தை, தீயவொழுக்கம், திருட்டு, குடி, விபசாரம்—இவையெல்லாம் பிள்ளைகட்கு வசையாகும். இவற்றைக்கொண்ட பிள்ளைகள் பெற்றவருக்கும், மரபிற்கும் அவமானத்தையே கொண்டு வருவர். 'இவரைப்பெற, தாய்தந்தையர்கள் என்ன தவம் செய்தனரோ!' என்று பொது ஜனங்கள் புகழும்படி பிள்ளைகள் நடந்துகொள்ள வேண்டும். மனச்சாட்சிக்கு மாறில்லாத நன்னடை, உயர்ந்த சிந்தனை, சீரிய செய்கை, இனிய நன்மொழி, சமயத்தில் உதவுதல், ஈன்றோர் ஆன்றோர் ஆசிரியர் முதலிய பெரியாரிடம் வணக்கமா யிருத்தல், நல்லாசானிடம் கல்விகற்றுத் தேறி, மனையறம் புகுந்து, நல்ல தொழிலாற்றிக் குடும்பத்தைத் தாங்குதல், அறங் காத்தல், தன்னைப் பெற்றோர் எப்படி அருமையாகப் பேணினர்களோ அதேமாதிரி வயது காலத்தில் பெற்றோரைப் பிரியமுடன் பேணல், வீடும் நாடும் சிறக்கப் பணிபுரிதல், உற்றார்க்கு இயன்ற துணை செய்தல்—இவையெல்லாம் நன்மக்கள் கடமைகளாகும்.

**தாராட்டிச் சீராட்டிப் பாராட்டி னோர்மேல்லை**
**மாறுட்ட மில்லா மனம்.** 4

தாய்தந்தையர், உன்னை அன்புடன், 'அப்பா மகனே, அருமை மகனே!' என்று தாராட்டி வளர்த்தனர்; கல்வியறிவு கொடுத்துச் சிறக்கச் செய்து சீராட்டினர்; 'கண்ணே, முத்தே, கனியே, செல்வமே!' யென்று இனியன கூறி உனது அழகை யும் அறிவையும் ஆற்றலையும் கண்டு பூரித்துப் புகழ்ந்து பாராட்டினர். அத்தகைய அருமையான பெற்றோர்மீது எதனாலும் மாறி மயங்காத அன்பை வைப்பாயாக!

பிள்ளை வேண்டுமென்று அருந்தவங் கிடந்து, குழந்தை பிறந்ததும் மட்டற்ற மகிழ்ச்சிகொண் டனர் பெற்றோர். மார்பில் ஊட்டி, மடிமேல் வைத்துக் கொஞ்சி, தொட்டிலில் வைத்துத் தாராட்டி, ஈ, எறும்பு கடியாமல் காத்து, வந்த நோய்களை மாற்றினள் தாய். படிக்கவைத்து அறி வைத் தூண்டினன் தந்தை. நீ என்ன கைம்மாறு செய்தாலும் அது பெற்றோர் அன்பிற்கு ஈடாகாது. அவர்கள் உன்னை எவ்வளவு தீவிரமாக அன்பு செய் தார்களோ, அவ்வளவு தீவிரமாக நீ அவர்களை அன்பு செய்! மணம்புரிந்து, மனைவியுடன் பெற்றுப் பெருகி வாழும் நாளில் பெற்றோரை அலட்சியம் செய்யாதே!

**இளமையிலே பெற்றோர் இயற்றியதை மைந்தர்**
**முதுமையிலே செய்யன் முறை.** 5

மைந்தரது இளமையில் பெற்றோர் எவ்வளவு அன்புடன் உதவி செய்தனர்! பெற்றோரது முதுமை

யில் மைந்தர் அவர்களுக்கு அவ்வளவு அன்புடன் உதவிசெய்வது கடமையாம்.

தாயும் தந்தையும் மைந்தனை அவன் இளமையிலே காத்தனர். மகனும் அவன் மனைவியும் பெற்றோரைப் போலவே தாய் தந்தையரை முதுமையில் காத்தல் அறமாகும். மனைவி மோகத்தால் மதிமயங்கி, ஈன்றோரை இன்னலுறுத்தி, ஊணுடைக்கும் திண்டாட வைக்கும் மக்கள் நன்றிகெட்ட பதர்களாவர். பெற்றோர் மகிழ நடப்பவன் பிள்ளையாவன். யோகிக்கும் பெற்றோரை மறவாது அன்பு செய்தல் கடமையாகும். பெற்றோரைக் காக்கச் சகோதரர் இருந்தால் சரி; இன்றேல் தானே அவரை எப்படியாவது காக்க வேண்டும்.

---

## 5. சுற்றம்

நல்ல துணைநின்று நன்றி மறவாதான்
எல்லார்க்கு மின்னுறவென் றெண். 1

சமயத்தில் நல்ல துணைவனாயிருந்து, பிறர் செய்த நன்றியை மறவாது விசுவாசமா யிருப்பவன், எல்லாருக்குமே இனிய உறவினன் ஆவான் என்று நினை!

இரத்தக் கலப்பால் வீட்டுறவாகும். உள்ளன்பிருந்தால் உலகெலாம் உறவாம். நற்குண நற்செய்கை, தானே நன்னடைக்கு உதாரணமா யிருத்தல், ஓரமின்றி உண்மையாய் நடத்தல், பிறர் செய்த நன்றியை மறவாமை, பிறர் தீமை செய்தாலும் மனத்தில் வைத்துக்கொள்ளாமல் அவர்களுக்கு இடர் வந்தபோது நல்லுதவி செய்தல், இல்லையென்னாது கேட்பவருக்கு இயன்றதைத் தருதல்—இவையே

உறவினருக்கு இனிய தன்மையாம். வீட்டுறவும் நாட்டுறவும் இந்த மாதிரி யிருக்க வேண்டும்.

**பாகத்தி லன்று, பரிந்த வுதவியினில்**
**தேகந் துணைவனை நீ தேடு.** 2

உலகில் உடன்பிறந்தவர்கள் வயது வந்தவுடனே தந்தையின் சொத்தைப் பாகம் போட்டுப் பிரித்துக் கொண்டு துண்டாகச் செல்லுகின்றனர். பாகம் பிரிக்கும்போது எத்தனையோ சண்டைகள் நடக்கின்றன. இவ்வாறு செய்பவர் உண்மைச் சகோதரரல்லர். நமக்கு இடர் வந்தபோது மனமிளகி, உதவி செய்பவனே கூடப் பிறந்தவனாவன். அப்படிப்பட்ட தேகத் துணைவனையே நீ தேடுவாயாக!

தந்தை சொத்து வைப்பதினும் மைந்தருக்குத் தொழில் வைப்பதே நலம். பாகத்துணைவர் பணத்தொடு பிரிவர். அன்புத் துணைவர், பணத்தைக் கருதார், பயனைக் கருதார்; உற்ற விடத்தில் உயிர் கொடுத்துதவுவர். உதவி செய்தவனே உடன் பிறந்தானாகும். அன்பைக் கொண்டு நண்பனை யறிக! அன்பும் நன்றியுமே யார்க்கும் சகோதரர். இரத்தக் கலப்பினும் உள்ளக் கலப்பே உறவிற் கழகு.

**கிளையுரிமை கொண்டாடிக் கேடுசூழ் வானுந்**
**தலையரிக்கும் பேனுஞ் சரி.** 3

'நான் சொந்தம், இனம், உறவு முறை' என்று முன்னால் கிளையுரிமை (பாத்தியம்) கொண்டாடுவர் சிலர்; பின்னால் நாம் அடியோடு கெடும் சூழ்ச்சியைச் செய்வர். இத்தகைய வஞ்சகர், நமது தலையிலேயே ஒட்டிக்கொண்டு நமது இரத்தத்தையே அரித்துண்ணும் பேன் போல்வர். சிலர் இரத்தக்

கலப்பு, உறவின் முறையார் என்று நயமாக வந்து சொந்தங் கொண்டாடுவர்; இருக்கிற பகையை உறிஞ்சிக்கொண்டு இவ்வஞ்சகர் மெள்ளச் சண்டை மூட்டுவர்; சிண்டு முடிப்பர்; வீட்டை யிரண்டாக்கிக் கைக்கு வந்ததைப் பற்றிக் கொண்டு, குலத்தைப் பாழாக்கிப் பழி பேசிச் செல்வர். அத்தகைய உறவினரை உடனே விலக்குக! ஆத்ம சாந்திக்கும், குடும்ப வாழ்விற்கும் இத்தகைய வஞ்சகர் கொடிய பகைவராவர்.

**இரத்தக் கலப்பெனினு மின்னுமை செய்தக்கால்,**
**அத்தகையா ராரோ வறி. 4**

இரத்தக் கலப்புள்ள உறவினராயினும், சகோதராயினும், மைந்தராயினும் சரியே; நீ வாழவொட்டாது மறைவாகவும் வெளிப்படையாகவும் தீங்கு செய்பவரை நம்பி மோசம் போகாதே!

அத்தகையார் உன் உறவினரல்லர். அவர், வேறு யார்? அன்னியரா? அன்னியர் பலர் இரக்கங் கொண்டு உதவி செய்வர். சொந்தங் கொண்டாடி வஞ்சம் செய்பவர் அன்னியரும் அல்லர்; உறவினரும் அல்லர்; மானிட வுருவங் கொண்ட யாரோ ஒருவர் என்று அவரைக் கருதுக! முகமன் பேசி முடிச்சவிழ்க்கும் வஞ்சர், துணை போல் வந்து தூற்றிச் செல்லும் தீயர், சொந்தங் கொண்டாடி சொத்தைப் பறிக்கும் கொடியர்— இவர்களை ஒதுக்கி வாழ்க! உனது கௌரவமான நடத்தையால் அவர்கள் திருந்த வேண்டும். உனது விழிப்பால், இவனை ஏமாற்ற முடியாதென்று அவர்கள் உணரவேண்டும்.

**நன்னேக்கங் கொண்டுமனை நாடுய்ய வாழ்ந்திடலே**
**முன்னேர்க்குச் செய்யு முறை. 5**

ஒரு குடும்பி தன் முன்னோரான பிதிர்களுக்குச் செய்ய வேண்டிய கடன் முறை யென்ன? எல்லா வுயிர்களும் இன்புறவேண்டும் என்ற நல்ல நோக்கங் கொண்டு, வீடும் நாடும் நலம்பெற வாழ்தலே ஒருவன் முன்னோருக்குச்செய்யும் கடன்முறை.

இருக்கு மட்டும் அறவழி வாழவேண்டும்; வாழ்வைச் சுத்தாத்ம யோகமாக்க வேண்டும். "சர்வகாலமும் யோகியாய் வாழ்; யோக யுக்தனாகவே உண், உறங்கு, காரியங்களைச் செய்; எல்லாருள்ளும் என்னையும், என்னுள் எல்லாரையும் காண்; எல்லா உயிர்களுக்கும் நல்லது செய்; விருப்பு வெறுப்பென்னும் இரு விகாரங்களைத் தாண்டிச் சமசித்தனாயிரு!" என்று **கண்ணன்** வாழும் வகையை உபதேசிக்கிறான். உற்றார் பெற்றார்களை உள்ளபோதே மதித்து நடத்த வேண்டும். 'இழவிற்கு அழுகிறேனே; தொலை, !"என்று சில மூடர் பெற்றோரைப் படாதபாடும் படுத்திச் சோற்றுக்குத் திண்டாட வைப்பர்; இறந்த பிறகு ஊர் மெச்சச் சடங்குகள் செய்வர்; தானம் வழங்குவர்; சிராத்தம் வைப்பர்! பேதையர் சிலர் கணவனைப் படாதபாடும் படுத்திக் கவலையால் அவன் நோயுற்றிறந்த பிறகு, 'ஐயோ, அப்பா, துரையே, கதியே!' என்று அடித்தலறுவர். உயிரோடிருக்குமட்டும் பெற்றோரையும் பெரியாரையும் மன மகிழ நடத்தினால் அதுவே ஆயிரம் சிராத்தத்தை விட மேலாம். 'மகனே, நீ என்னை அருமையாக நேசித்தாய்; நன்றாக மதித்து வேண்டிய உபசாரம் செய்தாய்; என் செல்வனே! நீயே **மகன்**. நீயும் உன் மனைவிமக்களும் எனது மரபை விளக்கி வாழையடி வாழையாக நீடூழி வாழ்க!'

என்று பெற்றோர் கூறும் ஆசியைப் பெற்றால், அதுவே ஆயிரம் கோதானம், பூதானம், சுவர்ண தானங்களினும் பெரிதாம். ‘இன்னார் மகன் பரோபகாரி. நல்லவன், அன்பு மிக்கவன், குடும்பத்தையும் கௌரவமாகத் தாங்கி, ஊருக்கும் உதவி செய்கிறான்’ என்று பலர் தமது பிள்ளையைப் புகழக் கேட்ட பெற்றோருக்கு வேறென்ன சடங்குகள் வேண்டும்? முன்னோரின் நல்ல பழக்கங்களைக் காக்க வேண்டும்; தீயதை விலக்க வேண்டும்: தாத்தா பொடி போட்டால், சீட்டாடினால், பேரன் அவற்றை ஒழிக்க வேண்டும்; தாத்தா கடவுள் வழிபாடும் அன்னதானமும் நடத்தினால், பேரன் அவற்றை விடாது நடத்த வேண்டும். தாத்தா ஏழைகளுக்குத் தருமம் செய்ய நினைத்திருந்தால், ஒரு தொழிலை வளர்த்துப் பல ஏழைகள் பிழைக்கும்படி செய்ய வேண்டும் பேரன். இக் கடன்முறை முதன்மையானது.

---

## 6. பிழைப்பு

**தேவை யறிந்து, செழுமையுறப் பொன் செய்து,**
**பூவையறிந் தில்லம் புரி.** 1

குடும்பத்திற்கு என்ன தேவை யென்றறி; அதற்குத் தக்கபடி ஒரு முதலைப் போடு; யோக்கியமான தொழில் செய்து பொருள் சம்பாதி; உலகையும் காலப்போக்கையும் அறிந்து அப் பொருளைக் கொண்டு இல்லறத்தை நடத்து! உண்ண, உடுக்க, இருக்க, மக்களைப் பயிற்ற, சுற்றந் தாங்க, அண்டினோர்க்குதவ, அவசரத்திற்குக் கொஞ்சம் மிச்சம் வைக்க, பொது நலங்கள் புரிய, இரப்போர்க்கு

இயன்றதைத் தர— இத்தனைக்கும் ஒரு குடும்பி பொருளீட்ட வேண்டும். இவையே குடும்பத்தேவையாம். பொருளை யீட்டுவ தெப்படி? உலகில் கோடிக் கணக்கான நற்றொழில்கள் உள்ளன. மனித சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒரு தொழிலில் சிறு முதலைப் போட்டு, அதை முறைப்படி நடத்தலாம். வறுமையும், யாசகமும், சோம்பலும், செல்வச் செருக்கும் கூடா. சேர்த்துப் பூட்டுங் கருமி செல்வத் திருவைச் சிறையிடுவோ னாகிறான். செல்வம் ஊறவும் வேண்டும்; ஊற்றைப் பலர் உண்ண இறைக்கவும் வேண்டும். இடம்ப மில்லாமல் போதுமட்டும் இனிது வாழப் பொருள் வைத்துக்கொண்டு, மீதியை நாட்டில் வறுமையும் மடமையும் நீங்க ஏதாயினும் ஒரு தொழிலிற் போட வேண்டும். எல்லாரும் உழைத்தே யுண்ண வேண்டும். 'காலநிலை இவ்வாறு; இக்காலம் உலகிற்கு இன்னது செய்தால் பலருக்கும் பயன்படும்' என்றறிந்து வருவாயில் ஒரு பங்கைப் பொதுநலத்திற்கு அளிக்கவேண்டும். இவை இல்லறத்தார் கடமைகளாகும்.

**கடன்செய் யிடம்பம் கவலைக்குத் தூது ;**
**விடஞ்செய் வறுமைக்கு வித்து.** 2

கடன்வாங்கிச் செய்யும் பகட்டான இடம்பச் செலவு, மனக் கவலைக்குத் தூதாகும்; கவலையை அழைத்து வரும். அது நஞ்சுபோன்று கொடிய வறுமைக்கு விதையாகும்.

கடனில்லாதவன் உண்ணுங் கூழும் கற்கண்டுப் பாயசத்திற்குச் சமானம். கடனாளியின் விருந்து கவலைப் பொங்கலாகும். கைக்கு மிஞ்சிச் செலவிட்

டால் கையேந்த வேண்டி யிருக்கும். உழைத்து வந்ததால் பிழைத்து வருக; பணமும் பண்டமும் பயன்பெறச் செலவிடுக; கருமித்தன மில்லாமல் கட்டுச் செட்டாகத் தட்டில்லாமல் வாழ்க! கடன் கையைக் கடிக்கும்; காலை வாரியடிக்கும்; பத்து வந்தால் இரண்டு மீதி வைத்து, ஒன்று நாட்டிற்குதவி, ஏழுபங்கு வீட்டிற்குதவலாம். கவிஞரும் புலவரும், கடனால் வருந்தினர். பைரன், ஷெரிடன், கோல்ட்ஸ்மித், பேகன், ஸ்காத், லாமார்தீன் முதலிய அறிவாளிகள் கைக்கு மிஞ்சிச் செலவிட்டுக் கடனால் வருந்தினர். வழக்கமாக வரம்பொடு செலவிடுக! இனத்தாரும் ஊராரும் மெச்ச இடம்பம் வேண்டா. அளவும், எளிமையும் ஆக்கந் கொடுக்கும்.

**வீணணி யாடை விருந்து மணச்செலவு**
**காணமை காட்டி விடும்.** 3

அநாவசியமான தங்க, வைர நகைகள், இடம்பமான ஆடைகள், ஆடம்பரமான விருந்துகள், கைக்கு மிஞ்சிய கலியாணச் செலவுகள் இவையெல்லாம் காலட்சேபத்திற்குப் போதாமல், இல்லறத்தாருக்கு வறுமையைத் தரும். காணுதல் என்பதன் எதிர்மறை காணமை; காணமை யென்றால் போதாமை, வறுமை, பொருந்தாமை, ஒவ்வாமை, ஆராய்ச்சியின்மை, கண்டறியாமை என்று பொருளாம்.

(1) வருந்திச் சம்பாதித்ததை வைரத்திற் போட்டுக் காதிலும் மூக்கிலும், கழுத்திலும் கனல் பறக்க அழகு மினுக்குகின்றனர் உலகோர். இந்த மினுக்கிற்குப் பின்னாலே கடனும், கவலையும், கள்ளனும், சோம்பற் செருக்கும், அகங்காரமும் வட்டமிடக் காணலாம். தனக்கு மேலே மினுக்கெதற்கு?

அத்தனை நகைகளும் ஏழைகளின் புண்ணன்றோ? ஒன்பது ஏழைகள் முதலாகக்கொண்டு பிழைக்கக் கூடிய செல்வம் ஒரு காசுமாலையாகிப் பெண்கள் மார்பில் மறைந்துறங்குகின்றது. தொழில் பெருத் தங்கம் அழிற்பெருத் தங்கமாம்.

(2) ஆடை எதற்காக? மானங் காக்கத்தானே! உடல்வாழ்விற்கு இன்றியமையாத காற்றும் வெயிலுங்கூட மேலே படாமல் ஆடைகளில் உடலைப் புதைக்கின்றனர்; சாதாரணமாக ஆண்களுக்கு ஒரு கோவணம், இடுப்பு வேட்டி, மேலே ஒரு துண்டு, அவசியமானபோது ஒரு ஜிப்பா—இவை போதும். குளிர் நாட்களில் ஒரு போர்வை இருக்கலாம். காலுக்கு ஒரு பாதுகை வேண்டும். பொதுநலச் சேவகருக்கு அடையாளமாகப் பலநிறங்களில் முழுங் கால் மட்டும் கால்சராய், ஒரு குடுத்துணி (**Shirt**), இலாக்காவிற் கேற்றபடி சாயக் குல்லா, காலில் ஒரு மிதியடி— இவை போதும். வெயிற் காலங்களில் இலேசான துணியாலும், குளிர் காலங்களில் தடிப்பான துணியாலும் ஆடை தயாரிக்கலாம். மழைக்குத் தாழங்குடை அல்லது துணிக்குடை கொள்ளலாம். அறவோர் கோவணமும் கழுத்து முதல் கால்வரை நீண்ட ஒரு பெரிய அங்கியும் அணியலாம். சிறுமிகளுக்குப் பாவாடை குடுத்துணி போதும். மனைவியர் இரவிக்கை புடவை யணிந்தாற் போதும். வீட்டுக்குள் இருக்கும்போது அரைக்கை வைத்த ஒரு நீண்ட அங்கியைப் பெண்கள் அணியலாம். ஒவ்வொரு நாளும் அணியும் ஆடைகளைத் துவைத்து உலர்த்தி உடுத்தும்படியா யிருக்க வேண்டும். அழுக்கேறினல், கஞ்சியில் நனைத்து உவர்மண் போட்டுத் துவைத்தால்

ஆடை வெளுக்கும். ஒழுங்காகக் காத்தால் ஆண்டிற்கு ஒரு ஜோடி ஆடைகள் போதும். புதிய ஆடைகள் வாங்கியதும் பழைய ஆடைகளைத் துவர்த்து முண்டுகளாகவும், கைக்குட்டைகளாகவும், சாமான்கள் துடைக்கும் துண்டுகளாகவும் பயன் படுத்தலாம். எதையும் வீணாக்கக்கூடாது. இது தான் சிக்கனமாக ஆடையுடுத்தும் வகை. இதற்கு மிஞ்சிப் பட்டிலும் கம்பளிச் சட்டைகளிலும் உடலைச் சுருட்டிப் புதைத்தல் பணத்திற்கும் சுகத்திற்கும் கேடாகும். நாகரிக நாடுகளில் இப்போது இருபாலாரும் உடைகளைக் குறைத்து வருகின்றனர்.

(3) பசிக்குச் சுசிருசியாய் உண்ண வேண்டும். உணவு நெறியும், உணவின் வகைகளும் உடலுறுதியிற் காண்க: நாம் போதுமான தூய எளிய உணவு கொண்டு உலகில் ஏழை யெளியவருக்கு உணவு கிடைக்கச் செய்யவேண்டும். நாவின் ருசிக்காக மட்டிலும் கண்டதைக் கண்டபடி யுண்டு, மாந்தர் நோயும் மருந்துமாக உலகில் அலைகின்றனர். ஒரு ரூபாயில் சாப்பிடக்கூடிய எட்டுப் பேர், எட்டு ரூபாய் செலவிட்டு இடம்பமான விருந்து வைப்பதைக் காட்டிலும், 64 பேருக்கு எளிய உணவளிப்பது மிகவும் நல்லது. உயிர்களின் பசி நீக்கல் சிறந்த ஜீவகாருண்யமாகும். கலியாணம், பண்டிகை முதலிய நாட்களில் பணத்தைத் தின்று தீர்க்கவேண்டு மென்பதில்லை. நாட்டில் கலையும், தொழிலும், ஆத்ம ஞானமும் வளர, முடிந்த தொகையைச் செலவிடவேண்டும். வேண்டிய பேர் கூடி சுத்தமான எளிய உணவு கொண்டு, ஏழைகளுக்கு அன்னதானம் செய்யலாம்; மாணவருக்கு உணவளிக்கலாம்; பல தொழிலாளி

களை உபசரிக்கலாம்; சிறந்த அறிவாளிகளைக்கொண்டு நல்ல உபந்யாசங்கள் நடத்தலாம். திருமணம் சிக்கனமாக நடத்தும் வகையைத் ந்நூலிற் காண்க. பட்டம், பகட்டு, பகல்வேசகம், வம்பு, வழக்கு, நாத்தினவு, 'சொக்கு'ப் பயித்தியம், காம வேட்கை, பலவகைக் குடிகள், பலவகைச் சூதாட்டங்கள், நகைகள், அநாவசியமான இடம்பச் சரக்குகள், வரசுல்கம், ஊர் மெச்சக் கடன் வாங்கிச் செலவிடல் முதலியவற்றால் மனித சமுதாயம் கையிளைத்து, மனமிளைத்துக் கவலை பிடித்து நோகிறது. சிக்கன வாழ்வே மிக்கவும் நலமாம்.

மடைவாய்நீர் போல வழிந்துபோம் செல்வம் ;
உடையார் தருக வுவந்து. 4

செல்வம் யாரிடமும் நிலைபாயிராது. அது மடைவாய் நீர் போலே வழிந்தோடிப் போகும். செல்வமுடையவர் கருமித்தனஞ் செய்யாமல் பலருக்கும் உதவும்படி அதை வழங்கவேண்டும். சிக்கனம் என்பது கருமித்தனமன்று. வீண் செலவு கூடாது. செல்வத்திருவை இருப்புப் பெட்டகத்திற் சிறை யிடக் கூடாது. ஒருவனுக்குத் தேவைக்கு மேலாக நிலங்களிருந்தால் அவற்றில் பயிர்த் தொழிலாளரைக் குடியேற்றிப் பிழைக்கச் சொல்லலாம். ஒருவனுக்குப் பதினாயிரம் ரூபாய் இருந்தால் ஒரு பெரிய கைத்தறிச் சாலை வைத்துப் பல நெசவுகாரருக்குப் பிழைப்பைத் தரலாம். இவ்வாறு, பணக்காரர் செல்வத்தைத் தொழிலாக மாற்றி நாட்டில் வறுமை நீங்கப் பாடு பட வேண்டும்.

திருநாள், பெருநாள், கருநாட் செலவு
வருநாளைப் போற்றி வழங்கு. 5

மனிதவாழ்வில் மூன்று வகையான விசேடங்கள் கொண்டாடப் படுகின்றன: (1) மங்கலத் திருநாட்கள், (2) நாட்டில் பொது ஜனங்கள் கொண்டாடும் பெருநாட்கள், (3) துக்கத்தைக் குறிக்கும் கருநாட்கள். இந்நாட்களில் பொருள் செலவாகும். இனி, எதிர்காலத்திற்கு (வருநாள்) நன்மை செய்யும்படியாக அச் செலவைச் செய்க! அஃதாவது: விசேட நாளுக்கு ஆகும் செலவு எதிர்காலத்தில் நாட்டிற்கும் உன் நன்மைக்கும் பயனுகும்படி யிருக்கட்டும்.

(1) தரும சாதனம் செய்யும் இல்லறத்தார் கொண்டாடத்தக்க திருநாட்களாவன:— பிள்ளை பிறந்த நாள், ஐந்தாண்டுத் திருநாள், ஆறாண்டில் கல்வித் திருநாள், 13-ஆம் ஆண்டில் பிரமசரியத் திருநாள், ஆணுக்கு 20-ஆம் ஆண்டிலும் பெண்ணுக்கு 15-ஆம் ஆண்டிலும் கல்வி முடிந்த பின் அறிவுத் திருநாள், 22-ஆம் வயதில் தொழிற் பயிற்சியும் வீரப் பயிற்சியும் முடிந்ததும் ஆண்களுக்கு வீரத் திருநாள், காதலர் ஒருவரை யொருவர் தேர்ந்தெடுத்த பின் காதல் திருநாள், இருவருக்கும் கலியாணமாகும் போது திருமண நாள், இல்லறம் மேற்கொண்ட போது இல்லறத் திருநாள், ஆண் மகன் காலட்சேபத்திற்கு ஒரு தொழிலில் ஊன்றிக் கொண்டதும் தொழில் திருநாள், முன்னேர்களுக்கு நன்றி செலுத்த ஆன்றேர் திருநாள், உலகிற்கு அறிவாற்றலால் தொண்டு செய்த நல்லோரைக் கொண்டாடப் பெரியார் திருநாள், தெய்வத் திருவருளைப் பெற்ற அருளாளரைச் சிறப்பிக்கும் அறவோர் திருநாள், நாட்டில் நிகழும் பெரிய சம்பவங்களைக் கொண்டாடும் நாட்டுத்திருநாள், மனைவி கருத்தரித்த

நாளைக் கொண்டாடும் வயாத் திருநாள், நான்கு குழந்தைகள் பிறந்த பின் பிள்ளைத் திருநாள், 45-ஆம் வயதில் சதிபதிகள் சிற்றின்ப வாழ்வை நீத்துச் சுத்த சாதனம் மேற்கொள்ளும் விரதத் திருநாள். குழந்தைகளுக்கு வயது வந்து குடும்பப் பொறுப்பை அவரிடம் விடுத்து 60-ஆம் ஆண்டில் வானப் பிரந்த ஆசிரமத்தை மேற்கொள்ளும் விடுதலைத் திருநாள், ஓர் அருட் பெரியாரை அடுத்துத் தீவிரமான யோக சாதனத்தை மேற்கொள்ளும் சாதனத் திருநாள், 80 வயதில் எல்லாக் கட்டுக்களையும் நீக்கித் துறவு நிலையெய்தும் துறவுத் திருநாள் முதலியன.

(2) பெருநாட்களாவன:— புத்தாண்டுத் திருநாள், கார்த்திகைத் திருநாள், தைப் பொங்கல், வசந்தத் திருநாள், ஆடிப் பதினெட்டு, மார்கழித் திருநாள் முதலிய இயற்கைப் பெருமையுள்ள நாட்கள், நாட்டுத்தலைவர், வீரர், கவிகள், கலைஞர் பிறந்த நாட்கள், முதன்மையான சரித்திர சம்பவங்கள் —இவற்றைக் கொண்டாடுவது பெருநாட்களாம்.

(3) இறந்தோர்க்குத் துக்கங் காக்கும் நாட்களும், நாட்டிற்கு இடர்கள் வந்த நாட்களும், பெரிய மகான்கள் கலந்து சென்ற நாட்களும் கருநாட்களாகக் கொண்டாடப் படுவன.

நண்பரும் உறவினரும் கூடியுண்ணல், ஏழையெளியவருக்கு உணவளித்தல், நாட்டுக் கல்வி, கலை, தொழில், சுகாதாரம், சமய வுணர்ச்சி— இவை பெருகும்படியான தான தருமங்கள் வழங்கல், வீர விளையாட்டுக்களும் பந்தயங்களும் நடத்திப் பரிசுகள் வழங்கல், நல்ல நாடகங்கள் நடித்தல், சொற்பொழிவுகள் ஆற்றல், புலவரைக் கொண்டு பலகலைத்

திறன்களைக் காட்டுவித்தல், நல்ல நூல்களை அச்சிட்டு இனாமாக வழங்குதல், அறவியலிற் சொல்லப்பெற்ற செயல்களை இயன்றமட்டும் செய்தல்— இவையே விசேஷ நாட்களைப் பயன் பெறக் கொண்டாடும் முறை. நாம் செலவிடும் ஒவ்வொரு காசும் நாட்டிற்கு நிலையான பயனைத் தரவேண்டும்.

## 7. குலநலம்

**நிலநலத்தை வேண்டி, நிறைமுறையாம் வாழ்வாற்**
**குலநலத்தைப் போற்றக் குறி.** 1

இந்த உலகின் நலத்தைக் கருதி, நிறை முறையான தூய வாழ்வினால் உனது குலத்தின் நன்மையைப் போற்றி வளர்க்கக் கருதுவாயாக!

குலநலமே நிலநலமாம். **அறவியலிற்** கூறியபடி தானும் தன்னினமான மனித சமுதாயமும் பூரணம் பெற ஒவ்வோர் ஆணும் பெண்ணும் முயலவேண்டும். அதற்குச் சதிபதிகள் நிறைமுறையான தரும்சாதன வாழ்வு வாழவேண்டும். அறமும், அறிவும், அருளும், பொருளும், ஆன்மக் கலப்பும், ஆருயிர்க் கன்பும், புனித வொழுக்கமும், பொதுநலத் திறனும், அழகும், தொழிலும், வீரமும், விரதமும், கடவுளுணர்ச்சியும் கொண்டு வாழ்தலே நிறை முறையாக வாழ்தலாம். வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பூரணம் பெற வேண்டும்; வாழ்வின் ஒவ்வொரு நுட்பச் செயலையும் சுத்தான்ம பரிபூரணத்திற்கே பயனாகச் செய்ய வேண்டும். அதனால் குலமும் நிலமும் இன்புறும்.

**பசிக்குத் தொழிலும் பரமற்கு நெஞ்சும்**
**இசைக்கு வியன்செயலு மெண்.**

குலநலம் போற்றும் சாதகன், பசியைத் தீர்க்க ஒரு நல்ல தொழிலைச் செய்யக் கருதுக ; உள்ளத்தைப் பரமனுக்கே தரக் கருதுக ; உலகில் 'நல்லவன், தருமவான்' என்று இசைபெற ஒரு சிறந்த புண்ணியப் பணியையும் நாடுக !

மூன்று தத்துவங்கள் உள்ளன :—தான், உலகம், கடவுள். இவற்றையே ஜீவ - ஜக - பரம் என்பர் ; இம்மூன்றும் இணைபிரியாத சம்பந்தமுடையன ; இம்மூன்றும் வாழ்வில் ஒன்று சேரவேண்டும். ஒவ்வோர் ஆணும், ஒவ்வொரு பெண்ணும் தன்னைச் சுத்தான்மா என்று அறியவேண்டும் ; தன்னைச் சுற்றியுள்ள உலகம் தெய்வத் திருவருள் விளையாட்டென் றுணர வேண்டும் ; தனக்கும் உலகிற்கும் ஆதாரமாக நிற்பதெல்லாம் ஓர் எல்லையற்ற பரம் பொருள் என்று காணவேண்டும். தன்னமைதி, உலகமைதி, தெய்வசித்தி— இம்மூன்றும் மனிதன் தேடத் தக்கன. தான் அமைதியாகிப் பசி நீங்கவேண்டும். பசியென்றால் வயிற்றுப்பசி மட்டுமன்று ; மனப்பசியுங் கூடத்தான். தூலதேகம் நிலைக்க வயிற்றுப் பசிக்கு உணவு வேண்டும். அஃதில்லாவிட்டால் தானம், தவம், அருட்பணி எவையும் நடவா. ஆதலால், ஒவ்வொருவனும் ஒரு தக்க தொழிலால் பசிப்பிணியைத் தீர்த்துக்கொள்ள வேண்டியது முதன்மையானது. இந் நூலிற் சொல்லிய சாதனம் புரியும் எந்த அறவோனும், பிறர் கையைப் பார்த்துப் பிழைக்கக்கூடாது ; உடற் பாதுகாப்பிற்காகத் தினமும் சுமார் நான்கு மணி நேரம் தொழில் புரியவேண்டும். மனம் ஏதோ ஒன்றை எப்போதும் வேண்டுகிறது. ஒருவனுக்குப் பொன்னிருக்கும், பொருளிருக்கும், செல்வாக்கிருக்-

கும்; இவற்றினால் எல்லாம் அப்பசி நீங்குவதில்லை. மனம், 'அமைதி அமைதி, இன்பம் இன்பம்' என்று முறையிடுகிறது. அமைதியும் இன்பமும் பெறுவதே மனப்பசி தீரும்வகை. உடற்பசிக்குத் தொழில் புரிகிறோம். மனப்பசியாற எத்தொழில் புரிவது? அதுதான் தியானம், யோகம்: பரமனிடம் உள்ளத்தை வைத்தலே தியானம்; அவனுடன் ஒன்றுபட்டு வாழ்தலே யோகம். உடலைத் தொழிலுக்குத் தருக; மனத்தை உன்னுட் கோயில் கொண்டு சுத்தான்மாவாக விளங்கும் பரமனுக்கே ஊணுக்குக! அஃதாவது: கையானது தொழிலிலும், மனமானது கடவுளிடமும் இருக்கவேண்டும். இந்த இரண்டும் பெற்றதும் இன்னொரு கடமையுள்ளது. தன்னைச் சுற்றி ஓர் உலகம் உள்ளது. அதில் எத்தனையோ உயிர்கள் உள்ளன. உன்னால் முடிந்தமட்டும் அவற்றிற்கு ஏதாயினும் புண்ணியஞ்செய்! 'பலபேருக்கும் உபகாரமாக வாழ்ந்தான்; இன்ன தருமத்தைச் செய்தான்; புண்ணியவாளன்' என்று உலகம் உன்னை நினைத்து மெச்சும்படியாக வாழவேண்டும். இந்த மூன்று செயலும் குலத்தை விளக்கும் மூன்று சுடர்களாகும்.

**அச்ச மடிமை யகந்தை யிருள்வறுமை**
**யிச்சகத்தைக் கொல்லு மெமன். 3**

அச்சம், அடிமைத்தனம், எனது யானென்னும் அகங்காரம், மடமை, வறுமை— இவையே இவ்வுலகுயிரைக் கொல்லும் கூற்றாக உருவெடுத்து நிற்கின்றன.

அச்சத்தாலே நரம்புகள் தளர்ந்து, மனமுடைந்து உயிர்ச்சேதமுண்டாகும். அடிமைப்பட்டவன் தனது

மனச் சாட்சிக்கு இசைந்து, துணிந்து நடக்க முடியாது. அவன் பிறர் கைப் பாவையாகிறான். நான் எனதென்றும் செருக்கினால் மனிதன் அரக்கனாகிறான்; தனக்கு மேலுள்ள அருளிறைவனை மறக்கிறான்; உலகிற் போர் விளைவிக்கிறான்; போரில் மடிகிறான். மடமையால் மனிதன் பகுத்தறிவையிழந்து, நல்லது பொல்லது தெரியாது, குருட்டுத்தனமாக நடந்து, உடலையும் மனத்தையும் உயிரையும் உலகையும் கெடுக்கிறான். வறுமையால் வாழ்வே வெறுமையாகிறது. மடமை வறுமை இரண்டுமே பாபங்களுக்குக் காரணம். இந்த ஐந்து பிணிகளும் சேர்ந்துதான் நமனாகி உலகை வாட்டுகின்றன. கட்டுங் கவலையும் கண்ணீருமாகத் தவித்து எமன் வாயில் விழும் உயிர்களை எப்படி யின்புறச் செய்வது? பேராசை, திருட்டு, பொய், பொறாமை, போட்டி, கருமித்தனம், ஆணவ மாயம், அஞ்ஞானம்— இவற்றால் அழியும் உலகை எப்படிக் காப்பது? கல்வி பரவுக; கைத்தொழி லோங்குக; ஆத்மஞானம் ஒளிர்க; சோம்பல் ஒழிக! செல்வர் தமது செல்வத்தைப் பூட்டாமல், உழைப்பும் பிழைப்பும் உண்டுபண்ணத் தொழில் நிலயங்களை நாட்டுக! தாம் சுத்தான்மா என்றுணராத யாரும் இல்லை யெனச் செய்க! தூய்மை, வாய்மை, ஆத்ம சுதந்தரம், ஆத்ம சமத்துவம்— இவற்றால் அஞ்ஞானமும் ஆணவமும் ஒழிக! உள்ளே தெய்வான்மாவையும், உலகில் தெய்வத் திருவருளாடலையும், உயிர், உலகங்களை இயக்கும் பரமாத்மாவையும் ஒவ்வொரு சீவனும் உணரச் செய்து வாழ்வையே சுத்த முக்த ஸமத்வ யோகசாதனமாக்குக! இவையே அச்சம், அடிமை, அகந்தை,

இருள், வறுமையென்னும் ஐந்து பாசக்கயிறுகளை வீசி உயிர்களைப்பற்றி யுண்ணும் கூற்றை வெல்லும் வகையாம்.

**நின்றுபடுத் தீன்றெமன்வாய்ச் சென்றுபடல் வாழ்வல்ல**
**பன்றிக்கு முண்டப் பயன். 4**

சோறுண்டு, படுத்துறங்கி, மக்களை ஈன்று, வேறு ஆத்மநலம் கருதாமல் எமன்வாயிற் சென்று இறந்தொழிதல் வாழ்க்கையல்ல. பன்றிக்குக்கூட இத்தகைய பயன் உண்டு.

மனித வாழ்வின் நோக்கம் தெய்வ சித்தியே. தன்னுள் உள்ள தெய்வத்தைக் கண்டு, தனது வாழ்வைத் தெய்வநிலைக்கு உயர்த்தி, மனித சமுதாயமும் தெய்வநிலை பெறச் செய்யவேண்டும்; இது மனித தருமம். உண்ணல், உடுத்தல், இல்லறத்தில் மனைவி மக்களுடன் வாழுல் எல்லாம் இந்தத் தெய்வ சித்திக்கு ஒரு துணையாகுமேயன்றி, இவையே வாழ்வின் நோக்கமல்ல. தனுகரண புவன போகானுபவங்களால் உலகியல்பை யறிந்து, அதன் இன்பம் இவ்வளவுதான் என்று தெரிந்து, அதற்கு மேலுள்ள தூய கடவுளின்பத்தைத் தேடவேண்டும். மனிதன் பகுத்தறிவால் உள்ளது இன்னது இல்லது இன்னதென் றறிந்து, தன்னுள் உள்ள சுத்தான்மாவான நித்தியப் பொருளைச் சாட்சாட்கரித்து மாசற்ற பேரின்பத்தில் வாழத் தக்கவன். ஒவ்வொரு நாளும் தன்னைத் தெய்வ நிலைக்கு உயர்த்திக்கொள்ள மனிதன் கடமைப்பட் டிருக்கிறன். "ஆத்ம ஞானத்தால் தன்னை உயர்த்து; தன்னைக் கீழியல்புகளில் தாழ்த்தாதே!" என்று கீதை கட்டளை யிடுகிறது.

**வீண்பகட்டும் வேண்டா வெறுமையு மில்லாமல்**
**மாண்புபெற வாழ்வாங்கு வாழ்.** 5

*பொருளையும் மனிதசக்தியையும் வீணாக்கும் ஆடம்பரங்களும், 'வாழ்வு வேண்டா; உலகம் வேண்டா' என்று மறுக்கும் வறட்சியும் இல்லாமல், இல்லறத்தில் சிறப்புற்று விளங்க எப்படி வாழ வேண்டுமோ அப்படி வாழ்க! இதுகாறும் சொல்லப்பட்ட நெறிபற்றிக் குலவாழ்வைப் போற்றலே* **வாழ்வாங்கு வாழ்தலாகும்.** *அறம், அன்பு, வாய்மை, பொறுமை— இந்த நான்கும் மாண்பான வாழ்விற்கு நான்கு தூண்களாகும். வாழ்வு நம்மைப் பூரணப் படுத்திக்கொள்ளத் திருவருள் கொடுத்த ஒரு தரும சாதனம்; அதை வறட்டுத் துறவுடன் 'வேண்டா' என்று ஒதுக்கி யோடக்கூடாது. உலகையும் வாழ்வையும் அறிவிற்கும் ஆத்மசித்திக்கும் சாதகமாக்கிக் கொள்ளவேண்டும். ஆனால், உலக வாழ்விலேயே மூழ்கி வீண் ஆடம்பரங்களில் காலத்தைக் கழிக்கக் கூடாது. புவியைக் கொண்டு பூரணம் பெறுக; குலத்தைப் போற்றி நலத்தைப் பெறுக!*

**எட்டாவது, குல வியல் முற்றிற்று.**

# கூ. தொழிலியல்

உலகளாவிய அன்பினால் பக்தியோகமும், உலகாலயத்திற்குப் பயனுள்ள அருட்பணியால் கர்ம யோகமும் செய்ய வேண்டும். மனித சமுதாயத்தையே கடவுளின் திருமேனியாகக் கருதி அருட்பணி புரிதல் சிறந்த கர்ம யோகமாகும். கர்மயோகம் என்றால் கடவுட்கலப்புடன் கடமை புரிதலாம். உடற் பாதுகாப்பிற்கும், உயிர்ப்பாதுகாப்பிற்கும், மனத்தை வெல்லுவதற்கும், ஆத்ம சித்தி பெறுதற்கும், மனித சமுதாயம் இன்புறுதற்கும் செய்யவேண்டிய கடமைகள் எத்தனையோ உள்ளன. இயற்கையுலகம் எல்லையற்ற தொழிற் சாலை: அதில் யாரும் தொழி லில்லாது ஒரு நொடிப்பொழுதும் இருக்க முடியாது. தொழிலே உயிர்ப்பதற்கு அடையாளம். இதயத் துடிப்பு முதல் இயந்திரத் துடிப்பு வரை, உலகம் தொழிலோசையால் நிரம்பி யிருக்கிறது. முக்குண வியற்கை உலகை யாட்டுகிறது. உடல், உயிர், மனம், உணர்வு, அறிவு—இவற்றால் எல்லாரும் வேலை செய்துகொண்டே யிருக்கின்றனர். இயற்கை எவ்வாறு அடக்கமாக இடையறாது வேலை செய்கிறது பாருங்கள்! 'என் முதல்வனுக்கு அடங்கி, பயன் களிற் பற்றின்றி ஓயாது உழைக்கின்றேன்; சுடராய் ஒளிர்கின்றேன்; கடலாய் நிறைந்துள்ளேன்; வானாய் விரிந்துள்ளேன்; மீனாய் மிளிர்கின்றேன்; காற்றாய் வீசுகின்றேன்; கனலாய் எரிகின்றேன்; மழையாய்ப் பொழிகின்றேன்; மண்ணாய்ச் செழிக்

கின்றேன்; உணவாய்க் கனிகின்றேன்; உடலாய் உயிர்களைச் சுமக்கின்றேன்; இன்னும் பலவாய்ப் பரந்து விளையாடுகின்றேன். நானே உன்மூலம் வினை புரிகின்றேன். நீ செய்வதாக அகங்கரியாதே! என்னைப் போலவே பற்றற்றுத் தொழில்செய்; பலன்களை இறைவன் இச்சைக்கு விட்டுவிடு!' என்று இயற்கை மோனமாக உபதேசிக்கிறது. ஆகாயத்தில் எத்தனைக்கோடி மீனணிகள் உள்ளன! அவை அங்கிங்கு விலகாமல் காலக்கணக்கின்படி ஒரு தலைவனுக்கு அடங்கி நடக்கும் படையணிபோலச் செல்லுகின்றன. அவற்றைப்போல, உயிர்க் குலமும், அமைதியாக, மனச் சாட்சியான தரும தேவதைக்கு அடங்கி, தெய்வ வொளியை நோக்கி இயல்பாக வாழ்ந்தால் இன்புறும். ஒவ்வொருவருள்ளும் அந்தராத்மாவாக விளங்கும் கடவுளுக்கு அன்றன்று செய்யும் தொழில்களை நிவேதிக்கவேண்டும். கடவுள் நிவேதனத்திற்குத் தூய கனிகளைப் படைப்பது போலவே தூய தொண்டினைச் செய்து அதன் பயனைப் படைக்கவேண்டும். கடவுளுக்கு வழிபாடெனக் கருதும்போது, தூயதொண்டைச் செய்யவே மனம் நம்மைத் தூண்டும். 'எனது யா'னென்னும் இருமாப் பற்றிரு; மனத்துறவுடனே வினைத்தவமியற்று; யோகயுக்தனாய் உத்தமத் தொழில் செய்; உள்ளத் தூன்றி யுலகத் துலாவு; உட்பொருளொன்றி மட்புவிக் குதவு; அமைதியிலூன்றி ஆற்றுவதாற்று; வழிபாடாக மங்கல வினைசெய்; செய்பவன் அவனெனத் தெளிந்து, நினைந்து, பணியும் பயனும் பகவனுக் காக்கு; உள்ளத் தெளிவும், உலகிற் கின்பமும், உயிர்க்குல நன்மையும் உன்னிப்

பணிசெய்; அறிவால் இறைவனை அகத்திற் கலந்திரு; அன்பால் அவனை அனைத்திலும் பார்த்திரு; ஆருயிர்ப் பணியால் அவனையே வழிபடு! இவ்வாறு தொழில் புரிந்தால் வாழ்வு பரிசுத்தமாகும். இவ்வாறு நற்றொழில் செய்து மாந்தர் ஒரு குலமாக வாழும் நெறியை இத் தொழிலியல் விளக்குகிறது:

---

## 1. முயற்சி

**முயல்க, முயல்க, முயல்கமேன் மேலும்**
**பயன்களைவைத் தீசன் பதம்.** 1

உலகில் அறிவும், ஆற்றலும், அன்பும், அருளும், அறமும், வளமையும், இன்பமும், ஒற்றுமையும், ஆத்ம ஞானமும் பெருக அவரவர் இயல்பிற்கேற்ற நல்ல தொழில்களை முயலுக; இடைவிடாது முயலுக; கைதளராது, மனந்தளராது, மேன்மேலும் முயலுக; வினைப்பயன்களை இறைவனடிக்கே நிவேதனமாக்கி முயலுக!

முயற்சியில்லாது முன்னேற்றமில்லை. முயற்சியே உயிர்க்கனலாகும். உடல், உயிர், மனம், அறிவு, உணர்வு — இவை மாசற்றுப் பூரணமெய்தி, மாந்தர் சுத்தநிலை பெறுதற்கு இடைவிடாமல் முயற்சி செய்க; எல்லாச் செயல்களையும் பூரணம் பெறுதற்கே காரணமாக்குக; அகந்தையில்லாமல், இறைவனிச்சைக்கே வேள்வியாகப் பணிபுரிக! வினைத் தலைவனும், பலன்களை யுண்போனும் அவனே ஆவன்; மரம் வைப்பவனும் பலனுண்போனும் அவனே. இக்கரும வுடல் அவன் காப்பில் வளருகின்றது. உண்ண, உடுக்க, இருக்க, அறிவை வளர்க்க, குலப்புகழ் நாட்ட,

நிலப்புகழ் நாட்ட, பொதுநல மோங்க, சுத்த முக்த சமத்துவ சித்திபெற ஒவ்வொருவரும் அயராது முயற்சி செய்யவேண்டும். முயற்சியின் பயன்களை முதல்வனுக் காக்குக!

நன்கு முயற்சியாற் சாராத தொன்றில்லை ;
கங்கை கொணர்ந்தோன் கரி. 2

உறுதியான உழைப்பால் நமக்கு எய்தாத பொருள் எதுவும் இல்லை. இமயமலைக்கு அப்புறம் ஓடிய கங்கையைக் கொணர்ந்து வடநாட்டைச் செழிக்க வைத்த பகீரதன், முயற்சியின் வெற்றிக்குச் சாட்சியாவான்.

உறுதியும் பொறுமையும் கொண்டு முயன்றது பலிக்கும். இயற்கை வன்மைகளை வென்று, மனித வாழ்வு விரிவடைந்து முன்னேற மாந்தர் முயற்சி செய்க! காலத்தையும் இடத்தையும் வென்ற பௌதிகப் புலவர் செய்யும் வியன்களெல்லாம், தன்னம்பிக்கை கொண்ட அயரா முயற்சினாலேயே நிகழ்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஓர் இயற்புலமையுண்டு; அதைச் சரியான கல்விப் பயிற்சியால் தூண்டி மனித சமுதாய நன்மைக்குப் பயனுக்குக! பகீரதன்போலப் பொறுமையுடன் முயன்றால் இறைவனருளால் வெற்றி யெய்தும். புக்கர் வாஷிங்டன், எடிஸன், ராமன் போன்ற அறிவாளர், தமது முயற்சியினாலேதான் உலகம் புகழும் நற்செயல்களைச் செய்தனர்.

முயற்சிக்குச் சீதேவி முன்னாகும் ; சோம்பும்
அயர்ச்சிக்கு மூதேவி யாம். 3

மேன்மேலும் நல்ல முயற்சி செய்பவனுக்குத் திருமகள் முன்வந் தருளுவாள். வேலைக்குச் சோம்பி,

அயர்ந்து, தளருவோனுக்கு மூதேவியின் தொடர்பே யாகும்.

தொழிலில்லாதவன் எழிலில்லாதவனும்: தாளாண்மையில்லான் ஆளாகமாட்டான். சோம்பற் சாவடி மூதேவி யிருக்கை. செய்யச் செய்யச் சிதேவி; சோம்பச் சோம்ப மூதேவி. ஒவ்வொரு வரும், தமது இயல்பிற்கேற்ற வினையில் வண்டுபோ னுழைக்க வேண்டும்.

**ஏதானு மொன்றை யியற்புலமை கொண்டறிந்து,**
**மூதுலகம் வாழ முயல்.** 4

ஒவ்வொருவரிடமும் இயற்கையாக ஒரு புலமை, அல்லது அறிவாற்றல் அமைந்துள்ளது. அதைக் கொண்டு, தான் செய்யக்கூடிய காரியம் இன்னதென்று அறிக; அக்காரியத்தை உலகிற்குப் பயனுகும்படி செய்க! **வியாசஸர், வால்மீகி, வள்ளுவர், கம்பன், காளிதாஸன், ஹோமர், ஷேக்ஸ்பியர்** முதலிய அருட் புலவர் தமது சொற்புலமையால் உலகிற்குப் பேருதவி செய்து, மனித நாகரிகத்தை வளர்த்தனர். **ஸ்டீபென் ஸன்** புகைவண்டியைக் கண்டுபிடித்தார். **குதேன் பெர்கு** என்னும் ஜெர்மானியர் அச்சுக்களைக் கண்டு பிடித்து, அச்சுத்தொழிலுக்குப் பெரிய முன்னேற் றத்தை யீந்தார். **எடிஸன்** பல மின்சாரப் பொறிகளைக் கண்டு பிடித்தார். **ஜகதீசசந்திர போஸ்** 'க்ரெஸ்கோ கிராப்' என்னும் யந்திரத்தின் உதவியால் செடி கொடிகளின் இயல்பையும் உணர்ச்சியையும் உல கிற்கு விளக்கினர். **கிரஹாம் பெல்** என்பவர் முதல் முதலில் 'டெலிபோன்' கண்டு பிடித்தார். **மோர்ஸ்** என்பவரும், **வீட்ஸ்டோன்** என்பவரும் தந்தியைக் கண்டுபிடித்தனர். **மார்கோனி** கம்பியில்லாத் தந்தி

யைக் (Wireless telegraph) கண்டுபிடித்தார். இந்த மாதிரி மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பயனுள்ள ஒரு புதுமையைக் கண்டுபிடிக்க வேண்டும். இயற்கையின் உள்ளத்தில் எத்தனையோ அற்புத சக்திகள் உள்ளன; அவற்றை ஆராய்ந்தறிந்து உலகிற்கு விளக்கவேண்டும்.

அவலப் படுவினையில் ஆற்றலைப் போக்கல்
உவர்நட்டு நீர்பாய்ச்ச லொப்பு. 5

'அவலம்' என்றால் நோய், வருத்தம், தளர்வு, வறுமை, கேடு எனப்பொருளாம். இவற்றைத் தரும் காரியங்களில் மனித சக்தியை விரைக்கக் கூடாது. அப்படி விரைக்குவது, ஒன்றிற்கும் உதவாத உவர் நிலத்தில் பயிர் நட்டு நீர் பாய்ச்சுவதற்கு ஒப்பாகும். உவர்நிலம் பலனியாது. போகச் சோம்பல், சிற்றினச்சேர்க்கை, களியாட்டங்கள், குடி, வம்பு வழக்குகளிற் காலத்தைச் சூதாடும் வீணர் மனிதப்பதர்களாவர். மனித சக்தியைக் கொண்டு எத்தனையோ அற்புதங்களைச் செய்யலாம். புதிய வியன்களைக் காணல், பழையவற்றைப் புதுக்கித் திருத்தல், கலைகளை வளர்த்தல், உடையுணவிற்கான உழைப்பைச் செய்தல், கல்வியைப் பரப்பல், வறுமை யொழியத் தொழில்களை நாட்டல், இரும்பு, செம்பு, ஈயம், பித்தளை, பொன், வெள்ளி, மண், மரம் இவற்றைக் கொண்டு பல சாமான்களைச் செய்தல் முதலிய எத்தனையோ அற்புதங்களை இயற்றலாம்; பாயும் மலையருவியால் மின்சார யந்திரத்தை யோட்டலாம்; காந்தம், மின்சாரம், ரேடியோ முதலியவற்றால் ஆயிரக்கணக்கான தொழில்களைச் செய்யலாம்; நாட்டில் விளைபொருள்களைக் கொண்டு கைத்தொழில்

வளர்க்கலாம். தன்னைப் பரிபூரணப்படுத்திச் சுத்த சித்திபெற, அத்யாத்ம முயற்சிகள் பொறுமையாகச் செய்யலாம். இவ்வாறு, ஏதாயினும் நல்ல காரியத்தில் மனித சக்தியை யூக்கி உலகிற்குப் பயன்படுத்த வேண்டும்.

---

## 2. வினை வழிபாடு

**முடிக்குந் திறனின்றேல் முந்திநா னென்னுதே ;**
**அடக்கத்தி னுற்ற லறிவு.** 1

ஒரு காரியத்தைத் தொடங்கும்போது, ‘ இது நமக்கு ஏற்றதா ? இதை முடிக்க நமக்கு ஆற்றல் உள்ளதா ?’ என்று சிந்தி ; அக்காரியத்தை வெற்றி பெற முடிக்கும் ஆற்றல் இல்லாவிடில், ‘ நான் ஆச்சுது ’ என்று முந்தி மார்தட்டி வராதே ! ஆற்றலை அடக்கமாயிருந்து வளர் ; பிறகு காரியத்தை மேற்கொள் ! என்றவாறு.

இடம், பொருள், காலம், கைத்திறன், துணைவலி, சுற்றம், எதிரியின் பலம்—இவற்றை நன்கு ஆராய்ந்தே ஒரு காரியத்தில் நீ தலையிட வேண்டும். வலிவில்லாது செருக்காடுவோன் மண்ணைக் கவ்வுவான் ; அடக்கமாயிருந்து ஆற்றலைப் பெருக்க வேண்டும். ஆற்றல் வந்தபின் ஆண்மையைக் காட்டலாம். அசட்டுத் துணிவினும் அடக்கமேயினிது ; பத்துத் தெரிந்தால் ஒன்றைப் பேசலாம் ; ஒன்பதிருந்தால் ஒன்றைக் காட்டலாம் ; பக்கா இருந்தால் அரைக்கால் வழங்கலாம். சரக்கிருந்தால் சபைமுன் வரலாம் ; வில்வலியும் அறவலியும் இருந்தால் வீரம் பேசலாம். திறமை யறிந்தே செய்கையி

விறங்கு; ஆற்றலின்றி யானென வாராதே! இவ்வுண்மைகளை யறிதல் காரிய நிறைவேற்றத்திற்கு முதன்மையாம். ஆனால், ஒவ்வொருவரும் உணவிற்காக முயன்று தொழில் செய்யத்தான் வேண்டும்.

உழைத்த வூணை யுவந்துசுவைத் துண்க :
வழுத்தி வழிபட் டுணர். 2

ஒவ்வொருவரும் வயிற்றிற்காகத் தினம் 4 மணி நேரமாவது வேலை செய்ய வேண்டும். உண்மையான உழைப்பினால் வந்த உணவை மனமுவந்து, நன்றாயிருந்து, சுவைத்து உண்க ; உண்ணுமுன், இறைவனை வழுத்தி, உள்ளத்தில் தியானத்தால் வழிபட்டுச் சித்தசுத்தியுடனும், ஆத்ம திருப்தியுடனும், கடவுளுணர்வுடனும் சுசிருசியாக உண்க!

உணவிற்கும் மனதிற்கும் பொருத்தமுண்டு. திருட்டு, பொய், வஞ்சம், கொலை, ஊன் மது வியாபாரம்— இவற்றால் வந்தது, பிறர் புண்ணீரும் கண்ணீரும் சேர்ந்த பாபச் சோறாகும்; பாபச்சோறு பாபத்தையே வளர்க்கும். மானத்தை யிழந்து, பிறர்க் கடிமைப்பட்டுண்ணும் சோறு அடிமைப் புத்தியை வளர்க்கும். உடலால் அல்லது அறிவால் உழைத்தே அனைவரும் உண்ணவேண்டும். பத்தினித் தெய்வம் பழுதறச் சமைத்து, அன்போடு இட்டதே அமுதென உண்ணவேண்டும். முன் உண்டது நன்றாகச் செரித்த பிறகே, மறுபடியு முண்ண வேண்டும்.

மலச்சிக்கலின்றி, வயிற்றில் வெற்றேப்பமும் பசிக் கனலும் கண்டால், நாக்கில் இயற்கையான சுவை தோன்றும். அதனாற்றான், ‘சுவைத் துண்க!’ என்று இங்கே கூறப்பட்டுள்ளது. குளித்து, உடுத்து, அவரவர்க்கிசைந்த அனுட்டானங்களை

முடித்து, இறைவனைத் தியானித்து, கைவிரல்களைப் பின்னி ஒரு நிமிஷம் சூரியனைப் பார்த்து, 'ஒளியே! வணக்கம். என்னை உண்மை யறிவின்பத்திற்கு நடத்து!' என்று வழுத்திய பின்னர், பரிசுத்தமான இடத்தில் இலைபரப்பிக் கிழக்கே அல்லது தெற்கே பார்த்து, முதுகு கூனாமல், பதுமாசனத்தில் அமர்க! சாதம்போட்டுச் சாப்பிட வாழையிலை, தாமரையிலை, ஆலிலை, மந்தாரையிலை— இவை ஏற்றவை. சாப்பிடும் போது மோனமா யிருக்கவேண்டும்; சளசள வென்று பேசக்கூடாது. ஒருவர், முன்னேயுண்டு, ஒரு புண்ணிய நூலைப் படித்துக்கொண்டிருப்பது நல்லது. அதைக் கேட்டுக்கொண்டே மற்றவர் உண்ணலாம். பத்தினித் தெய்வம் பரிமாறும்போது, 'அன்ன பூரணியே, யாம் உண்ணும் உணவு உயிர்க்கனலாகி, எமக்கு ஆற்றலையும் மனவுறுதியையும் தந்திடுமாக! , ஓம் சுத்த சக்தி' என்று தியானிக்கவேண்டும். நெய் யூற்றியதும், 'அன்னம் அமுதமாகுக; ஆற்றலருளுக! ஓம் சுத்த சக்தி!' யென்று நீர் சுற்றவேண்டும். அதன்பிறகு, நெய் கலந்த சுத்தான்னத்தைச் சிறி தெடுத்துப் பிராணாஹுதி போட்டுக் கொள்ளவேண்டும். அப்போது, 'ஐம்பூதம், ஐங்காற்று, ஐம்புலன், ஐந்து கர்மேந்திரியங்கள், அந்தக்கரணங்கள்—இவை சேர்ந்த இயற்கையுடலை ஆளும் அந்தராத்மனே, சுத்தனே, இவ்வுணவு உனக்கு வழிபாடாகுக! இதை யேற்று எமக்கு ஆற்றலும், ஒளியும் அருள்க! ஓம் சுத்த சக்தி!' என்று சிந்திக்கவேண்டும்; அதன் பிறகு உண்ணவேண்டும்: முதலில், நாவில் எச்சி லூறத் தித்திப்பான பண்டத்தை யுண்ணலாம்; பிறகு அறுசுவைகளுடன் உண்ணலாம். இருந்து, நன்றாக

மென்று, பதறாமல் சிதறாமல், வயிற்றில் கனல்வடிவாயிருக்கும் சக்திக்கே ஒவ்வொரு பிடியுணவும் வழிபாடென நினைத்து உண்ணவேண்டும். உணவிற்கேற்றபடியே சித்தவிருத்தியும் தொழிலும் அமையுமாதலின். இங்கே உண்ணும் முறை விளக்கப்பெற்றது.

**மாமனிதன் றேவென்னும் வாழ்க்கைப் படிகளுள ;**
**தாம்செய் வினையே தரும்.** 3

விலங்கு (மா), மனிதன், தேவன் என்னும் மூன்று வாழ்க்கைப் படிகள் உள்ளன ; தாம் தாம் முயலும் வினையே அவற்றைத் தரும்.

அறிவிற்கேற்ற இயல்பு, இயல்பிற் கேற்ற நினைப்பு, நினைப்பிற்கேற்ற செய்கை, செய்கைக்கேற்ற வாழ்க்கையுண்டாம் :

விலங்குகள் தாமதவியல்புடையன. மனிதன் ராஜஸவியல்புடையவன். தேவர் சாத்விகவியல்புடையவர். விலங்குகள் புலனறிவால் இரைதேடியுண்டு, கூடிக் குட்டிபோட்டு, அது பெரிதாகுமட்டும் வளர்த்து விட்டு விடுகின்றன ; அவை தமக்காகமட்டுமே வாழ்கின்றன. மனிதன் பகுத்தறிவினால் நல்லது பொல்லது இன்னதென்றறிந்து, மனத்தால் நினைத்துத் தன்னுறுதியுடன் நடக்கவேண்டும். ஊண் உறக்கம், ஊடல் கூடல், ஈனல் பேணல்களையே கருதி, நலந்தீதறியாது நடக்கும் மனிதன், மனிதவிலங்கே யாவான். மனிதனது சிறந்த தன்மை அன்பும் உயிரிரக்கமும் ஆம். அன்பு, அறவுணர்ச்சி, ஈகை, ஒப்புரவு, தன்னலமறுப்பு, பொதுநலத்தொண்டு, வீரம், ஆண்மை, அஞ்சாத மெய்யுறுதி, ஆட்சி, நற்செயல்— இவையெல்லாம்

மனிதத்தன்மையாம். அடிமைப் புத்தி, மடமை, இரக்கமில்லா முரட்டுத்தனம், அன்பின்மை, பகைமை, கட்டுக்கடங்காக் காமவெறி, பேய்மதம், பேராசை—இவையெல்லாம் விலங்குத் தன்மையாம். ஆண்மைகொண்டு அறத்தைக் காப்பவனே மனிதன் : விஜயன், சிவாஜி, குருகோவிந்தன், பிரதாபசிங்கன், பொற்கைப் பாண்டியன் முதலிய வீரர் மனிதத்தன்மை மிக்கார். பரமசாந்தராய், ஆசையாணவங்களைத் துறந்து, சித்தசுத்தியும், தன்னடக்கமும் பூண்டு, சுத்தான்ம சித்தராய் அருளொளிச் சுடர்களாய், எல்லையற்ற இரக்கங்கொண்டு, உயிர்க்கினிதாற்றவே உடல்கொண்டுலாவி, இடர்களைப் பொறுத்தும் இனியதே செய்யும் அறவோர் தேவராவர் : மனிதத்தன்மையைத் தெய்வத்தன்மையாக்கி, உலகில் அருளாட்சியை நாட்டவே தேவர் அருட்பணி புரிவர். மறவழியிற் சென்று, பேராசையுடன் எளியர்மேல் ஆகாசக் குண்டுவீசி, அவர் நாட்டைப் பற்றும் மண்வெறியர் மனிதக் கொடுவரிகளே யாவர். ஒரு நாட்டை அன்னிய மாயத்தினின்று விடுவிக்க அறவலியும் ஆண்மையுங் கொண்டு போர்புரிந்து வெல்லும் சுதந்தரவீரர் மனிதருள் மனிதராவர். யோகசக்தியாலும், தவக்கனலாலும் பரம உபசாந்த நிலையினின்று, மனித சமுதாயத்தின் அந்தக்கரணத்தில் நல்ல மாறுதலை யுண்டு பண்ணி, உலகை உயர்த்துவோரே சுத்த வீரரான தேவர்.

**தேவா சுரர்தாந்தாஞ் செய்யும் வினையாலே**
**யாவா ரிதனை யறி.** 4

அவரவர் செய்யும் செயல்களாலே, 'இவர் தேவர், இவர் அசுரர்' என்று அறிக !

தெய்வப்பொருளான சுத்தாத்மாவை உள்ளத்திற்கூடி, அதையே உலகிற் கண்டு, 'தாமே பிறர், பிறரே தாம்' என்ற சமநோக்கும், வாய்மையும், தூய்மையும், அருளும், பொறுமையுங் கொண்டு, எல்லாரும் இன்புறவே தேவர் வாழ்வோர் என்றறிக! அச்சமின்மை, ஆன்ம உறுதி, பொறியடக்கம், புறங்கூறாமை, உயிரிரக்கம், உள்ளத்தூய்மை, தியாகம், அஹிம்ஸை, நாண், ஒப்புரவு, தவவொளி— இவற்றைத் தேவரிடம் காணலாம். இடம்பம், இறுமாப்பு, செருக்கு, சினம், கொடுஞ்சொல், நாத்திகம், அதர்மம், பிறரைத் தூற்றல், பொறாமை, அநியாயக் கொடுமை, தசைத்திமிரால் தருமத்தை யழித்தல், அறமறியாமல் அடாதன செய்தல், கற்பழித்தல், எளியரை நசுக்கல், கொலை, கொள்ளை—இவையெல்லாம் அரக்கரியல்பாம். முற்காலம் திரிபுராதிகள், இரணியன், துரியோதனன், கம்ஸன் முதலிய அரக்கர் இரக்கமில்லாமல் உலகை நடுக்கியது போலவே, இக்காலத்திலும் பயங்கரமான கொலைக்கருவிகளைக் கொண்டு அரக்கர் உலகை நடுக்கி எளியரை நசுக்கி யாளுகின்றனர். இவர் கொடுமை தம்மையே அழித்துத் தெய்வசக்தியின்முன் வீழ்ந்துபடும்: அசுரபலம் ஆத்திரச் சினங்கொண்டெழுந்து, தீயுமிழ்ந்து கரிந்துபோம். தெய்வபலம் பொறுமையாக அறவலிகொண்டு வென்று நிலைநிற்கும்.

**வையமெலாம் சிற்சபை ; நல் வாழ்வெல்லாம் வேள்வி ;**
**செய்வதெலாந் தெய்வச் செயல்.** 5

'சிற்சபை' என்றால் அறிவு மன்றம், ஞானசபை, அருள்விளக்க நிலயம் எனப்பொருளாம். உலகமெல்லாம் இறைவன் அருள்விளக்கமான சிற்சபையே!

அதில், அவன் அனைத்துள்ளும் அறிவாயிருக்கிறான். எல்லா வுயிர்களையும் தனது திருமேனியாகக் கொண்டு இறைவன் உலகச் சிற்சபையில் விளையாடுகிறான். உயிர்வாழ்வு முழுதும் இறைவனிச்சையை உலகில் நிறைவேற்றும் வினைவேள்வியாகும். வாழ்வில் நாம் செய்யும் வினைவேள்வி யெல்லாம், இறைவனே ஆன் மாக்கள் மூலம் நிறைவேற்றும் செயலாம். கடலாவி, மேகம், மழை, பயிர், அவற்றை யுண்டு பிழைக்கும் உயிர்கள், மழையாற் பெருகும் ஊற்று, ஆறு, குளம் எல்லாம் ஒரு சுடரின் விளக்கமாம். அதுபோலவே, நாம் மண்ணிலும் விண்ணிலும் காணும் அனைத்தும் பரமன் அருள்விளக்கமே! ஒவ்வோருள்ளமும் சிற் சபையே! உயிர்த் துடிப்பெல்லாம் சின்மய நடனமே! உயிர் வட்டத்தின் நடுநிலை இறைவ னருளே! அவனுடன் உட்கலந்து, அவனையே உல கிற் கண்டு, மனச்சாட்சியினின்று அவன் பணிக்கும் செயல்களை அவனுக்கே வேள்வியாகச் செய்க! அவ் வாறு செய்வதெல்லாம், 'நான்' என்ற அகந்தையால் நிகழாது, 'என்மூலம், இறைவனிச்சையே இதைச் செய்கிறது' என்னும் உணர்வால் நிகழவேண்டும்: இத்தகைய கர்ம யக்ஞமே கீதையின் சாரமாகும். சுத்த யோகிகள் இறைவனை யெங்குங் கண்டு, அவன் அருள் விளையாட்டில் தமக்குரிய கருமத்தை யறிந்து, அதைத் திருவருளுணர்வு கொண்டு செய்வர். உயிரில் லாமல் உடலில்லையாமாறு போல, இறைவனருளில் லாமல் உலகமும் தொழிலும் இல்லையாம். உயிர், மனம், உடல்—எல்லாம் உள்ளே கோயில் கொண்ட பரம்பொருளின் மேலணிகளே; இதை யறிந்து உள்ளத்தானுடன் உட்கலந்து, அவனுக்கே வாழ்வை

வேள்வியாக்கினால், மனித மரபே தெய்வ சங்கமாகும்; உயிர்க்குலமெல்லாம் அருட்குலமாகும்; கிளைகளெல்லாம் அடிமரத்தில் ஒன்றுவது போல, பலவகை மாந்தரும் இறைவனுணர்வால் ஒன்றுவர்; அவர் செய்யுந் தொழிலெல்லாம் மனித சமுதாயம் உய்யுந் தொழிலாகும். உடைமைகளெல்லாம் உடையானுக்காம்; அருட்பொதுவாம்; கடமைகளெல்லாம் கடவுட் பூசையாம்; தாமே பிறராம், பிறரே தாமாம்; உள்ளே உலகாம், உலகே யுள்ளாம்; அவரவர் அவரவர் மன்னவராவர்; அனைவரும் இறைவன் குடிகளேயாவர். மனச்சாட்சி யொன்றே மாசறு நீதியாம். இவ்வாறு, வாழ்வை அருள் வேள்வியாக்கினால் பிறகு, உலகில் அழுக்காறேது? அடிதடி யேது? உள்ளன்பே உலக வாழ்வாகப் பெருகும்; நர மனிதர் தெய்வ மனிதராவர்; தெய்வக் கலப்பில் வாழும் மனித சமுதாயம் தெய்வ சங்கமாகும். இத்தகைய தெய்வ சங்கத்தையே வள்ளலார் அருட் பெருஞ்சோதி மன்றம், சத்திய ஞான சபை, சிற்சபை, பொற் சபை எனக் குறித்தார். தேக சுதந்தரம், போக சுதந்தரம் அனைத்தையும் உள்ளத்தில் நடமாடும் தனித் தலைவனான சத்குரு மணிக்கே அடைக்கலமாக வைத்துத் தம்மையே அவனுக்கீந்து, அவனுடன் கலந்து, உயிரிரக்கங் கொண்டு வாழ்வதே வள்ளலார் காட்டிய வழி. அடக்கமாயிருந்து ஆற்றலை வளர்க்கவேண்டும்; அதனால், உலகிற்குப் பயனான ஒரு நல்ல தொழிலாற்ற வேண்டும்; அதில் வந்ததைக் கொண்டு இறைவனை வழிபட்டு நிவேதித்து உண்ணவேண்டும். விலங்கியல், மக்களியல், அரக்கரியல், தெய்வவியல்—இவை இன்னவென்

றறிந்து, மேன்மேலும் தெய்வத் தன்மை பெறத்தக்க சாதனங்களைச் செய்யவேண்டும். உலகமெல்லாம் இறைவன் சிற்சபை யென்று கருதி, நாம் செய்வதை யெல்லாம் இறைவனிச்சைக்கே வேள்வியாக்கி, அவனுடன் கலந்து தெய்விக வாழ்வு பெறவேண்டும். இதுவே, இந்த அதிகாரம் விளக்கும் வினை வழிபாடு.

---

## 3. தொண்டு

**நல்வேலை யேசூழ நாளு மிருப்பாயேற்**
**பொல்லா வினையெல்லாம் போம். 1**

நாள்முழுதும் வாழ்வையுயர்த்தும் நல்லகாரியங்களே உன்னைச்சூழ கின்றால், அஃதாவது : நல்லகாரியங்களிலேயே ஈடுபட்டிருந்தால், தீவினைகளெல்லாம் அற்றுப்போம்.

தண்மையால் வெம்மை தணியும். நன்மையால் தீமை நலியும். நல்லார் கூட்டம், நல்லுரை கேட்டல், தூய தொண்டாற்றல், நன்னூலாராய்ச்சி, ஜபம், தியானம், அருள்வாக்குகளைப் பாடல், வயிற்றுப் பிழைப்பிற்காகச் சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒரு தொழிலைச் செய்தல்— இவையெல்லாம் நல் வேலைகளாம். இந்த நல்வேலைகளிலேயே மனம் பழுத்தால், தீமைகள் உதிர்ந்துபோம். தூயனசெய்யத் தீயன வொழியும்.

**தொண்டா லுறுமகிழ்வே தொல்புவியுஞ் செய்தோனும்,**
**அண்டரும் போற்று மமிழ்து. 2**

அவ்வாறு தன்னையும் மனித சமுதாயத்தையும் தூய்மையாக்கி உயர்த்தும் தொண்டினால் எய்தும் இன்பமே, இம் மூதுலகும், தொண்டு செய்தவனும், தேவரும் போற்றும் அமுதமாகும்.

'அமிழ்து' என்றால் அமிர்தம், தேவருணவு, இனிமை, இன்பம், சாகா மருந்து எனப் பொருளாம். தேவர் உண்ணும் அமிர்தம் தேவருக்கே பயனாகும். தொண்டின்பம் ஆகிய அமிர்தம் யாவருக்கும் பயனாகும். இறைவன் அருட்குலமாகிய உயிர்கள் இன்புறத் தொண்டு செய்வதால், தன்னலம், பொறாமை, சிறுமை, தீமைகள் ஒழிந்து வாழ்வு விசாலமாகிறது. தன்னலமற்ற பணிகளால் சித்த சுத்தியுண்டாகும். ஒரு பொதுநலப் பணியை வெற்றிபெற முடித்தவர்க்கு உள்ளத்தில் அளவற்ற மகிழ்ச்சி பொங்கும். அந்த மகிழ்வே இங்கு அமுதெனச் சொல்லப்பெற்றது. தேவரமுதால் அமரவாழ்வு பெறலாம். தொண்டின்பத்தால் ஒருவன் உலகுள்ளளவும் மாந்தர் உள்ளத்தில் அமரனாக வாழுகிறான். தொண்டமுதம் தனக்கும் உலகிற்கும் தேவர்க்கும் பயனாகும். திருவினைசெய்யத் தேவரும் மகிழ்வர். இறைவனே அருள்வடிவங் கொண்டு உலக நன்மைக்காகத் தன் திருவிளையாடல்களை நடத்துகிறான். அவனே அன்பர்க்கன்பன்; அவனே தொண்டர் தொண்டன். அன்புப் பிட்டிற்கு ஆற்றுமண் சுமந்தான் அரன்!

**அருட்பணி யின்ப வமுதமாம் ; பொல்லா**
**விருட்பணி நஞ்சா மிடர்.** 3

'உலகமெல்லாம் திருவருள் விளக்கம்' என்றெண்ணிக் கோயிற்பணிபோலே தூய உள்ளன்புடன் ஆருயிர்ப்பணி செய்தலே அருட்பணி: உலகில் அருளொளி, அருளறிவு, அருள்வாழ்வு, அருளாட்சி ஆகியவற்றைப் பொலிவித்தலே அருட்பணியின் நோக்கம். அத்தகைய அருட்பணி செய்யும் இன்பம், அமுதைப்போல அனைவருக்கும் நன்மையாம். அப்பர்,

சம்பந்தர், மாணிக்கவாசகர், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், பெரியாழ்வார், கபீர், நானக், சைதன்யர், ஏசுநாதர், முகம்மது நபி முதலிய தேவர்களெல்லாம் தம் அருட்பணிகளால் தாமும் இன்புற்றனர்; உலகையும் இன்புறுத்தினர். மாந்தரை இருளாகிய மடமையில் ஆழ்த்தும் தீச் செயல்கள் அவற்றைச் செய்தவனுக்கும் நஞ்சாகி, உலகிற்கும் இடராகும். அறவியல், நடையியல்களில் மறுக்கப்பட்ட தீமைகளை உலகில் பரவச்செய்தல் இருட்பணியாகும்: சாதி சமயச்சண்டை மூட்டல், ஒற்றுமையைக் கெடுத்தல், ஒருவருக்கொருவர் சிண்டு முடித்துக் கலகம் விளைத்தல், பெரியாரைப் பழித்தல், சர்வசாட்சியான பரம்பொருளை மறுத்தல், மனப் பித்தங் கொண்டு நல்லோரை வைதல், பஞ்சமா பாதகங்களுக்குத் தூண்டல், தேசத்துரோகம் செய்தல்—இன்னோரன்ன தீச்செயல்களெல்லாம் இருட் பணிகளாகும்.

நாட்டி னடிமையு நல்குரவு நீக்கிடலே
வீட்டின்ப மென்ன விரும்பு. 4

உனது தாய்நாட்டின் அடிமைத்தனத்தையும் வறுமைப்பிணியையும் நீக்கிடலே உனது மோட்ச சுகம் என்று விரும்பு!

தாயும், தாய்நாடும் சுவர்க்கத்தினும் பெரிதாம். சுவர்க்கச் சுகம் ஒருவனுக்கே முத்தியின்பமாம். நாட்டுவிடுதலை நாட்டுமக்களுக் கெல்லாம் முத்தி யின்பமாகும். உடலைப்போல் உலகம்; உடல் வருந்தினால் உயிர் வருந்தும். மடமை, வறுமை, அடிமைத்தனம் இம்மூன்றும் உலகின் எல்லாத் துயர்களுக்கும் காரணமாகிய கொடிய பிணிகளாம். வீட்டிலும் நாட்டிலும் இப்பிணிகள் புகா

ல், நாட்டுமைந்தர் காக்கவேண்டும்; சுதந்தரமான நாட்டிலேதான் இடரின்றி, மனச்சாட்சிக்கு விரோதமின்றி அறவாழ்வு வாழமுடியும். கட்டு, அடக்குமுறை, கொடுங்கோல், அன்னிய மாயம், நல்ல கல்வியில்லா மடமை, பிறப்புரிமை பேச்சுரிமை தொண்டுரிமைகளை மறுக்கும் சட்டங்கள், காலத்திற்கு உதவாது முன்னேற்றத்திற்குத் தடையாகநிற்கும் மூடப் பழக்கங்கள்—இவையெல்லாம் ஒரு நாட்டின் பிணிகளாகும். இப்பிணிகளுக்கெல்லாம் காரணம், சுதேசம் அன்னியருக்கு அடிமையாயிருப்பதும், அறிவும் தொழிலும் இன்றி நாடு வறுமைப் பிணியால் வருந்துவதுமேயாம். கல்வி, தொழில், ஒழுக்கம், உடல்நலம், கட்டுறவு, சுதந்தர வுணர்ச்சி, வீரம், ஆற்றல்—இவை பெருகப் பணிசெய்தலே நாட்டுப்பணியாகும். அதன் வெற்றியால் வரும் இன்பமே உனது மோட்ச இன்பமென நீ விரும்பு!

**ஒருண்மை தேர்ந்திங் குலகுய்யத் தொண்டாற்றி**
**யிருலகு மெய்தி யிரு.** 5

உனக்குச் சாத்தியமான ஓர் உண்மையை நன்றாகப் பயில்; அதைக்கொண்டு உலகம் நன்மைபெறத் தொண்டாற்று; அத்தகைய உண்மைத் தொண்டினால் இவ்வுலகில் வாழ்ந்த பயனையும், மேலுலகின் இன்பத்தையும் ஒருங்கே பெற்று, நீடூழி வாழ்ந்திருப்பாயாக!

அறநூல் எல்லையற்றது; அதில், எதாயினும் ஓர் உண்மையைத் தன்னதாக்கிக் கொள்ள வேண்டும்; மனித மரபிற்குப் பயனுகும்படி அவ்வுண்மையைப் பரப்ப வேண்டும். மகாத்மா காந்தி அஹிம்ஸா தருமத்தின் உண்மையைத் தனதாக்கிக்கொண்டு, கதியற்றிருந்த

நமது சுதேசத்திற்கு வழிகாட்டினர். இவ்வுலகெல்லாம் அவரை வாழ்த்துகிறது! வாழ்வின் பயனை அவர் பெற்றார்! இனி, அவருக்குச் சுவர்க்கபோகங்கூட அவசியமில்லை: உண்மைக்கு உயிர்வாழும் உத்தமர் உள்ளமே சுவர்க்கம்! அவர், இவ்வுலகிலேயே அவ்வுலகைக் காண்பர்.

---

## 4. நலிவறல்

பசியு நசையுமறு பட்டாலிப் பூவே
வசையற வோங்கிடும் வான். 1

பசிப் பிணியும் பேராசைப் பிணியும் மாந்தர் வாழ்வினின்று அறுந்தொழிந்தால், இந்த உலகம் எத்தகைய தீமையும் இல்லாமல் ஓங்கும்—விண்ணாகும்.

வறுமையின் கொடுமையாலேதான் திருட்டு, லஞ்சம், வஞ்சம், கொள்ளை, பொய்ச்சாட்சி முதலிய கணக்கற்ற தீமைகள் வளருகின்றன. பேராசையின் கொடுமையால்தான் மனிதன் அரக்கனாகி, மண்வெறி கொண்டு கோடிக்கணக்கான உயிர்களைக் குண்டு போட்டுக் கொல்லுகிறான். இந்த இரண்டும் ஒழிந்தால், உலகில் நியாயம் நிலைநிற்கும்; பொய், களவு, விபசாரங்கள் இரா; போர்கள் ஒழியும்; கொலைக் கருவிகளுக்கு வேலையிராது; உலகில் அன்பும் அமைதியும், ஒற்றுமையும் பெருகும்; அறிவும் அருளுணர்வும் வளரும். அந்நிலையிலேயேதான், உலகில் அருளாட்சி நிலவி எங்கும் விண்ணின்பம் பொலியும்.

இவ்வுலகைப் போற்றி யியல்பான நல்லறஞ்செய்;
அவ்வுலகி னின்பமெலா மாம். 2

உன் கண்முன் இருக்கும் இந்த மண்ணுலகின் க்ஷேமத்தைக் கருதி, உன் இயல்பிற்கேற்ற நல்ல அறப்பணியைச் செய்! அதனால், மேலுலகில் புண்ணியாத்மாக்கள் அடையும் இன்பமெல்லாம் இங்கேயே அடைவாய்.

மழைக்கும் மண்ணுக்கும் உறவிருப்பது போலவே, வானுலகிற்கும் மண்ணுலகிற்கும் உறவிருக்கின்றது: ஆன்மாக்கள் பூரணமடையும் நிலைக்களனே இவ்வுலகம். உலகிற்குப் பயனாக அருட்பணியால் நமது வாழ்வு மாசற்றுத் தூய்மையுறும். தூயநிலையே இன்பநிலையாம்.

இலைத்தோர்க் குணவு மியன்றோர்க் கறமும்
பழுத்தா லொழியும் பழுது. 3

ஏழ்மைப்பட்டவருக்கு உணவும், செல்வம் இருப்பவருக்கு அறவுணர்ச்சியும் செழித்தால், உலகிலுள்ள குற்றங்கள் நீங்கும்.

அறிவையும் தொழிலையும் வளர்க்கவேண்டும்; மானமான தொழில் முயற்சியால் எளியவர் வறுமை நீங்கிப் பிழைக்கச் செய்யவேண்டும். அவ்வாறு அறிவுந் தொழிலும் பிழைப்பும் வளரப் பணக்காரர் தமது செல்வத்தைத் தாராளமாக வழங்கவேண்டும். அப்போது, பணம் தொழிலாக மாறி, மனித சமுதாயத்தின் வறுமையை நீக்கும்; பணம் பெட்டியில் உறங்காமல் எல்லாருக்கும் பயனாகும். இதுவே, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடுகளை யொழிக்கும் வழி. இதனால், உலகில் இப்போது எங்கும் கிளர்ந்து நிற்கும் முதலாளி - தொழிலாளிச் சண்டைகள் ஓயும்.

**நாட்டில் விளைபொருளந் நாட்டார் நலம்பெறவே**
**யீட்டு முயற்சி யினிது.** 4

ஒருவன் எத்தகைய தொழில் முயற்சிசெய்து சம்பாதிக்க வேண்டும்? தனது நாட்டில் விளையும் பொருள், நாட்டிலேயே செய்பொருளாகி, சுதேசத்தார் நலம் பெறும்படி சம்பாத்தியம் செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நாட்டின் தேவைக்கும் ஏற்றபடியே இயற்கையன்னை வளமளிக்கிறாள்; வனாந்தரத்தில் பேரீச்சை மரங்களைத் தோற்றுவிக்கிறாள்; மருதநிலத்தில் நெல் முதலிய தானியங்களைத் தோற்றுவிக்கிறாள். நமது நாட்டில் எத்தனையோ இயல்வளங்கள் உள்ளன. அவரவருக்கு இயன்ற இயற்பொருளைக் கொண்டு தொழில் நடத்தி, நாட்டில் உடை, உணவு, செல்வம், அறிவு எல்லாம் ஓங்கச் செய்யவேண்டும்; நாட்டார் துய்த்த மீதியைத் தேவையான நாடுகளுக்கனுப்பலாம். விளைபொருள்களை வேறு நாடுகளுக்கு அனுப்பிவிட்டுப் பிற நாட்டினின்று செய்பொருள்களை வாங்குதல், வீட்டரிசியை விற்று விலைச்சோற்றை வாங்குவதற்கு ஒப்பாகும். அயல் நாடுகளையண்டி வாழும் தேசம் அடிமையாகும்; அமைதியுறாது; வறுமையால் வருந்தும். உதாரணமாக: நாட்டுப் பருத்தியை இராட்டினத்தில் நூற்றுக் கைத்தறியில் நெய்தால், நாடெல்லாம் சுதேச ஆடையணியலாம். நாட்டின் விளைவுகளைக்கொண்டு தொழில் நடத்தினால் கோடானுகோடி பேருக்குப் பிழைப்புக் கிடைக்கும்; வறுமை யொழியும். நாட்டின் விளைவைக்கொண்டு நாடுண்ணத் தொழில் செய்தலே மிகச் சிறந்த தொழின் முயற்சியாகும். உதாரண

மாக: நமது நாட்டில் விளையும் மூங்கிலைக்கொண்டு ஒருவன் காகிதத் தொழில் செய்தால், பலபேர் பிழைக்கலாம்; நாட்டுச் செல்வம் நாட்டிலேயே சுற்றி நலம் விளைவிக்கும். இப்படியே மற்ற விளைபொருட்களையும் பயன்படுத்தக் கருதுக!

**இன்மை மடமை யிரண்டும்பா பாசுரன்கை;**
**நன்மைவிழுங் காது நலி.** 5

வறுமை (இன்மை), அறியாமை (மடமை) இரண்டும் பாபம் என்னும் அசுரனின் கைகளாகும். அவை மக்கள் வாழ்வுநலத்தைப் பற்றி விழுங்காது நலிப்பாயாக!

**பாபம்** என்னும் கபந்தன், **வறுமை மடமை**யென்னும் கைகளால் உயிர்நலத்தை வாரியுண்கிறான். அதனால், உலகம் துன்பக்காடா யிருக்கிறது. நல்ல தொழிலறிவாலும், பயனுள்ள கல்வியறிவாலும் இந்தப் பாபக் கரங்கள் இரண்டையும் செகுக்க வேண்டும். உலகில் நடக்கும் கிளர்ச்சி, புரட்சி, திருட்டு, கொலை, வஞ்சம், விபசாரம், மோசம் அனைத்திற்கும் அடிப்படை வறுமையும், மடமையுமாகும். ஒவ்வொரு கையும் நாலுமணி நேரம் வயிற்றிற்காக ஒரு நல்ல தொழிலைச் செய்க! ஒவ்வோர் ஆணும் பெண்ணும் நான்குமணி நேரம் நாடோறும் அறிவு வளர்ச்சிக்காகச் செலவிடுக! நூல்கள், சொற்பொழிவுகள், நாடகங்கள், படக்காட்சிகள்—எல்லாம் அறிவை நாட்டில் பரப்பவேண்டும். தொழிற் சாலைகளும், தொழிற் பள்ளிக்கூடங்களும், தொழிற் காட்சிகளும் ஊர்தோறும் மல்கி, வறுமையுடன் போர் புரிந்து வெல்லவேண்டும்; பிச்சைத் தொழில்கள்

ஒழியவேண்டும். கல்வியும் தொழிலும் நல்குர வொழிக்கும்.

## 5. கைத்தொழில்

**கைத்தொழி லொன்றற்றார் கையிருந்துங் கையற்றார் ;**
**மெய்த்தொழிலின் வேர்வையெலாம் பொன். 1**

காலட்சேபத்திற்கு ஏதாயினும் ஒரு நல்ல கைத் தொழில் செய்யவேண்டும். தொழில் செய்யாத சோம்பேறிகள், கையிருந்தும் முடவர் போல்வர். உண்மையான தொழில் செய்யும்போது சொட்டும் வேர்வையெல்லாம் பொன்னென மதிக்கத் தக்கது.

உடையுணவுத் தேவைகளை உழைத்தே பெற வேண்டும். பிறர் கையை எதிர்பார்த்துப் பிழைப் பவன் பேதை. உடலுறுப்புக்களைப் பயன்படுத்திக் கைத்தொழில் செய்வதால் பலமும், பொறுமையும், சுதந்தரமும், புலன்களுக்கு நல்ல பயிற்சியும், மனத் திற்கு அடக்கமும் உண்டாகும். பஞ்சும் இராட்டும் தறியும் இருக்கையில் அயலாடையை வாங்கி யுடுத்து வது, அம்மணமா யிருப்பதற்குச் சமானமாகும். பொருளின்றி வாழ்வில்லை ; தொழிலின்றிப் பொரு ளில்லை.

**குடிசைத் தொழிலாற் குறையற்று நாட்டில்**
**அடிசிலுடை செல்வமெலா மாம். 2**

குடில்கள்தோறும் கைத்தொழில்கள் வளருவ தால் நாட்டின் வறுமை நீங்கும் ; உணவும், ஆடை யும், செல்வமும் பெருகும்.

நாட்டுச் செல்வம் நாட்டினருக்கே பயனாகும் ; போட்டியில்லாமல் அனைவருக்கும் அளவான ஜீவ

னம் கிடைக்கும் ; அடிமைத்தனமும், முதலாளித்துவமும் ஒழியும் ; மூலப்பொருள்கள் செய்பொருள்களாகி நாட்டில் ஏராளமான மக்களுக்குப் பிழைப்பை யுண்டாக்கும் ; உழைத்தவர் உழைப்பின் பயனை யடைவர் ; விளைவும் பயனும், தொழிலும் துய்ப்பும் அளவுடன் நடக்கும். எத்தனையோ கோடி தொழில்கள் உள்ளன : பல்லுக்குச்சி சேர்த்தல், பற்பொடியாக்கல், இலை தைத்தல், துடைப்பம் கட்டல், கயிறு திரித்தல், கொட்டாங்கச்சியாலும் கடற்சிப்பிகளாலும் வளையல் மோதிரம் பொத்தான் முதலியன செய்தல், பானை வனைதல், விறகு வெட்டுதல், உழுது பயிர்செய்தல், பழத்தோட்டம் போடுதல், காய்கறித் தோட்டம் போடுதல், அரிசி தீட்டல், மாவரைத்தல், காய்கறி தானியம் பருப்பு வகைகளை விற்றல், பசு வளர்த்தல், எருச்சேர்த்தல், காளை வளர்த்தல், வண்டியோட்டல், குதிரை வளர்த்தல், சங்கீதக் கருவிகள் செய்தல், நூற்றல், நெய்தல், சாயம் போடுதல், கம்பளி நெய்தல், தோல் பதனிடல், செருப்புத் தைத்தல், மரவேலை இரும்பு வேலை கண்ணாடி வேலை மூங்கில் வேலை முதலியன செய்தல், செங்கற் சூளை, சுண்ணாம்புக் காளவாய் போடுதல், ஓடு செய்தல், வீடுகட்டல், பாய்பின்னல், கூடைமுடைதல், கீற்று முடைதல், தட்டிபின்னல், கரும்பாலை யோட்டல், தென்னைவெல்லஞ் செய்தல், பனைவெல்லஞ் செய்தல், பூந்தோட்டம் வைத்தல், பூமாலை விற்றல், துணி வெளுத்தல், தலைவழித்தல், மண்வெட்டல், பச்சிலைகள் விற்றல், வைத்தியம், கல்வி தொழில் கற்பித்தல், நூலெழுதல், பத்திரிகை வெளியிடுதல் முதலிய எத்தனையோ வகையான ஜீவனோபாயங்கள் உள. இத்

தொழில்களெல்லாம் சமுதாயத்திற்குப் பயனுகின்றன. இவற்றுள் எத்தொழில் செய்தாலும் இழிவில்லை. ஒரு கிராமத்திற்கு வேண்டிய தொழில்களைக் கணக்கா யறிந்து, தக்க தொழிலாளரைக் கொண்டு அவற்றைச் செய்யச் சொல்லவேண்டும். தொழிலாளருக்கு வீடும், சாப்பாட்டிற்குப் போதிய ஊதியமும் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு விற்பனைக் கவலை கூடாது. ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச் சங்கம் இருக்கவேண்டும். அச்சங்கம், தொழிலாளர் செய்பொருளைப் பெற்றுக்கொண்டு தேவையான பேருக்கு விற்கவேண்டும். கிராமத்திற்குக்கண்டதுபோக மிச்சத்தைத்தான் நகரங்களுக்குக் கொண்டுபோய் விற்கவேண்டும்; அல்லது, கிராமங்களுக்குத் தேவையான பொருளுக்கு மாற்றிக் கொள்ளவேண்டும்.

**ஆற்றலைப் போக்கி யடிமைப் படுத்திடுமே**
**போற்றுதல் போலப் பொறி.** 3

**யந்திரம்** காப்பதுபோலத் தோன்றி, மனிதசக்தியைச் சிதைத்து அடிமையாக்கும்.

யந்திரம் பலர் செய்யுந் தொழிலைத் தான் மட்டுமே செய்துமுடிக்கும். அதனுல், பலருக்குத் தொழிலில்லாது வறுமை பெருகும். யந்திரம் சுதந்தரத்தைக் கெடுக்கும்; முதலாளிக்குத் தொழிலாளியை அடிமையாக்கும். யந்திரம் தேவைக்கு மேலாகப் பொருள்களைச் செய்து குவிக்கும். அவற்றை விற்கப் பிறநாடுகளைச் சந்தை யாக்கவேண்டும். அதனுல் அந்நாடுகளில் பொருளாதாரம் குறையும்; போட்டியும் சண்டையும் யந்திரத்தால் உண்டாகும்; மனிதசக்தி வேலையில்லாது வீணுகும்.

'பொறியா லொருவனே பொன்குவிப்பான்; ஏழை
வறுமை யுறுவான்' மதி. 4

'யந்திரங்களால் ஒரு முதலாளியே பொன் குவிப்பான்; ஏழை வறுமையால் வாடுவான்' என்பதை அறிக! யந்திரத்தால் செல்வன் பெருஞ் செல்வனுவான்; ஏழை பரம ஏழையாகிச் செல்வனுக்கு அடிமையாவான். ஒரு நெல்லரைக்கும் யந்திரம் வந்தால் நெல்குத்திப் பிழைக்கும் நூற்றுக் கணக்கான ஏழைகளுக்குப் பிழைப்புப் போய்விடும். யந்திரத்தில் தீட்டிய அரிசியில் சத்துப் போய்விடுகிறது; அதனுல் மலச்சிக்கல் பெருகி, வேறு பல சிக்கல்கள் உண்டாகின்றன. கையால் தீட்டிய அரிசியில் சத்துக் குறைவதில்லை; சுவையும் அதிகம். ஒரு பஞ்சாலை வந்தால், பஞ்சுகொட்டி நூற்றுப்பிழைக்கும் ஆயிரக்கணக்கான ஏழைகளுக்குப் பிழைப்புப் போய்விடும். ஒரு யந்திரத்தறி வந்தால், கைத்தறி போட்டுப் பிழைத்த நூற்றுக்கணக்கான நெசவுக் காரருக்குத் தொழில் போய்விடும்; பலர் பிழைப்பைக் கெடுத்துத் தொழிலாளிகளை முதலாளிகளுக்கு அடிமையாக்கி, நாட்டின் வளமையைக் கெடுத்து, வறுமையைப் பெருக்கும். இத்தகைய யந்திரங்களை விலக்கவேண்டும். காகிதப்பொறி, அச்சுப்பொறி, நீராவியந்திரம், மின்சார யந்திரம் போல மனித நாகரிகத்திற்கும், காலத்தை மிச்சம் பண்ணுவதற்கும் ஏற்ற யந்திரங்கள் வேண்டற்பாலனவே. ஆனுல், அவையும் நமது நாட்டிலேயே செய்யப்படவேண்டும். புகை வண்டிக்கும், கப்பலுக்கும், அச்சிற்கும், மின்சார வசதிகளுக்கும் வேண்டிய யந்திரங்களும், சாமான்களும், நம் நாட்டிலேயே செய்யப்பட்டால்

இலட்சக்கணக்கான பேருக்குப் பிழைப்பும் உழைப்பும் கிடைக்கும்.

**அயற்பொறி தேயத்தி னாக்கத்தை யெல்லாந்**
**துயிலுறுத்திக் கொல்லுந் துணிந்து.** 5

அயல்நாட்டிலிருந்து இறக்குமதியாகும் யந்திரம் நம் நாட்டினர் பிழைப்பைக் கெடுத்து, அவர்களைச் சோம்பேறிகளாக்கி (துயில்+உறுத்தி), நாட்டின் செல்வத்தை யெல்லாம் துணிவுடன் முற்றுமே இல்லாமற் செய்யும்.

அயல்நாட்டு யந்திரம் நம் நாட்டுச் செல்வத்தை விழுங்குவதன்றி, அயலாரை எதிர்பார்த்து நாம் பிழைக்கும்படியாகவும் செய்துவிடும். அதனால், நாட்டுமக்களுக்குத் தன்னுறுதி, தன்முயற்சி, தாளாண்மை, உடலுறுதி எல்லாம் கெடும். யந்திரச் சாலைகள் ஆயிரக்கணக்கான ஏழைகளின் மூச்சைப் பிடித்துச் சித்திரவதை செய்கின்றன. இருள்மூலையில் ஏழைகள் வாடித் தவிக்கின்றனர். 'அன்புநிலயம்' என்ற நாவலில் ஏழைத் தொழிலாளர் யந்திரச்சாலைகளில் வருந்தும் துயரைக் காண்க! போதிய வேலையும், போதிய கூலியும், போதிய பிழைப்பும் போட்டியில்லாது, கைத்தொழிலில் மட்டுந்தான் கிடைக்கும். உண்ணவுடுக்க வேண்டியவற்றை யெல்லாம் மனித சக்தியைக்கொண்டே ஒரு சமுதாயம் தயாரிக்க வேண்டும்; மிகவும் அவசியமான சௌகரியங்களுக்கே யந்திரங்களைப் பயனாக்கவேண்டும்; அந்த யந்திரங்களும் நம் நாட்டிலேயே செய்யப்பெற்று, நாட்டு மக்களுக்குத் தொழிலைத் தந்து, நாட்டுச் செல்வத்தை நாட்டிற்கே பயனாகும்படி பாதுகாக்க வேண்டும். ஒரு நாட்டின் தொழில் முன்னேற்றத்

திற்கும், பொதுநலத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும், மனித சக்திக்கும் போதிய வேலை கொடுப்பது அவசியம்.

## 6. வேளாண்மை

ஏரோசை பாருக் கிதயத் துடிப்புநூற்
போரோசை ஓங்காரம் போல். 1

கலப்பை பிடித்து உழும் ஓசை உலகிற்கு நெஞ்சத் துடிப்புப் போலாகும்; இராட்டினஞ் சுழற்றி நூல் நூற்பவர் ஓசை ஓங்காரம் போலாகும்.

ஓங்காரமும், உள்ளத் துடிப்பும் உயிர் வாழ்விற்கு இன்றியமையாதன. யோகிகள் உள்ளே, எப்போதும் ஓங்காரம் கேட்டுக்கொண்டே யிருக்கும்; மற்றோர் உள்ளே, அது மறைந்தொலிக்கும். உள் வாழ்விற்கு இதயத்துடிப்பும், ஓங்காரமும் அவசியமாகின்றமை போலவே, உலக வாழ்விற்கு உழவும் நூற்று நெய்தலும் அவசியமாகும். கலப்பை உலகை ஊட்டுகிறது; இராட்டினம் உலகிற்கு ஆடை தந்து மானத்தைக் காக்கிறது. ஏரின்றேற் சோறில்லை. கலப்பையும் இராட்டினமும் கண்களெனத் தகும்.

சொற்போரும், விற்போரும், பொற்போருஞ் சோருமே
நெற்போரோன் றில்லா நெறி. 2

உணவின்றி யாருண்டு? மனிதவுடல் சோற்றுலெடுத்த சுவர். விவசாயி உழுது, பயிர்பண்ணி நெல்லைப் போராகக் குவிக்காவிட்டால், உணவை விளைவிக்காவிட்டால், உலகில் அரசியல் வாதிகளும் மத வாதிகளும் நடத்தும் சொற்போரும், மன்னர்களும் சர்வாதிகாரிகளும் வில் முதலிய ஆயுதங்களைக்

கொண்டு படை திரட்டிப் புரியும் இரத்தப் போரும், போட்டி போடும் வியாபாரச் சண்டையும் சோர்ந்து போகும். அறிஞர், வீரர், தொழிலாளர், வணிகர், தொண்டர் — அனைவருக்கும் ஊட்டமளித்து, உயிர் நிலையைக் காப்பது உணவுதான். ஊட்டமின்றேல் ஆட்டமில்லை. உணவுப் பொருள்களை விளைவிக்கும் விவசாயிதான், உலகவாழ்வை இயலுவிக்கிறான்.

**ஒருபயி ராக்கி யுணவீவான் பாரிற்**
**பெருமக னென்றுநீ பேசு. 3**

பயனுள்ள ஒரு பயிரை யாக்கி, சமுதாயத்திற்கு உணவை யளிக்கும் விவசாயி உலகில் பெருமைக் குரியவனாவான்; அவனைப் புகழ்ந்து பேசுக!

பயிர்த்தொழிலாளி உயிருக்கு உணவளிக்கிறான்; பயிர்த்தொழில் உயிர்த்தொழில். கல்வி பயிற்றும் ஆசிரியன், உணவை யளிக்கும் விவசாயி—இருவரும் ஒரு சமுதாயத்தின் பெருமதிப்பிற் குரியவர் ஆவர். போனக மின்றேல் ஞானியுந் தளர்வான்.

**பயிர்செய்வான் வாழ்க்கையே பாங்கு; மற் றெல்லாம்**
**அயல்சார்ந்த சேவகமே யாம். 4**

'பாங்கு' என்றால் நன்மை, தகுதி, சௌக்கியம் எனப்பொருளாம். நீர்நிலவளங்களைப் பெற்ற நமது நாட்டிற்கு விவசாயத் தொழில் மிகவுந் தகுதியாகும்; நலமாகும். தனக்குள்ள நிலத்தில், தனக்கியன்ற நற் பயிரை விளைவித்து, அதன் பலனைக்கொண்டு மான மாகப் பிழைக்கும் தொழிலாளியின் வாழ்க்கையே பாங்கானது; மற்றவையெல்லாம் பிறரைச் சார்ந்து பிழைப்பதே யாகும். பயிர்த்தொழில், கட்டில்லாத

சுதந்தரத்தொழில். மற்ற உத்தியோகங்களெல்லாம் ஒருவருக்குக் கீழே வணங்கும் சேவகமாம்.

**உழைத்துவிளைந் துண்ண வுவந்தா லுலகம்**
**செழித்து வளருந் தினம்.** 5

மாந்தர் தத்தம் காலட்சேபத்திற்கு வேண்டியதை நிலத்திற் பாடுபட்டு விளைத்துண்ண மனங்கொண்டால், உலகம் தினந்தோறும் பொருளும், உணவும், சீரும், செல்வமும், மகிழ்வும் செழித்தோங்கும். வயிற்றுக்கவலைதான் உயிர்களுக்குப் பெருங்கவலை ; வயிற்றிற்காகத்தான் மனிதன் பாதி நாட்களைச் செலவிடுகிறான். தீயவழியிற் சென்று, பிறர் கையை யெதிர்பார்த்து,அடிமைப்பட்டுப் பிழைப்பதினும், நிலத்தைப் பண்படுத்தி, நெல், வாழை, கரும்பு, தானியங்கள், பயறுகள், பருத்தி, கனிமரங்கள் முதலியவற்றுள் யாதாயினும் ஒன்றைக் கருத்தூன்றி விளைவித்தால், தாமும் பிழைத்துச் சுதந்தரமாக வாழலாம் ; சமுதாயத்திற்கும் நல்ல தொண்டுசெய்த பயனுமுண்டாம்.

## 7. உழைப்பு

**செய்யுங் கிணறுஞ் சிறுகுடிலும் பெற்றமுங்**
**கையுழைப்பு மீயுங் களிப்பு.** 1

மனிதன் பிறருக்கு அடிமைப்படாமல், மனமகிழ்வுடன் உண்டுடுத்து வாழலாம் : எப்படி ? உழுதுண்ணவும், ஆடைக்குப் பருத்தி விளைவிக்கவும் ஒவ்வொருவனுக்கும் ஒரு செய், அதாவது 76, 176 சதுர அடி, அல்லது ஒன்றேமுக்கால் ஏக்கர் கொண்ட நிலம் வேண்டும். குடும்பம் பெருத்தால் நிலம் அதிகமாக

வேண்டும். அதிற் செய்யும் பயிருக்கு நீர்ப்பாய்ச்ச ஓர் ஏற்றக்கிணறு தோண்ட வேண்டும். அந்த நிலத்திலேயே மனைகட்டி வாழவேண்டும்; மனை என்பது $40 \times 60 = 2400$ சதுர அடி. நிலத்தை உழுவதற்கு நல்ல காளைகளையும், பாலுக்கு ஒரு பசுவையும் வளர்க்கலாம் (பெற்றம்=மாடு, பசு). மனையில் இராட்டினம் நூற்கலாம். அத்துடன் ஒரு தறியும் இருந்தால் நலம். நிலத்தில் கேப்பை, கம்பு, சோளம், வாழை, பயறு, கடலை, பருத்தி முதலியவற்றை விளைவிக்கலாம்; மா, பலா, மாதுளை, ஆப்பிள், ஆரஞ்சு, பப்பாளி, தென்னை முதலிய மரங்களை வளர்க்கலாம். அழகான பூஞ்செடிகளை வளர்க்கலாம்; புடல், பாகல், பூசனி, கத்தரி, தக்காளி முதலிய காய்கறிகளை விளைவிக்கலாம். தினம் ஒரு மணி நேரம் குடும்பத்தார் அனைவரும் நூல் நூற்றால் ஆடைக்குப் பஞ்சமில்லை; போதுமான நூற்கண்டுகள் சேர்ந்ததும், பாவு போட்டு நெய்யலாம்; ஆண்டிற்கு ஒரு மாதம் நெசவுத்தொழில் நடத்தினால், வீட்டிற்கு வேண்டிய ஆடைகள் கிடைக்கும். தென்னோலைகளைக் கொண்டும், பனையோலைகளைக் கொண்டும் வீட்டுக் கூரையமைக்கலாம்; தோட்டத்திலேயே ஒரு மூலையில் செங்கலறுத்துக் காளவாய் போடலாம். இவ்வாறு, தினம் சுமார் ஐந்து மணி நேரம் ஐந்துபேர் சேர்ந்து பாடுபட்டால், சுயேச்சையாக வாழலாம். மீதிநேரத்தை அறிவுப் பயிற்சி, பொதுநலத்தொண்டு, யோக சாதனம் இவற்றிற் செலவிடலாம்.

**நூற்றுத் தறிநெய்து, நூல்கற்று, மண்ணுழுது**
**காற்றுட வாழக் களிப்பு.** 2

மேற்சொன்னவாறு, போதுமான நிலம் அமைத்துக்கொண்டு, அதில் கூட்டுறவுடன் நாலைந்து குடும்பங்கள் குடியேற வேண்டும். அக்குடும்பங்களுக்குப் போதுமான ஆடையைத் தாங்களே தினம் ஒரு மணி நேரம் நூற்று நூல் சேர்த்ததும் பாவுபோட்டு நெய்து கொள்ள வேண்டும்; மண்ணைப் பண்படுத்திக் குடும்பத்திற்கு வேண்டிய உணவுப் பொருள்களை விளைவித்துக்கொள்ளவேண்டும்; மீதி நேரத்தைக் கலைவளர்ச்சியிலும், யோகசாதனத்திலும் பயனுக்க வேண்டும்; அனைவரும் கூடி, தியானம் பஜனை வழிபாடுகள் நடத்தலாம். இவ்வாறு, தன்னுறுதியும் உழைப்புங் கொண்டு சுதந்தரமாகக் காற்றுட வாழ்ந்தால், இன்பமாகும். இதுவே, இயற்கையோடொன்றிய வாழ்வு; இதில் உடலுறுதி, மனவுறுதி, கூட்டுறவு, ஒற்றுமை, ஆத்மசுத்தி, கடவுளன்பு, அழகுணர்ச்சி யெல்லாம் உண்டாகும்.

மண்ணுழு துண்ணர், வறுமைகொடி தென்பார்க்குக்
கண்ணிருந்துங் கையிருந்து மென்? 3

மண்ணிலம் உள்ளது; பாடுபட்டால் ஏராளமாகத் தருகிறது. மண்ணை உழுதுண்ணத் தெரியாது, ‘ஐயோ! வறுமை’ என்று அழும் சோம்பேறிகளுக்குக் கண்ணிருந்தும் கையிருந்தும் என்ன பயன்? பூமாதேவி தரும் வளங்களையும், பிறமாந்தர் பாடுபட்டுண்பதையும் அவர் காண்பதில்லை; கையைக் கொண்டு உழைப்பதில்லை. அத்தகையோர் வறுமையால் வருந்துவது நியாயமேயாகும்.

கட்கஞ்சாத் தீயிலைகள், காப்பி யறநீக்கி
நற்பயிர்செய் துண்டுடுக்க நாடு. 4

கள், கஞ்சா, தீமைதரும் தேயிலை, புகையிலை போன்ற இலைகள், காப்பி இவற்றை முற்றிலும் நீக்கு; விளைவிக்காதே! உண்ணவும், உடுக்கவும் போதிய நல்ல பயிர்களையே விளைவிக்கக் கருது! [நாடு-விரும்பு, கருது. 'தீயிலை' என்றால் தீமைதரும் இலைகள்; தேயிலை, புகையிலை போன்றவை].

புகையிலை, கஞ்சா, இவை யிரண்டும் எத்தனை பேரைக் கெடுக்கின்றன! புகையிலையை வெற்றிலை யுடன் போட்டு இங்குமங்கும் 'புளிச்சுப் புளிச்செ'ன்று உமிழ்ந்து காற்றைக் கெடுத்து வீட்டை ஆபாசமாக்குகின்றனர். புகையிலை போடுவதால் எச்சில் வீணாகிப் பசி மந்தமாகிறது; சீரணசக்தி குறைகிறது. புகையிலைச் சாறு உள்ளே யிறங்கினால் மயக்கமுண்டாகும். புகையிலையைச் சுருட்டாக்கிப் புகைவிட்டுக் காற்றைக் கெடுக்கின்றனர். கஞ்சாவைக் குப்பியிலடைத்துத் தீப் பொருத்திப் பங்கி யடித்து எத்தனையோ பேர் மயங்கிக் கிடக்கின்றனர். சில துறவிகளுக்குக்கூடக் கஞ்சாவெறி பிடிக்கிறது. புகையிலை, கஞ்சா போன்ற லாகிரி வஸ்துக்களை விவசாயி விளைவிக்கா விட்டால், அவன் மனித சமுதாயத்திற்குப் பெரிய சீர்திருத்தப் பணி செய்தவனாவான். மனிதரைப் பிடித்த மற்றொரு சனியன் கட்குடி. கள்ளிறக்கலும், விற்றலும் கொடிய பாபம். கள்ளின் முகத்திற்கூட விழிக்கக் கூடாது. கள், சாராயம், விஸ்கி, ஷாம்பைன் முதலிய விஷப் பானங்களைத் தொழிலாளர் ஆக்கக் கூடாது. திராட்சை, தென்னை, பனை இவை தரும் சாற்றை வேறு விதமாகப் பயனாக்கலாம்; திராட்சையை அப்படியே உண்ணலாம். தென்னை, பனை தரும் சாற்றை

வெல்லம் கருப்புக்கட்டி யாக்கலாம் : அவற்றைப் புளிக்க வைத்துக் கள்ளாகச் செய்யும் மகா பாதகம் வேண்டா !

அந்தந்த நாட்டிற் கமைந்தபயிர் செய்துண்ணல்
அந்தந்த நாட்டார்க் கழகு. 5

அவரவர் நாட்டிற்குப் பொருத்தமான பயிர் களைச் செய்துண்டு பிழைப்பதே, அந்தந்த நாட்டின ருக்குச் சுகமாகும். நமது நாட்டில் கனியும், தானி யங்களும் விளையும் போது அன்னிய நாட்டினின்று உணவுச் சாமான்களை வரவழைத்தல் நாட்டின் பொருளாதாரத்திற்கு நட்டமாகும். அன்னிய இறக்குமதிகளைக் கூடுமட்டும் குறைத்துவருவது நாட்டுத் தொழில் வளர்ச்சிக்கு நலமாகும்.

---

## 8. பிழைப்பு

பாடுபட் டோருக்குப் பாட்டின் பயனெய்தில்
நாடுவிட் டோடும் நலிவு. 1

பாட்டாளிக்குப் பாடுபட்ட பயன் கிடைக்க வேண்டும். அவ்வாறாயின், நாட்டைவிட்டு வறுமைப் பிணி ஓடிப்போம்.

உழைத்தவர் உண்ணவேண்டும். பாட்டாளிக் குப் பட்டினியா பலன்? முதலாளி பிறர் உழைப்பினால் கொழுக்கிறான் ; விளைவை எனதென்று உரிமை பாராட்டி எடுத்துக்கொண்டு, பிச்சை தருவது போலே ஏதோ கொஞ்சம் தொழிலாளிக்குத் தரு கிறான். அது போதாமல், தொழிலாளி குழந்தை குட்டிகளுடன் வறுமையால் வருந்தும் வருத்தம்

சொல்லிமுடியாது. முதலாளி கொடுக்கும் கூலி போதாமல் கடன்பட்டுத் தவிக்கும் தொழிலாளர் மிகப் பலர். நிலம் உள்ளது; யாரும் வரும்போது அதைக் கொண்டுவந்ததில்லை; அஃது எல்லாருக்கும் பொது; மழைபெய்து அது விளைகிறது. தொழிலாளி விளைவேற்றுகிறன்; விளைவிற்குரியவன் விளைவித்தவனே; இந்த நீதி பிறந்தால் உலகில் உழைப்பிற்கு மதிப்பேற்படும்; எல்லாரும் பாடுபட்டுப் பிழைப்பர்; வறுமை தீரும்; வளமை பெருகும்; முதலாளி தொழிலாளி, ஏழை பணக்காரன் என்ற வேறுபாடுகள் ஒழியும்.

விளைப்பானே நேராக விற்றுண்ணு வானேல்
உழைப்பாளிக் கோங்கும் பிழைப்பு. 2

பாட்டாளியே நேராகத் தன் விளைவை விற்றுப் பிழைக்கவேண்டும்.

'விளைவிப்பவன்', 'வாங்குவோன்' என்ற இரண்டு வகையினரே இருத்தல்வேண்டும். இவருக்கிடையே, 'நான் எசமான்; அவன் பண்ணைக்காரன்; எனக்கே எல்லாம் உரியது; மற்றவர் என் சேவகர்; நான் தரும் கூலியைக் கொண்டே அவர்கள் பிழைக்க வேண்டும்' என்று ஒரு முதலாளி அகந்தையுடன் கிளம்பாவிட்டால், உழைப்பாளிக்குப் பிழைப்பு ஓங்கிச் செழிக்கும். உழையாமல் உரிமை பாராட்டும் முதலாளி கையில் கூலியேந்திப் பிழைப்பதே, தொழிலாளர் ஏழையா யிருக்கக் காரணமாம். உழையாதுண்ணும் செல்வன் தன் இடம்பச் செலவுகளையெல்லாம் பண்டங்களின்மேல் ஏற்றி விற்கிறன். அதனல் பொருள்விலை கிராக்கியாகிறது. ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச் சாலையிருக்க வேண்டும்;

ஒரு தொழிலாளி நெய்த ஆடையை நேராக அங்கே கொண்டுபோய்க் கொடுத்துப் பணம் அல்லது பண்டம் வாங்கிக்கொள்ளச் சுதந்தரம் இருக்க வேண்டும். ஒரு விவசாயி பருத்தி விளைத்தால் நேராகக் கூட்டுறவுச் சாலையில் விற்றுத் தனக்கு வேண்டும் பொருளை மாற்றாக அடைய வேண்டும். இவ்வாறே, தொழிலும் தொழிலாளியும் பெருமை பெறலாகும்.

**தன்னியல்புக் கேற்றபடி தாளாண்மை, வேளாண்மை**
**பண்ணுக ; தீமை படும். 3**

'தாளாண்மை' யென்றால் அறிவும் உடலும் கொண்டு உழைத்தல். 'வேளாண்மை' என்றால் பயிர் விளைவித்தல், விருந்தோம்பல் என்றும். அவரவர் இயல்பிற் கேற்றபடி இரண்டையும் செய்தால் வறுமை, மடமை, அடிமைத்தனம், செல்வச்செருக்கு, முதலாளிக்கொடுங்கோல், தொழிலாளர் பட்டினி, சோம்பல் ஆகிய தீமைகளெல்லாம் ஒழியும்.

**கூலி குறைத்தாற் குலங்குறையும் ; பாட்டாளர்**
**ஞாலவாழ் விற்கு நரம்பு. 4**

சமுதாயத்திற்குப் பலவகைத்தொண்டு செய்யும் தொழிலாளர் உலகவாழ்விற்கு நரம்புபோல்வர். அவ ரின்றிச் சமுதாயம் வாழமுடியாது. அவர்களுக்குக் கூலியைக் குறைத்தால் மனிதர் குலமே குறைந்து போம். தொழிலாளர் வறுமைவாய்ப்பட்டால் தொழில்கள் அருகும் ; வளங் குறையும் ; சமுதாயம் வருந்தும். நெற்றி வேர்வை சொட்டச் சொட்டப் பாடுபடும் தொழிலாளிக்கு ஏதோ பிச்சை போடுவது போலக் கூலி தருகிறான் முதலாளி. அதற்கும் எத்தனையோ அழுலும், அகங்காரமும், சண்டித்

தனமும், கருமித்தனமும் சிலர் செய்வர். சித்திரைக் கோடையில் விறகு சுமந்து வருவான் ஏழை; கட்டு ஆறணா என்பான். இரண்டணாவிற்குப் பேரும்படி மல்லாடுவர் மாந்தர். ஏழை பிழைப்ப தெப்படி ?

**புவித்தாய் தரும்பயனைப் போதிய மட்டும்**
**அவரவர் துய்த்த லறம்.** 5

உலகன்னை அளிக்கும் விளைவுகளை, நியாயமான தேவையளவு, அவரவர் பாடுபட்டு அனுபவித்தல் சமதருமமாகும்.

'அரசன், ஆண்டி, ஏழை, செல்வன்' என்று வேறுபாடில்லாமல் வான் வழங்குகிறது. பாடு பட்டால் நிலம் எல்லாருக்கும் பலனைத் தருகிறது; இயற்கை வேண்டிய வளமையைத் தருகிறது. உலகன்னை கருணையுடன் அளிப்பதை 'எனதே' யென்று ஒருவன் சொந்தம் பாராட்டிப் பூட்டி வையாமல், எல்லாரும் பொதுவாகத் துய்க்க வேண்டும். உண்ண, உடுக்க, இருக்க இயல்பாக எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிடைக்கும்படி உழைப்பையும், பலனையும் முறை வகுக்கவேண்டும். ருஷ்யாவில் ஒவ்வோ ரூரிலும் தொழிலை முறைவகுத்துத் தக்க தொழிலாளருக்குப் பங்கிட்டிருக்கின்றனர்; எல்லாரும் இவ்வளவு மணிநேரம் உழைப்பதென்ற கட்டுப்பாடிருக்கிறது. உழைப்பின் பலனைக் குடியரசு பெற்றுக்கொள்ளுகிறது; அது, தொழிலாளருக்குச் சமமாக உணவு முதலிய சௌகரியங்களை அளிக்கிறது.

## 9. பணம்

**ஆயிரம்பேர் வாழு மிடத்தை யடைத்தொருவன்**
**தாயமுறை பேசுவதென்? சாற்று!** 1

*ஆயிரம் ஏழைகள் உழுதுண்டு வீடுகட்டி வாழக் கூடிய நிலத்தை, ஒரு செல்வன் வேலிவைத்து வளைத்துக்கொண்டு, அது தனக்கே உரிமை யென்று பாத்தியம் கொண்டாடுவது என்ன நியாயம் சொல்? (தாயமுறை=பரம்பரைச் சொத்துரிமை).*

*உலகைச் சமமாகப் பங்கிட்டால் ஆளுக்கு நான்கு ஏக்கர் கிடைக்கும். ஒருவன் பல ஏக்கர்களை வளைத்துக் கொள்வதால், பலர் பஞ்சையாகித் தெருவில் கையேந்தித் திரியவேண்டியிருக்கிறது. அவரவர் பிழைப்பதற்கேற்றபடி, நிலத்தையும், மனையையும், தொழிலையும், பலனையும் அளந்து கொடுக்கவேண்டும் சமுதாயம்.*

**பணஞ்செய் படர்நீங்கிப் பண்டமாற் றேங்கின்**
**மணஞ்செய்யு நாட்டின் வளம்.** 2

*'படர்' என்றால், வருத்தம், தொல்லை, நோய். இந்த அதிகாரத்தில் 'பணம்' என்பது தேவைக்கு மேல் சேர்த்துச் சேர்த்துச் சும்மா பூட்டிவைக்கும் 'சோம்பற் செல்வத்தையே' குறிப்பது. அச் செல்வம் பல தீமைகளை விளைக்கும். பணத்திற்குப் பதிலாகப் பண்டமாற் றோங்கினால், நாட்டின் வளமை பெருகி மங்கலமாகும். பணத்தைப் பூட்டாமல் தொழிலிற் போட்டுப் பண்டங்களாக மாற்றவேண்டும். உழைப்பிற்கும், விளைவிற்கும் மதிப்பேறவேண்டும். நெல் விளைவிப்பவன் நெல்லைக் கொடுத்துக் கிராமக்கூட்டுறவுச்சாலையில் தனக்குவேண்டிய மற்றச்சரக்குகளை*

வாங்கிக்கொள்ள இயலவேண்டும். அதுவே, பணத் துயர் ஒழியும் வழி.

பணத்தா லுலகு படுதுயரைப் பார்மின் !
குணத்தோரும் வீழுங் குழி. 3

இந்தப் பணத்தால் உலகம் என்ன பாடுபடுகிறது! போர், போட்டி, பொறாமை, கொலை, களவு, கற்பழிவு, விலைவாழ்வு, பொய், வஞ்சம், லஞ்சம், முகமன், பாசாங்கு—எல்லாவற்றிற்கும் பணம் துணையாகிறது. பணம் அசுர மாயத்தின் கையில் இப்போதிருக்கிறது. அதனால், அஃது அசுரத் தன்மையான காரியங்களுக்குச் செலவாகிறது. நல்ல காரியங்களுக்குச்செலவிடும் பணம் மிகக் கொஞ்சம். " பணம் ஒரு சக்தி; அதைத் தெய்வத் திருத்தாய்க்குத் திருப்ப வேண்டும் " என்கிறார் அரவிந்தர். அஃதாவது : பணத்தைக் கொண்டு அறவினைகள் ஆற்றவேண்டும்; உலகில் தெய்வத்தன்மை நிலவும் புண்ணியங்களைச் செய்ய வேண்டும். பாபமான காரியங்களுக்குப் பணத்தைச் செலவிடக்கூடாது. பணமாயக்குழியில் நற்குண சீலர்கூட விழுகின்றனர். மனிதன், இந்த வெள்ளி மண்ணிற்கும், மஞ்சள் மண்ணிற்கும் அவ்வளவு தூரம் அடிமைப்பட்டிருக்கிறான் !

கைதந்து பொல்லாத காரியத்தை யுந்தூண்டும்
பைகட்டும் பாவிப் பணம். 4

பைகட்டிக் கட்டிப் பெட்டியிலே தூங்கும் தீயர் பணம் பாபப்பணமாம். அப்பணம் உதவிசெய்வது போல நடித்துத் தன்னலப் பேராசையுடன் பொல்லாக்காரியங்களைச் செய்யத்தூண்டும் : முப்பது வெள்ளி பெற்று யூதாசு, ஏசுநாதரைக் காட்டிக்கொடுத்தான். ஒரு தேசத் துரோகி பணத்திற்காக

ஆசைப்பட்டு, குருகோவிந்த சிங்கனின் வீரப் புதல்வரான ஜூரவரன், பத்தேஹ் என்ற இருவரையும் பகைவர் கையிற் காட்டிக் கொடுத்தான். பணத்தால் நடக்கும் கொலைகளவுகள் கணக்கில.

சிலருக்குச் செல்வச் செருக்கீந்து, நல்லார்
பலரை வருத்தும் பணம். 5

பணம் சிலருக்குச் செல்வச்செருக்கைத் தரும். நல்ல குணமும் ஒழுக்கமும் இயல்பும் உடைய பலரை வறுமைக்குழியில் தள்ளி வருத்தும்.

பணம் குணங்கொல்லியா யிருக்கிறது. பூட்டும் செல்வம் கேட்டைப் பெருக்கும்; சேட்டை செய்யும். பணத்தைத் தொழிலாகவும், பண்டமாகவும் மாற்றிக் கொண்டே யிருக்கவேண்டும். வெளியூர்களுக்குச் செல்லும்போதும் இன்றியமையாத போதுமே நாணயங்களும் நோட்டுக்களும் பயனும்.. ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவுச்சாலை ஏற்படுத்த வேண்டும். அதில் உப்பு முதல் கர்ப்பூரம் வரை எல்லாச் சாமான்களும் இடம் பெறவேண்டும். அதன் கிளை ஒவ்வொரு தெருவிலும் இருக்கலாம். உழைப்பாளிகள் தங்கள் பண்டத்தை அதிற் கொடுத்து, ஜீவனத்திற்கு வேண்டிய சாமான்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். காலதேச வர்த்தமானங்களை யனுசரித்துப் பொருள் செய்து, மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கும், நல்லொழுக்கத்திற்கும் ஏற்றவாறு தக்காரைக்கொண்டு செலவிடவேண்டும். பொருளுடைமை பொதுவுடைமையாக வேண்டும்; பொதுவுடைமை அருளுடைமையாக வேண்டும். அஃதாவது: எல்லாம் திருவருள் தந்ததென்று, பொருளை

யெல்லாந் திருவருட்குலமாகிய மனித சமுதாயம் ஒற்றுமையாக முன்னேறவே செலவிட வேண்டும்.

---

## 10. செய் வகை

**இயற்றுக கால மிடம்வகை தேர்ந்தே ;**
**பயனும் பருவமழை போல்.** 1

காலத்தை யறிக ; 'இந்தக் காலத்திற்கு இத் தகைய பணி நல்லது' என்றறிக ! இடத்தை யறிக ! 'இன்ன நாட்டிற்கு, அல்லது, ஊருக்கு இத்தகைய உபகாரம் நல்லது' என்றறிக ! காரியம் செய்யும் வகையறிக ; 'இன்ன வகையாகச் செய்தால், இது நிறைவேறும்' என்று தேர்ந்து நல்ல தயாரிப்புடன் காரியத்தைச் செய்க ! தக்க பருவத்தில் பயிர் செழிக் கப் பெய்யும் மழையைப்போல் அக்காரியம் பயனு கும்.

நாம் கொண்ட காரியத்திற்குத் தக்க காலமும், இடவசதியும், ஆற்றலும் ஒத்துவரும் வரையிற் பொறுமையா யிருந்து, தக்க சமயத்தில் தீவிரமான முயற்சி செய்யவேண்டும்.

**காக்கையிடம் பாட்டைக் கரக்கும் குயிலெனநீ**
**நாக்கடங்கி நன்முயற்சி செய்.** 2

குயில் காக்கைக்கூண்டில் முட்டையிடும். தன் முட்டை யென்று காக்கை அதை அடை காக்கும். பறக்குந் திறமை வருமட்டும், குயிற்குஞ்சு குரலைக் காட்டாது ; பறந்து போம்போதே பாடத் தொடங் கும். அதுபோலப் பேச்சடங்கி, இரகசியமாக

வெளிப்பகட்டில்லாமல் நல்ல முயற்சிகளைச் செய்வாயாக ; தம்பட்டமில்லாமல் தக்கதைச் செய்க !

பின்று வதனைப் பெரிதுங் கருதியே
முன்னோர் வினையை முயல். 3

'இந்தக் காரியத்தால் பின்னால் இன்னது விளையும்' என்று ஆராய்ந்தறிந்தே ஒரு காரியத்தில் முற்பட்டு முயலவேண்டும். முன்பின் யோசனை முயற்சிக் கினிதாம். பதற்றமும், படபடப்பும், ஆத்திரமும், ஆராய்ச்சி யின்மையும் காரியக்கேடாம். பொறுத்து வினை செய் !

தாய்மொழியுந் தன்னறமுந் தாய்நாடுந் தண்ணருளும்
வாய்மையறி வும்பெருக வாழ். 4

எப்படி வாழவேண்டும் ? தனது தாய்மொழியும், தாய்நாடும், தனக்குரிய தருமமும், உயிர்களுக்கினிய அருளும், மெய்யறிவும் பெருகியோங்க உலகில் வாழ்வாயாக !

ஒரு பணி செய்யுமுன், 'இத்தகைய மேலான பலனை அளிக்குமா ?' என்று ஆராய்க ! தனது மொழி, நாடு, அறம், உயிர்க்கருணை, உண்மை, அறிவுவளர்ச்சி, உலகுயிர்க்கு இன்பம் இவற்றை உயர்த்தும் பணிகளைச் செய்து நீடூழி வாழ்க !

ஓம்வணக்க மென்ன வுயர்ந்தோ ரடிபணிக :
போமகந்தை ; புண்ணியங்க ளாம். 5

ஒரு பணி செய்யுமுன் பெரியார்களை அடைந்து 'ஓம் வணக்கம்' என்று அவரடிபணிந்து, நமது கருத்தை அவரிடம் சொல்லி, யோசனைகேட்டு நடப்பது நல்லது. அதனால், நமது அகங்காரம் குறையும். பெரியார் ஆசியினால் புண்ணியமெய்தும் ;

நமது காரியத்திற்கும் வெற்றியாகும். ஒருவர் நம்மை மனமார வாழ்த்தினல், அந்த வாழ்த்து நம்மை இன்புறுத்தும். தூய மனத்தினருக்கு அருட் சக்தியுண்டு.

## 11. வினை வெற்றி

சங்கடம் போன்று ஜயமாந் திருவினைகள்
கங்குன் முதிரக் கதிர். 1

'ஏதடா சங்கடம், இந்தக் காரியம் நிறைவேருது போலிருக்கிறதே! இதற்கு இத்தனை எதிர்ப்பிருக்கிறதே; நாம் என்ன செய்யமுடியும்?' என்று முதலில் தோன்றும்; மனந்தளரக் கூடாது. உலகில் நடக்கும் திருவினைகள், அருட்பணிகள், பொதுநலத் தொண்டுகள் — எல்லாம் முதலில் வருத்தமாகத் தோன்றி, இறுதியில் வெற்றிபெறும். இருள் முதிர முதிரப் பகல் அருகேவந்து கதிர் எழுகின்றதல்லவா? அரியபெரிய அருட்பணிகளுக்கு ஆயிரம் இடர்கள் வரும். அறியாமக்கள் நகைப்பர்; இன்ன லிழைப்பர். மனந்தளரும்படியான தோல்விகள் வரும். எனினும், மனத்திட்பங்கொண்டு செய்யும் திருவினைகள் வெல்லும். இடர்களெல்லாம் இரவின் இருளைப் போல் படிப்படியாக விலகி, வெற்றிக்கதிர் உதயமாகும். மகாத்மா காந்தி தென்னுப்பிரிக்காவில் உயிருக்கே ஆபத்தான நிலையிலிருந்து கொண்டு, கன்னத்தில் அறைபட்டும், பல்லுடைபட்டும், சிறையுண்டும், பொறுமையாகத் தமது கொள்கையைக் கடைப்பிடித்த தனலன்ருே இன்று, அவரது சத்தியாக்கிரக சக்தி பாரதநாட்டையே உய்வித்தது? இரவு முதிர்ந்தால் பகல்.

**சொல்லிற் குறைபோலத் தோன்றி நிறைபெறுமே**
**பல்லுயிர் வாழும் பணி. 2**

உலகச் சரித்திரத்தில் இதன் உண்மை யறிய லாம் : பலவுயிர்கள் இன்புறத்தக்க ஓர் அருட்பணி யைப் புதிதாக ஓர் அறிவாளி எடுத்துச் சொல்லும் போது குறை யிருப்பதுபோலக் காணும். பொறுமை யாய் முயல முயல, அக்காரியம் நிறைவேறிவரும்.

சிலுவை யிட்டபோது "கிறிஸ்துவின் தருமம் இப்படி உலகளாவப் பரவும்" என்பதைப் பகைவர் அறிந்தனரா? சோக்ரதர் தமது ஆத்ம சித்தாந்தத் திற்காகச் சிறையுண்டார்; புன்னகையுடன் பகைவர் கொடுத்த நஞ்சுண்டார். அவர் கண்ட வுண்மை பிளாத்தன் மூலமும், அரிஸ்தோதலன் மூலமும் உலகளா வியது. முகம்மது நபியைக் கல்லா லடித்த பகைவர், இன்று இஸ்லாம் ஓர் உலகமதமாகப் பரவியுள்ளதைக் கண்டால், தமது மூடச்செயலுக்காக வருந்துவர். அமெரிக்க விடுதலைக்காக வாஷிங்டனும், ருஷ்ய விடு தலைக்காக லெனினும், சீனத்திற்காக சன்யாத்ஸன்னும், இந்திய விடுதலைக்காகத் திலகரும், காந்தியும் எத்தனை இடர்களைப் பொறுத்தனர்? அவர்கள் முயற்சியை எத்தனைப்பேர் குறை சொன்னார்கள்? இன்று, அவர் பெருமை விளங்குகிறது! அவர் செய்த தியா கங்களின் பலனை உலகம் நுகர்கிறது!

**மலர்மெத்தை மீதல்ல, வாண்மீது சென்றே**
**பலர்நன்மை செய்தார் பரிந்து. 3**

உலகில் அரியபெரிய பொதுநலங்களைச் செய்த பல மகான்கள், மலர் மெத்தைமீது நடக்கவில்லை; அவர்கள் காரியம் அவ்வளவு எளிதாக நிறைவேறி

விடவில்லை ; அவர்கள் பகைவரின் வாள்மேல் நடந்தே பொறுமையும் தன்னம்பிக்கையும் கொண்டு எடுத்த வினையை முடித்தனர் :

கொலம்பஸ் எல்லையற்ற அத்லாந்திக் கடலில் பாய் மரக் கப்பலிற் சென்று அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். பொறுமையிழந்த அவர் சகாக்கள், ' இஃதென்ன பைத்தியம்! புதுவுலகாவது, நீ காண்பதாவது!" என்று எதிர்த்துச் சினந்து நடுவழியில் அவரைக் கொல்லவும் பார்த்தனர். எல்லாம் பொறுத்தே அவர் எடுத்த காரியத்தை வென்றார். தயானந்த சரஸ்வதி, பகைவர் வசவிற்கும் வாளுக்கும் விடத்திற்குப் அஞ்சாமல், சத்தியார்த்தப் பிரகாசத்தை உபதேசித்தார். இராஜா ராம் மோஹன்ராய் கொடிய வைதிக எதிர்ப்பைப் பொறுத்தே பாரதநாட்டின் புதுயுகத் தந்தையாக விளங்கினார். சீக்கிய குருமார்களெல்லாம் வாள் முனையிலிருந்து தமது தருமங் காத்தனர். இவ்வாறே, உலக சரித்திரத்தில் நன்மைகளெல்லாம் தீயரின் வாள் முனையில் நடந்தே வெற்றிக்குச் சென்றிருக்கின்றன. நாம் எடுத்த காரியம் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் உலகிற்கு நன்மை செய்வதாக இருக்கவேண்டும். பிறகு, எத்தனை இடர்கள் வந்தாலும், அவை ஒரு பொருட்டில்லை. மனத்திட்பத்தால் வினைத்திட்பமாம்.

**துணிந்துமுன் செல்க ; துயர்க்குலந் தானே**
**பணிந்துவெற் றிக்காம் படி. 4**

சத்திய வழி பிடித்து, தைரியமாக முன்செல்க ! துயர்க்குலங்கள் வரும் ; அனைத்தையும் பொறுத்து மேன்மேலும் காரியவுறுதி கொள்க ! முடிவில், நமக்கு வந்த இடர்கள் பணிந்து வெற்றிக்கே படிகளாக உதவும்.

T 82·2043 SU-26

1842

இராமானுஜரைக் கொல்லச் சூழ்ச்சி செய்த பொருமை பிடித்த யாதவப் பிரகாசர், பிறகு பிழை வருந்தி, கோவிந்தயோகியாகி, இராமானுஜ தருமத்தைப் பிரசாரஞ் செய்யப் பேருதவி செய்தார். சங்கரரை எதிர்த்து வாதாடிய மண்டனமிசிரர், முடிவில் சுரேசுராசாரி யாராகி, அத்துவிதப் பணிபுரிந்தார். நமது தேசீய காங்கிரஸ் 'அஹிம்ஸா தருமத்தை'க் கைக்கொண்டது; கொடிய அடக்கு முறைகளையும் பொறுத்தது; சிறையும் தடியடியும் தாங்கி, 'சத்தியமே வெல்லும்' என்ற மனத்துணிவும் வினைத்துணிவுங் கொண்டு முன் சென்றது! தினந்தோறும் அது பொதுஜனங்களுக்குச் செய்துவரும் நன்மையைக் காண்கிறோம்! தியாகத்தால் அதன் புகழ் ஓங்கி வருகிறது. தியாகிகளுக்கும், சத்திய வீரருக்கும் எவ்வளவு சோதனைகள் வந்தாலும் முடிவில் எல்லாம் விலகிப் போம். மனந் துணிந்து உண்மை நெறியைக் கடைப்பிடித்தால் வெற்றி யுறுதி.

**ஆருயிர்கட் கன்புற் றருள்வலியால் வெற்றிபெறும்**
**சீருயர்ந்த தெய்வப் பணி.** 5

சீரோங்கிய தெய்வப் பணியாவது, மனமாசகற்றி, மனிதனுள் விளங்கும் தெய்வ சைதன்யத்தை விளக்கி, மனிதசமுதாயத்தை அமரநிலைக்கு உயர்த்தும் அருட்பணியாகும். அது, மிகப் பெரும்பணி ஆகும். அதை நிறைவேற்றற்கான காரியங்கள் இரண்டு: (1) ஆருயிர்களை ஆத்மசமானமாக நினைத்து, எல்லையற்ற அன்புபேணல்; (2) இறைவனுடைய அருட்சக்தியைப் பெறுதல்: இந்த இரண்டினாலும் மகத்தான தெய்வப் பணிகள் நிறைவேறும்.

ஓரே நாளில் சிக்காகோ மேடையில் பாரத தருமத்தை உலகெலாம் புகழ, வேதாந்த கர்ஜனை செய்த விவேகானந்தர் அத்தகைய பேரன்பும், அருள்வலிமையும் பெற்றவர்; மஹாசக்தியின் அருள்பெற்ற சத்குரு இராமகிருஷ்ண பரமஹம்ஸரே, அவர் வாக்கினின்று அன்று பேசினர்! நபிநாயகத்தின் இஸ்லாமிய சாம்ராஜ்யம், அல்லாவின் திருவருளையே அடிப்படையாகக் கொண்டு பரவி நிற்கிறது! அன்பும், மனத்தூய்மையும், வாய்மையும் இருந்தால், திருவருள் இரங்கும். திருவருட்சக்தி பெற்ற மகான்களே தெய்வப்பணி புரியவல்லார். அருட்பாவலராகிய இராமலிங்க வள்ளல், அத்தகைய சக்திபெற்ற தமிழ் மகான்! அன்பும் அருளும் அமர வாழ் வளிக்கும்.

ஒன்பதாவது, தொழிலியல் முற்றிற்று.

## ௰. அருளரசியல்

உடலையும் அந்தக்கரணங்களையும் அடக்கியாண்டு, இருள்வழியிற் செல்லாமல் அருள்வழியிற் செலுத்தத் தன்னாட்சி அல்லது ஸ்வராஜ்யம் ஒவ்வொருவருள்ளும் நிலவ வேண்டும். இன்றேல், புலன்கள் வழியே மனம் கண்டபடி திரிந்து, கலாம் விளைத்து, அமைதியைக் கெடுக்கும். அதுபோல, ஜனசமுதாயத்தையும் இருள்வழியினின்று திருப்பி, அருள்வழியில் நடத்த அரசாட்சி வேண்டும். அகத்தை யடக்கியாளுவது போலவே, புறத்தையும் அடக்கி நன்முறையில் ஆளவேண்டும். உடலையும் அந்தக்கரணங்களையும் காப்பது போலவே உலகையும் ஜனசமுதாயத்தையும் காக்கவேண்டும். 'அகம், புறம்' என வாழ்க்கையிருவகைத்து: ஒருவனும் ஒருத்தியும் கூடிய காதல் வாழ்வும், இயற்கையும் இறைவனும் கூடிய கடவுள் வாழ்வும், 'அகவாழ்வு' அல்லது 'உள்வாழ்வு' எனப்படும்; கல்வி, தொழில், பொருள், அரசு—இவற்றுடன் கூடிய உலகவாழ்வு 'புறவாழ்வாம்.' அகத்திற்கும் புறத்திற்கும் இணைபிரியாத ஒற்றுமை யுண்டு. உள்வாழ்வு நிறைவுற்றால்மட்டும் போதாது; உலக வாழ்வும் நிறைவுற வேண்டும். ஒரு விளக்கிற்குச் சுடர்மட்டும் இருந்தாற் போதாது; தகழி, திரி, எண்ணெய்—எல்லாம் வேண்டும். உயிருக்கு எப்படி உடல் வேண்டுமோ, அப்படியே உலகும் வேண்டும். சிறந்த தீரர்கள் சமுதாயத்தினின்றும் ஒதுங்கி வாழக்கூடாது; தமது ஆற்றலைக்கொண்டு, அவர்

சமுதாயத்தை உயர்த்தவேண்டும். சுதந்தர நாட்டிலேதான் தவம், யோகம், அருள், அறம் எல்லாம் விளங்கும். அடிமைநாட்டில் வறுமையும், கண்ணீருந்தான் காணும். சுயராஜ்ய சித்தி சாம்ராஜ்ய சித்தி, தன்னாட்சி உலகாட்சி (ஆத்மஜயமும் பிரகிருதி ஜயமும்)—இவை யிரண்டும் நமது யோகசித்தியின் இருகரங்களாகும். தன்னை வென்று மன்னுயிரைத் தானெனக் கருதும் அறவோனே, உலகை நேர்வழியிற் செலுத்த வல்லவன். அசோகனுக்கும், சூரபத்மனுக்கும் எத்துணை வேற்றுமை உண்டோ அத்துணை வேற்றுமை ஒரு யோகியான அரசனுக்கும் போகியான அரசனுக்கும் உண்டு. அறத்தைக் காப்பதே அரசு; அரசைக் காப்பது அருள். மாந்தரின் சுத்தமனத்தில் விளங்கும் அருளுணர்வே அரசாட்சியாக விரிந்து பரவவேண்டும். அரசாட்சியின் சட்டதிட்டங்களெல்லாம் மனச்சாட்சியின் வரிவடிவாயிருத்தல் வேண்டும். பொருளையே கருதும் மண்ணரசையன்று, அருளையே கருதும் விண்ணரசை உலகில் நிலைநாட்டவேண்டும். கோனாட்சி, குடியாட்சி, குழுவாட்சி, பொதுவுடைமையாட்சி—எதுவாயிருந்தாலும், அடிப்படையில் அருளும், ஆன்மநேயமும், அறமும் இல்லாவிடில், அஃது உலகிற்கு அமைதியைத் தராது; அது கொலைக் கருவிகளைப் பெருக்கிப் போர் விளைக்கும் அசுர ஆட்சியாகவே முடியும். உடலாட்சி போல உலகாட்சி: பருவுடல் நாடு; உயிர் மக்கள்; நரம்புத் தொகுதிகள் பலதொழில் முயற்சிகள்; மனச்சாட்சி அறம்; அந்தக்கரணங்கள் அமைச்சர்; அருளுணர்வு செங்கோல்; தன்னறிவு திருமுடி; உள்ளம் அரண்மனை; சுத்தான்மா அரசன்! இவற்றிற்குத்

தம்முள் தொடர்பிருப்பது போலவே உலகிற்கும், மக்களுக்கும், அரசியலுக்கும், ஆட்சித்தலைவருக்கும் தொடர்பிருக்கிறது. அருளையும் ஆத்மஞானத்தையும் சர்வாத்மசமரஸத்தையும் அடிப்படையாகக் கொண்டதே, 'அருளாட்சி, தர்ம ராஜ்யம், அல்லது வேதாந்தக்குடியரசு' என்பது. அருளாட்சியில் சுத்த சுதந்தர சமத்துவ ஜோதி துலங்கும். ஆட்சித்தலைவர், பொதுநலத்தைப்போற்றும் தொண்டர் தலைவன் போல்வர். உலகைப் பண்படுத்தி அத்தகைய அருளாட்சியை நிலைநாட்டும் வகையை, இந்த அருள்+ அரசியல் விளக்குகிறது :

---

## 1. தலைமை

பாருலக மெங்கெங்கும் பாரோர் உரிமையலால்
ஓரோர் உரிமையா மோ ? 1

நாம் காணும் உலகம், எங்கெங்கும், எவ்வாறு நோக்கினும், பாரில் வசிக்கும் எல்லா மாந்தருக்கும் பொதுவுரிமையாகிற தன்றி, யாரோ தனிப்பட்ட ஒருவருக்கே உரிமையன்று.

உலகம் திருவருள் வீடாம்; அதன் தலைவன் இறைவன், தாய் இயற்கை : உயிர்களெல்லாம் திருவருட்குலம். 'எனது, நான்' என்னும் தனியுரிமை பாராட்டுவது அறியாமை. எத்தனையோ அரசுகளும், அரியணைகளும் செருக்குடன் ஆண்டு வீழ்ந்தன. அன்பும், அறிவும், அறமும், ஆன்மநேயமும் கொண்டு நோக்கினல், உலகம் அருட்பொதுவுடைமையாகக் காணும்.

**மனிதனுக் கில்லை மனித னடிமை ;**
**அனைத்தும்வல் லானுக்கே யாள்.** 2

மனிதன் மனிதனுக்கு அடிமையில்லை. அவன் எல்லாம் வல்ல அருளிறைவனுக்கே ஆளாவான்.

எல்லாருக்கும் ஓர் அருளரசன் உள்ளான். அவனே உயிர்க்குயிராக உள்ளந்தோறும் இருக்கிறான். அவனை உள்ளே கலந்து, உலகிலும் காண்பவர் இன்புறுவர்; அவனை மறந்தவர் துன்புறுவர். ஐம்பூதங்களும், இயற்கை வன்மைகளும் அவனால் இயங்குகின்றன. "அவனுக்கு அஞ்சியே காற்று வீசுகிறது; கனல் எரிகிறது; கதிர் நிலவுகிறது" என்னும் வேதம். காற்றையும், கதிரையும், கடலையும், காரையும் அவனது கருணையன்றி வேறுயார் தரமுடியும்? அவனால் நாம் இருக்கிறோம், உயிர்க்கிறோம், உண்கிறோம், நடக்கிறோம், நினைக்கிறோம், செய்கிறோம். அவனன்றி இவ்வுடல் பிணம். ஒரு மரத்தின் கிளைகள், இலைகள், பூக்கள், கனிகள்—எல்லாம் வேரினின்றே போந்து, வேரையே ஆதாரமாகக் கொண்டு வளர்வதுபோலே, உலகவாழ்க்கை யென்னும் பெரிய மரம் இறைவனருளையே வேராகக் கொண்டது. அவனருளே தாரகமாக உயிர்கள் வாழுகின்றன. அந்த உணர்விருந்தால் யார் யாரை அடிமைப்படுத்த வொண்ணும்? யார் யாருக்கு அடிமை? மனிதன், தன்னையும் பிறரையும் நடமாடுங் கோயிலாகக் காண்பான்; பிறர் நோகத் தான் நோவான்; பிறர் மகிழத் தானே மகிழ்வான்; அன்பும் அடக்கமும், அருளும் அறமும் கொண்டு தன்னுரிமை போற்றிப் பிறர் உரிமையை மதித்து நடப்பான். ஆண்டவனுக்கே அனைவரும் ஆளாம்.

**குடியிற் குடியாய்க் குடியொத்துக் கோல்செய்**
**நடுநிலை யாட்சி நலம்.** 3

நாட்டிற்கு ஓர் ஆட்சிமுறை வேண்டியதுதான். ஆனால், அந்த அரசாட்சி சுயேச்சாதிகாரமா யிருக்கக் கூடாது. யாவருக்கும் சமானமாக அது நடுநிலை வகிக்கவேண்டும். தகப்பன், தானும் குடும்பத்தின ரில் ஒருவனாகவே யிருந்து குடும்பத்தைத் தாங்கு கிறான். அதுபோலவே, குடிகளின் மனத்துடன் பொருந்தித் தானும் குடிகளுடன் குடியாயிருந்து நீதி செய்பவன் ஆட்சிமுறையே உலகிற்கு நலந் தரும்.

"உயிரெலாம் உறைவதோர் உடம்பு மாயி னான்" என்று நீதிமன்னன் பெற்றியைக் கம்பர் குறிக்கிறார்: தலை வேறன்று, உடல் வேறன்று; குடி வேறன்று, கோன் வேறன்று; வீட்டுக்கொரு தலை வன்போல், நாட்டுக்கொரு தலைவனும். அஃது, ஒருவனா கவோ, அல்லது பொதுஜன சம்மதம் பெற்ற ஒரு குழுவாகவோ இருக்கலாம். அதனால் இங்கு மன்னன் என்றது, ஆட்சி (Government) யென்னப்பட்டது. வீட்டுத் தலைவனுக்கு வீட்டவர் அடிமைகளல்லர்; நாட்டுத் தலைவனுக்கு நாட்டவர் அடிமைகளல்லர். மக்கள் மனமே ஆட்சிமுறையாதல் வேண்டும். பொதுஜன வாக்கைப் பொன்னெனப் போற்றி, உலகநலமே தலைமேற்கொண்டு, மன்னுயிரின்பமே தன்னுயி ரின்பமாய், அறமே உயிர்ப்பாய், அன்பே செயலாய், அருளே உள்ளமாய், வாய்மையே வலிமையாய், ஓரமின்றி நேர்மையுடனே, பொது நலம் புரிவது புண்ணியச் சுயாட்சியாம்.

**அறங்காக்கும் வீறும், அறிவழகும் வெற்றித்**
**திறங்காக்கு மன்னன் றிரு. 4**

தருமத்தைக் காக்கும் பெருமையும் (வீறு), கல்வி கேள்வி அனுபவங்களாற் சிறந்த அறிவின் அழகும், வெற்றியுடன் ஆட்சித்திறமையைக் காக்கும் அரசனதுசெல்வமாகும்.

'வீறு' என்றால் பொலிவு, பெருமை, அழகு, ஒளி, சிறப்பு என்று ஆகும். வெற்றித் திறமையாவது ஜயசக்தி; அஃதாவது: மன்னுயிருக்கு இதமாக, குடிகள் மனங்குளிர, தீயதை விலக்கி, நல்லதை வளர்த்து, பகைமை போக்கி, நேயம் உண்டாக்கி, வெற்றி பெறத் தருமத்தை நிலைநிறுத்தும் ஆற்றல். அறம் அறிவு இரண்டும் வெற்றித்திறமை யளிக்கும். நாட்டுத்தலைமை வகிப்போர் அதிமனிதராக (Supermen) இருக்க வேண்டும்; பொதுஜன மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும்; பலதுறை யறிவிற் சிறந்தவரா இருக்க வேண்டும். "ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர்; நுணங்கு கேள்வி ஆயப் புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னோன்" என்றார் கம்பர். அரசனைத் "தர்மாத்மா, புருஷ சிம்மம், ஸத்யபராக்ரமன்" என்கிறார் வால்மீகி. அறிவுப் பெருக்கம், ஆண்மை, வீரம், அறவலி, அன்பு அருள்—இவையே ஒரு மன்னனுக்கு வெற்றித்திருவாகும்.

**உண்மையே திண்மை; யுலகி லறமோங்கு**
**நன்மையே நாடாள்வான் சீர். 5**

நாட்டையாளும் தலைவனுக்கு உண்மையே பலம். உலகுயிர்களிடையே தருமமும் தரும சாதனமும் ஓங்கும் நன்மையே புகழாகும்.

சத்தியபலத்தைக் கொண்டு தருமத்தை மேன் மேலும் வளர்க்கவேண்டும்; இதுவே நாட்டுத்தலைவன் புரியும் சிறந்த நன்மை. சத்தியபலத்தாலேதான் பெரியார் தருமத்தை நிலைநாட்டுவர். சத்யபராக்ரமத்தை இராமனுடைய சிறந்த குணமாக **வால்மீகி** சொல்லுகிறார். தன்னுயிர்போலே மன்னுயிர் காத்தல், பொதுஜன வாக்கைப் பொன்னெனப் போற்றல், கண்ணெனத் தக்க கல்வியைப் பரப்பல், தெரிந்து தெளிந்து திருவினை செய்தல், வேற்றுமை நீக்கி யொற்றுமை யாக்கல், இடமும் காலமும் குடிகளின் நலமும் கருதிச் செயல்புரிதல், ஆயுதப்படையினும் அன்பை வளர்த்தல், மறவலி தன்னினும் அறவலி போற்றல், நல்லவர் துணையை நாடிக் கொள்ளுதல், கல்வி பரப்புதல், தொழில் வளர்த்தல்—இவையெலாம் அரசன் புரியும் நன்மைகளாம்.

---

## 2. தேர்ச்சி

**குடிகளே தேர்ந்திதமாய்க் கொண்டவனே கோமான்;**
**நடுநிலைசேர் நாட்டத்தி னன். 1**

'இவனே நம்மை ஆளத்தக்க தருமாத்மா' என்று, குடிகள் தாமே, இதமாக, அன்பாகத் தேர்ந்துகொள்ளப் பெற்றவனே வெற்றியுள்ள காவலனாவான். ஓரமில்லாது நேர்மையாகச் சமமாக நீதி செலுத்தலே, அத்தகைய கொற்றவனின் நாட்டமாகும்.

நடுநிலையே கண்ணாகக் கொண்டு பொதுஜனங்களின் நன்மதிப்பையும், ஆமோதிப்பையும் பெற்ற

தருமாத்மாவே நாட்டுத் தலைவனாவன். மண்வெறியும் மறவலியுங் கொண்டு, மாந்தரைப் பொருது கொன்றழித்து, அடிமைப்படுத்தி, ஆணவத்தால் ஒரு நாட்டை யாளுவோன் அரக்கனாவன். தசரதனுடைய அமைச்சவையார் இராமனை அரசனாக ஏற்றுக்கொண்ட போது, "வீர, நின்குல மைந்தனை வேதியர் முதலோர் யாரும், 'யாம் செய்த நல்லறப் பயனெ'ன விருப்பார்; கண்ணினும் நல்லன்; கற்றவர் கற்றிலாதவரும், உண்ணு நீரினும் உயிரினும் அவனையே யுவப்பார்" என்று அவனைப் போற்றினர். "புத்திமான், நீதிமான், வாக்மீ, ஸ்ரீமான், சத்துருக்களை வெல்பவன், ஆஜானுபாகு, விக்ரமன், சுபலக்ஷணன், தர்மாத்மன், பிரஜைகளுக்கு இதஞ்செய்ய வேட்பவன், சுத்தன், சீலன், ஞானசம்பன்னன், தர்மரக்ஷகன், வேதவேதாந்த தத்வக்ஞன், தனுர்வேத நிபுணன், சர்வலோகப்ரியன், சாது, தைரியவான், விஷ்ணுவைப் போன்ற வீறுகொண்டவன், மாசற்ற அன்பருக்கு மதியைப்போன்ற தண்ணளியன், பகைவருக்குக் காலாக்கினி போன்றவன், பொறுமையிற் பூமிபோல்வான், சத்ய தர்மதேவதை" என்று இராமன் குணங்களை நாரதர் வால்மீகிக்கு வர்ணிக்கிறார். இத்தகைய தெய்விகப் புருஷனே உலகின் காவலனாகத் தக்கவன். அவனே நடுநிலை யறத்தை நாட்டத்தக்க மகா புருஷனாவன்.

தான முயர்செல்லச் சமுதாய சேவைகளும்
மாணப் பெருகி வரும். 2

அரசாங்க ஊழியர் பதவி, மேலே செல்லச் செல்ல, ஜனசமுதாய சேவையும் மிகவும் வளர்ந்து வரும். அதை நிர்வகிக்கத்தக்க பிரதிநிதிகளையே

குடிகள் தேர்ந்தெடுக்க வேண்டும்; பதவியும் ஊதியமும் உயரவுயர, உழைப்பும் பொறுப்பும் உயரும்படி கருதவேண்டும். பதினைந்து ரூபாச் சம்பளம் வாங்கும் குமாஸ்தா நாளெல்லாம் வேலைசெய்வான். ஆயிரம், ஐயாயிரம் வாங்கும் உத்தியோகஸ்தர் கீழிருப்பவரை அமுல் செலுத்திக் கையெழுத்துமட்டும் போட்டுவிட்டுச் சுகமாயிருப்பர்; அது கூடாது. 'யாருக்கும் ரூ. 500-க்குமேல் சம்பளமும், ரூ. 30-க்குக் குறைந்த சம்பளமும் இல்லை' யென்ற சட்டம் பிறக்கவேண்டும். அவரவர் நிலைமையில் அவரவர் ஒரு நாளைக்கு ஆறுமணி நேரமாவது வேலை செய்ய வேண்டும். பொறுப்பான பொதுநல ஊழியர் அந்த ஊழியத்தையே தமது வாழ்வாக்கவேண்டும். இவ்வுண்மைக்கு இலக்காக உழைக்கும் உத்தமரே நாட்டூழியராவார்.

**ஆராய்ந்து போற்றி யனைவருந்தேர் சீரியரே**
**பாராள் சபையமைக்கப் பார். 3**

நாட்டாட்சியை அணிவகுத்துத் தக்க மந்திரிகளையும் ஜனப்பிரதிநிதிகளையும் கொண்டு விளங்குவது பாராள் சபை (Parliament). கல்வி கேள்வி அனுபவம், பொதுநல விருப்பம், அறிவு, ஆற்றல், ஒழுக்கம் இவற்றை நன்கு ஆராய்ந்து, 'இவரே தகுதியானவர்' என்று வாக்காளர் அனைவரும் போற்றித் தேர்ந்தெடுத்த சீரிய மேலோரே, பாராள் சபையமைக்கக் காண்க! காலத்திற்கேலாத பிற்போக்கான கொள்கையும், பட்டம் பதவி மோகமும், பேச்சொன்று செயலொன்றாகும் பிழைகளும், 'தாம் தலைவர்' என்னும் செருக்கும், கல்வி கேள்வி ஆராய்ச்சி யனுபவமின்மையும், இழிநடையும் கொண்டவர் பொதுஜன

ஊழியத்திற்குத் தக்கவ ராகார். அதனாலேதான், இங்கு அறிவாற்றல்களை ஆராய்ந்தே பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றது.

பொதுநலமே வாழ்வாகும் புண்ணியரைத் தேர்ந்தால்,
அதுநலமாம் பூவிற்கெல் லாம். 4

பொது ஜனங்களுக்கு நன்மை செய்யவே தமது வாழ்வை அர்ப்பணஞ் செய்த புண்ணியர்களைப் பாராள்சபைக்குத் தேர்ந்தெடுத்தால், நாட்டிற்கெல்லாம் அவரால் இன்பமாகும்.

குடிகள் விருப்பத்தை நன்கறிந்தவர், நாட்டு நிலைமையைக் கண்ணுக்கு மெய்யாகக் கண்டறிந்தவர், மக்கள் மனமே தமது மனமானவர், பொது ஜன நம்பிக்கைக்குப் பாத்திரமானவர், பொறுமையும் சுறுசுறுப்பான உழைப்பும் பூண்டவர், நாட்டுப் பணியை ஒரு புண்ணியமாகவும், கர்ம யோகமாகவும், சர்வாத்ம சேவையாகவும் கருதும் பெரியார்— இவரையே ஜனங்கள் பாராள்மன்றத்திற்குத் தேர்ந்தனுப்பவேண்டும்.

தேர்ந்தோர் மனத்தின் றிறமே யரசதனால்
தேர்தலைச் செய்க தெரிந்து. 5

பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர் மனத்திறம் எப்படியோ, அப்படியே அரசாட்சியும் அமையும். ஆதலால், தேர்தலின் இயல்பையும் விதி முறைகளையும் நாட்டுப் பிரஜையாகிய நீ நன்கு அறிந்துகொள்! உண்மையான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் திறமை வாக்காளருக்கு இருக்க வேண்டும். ஒவ்வொரு வாக்காளனும், பிரதிநிதிகள் மூலம் தானே நாட்டை நிர்வகிப்பதாக உணர வேண்டும். பொதுஜன வாக்குத்தான் நாட்டை

யாளுநின்றது. வாக்குச் சீட்டில் சிறந்த மேலோரையே குறிக்கவேண்டும். தேர்தலைப்பற்றி யாரும் அசட்டையா யிருக்கக்கூடாது. நாகரிகமான நாடுகள் அனைத்திலும் தேர்தல் முதன்மையாகக் கருதப்படுகிறது. விளம்பரம், ஆடம்பரம், தளுக்கான பேச்சு, உடை, ஆளழகு—இவற்றில் மயங்காமல், கைக்கூலிகளுக்கு இணங்காமல், அறிவும், ஆற்றலும், உண்மையான பொதுநலத் திறமையும், நல்ல நினைப்பும், பொதுஜன விசுவாசமும் கொண்ட பெரியாரையே சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும். அறவுணர்ச்சியும், அறிவழகும், பொதுநலத் திறமையுமே பிரதிநிதிகளின் தன்மையைக் காட்டும். ராஜாஜி, பிரகாசம், டாக்டர் ராஜன், புலுசு சாம்பமூர்த்தி போன்ற வீரர் அத்தகைய தகுதிவாய்ந்து, சட்டசபையிற் புகுந்து நாட்டிற்கு எல்லையற்ற நன்மை செய்யக் கண்டோம்.

---

## 3. நல்லாட்சி

**தொத்தடிமை யின்மை, துயர்செய் முரணின்மை,**
**உத்தமனுள் ஊருக் கணி.** 1

எல்லாத் துயர்களும் பற்றும் அடிமைநோயின்மையும், துன்புறுத்தும் உட்சண்டைகளின்மையும் உத்தமனாகிய தலைவன் ஆளும் ஊருக்கு அழகாகும்.

நல்லாட்சிக்கு முதல் அடையாளம் குடிகளின் சுதந்தரப் புன்னகையேயாம். மனச்சாட்சியை மதித்து நடக்க மாந்தருக்கு உரிமையிருக்க வேண்டும்; அடக்குமுறைகளால் மனச்சாட்சிக்குக் கொடுமை செய்தலே உள்நாட்டுச் சண்டைக்குக் காரணம்; சண்டை சச்சரவில்லாமல் அமைதியாக,

ஒற்றுமையாக மாந்தர் வாழுவதே நாட்டாட்சி குறைவற்றிருப்பதற்கு அடையாளம். அத்தகைய பூரண சுயாட்சி கிராமங்களில் வேரூன்ற வேண்டும்

**சிற்றூரிற் றேயம் தெரியும் படியாண்டு**
**வற்ரு நிறைவு வழங்கு.**

சிறிய கிராமத்திலும் (சிற்றூர்) தேசத்தின் ஆட்சிமுறை தெரியும்படி அரசாண்டு, எவ்விதத்திலும் குறைவில்லாத (வற்ற) பூரணமான வாழ்வை மக்களுக்கு வழங்குக !

கிராமமே தேசத்தின் உயிர்நாடி: கிராமம் பெருகித் தேசமாகிறது; கிராம வாழ்வே சமுதாய வாழ்வின் வேர்; கிராம சுயாட்சியே தேசசுயாட்சியின் அஸ்திவாரம். கல்வி, தொழில், காவல், சுகாதாரம், வாணிபம், விவசாயம், ஐக்கிய நாணயச் சங்கம், நீதி, சன்மார்க்கம் முதலிய எல்லாத் துறைகளிலும், நாட்டைப்போலவே கிராமமும் நிறைவுற்றிருத்தல் வேண்டும். கிராமப் பஞ்சாயத்தே தேசத் திருச் சபையாகிய பாராள்மன்றமாக விரியவேண்டும் **தொழிலியலிற்** சொல்லியவாறு கிராமத்தில் கைத் தொழில்களை வளர்த்து, விளைவையும் செய்பொருள்களையும் கூட்டுறவுச்சாலை பெற்றுக்கொண்டு, எல்லாருக்கும் சரிசமானமாகப் பிழைப்பிற்கு வேண்டிய மட்டும் கொடுக்கவேண்டும். கிராமத்திற்குக் கண்டு மிஞ்சியதை நகரத்தேவைக் கனுப்பி, வேண்டிய பண்டமாற்றுச் செய்துகொள்ள வேண்டும். கிராம வாசிகளின் மூளைக்கு நல்ல அறிவும், சிந்தனைக்கு உயர்ந்த எண்ணங்களும், உடலுக்கு நல்ல உழைப்புந் தரவேண்டும். உடல்நலம், இயற்கைச் சிகிச்சை உலக விளக்கம், பெரியார் வரலாறு, நாட்டுச்

சரிதை, கைத்தொழில் விளக்கம், புதிய விவசாய முறைகள், சமூகச் சீர்திருத்தம், சிக்கன வாழ்வு முதலியவற்றைப் படங்கள் மூலமாகவும் நாடகங்கள் மூலமாகவும், சொற் பொழிவுகள் மூலமாகவும் கிராமத்தாருக்கு மனதிற் பதியும் படி செய்யவேண்டும். கட்குடி, பொடி, சுருட்டு, புகையிலை, கஞ்சா, சூதாட்டம், சீட்டாட்டம், விபசாரம், கலகங்கள், வியாச்சியம், வம்பு, மூடப்பழக்கங்கள் முதலிய தீமைகளை ஒழிக்க வேண்டும். ஐக்கிய நாணயச் சங்கம் ஏற்படுத்தி ஒவ்வொருவரும் கடன்களை யொழித்து அவசரத்திற்குக் கொஞ்சம் பணம் போட்டுவைக்கச் செய்ய வேண்டும். கைத்தொழிலாளிகளுக்கு முதல் உதவ வேண்டும். பஞ்சாயத்து ஏற்படுத்திக் கிராமத்தார் 'கோர்ட்டுக்கு'ப் போகாமல், வழக்குகளை உள்ளூரிலேயே தீர்க்கவேண்டும். எல்லாரும் நாளைக்கு அரைமணி நேரம் உடற்பயிற்சியும், அரை மணி நேரம் கடவுள் வணக்கமும் செய்யப் பயிற்ற வேண்டும். கிராமத்திற்கு ஐந்து அறவோர் அருட்பணி செய்தால், ஐந்தாண்டுகளில் நிறைவான கிராம வாழ்வை நிலைநாட்டி, நாட்டில் வறுமை மடமைப் பிணிகள் இல்லாமற் செய்யலாம். அறவோர் செய்ய வேண்டிய வேலைத் திட்டங்களெல்லாம் திருநூலிற் காண்க! கிராம நிறைவிற்கு நாட்டில் சுயாட்சி அவசியம்.

**பார்தழுவிப் பஞ்சம் பகையிருள்நோய் அச்சமறச்**
**சீர்வழியிற் செங்கோல் செலுத்து.** 3

'பார்' என்றால் பாரோர், குடிகள்; அரசன், காவலன், அறங்காப்பான்; குடிகளின் நன்மை

செய்யுந் தொண்டர் தலைவனே அரசன், அல்லது நாட்டதிகாரி. அவன் பாரைத் தழுவி, குடிகளின் மனத்துடன் ஒத்து, அரசியலை நடத்தவேண்டும். பஞ்சம், வறுமை, பகைமை, மடமையிருள், அச்சம் இவற்றை அறவே யொழிக்கவேண்டும். நாட்டில் செழிப்பும், பொருள்வளமும், தொழில் வளமும், கல்விகேள்விப் பெருக்கமும், ஒற்றுமையும், உடலுறுதியும், சுதந்தர வுணர்ச்சியும் விளங்கும்படி ஆட்சித்தலைவன் சீரியவழியில் நீதி செலுத்த வேண்டும்.

**வறுமையற நற்றொழிலும், வாய்மை யறிவும்**
**முறைமையுறத் தந்துதவு முன்.** 4

ஒரு செங்கோலாட்சி முதலில் குடிகளுக்குத் தர வேண்டியன இரண்டு: (1) வறுமை நீங்கும் நல்ல தொழில்; (2) வாய்மை யோங்கும் நல்ல அறிவு. இரண்டையும் முறைவகுத்து எல்லாரும் அடையும்படி செய்யவேண்டும். **கல்வியியலிற்** சொல்லியபடி, இருபாலாரும் இனமாகவும், கட்டாயமாகவும் போதிய கல்வியறிவும், கிராம சமுதாயத்திற்குப் பயனுள்ள ஒரு தொழிலும் பயிலச் செய்க! அதற்காகும் செலவை வீட்டிற்கு அரை ரூபா வரி உயர்த்தி வசூலிக்கலாம். 'ஏழை', 'பிச்சை' யென்று வருபவருக்கும், சோம்பித் திரிவோருக்கும் வேலை கொடுத்துச் சோற்றைப் போடத் **தொழிலகம் (Work house)** இருக்கவேண்டும். எளிய வாழ்வும், உயர்ந்த நினைப்பும், நல்லொழுக்கமும், உழைத்தே யுண்ணும் உறுதியும், தினம் நான்குமணி நேரமாவது அறிவு வளர்ச்சிக்குச் செலவிடும் கல்வி முயற்சியும் கிராமவாசிகளுக்கு இயல்பாகவே உண்டாகும்படி செய்ய

வேண்டும். கிராமங்களில் தொண்டு செய்யும் அறவோர், தாமே உதாரணமாயிருந்து தொழில் மாண்பைக் காட்டவேண்டும். கல்வியும் தொழிலும் பரவினுல், வறுமை மடமைப் பிணிகள் நீங்கும்.

**ஒளிசெய்யுங் கல்வி யுலகிலெல் லார்க்கும்**
**எளிதுறச் செய்த லினிது. 5**

அறவொளியை மேன்மேலும் பொலியச் செய்யும் உண்மையான கல்வியை,உலகினரெல்லாரும் ஒருவர் பாக்கியில்லாது, எளிதாக அவ்வவ் வூரில்அடையச் செய்தல் நாட்டிற்கு இனிதாகும். மடமையிருளை எந்த மூலையிலும் இல்லாமல் ஓட்டவேண்டும். கல்விக்காக ஓர் அரசாங்கம் எவ்வளவு பணம் செலவிட்டாலும் மிகையாகாது; தெருவிற்கு ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினுலும் மிகையாகாது. உபாத்தியாயர்களை நன்கு பயிற்றி வீடுதோறும் கல்விமணம் பரப்பஅவர்களை அனுப்பவேண்டியது சர்க்காரின் முதற்கடமையாகும். கல்வி கண்போன்றது; தொழில் ஒரு சமுதாயத்தின் கை போன்றது.

---

## 4. வரவு செலவு

**கல்வி, தொழில்,சுகங் காப்பு நலங்கருதி**
**நல்குவரி வான்போல் வழங்கு. 1**

கடலை முகந்து கார்மேகம் உலகிற்கே மழையாக வழங்குகிறது. அதுபோல், குடிகளிடம் நியாயமான வரிவசூலித்து, குடிகளின் நன்மைக்காகவே அரசாங்கம் அதைச் செலவிடவேண்டும். நாட்டில் கல்வி செழிக்கவும், தொழில்கள் பெருகிச் செல்வம்

செழிக்கவும், நல்வாழ்வு பெருகிச் சுகாதாரமோங்கவும், உட்பகைவரும் புறப்பகைவரும் நாட்டைத் துன்புறுத்தாமல் சரியான வீரரைக் கொண்டு காவற் படையணி யமைக்கவும், நாட்டிற்கு வேண்டிய பிற நலங்களையும் கருதிப் பொது ஜனங்கள் தரும் வரிப் பணத்தைத் தக்கபடி செலவிடுக !

**தேவைக்கு மேற்சேர்க்குஞ் செல்வர் திறைவாங்கித்**
**தேவையறத் தேசநலஞ் செய். 2**

காலநிலைக்கேற்றபடி ஒரு குடும்பம் பிழைக்க இவ்வளவு வருமானம் வேண்டுமென்று கணக்கிட வேண்டும். இத்தேவைக்கு மேல் சேர்க்கும் செல்வருக்கு வருமான வரி வாங்கி நாட்டின் குறை நீங்க நலஞ் செய்க !

ஒரு மனிதனுக்கு வேண்டிய மனை, காணி, பொருள் அனைத்தையும் கணிக்கவேண்டும். தேவைக்குமேல் வைத்திருப்பவரிடம் ஆறிலொரு கடமை வசூலிக்க வெண்டும். தேவைக்குங் குறைவா யிருப்பவருக்குத் தக்க தொழிலைத் தந்து சம்பாதிக்கச் செய்து அந்த வருமானத்தினின்று ஆறிலொருபங்கு வாங்க வேண்டும். உதாரணமாக, ஒரு விவசாயி சாப்பாட்டிற்குக் கட்டாது வருந்தினால், அவனுக்கு இரண்டொரு காணி தர்க்காஸ்து மனுவின்மேல் தந்து, ஊருக்கு உபகாரமான ஒரு தோட்டப் பயிர் விளைவிக்கச் செய்யவேண்டும். பயிர் செய்ய முதல் கூட்டுறவுச் சங்கத்தினின்று கடன் உதவி, விளை பொருளாகக் கடனை வாங்கிக் கொள்ளவேண்டும். கடன் தீர்ந்த பிறகு வரி விதிக்கலாம்; அல்லது, பொருளாகவே வாங்கிக்கொள்ளலாம். கிராம சமுதாயம் போதுமட்டும் உண்டு உடுத்தி, மனை கட்டி, அறி

வொளி பெற்று, அறவழி வாழ வேண்டிய வகையில் கிராம வருமானத்தைச் செலவிட வேண்டும்.

ஏவரேவ ரெந்திறத்த ரென்றுய்ந்து போற்றி,
அவரவர்க் காந்தொழிலை யாக்கு. 3

ஜனங்களுக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டு பண்ணிச் சோம்பலையும் வறுமையையும் நாட்டை விட்டு ஓட்ட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். யாருக்கு எத்தொழிலில் நாட்டமோ, அந்தத் தொழிலை அவருக்கு நன்கு பயிற்றி, முதலீந்து, சமுதாயத்தின் நன்மைக்காக அதை நடத்தச் சொல்லி, இலாபத்தில் ஆறிலொரு பங்கு வரியாக வசூலிக்கவேண்டும். 20 வயது முதல் 22 வயது மட்டும், ஒவ்வொருவனும் தொழிற் பயிற்சியும், நாட்டுப் பாதுகாப்பிற்காக வீரப் பயிற்சியும் பெறச் செய்ய வேண்டும். கல்வி, தொழில், சுகாதாரம், நீதி, நாட்டுக் காவல், ஊரை அழகுசெய்தல் முதலியவற்றிற்கு மொத்த வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்கு செலவிட வேண்டும். சட்டதிட்டங்களை ஜனங்கள் ஒழுங்காகப் பின்பற்றவும், குற்றங் குறைகளைக் கண்டுபிடித்துத் திருத்தவும், ஜனங்களின் மனக்குறைகளையும் உண்மையான நிலைமையையும் நாட்டாண்மைக் கழகத்தாருக்குத் தெரியப் படுத்தவும் ஊர்தோறும் தொண்டர்படை வேண்டும். ஊரில் பிச்சைக்காரன் வந்தால், உடனே இத்தொண்டர் அவனைத் தொழிலகத்திற்கு அழைத்துச் சென்று, ஒரு வேலை கொடுத்துச் சோறு போடவேண்டும். அவனுக்கு ஒரு தொழில் பயிற்றி மீண்டும் அவன் பிச்சையெடுக்காமல், சமுதாயத்திற்குப் பயனுள்ள உழைப்பைச் செய்யச் சொல்லவேண்டும். மக்களிடையே

அறவுணர்ச்சியும், கல்வி யொளியும், தொழிலாற்ற லும் பரவினல் குற்றங் குறையும்; சோம்பல் நீங்கும்; செல்வமும் ஒழுக்கமும் செழித்தோங்கும்.

**மனங்கொண் டறவழியில் மாந்த ரொழுகிற்**
**கனங்கொள் படைச்செலவேன் ? காட்டு!** 4

மாந்தர் மனங்கொண்டு அறவழியில் நடந்தால் ஒற்றுமையாக வாழ்வர்; நாடு அமைதியா யிருக்கும்; குற்றங் குறைந்து குணமோங்கும். அப்போது போலீஸ் படை முதலியவற்றின் செலவு குறையும். நாட்டின் வருமானத்தில் பாதிக்கு மேலே இப்போது படைச் செலவிற்குப் போகிறது; போர் மூண்டா லொழியப் படைக்கு வேலை கிடையாது. நாட்டிளைஞருக்கு 20 வயதிற்கு மேற் கட்டாயமாக இராணுவப்பயிற்சி தரவேண்டும். அதனல், வீடு தோறும் வீரர் இருப்பர். ஊரில் நடக்கும் வீரத் திருவிழாக்களில் அவர் தமது திறமை யைக் காட்டிக் கற்றதை மறவாமல் வளர்ப்பர். அந்நியப்பகைவர் வருங்கால், போர் முரசடிக்க வேண்டியதுதான் தாமதம்; வீட்டிற்கொரு வீரன் போரணியுடன் பொதுப்படையில் வந்துசேர்ந்து நாட்டைக் காப்பான்: இப்படித்தான் பழைய கிரேக்க தேசத்திலும், தமிழ்நாட்டிலும் நாட்டின் காப்பிற்காக முரசொலிகேட்டு வீரப்படைகள் எழுவது வழக்கம். ஆனல், உலகோர் அவரவர் மனச்சாட்சியைப் பின்பற்றி அருள்வழியில் அற வாழ்வு வாழ்ந்தால் போர்கள் ஒடுங்கும். அப்போது படைச்செலவுகள் மிச்சமாகும். அதைக்கொண்டு கல்வியும் தொழிலும் வளர்க்கலாம். மனச்சாட்சியே அவரவருக்குக் காவலாக நின்றல், நாடு மாசற்று

வாழும். ஒரு நாட்டிற்கு ஆயுதப் படையினும் இன்றியமையாதது அறவோர் திருக்கூட்டமேயாம்.

**கூரை பிடுங்கிக் குளிர்காய் வதுபோலும்**
**பாரைப் பிடுங்கும் பரிசு.** 5

யாராயினும் தனது வீட்டுக் கூரையைப் பிடுங்கிக் குளிர்காய்வதுண்டோ? அதுபோலாகும், பாரினரை வருத்தித் தாங்கமுடியாத அநீதியான வரிவாங்கி, அரசன் தான் போக போக்கியங்களை அனுபவித்தல்.

வீட்டைப்போல நாட்டைக் கருதவேண்டும். 'வையா வரியும் செய்யா முறையும்' தீதாம். நாட்டுத் தலைவருக்கு நாடெல்லாம் தமது வீடு; மக்களெல்லாம் தம் வீட்டினரே. அவர் நன்மையே தமது நன்மை; அவரின்பம் தமதின்பம்; அவரின்னல் தமதின்னல். நாட்டுத்தலைவர், தமது குடும்பத்திற்கும், அலுவலுக்கும் போதிய ஊதியம் பெற்றுச் சிக்கனமாக வாழ வேண்டும். கண்டபடி இடம்பச் செலவுகளைச் செய்து, அவற்றிற்கெல்லாம் குடிகளின் வரிப் பணத்தைக் கொள்ளையடிக்கலாகாது. மண்வெறி கொண்ட நாடுகளைப் போன்று வலுச்சண்டை செய்து, தினம் கோடிக்கணக்கான பொருளைச் செலவிட்டு, தண்டச் செலவிற்காகக் குடிகளைக் கசக்கிப் பிழிந்து அநியாய வரி வாங்கக்கூடாது. மறப்போர் தொடரும் நாடுகளில் ஏழைகள் படும்பாடு, சிவனே......! குடிகளின் வருமானத்தில் ஆறிலொரு கடமை வாங்கி, நாட்டுக்கு முதலாக ஒருபங்கை வைத்துவிட்டு, அரசியற் சேவகருக்காகவும் செலவுகளுக்காகவும் ஒருபங்கு மீதி வைத்துப் பாக்கியைக் கொண்டு முன்சொன்னபடி நாட்டில் அறிவும்,

தொழிலும், ஆற்றலும், செல்வமும், அழகும் வளரவே அளவுடன் செலவு செய்யவேண்டும். ஒரு ஏழை பாக்கியில்லாது தம் குடிகள் அனைவரும் உண்டார்களென்றறிந்த பின்னரே, அடையாளமாக ஒரு மணியடிப்பதைக் கேட்டபின்னரே, தான் உண்ணும் மன்னன் யார்? நாட்டில் உழைப்பும் பிழைப்பும் பெருகத் தொழில்களை வளர்த்து வறுமைப்பிணியை எந்த மூலையிலும் இல்லாமல் தீர்க்கும் தருமாத்மா யார்? அறிவும், திறனும் பெருக்கும் அறவோன் யார்? அவனே உண்மையான நாட்டுத்தலைவன்!

---

## 5. படை

நயத்தால் அரசாள நாடாத மன்னன்
பயத்தாலே கொள்வான் படை. 1

நயமாக அரசாள விரும்பாத மன்னன் குடிகளிடத்தில் கொண்ட பயத்தாலும் சந்தேகத்தாலுமே படைகளைப் பெருக்குகிறான்; இன்றேல், மண்வெறி கொண்டு பிற நாடுகளைப் படையெடுக்கப் படைவலி பெருக்குகிறான். அதற்காக, அமைதியான நாட்களிலும் இலட்சக்கணக்கான இராணுவவீரரைச் சும்மா ஊட்டி நாட்டுப்பொருளை நட்டமாக்குகிறான்.

நாட்டைப் பகைவரிடமிருந்து காக்கப் படைகள் வேண்டியதே. நாட்டு வாலிபர் ஒவ்வொருவருக்கும் வீரப்பயிற்சி கட்டாயமா யிருக்கும்போது, நிலைப் படை (**Standing Army**) யில்லாமல், பகைவரை யெதிர்க்க எல்லாரும் தயாராக இருப்பர். அவர்களிற் சிலருக்குத் தனியாகப் போர்க்கலை பயிற்றுவிக்கலாம். அவர் போரில்லாத நாட்களிற் சும்மா இராமல்,

நாட்டு வாலிபரை மாதமொருமுறை கூட்டிப் பயிற்சி யளிக்கலாம்; ஊர்காவலை நிர்வகிக்கலாம். அமைதி யான நாட்களில் இராணுவம் ஊர்காவல் செய்யலாம். அப்போது வருமானம் மிச்சமாகும். நாட்டில் அறமும் திருவும் விளங்கினால், அமைதி நிலவும். அன்பிருந்தால், அரசன் பயப்பட வேண்டியதில்லை; பயத்தால் குடிகளை நசுக்கப் படைவைத்திருக்க வேண்டியதில்லை.

**பார்மனம் பற்றிப் பரிந்துமுறை செய்நாட்டிற்**
**போர்வெறிகள் போக்கற்றுப் போம்.** 2

போர்வெறிகள் ஒழிந்து உலகில் அமைதி நிலவ ஒரு வழியுண்டு: உலகோர் மனத்தைத் தழுவி, உயிரிரக்கங்கொண்டு, உலக நன்மைக்கு நாட்டையாளுவதே அவ்வழி.

பாரின் மனம் என்ன? போர்புரிந்து கோடிக் கணக்கான பேரைக் கொல்லவேண்டுமென்பதா? இல்லை. உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே. உலகில் உயர்ந்த அறிவாளிகளும் அருட் புலவரும், மனிதசமுதாயம் ஒருகுலம் போல ஒற்றுமை யாக, அன்யோன்யமாக வாழவே கருதுகின்றனர். அதற்காகவே, சில யோகிகள் கடுமையான மௌன விரதம் பூண்டு தவம் புரிகின்றனர். உலகில் உத்தமர் மனத்தைத் தழுவி, அதற் கேற்றபடி ஜீவகாருண்யங் கொண்டு எல்லாவுயிர்களும் இன்புற்றிருக்கவே அவரவர்க்குரிய நாடுகளை நீதிமுறையில் ஆண்டால், மண்வெறியும், போர் வெறியும், இரத்தப் பெருக்கும் தமக்கொரு சந்தர்ப்பமே யில்லாது மறைந்துபோம். மனிதவியல்பே மாறிப் புதுயுகம் தோன்றவேண்டும். அசுரமாயங்கள் ஒழிய அமரவாழ்வு நிலவவேண்டும்.

**அசையா வுறுதி யறத்தின்முன் பொய்யர்**
**தசைவலி தாழ்ந்து படும். 3**

அழுத்தமான மனவுறுதி கொண்ட தருமபலத்தின் முன்னே, அதருமப் போர் புரியும் அசத்தியரின் மிருக பலம் தாழ்ந்து வீழ்ச்சியடையும்.

தரும வீரர்கள் வேண்டும். அஞ்சாத அறவலி வீரர்முன், மறவலியரக்கர் நிற்கமுடியாது. ஒரு சூரியன் முன்னே கோடானுகோடி நட்சத்திரங்களுடன் எதிர்க்கும் கங்குலரக்கன் நிற்கமுடியுமா? தசைத் திமிர் கொடுமை செய்து வீழும். தரும பலம் இன்னல்களைப் பொறுத்து வெல்லும். அதர்ம பலம் உலகை வெல்வதாகத் தோன்றினும் இறுதியில் அழிந்து படுவதுறுதி. சத்யம் தருமம் இரண்டே வெற்றியின் வச்சிராயுதங்களாம்.

**படையாலே யென்னுகும் பாரொன்று சேரின்?**
**கொடையன் புடையானே கோ! 4**

உலகமே ஒன்றுசேர்ந்து எதிர்த்தால் (சத்தியாக்கிரகம் செய்தால்) அரசன் மறவலிப்படையால் என்ன செய்ய முடியும்? அந்தப் படைக்கு உலகோர் ஒற்றுமையாக உதவி செய்யவும், உணவு முதலியன தரவும், வரி கொடுக்கவும் மறுத்தால், அரசன் என்ன செய்யமுடியும்? வேண்டுவது பொதுஜன ஒற்றுமையே: படையால்மட்டும், ஒருவன் உலகை அடக்கியாள முடியாது. ஈகையும், அன்பும் உடையவனே நல்ல அரசன். குடிகள் மனமறிந்து நன்மை செய்ய வேண்டும்; பயங்கரப் படைகளை நம்பியிராமல் அன்பினால் ஆளவேண்டும். கம்ஸன் பயங்கரமான அரக்கரை யேவியும் கண்ணனைக் கொல்ல முடிந்ததா? துரியோதனன் வஞ்சனை தருமபுத்திரரை அழிக்க முடிந்

தரா? அசோகன், அக்பர் போன்ற அறமன்னர் உலகின் உள்ளத்தில் என்றும் வாழ்கின்றனர். மறவலி மன்னர் எத்தனையோ பேர் முட்புதர்கள் போலத் தோன்றி மண்ணுயினர்.

**இன்றுவாள் வென்றதனை யின்னொருவாள் வெல்லுவதே**
**என்றுமிம் மண்ணு ளியல்பு.** 5

இன்று வாள்வலி வெல்லும் அரசை, நாளையே இன்னொரு வாள்வலி வெல்லும்; அதுவே இந்த உல காட்சியின் இயல்பு.

புத்தரின் அருளரசும், ஏசுநாதரின் அன்பரசும், சங்கரரின் ஞானவரசும் என்றும் வாழ்கின்றன. சிக்கந்தரும், நெப்போலியனும், ஸீஸரும், நாதிர்ஷாவும் மிருக பலங் கொண்டு இரத்த வெள்ளத்தில் எழுப்பிய அரசுகள் காலவெள்ளத்திற் கரைந்து போயின. 'தெருளும், நல்லறமும், மனச்செம்மையும், அருளும் நீத்தபின் ஆவதுண்டாகுமோ?' என்று வசிட்டர் இராமனுக்குச் சொன்ன உபதேசத்தை நாடாளும் தலைவரெல்லாம் பின்பற்ற வேண்டும். வாளினும் அன்பே வலிமையுள்ளது. நாடு பிடிக்கும் பேராசை யொழிக: நட்பும் அன்பும் ஆன்மநேயமும் வளர்க; பெரியார் உபதேசித்த இராஜ தருமத்தைக் கருதுக; மன்னுயிர் மனத்தை மகிழ்வித்திடுக; நீதி போற்றுக; தீதை விலக்குக; பெரியாரைத் துணைக் கொள்க! பிரிவினைக் கிடங்கொடேல்! அரசன் அன்பும், குடிகளின் ஒற்றுமையும் அமைதிக்கு வழியாம்.

குடிகளின் குறைகளையறிந்து களைக; மிடியிருளோட்டுக; நீதித் தராசை நேர்மையாய்ப் பற்றுக; காலமும் ஞாலமும் கருதி நலஞ்செய்க; படையினும் அன்பே பலமெனக் கொள்க! சினமும், செருக்கும்

திமையைப் பெருக்கும்; ஒறுத்தாள்வதினும் பொறுத்தாள்வது மேல்; மறவலி தன்னினும் அறவலி மேலாம்; அருட்குடை தாங்கும் அரசனே அரசன்.

---

## 6. வெம்மை விலக்கல்

காலைபோற் செய்யதிருக் காவலன் சீரோங்கும்;
மாலைபோ லாம்வெய்யோன் வாழ்வு. 1

காலைக் கதிர் மேன்மேலும் ஒளியோங்குகின்றது. அதுபோலச் செம்மையாக நீதி செலுத்தும் திருவுடை மன்னன் புகழும் பெருமையும் வெற்றியும் மேலோங்கும். மாலைக்கதிர் இரத்தவொளி காந்தி மறைந்து போகிறது; அதன்பின் இருள் உலகைக் கௌவுகிறதன்றோ? அதுபோலேதான், வெம்மையான கொடுங்கோல் மன்னனுடைய வளமை பயங்கரமான தீபோலக் கிளம்பி இருளில் மறைந்தொழியும். உலகாட்சி உலகைப் போலவே நிலையற்றுச் சுழலும்: நமது நாட்டிலேயே எத்தனை மரபினர் ஆண்டு மறைந்தனர்! இராமர், தருமர், நந்தர், மௌரியர், குப்தர், சளுக்கியர், துருக்கியர், முகலாயர் ஆண்ட அரசுகளெல்லாம் எங்கே? மூவேந்தர் அரசெங்கே? விஜயநகர ராயர்களும், மராத்திய, ராயர்களும், மதுரை நாயக்கரும் ஆண்ட அரசுகள் எங்கே? எல்லாம் இன்று ஆங்கிலேயர் கையில் உள்ளன! நாளை......? சிக்கந்தர், நெப்போலியன் போன்ற வாள்வீரர் வென்ற அரசெல்லாம் அவருடன் போயின. அசோகன், கனிஷ்கன், கிருஷ்ணதேவ ராயர், பொற்கைப் பாண்டியன் போன்ற தருமவீரரின் மாண்பையே உலகம் போற்றுகின்றது. செங்கோல் பகல்

போல் ஒளிரும்; கொடுங்கோல் அந்திபோல் அருகும்.

கோநேறி முனேறுங் கொற்ற நெடுஞ்செருக்கு
மீநேறும் கற்போல் விழும். 2

மேலே 'விண்'ணென்று ஏறிச் செல்லும் கல், எவ்வளவு தூரம் சென்றாலும் கீழே விழுந்துதான் தீரும். மறவலிகொண்டு தீமைசெய்யும் அரசனுடைய நீண்ட வெற்றிச் செருக்கும், அவ்வாறே கீழே விழுந்துபடும்.

ஏறிந்த கல் விழும்; ஏறிய செருக்கு இறங்கும். உள்ளமட்டிலும் உத்தமனாயிரு; நமக்குப் பதவி வந்துவிட்டதென்று செருக்குறாதே; நிதானமாக நடந்துகொள்! எல்லையற்ற புவனத்தில் உன் அரசு ஒரு மயிரிழைக்குச் சமானம். உனக்கு மேலுள்ள அகண்ட சக்தியை நினை; உன்னுள் தருமதேவதையாக விளங்கும் மனச்சாட்சியை மதித்து நட! கொடுங்கோல் பிடித்துக் குடிகளை வருத்திக் கடுவரி போட்டுக் கசக்கி வாங்கி, ஆயுதப்படைகொண்டு அச்சமுறுத்தி, செல்வச் செருக்கால் அல்லலிழைத்து, புலவர் மனத்தை புண்படச் செய்து, கள்ளுஞ் சூதும் காம வேட்டையும் கொலை புலை கொள்ளையும் கொடுமையும் பெருக்கி, மக்களை வறுமை மடமை அடிமைக்குழியில் ஆழ்த்தி மமதைகொள் அரசு, மட்டை போல் வீழும்.

நடுக்கி யடக்கிடவே நாளும்போ ராட்டம்:
அடுத்துத் தரவமைதி யாம். 3

படைவலிகொண்டு நடுக்கி, பயமுறுத்தி, மக்களின் பிறப்புரிமையான சுதந்தரத்தை அடக்கினால், நாளெல்லாம் அரசாங்கத்திற்கும் குடிகளுக்கும்

ஓயாது போராட்டம் நடக்கும். மக்கள் குறை முறைகளை நன்குணர்ந்து வறுமை, மடமை அச்சம் ஒழிய, அறிவும், தொழிலும், அன்பும், உரிமையும் அளித்தலே நாட்டில் அமைதி நிலவும் வகையாம். அடக்குமுறையால் குடிகளை ஒடுக்கி நீண்டகாலம் ஆண்ட மன்னர் யாரும் இலர். நடுக்கியாளுவோன் நாட்டை யிழப்பான்.

உரிமை மனிதருடன் பிறந்தது. அதை அடக்குவதால் நாட்டிற் கிளர்ச்சியும், புரட்சியும், சதிக் கூட்டங்களும், போரும், முரணும் நாளும் பெருகும். இதம்பெறுஞ் செங்கோல் இனிதே செய்யும்; கதம் பெறுங் கொடுங்கோல் கலகமே விளைக்கும். நல்ல வேந்தன் குடிகளின் முறைகளை மனங்குளிரக் கேட்டுத் தக்கது செய்வான். அதற்காகவே, நம் பழந் தமிழ் வேந்தர் ஆராய்ச்சிமணி கட்டியிருந்தனர். "நான் உண்ணும்போதேனும், உறங்கும்போதேனும் சரி, குடிகள் தாராளமாகத் தம் குறைகளை முறையிட்டுப் பரிகாரம் கேட்பார்களாக!" என்று அசோகன் கட்டளையிட்டிருந்தான். அதுவன்றோ அருளாட்சி! படுங்காலத்தே கொடுங்கோல் குதிக்கும். சுதந்தர சக்தி தோற்றதே யில்லை. சோர்வதுபோலச் சுதந்தரம் வெல்லும். மாறும் மண்ணாட்சி இன்றிருக்கும்போதே நல்லது செய்க! அரசு முடிந்தது, அசோகர் உள்ளார்! அரசு முடிந்தது, அக்பர் உள்ளார்! அறமும் அன்பும் அச்சமொழிக்கும்; அமைதி பெருக்கும்.

**பாரோத்து வாழான் படைச்செருக்குத் தன்னரசை**
**வேரோடு சாய்த்து விடும். 4**

உலகோர் மனத்தை ஒத்து நடவாது சுயேச்

சாதிகாரம் செலுத்தும் கொடுங்கோலன் படைச் செருக்கே அவனரசின் வேரை அறுத்து வீழ்த்தும் கூரிய கொடிய வாளாகும். ஒத்துப் போனால் ஒற்றுமை ; கத்தி தீட்டினால் கடும்பகைதான். படைச் செருக்குற்ற ஜார் மன்னன் தனது கொடுங்கோலால் தன் அரசையே வேரோடு சாய்த்தான்.

**அச்ச மகந்தையிலா தன்புண்மை யாளரசிற்**
**கெச்சமயத் தாரே யிகல் ? 5**

குடிகளிடம் அச்சங்கொண்டு படைதிரட்டி அகங்காரத்துடன் கொடுங்கோல் செய்யாமல், அன்பும் மனச்சாட்சிக்கு உண்மையும் பூண்ட அரசிற்கு எம்மதத்தினர், எக்கொள்கையினர் பகைவராவர் ? எல்லாரும் நேயரேயாவர்.

அதிகாரச் செருக்கை யொழித்துத் தன்னைப்போலவே மன்னுயிரை மதித்துச் சமநோக்குடன் அன்பும் உண்மையும் கொண்டு அரசாண்டால், உட்கலகம் வந்தாலும், புறப்பகைவரின் இடர்கள் வந்தாலும் நாட்டினர் உதவிபுரிந்து அவற்றை யடக்குவர். உண்மை யிருந்தால் உலகெலாம் உறவாம் ; அன்பு மதமே யார்க்கும் சம்மதம் ; அன்புச் செங்கோல் அறத்தின் தூண்டுகோல். அன்பும் உண்மையும் இருந்தால் எந்தச் சமயத்தவரும், எந்நாட்டவரும் நம்மவரே யாவர். அன்பும் உண்மையுமே, உலகில் அமைதி நிலவும் இரண்டு சக்திகளாம்.

## 7. சட்ட திட்டம்

கட்டுக் கடங்கிக் கடமையினி தோங்கிடவே
சட்ட மியற்றத் தகும்.

பொதுநலத்திற்கான கட்டுப்பாட்டிற்கு அடங்கி அவரவர் கடமைகள் நன்கு நிறைவேறிச் சமுதாயத்தைப் பலவழிகளிலும் முன்னேற்றவே, சட்டம் இயற்றுதல் பொருந்தும்: குடிகளை நலிக்கவன்று; நன்மை பலிக்கவே சட்டம் இயற்றுவது. ஒரு குளத்திற்குக் காவற்காரன்போன்று ஒரு சமுதாயத்திற்கு நியாயமான சட்டம் பயனுகும்.

அதிகாரஞ் சொற்ப மதிகஞ் சுயேச்சை
விதிசிலவா மாட்சி விரும்பு. 2

பொதுஜன நன்மைக்காக இயற்றும் நீதியாட்சியில் மூன்று தன்மைகள் காணப்படவேண்டும்:— (1) அதிகாரம் மட்டா யிருக்கவேண்டும்: அஃதாவது: கண்டபடி அமுல் செலுத்திக் கடுபிடி பண்ணிக் குடிகளைப் பயமுறுத்தாது, சரளமாயிருக்கவேண்டும்; (2) சுயேச்சை அதிகமா யிருக்கவேண்டும்: அவரவர் இயல்பிற் கேற்றபடி சமுதாயத்திற்கு நன்மையான பணியில் ஈடுபடச் சுயேச்சை யிருக்கவேண்டும்; (3) விதிகள் புத்தகம் புத்தகமாகப் பெருகாமல், ஜனங்கள் அறிந்து மதித்து நடக்கும்படி சொற்பமா யிருக்க வேண்டும். 'இதுதான் சட்டம்' என்று எல்லாருக்கும் தெளிவாகத் தெரியவேண்டும். அதற்காகவே, அசோகன் தன் கட்டளைகளை ஜனங்கள் கூடும் பொதுத்தலங்களிலும், வழிப்பாதைகளிலும், தூண்களிலும் எழுதி வைத்தான்.

**வித்தக நல்லோர், விதந்தெரிந்த மேன்மக்கள்**
**ஒத்துழைத்த லென்று முயர்வு.** 3

*கல்வி கேள்விகளிலும் தவ வொழுக்கங்களிலும் சிறந்த நல்லோராகி, 'இன்ன காரியம் இன்ன விதமாகச் செய்யவேண்டும்' என்று நன்கறிந்த சான்றோர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து யோசனை சொல்லுதல், எப்போதும் நாட்டுக்கு உயர்வைத் தரும். ஆட்சித் தலைவர் நாட்டிலுள்ள பெரியார் கூட்டுறவைப் பெற்று அவர்கள் சொல்லை மதித்து நடக்கவேண்டும்.*

**ஐந்த னணியி லவைசேர்த் தறிவன்பர்**
**மந்திரத்தி னாளுமுறை மாண்பு.** 4

*சட்டப்படி நாட்டை முறைவகுத்து ஆளவேண்டும். கிராமம், தாலுக்கா, ஜில்லா, மாகாணம், தேசம்—இவை படிப்படியான பஞ்சாயத்துக்களால் நிர்வகிக்கப்பட வேண்டும்.* ஐந்தின் ஒழுங்கில் *அவைகளுக்குப் பிரதிநிதி சபை யமைக்கவேண்டும். அத்துடன், நல்ல அறிவும் அன்பும் கொண்ட உத்தமரின் மந்திராலோசனைப்படி உலகை யாளுதல் மேன்மையானது.*

*கல்வி, தொழில், சுகாதாரம், நாட்டுக்காவல், அறவளர்ச்சி—இவற்றிற்கு ஐந்து நிர்வாகிகள் வேண்டும்; இவரே பஞ்சாயத்தார்; ஒரு கிராமத்தில் உள்ளவர் தமது பஞ்சாயத்தைத் தேர்ந்து கொள்ள வேண்டும். ஒரு தாலுக்காவில் உள்ள* கிராமப் பஞ்சாயத்தா*ரெல்லாம் கூடித்* தாலுக்காப் பஞ்சாயத்தைத் *தேர்ந்தெடுக்கவேண்டும்.* தாலுக்காப் பஞ்சாயத்தார் *கூடி* ஜில்லாப் பஞ்சாயத்தாரைத் *தேர்ந்தெடுக்கவேண்டும். ஜில்லாப்*

பஞ்சாயத்தார் கூடி மாகாணப் பஞ்சாயத்தாரைத் தேர்ந்தெடுப்பர். மாகாணங்கள் மொழிப்படி யமையும். தமிழ் மாகாணத்தில் 10 ஜில்லாக்கள் இருந்தால், மாகாணச் சபையில் அதற்காக 50 பிரதிநிதிகள் இருப்பர்; மாகாணச் சபைகளினின்று ஐந்தைந்து பேர் தேர்ந்தெடுக்கப் பெற்று நாட்டை நிர்வகிக்கும் பாராள் சபையை அமைப்பர். பாராள் சபை ஐந்து நாட்டமைச்சரைத் தேர்ந்தெடுக்கும். ஒவ்வொருவரும் தத்தமது இலாகாவிற்கு வேண்டிய தொண்டருடன் பொதுநலம் புரிவர். இந்த ஐவரில் ஒருவர் நாட்டுத் தலைவரா யிருக்கலாம். இதுதான், ஐந்தன் அணி ஆகும். இதனால், கிராமப் பஞ்சாயத்துமுதல் நாட்டுத் தலைவர் வரை ஒவ்வோர் அங்கத்தினரும் பொதுஜன சம்மதம் பெற்றவரா யிருப்பர். ஒவ்வொரு பிரஜையும் இதனால் வாக்குரிமை பெறுகிறார். நாட்டாட்சியில் ஒவ்வொருவரும் பங்கு பெறுகிறார். ஆட்சிமுறை கிராமத்தில் வேரூன்றிக் கிராமப் பஞ்சாயத்தினின்றே விரிந்து பரவுகிறது. தாம் அறிந்த நம்பிக்கையான பெரியாரையே பொது ஜனங்கள் எளிதாகத் தேர்ந்தெடுப்பதால், இப்போது உலகில் நடக்கும் அநியாயமான தேர்தல் செலவுகளும், கலகங்களும், கட்சிப் பிரிவினைகளும், அவற்றால் நாட்டின் ஒற்றுமைக்கு உண்டாகும் தீமையும் விலகும்.

**அறவோர், தொழிற்புலவர், அஞ்சாத வீரர்,**
**அறிவாளர் நாட்டிற் கணி.** 5

தாமும் சுத்தசன்மார்க்க சித்திபெற்று, மாந்தரிடையே சுத்த முக்த, சமத்துவ தருமத்தைப் பரப்பும் அறவோர் திருக்கூட்டமும், சமுதாய வாழ்விற்கு இன்றியமையாத தொழில்களைச் செய்து நாட்டின்

பொருளாதாரத்தைப் பெருக்கும் தொழிலாளரும், பகைவரிடமிருந்து நாட்டைக் காக்கும் அஞ்சாத வீரர்களும், கல்வி, கேள்வி, கலை, தத்துவம்—இவற்றிற் சிறந்த அறிவாளிகளும் ஒரு நாட்டிற்கு அணியாவர்.

முற்காலத்தில் பாரத ஜன சமுதாயம் நான்கு வர்ணப் பிரிவுகளுடன் நடந்தது. சாதி சமயப் பிரிவினைகள் கால வெள்ளத்திற் கரைந்து வருகின்றன. எங்கும் ‘சமரஸம், சமதர்மம்’ என்ற முழக்கமே கேட்கிறோம். இப்போது சாதிமுறையால் நாட்டைப் பிரிக்கும் எந்த இயக்கமும் பயனாகாது. பழைய சாதிப் பாகுபாடு இனித் திரும்பாது. இனி, ஒவ்வொருவனும் அந்தண்மையும், வீரமும், தொழில் முயற்சியும், தொண்டும் பூண்டிருப்பான். அறவோர், தொழிலாளர், வீரர், அறிவாளர் எல்லாரும் நாட்டுத் தொண்டரே யாவர்.

## 8. நாட்டன்பு

வீடுகளி னீட்டம் விரிநாடா மாதலினால்,
வீடென்றே நாட்டை விரும்பு. 1

பல மனைகளின் கூட்டமே விரிவான நாடாகும். ஆதலால், நாட்டையும் உனது பெரிய வீடாக நேசித்துப் பணிசெய்!

வீட்டுவரிசை தெருவாகி, தெரு ஊராகி, ஊர்களின் கூட்டம் நாடாகிறது. நாட்டின் நன்மை இல்லறத்தில் வேரூன்றிப் பரவுகிறது. ஒவ்வொரு வீடும் சிறிய நாடே! ஆதலால், இல்லறத்தை முறையாகப் பேணுவோன் நாட்டிற்குத் தொண்டு செய்

தவனுகிருன். நாட்டிற்குத்தொண்டு செய்வோன் வீட்டிற்கு நன்மை செய்தவனுகிருன். வீடு சோர்ந்தால் நாடும் சோரும்; நாடு சோர்ந்தால் வீடும் சோரும். வீட்டு நலத்தை நாட்டு நலமாகச் செய்; நாட்டு நலத்தை வீட்டு நலமாகச் செய்! வீட்டாட்சி நாட்டாட்சியின் வித்து.

**வளமறிவு வீரம், வளரிசையு மாந்தர்**
**உளமகிழ்வு மோங்கியது நாடு.** 2

பயிர்வளம், பொருள்வளம், கலைவளம், தன்னறிவு, கற்றறிவு. ஆன்ம வீரம், ஆற்றல், இவற்ருல் வளரும் புகழும், மக்களின் மனமகிழ்வும் ஓங்கியதே நல்ல நாடாகும்.

நாட்டில் ஆணும் பெண்ணும் பூரணமான வளர்ச்சி பெறவேண்டும். இருவரும் நாட்டிற்குப் பணிசெய்யும் நான்கு கைகளாக விளங்கவேண்டும். நாட்டிலுள்ள மக்களைக் கண்டாலே பிறநாட்டாருக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்படவேண்டும்; பகைவர் மனம் திடுக்கிடவேண்டும்; அப்படிப்பட்ட அதிமனிதரை (Supermen) நாட்டில் உண்டாக்க வேண்டும்; சிவாஜியும், இராமதாஸரும், அசோகனும், அர்ச்சுனனும் சேர்ந்து பிறக்கவேண்டும். அரைப்பட்டினிப் பட்டாளமும், கஞ்சிப் படிப்புப் படித்து வேலையில்லாது திண்டாடும் பரிதாப வாலிபரும், 'இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன? இந்த உலகம் அநித்தியந்தானே!' என்று காலங் கடத்தும் போலித்துறவும் நாட்டிற்கு வேண்டா. நாட்டின் மைந்தர் தமது சுதேசத்தை உலகின்முன் பெருமைபெறச் செய்யவேண்டும். அதற்கு நாட்டில் அறிவும், தொழிலும், வளமையும், வாணிப

மும், ஆத்மஞானமும், தரும வீரமும் பொலியச் செய்யவேண்டும். நாட்டை ஆளுவோர் குறையறிந்து நீக்கி, மக்கள் மனமகிழச் செய்யவேண்டும். அதனால் நாட்டில் ஒற்றுமை வளரும்.

**நாந்திருந்தி மேலோங்க நாடுந் திருவோங்கும்;**
**தாந்தாந் திருந்தற் றலை.** 3

ஒவ்வொருவரும் தத்தமது குறைகளை ஆராய்ந்து திருத்திக்கொண்டு பூரணம் பெற்றால் நாடும் திருவோங்கித் தழைக்கும். வெளிப்படையாகக் கிளம்பிச் சீர்திருத்தங்கள் செய்யுமுன் ஒவ்வொருவரும் தம்மைத்தாமே திருத்திக்கொள்ளல் முதன்மையானது.

திருந்தித் திருத்து! தம்மிடம் குறையிருக்கப் பிறரைத் திருத்தப்புகுதல், மனைவி மக்கள் பசித்திருக்க மகேசுர பூஜை செய்வதாகும். நாம் நல்வாழ்வு வாழ்ந்தால், அது நாட்டிற்கெல்லாம் நன்மையாம். பூரணமான ஆண்களையும் பெண்களையும் கல்விப் பருவத்திலேயே சிருட்டிக்க வேண்டும். உலகின்முன் நாட்டை உயர்த்தும் மைந்தர் வேண்டும். அற்புத வீரர், அருளறிவாளர், அருங்கலைப் புலவர், பெருந் தொழிலாளர், அறவோர், சுத்தான்மசித்தர்—இவராலேதான் ஒரு நாட்டிற்குப் புகழாகும். நாட்டிலுள்ள மகான்களை வணக்கத்துடன் போற்ற வேண்டும். விவேகானந்தர், இராமதீர்த்தர், பரமஹம்ஸர், மஹரிஷிகள், அரவிந்தர், மஹாத்மா போன்ற மகான்களைக் கண்டுதான் நமது நாட்டை உலகம் வணக்கமுடன் மதிக்கிறது. கம்பர், வள்ளுவர், ஹோமர், ஷேக்ஸ்பியர், வியாசர், சங்கரர், வாஷிங்டன், பூாந்தார்க், மஜினி, அகுஸ்தன், அசோகன், சிவாஜி போன்ற பெரியாரை நாட்டில் உண்

டாக்கவேண்டும். அதற்கு, ஒவ்வொருவனும் தன் குறைகளைத் திருத்திக்கொண்டு ஒவ்வொரு நாளும் பெரியானாக வளர்ந்து பூரணம் பெறவேண்டும். நாடென்பது நாட்டுப் பெரியாரே.

**அன்னையன் புக்கனலை யாவிதொறு மூட்டிடுவோம்;**
**பின்னை திருளச்சப் பேய்? 4**

உலக வடிவான சக்தியன்னையின் அன்புக்கனலை ஒவ்வோர் உயிர் விளக்கிலும் பொருத்தி, வாழ்வை அவள் அருட்சுடராகப் பொலியச் செய்வோம். பிறகு மடமையிருளும் அச்சப் பேயும் ஏது? இரண்டும் அந்தச் சுடர்முன் இல்லாதோடும். தாயன் போங்குக! தாயன்பினால் உள்ளன் போங்கும்; ஒற்றுமையுண்டாம்; தியாகத் திறமை பெருகும்; அருளொளி துலங்கும்; மங்கல வாழ் வெய்தும்; வீரம் பெருகும்; வெற்றி யோங்கும். நாட்டை ஒவ்வொருவரும் தாயெனக் கருதுக! தேசாவேசம் ஒவ்வொருவர் உயிரிலும் கனல்க!

**எந்தா யருட்பணிசெய் யின்பத்தி னின்பமிலை;**
**இந்திர போகமெமக் கெள். 5**

எமது தாயாகிய உலகன்னையின் அருட்பணிகளைச் செய்யும் இன்பத்தினும் வேறு இன்பமில்லை; அந்த இன்பமே யின்பம்! 'இந்திரபோகங்கள் தருகிறோம்; தாயை மறந்து விடும்' என்று யாரேனும் சொன்னால், 'உம் இந்திர போகங்களெல்லாம் எமக்கு எள்ளளவேயாம்! எமது அன்னையின் அருட்பணியே சுவர்க்கபோகத்தினும் எமக்குப் பேரின்பமாகும்' என்க!

பாரததேசமே உலகிற்கு வழிகாட்டும் அருட் சோதிக் கோயில்; பாரத நாட்டின் சுத்தான்ம சக்தியின்மேல் புதிய பூரணவாழ்வை விளக்க வேண் டும். பாரதநாடு உலகனைத்தின் இன்பத்திற்காகவே வாழுகிறது. நாம் பாரத சக்திக்காகவே வாழ்வோம்.

---

## 9. மக்கள் கடமை

ஆற்றப் பொறுத்துநல் லன்போ டறங்காத்தல்
மாற்றுனை மாற்று மருந்து. 1

ஒரு நாடு மாண்புற வேண்டுமானால் நாட்டி லுள்ள ஒவ்வோர் ஆணும் பெண்ணும் மூன்று நற் குணங்களை வளர்க்கவேண்டும்: அவை, (1) பொறுமை, (2) அன்பு, (3) அறவாழ்வு ஆம். பொறுமை கொண்டு, அன்போங்கி, அறங் காக்கும் பெருமையே, எத்தகைய பகைவரையும் மாற்றி நண்பராக்கும் மருந்தாகும். உட்பகை புறப்பகை இரண்டையும் இந்த மூன்றால் வெல்லலாம்.

உலகிலுன் னாட்டை யுயர்த்துகமெய் வீரப்
புலவர் புகழோங்க வே. 2

சுதேசத்திற் பிறந்தொளிரும் சத்திய தரும வீரர் புகழோங்க உனது நாட்டை உலகின்முன் பெருமை பெற்று உயரச் செய்வாயாக! அறிவு, கலை, தவம், ஆற்றல்களாற் சிறந்த வீரரை உலகிற்கு விளக்க வேண்டும்; அதனால் நாட்டின் புகழ் ஓங் கும்.

நாட்டிற் பிறந்த பெரியாரை இருக்குமட்டும் மதியாது மனங்குன்றச் செய்து, அவர் இறந்த பிறகு

கொண்டாடுவது பொருத்தமாகாது. 'நமது நாட்டில் எங்கே பெரியார் இருக்கிறார்கள்?'' என்று தேடிச் சென்று, அவர் பெருமை உலகில் விளங்கச் செய்ய வேண்டும்! நாட்டிற்குச் சிறுமை வரும்படி யாரும் நடக்கக் கூடாது.

**நல்லொழுக்கம் பற்றி நடந்து நடந்துநீதம்**
**பொல்லது போகப் புரி. 3**

தினந்தோறும் நடையியலிற் சொன்ன நல்லொழுக்கத்தைப் பின்பற்றி நடந்து, உன் குற்றங் குறைகளை நீங்கச் செய்வாயாக! தான் மாசற்றுப் பூரணமெய்தல், தன்னவரைப் பூரணப்படுத்தல்—இரண்டும் நாட்டிலுள்ள மாந்தர் கடமையாகும்.

**பணிந்து நடக்கை பயனீயும்; வீரர்**
**துணிந்து நடக்கையினைப் போல். 4**

போர்க் களத்தில் வீரர் மனந் துணிந்து எதற்கும் அஞ்சாது வாள்வீசி நடப்பர். அதற்கு எதிரிடையாக உலக வாழ்க்கையில் நல்லோர் பெரியோருக்குப் பணிந்து நடக்கவேண்டும். அதனாற் பல பயன்கள் உண்டாகும். அகங்காரமான நடத்தை பகைவரை யுண்டாக்கும்; அன்பும் பணிவுங்கொண்டு நடத்தல் நேயமுண்டாக்கும்: " பணியுமாம் என்றும் பெருமை "—திருக்குறள்.

**வெற்றிபெற வாழ்தலும், வீட்டுநலந் தாங்குதலுங்**
**கற்றறிந்த மக்கள் கடன். 5**

கற்றறிந்த நன்மக்கள் கடமைகள் இரண்டு: அவை, (1) உலகில் வெற்றிபெற வாழுதல், (2) எல்லா நன்மைகளும் ஓங்க இல்லறந் தாங்குதல்.

இல்லறவாழ்வே சமுதாயத்தின் ஆணிவேர். அன்பாலும், அறத்தாலும், சதிபதிகளின் ஒற்றுமையாலும், நன்மக்கட் பேற்றாலும் இல்லறத்தை வளம்பெறச் செய்யவேண்டும். அத்துடன் நாட்டிற்குத் தாம் செய்யத் தகும் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி வாழ்வில் தாம்கொண்ட பெரிய ஆதர்சங்களை வெற்றி பெற நிறைவேற்றவேண்டும்.

## 10. ஒற்றுமை

ஒற்றுமையே பேராற்றல் ; ஒற்றுமையே வாழ்வின்பம்
ஒற்றுமையே வெற்றிக் குயிர். 1

ஒரு நாட்டின் அல்லது வீட்டின் பெரிய ஆற்றல் ஒற்றுமையே. ஒற்றுமையே வாழ்விற்கு இன்பமாகும். ஒற்றுமையில்லாத வாழ்வு துன்பமாகும். ஒற்றுமையே எல்லா வெற்றிக்கும் உயிராகும்.

ஒரு நாட்டின் பெருமை அதிலுள்ள மக்களின் ஒற்றுமையால் விளங்கும். புலன்கள் மனத்திற் பொருந்தி, மனம் புத்தியிற் பொருந்தி, புத்தி உள்ளத்திற் பொருந்தி, உள்ளம் சுத்தான்மாவிற் பொருந்தி ஒன்றுபட்டால் பேரின்பமுண்டாகும். ஆணும் பெண்ணும் நிறைமுறையான காதலால் ஒன்றுபட்டு வாழ்ந்தால், இல்லறத்தில் இன்பமுண்டாகும். சாதி மத பேதங்களைப் பாராட்டாமல், 'எல்லாரும் தேசமாதாவின் பிள்ளைகள்' என்னும் உணர்வால் ஒன்றுபட்டால், தேசவாழ்க்கை இன்புறும். 'எல்லாரும் ஆத்ம சமானர்கள் ; ஒரு சுத்தான்மாவே பல உடல்களைப் போர்த்து உலாவுகிறது' என்ற உணர்ச்சி

யுடன் நாடு நிற மத பேதங்களை மறந்து, மனித சமுதாயம் ஒன்றுபட்டால் உலக வாழ்க்கை இன்புறும்; சண்டைகள் ஒழியும். இத்தகைய ஒற்றுமைதான் உண்மையான பலமாகும்; அதுவே வாழ்வின்பம். நாம் தொடங்கும் காரியசித்தி யெல்லாம் ஒற்றுமை யாலே வரும்.

**உள்ளொன்றி னாலே யுலகொன்று மாதலினால்,**
**உள்ளத்தி லொற்றுமையை யூன்று.** 2

உள்ளம் அன்பினால் ஒன்றுபடவேண்டும். அப்போதே உலகில் ஒற்றுமையேற்படும். ஆதலால் ஒற்றுமையை முதலில் உள்ளத்தில் ஊன்றுக!

'ஒற்றுமை' யென்பது உள்ளத்தில் வேரூன்றி உலகளாவ விரிவது. 'இயற்கை யுடலே பலவேறாகத் தோன்றுவது; அதனில், உயிர்க்குயிராயிருக்கும் சுத்தான்மா ஒன்றே' என்னும் உணர்ச்சியே, ஒற்றுமைக்கு அடிப்படையாகும்.

சுத்தான்ம சித்திபெற்றால், 'தானே பிறர் பிறரே, தான்' ஆகும். சுத்தான்ம சித்தருக்கு அன்பும் சமரஸமும் இயல்பான தன்மைகளாம். பசுக்கள் பல நிறம், பால் ஒரே நிறம்: உடல்கள் பல; உள்ளுயிர் ஒன்றே. அந்த ஒருமயப் பொருளில் மனம் லயித்தால் தான் ஒற்றுமை இயலும்; புறச் சீர்திருத்தங்களால் மட்டும் ஒற்றுமை முழுதும் இயலாது, உள்ளம் ஒன்றுபட வேண்டும்.

**பார்த்தால் மனத்தாற் பலவாகும்; சுத்தான்மா**
**போர்த்தா டியற்கைப் புவி.** 3

ஒரு சுத்தான்மாவே பல பெயர் வடிவங்களைப் போர்த்து, இயற்கையுலகாய் விளங்குகிறது. அதைப்

புற விழிகளாற் பார்த்தால் பலவாகத் தோன்றும்; உள்விழியால் பார்த்தால் ஒன்றே தோன்றும்.

உலகெல்லாம் இறை - இயற்கை 'விளையாட்டு! இறைவன் சாட்சியா யிருந்து அனைத்தையுந் தாங்கு கிறான்; விளையாட்டுவிக்கிறான்; ஆடலின் பயனை நுகர் கின்றான். இயற்கை ஆடுகிறது; பலவாக விரிந்து பரவுகிறது. இயற்கை பலவகையாகத்தானிருக்கும். விரலுக்கு விரல் வேற்றுமை; எல்லாம் கையில் ஒற்றுமை. விரல்கள் சேர்ந்தே வேலை செய்கின்றன, இயற்கையின் முக்குண வேறுபாடுகள் கோடி கோடி வகையேனும், அனைத்திற்கும் உறையுளான ஆன்மாவில் ஊன்றி இயற்கையுலகில் வாழவேண்டும். உலகில் ஒன்றைப்போல் ஒன்றிராது. ஒரே சட்டை, ஒரே யுணவு, ஒரே படுக்கை யிருந்தாலும், மனத்தில் வேறுபாடுகள் தோன்றும்; வேற்றுமைக் குக் காரணம் மனமே. பன்மையாகக் காண்ப தெல்லாம் மனப் பான்மையேயாகும். இயற்கை யுலகின் பன்மையில் மயங்காது, இயற்கையைப் போர்த்துக்கொண்டு பலவாக உலவும் சுத்தான்ம வுணர்வுடன் வாழலே ஒற்றுமைக்கு அடிப்படை யாகும்.

**மானிடர் தெய்வத் திருக்கூட்ட வாழ்வடைவர்,**
**ஆன்மவொருப் பாட்டுரிமை யால்.** 4

அனைத்திலும் தானாக, ஒன்றாக வீற்றிருக்கும் சுத்தான்மாவில் ஒன்றுபட்டு, மானிடரெல்லாம் தெய்வத்திருக்கூட்டமாக வாழ்க! அழியும் உடலில் அழியாப்பொருள் ஒன்றுள்ளது; அது, தெய்வப் பொருள். அப்பொருளைத் தம்முள் அறிந்தோர் தெய்வத் தன்மை பெறுவர். உலகின் சுகதுக்கங்

களால் அவர் மனம் விகாரப்படாது. ஏனெனில், அஃது எப்போதும் நிர்விகாரமான ஒன்றிலேயே கலந்திருக்கும். இந்த உள்ளுணர்வாலேதான் உலகில் உண்மையான அன்பும், நேயமும், ஒற்றுமையும் உண்டாகும். தெய்வவுணர்வுடன் அனைவரும் ஒன்றி வாழ்ந்தால், மனிதஜாதி தெய்வ ஜாதியாகும். சாதிமத வேறுபாடுகளின்றி ஒவ்வொருவருள்ளும் விளங்கும் சுத்தான்மாவில் ஒன்றிவாழுவே, ஆன்மநேய வொருமைப் பாட்டுரிமை; அதுவே, அருட்பாவின் உள்ளமாம்.

**மாசற்ற வுள்ளமெலாம் வாசமல ராகுகவே**
**ஈசன் றிருவடியி லே !** 5

ஆசையாணவமாயமில்லாத பரிசுத்தமான உள்ளங்களெல்லாம், உயிர்க்குயிராய் எங்கும் விளங்கும் உலகநாதனை இறைவன் திருவடியை அலங்கரிக்கும் வாசனையுள்ள நாண்மலர்களாகுக !

இறைவன் உயிர்மேனியான், விசுவேசுவரன். பஞ்சபூதங்களும் கதிரும் மதியும் உயிர்களும் அவனது அட்ட மூர்த்தங்களாம். ஆகாயத்திற் காற்று அடங்குவது போலப் பரமாகாசனை அருளிறைவனில் உயிர்களெல்லாம் அடங்கும் ; அவனருளே அனைத்திற்கும் வேர் ; வேரை யறிந்தால் வேற்றுமையில்லை. அவனருளடியில் உலகமாந்தர் உள்ளமெல்லாம் அன்பு மாலையாக நிலவுக ! அதுவே, இல்லறம், குலம் வளர்த்தல், தொழிலாற்றல், அரசியல் நடாத்தல்—இவற்றின் நோக்கமும் பயனும் ஆகும் ; அதுவே வாழ்வை யோகமாக்கும் வகையாம்.

பத்தாவது, அருளரசியல் முற்றிற்று.

## கக. யோக வியல்

உள்விழித் தெழு, மனிதா! சித்தத்தை யலையாது நிறுத்து; புறந்திரியும் மனத்தை உள்ளே யிழுத் தடக்கு! உனது சொரூபத்தைக் காண்: நீ நடமாடுங் கோயில்; உன் உள்ளத்தில் கடவுள் உள்ளது; அதுவே உண்மையான நீ. தனது தெய்வத் தன்மையை அறியாதவன், தற்கொலை புரிந்துகொள்பவனாகிறான். பரிபூரணம் பெறுவதே வாழ்வின் நோக்கமாகும். பூரணப் பொருள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உள்ளது; அதை உள்ளத்திற் கலந்து, அதன் சக்தியால் வாழ்வைப் பூரணமாக்குவதே யோகம். "தவசியினும், கர்மியினும், ஞானியினும் யோகியே உயர்ந்தவன். எக்காலமும் என்னுடன் கலந்து யோகயுக்தனா யிரு!" என்பது கண்ணன் மொழி. 'யோக' மென்றால் வாழ்வையும் உலகையும் வெறுத்தோடும் வறட்டுத் துறவன்று; உண்மைப் பொருளை உள்ளும் புறமும் பொருந்தி, அன்பும், அருளும், அமைதியும், அழகும், இன்பமும் கூடிய பூரணவாழ்வு வாழ்வதே யோகம். உலகிற்கு மகத்தான தெய்வப்பணி புரிந்த கண்ணன், புத்தன், ஏசுகிறிஸ்து, முகம்மதுநபி, சங்கரர், நம்மாழ்வார், அப்பர், ஔவை, வியாசர், வால்மீகி, சைதன்யர், நானகர், பரமஹம்ஸர், விவேகானந்தர், அருட்சோதி வள்ளலார் போன்ற மகான்கள் அனைவரும் யோகிகளே ஆவர். உலகநாகரிகம் யோகிகளின் உள்ளத்தினின்றே அறவடிவாகப் போந்தது. யோகமின்றிக் கலையில்லை; சாத்திர மில்லை; கவிதையில்லை; இன்ப

மில்லை. வானும் மண்ணும் கூடிப்புரியும் யோகத்தின் பயனே பயிர்களாகும்; கதிரும் கடலும் புரியும் யோகத்தின் பயனே கார். கடவுளுக்கும் மனிதனுக்கும் நடுவே இருப்பது மனம்; மனம் வேறுபட்டுப் புறத்தே திரிந்து பிரிந்து நின்றால், மனிதன் இயற்கையின் ராஜஸ தாமஸகுணங்களிற் கட்டுண்டு துன்பப்படுகிறான். மனம் உள்ளொடுங்கிச் சுத்தான்மாவில், லயித்தால் மனிதன் தேவனாகி, இன்பமெய்துகிறான். இவ்வாறு, மனம் நம்முள் உள்ள தெய்வப் பொருளுடன் ஒன்றுபடுவதே யோகம்; மனதை வென்று இவ்வாறு தெய்வப் பொருளுடன் ஒன்றுவிக்க, நமது பாரதநாட்டு மகான்கள் பல யோகமுறைகளைக் கண்டனர்; அவற்றுள் முதன்மையானவற்றை அறிவாம்:—(1) ஆஸனங்கள், பிராணயாமம், முத்திரைகள், வயிற்றையும் குடலையும் மூக்கையும் சுத்திசெய்யும் கிரியைகள்—இவற்றால் உடலையும் நரம்புகளையும் உறுதியாக்கிப் பலமும், வனப்பும், ஆயுளும், இளமையுந் தருவது **ஹடயோகம்**; (2) இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், ப்ரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி ஆகிய எண் பயிற்சிகளால், சித்தவுறுதி பெற்று, மனத்தை ஆன்மாவில் லயிக்கச்செய்து, அந்த இன்பத்தில் நிலைத்தலே **ராஜயோகம்**; (3) தானை புருஷன் இயற்கையினின்று பிரிந்து கேவலம் சாட்சியாயிருத்தலே **சாங்கியயோகம்**; (4) தாரணை, தியானம், சமாதி ஆகிய மூன்றாலும் மனதை ஆன்மாவில் ஆழ்த்தி, ஆத்மசக்தியால் பல சித்திகளைப் பெறுவது **ஸம்யமயோகத்** தாற் கைகூடும்; (5) நாஹம் (நான் உலகன்று, உடலன்று, மனமன்று), கோஹம் (பின்னே, நானார்?)

ஸோஹம் (நான் அவன், ஆன்மா) என்று ஞான விசாரஞ் செய்து, தனக்கு அந்நியமானதை 'அல்ல' வென்றொதுக்கித் தானு யிருத்தலே ஞான யோகம்; (6) தந்தை, தாய், தனயன், துணைவன், நண்பன், ஆண்டான், காதலன் முதலிய உறவுகளில் ஏதாயினும் ஓர் உறவு கொண்டு இறைவனை அன்பு செய்து, உள்ளுருகி, அவனருகடைந்து, அவனுரு வடைந்து அவன் காட்சி பெற்று அவனுடன் கலத்தலே பக்தி யோகம்; "அன்பி னுள்ளாகி யமரும் அரும் பொருள்" என்றார் திருமூலர்; (7) சுக துக்கங் களைச் சமமாகக் கருதி, பலனில் பற்றற்று, சரண் புகுந்து, இறைவனுக்கே வழிபாடாக அறவினை செய்தலே கர்மயோகம்; (8) ஏதாயினும் ஒரு திவ்ய நாமத்தை மனங் குவிந்து ஜபித்து, அந்த நாமத்தைக் கொண்ட மூர்த்தியில் சித்தம் ஊன்றல் மந்திரயோகமா கும்; (9) குண்டலிக் கனலை ஆதாரங்களின் வழியே மேலேற்றி, ஸஹஸ்ராரத்திலுள்ள புருஷனுடன் ஒன்றுவித்து, அந்த ஐக்கியானுபவத்தால் இயற் கையை வென்று இன்பமே தானாயிருத்தல் தாந்திர யோகம்; (10) எளிதான ஆஸனம், தீவிரமான பக்தி, வினை வழிபாடு, ஈசுவர சரணாகதி, மௌனம், தியா னம் இவற்றால் அருளுடன் கலந்து வாழ்வதே பிரபத்தி யோகமாம்; (11) இந்த யோகங்களிலெல்லாம் முதன் மையான பயிற்சிகளை ஒன்றுகூட்டி, ஆண்பெண் அடங்கலும், உடலுறுதியும், மனவுறுதியும், சுத் தான்ம சித்தியும், ஜீவன் முக்தியும், தெய்விக வாழ் வும், ஆத்மானந்தமும் எய்தும் சாதனத்தைக் கொண் டது சுத்தயோகம், அல்லது சுத்தசக்தியோகமாம். இந்த யோகப்பயனை மனித சமுதாயம் முழுதும் இல்லறத்

திலிருந்தே பெறலாம். சுத்தாத்ம யோகசாத னத்தை இந்த யோக வியல்விளக்கும்.

## 1. யோக சக்தி

**பூரணத்தை யுட்புறமும் பூரணமா யொன்றிவளர் ;**
**பூரணமே யோகப் பொருள்.** 1

ஒரு பூரணப்பொருள் உள்ளது : அதுவே சுத்தப் பிரமம் ; அதுவே கடவுள் ; பரமபிதா, அல்லா, யகோவா என்று பலவாக வணங்கப் பெறும் பரம் பொருள். அஃது ஒவ்வொருவர் உள்ளத்திலும் சுத் தான்மாவாக விளங்குகின்றது. உலகெங்கும் அஃது அகண்டாத்மாவாக நிறைந்துள்ளது. அந்தப் பூரணப் பொருளை உள்ளத்திலும் உலகத்திலும் பூரணமாகக் கலந்து, அதனுடன் ஒன்றுபட்டு, அதன் இன்பத் தில் வளரும் பூரணவாழ்வே யோகத்தின் பொரு ளாகும். ஆத்மசித்தி பெற்று, ஆத்ம சக்தியால் இயற்கையை வென்று, மனதை யடக்கி யாண்டு, சுகதுக்கங்களை வென்று, சுத்த சுதந்தர சமத்வ நிலை பெற்று, வாழ்வின் ஒவ்வொரு நுட்பத்தையும் பூரண மாக்குவதே யோகப்பயிற்சியாம். ஒரு மின்சார விளக்கிற்கு மின்சக்தி மட்டும் பூரணமாயிருந்தாற் போதாது ; அந்த மின்சாரத்தைக் கொண்டு வரும் கம்பி, பொருத்தி (ஸ்விட்ச்), குமிழ் (பல்பு), அதைத் தாங்கும் உறுப்புக்கள் எல்லாம் பூரணமாயிருந் தாலே விளக்கெரியும். உயிர்மட்டும் இருந்தாற் போதாது. அந்தக்கரணமும் உடலும் உறு தியாயிருந்தாலே ஜீவன் வாழமுடியும். அதுபோல, யோகத்திற்குத் தன்னாட்சி, அல்லது ஆத்ம சித்தி மட்டும்

போதாது; உலகாட்சியும் வேண்டும்; இறைவனைக் கலந்து இயற்கையை வென்று வாழவேண்டும். பூரணப் பொருளைக்கொண்டு வாழ்வையும் பூரணப் படுத்துவதே சுத்தான்ம யோகமாகும்.

சக்திக் கதிராற் சகமொளிர வாழ்ந்திடலே
சுத்தான்ம சித்தியெனச் சொல். 2

ஆகுமின்னல், ஏகுமின்னல் ஆகிய இரண்டும் சேர்ந்து மின்சார சக்தியுண்டாகிறது. அதுபோல, மனமாசகன்று ஜீவாத்மா பரமாத்மாவைக் கூடிக் கலக்கும்போது தெய்வசக்தி மின்சாரம் உண்டாகிறது; தூலமான மின்சாரத்தைப் போலவே அந்தச் சூக்கும மின்சாரத்தின் விறுவிறுப்பையும் உணரலாம்; யோகிகள் எப்போதும் அதை வெதுவெதுப்பான நீரோடை போன்றும், எறும்பூர்வது போன்றும் நரம்புகளிலெல்லாம் உணர்வர். அந்தச் சக்தியைக் குண்டலினி, பிரம்மாகார விருத்தி, சத்தி நிபாதம், தாரை என்று பலவாகச் சொல்லுவர். கதிரினின்று வெப்பம் பரவுவதுபோலவே, அந்தச் சக்தியினின்று தெய்வத்தன்மை சுற்றிலும் பரவும். யோகிகளுக்குத் தம் பார்வையாலும், பரிசத்தாலும், உள்ளுறவாலும், அந்தச் சக்தியைப் பக்குவமான அன்பருள்ளே பாய்ச்ச முடியும்; அத்தகைய சக்திக் கதிரைச் சுற்றிலும் வீசி, உலகெல்லாம் தெய்வ வொளி விளங்க வாழ்வதே, 'சுத்தான்ம யோக சித்தி' யாகும். தான்மட்டும் சித்தி பெற்றுறு பயனில்லை. தன்னைச் சுற்றியுள்ள மாந்தருக்கும் யோக சக்தியைப் பரப்பி, அவருள்ளிருக்கும் சுத்தான்மக் கனலைத் தூண்டி, அவர்களையும் கடவுட்கலப்புடன்

பூரணராக வாழச் செய்யவேண்டும். அதுவே, சுத்தான்ம பூரண சித்தியாகும்.

**சக்தியே முக்திபரா சக்தியே யின்பமருட்**
**சக்தியே சித்தியெனச் சாற்று.** 3

யோகத்தை இயலுவிப்பது சக்தியேயாகும். அஃது எழுந்து மேலே சென்று உச்சியில் கூடிய பிறகே தியானம் நிலைக்கும்; ஆத்மசுகம் பிறக்கும். அந்தச்சக்தியினாலேதான் மனம் ஆசையாணவ மாயங்களினின்று விடுபட்டுச் சுத்த முக்தி யடைவது. மூலாதாரத்தினின்றெழுந்து மேலே ஸஹஸ்ராரத்திற் பொருந்தி, மகா குண்டலினி அல்லது சிவசக்தியாக விளங்கும் பராசக்தியே, பிரம்ம சக்தியே, யோகிக்குப் பேரின்ப மளிக்க வல்லது. இந்தச் சக்தியே இறைவனருளாகும். இதையே அருட்சோதி, சிற்சக்தி, சின்மயம், சிற்பிரகாசம் என்பர். இந்த அருட்சக்தி பெறுதலே யோகசித்தியாம். யோகிகள் முன்னே யமர்ந்தால் மனங் குவியும்; புதிய உணர்வு பிறக்கும்; ஒரு சூக்குமக் கனல் உடலை ஊடுருவி மனத்தைப் பற்றி உள்முகப் படுத்தும்; வெளி நினைப்பு மறக்கும். பலநாட்கள் யோகிகளின் சந்நிதியிற் பயில்வோருள்ளே, அந்த யோகசக்திக் கனல் விழித்தெழுந்து தியானத்தை உண்டாக்கும். பாலும் வெண்மையும், கடலும் நீரும், கதிரும் ஒளியும், தீயும் சூடும்போலப் பரமனும் - சக்தியும் ஒன்று. நிர்க்குணத்தின் சகுணமே சக்தி: அமர்ந்த பிரமன் சுத்தம், ஆடும் பிரமன் சக்தி: சுத்தன் இறைவன், தலைவன், பற்றற்ற சாட்சி, உள்ளபடி யுள்ளவன்; அவனது அருட்கதிரான சக்தியே ஐந்தொழில்களையும் ஆடலாகப் புரிவது. உலகம் சக்திலீலையேயாம். அந்தச் சக்தி எங்கும்

நிறைந்துள்ளது. சித்தசுத்தியும், உடலுறுதியும், தியானவுறுதியும், ஏகாக்கிரமும் இருந்தால் அந்தச் சக்தியை எங்கிருந்தும் யாவரும் அடையலாம்.

**'ஓம்சுத்த சக்தி'யென வுள்ளே யுயிர்த்திடுமின் ;**
**ஆம்சித்தி சக்தியரு ளால். 4**

இறைவனையும் அவனருட் சக்தியையும் உபாசிக்க ஓர் எளிதான மந்திரம், '**ஓம் சுத்த சக்தி**" யென்பது: உண்மை யறிவின்பப் பொருளே ஓம்; அதுவே சுத்த சக்தி. எல்லாச் சமயங்களும், '**சுத்தமே** கடவுளைக் காணும் வழி' யென்று சொல்லுகின்றன. "இதய சுத்தர் வாழ்க; இறைவனைக் காண்பர்" என்கிறது **பைபிள். சுத்த நிர்க்குணப் பிரமன், சதாசிவன், துரிய சிவன், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், அருகன், புத்தன்** அனைவருக்கும், '**சுத்தன்**' என்ற பெயர் பொருந்தும்: சுத்தன் சுத்தப் பிரமன், அசலன், நிர்மலன், நிர்க்குணன்; அவனருட் சுடரே சக்தி! ஞாயிறும் கதிர்களும் சேர்ந்து கதிரவனாவதுபோல, சத்தாகிய பிரமமும், சித்தாகிய சக்தியும் சேர்ந்து சுத்தசக்தியாகும்.

இறைவனைச் சுத்தனாகவும், அவனருளைச் சக்தியாகவும் கருதி, '**சுத்த சக்தி ஓம், ஓம்**' என்று எல்லாரும் மந்திர ஜபம் செய்யலாம். உள்ளத்தில் உள்ளவாறுள்ள சுத்தான்மாவைச் **சுத்த**மென்றும், அதன் கலப்பாற் பாய்ந்து பரவும் அருட்சோதிக் கனலைச் **சக்தி** யென்றும் யோகிகள் காண்பர். சுத்தமிருந்தால் சக்தியும் உடனிருக்கும். சூரியனும் அவன் கதிர்களும் போல இதயத்தில் சுத்தசக்தி விளங்குவதாகத் தியானித்து, இந்த மந்திரத்தை ஏகாக்கிரத்துடன் உபாசிக்க வேண்டும். நடக்கும்போதும்.

'சுத்த சக்தி ஓம், ஓம்' என்று அளவாக அடியெடுத்து வைத்து நடக்கலாம்; 'சுத்த சக்தி' யென்று மூச்சிழுத்து, 'ஓம் ஓம்' என்று சமமாக விட்டுப் பழகலாம். ஆரம்பத்தில், காலை மாலை நிம்மதியாயிருந்து ஜபமாலையிலாயினும், விரல்களில் கணக்கிட்டாயினும், சுமார் 500 தடவை இம்மந்திரத்தை உருவேற்றினால், எளிதில் சித்த சுத்தியும், ஏகாக்கிரமும், மனோஜயமும் ஏற்படும்: இதயத் துடிப்பும் மந்திரத்தின் அளவாகும்; மூச்சுச் சமனாகும். ஓங்காரம் கேட்கும்; சத்தம் கேட்டதும் அதையே கவனித்துக் கொண்டிருந்தாற் போதும்; அதுவே ஜபமாகும். மந்திரத்தை வாய்விட்டுச் சொல்லுவதைவிட, அதன் பொருளறிந்து மனத்தில் தியானிப்பது ஆயிரம் மடங்கு மேல். ஒவ்வொரு மூச்சுடனும் மந்திரத்தை உயிர்க்க வேண்டும். அந்த மந்திர பலத்தால் சக்தியின் அருள் விளங்கும்; மேன்மேலும் யோகசித்தியுண்டாகும்.

மதிநீ ; வழிநீயே ; வாழியறத் தாயே !
கதிரின்றிக் காணுமோ கண். 5

அறிவொளி காட்டி, உலகில் அறத்தை நிலைநிறுத்தும் சக்தித் தாயே! நீயே மதி, நீயே கதி, வழி; உன்னையன்றி யாதுமில்லை. உன்னருளொளியின்றி எமக்கு அறிவுந் திறனும் இல்லை. கதிரில்லாமல் கண்கள் காணுமோ? நீயின்றி எம் உட்கண்கள் இறைவனைக் காணா. நீ காட்டினாலே, நாங்கள் இறைவனைக் காணவல்லோம். பராசக்தி யன்னையே, வணக்கம்.

## 2. உடலுறுதி

உடலுறுதி செய்க ; வுடலையொளி செய்க ;
உடல முயிர்மனையென் றுன். 1

யோகிக்கு முதலில் வேண்டியது உடலுறுதி யாகும். மூலாதாரமாகிய உடலை அசட்டை செய்யக் கூடாது ; உடலை உறுதி செய்க ; உடலைத் தெய்வ வொளிவீசச் செய்க ; உடலே உயிர் குடியிருக்கும் வீடு என்பதைக் கருதுக !

யாக்கை, ஆத்மாலயம் ; பிரம்ம மந்திரம் ; அது, யோகசித்தி பெறுவதற்கு ஆதாரமா யிருப்பது. உடல் சுத்தான்ம நிலயம். "உடம்பிறு லன்றி யுணர்வுதானில்லை", "உடம்பினில் உத்தமனைக் காண்' என்முள் ஒளவை. "உடம்பார் அழியின் உயிரார் அழிவார், திடம்பெற மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார் ; உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே" என்முர் திருமூலர். இப் புறவுடல் அன்னமய கோசம் : இதில் எத்தனை நுட்பங்கள் உள்ளன ! நாத விந்துகள் கலந்து அவற்றில் பூர்வ வாசனையுடன் கூடிய ஜீவன் வந்திறங்கி, 280 நாட்கள் தாயின் கருப் பைக்குள் 'ஓ' வடிவாயிருந்து வளர்ந்து வெளியே வருகிறது. இவ்வுடல் எண்ணிறந்த கண்ணறை களால் ஆனது. ஒவ்வொரு கண்ணறையிலும் உயிர்த்துளி (Protoplasm) யுள்ளது. அதன் நடுவே உயிர்க்கரு (Nucleus) வுள்ளது. ஒவ்வோர் உயிர்த் துளியிலும் $\frac{3}{4}$ பங்கு நீரும், மீதிப்பங்கில் உயிர்க் காற்று (Oxygen), நீர்க்காற்று (Hydrogen), உப்புக் காற்று (Nitrogen), கந்தகம் (Sulphur), பாஸ்வரம் (Phosphorus), சுண்ணம் (Calcium), ஸோடியம், பொட்டிலுப்பு முதலிய தாதுப் பொருட்களும்

உள்ளன. நாம் உண்ணும் தாவர உணவுகளில் இவை கலந்து உடலை வளர்க்கின்றன. உணவு உமிழ் நீருடன் சேர்ந்து இரைப்பையில் ஜாடராக்கினியுடன் கலந்து செரித்து, துணையிரைப்பையில் பித்தநீர் கணைநீர்களுடன் சேர்ந்து, மீண்டும் செரித்துக் குடல்களின் வழியே ஊறிச்சென்று அன்னசாரமாகி, இரத்தாசயத்திற் பாய்ந்து துடித்தோடி, சுவாசாசயத்திற் சுத்த செங்குருதியாக மாறி, நாடிகள் மூலம் பரவி உடலை வளர்க்கிறது. எலும்புக்கூடு, தசைநார், ஜீரணக் கருவிகள், இரத்தாசயம், நாடி நாளங்கள், கழிவுக் கருவிகள், காற்றுக் கருவிகள், மூளை, நரம்புத் தொகுதிகள், ஐம்பொறிகள் இவை சேர்ந்து இந்தப் பருவுடலாம். இதில், 206 எலும்புகள், 32 பற்கள், 555 தசைகள், 25,00,000 வேர்வைப் பைகள், 250 கன அங்குலமுள்ள காற்றுக்கொள்ளும் சுவாசாசயம், 33 அடி குடல், விரித்தால் 670 சதுர அங்குலமும் நமது நிறையில் 1/48 பங்கும்கொண்ட மூளை, 72,000 நரம்புகள்—இவை யடங்கியுள்ளன. இந் நரம்புகளில் முள்ளந்தண்டினூடு செல்லும் இடை, பிங்கலை சுழிமுனை இம்மூன்று நரம்புகளும் முதன்மையானவை; சுழிமுனையாகிய நடுநரம்பே (Spinal Cord) உடலின் சூத்திரக் கயிறு; நரம்புகளை யியக்குவன பொறிகள்; பொறிகளை யியக்குவது மனம், மனத்தை யியக்குவது புத்தி; புத்தியை யியக்குவது ஆன்மாவாகும். பருவுடலையும் மனத்தையும் இணைப்பதே உயிர் அல்லது பிராணனும். பிராண சக்தியை வளர்த்தால் உடலுறுதியாகும். தூய மனத்தால் உடல் தெய்வப் பொலிவுறும். "மாசற்ற கொள்கை மனத்தில் அடைந்தக்கால், ஈசனைக்

காட்டும் உடம்பு "—(ஔவை). மனத்தூய்மை, பிராண சக்தியை வளர்த்தல், நரம்புகளைப் பயிற்றல், ஆகார சுத்தம், பஞ்சபூதங்களின் நிறையைக் காத்தல், காற்று கதிர் நீர் மண் முதலிய இயற்கை வளங்களை நன்கு பயன்படுத்தல்—இவையே உடலை உறுதி செய்யும் வகையாம். 'உடலுறுதி' யென்னும் நூலில், தூல சூக்கும தேகங்களின் இயல்பும், உடலை உறுதி செய்யும் வகையும் விரிவாக விளக்கப்பட்டுள்ளமை காண்க! ஹடயோகம் உடலுறுதியைத் தந்து, ஆயுளையும் ஆற்றலையும் பெருக்கும்.

**பத்தாஸ னம்ப்ராண யாமம், அறுகருமம்,**
**சுத்தமுட லீயுஞ் சுகம்.** 2

பத்து ஆஸனங்கள், பிராணயாமம், ஆறு கர்மங்கள்—இவை தேகசுத்தியுடன் சுகந் தரும். இவை ஹடயோக சாதனங்கள்; இவற்றால் நாடி நரம்புகள் சுத்தமாகும்; உடல் உறுதியாகும்.

உடலின் ஒவ்வொரு பகுதிக்கும் தக்க பயிற்சி தந்து, வைரம்போலத் திண்ணிய தாக்கி, மாந்தர் ஆயுளும் இளமையும் எழிலும் பெற்றோங்க, நம் நாட்டு மஹான்கள் ஹடயோகத்தை முறை வகுத்தனர். 'ஹ' என்றால் சூரியன்; 'ட' என்றால் சந்திரன்: சூரிய நரம்பையும், சந்திர நரம்பையும் வசப்படுத்துவது ஹடயோகத்தின் பொருளாகும். இவ்விரண்டு நரம்புகளும் ஜீவக் குதிரையின் இரண்டு லகான்களாம். நமது உடலில் 72000 நரம்புகள் உள்ளன. அவற்றில், இடா, பிங்கலா, சுஷும்ணா இம்மூன்றும் முதன்மையான நரம்புகளாகும். இவை மூளையினின்று தொடங்கி முதுகெலும்புகளின் மூன்று தொளைகளூடும் செல்கின்றன. இவையே

மற்ற நரம்புகளை யாளுகின்றன. இடாவைப் 'பெண் நரம்பு' அல்லது, 'சந்திர நரம்பு' என்பர். பிங்கலாவை, 'ஆண் நரம்பு' அல்லது, 'சூரிய நரம்பு' என்பர். சுஷும்னாவை நடுநரம்பு, அனல் நரம்பு என்பர். (இடா= The efferent sensory nerve; பிங்கலா=The efferent motor nerve; சுஷும்னா = Spinal Cord). இந்நரம்புகளைச் சுத்தமாக்கினால் நீளாயுளும், எழில்பெற்ற உடலும் எய்தும். நாடிதாரணை யோகத்தில் மிகவும் அவசியமான சாதனமாகும். "அறிந்தடங்கி நிற்கும் அந்நாடிகள் தோறும், செறிந்தடங்கி நிற்கும் சிவம்" என்றாள் ஔவை. நாடிகளை வசப்படுத்த ஹடசாதனங்கள் அவசியமேயாம். அவை பல: அவற்றுள், ஆஸனங்களும், பிராணாயாமமும், நௌலி, நேதி, கபாலபாதி, தௌதி, வஸ்தி, த்ராடகம் ஆகிய ஷட் கர்மங்களும் முதன்மையானவை. பந்தமும் முத்திரையும் பிராணாயாமத்தில் அடக்கமாகும்.

## பத்து ஆஸனங்கள் :

ஆஸனங்கள் மொத்தம் 84 ஆகும். அனைத்தையும் செய்துகொண்டிருக்க எல்லாராலும் முடியாது. எல்லா ஆஸனங்களின் பலனையும் தரத்தக்க பத்து ஆஸனங்களை மட்டும் இங்கே கூறுவோம்: (இவை செய்யும் விதத்தைப் படத்திற் காண்க!

1. **சித்தாஸனம்** :—தியானத்திற் கேற்றது; இதில் எப்போதும் இருந்து பழகவேண்டும்.

2. **பத்மாஸனம்** :—72,000 நாடிகளையும் வசப்படுத்தும். **பத்த பத்மாஸனம்** ஆதார சக்கரங்களுக்கு வலுவளிக்கும்; மூச்சைச் சமனாக்கும்; குண்டலினியை நேராக மேலெழுந்து ஏறச்செய்யும்.

3. சிரசாஸனம் :—இரண்டு நிமிஷங்கள் செய்தால் மூளைக்கு நல்ல இரத்தம் ஏறும்; பொறிகள் தெளிவுறும்; தலைநோய்கள் தீரும். தலைகீழே நிற்கும் இந்த ஆஸனம் குண்டலியை எழுப்ப வல்லது.

4. மயூராஸனம் :—இரண்டு கைகளின்மேலும் உடலை நீட்டுப்போக்கில் தாங்கல். இதை இரண்டு நிமிஷம் செய்துவந்தால் வயிற்றுப் பிணிகள் நீங்கும்.

5. தனுராஸனம் :—குப்புறப் படுத்துக் காலையும் தலையையும் உயர்த்திக் கைகளால் குதிங்காலைப் பிடித்து நாணேற்றிய வில்லைப்போலிருத்தல்; இரண்டு நிமிஷங்கள் செய்தால் முதுகு, கழுத்து, வயிறு—இவற்றிற்கு இந்த வில்லிருக்கை உறுதியளிக்கும்.

6. பஸ்சிமதானுஸனம் :—கால்விரல்களைக் கட்டைவிரலாற் பிடித்துத் தலையை முழங்காற்சிப்பியில் வைத்திருக்கை; ஒரு நிமிஷம் இதைச் செய்தால் இடுப்பிற்கும் அடிவயிற்றிற்கும் நலமாகும்.

7. ஸர்வாங்காஸனம் :—கழுத்துத் தரையின்மேல் உடலைத் தலைகீழாக நிறுத்தல்; இஃது ஒன்றே எல்லா ஆஸனங்களின் பலனையும்தரும். இதில் சுமார் 2 முதல் 5 நிமிஷம் வரை இருக்கலாம். உடல் நலத்திற்கு இன்றியமையாத கழுத்துக்காய்களை (Thyroids), இது வலியுறுத்தும். மலச்சிக்கல், விந்தழிவு, நீரழிவு, அஜீரணம் முதலிய பல நோய்களை இது தீர்க்கவல்லது. இரவில் படுக்குமுன் 5 நிமிஷம் இதைச் செய்தால் தீய கனவுகள் வாரா.

8. ஹலாஸனம் :—கையைநீட்டிப் படுத்துக் காலை மேலுயர்த்திப் பின்னே வளைத்துத் தரையைக் கால் விரல்களால் தொட்டு நிற்றல்; இக் கலப்பையிருக்கை

யில் 2 நிமிஷங்கள் இருந்தால் இடுப்பு, மார்பு, கழுத்து, அடிவயிறு—அனைத்திற்கும் நலமாகும்.

9. **மத்ஸ்யாஸனம்** :—பத்மாஸனத்தில் மல்லாந்து படுத்துக் குரல்வளை நன்கு வளையத் தலையைப் பின்னால் அழுத்திக் கைகளால் கால்விரல்களைப் பிடித்து நிற்றல். இந்த மீனிருக்கையில் 4 நிமிஷங்கள் இருந்தால், கழுத்து, தோள், பிடரி இவற்றிற்கு நலமாகும்.

10. **ஸவாஸனம்** :—மல்லாந்து படுத்துக் கைகளைத் தொடையிற் சேர்த்து அமைதியாக 5 நிமிஷம் இருந்தால் களைப்பு நீங்கும். காதைச்சுற்றி ஒரு துணியைக் கட்டிக்கொண்டு இவ்வாறு சவம்போலத் தியானத்திற் படுத்து யோகிகள் **நாதானுஸந்தானம்** செய்வர். கையை இதயத்தில் வைத்துக்கொண்டு ஆத்மத் தியானம் செய்பவரும் உண்டு. இந்த ஆஸனம் நீண்டகால சமாதியில் இருப்பவருக்கு நலமாகும்.

இந்த ஆஸனங்களைக் காலை தேக சுத்தி செய்து கொண்டதும் செய்யலாம்; அல்லது, மாலை ஆறு மணிக்குச் செய்யலாம். யோகாஸனத்துடன் மூச்சு அதிகமாகச் செலவாகும் வேறெந்த உடற்பயிற்சியையும் கலக்கக்கூடாது. நீண்டநேரம் தியானத்திலிருப்பவர்க்கு வஜ்ராஸனம், சித்தாஸனம், ஸ்வஸ்திகாஸனம், பத்மாஸனம், ஸவாஸனம்—இவை நலமாகும். "ஸ்திரமாகவும், சுகமாகவும் உட்காரக் கூடியது ஆசனம்" என்றார் **பதஞ்சலி**. **பிராணயாமத்**தைப் பற்றியும், கும்பகங்களைப் பற்றியும் அடுத்த பாட்டின் விளக்கத்திற் காண்க !

**ஷட் கர்மம் :**

1. **கபாலபாதி** :—காலை நான்கு மணிக்குப் பல் விளக்கிப் பத்துவிழுங்கு நீர் அருந்தி, நல்ல காற்றில்



1. சர்வாங்காஸனம்



2. மத்ஸ்யாஸனம்



3. ஹலாஸனம்



4. சிரஸாஸனம்



5. மயூராஸனம்



6. தனுராசனம்



7. பஸ்சிமோத்தாஸனம்



8. கர்ப்பாஸனம்



9. பத்த பத்மாசனம்



10. உட்டியாண - நௌலி



தியானப் படம் (ஆதார விளக்கம்)

பத்மாஸனம் அல்லது சித்தாஸனத்தில் அமர்க; இட மூக்குத் தொளைவழியே முதலில் உள்ளேயுள்ள காற்றை வெளியே விடுக; உடனே பலமாக, அதே மூக்கு வழியாகக் காற்றை விர்ரென்றிழுத்திடுக; இழுத்ததும் வல மூக்குவழியாகக் காற்றை விடுக; உடனே வல மூக்கு வழியாகக் காற்றையுறிஞ்சி, இட மூக்கு வழியாக விடுக! இவ்வாறு, துருத்தி மாதிரியாகக் காற்றை யுறிஞ்சிவிடுவதே கபாலபாதி. இந்த ஆழ்ந்த மூச்சுப் பயிற்சி கபத்தை நீக்குவதால் கபாலபாதி எனப்பட்டது. இதனால் மூளைக்கும், மூச்சுறுப்புக்களுக்கும் நலமாகும். இதை 5 நிமிஷங்கள் செய்தால் தலைவலி, பீனஸம், ஜலதோஷம், மார்புவலி முதலியவை நீங்கும்; இரத்த சுத்தியாகும்.

2. **நேதி**:—காலையில் கபாலபாதி செய்த பிறகு இதைச் செய்க: ஒரு கிண்ணத்தில் சுத்த ஜலத்தை நிரப்புக; அதில் மூக்கை அமிழ்த்துக; எந்த மூக்கின் வழியே இயல்பாக மூச்சு வெளியேறுகிறதோ, அந்த மூக்கை விரலால் பலமாக அடைத்துக்கொள்க; மூச்சு இயல்பாக உட்புகும் மற்றொரு மூக்கின் வழியே விர்ரென்று ஜலத்தை உறிஞ்சுக! ஜலம் நேராக மூளையில் ஏறும். இஃதானதும், அந்த மூக்கை அடைத்துக்கொண்டு மற்றொரு மூக்கின் வழியே ஜலத்தை உறிஞ்சுக! ஜலம் மண்டையில் தாக்கி வாய்வழியாக வரும்போது அதை உமிழ்ந்து விடலாம். சிலர் ஒரு மூக்கின் வழியே ஜலத்தை உறிஞ்சி மறுமூக்கின் வழியே ஜலத்தை வெளியேற்றுவர்; அது கடினம்: இப்படி ஜலமுறிஞ்சுவதற்கு **ஜலநேதி** என்பர். இதனால், மூளை மிகத் தெளிவாகும்; ஜல தோஷம் வரவே வராது; கண்கள் ஒளிபெறும்;

முகக்களை அதிகமாகும். இதேமாதிரி ஆறு அங்குலம் உள்ள மெல்லிய நூலை ஒரு மூக்குத் துளையில் வைத்து மறு மூக்குத்துளையை அடைத்துக்கொண்டு, ' விர் ' என்று காற்றை இழுத்து உள்ளேறச் செய்யலாம். இந்த மாதிரி இரண்டு மூக்கிலும் நூலேற்றல் ஸூத்ர நேதி எனப்படும். ஒரு மூக்குத்துளையில் நூலேற்றி இன்னொரு மூக்குத் துளைவழியாக இழுப்பாரும் உண்டு. ஸூத்ரநேதியால் மூளை தெளிவுற்று ஏகாக்கிரம் அதிகமாகும்; காமாலை, பாண்டு, கண்ணெரிச்சல், கண்ணில் நீர்வடிதல், பீனஸம் எல்லாம் நீங்கும். முதன்மையாக ஜலநேதி, மாணவருக்குத் தகுந்த பயிற்சியாகும்.

3. **நௌலி உட்யாணம்** :—பிறகு எழுந்து நிற்க; தொடைகளின்மேல் கைகளை வைத்துச் சிறிது முன்னே குனிந்து, மனவுறுதிகொண்டு, வயிற்றை முதுகெட்ட எக்கி, அரை நிமிஷம் வைத்திடுக! இப்படி வயிற்றை யெக்குவதுதான் **உட்யாண பந்தம்**. மீண்டும் வயிற்றை யெக்குக; உடனே, குடல் புரளும்படி வயிற்றுத் தசைகளை இடப்புறமும் வலப்புறமும் உருட்டுக! இப்படிக் குடலைக் குலுக்குவதற்கு **நௌலி** என்று பெயர். இதைப் பத்மாஸனத்திலிருந்தும் செய்யலாம். யோகிகள் தியானத்தில் இருக்கும்போது உட்யாண பந்தம் செய்வர்; அது குண்டலினி மேலேற உபாயமாகும்; காமச் சிந்தனைகள் அடங்கிப்போம்; புலன்கள் வசப்படும். பஸ்சிமதானஸனமும் மயூராஸனமும் பயின்றால், **நௌலி** எளிதாகும். **நௌலியும் உட்யாணமும்** எத்தகைய வயிற்றுப் பிணிகளையும் தீர்க்கும்; மலச்சிக்கலை அடியோடொழிக்கும்; அஜீரணத்தைத் தீர்க்கும்.

4. தௌதி :—வாய் கசந்தால், பித்த மிருந்தால், வயிறு தொந்தரவு பண்ணினுல் இதைச் செய்ய வேண்டும். வாரம் ஒருமுறையாவது ஒழுங்காக இதைச் செய்வது நல்லது. இரண்டு குவளை வெந்நீர் அருந்துக; உடனே, சுமார் மூன்று விரற் கடை அகலமும் 15 சாண் நீளமும் உள்ள சுத்த வெள்ளைத் துணியை மெல்ல மெல்லத் தண்ணீர் குடித்து உள்ளே விழுங்குக! ஒரு சாண் வெளியே யிருக்கட்டும். மீதி 14 சாண் துணியும் உள்ளே போனபிறகு நௌலி செய்க; அதன்பிறகு ஸர்வாங் காஸனம் செய்க; பிறகு துணியை மெல்ல வெளியே இழுத்திடுக! வயிற்றிலுள்ள கசண்டுகளும், பித்தமும் துணியுடன் சேர்ந்து வரும். சிலர் ஒரு செம்பு வெந்நீர் குடித்து ஒன்றரை முழம் மூங்கிற்குச்சி அல்லது கயிற்றை உள்ளே விட்டு வாந்தி யெடுப்பர். இது தண்டதௌதி யாகும். நீண்ட பழக்கத்தால் வெந்நீர் அருந்தி நௌலி செய்து, பிறகு விரலை விட்டே கசண்டுகளையும் பித்தத்தையும் வாந்தியெடுக்க முடியும். இதற்குக் கஜகர்மம் எனப் பெயர். ஐரோப்பியர் இரப்பர் குழாயினுல் வயிற்றுக் கசண்டை வெளியேற்றுவர். தௌதியால் எல்லாவிதமான வயிற்று நோய்களும் தீரும்; உடல் பளபளக்கும்; பித்தம் நீங்கும்; நல்ல பசியுண்டாகும். பிணியின் பிறப்பிடம் வயிறே. வயிற்றைக் கழுவிச் சுத்தமாக்கத் தௌதி இன்றியமையாதது.

5. வஸ்தி :—வஸ்தி யென்ருல் அடிவயிறு. மலக் குடலில் அடைந்துகிடக்கும் அழுக்குகளைச் சுத்தம் செய்தல் வஸ்திக்கிரியை யாகும். இக்காலம் எங்கும் சாதாரணமாக எனிமா வைத்துக் குடலைக்

கழுவுகின்றனர். ஆனால், எனிமாப் பழக்கம் இயற்கையின் வேலையைத் தடை செய்யாமலிருக்க வேண்டும். யோகிகள் பயிலும் எனிமா, வஸ்தி எனப்படும். ஆறங்குலம் நீளமுள்ள நாணற்குழாயை எண்ணெய் தடவி நாலங்குலம் ஆஸனத்தில் ஏற்றி, இரண்டங்குலம் வெளியே யிருக்கும்படி செய்க! பிறகு, ஒரு தொட்டியில் நீர் நிரப்பி, நாபி அமுங்கும்படி குந்தவைத்து உட்கார்ந்து, உட்யாணபந்தம் செய்து, தண்ணீரைக் குழாய் வழியாக உள்ளே இழுக்கவும். தண்ணீர் குடலில் நிரம்பியதும் குழாயை நீக்கிவிட்டு, மயூராஸனமும், பஸ்சிமதாஸனமும் செய்து, பிறகு வெளிக்குச் செல்க! அழுக்குகள் துப்புரவாக வெளியேறும். இது ஜலதௌதி. இவ்வாறே, உட்யாணம் செய்து அபான வாயுவை மேலேற்றிப் பிறகு மயூராஸனம் செய்து, அதை வெளியேற்றுவதுமுண்டு. இதைப் பவனவஸ்தி யென்பர். வஸ்தியால் மலக்குடல் சுத்தமாகும்; வயிற்றுப்பிணிகள் ஒழியும்; உடல் பளபளக்கும்; மூலக்கனல் கிளர்ந்தெழும். ஆனால், வஸ்தி அல்லது எனிமா வைத்துக்கொண்டுதான் குடலைச் சுத்தி செய்வது என்றிருக்கக் கூடாது. ஆஸனம், நௌலி, பிராணாயாமம் மூன்றும் ஒழுங்காகச் செய்தால், இயல்பாகக் குடல் சுத்தியாகும். உணவுக்கழிவு மேலிருந்து கீழிறங்குவதே இயல்பானது. தண்ணீரைக் கீழிருந்து மேலேற்றி அழுக்குகளை வெளியேற்றும் எனிமா, வஸ்தி முதலியவற்றை இன்றியமையாதபோதுமட்டுமே கையாளவேண்டும்.

6. **திராடகம்**:—புருவமத்தியிற் பார்வையை நிலைநாட்டி, நிஸ்சலமான சூக்ஷ்மத்ருஷ்டியிலிருத்தல் **அந்தர்த்ராடகம்**; அஃதாவது: குறிவைத்தல், அல்லது உள்

நோக்கு ஆகும். இதனுல் மனம் ஏகாக்கிரப்படும்; புலன்கள் வசமாகும்; அமைதி ஏற்படும். ஒரு குறித்த நட்சத்திரம், சந்திரன், சூரியன், மலைச்சிகரம், ஒரு மலர் முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றில் ஒரே குறிப்பாயிருந்து கண் கொட்டாமல் பார்த்திருத்தல், **பாஹ்யத்ராடகம்** அல்லது வெளிநோக்காகும். இதனுல், பார்வை தெளிவாகும்; கண்ணேய்கள் தீரும். மூக்கு நுனியில் பார்வையை வைத்து ஒரு குறித்த தெய்வச் சிலை, படம், காகிதத்தில் எழுதிய ஓங்காரத்தின் **பிந்து** (புள்ளி), தீக்கொழுந்து இவற்றில் நாட்டமூன்றல் **மத்யத்ராடக**மாம். கண்ணேயுடன் அல்லது மனக்கவலையுடன் த்ராடகம் செய்யக்கூடாது. சாந்தமான வேளையில் நிம்மதியாக அமர்ந்து த்ராடகம் செய்தால் சூக்ஷ்மதிருஷ்டி யுண்டாகும்; மனம் நிலைக்கும்.

ஆஸனம், பிராணயாமம், ஷட்கர்மங்களால் நாடி நரம்புகள் சுத்தமாகி, உடலுக்கு உறுதியும் சுகமும் உண்டாகும்.

**ஈரெட்டு நான்களவில் ஈர்த்தடக்கி விட்டுயிர்ப்பின்,**
**வேரெட்ட வுண்டாகும் வீறு.** 3

பிராணயாமப் பயிற்சியும், பயனும் இங்கே சொல்லப்பட்டன. 'வீறு' என்ருல் பொலிவு, தேஜஸ், அழகு, பலப்பெருக்கம், வீரிய சக்தி, பிராணசக்தி, பெருமை எனப்பொருளாம்; உயிர்ப்பாவது, மூச்சு, வாசி, இடகலை, பிங்கலை எனப் பொருளாம். மூச்சு எங்கிருந்து எழுமோ, அங்கிருந்தே மனமும் உதிக்கும்; அதனுடன் தொடர்ந்து பந்த தொந்தங்களெல்லாம் உதிக்கும். மூச்சு எங்கே அடங்குமோ, அங்கேதான் மனமும் அடங்கும்; பந்த தொந்தங்களெல்லாம் அடங்கும். மூச்சடக்கல்

மனமடக்க வழியாகும்; மனமடங்கினுல் வாசியும் அடங்கும்: மனம் அடங்கும் இடம் எது? அதுவே இதயம்; அதுவே இன்பநிலயம், ஆத்ம மந்திரம்; அதுவே உயிர்ப்பின் வேராம்! அந்த வேரினின்றே ஆற்றலும், அமைதியும், இன்பமும், வீறும் உண்டாகும். மனம் அலேவதால் இதயத்தில் உள்ள சக்தி புலப்படாமல் இருக்கிறது. காற்றில் விளக்குச்சுடர் அலேவதுபோலவே, மூச்சுடன் மனம் அலேகிறது; மூச்சை ஒழுங்குப்படுத்தினுல், மனமும் அமைதியான காற்றில் ஒளிரும் தீப சிகைபோல ஆடாது அடங்கி நிற்கும். மூச்சை முறைப்படுத்துவதே பிராணுயாமத்தின் பயன். அதற்கு வழி மூச்சை இரண்டு மாத்திரைகள் இழுத்து, எட்டு மாத்திரைகள் அடக்கி, நான்கு மாத்திரைகள் வெளிவிட்டுப் பழகுதலேயாம். ஓம், சுத்தோஹம், சிவோஹம், ஸோஹம், ராம், ரஹீம் முதலிய ஏதேனும் ஓர் இஷ்ட மந்திரத்தை மாத்திரையாக வைத்துக்கொள்ளலாம். **பூரகம்** (உயிர்த்தல்), **கும்பகம்** (அடக்கல்), **இரேசகம்** (விடுதல்) அளவு 1: 4: 2 ஆக இருக்கவேண்டியதே முதன்மை. மனப்புள்ளேக் காற்று வலேயிற் பிடித்து நிறுத்தலாம்; மனம் வசமாளுல் உடலும் நம் வசமாகும். "புறப்பட்டுப் புக்குத் திரிகின்ற வாயுவை, நெறிப்பட உள்ளே நின்மலமாக்கில், உறுப்புச் சிவக்கும், உரோமங் கறுக்கும்" என்ருர் **திருமூலர்.** "வாயு வழக்கம் அறிந்து செறிந் தடங்கின், ஆயுட் பெருக்க முண்டாம்" என்ருள் **ஔவை.** "வாயுவைக் கருத்தினுல் இருத்தியே கபாலமேற்ற வல்லிரேல், விருத்தர்தாமும் பாலராவர், மேனியுஞ் சிவந்திடும்" என்ருர் **சிவவாக்கியர்.** பிராண - அபான வாயுக்களே அடக்கி

யாண்டு வாயுதாரணை செய்வதையும் ஒரு யக்ஞமாகப் பகவத்கீதை கூறுகிறது. கண்ணன் உத்தவருக்கு இவ்வாறு உபதேசிக்கிறான்: "ஸமாஸனத்தில் அமர்ந்து, உடம்பு நிமிர்ந்து, மூக்கு நுனியில் பார்வையை நாட்டி, இதய கமலத்தில் என்னைத் தியானித்துப் பூரக கும்பக இரேசகங்களால் வாசியடக்க வேண்டும்". "ஆஸனம் உறுதியான பிறகு, பிராணயாமம் பயில்க; அதனால், மனம் தாரணைக்குத் தயாராகும்" என்கிறார் பதஞ்சலி.

உலகெங்கும் ஆகாயம் நிறைந்திருக்கிறது. ஆகாயத்தின் அன்னையே பிராணன்; பிராணசக்தியினின்றே பஞ்ச பூதங்களும், அவற்றின் சேர்க்கையால் செடி கொடிகளும், அவற்றையுண்டு உயிரினங்களும் வளருகின்றன. அனைத்தின் ஆதியும் அந்தமும் பிராண சக்தியே. அதனாலேதான், மத்வாச்சாரியார் முக்கியப் பிராணனை வழிபட்டார். சூடு, ஒளி, காந்தம், வைத்யுதம் முதலிய பௌதிக இயற்கை வன்மைகளெல்லாம் பிராணசக்தியின் விளக்கமே யாகும். அறிஞரில் அறிவும், வீரரில் வீரமும், பெரியரிற் பெருமையும் இந்தப் பிராண சக்தியேயாம். சித்தஞ் சிதறினால் சக்தி சிதறும்; சித்தம் நின்று மனங் குவிந்தால், பிராணசக்தி பெருகும். மனம் உள்ளே லயிக்க லயிக்க, சக்திமிகும். அறவியலிலும், நடையியலிலும் சொல்லியுள்ள இயம நியம சாதனங்களால் மனமாசகன்று, உறுதியாகவும் எளிதாகவும் உள்ள ஓர் ஆஸனத்தில் நிலைத்து, ஓம் ஸோஹம், அல்லது அவரவர் இஷ்டமந்திரம் இவற்றுள் ஏதேனுமொன்றை மாத்திரையாகக் கொண்டு பிராணயாமந் தொடங்குக!

நிமிர்ந்து உட்காருக; வல மூக்கைக் கட்டை விரலால் மூடிக்கொண்டு, இட மூக்கின் வழியாக உள்ளேயுள்ள காற்றை வெளிவிடுக! உடனே அதே மூக்கினுல் 'ஓம், ஓம்' என்று 8 மாத்திரை மூச்சை யிழுக்கவும்; உடனே இரண்டு மூக்குத் துளைகளையும் விரல்களால் அடைத்துக் கொள்ளவும்! இழுத்த மூச்சை மூலாதாரத்திற் கொண்டு மூட்டி, நெஞ்சில் வைத்து, பிறகு மூளையிற்கொண்டு மூட்டி, 32 மாத்திரையளவு இவ்வாறு அடக்கிப் பிறகு 16 மாத்திரை யளவு மூச்சை வெளியே விடுக! மூச்சு விடும் மூக்கு வழியாகவே மூச்சிழுக்க வேண்டும். இது பூரணப் பிராணுயாமமாகும். மூச்சிழுக்கும்போது பிராண சக்தி உள்ளே புகுவதாகக் கருதுக! கும்பிக்கும் போது இதயத்திலுள்ள பரமாத்மனையே தியானிக்க வேண்டும்; இரேசிக்கும்போது உன் துயர்களும், கவலைகளும், மாசுகளும் வெளியேறுவதாகக் கருத வேண்டும்; இங்கே 2 பூரகம், 8 கும்பகம், 4 இரேசகம் என்று சொன்னது ஓர் அளவைக் குறிக்கவேயாம். நீண்ட பிராணுயாமப் பழக்கத்தால் வழக்கமாகவே இவ்வாறு மூச்சு நடக்கும். பிறகு மூச்சு சுழிமுனையிலேயே ஓடிக் கேவல கும்பகம் சித்திக்கும். வாசியடங்கி, மனம் இதயத்திற் படிந்து கேவலகும்பகம் சித்தித்தலே, உயிர்ப்பின் வெற்றெட்டலாம். அதன்பிறகு பிராணுயாமத்தின் தேவையிராது. காலை 5 மணிக்கு, மாலை ஆறு மணிக்கு, இரவு படுக்கப்போகுமுன் பத்துப் பத்துப் பிராணுயாமம் செய்தால் தேகேந்திரியங்கள் சாவி கொடுத்த கடிகாரம் போல, நன்ருக வேலை செய்யும்; நோய் அணுகாது. ஆனுல், எடுத்ததும் பூரணமான பிராணுயாமம்

செய்வதரிது: (1) ஏதாவது ஓர் இஷ்ட மந்திரத்தை ஜபித்தல்; (2) மந்திரத்தை ஒரே அளவாய் மானசீகமாக உச்சரித்து மூச்சை இழுத்துவிடல்; (3) முன் சொன்ன கபாலபாதி பழகல்; (4) ஒருமனத்துடன் மந்திரத்தைச் சொல்லிக்கொண்டே உள்ளே செல்லும் மூச்சையும் வெளியே செல்லும் மூச்சையும் கவனித்துக் கொண்டிருத்தல்—இந்த நான்கு சாதனங்களை முதலிற் பயின்றால் பிராணயாமம் எளிதாகும். சூர்யபேதி, உஜ்ஜாயி, சீதலி, பிரமரி, மூர்ச்சா என்று கும்பகத்திற் பலவகையுண்டு. மேற் சொன்ன பூரணப் பிராணயாமத்தால் எல்லாக் கும்பகங்களின் பயனுமாகும். மூச்சடக்குவதற்கு மூலபந்தம், உட்யாணபந்தம், ஜலந்தரபந்தம் மூன்றையும் சேர்த்துப் பழகலாம். அஃதாவது: பூரித்த வாயுவை மூலாதாரத்தில் வைத்து, வயிற்றை எக்கி, உட்யாணம் செய்து, அதே சமயத்தில் கழுத்துக் குனிந்து காற்றுக் குழாயை அழுத்தி நிற்றலாம் என்பதாம். இதனால், கும்பிக்கும் வாயுவில் உள்ள பிராண சக்தி உடலில் நன்கு பரவும்; நாளடைவில் அதிக நேரம் கும்பகம் செய்ய முடியும். இவற்றையெல்லாம் நம்பத்தக்க ஒரு யோகியின் உதவியைக் கொண்டே பயிலவேண்டும்; கவனம்!

**அற்றுப் பசிகண் டளந்துண் டியல்வழிநில்;**
**குற்றமு றுதூன் குடில். 4**

நமது உடல் யந்திரம் ஐம்பூதங்களாலாகிய ஊன்குடிலாகும். ஐம்பூதங்களின் நிறை மிகுந்தாலும் குறைந்தாலும் உடலில் குற்றங்கள், நோய்கள் உண்டாகும்; தேகேந்திரியத்திற் சிக்கலுண்டாகும். அவ்வாறு குற்றமுண்டாகாதபடி காக்க, இரண்டு

வழிகள் உள்ளன: (1) முன் உண்ட உணவு ஜீரணமாகிக் கழிவுகள் அற்று வெளியேறி நல்ல பசி யெடுத்ததும் பசித் தீயின் அளவறிந்து தூய வுணவு கொள்ளுதல்; (2) இயற்கை வழியில் வாழ்தல்.

உணவே உடலை யாக்குகிறது. "மக்கள் யாக்கை உணவின் பிண்டம்" (மணிமேகலை). உண்டது உடலில் ஒட்டி, உணவுக்கழிவு ஒழுங்காக வெளியேறிய பிறகே இயற்கையாக நல்ல பசியெடுக்கும். நாக்கில் பரிசுத்தமான எச்சிலூறுவதும், வெற்றேப்பம் வருவதும், வயிற்றில் ஜாடராக்கினி கபகப வென்று எரிவதும், உணவில் தேட்டம் ஏற்படுவதுமே நல்ல பசிக்கு அடையாளங்களாம். இத்தகைய இயலுணர்வாலேதான் விலங்குகளும் புட்களும் உணவு தேடியுண்கின்றன. ஒரு பாத்திரத்திற் சோறுகறியெல்லாம் போட்டு இரண்டு மூன்று நாட்கள் அப்படியே வைத்து விட்டால் நாற்றமெடுத்து நஞ்சாகின்றன. அதுபோலே, இரண்டு மூன்று நாட்கள் உண்டவுணவு குடலில் தங்கி நாற்றமெடுத்தால், உடல் என்னவாகும்? எந்த உபாயத்தாலும் நாடோறும் மலம் நீங்கவேண்டியது அவசியம். வாய் கசந்தால், அஃது உள்ளே பித்தமும் கசண்டும் இருப்பதற்கு அறிகுறியாகும். அச்சமயம் தௌதி அல்லது கஜகர்மம் செய்க! ஆபாசங்கள் வெளியேறும். தினம் ஒருமணிநேரம் தேகப் பயிற்சிக்குச் செலவிடவேண்டும். இதை ஒவ்வொருவரும் தமது கடனாகக் கொள்ளவேண்டும். யோகாசனம் செய்ய முடியாத பேர், கசரத், பஸ்கி, பலீன்சடுகுடு, ஓட்டம், நீச்சு, பந்தாடல், தோட்ட

வேலை, நீர் இறைத்தல், துணி துவைத்தல், காலாற நடந்து வருதல் முதலிய பயிற்சிகளையாவது செய்க! நல்ல பசி, 11 மணிக்குத்தான் இயல்பாக வரும்; அப்போ துண்க! மாலையில் வேலையெல்லாம் தீர்ந்த பிறகு சுசிருசியாக உண்க! காலை பசித்தால் பழ ரஸம், இளநீர், கஞ்சி, கொத்தமல்லிக் கஷாயம்—இவற்றை யருந்தலாம்.

உண்பதற்கு ஒருமணி நேரத்திற்கு முன்பு, 'ஐந்து பூதங்களும் சுத்தியாகுக!' என்று நினைத்து ஐந்து விழுங்கு ஜலம் அருந்துக; உண்டு ஒருமணி நேரத்திற்குப் பிறகு, அரைமணிக்கொருதரம், ஐந்து விழுங்கு ஜலம் அருந்துக! இரண்டு நாட்கள் வெளிக்குப் போகாவிட்டால் அரைமணிக்கொருதரம் ஐந்து விழுங்கு துளசிநீர் அல்லது வெந்நீர் அருந்தி உபவாசமிருக்க வேண்டும்; வயிறு காலியாகி நாக்கில் இயல்பான சுவை வந்தபிறகு சாப்பிட வேண்டும். அதன்பின், குடல் சுத்தியாகும். தினந் தோறும் 9 மணிக்குமேல் அரைமணி வெயிலில் உலாவி, அல்லது தியானத்தில் இருந்து, அல்லது ஜபம் செய்துகொண்டிருந்து நன்றாக வேர்த்ததும், தொட்டியில் நீர்பரப்பி, அடிவயிற்றைத் தேய்த்துப் பிறகு நல்ல களிமண் பூசிக் குளித்துவந்தால் நரம்புகளுக்குப் பலமாகும்; எல்லா நோய்களும் தீரும். மலர்ச்செடிகளை வீட்டில் வளர்க்கவேண்டும்: துளசி வில்வம், வேம்பு, விபூதிப்பச்சை, மருக்கொழுந்து, கர்ப்பூரவல்லி, மல்லிகை, ரோஜா போன்ற தாவரங்கள் காற்றைச் சுத்தமாக்கும். தூயகாற்றும், நீரும், கதிர்முழுக்கும், மாதம் இரண்டு நாள் பட்டினியும், உடற்பயிற்சியும், சுசிருசியான உணவும், நல்ல

சிந்தனையும், ஆத்மத்தியானமும் இயற்கையான சுக வழியாம்.

**பச்சை யுணவுகள் :**—வாழை, ஆப்பிள், மா, பலா, ஆரஞ்சு, திராட்சை, மாதுளை, விளா, அத்தி, எலுமிச்சை, நாரத்தை, தர்பூசி, பேரீச்சை முதலிய கனிகள்.

**சல்லாத்திற் கேற்றவை :**—(Salad) வெள்ளரி, புடல், வெண்டை, தக்காளி, முட்டைகோஸ், பரங்கி, கீரைகள், சர்க்கரைவள்ளிக் கிழங்கு, கொத்தமல்லி யிலை, கருவேப்பிலை முதலியவற்றைத் துண்டாக்கித் தேங்காய்த்துருவல் சேர்த்து, இஞ்சித் துண்டம் போட்டு இந்துப்பும் சேர்த்து, எலுமிச்சம் பழம் பிழிந்து, கடலைவகை யேதேனும் கிடைத்தாற் போட்டு உண்ணலாம்.

**கடலை, கொட்டைவகைகள் :**—ஊறிய பாதாமி, கொத்துக்கடலை, நிலக்கடலை, பாசிப்பயறு, உளுந்து, துவரை, பட்டாணி, சாரப்பருப்பு, பிஸ்தா, தேங்காய்—இவை கனிகளுடனும் காய்கறிகளுடனும் சேர்த்து உண்ணத் தக்கன.

**சமைத்துண்ணத் தக்கவை :**—கையால் தீட்டிய அரிசி, கோதுமை, கேப்பை, கம்பு, சோளம், துவரை, பாசிப்பயறு, மொச்சை, கடலை வகைகள், கத்தரி, உருளைக்கிழங்கு, சேப்பங்கிழங்கு, கருணைக்கிழங்கு, முள்ளங்கி, முருங்கை முதலியன. பல்லுக்குக் கடினமாகவும், பச்சையாக உண்டால் சுவையற்றதாகவும் இருப்பவற்றைப் பதமாகச் சமைத்துண்ணலாம். சாதம், கூட்டு, கறி, பச்சடி, சல்லாத்து, கதம்பம் முதலிய எத்தனையோ வகையாக மேற்சொன்ன உணவுகளைக் கொள்ளலாம்.

விலக்கவேண்டிய தீய வுணவுகள் :—புலால், முட்டை, கள்வகைகள், காப்பி, டீ, கொக்கோ, டப்பியில் அடைத்துவரும் அந்நிய வுணவுகள், ஊசிப் போனவை, சமைத்து நாலைந்துமணியான உணவுகள், தாமஸவுணவுகள், அதிகக் காரமுள்ளவை, பஞ்சமா பாதகங்களால் வரும் பாபவுணவுகள்.

யோகிகளுக்கேற்ற உணவுகள் :—(1) தண்ணீரில் அல்லது பாலில் ஊறிய அவல், தேங்காய்த்துருவல், நிலக்கடலை, வெல்லம் ; (2) இரவில் ஊறிய கொத்துக் கடலை, வாழைப்பழம், தேங்காய்த்துண்டம் ; (3) ஊறிய பாசிப்பயறு, தேங்காய்த்துருவல், வாழைக் கனி, வெல்லம் ; (4) முன்சொன்ன கனிகளுடன் கடலைவகைகள்; (5) மா, பலா, வாழைக்கனிகள், தேங் காய்த்துருவல், ஊறிய பாதாமி; (6) முன்சொன்ன படி சல்லாத்து : எந்த நற்கனிகளுடனும் தேங்காயும் கடலையும் சேர்த்தால் புஷ்டியான உணவாகும். சமைத்துண்போர் அரிசி ஒரு பங்கும் பாசிப்பயறு காற்பங்குமாகச் சேர்த்து, அவை வெந்தபின் காய் கறிகளைப்போட்டு, அவை பக்குவமான பிறகு, இந்துப்பு, இஞ்சி, எலுமிச்சம்பழம், மிளகு இவை சேர்த்துப் பொங்க லாக்கி யுண்ணவேண்டும். கேப்பை, அரிசி. கோதுமை மாக்களுடன் வாழைப் பழத்தையும் துண்டாக்கிப் போட்டுப் பிசைந்து தேங்காய்த்துருவலும் சேர்த்து அடையாகத்தட்டி யுண்ணலாம். கம்பு, கேப்பை, பாசிப்பருப்பு, கோதுமை, தீட்டரிசி எல்லாவற்றையும் மாவாக்கி வைத்துக்கொண்டு முன்போல வாழைக்கனிசேர்த் துத் தேங்காய்த்துருவலுடன் பிசைந்து சப்பாத்தி தட்டியுண்ணலாம். காய்கறி கீரைவகைகளெல்லாம்

போட்டு ஒரு கூட்டும், பொங்கலும் சமைத்துண்ணலாம். தூதுவளை, மணித்தக்காளி, பொன்னாங்காணி, அறைக்கீரை, கொத்தமல்லி—இவை அடிக்கடி சமையலிற் சேரவேண்டும். மற்ற உணவு நெறிகளை உடலுறுதியிற் காண்க.

**தூயுணவு, தூயுறவு, தூயமனத் தூயர்க்குக்**
**காயமுங் கண்ணாடி யாம்.** 5

இதுகாறும் சொல்லியபடி பரிசுத்தமான உணவும், பரிசுத்தமான உள்ளுறவும், புறவுறவும், மாசற்ற மனமும் கொண்ட பரிசுத்தரான அறவோருக்கு, உடலும் கண்ணாடிபோலப் பளிச்சிடும்.

"சுத்தமோ டொன்றி மனமும் (ஆசையாணவங்களைவிட்டு) இறந்தக்கால், முற்றும் அழியா துடம்பு: பற்றற்று நின்று பழம் பொருளை யுணரில், முற்றும் அழியா துடம்பு" என்றாள் ஔவை. உணவைப்பற்றி மேலே சொன்னோம். உடலுறுதிக்கு, உடலைப் போலவே, மனமும் மாசற்றிருக்க வேண்டும்.

---

## 3. இயற் சிகிச்சை

**தீயமனத் தாலுந் திருவற்ற வாழ்வாலும்**
**நோய்பிறக்கு மென்றே நுவல்.** 1

புலன்களின் வழியே கண்டபடி திரியும் மனத்தின் கெட்ட நினைப்பாலும், அறமற்ற நலமற்ற தீய வாழ்க்கையாலும், உடலுக்குப் பிணி யுண்டாகிறது என்று சொல்லுக!

மனப்பிணி முற்றி உடற்பிணியாகிறது ; உடற்பிணி மனத்தையும் பற்றுகிறது ; மனக்கேடு உடற்கேடாம் : ஐம்புலன்களும் மனத்தை வெளியே

T82·2043 S4-26
1842


யிழுத்து அலையச்செய்து அமைதியைக் கெடுக்கின்றன. அமைதி கெட்டால் அறிவுங் கெடும்; ஆசைநோய் படரும். பகுத்தறிவை மனத்திற்குக் காவலாக வைத்துப் புறத்தினின்று வரும் தீமைகளை யெல்லாம் நன்கு விசாரித்து விரட்டியடிக்கச் செய்ய வேண்டும். பெருந்தீனி, பெருந்துயில், பெருங்காமம், குடலழுக்கு, ஆசையாணவம், பொறாமை, சோம்பல், கவலை, கள்ள நினைப்பு, பாபச்செயல் முதலியவற்றைச் செய்துவாழ்வு திருவற்ற வாழ்வாகும். உடலும், குடலும், உணவும், உளமும், செயலும் தூயவானால் நோயணுகாது.

தூயவுடை யூணுந் துகளறுவாழ் வுங்கொண்டால்
நோயு மருந்துமே னோ? 2

பரிசுத்தமானஆடையணிக; சுத்தமான உணவை அளவறிந் துண்க; கெட்டசேர்க்கையில்லாது பரிசுத்தமாக வாழ்க! பிறகு நோய் ஏன் வரும்? நோயில்லையானால் மருந்தும் எதற்கு? ஏனோ=எதற்காக?

பூத வுடலுக்கைம் பூதமே நன்மருந்தாம்;
பூதநிறை யைநாளும் போற்று. 3

ஆகாயம், காற்று, தீ, நீர், மண் ஆகிய ஐம்பூதங்களாலான யாக்கைக்கு, அந்த ஐம்பூதங்களே மருந்தாகும். ஆதலால், பஞ்சபூதங்களும் அளவாயிருக்கும்படி உடலைப் பாதுகாப்பாயாக!

“நிலத் தாயே! காற்றுத் தந்தையே! கதிர்த் தோழனே! தண்ணாகிய நல்லுறவே! உடன்பிறந்த வானே! உங்களுக்கு எனது இறுதி வணக்கம். உங்கள் உறவின் பெருமையால் நற்குணங்களைப் பெற்றேன்; மனந் தெளிந்தேன்; அதனால், சுத்த

ஞானம் பெற்றேன் ; மயக்கமொழிந்தேன் ; மயக்க மொழிந்து இதோ பரம்பொருளுடன் கலக்கிறேன்!" என்கிறார் **பர்த்ருஹரி.** சீதோஷ்ண நிலைக்கேற்றபடி உஷ்ணமானியில் (Thermometer) ரஸம் மாறிக்கொண்டிருப்பதுபோலவே, சித்தவிருத்திக்கும், கால வேறுபாடுகளுக்கும், செயல்களுக்கும் ஏற்றபடி பஞ்ச பூதங்களின் அளவும் உடலில் மாறிக்கொண்டிருக்கும். அவற்றைக் கண்டுபிடிக்கச் சித்தர்கள் பல யோகமுறைகளைச் சொல்லுகிறார்கள் : நாடிதாரணை செய்யும் யோகிகள் பஞ்சபூத நிறைகுறைகளை நன்கறிவர் : நாம் விடும் மூச்சு 12 அங்குலம் நீண்டால் பிருதிவி ; 16 அங்குலம் நீண்டால் அப்பு ; 4 அங்குலம் நீண்டால் தேயு ; 8 அங்குலம் நீண்டால் வாயு ; மூக்கிற்குள்ளாகவே மூச்சு ஓடினால் ஆகாயம் அதிகம் என்பர். நாடிதாரணையால் பிராண சக்தியை உடலில் நிரப்பிப் பஞ்சபூத நிறையை அளவாக்கலாம். (1) நல்ல காற்றைத் தாராளமாக உட்கொள்ளவேண்டும். பயிர்பச்சைகள் சோலை பூஞ்செடிகளில் உலாவி வரும் தூயகாற்றை யுட்கொண்டால் உடலுக்கும் மனத்திற்கும் இன்பமாகும் : வீட்டைச் சுற்றி அழுகும் மணமும் உள்ள செடிகொடிகளை வளர்ப்பது நல்லது. ஒரு சுரங்கத்தில் வேலை செய்பவர் உயிர், வெளியே சுற்றும் காற்றுப் பொறியைப் பொறுத்துள்ளது ; அது போலவே, தேகேந்திரியத்தின் விசையெல்லாம் காற்றுப் பையில் அடங்கியுள்ளது. காற்றுப் பையை நரம்புகள் இயக்குகின்றன. காற்றில் பிராண சக்தி கலந்துள்ளது. அதை முறையான இரேசக - கும்பக - பூரக சாதனங்களால் வசப்படுத்தவேண்டும். (2) தினந்தோறும் அரைமணி நேர

மாவது உடல் வேர்க்கக் கதிரில் உலாவவேண்டும்; அல்லது சூரிய நமஸ்காரஞ் செய்யவேண்டும். அதனால் தேஜஸ் அதிகமாகும்; (3) கதிர் முழுக் கானதும் நன்னீரில் முழுகவேண்டும்: தண்ணீர் மேலுக்கும் உள்ளுக்கும் நல்லது: நீரின்றிப் புறத் தூய்மை யியலாது; நீரின்றிக் குடல் சுத்தியாகாது. காலையில் உடற்பயிற்சியானதும் ஒரு தொட்டி நீரிற் படுத்து அடிவயிற்றை நன்றாகத் தேய்த்துப் பிறகு குளிக்கவேண்டும். ஒரு மணி நேரத்திற் கொரு தரம் சுத்த நீர் ஐந்து வாய் அருந்திவந்தால் குடல் சுத்தமாகும்; மலச்சிக்கல் இராது. மாதம் இரண்டு நாட்கள் பட்டினி யிருந்து, துளசி தீர்த்த மட்டும் அருந்தினால் உடல் சுத்தமாகும்; (4) மண் உடலிற் சேரவேண்டியது அவசியம்; கரம்பை மண்ணைப் பூசிக் குளிக்கலாம், செம்மண்ணில் குஸ்தி கசரத் முதலிய உடற் பயிற்சிகளைச் செய்யலாம்; இரவில் தரையில் ஆற்று மணலைப் பரப்பி அதன்மேற் பாய் போட்டுப் படுக்கலாம்; மண் சட்டிகளிற் சமைத் துண்ணலாம். இவற்றால், உடலில் மண் சத்துச் சேரும்; (5) அரசங்குச்சி, சந்தனக்கட்டை இவற் றால் தீமூட்டி, அருகே யமர்ந்து தியானித்தால் நலந் தரும். இக்கனலால் உடம்பில் அக்னிசக்தி அதிக மாகும்; (6) ராஜஸ தாமஸ நினைப்புக்களை விலக்கி, சாத்விக உணவும், நினைவுங்கொண்டு சாந்தமா யிருந்தால், ஆகாயம் உடலிற் புகும்; இவ்வாறு பஞ்ச பூதங்களின் அளவைக் காத்தால் நோயணுகாது. வேம்பு, நாரத்தை இலை, நாரத்தம்பழம், எலுமிச்சம் பழம், சூரத்தாவாரை யிலை, துளசி, வில்வம், மணித் தக்காளி, பொன்னாங்காணி, கரிசலாங்கண்ணி,

தூதுவளை, தும்பை, சிற்றகத்தி, கடுக்காய், இஞ்சி, சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், தாளிசபத்திரி, வால் மிளகு, இலவங்கப்பட்டை, ஜாதிக்காய், நிலைப்பனைக் கிழங்கு, ஓரிலைத்தாமரை, கீழாநெல்லி, மாதுளை, ஆரஞ்சு, விளாம்பழம், வாழைப்பழம், தேங்காய் —இவற்றை உபயோகித்து வந்தால் உடலுக்கு மிக்க நலமாகும். இவை பல நோய்களைத் தீர்க்கும். பஞ்ச பூதங்களின் நிறையைக் காக்கவே நம் பெரியார்கள் பிராணாயாமம், சந்தி ஜபம், ஸ்நானபானம், ஆகார சுத்தம், அக்னிஹோத்ரம், ஔபாஸனம், ஸமிதாதானம், சௌசம், மண்ணிட்டுக் கொள்ளல், மலர் பறித்து வழிபடல், புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை செல்லல் முதலியவற்றைச் சமுதாய வாழ்வில் இணைத்தனர்.

**உண்ணுமை மாற்றும் உடற்பிணியை ; காற்றொளிநீர்**
**மண்வாழ்வார்க் காகு மருந்து. 4**

உடலுக்கு வரும் நோய்களை உபவாசம் மாற்றிக் குணப்படுத்தும். நல்ல காற்றும், கதிரொளியும், நல்ல தண்ணீரும் உலகில் வாழும் மாந்தருக்கெல்லாம் இயற்கையன்னை எளிதாகத் தரும் மருந்தாகும்.

அளவில்லாமல், உண்டதையும் உமிழ்ந்ததையும் கவனியாமல், இயற்கையான பசி யில்லாமல் சோற்றையும் பணிகாரங்களையும் வயிற்றிலே திணிப்பதால், அல்லும் பகலும் ஓயாது வேலை செய்யும் உணவுறுப்புக்களுக்கும் நரம்புகளுக்கும் கடுமையான வேலை யேற்படுகிறது. வயிற்றுக்குச் செய்யும் இக் கொடுங்கோலைத் தாங்காமல் இயற்கை செய்யும் புரட்சியே நோயாகும். உறுப்புக்களுக்கு

ஓய்வு தருவதே உபவாசமாகும். அதனுல் பாக்கி யுள்ள வேலையை இயற்கை செய்து முடிக்கும்; உடலுறுப்புக்கள் அமைதியாக இயல் நிலை யடைந்து புதிய வேலையைச் செய்யத் தயாரா கும். பட்டினியால் உடம்பும் மூளையும் சுத்த மாகும். பசித்துப் புசித்தல், மலச்சிக்கலுக்கு இடங் கொடுக்காமல் முன் சொன்ன ஹடயோக முறை களால் தேகசுத்தி செய்துகொள்ளல், இவையிரண் டும் உடலுறுதிக்கு இன்றியமையாதன: நோய் வந்தால் இயல்பான பசி மந்தப்படும். காய்ச்சல் வந்தால் நாக்கிற் சுவையிராது. இயற்கை, 'உண் ணுதே' என்று எச்சரிக்கை செய்யும். "லங் கணம் பரமௌஷதம்" என்பது பழமொழி. இயற்கையன்னை நல்ல மருந்தை எளிதாக ஏராள மாகத் தருகிருள். ஐம்பூத நிறை மிகினும் குறையி னும் நோய் செய்யும். காற்றும், கதிரும், நன் னீரும் போதிய அளவு உடலிற் சேர வாழ்ந்தால் நோயற்றிருக்கலாம்.

**உண்ணும் பணியை யுடல்வாழ் பரமனுக்கே**
**பண்ணும் பணியாகப் பார். 5**

எல்லாரும் வயிற்றிற்கு உணவு கொடுக்கும் பணி செய்தாகவேண்டும். அப்பணியை உடலில் இடங்கொண்ட பரமாத்மாவின் வழிபாடாகச் செய்க: நாம் சோறுமட்டும் உண்ணவில்லை; வாயாற் பலவகை உணவுகளை யுண்கிருேம்; நீர் பருகுகிருேம்; மூக்கால் காற்றை யுட்கொள்கிருேம்; காதால் சத்தத்தை யுட்கொள்ளுகிருேம்; கண் களால் காட்சிகளை உட்கொள்ளுகிருேம்; தோலினுல் காற்றையும் பரிசங்களையும் உட்கொள்ளுகிருேம்;

புலன்களால் தோன்றும் உலகின் காட்சிகளையும் உணர்ச்சிகளையும் உட்கொள்ளுகிறோம். மனத்தினால் எத்தனையோ எண்ணங்களை உட் கொள்ளுகிறோம். இத்தனைக்கும் சாட்சியாக உள்ளத்தில் அமர்ந் திருக்கும் சுத்த பரமாத்மனை எண்ணுக ! உட் கொள்ளும் ஒவ்வொன்றையும் 'அவனுக்குகந்த தா ?' என்று விசாரித்து, உகந்ததாயின் உள்ளே யனுப்புக ; இன்றேல், வெளியே துரத்துக ! ஓர் அரசாங்கத்திலுள்ள சேவகர் பணிகளெல் லாம் அரசனைச் சூழ்ந்து, அவன் ஆணையால், அவன் புகழோங்கவே செய்யப்படுகின்றன. அதுபோலவே, உடலாகிய அரசாங்கத்தில் உள்ள எல்லா உறுப்புக்களின் வேலைகளும், ஆத்ம ராஜனுக்காகவே அவனது சக்தியாற் செய் யப்படும். இயற்கையின் மூலம், 'இன்னது செய் ; இப்படிச் செய் ! என்று அவன் நம்மை ஏவுகிறான், அந்தக் கட்டளைப்படி நடந்தால், அவனுடன் கலந்து, நாம் அவனைப்போலவே இன்புறலாம். அதனாலேதான் கீதையில் பகவான், " நீ எது செய் தாலும், எதை யருந்தினாலும், எத்தவம் புரிந்தாலும், எவ்வேள்வி யாற்றினாலும், எல்லாம் எனக்கே யர்ப்பணமாகச் செய் ; என்னைச் சரண்புகுந்து என் னுணர்வுடன் வாழ் !" என்று தெளிவாகக் கூறினார். " உண்ணுஞ் சோறு, பருகுநீர், தின்னும் வெற்றிலையு மெல்லாம், கண்ணன் எம்பெருமான் என்றே கண் கள் நீர் மல்கி " என்றார் யோகி நம்மாழ்வார். " நானே தீயாக நின்று, ப்ராணபானங்களைச் சமப்படுத்தி, உண்ணும் உணவைச் செரிப்பிக்கிறேன் : நானே மெய், வாய், கண், மூக்குச் செவிகளினின்று மனத்

தின் மூலம் விஷயங்களை உட்கொள்ளுகிறேன்'' என்கிறார் பகவான் கீதையில். அவனுக்கு நிவேதிக்கும் உணவும், உணர்வும், நினைப்பும், வாழ்வும் பரிசுத்த மாகுக!

## 4. மன வுறுதி

நிலைத்த மனமே நிலைபெறும்; ஆசை
யலைத்த திடர்க்கடலே யாம். 1

யோகத்தின் பாதிவேலை அங்குமிங்கும் புலன்கள் வழியே அலையாமல், மனத்தை உறுதியாகத் தன்னுள்ளே நிலைநிறுத்துவதேயாம். அப்படி அடங்கி நின்ற மனமே நிலைபெறும்; மோட்சமாகும்.

ஆசையினால் அலைக்கப்பெற்ற மனம் இடர்க் கடலே யாகும்: விஷயாதிகளை நினைத்தால் அவற்றிற் பற்றுண்டாகிறது; பற்றினால் ஆசை யுண்டாகிறது; ஆசை நிறைவேறாவிட்டால் குரோத முண்டாகிறது; குரோதத்தால் மோகமுண்டாகிறது; அதனால் நினைவு மயங்குகிறது; அந்த மயக்கத்தால் புத்தி கெடுகிறது; புத்தி கெட்டால் ஆள் ஒழிந்துபோவான். ராக த்வேஷங்களுடன் கூடிய விஷயங்களில் திரியும் இந்திரியங்களை அடக்கித் தன்வசப்படுத்தினவன் சாந்தமடைகிறான். அந்த ஆத்ம சாந்தியால் எல்லாத் துக்கங்களும் நீங்கும். "யோகமற்றவனுக்குப் புத்தி தன்னுள் நிலைக்காது" என்று கண்ணபிரான் உபதேசிக்கிறான். மனப் படகு விஷயப் புயல்களிற் சிக்கி யலையாமல் உள்ளடங்கி யமைதி பெறுவதே யோகசாதனத்தின் முதற்படியாகும். 'அவ்வாறு சித்தத்தை அடக்கலே யோக' மென்றார் பதஞ்சலி.

**சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே**
**பற்றற்று நிற்கப் பயில்.** 2

நெஞ்சம் அடங்காப் பேயாகும். அஃது ஆசா பாசங்களிற் சுற்றி யலைந்து, நமது அமைதியைக் கெடுக்கிறது. துன்ப வழியிற் செல்லாமல், அதை மெல்ல அடக்கி யிழுத்துத் தன்னுள் பரமசுகமாக விளங்கும் சுத்தான்மாவை அடையும் வழியில் உய்த்துப் புறப்பற்றுகளை நீங்கி யிருக்க, யோகப் பயிற்சி செய்க !

இது, பதஞ்சலி யோக சூத்திரங்களின் சாரமாகும்.

அகமெனக் கிளம்பும் மனத்தை யடக்குவதே சுகமாகும். "சும்மா இருக்கின்ற திறம் அரிது சற்றுகிலும்" என்றார் தாயுமானவர். மனம் அலையாது அமைதியா யிருப்பதே சும்மா இருப்பதாகும்: சும்மா விருத்தல் திண்ணை தேய்க்கும் சோம்பேறித்தனம் அன்று; உலகில் கோடி பணிகள் செய்தும், மனங் கலங்காமல் சமநிலையில் உறுதியா யிருத்தலே சும்மா இருத்தலாம். அடங்கிய மனம் வினையுலகின் வாழ்விற்கு அச்சாணிபோலாகும். உலகில் அரிய பெரிய காரியங்களைச் சாதித்த மகான்களெல்லாம், முதலில் மனம் சும்மா இருக்கப் பயின்றவரே யாவர். அன்னிய மெண்ணாமல் தன்னைப்பற்றி யிருத்தலே சும்மா இருத்தலாம். கிளைகள் காற்றில் எவ்வளவு ஆடினாலும், வேர் மண்ணுள் ஆழ்ந்து ஊன்றி யிருக்கிறது. அதுபோலவே, மனமும் ஆன்மாவில் வேரூன்றி வாழ்வைப் பூவுங்கனியும் குலுங்கச் செய்யவேண்டும். நெஞ்சம் பாசக்கயிற்றாற் பிணைக்கப்பட்ட ஒரு சஞ்சலப் பிராணி; அப்பாசக்கயிறு எல்லையற்றது. அதனால்

இப்பிராணி உலகெல்லாம் திரிந்து அல்லற்படுகிறது. பாசக்கயிற்றை மெல்ல மெல்லச் சுருக்கி, நெஞ்சப் பசுவை அமைதி யென்னும் முளையிற் கட்ட வேண்டும்; அதுவே இங்கு, 'நெஞ்சைச் சுருக்கி' எனப்பட்டது.

**சினத்துடனே மண்ணைச் செயிப்பதினுந் தத்தம்**
**மனத்தை யடக்கிடலே மாண்பு, 3**

பிறநாட்டார்மேற் சினங்கொண்டு, குண்டும் பீரங்கியும் விஷப்புகையும் போட்டுக் கோடானு கோடி மக்களைப் படுகொலை செய்து, உலகை வெல்லப் பார்க்கின்றனர் மண்வெறி பிடித்த அரக்கர்! அவர்களுடைய வெற்றியினும், மனத்தை யடக்கி வாழும் உபசாந்தமே பெருமை தரும்.

"ஆசைக்கோர் அளவில்லை". வாள்கொண்டு உலகை வென்ற ஸீஸர், சிக்கந்தர், நெப்போலியன் போன்றோர் மண்ணுயினர். உலக சரித்திரத்தில் அவர்கள் வரலாறு பயங்கரமான இரத்தக் கறைகள் போலிருக்கின்றன. மனத்தை யடக்கிய சங்கரர், புத்தர், மஹா வீரர், ஏசுநாதர், அப்பர், நம்மாழ்வார் போன்ற மகான் களின் வாழ்வே மனிதனுக்கு ஆறுதலளித்து வழி காட்டுகிறது. மனமடங்கிய உபசாந்தரே பாரத சமுதாயத்தின் நடைமுறையையும் நாகரிகத்தையும் வகுத்தனர். ஹிராக்குகையில் மனமடங்கித் தியானித்த முகம்மது ரஸூல் வாயிலாகவே அல்லா, திருக்குரானை யருளி, மனித சமுதாயத்திற்குப் பக்தி மார்க்கத்தைக் காட்டினர். அடங்க அடங்க மனத்திற்கு அபாரசக்தி யுண்டாகும். மனமடங்கிய யோகிகள் சும்மா இருந் தாலும், அவர்களது தேஜஸ் சுற்றிலும் பரவி உலகைச் சுத்தமாக்கும். திருப்புளிப் பொந்தில் அமர்ந்து,

இறைவனை உள்ளத்திற் கலந்து, சும்மா இருந்த நம்மாழ்வாரின் யோகக்கனல், ஒரு மதுரகவியை வசப்படுத்தி, அவர் மூலம் உலகிற்குத் திருவாய்மொழி யமுதத்தை யீந்த தன்றோ?

**நிலைக்கு நலநாடி, நீளவா தாண்டி**
**அலைக்கு மனத்தை யடக்கு.** 4

'நிலையான பொருள் இன்னது; நிலையற்ற தின்னது' என்று அறிக; நிலையான பொருளிலேயே மனத்தை ஊன்றுக:

அப்படி மனத்தை ஊன்றவிடாமல் தடுப்பவை நீண்டகாலமாக அதைப்பற்றி யலைக்கும் அவா, ஆசை, சங்கற்ப விகற்பக்குழாம்—இவையேயாம். அந்த அவா ஒரு பெரிய கடல்; அதை வைராக்கியமும் யோகப்பயிற்சியும் கொண்டு தாண்ட வேண்டும்; அவா அடங்கினல் அமைதி கைகூடும். ஆன்மா உண்மை; அஃது என்றும் நிலைத்திருப்பது, இயற்கைத் தோற்றங்க ளெல்லாம் காலநிலைபோல் மாறுவன. ஆன்மா சத்து; அதற்கு, அன்னியமானவை அசத்து. உண்மைக்கு அழிவில்லை; இன்மைக்கு இருப்பில்லை: இதைத் தெளிந்தவனே தத்துவஞானியாவன். 'நிலைபொருள் இன்னது, அலைபொருள் இன்னது' என்றறிந்து, நிலையான தன்னுள் ஊன்றுக! 'தோன்றியழியும் பொருட்களில் மனம் ஆசை கொண்டலைந்து, தனது சொரூபமான நிலைபொருளை மறப்பதே, சகல துக்கங்களுக்கும் காரணமாம்' என்பதே வேதசாரமாகும். இக்கருத்துள்ள கீதாவாக்கியத்தையே மஹா வாக்கியமாகக் கொண்டு, சங்கரர் பாஷ்யம் செய்கிறார்.

நினைப்பி னுருவே நிசமாகு ; நல்ல
நினைப்பையே தேர்ந்து நினை. 5

நாம் எந்த நினைப்புடன் இருக்கிறேமோ அந்த வடிவே நமது வாழ்வும் ஆகும் ; நினைப்பின் வடிவே நிசவடிவு ; ஆதலால், நல்ல நினைப்பையே எப்போதும் நினைக்கவேண்டும்.

மகான்கள் கட்டளையிட்ட ஆசார அனுட்டானங்களெல்லாம் நல்ல நினைப்பு, நல்ல சித்த விருத்தி— இவற்றை யுண்டாக்குவதற்கேயாம். உயர்ந்த நினைப்பு எது? 'நான் சுத்தான்மா; என்னைச்சூழ்ந்த உலகமெல்லாம் அதன் மயம் ; அனைவரும் என்னவரே' என்ற சிந்தனையில் ஊன்றியிருப்பதேயாகும். அஹிம்ஸை, உண்மை, தீங்கின்மை, கள்ளாமை, பொய்யாமை. விந்தடக்கம், புலனடக்கம், பிறர்பொருளை அவாவாமை, திருப்தி, ஜபம், தவம், கற்றல், கேட்டல், சிந்தித்தல், கடவுள் வணக்கம் முதலியவற்றைப் பெரியார்கள் அறவாழ்விற்கு அடிப்படையாக்கினர். அவற்றாற் சித்தசுத்தி யுண்டாகித் தனது உண்மைப் பொருள் விளங்கும் ; நினைப்பே மனிதன். "கொலை நினைப்பே என்னைக் கொலைக்கு அஞ்சாதவனாக்கி விட்டது" என்கிறன் மாக்பெத் இறுதிக் காட்சியில். "நல்லது மில்லை, பொல்லதுமில்லை. நினைப்பே அவ்வாறு காண்கிறது" என்கிறர் ஷேக்ஸ்பியர். ஓர் அழகான சிலை, சிற்பியின் நினைப்பு வடிவேயாம். ஓர் அழகான ஓவியம், சித்திரப் புலவனது நினைப்பின் வடிவமாம். ஒரு காவியமும், கவியின் நினைப்பு வடிவாம். அதுபோலவே, ஒருவன் வாழ்க்கையும்அவனது அந்தரங்கமான நினைப்பின் பிரதிபிம்பமே யாகும். யோகி ஆத்மத் தியானத்துடனே யிருந்து, அதுவே

யாகிறான். "எதை நினைக்கிறாயோ, அதுவே யாகிறாய்" என்பது ஆன்றோர் வாக்கு.

## 5. சித்த ஜயம்

**வந்ததையும் போனதையும் வேதனைப்பட் டெண்ணுவதேன்?
சிந்தையலை யாதிருக்கச் செய். 1**

சித்த ஜயமே ஆத்ம ஜயத்திற்கு வழியாகும். வாழ்வில் வந்த வினைகளையும், போன வினைகளையும் நினைத்துச் சித்தம் சதா வாதனைப்பட்டு அலையும். சிந்தை அலையாமல் உள்ளே அடங்கியிருக்கச் செய்க!

சித்த ஜயமே சித்தினிற் சித்தாம். "அர்ஜுனா, மனம் அடங்கரிய சஞ்சலப் பொருள்தான். அப்பியாசத்தினாலும் வைராக்கியத்தினாலும், அதை வசப் படுத்த முடியும். சஞ்சலச் சித்தம் எதெதில் அலைகிறதோ, அததனின்று அதைத் திருப்பி, உன் வயப் படுத்துவாயாக! கலங்காது நிலைத்த மனமுடைய யோகி அமைதிபெற்றுப் பிரம்மத்தை யறிகிறான்" என்பது கண்ணன் உபதேசம்.

**ஒன்றினை யொன்றலே யோகம்; அலைமனத்தை
வென்றிடி னென்றும் விரைந்து. 2**

எல்லா யோகசாரமும் இதுவே: உள்ளது ஒன்று; அஃது, ஒவ்வொருவருள்ளும் சுத்தான்மாவாக உள்ளது. அதைக் காண முடியாமல் பாசமனம் தடை செய்கிறது. அலையும் மனத்தை வென்று அடக்கினால், அது சுத்தமனமாகி, சுத்தாத்மாவுடன் விரைவாக ஒன்றுபடும். "ஒன்றைப் பிடித்

தோர்க்கே - பசுவே - உண்மை வசப்படுமே" என்றார் இடைக்காட்டுச் சித்தர். ஆடியாடிச் செல்லும் 'ஜட்கா' வண்டியில் உட்கார்ந்து எழுதத் தொடங்கினால், எழுதுகோல் அங்குமிங்கும் அசைந்து, ஓர் எழுத்துக்கூடச் சரியாய் விழாமற் செய்யும். அது போன்றேதான், கண்டபடி அலையும் மனத்தைக் கொண்டு யோகந் தொடங்கினால், ஒரு சித்தியும் உண்டாகாது. "மனமடங்கக் கல்லார்க்கு வாயேன், பராபரமே" என்றார் தாயுமானவர், "மனத்தை ஆத்ம வசப்படுத்தி, அதில் இருத்தி, வேறொன்றையும் கருதா திரு!" என்றார் பகவான் கீதையில். "தியானத்தினால் மனம் சலியாதிருக்கச் செய்க! ஏகாக்கிரம் உண்டானால் தியானம் கைகூடும்" என்கிறார் வியாச பகவான். "சித்தம் ஆத்மாவில் ஊன்றலே தாரணை; அதிலே மனம்தொடர்ந்து நிற்றல் தியானம்; வடிவை மறந்து பொருளைப்பற்றி, அதுவேயாதலே சமாதி" என்றார் பதஞ்சலி.

**நீனி முயக்கினிலே செல்லாதுன் வாணாளில்**
**ஞான முதிர்ச்சிபெற நாடு. 3**

வாணாட்கள் குறுகியன. அவற்றைக் கொண்டு வினைதீர்ந்து விடுதலை பெற்று, உண்மைப் பொருளைக் கூடிப் பூரணானந்த மெய்தவேண்டும். விதவிதமான தீனிகளைத் தின்பதிலும், காமப் புணர்ச்சியிலும் வாழ்க்கை செலவழிந்து போகாது, ஆத்மஞான முதிர்ச்சி பெறவே அதைச் செலவிடுக!

தாயுமானவர், "தாகமறிந்து, இன்பநிட்டை தாரா யேல், ஆ, கெடுவேன்! தேகம் விழுந்திடில், என் செய்வேன் பராபரமே?" என்று கதறினர். "தன்னை அறியும் அறிவுதனைப் பெறில், பின்னைப்

பிறப்பில்லை வீடு" என்று மகா யோகியான ஔவை தெளிவாகக் கூறுகிறாள். "உண்டியே உணவே நினைந்தோடிடும் - மண்டலத்தொடுங் கூடுவதில்லை நான்" என்று குலசேகராழ்வார் இறைவன் திருவடியைப் பற்றுகிறார். செடிக்கு உரம் போடுவதுபோன்று, உடலுக்குத் தீனி போடவேண்டியதுதான். அந்த உரத்தைப் பயன்படுத்திக்கொண்டு பூவுங் கனியுங் குலுங்குவதன்றோ செடியின் வாழ்க்கை? அது போல, உடலைப் பேணுவதெல்லாம் இந்தத் தூலா தாரத்தைக்கொண்டு உடம்பிலுள்ள உத்தமனை அறிந்து கலப்பதற்கேயாம். அந்த ஞானானந்தத்தை யுணர்ந்தே பெரியார்கள் ஆண்பெண் இன்பத் தையும், 'சிற்றின்பம், அற்ப சுகம்' என்றனர். "தன்னை யறியவேணும்; பின்னை யறிவதெல்லாம் பேயறிவாகுமடி" என்றார் அகப்பைச் சித்தர். "எனக்கு ஞானியைக் கண்டால் மிகவும் விருப்பம். ஞானி என்மய மாவன்; 'நானே ஞானி' (ஞானீ து ஆத்மைவ) என்பது எனது கொள்கை; பல பிறவிகளில் மனம் பழுத்து ஞானியாகிறான். விளைக்களமாகிய உலக வாழ்வின் முடிவு ஞானமே. 'எல்லாம் இறைமயம்' என்னும் சமதரிசனம் பெற்ற மகாத்மா மிகவும் அரியன்" என்கிறான் பூர்ண யோகேசுனை கண்ணன்.

**இன்பத்தி லின்பம் எனைத்திலுங் கட்டின்மை ;**
**துன்பத்துட் டுன்பந் தொடுப்பு.** 4

'தொடுப்பு' என்றால் கட்டு, பந்தம், பிணைப்பு எனப்படும். எல்லாத் துன்பத்திலும் பெரிய துன்பம், நம்மை உண்மைப் பொருளினின்று மயக்கிப் பிரித்து மாயப் பொருள்களுக்கு அடிமையாக்கும் பந்தமேயாகும். எதிலும் கட்டில்லாது சுயேச்சை

யாக மெய்ப்பொருளுடன் கலந்திருத்தலே இன்பங்களிலெல்லாம் இன்பமாம். "ஆசை விடவிட ஆனந்தமாமே! ஆசை யறுமின்கள், ஆசை யறுமின்கள்!" என்று முறையிடுகிறார் யோகி திருமூலர். 'பற்றிலாது ஒன்றினைப் பற்றினால் அல்லது, கற்றதால் என்ன பயன்?' என்று ஒரு கேள்வியைப் போடுகிறாள் நம் ஔவைப் பிராட்டி. "வாளின் அலகில் தடவிய நெய்யை நக்கி நாய் புண்ணுறுவது போலவும், விடங் கலந்த பாயசத்தை ஒருவன் பசிக்கு உண்பது போலவும், உலகில் விஷய சுகத்தையே சுகமென்று பற்றி மனிதன் துன்புறுகின்றான். விளக்கில் விழுந்து விட்டில் சாகிறது. அதுபோல, விஷய சுகங்களில் விழுந்து, மனிதன் பேரின்பத்தை யிழக்கிறான்" என்று ஒழிவிலொடுக்கம் முறையிடுகிறது. போதியடியில் நீண்டகாலம் அமர்ந்து தியானித்துப் புத்தர் கண்ட உண்மை யென்ன? "பற்றற்ற கண்ணே பிறப்பறும்" என்பதேயாகும்.

**பற்றற்று வாழ்ந்து, பரம சுகமெய்தக்**
**கற்றாரே கற்றார்க் கிறை.** 5

ஆசையாணவச் சுழல்களில் மனம் பற்றாமல் நீரிற் படகுபோல உலகில் வாழ்ந்து, பரம சுகமாகிய சுத்தான்மப் பேரின்பத்தை யடையச் சாதன மார்க்கங்களைக் கற்று நின்றவரே கல்வியிற் சிறந்த புலவர்களுக்கெல்லாம் தலைவராவர். "பற்றது பற்றிற் பரமனைப் பற்றுமின் - கற்றவர் பேரின்பம் உற்று நின்றாரே" என்றார் யோகி திருமூலர்.

# 6. மௌனம்

செவிப்படக் கேட்டவை சிந்தித்துச் சித்தங்
குவிப்பது கற்பின் குறி. 1

யோகி நன்னூல்களைக் கற்க வேண்டும், கேட்க வேண்டும். ஆனால், கல்வியின் குறிப்பென்ன? கேட்டவை கேட்டவை விடாது, உளத்தில் அமைத்துப் பொருளை நன்கு சிந்தித்து, சித்தத்தை உட்குவித்து, அலையவிடாது கற்ற பொருளில் நிறுத்தித் தியானிப்பதே கற்பதன் நோக்கமாகும். யோகி அடியில் வரும் ஆறு விஷயங்களைக் கற்றுக் கேட்டுத் தெளிந்து, சித்தமடங்கப் பயிலவேண்டும் :—

(1) யோகி அறியவேண்டிய மந்திரம் :—தத்வமஸி, சுத்தோஹம், அயமாத்மா ப்ரஹ்மம், நான் ஆன்மா, ஸோஹம்.

(2) சாதன சதுஷ்டயங்கள் :—சமம், தமம், திதிக்ஷை, உபரதி, சிரத்தை, சமாதானம் ஆகிய ஆறு சம்பத்திகள், வைராக்கியம், நித்யாநித்ய விவேக விசாரம்.

(3) ஞானத்திற்குரிய மூன்று வழிகள் :—அன்பு, உறுதி, அடக்கம்.

(4) விலக்கவேண்டிய தீமைகள் :—காமம், குரோதம், லோபம்.

(5) பக்தியோகிக்குச் சாதனங்கள் :—இறைவன் பெருமையைக் கேட்டல், பாடல், நினைத்தல்; திருவடித் தொண்டு, மலர் தூவல், வணங்கல், ஆத்ம நிவேதனம்; தொண்டன், நண்பன், குழந்தை, காதலி முதலிய ஒரு பாவனையில் அன்பு செய்தல், அல்லது சாந்தமாகத் தியானித்தல்.

(6) ஞானியின் அஷ்டாங்க சாதனம் :—புலனடக்கம் இயமம் ; அன்புறுதி நியமம் ; மனம் நிலைத்தல் ஆஸனம் ; உண்மை யறிந்து அதையே உள்ளிருத்திப் பொய்யை விடுத்தல் பிராணாயாமம் ; உண்மையினின்று மனம் விலகாதிருத்தல் பிரத்யாகாரம் ; மனத்தைச் சுத்தான்ம நிலயமான உள்ளத்தில் நிறுத்தல் தாரணை ; 'பஞ்ச கோசமும் நானல்லன், நான் சுத்தான்மா' என்று அதே நினைப்பா யிருத்தல் தியானம் ; சுத்தான்ம சாக்ஷாத்காரமே சமாதி ; அந்தச் சுத்தான்ம இன் பத்தை உலகெங்கும் பரவக்காணலே போகப் பயன்.

வாயடங்க நெஞ்சடங்க மௌனமே மந்திரமாம் ;
சேயடங்குந் தாய்வரவி னால். 2

வாயும் மனமும் அடங்கித் தியானம் நிலைக்க மௌனமே மந்திரமாகும். அழும் குழந்தை அடங்கத் தாய் வருவதுபோல, மௌனம் வந்து யோகியின் மனங்குவியச் செய்யும்.

கோடானுகோடி நட்சத்திரங்கள் எவ்வளவு அடக்கமாக, மௌனமாக யாத்திரை செய்து இருளைக் கடந்து காலைக்கதிரிற் கலக்கின்றன? அதுபோல, சாதனஞ் செய்யும் யோகி அடக்கமும் மௌனமும் பூண்டு, அத்யாத்ம சித்தியிலேயே குறிப்பா யிருந்து, ஆத்ம ஒளியைக் கண்டு கலக்கவேண்டும். நிறை குடம் தளும்பாது. ஆழ்கடல் அலையாது. 'சாந்தம், சாந்தம், அமைதி, அமைதி' என்று நமது நெஞ்சக் குழந்தை அலறுகிறது. அந்த அமைதியைத் தரும் தாய் மௌனமே யாகும். உலகின் ஒப்பற்ற வேதங்க ளெல்லாம், அருட்பாடல்க ளெல்லாம் மௌனத்தின் வரப்பிரசாதங்களேயாம். சைத்திரிகனொருவன் அழு கான சித்திரம் எழுதும்போது, யாருடனும் பேச

வியலான். "ஐயன் வந்து என்னுள்ளம் புகுந்து கோயில் கொண்டபின், வையகத்தில் மாந்தர் முன்னம் வாய்திறப்ப தில்லையே" என்ருர் சிவ வாக்கியர். "மோனங்கை வந்தோர்க்கு முத்தியுங் கைகூடும்; மோனங்கை வந்தோர்க்குச் சித்தியும் முன்னிற்கும்" என்ருர் திருமூலர். "ஞானத்தால் ஆய உடம்பின் பயனன்றே-மோனத்தா லாய உணர்வு!" என்ருள் ஔவை. "ஆனந்த மாகவுன்னை யன்றியொன்றை யுன்னுத-மோனம் தமியேற்கு முத்தி பராபரமே; முத்திக்கு வித்தான மோனக் கரும்புவழி - தித்தித் திடவிளைந்த தேனே பராபரமே" என்று தாயுமானவர் தமிழ் வேதம் முறையிடுகிறது. தாயுமானவர் முழுதும் மோன மயமேயாம். அவர், மௌன குருவிடம் பெற்றதும் மௌனேபதேசமே; "மௌனேபதேச குருவே" என்று அவர் தன் ஞானசிரியனைக் குறிக்கிருர்.

தானுகக் கூடுந் தலைவன்முன் பேச்சடங்கும்
ஆனுத மோன மது. 3

(ஆனுத = நீங்காத). மேற்குறித்த மோனம், கேவலம் வாய்மோனமன்று. சிலர் வாயினல் மௌன விரதம் பூண்டு, கைச்சாடை காட்டி அல்லது எழுதி, 'அது கொண்டா, இது கொண்டா' என்று நைப்பர்; அது மோனமன்று. மோன மென்ப தென்ன? "மோனமென்பது ஞான வரம்பு" ஆகும். தன்னைக் காதலிக்கும் தலைவன் தானுக வந்து கூடும்போது, காதலி பேச்சடங்கி, அந்த இன்பத்திலேயே மனம் நீங்காது லயித்திருக்கிருள் என்ருே? ஆசையாணவங்களெல்லாம் அடங்கிப் பரம சுகப்பொருளான இறைவன், ஜீவனை உட்கலந்து கூடும்போது, இயல்

பாக உண்டாகும் ஆனந்த மோனமே மோனமாகும். "என்னைத் தனிக்கவே சும்மா இருத்தி, முன்னிலே ஏதும் இல்லாதே சுகமுற்றச் செய்தே யென்னைப் பற்றிக் கொண்டாண்டி; சற்றும் பேசாத காரியம் பேசினன் தோழி; சற்றும் வாய்பேசா வண்ணம் மரபு செய்தாண்டி; என் உள்ளம் உருக உபாயஞ் செய்தாண்டி: ஐயன், என்னைத் தானாக்கித் கொண்ட சமர்த்தைப் பார் தோழி!" என்று தாயுமானவர் தனது ஐக்கியானுபூதியை வெகு உருக்கமாக ஆனந்தக் களிப் பென்னும் தமிழ் உபநிஷத்தில் வர்ணிக்கிறார்: "வேறு படும் சமயமெலாம் முடிவில் மோன வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா!" என்று மௌனத் தின் எல்லையைக் குறிக்கிறார் தாயுமான மஹரிஷி.

**வாய்ப்பேச் சடக்க, மனமடங்கி நாடியாழ்**
**பாய்ச்சும் பரநாதப் பண்.** 4

உள்மௌனத்திற்கு வாய்மௌனம் பெருந் துணையாகும். மனிதனுக்கு விவகாரங்களெல்லாம் வாய்ப்பேச்சால் வருவன. வாயடங்கினல் மன மடங்கும்; மனத்தின் ஒலிபரப்பியே வாய். அநா வசியமாக ஒரு வார்த்தைகூடப் பேசாமல், அவசிய மான பதில்மட்டும் சொல்லி நாம் பேச்சைச் சுருக்க வேண்டும். அதிகம் பேசுவதில் எத்தனையோ பொய் களும், அகங்கார மமகாரங்களும் கலந்துவரும்; மௌனத்தால் இவை யொழியும். 'நாடி யாழ்' என்பது மேருதண்டமாகிய வீணையாகும்; அதில் பத்து நரம்புகள் இணைக்கப் பெற்றுள்ளன. அவை யாவன:—அத்தி, அலம்புடை, காந்தாரி, குரு, சங்கினி, சிகுவை, புருடன், இடை, பிங்கலை, சுழிமுனை. அவற்றில் இறுதி மூன்றும் முதன்மையானவை.

இந்த நாடிகள் தசவாயுக்களை யியக்குகின்றன. தச வாயுக்களாவன :—பிராணன், அபானன், உதானன், ஸமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்சயன். வாய் கண்டபடி பேசுவதால், மூச்சு அதிகமாகச் செலவழிகிறது; வாயுக்கள் சிதறிப் போகின்றன; நரம்புகள் அமைதி யிழந்து கலங்கு கின்றன. அதனால், மனமும் கலங்குகிறது. உண்மை யான மௌனத்தால் வாயு அடங்கிக் கேவலகும்பகம் சித்திக்கும். கேவல கும்பகமாவது மூச்சு மூக்குத் துளைகளின் வழியே 'உஸ், உஸ்' என்று போகாமல் உள்ளடங்கி, சுழிமுனையில் இலயித்தலாம். இதையே ஔவையார் "இரேசக, பூரக, கும்பக மாற்றில், தராசு முனைபோல் நிற்குந் தலை" என்று குறித்தார். இவ்வாறு வாயு அடங்கும்போது, நாடிகளில், 'ஓம், ஓம்' என்று இடைவிடாது இனிய நாதம் கேட்கும். அதுவே உள்ளக் கண்ணனின் ஓங்கார முரளி! மனமாகிய கோபி அதில் இலயித்து நிற்கும்போதே பேரின்பமுண்டா கும். நாடியாழ் இவ்வாறு பரநாதமாகிய ஓங்கா ரத்தைப் பாய்ச்சினால், மனம் உயிர் உடல் அனைத்தும் புதுமை பெறும். "ஓம் எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே" என்றார் திருமூலர். பேச்சடங்கி, உள்ளே நாதானுசந்தானம் பண்ணினால், அதிசீக்கிரம் தியானம் கை கூடும்.

**இரவுபக லின்றி யெரிமுச் சுடரிற்**
**பரமான்ம நூலைப் படி.** 5

உலகளவு நூல்களை யெல்லாம் படித்தாலும், ஆத்ம சாந்தம் உண்டாவதில்லை. "படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்று நெஞ்சத் துடிப்பற்று நிற் பார்க்கே சுகம்: மன்னும் கலைஞான மார்க்கம்,

சின்னஞ் சிறியார் செய்த மணற் சோற்றை யொக்கும்" என்கிறார் தாயுமானவர். இதனால் நூல்களை வெறுக்க வேண்டுமென்பதன்று; படிப்புத் திறனால் மமதைகொள்ளாமல், நூலின் பயனைப்பெறப் பார்க்க வேண்டும் என்பதாம். ஒவ்வொருவர் உள்ளேயும் வெகு சுகமான அனுபவ நூல் ஒன்றிருக்கிறது; அதுவே, பரமாத்ம நூல்; அதைப் படிக்க முச்சுடர் விளக்கு வேண்டும். அந்த முச்சுடர் விளக்கு, ஸஹஸ்ராரத்தில் இரவு பகலின்றி எப்போதும் எரிந்து கொண்டிருக்கிறது. அதுவே மதி, இரவி, தீ (ஸோம சூரியாக்கினி) யாகும். ஆதாரங்களை மலர்த்திக் குண்டலினி ஸஹஸ்ராரத்திலுள்ள புருஷனைக் கூடியதும் அந்த முச்சுடர்களும் உணர்வாகும். மின்சாரத்தின் இரண்டு கம்பிகள் சேர்ந்து ஒளி விளங்குவது போலவே, ஆதார சக்தி ஸஹஸ்ரார புருஷனைக் கலக்கும்போது முச்சுடர் தோன்றும். அதன் அருட்பெருஞ் சோதியில் பரமாத்மக் கலப்புடன் இருப்பதே, இங்கே படிப்பெனப்பட்டது. தன் சொரூபத்திற் படிந்து நிற்பதே படிப்பு.

---

## 7. தியானம்

நினைத்து நினைத்து நினைப்பற்று, நெஞ்சே,
நினைப்பற்றி நீயாகி நில். 1

நெஞ்சே. சஞ்சலம் வேண்டா; உலகியல்பையும், உடலியல்பையும், உயிரியல்பையும், மாந்தர் இயல்பையும், இவற்றை யெல்லாம் கடந்த உனது உண்மையான சுத்தான்ம வியல்பையும் சதா நினைத்துப் பார்; தியானி, தியானி; தியானித்து உனது சொரூபமான சுத்தான்மாவைக் காண்; அதையே

பற்றி, வேறு பற்றில்லாது தானே தானான சுத்தமுக்த சமத்துவ நிலையில் உறுதியாக நில்! அதுவே ஞானமும் பக்தியுமாகும்: தன் சொரூபத்தைச் சிந்தித்தலே பக்தி "ஸ்வஸ்வரூபானு ஸந்தானம் பக்திரித் யபி தீயதே" என்றார் சங்கரர்.

**சிதையாம லெண்ணித் தெளிந்தாலுன் னுள்ளே,**
**'அதுநானெ'ன் றேயுணர லாம். 2**

உனது உண்மைச் சொரூபத்தையே மனஞ் சிதையாமல் உட்குவிந்து தியானித்துத் தெளிவாயாக! பிறகு, 'அது நான்' (தத் அஹம்) - 'இந்த உட லுயிர் மனங்களை உள்ளிருந்து இயக்கும் பொருள் எதுவோ, அதுவே உண்மையான நான்; அதுவே உல கம்' என்று தெளிவாக அறியலாம். "அதுவாயின் அதுவாவர்; அதுவே சொல்லும்" என்றனர் ஆன்றோர். "ஆத்மைக்கிய ஞானமில்லாமல் ஆயிரம் ஆண்டானாலும், ஒருவன் முத்தியின்பம் அடைய முடியாது" என்கிறார் சங்கரர். ஆதலால் இடைவிடாமல், 'நான் அது, சுத்தோஹம், ஸோஹம், ப்ரஹ்மை வாஹம்' என்று தியானி! தியானத்தால் உள்ளந் தெளிந்து, உண்மை பளிச்சிடும்.

**எழுந்து விழுந்தும் இடத்தமர்முன் னீர்போல்**
**அழுந்தியுன் னுள்ளே யடங்கு. 3**

கடலைப் பார்! அஃது, அலையாக எழுந்து வீசு கிறது; பிறகு அலைவற்று அடங்குகிறது: எழுவதும் விழுவதும் சந்திரனால் உந்தப்பெற்ற அலைகளே. ஆழ் கடல் அமைதியாக, அகண்டமாகவே யுள்ளபடி யுள்ளது. அதுபோற் குணவிகார அலைகள் ஓயாமல் உன்னைச் சுற்றிலும் எழும்; விழும். நீ ஆழ்கடல் போன்று, உனது உண்மையான ஆத்ம ஸ்வரூபத்தில்

அழுந்தி யிரு! சாத்விகம், ராஜஸம், தாமஸம் எனக் குணங்கள் மூவகையின : தாமத குணம் ஆளை மந்தமாக்கி, அறிவைக் கெடுக்கும். ராஜஸகுணம் மனிதனைச் செயலுக்கெழுப்பி, ஆசையைப் பெருக்கி, இரு விகாரங்களை யுண்டாக்கும் ; மனத்தை வேறுபடுத்தி ஒருமயத்தைப் பலவாகக் காணச்செய்யும். சாத்விகம் சாந்தமளிக்கும் ; அனைத்திலும் ஒரு மயத்தைக் காணச்செய்யும்; அறிவைத் தெளிவாக்கும்; 'செய்யத் தக்கது இன்னது ; தகாதது இன்னது' என்று நன்கு விளக்கும். சாத்விக குணத்தையே, யோகி வளர்க்கவேண்டும். ஆனால், அவன் அதைக்கொண்டு நாளடைவில் எக்குணங்களிலும் பற்றில்லாமல், தானே தானாகும் குணாதீத நிலையை யெட்ட வேண்டும். அலைகள் கடலினின்றெழுந்து அடங்கும்போது அதற்கே ஊனாகின்றன. அதுபோல, ஞானியின் வாழ்வும் சுத்தான்ம வுணர்வினின்றெழுந்து, அதையேபற்றி, அதிலேயடங்கும். இவ் வுண்மையை ஓழிவிலொடுக்கம், "தாம் அருந்தல் போலத் தமைச் சிவனுக் கூணாக்கி" என்று விளக்குகிறது.

**பொன்னூற்றிற் பொங்கிப் பொலியும்வெண் டாமரைவாழ்**
**அன்னமென் றன்னை யறி. 4**

ஆத்மாவை ஹம்ஸமாகக் காண்பர் யோகியர். அன்னம் தண்ணீரை நீக்கிப் பாலை உட்கொள்வது போலவே, அஸத்தை நீக்கிச் சத்தே தாமாகும் நிலை பெற்றவராவர் பரமஹம்ஸர். சுத்தான்மாவாகிய அன்னம் ஸஹஸ்ராரமாகிய வெண்டாமரையில் உறைகின்றது ; அந்த வெண்டாமரையைப் பொன்மயமான ஒரு சோதி வெள்ளஞ் சூழ்ந்துள்ளது ; அதுவே முச்சுடர் ; அருட்சுடர் ! புருவ நடுவே

பொட்டிடும் இடத்தில் ஆக்ஞா சக்கரம் உள்ளது. அதற்கு மேலே ஒரு நாத வெளி யுள்ளது. அதற்கு மேல் படிகம் போன்ற ஒரு குன்று; அதன் உச்சி யில் பொன்மயமான ஓர் ஒளியூற்று; அந்த ஊற்றில் ஒரு பெரிய வெண்டாமரை; அந்த வெண்டாமரையில் ஓர் அறிவன்னம், (பரமஹம்ஸம்) வீற்றிருக்கிறது. 'அதுவே சுத்தான்மா, அதுவே நான்' என்று தியானிக் கவும்! இதயம், ஸஹஸ்ராரம் இரண்டும் தியான நிலயங்களாம்; தியானப்பொருள் ஒன்றேயாம். ஸஹஸ்ராரத்தில் தியானித்தால், அறிவும் அமைதியும் ஆகும். இதயத் தியானத்தால் இன்பமாகும். இதயத் தையும் ஸஹஸ்ராரத்தையும் அமுதநாடி இணைக் கிறது. உள்ளத்தில் தியானித்தால் உணர்வு நெற்றிக் கேறி, ஒளிகண்டு, அறிவுத்தே னுண்ணும். இதனை, "மின்மினியைப் போன்ற விளக்காகத் தோன்றி ஞல், அன்னப் பறவையேயாம்" என்ருர் ஔவையார்.

அமைதியின் பத்தில் அறிவுச் சுடராய்ச்
சமதைபெறுந் தன்னிலையைச் சார். 5

மனம் அலையாத அமைதியில் ஆத்மசுகம் பிறக் கும். அந்த இன்பத்தில் அறிவுச்சுடர் ஆடாது நிலைத்து விளங்கும். அப்போதே, தனது உண்மை நிலை விளங்கும். அந்த உண்மை நிலைபெற்ருல், சுக துக்க பந்ததொந்தங்களில் உழலாது, குணப்போர் களைப் பற்றற்ற சாட்சியாகப் பார்த்து, யோகி தானேதாஞன பிரமநிர்வாண நிலையைப் பெறுகின் ருன். தன்னை யறிந்தவன் தாஞகவே உயிர்க்குலத் தைப் பார்க்கிருன். அவன் அகண்ட சமரஸி யாகிருன். தன்னிலை பெற்ருல் எல்லாந் தானே யாகும்.

# 8. ஸஹஸ்ரார சித்தி

கர்ப்பூரத் தீபவொளி காட்டு முடலுயிரும்
சிற்கனலை யேற்றச் சிரம். 1

நம்முள் ஒரு தெய்வக்கனல் உள்ளது. அது, மூலாதாரத்தில் பாம்புபோலச் சுருண்டு உறங்குகின்றது. அந்தக் கனலைக் குண்டலினி, பிரம்மாகாரி என்பர்; அதுவே நாம் குறிக்கும் சுத்தசக்தியாகும். அந்தச் சக்தியைத் தூயவாழ்வு, தியானம், மோனம், ஜபம், நாடி சுத்தி, ஆத்மவிசாரம் முதலிய சாதனங்களால் எழுப்புவதே யோகத்திற் பெரிய வேலை; அக்கனல் எழுந்து மேலேறினால் ஆதார சக்கரங்கள் மலரும். அக்கனலைத் தீவிரமான தியானத்தாலும், தாந்திர சாதனங்களாலும் சிரத்தில் உள்ள ஸஹஸ்ராரத்திற்கு ஏற்றி, ஆங்குக் கோயில்கொண்டுள்ள சுத்தான்மாவுடன் சேர்ப்பித்தால், நம்முள் உள்ள தெய்வத் தன்மைகளெல்லாம் மலர்ச்சி பெறும்; உச்சியில் முச்சுடர் ஒளிரும்; அது கர்ப்பூர தீபம் போலச் சொலிக்கும். அந்த அருட்பெருஞ் சோதியால், நமது உயிர் ஒரு சக்திக்கனலாகும்; உடலும் ஒளிபெறும். நாம் உணர்வதெல்லாம் தூலவுடலே; இதற்குள் அந்தக்கரணமான சூக்கும உடல் உள்ளது: அந்த உடம்பையே ஔவையார், "நல்வினையும் தீவினையும் உண்டு திரிதரும் செய்வினைக்கும் வித்தாம் உடம்பு" என்றார். அது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் நான்கும் சேர்ந்தது. அந்த உடலே நம் பிறவிக்கும் இன்ப துன்பங்களுக்கும் காரணமாகும். அதனால் நாம் நமது சொரூபத்தைக் காண முடியாது. "மனத்தோ டுறுபுத்தி, ஆங்காரம்,

சித்தம் அனைத்திலும் இல்லை அது" என்றார் ஔவையார். 'தூலதேகத்தையும் சூக்கும தேகத்தையும் வென்று காரண சரீரத்தை யடையவேண்டும்; காரண சரீரம் ஸஹஸ்ராரத்தில் உள்ளது; அதுவே, அதிசூக்கும ஆகாசமாகிய பிரம்ம சரீரம்' என்று வேதங் கூறும். அதையே "விண்ணரசு உன்னுள் உள்ளது" என்று ஏசுநாதர் குறிக்கிறார். மரம் வேருக்கடியேயுள்ள பூசாரத்தைத் தண்ணீரிற் கரைத்து, மேலேற்றிப் பூவுங் கனியும் குலுங்கி நிற்கிறதன்றோ? அதுபோல, நமது மூலாதாரத்தில் உறங்கும் சக்தியை மேலேற்றினால் அறிவு மலரும்; இன்பக்கனி பழுக்கும்.

ஆறுருவி, யேழேறி, யானந்தத் தேனுண்ணும்,
சீறியெழும் ஆதாரத் தீ. 2

மூலாதாரத்தில் குமுறி யெழுகின்ற குண்டலி சக்திக்கனல் ஆறு ஆதார கமலங்களையும் மலர்ப்பித்து, ஊடுருவி மேலே ஏழாவதாகிய ஸஹஸ்ராரத்தில் புருஷனுடன் கூடி இன்பத்தே னருந்தும்.

இது, மஹா குண்டலி யோக ரகசியம்: திருமந்திரம், மஹார்ணவம், குலார்ணவம், தாந்த்ர தத்வம், ஸாரதாதிலகம், ஞானார்ணவம், ஷட்சக்ர நிரூபணம் முதலிய ஆகம நிகம நூல்கள் இதன் இரகசியத்தை விளக்கும்; இவையனைத்தின் பிழிசாறே இச் சூத்திரமாகும். வாழ்க்கை ஒரு மின்ஸாரயந்திரம் போன்றது. அதன் ஆகுமின்னல், ஏகுமின்னல் ஓட்டங்கள் Static—Kinetic currents), புருஷ ப்ரகிருதி (ஆண் - பெண்) ஆகும். ஆண் - பெண் காதலெல்லாம் இந்த மின்சக்திகளின் கவர்ச்சிதான். ஆண்மையிலுள்ள சிவம், பெண்மையிலுள்ள சக்தியைக் கூட விரும்புகிறது. தவ யோகத்தால் எழும் ஆன்ம

வுணர்வால் இக்கலப்பு ஏற்பட்டால் அமரானந்த மாகும்; சுத்த போகமுறும்; ஊர்த்துவ ரேதஸ் உண்டாகும்: இடையே மனத்தின் ஆசாபாச வெறிகள் புகுந்து இக்கவர்ச்சியைக் காயத் தினவாக்கினால், வாழ்வும் துன்புறும்; தொத்தும் பிணியும் தொடரும். மானிடத்தில் அற்புதமான கடவுளாற்றல்களும், புலமைகளும் அடங்கிய ஆறு ஆதார கமலங்களும், ஆயிர இதழ் வெண்டாமரையான ஸஹஸ்ராரமும் உள்ளன. இவை நுண்ணிய நரம்புப் பின்னல்களாகும். இவை சாதாரண மனிதரிடம் குவிந்து, மூடுண்டு கிடக்கின்றன. எங்கெங்கு அற்புதப் புலமைகளும், வியன் செயல்களும் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் இம் மலர்களிற் பொதிந்து கிடக்கும் அற்புத சக்திகள் சிறிது கட்டவிழ்ந்து நிகழ்வனவேயாகும். இந்த ஆதார கமலங்கள் மேருதண்டம் அல்லது முதுகெலும்பினூடே அகப்பட்டுள்ளன. முதுகெலும்புகள் படுத்த எட்டின் வடிவாக [ ∞ ] அடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மூன்று வழிகள் உள்ளன: இடவழியே இடகலை, வலவழியே பிங்கலை, நடுவழியே ஸுஷும்னு (சுழிமுனை) நரம்புகள் ஓடுகின்றன; இவையே, எஉ000 நாடிகளுக்கும் அரசு; இவற்றின் வேர் குறிகளில் உள்ளது: இடை, பெண் நாடி, சந்திரகலை; பிங்கலை, ஆண் நாடி, ஸௌர்யகலை; ஸுஷும்னு கனல். ஸுஷும்னு அல்லி நூல் போன்றது. இடையும் பிங்கலையும் மணிபூரகத்தில் கூடி, பிறகு கிளைத்து, மீண்டும் ஆக்ஞா சக்கரத்தில் (நெற்றியில்) ஸுஷும்னுவுடன் சேருகின்றன. இதைக் குறிக்கவே பொட்டிடுவது. இந்த மூன்றின் சேர்க்கையே திரிவேணி சங்கமம்; பிராணாயாமம், தியானம், ஆத்ம விசாரம்,

# ஆதார விளக்கம் :

| எண் | பெயர் | இடம் | இதழ் | நிறம் | லோகம் | தத்வம் | குணம் | தெய்வம் | சக்தி | யந்திரம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மூலாதாரம் (Pelvic pelxus) | யோனி | 4 | ரக்தம் | பூ | மண் | கந்தம் | பிரமா | டாகினி | சதுரம் |
| 2 | சுவாதிஷ்டானம் (Hypogastric ,, ) | அடி வயிறு | 6 | சிந்தூரம் | புவர் | நீர் | ரஸம் | விஷ்ணு | ராகினி | பிறை |
| 3 | மணிபூரகம் (Epigastric ,, ) | நாபி | 10 | நீலம் | ஸ்வர் | அக்னி | ரூபம் | ருத்ரன் | லாகினி | திரி கோணம் |
| 4 | அனுஹதம் (Cardiac ,, ) | இதயம் | 12 | அருண | மஹர் | வாயு | பரிசம் | ஈசான ருத்ரன் | காகினி | ஷட் கோணம் |
| 5 | விசுத்தி (Carotid ,, ) | கண்டம் | 16 | தூம்ரம் | ஜன | ஆகாசம் | சப்தம் | சதா சிவன் | சாகினி | வட்டம் |
| 6 | ஆக்ஞை (Medulla) | புருவ நடு | 2 | வெண் | தப | மஹத் | நாதம் | அர்த்த நாரீசன் | ஹாகினி | லிங்கம் |
| 7 | ஸஹஸ்ராரம் Brain | சென்னி | 1000 | வெண் | ஸத்ய | தத்வாதீதம் | பிந்து | பரபிரமம் | பரா சக்தி | பூர்ண சந்திரன் |

மந்திர ஜபம், ஆகார நியமனம், இயம நியமாதிகளால் இந்த நாடிகளிலுள்ள அற்புத சக்திகள் எழுந்து விளங்கும். இவற்றிலிணைந்த கமலங்களை மலர்ப்பிக்கும் சக்திக் கனலே குண்டலினியாகும். அது மூலாதாரத்தில் உறங்குகிறது ; அதை எழுப்புவதே பாதியோகம் : அக்கனல் சக்கரங்களை ஊடுருவி ஸஹஸ்ராரத்தில் புருஷனுடன் கூடும். அப்போது அது மஹா குண்டலினி எனப்படும். மஹா குண்டலினி சிவனுடன் கலந்து நிற்கும் மிகவுன்னதமான யோக ரகசியத்தையே, நம் பாரதநாட்டு யோகிகள் சிவ லிங்கமாக உருச்செய்து கோயிலில் வழிபடச்செய்தனர். நம் கோயில்களின் அமைப்பே யோக தத்துவ ரகசியம் அடங்கியது.

மேற்கண்ட ஒவ்வொரு சக்கரத்திற்கும் தியான பலன் உண்டு : மூலாதாரம் இன்பநலந் தரும் ; சுவாதிஷ்டானம் அகங்காராதி குணங்களைப் போக்கி நல்லொழுக்கமருளும் ; மணிபூரகம் வித்தை யளிக்கும் ; அனாஹதம் யோகசித்தி தரும் ; விசுத்தசக்ரம் அருட்புலமையும், சொல்வன்மையும், கலைத்திறனும், முக்கால அறிவும், அமைதியும் அளிக்கும் ; ஆக்ஞாசக்கரம் - மனத்தின் இருப்பிடம் (Sensorium)—இதில் தியானிப்பவன் முனிக்கரசனாகவும், முற்றறிஞனாகவும், எல்லாவுயிர்களுக்கும் இனியனாகவும், கல்லா அறிவும் ஓதாவுணர்வும் பெற்ற ஆத்மஞானியாகவும், சர்வ சித்தனாகவும் இருப்பான்.

ஆக்ஞா சக்கரத்திற்கு மேலேதான் சச்சிதானந்த விண்ணரசுள்ளது : ஆக்ஞைக்கு மேல் புத்தி : அதற்குமேல் நாதவெளி ; அதன்மேல் மஹாநாதம், அல்லது பரநாதம் ; அதற்குமேல் பரகலை ; அதற்குமேல்

சமனிசக்தி; அதற்குமேல் உன்மனி சிவன். சமனிசக்தியா லேதான் பரமான்மா தானே பலவாய் விரிந்து விளங்கு கின்றான். உன்மனி ஸஹஸ்ராரத்தின் கோசமாகும்; இதில் புறவுணர்வு அற்றுப்போகிறது. சத்தம் பிறந்தது சமனியில்; இதுவே முதல் விளக்கம்; சிருஷ்டி வாக்கு (Word Logos) இதினின்றே முளைத்தது; இதனின்றே, 'நான் இது' (இதமஹம்—This Consciousness) உதித்தது; இது சாதாக்ய தத்வம். அதனின்றே பிந்து தத்வம் (உள்ளடங்கிய உணர்வுக்கனல்) உதித்தது. அதன்பின் மாயாசக்தி; இதுவே உலகை ஆக்கி அளித்து, ஒன்றைப் பலவாகத் தோற்றுவிப்பது. இதில் சுத்தவித்யா தத்வம் தொடங்குகிறது. இதில் காலம், நியதி, ராகம், வித்தை, கலை என்னும் ஐந்து கஞ்சுகைகள் உள்ளன. இதனின்றே அசுத்த வித்யா தத்வமாகிய புருஷப்பிரகிருதி, ஆண்பெண், பிறந்தது. ஒவ்வொரு ஜீவனுக்கும் இயற்கையுடல் மனைவிபோன்றது. பூதங்கள், ஞான கர்மேந்திரியங்கள், தன்மாத்திரைகள் அந்தக் கரணங்கள் சேர்ந்து இயற்கைத் தத்துவம் 24 ஆகும். இவற்றிற்கு மேல் க்ஷேத்ரஞ்ஞனை ஜீவன் உள்ளான். அவனது உன்னத தெய்விக நிலை ஸஹஸ்ராரத்தில் உள்ளது. இதயத்திலிருந்து உச்சியில் பிரஹ்மரந்திரம் மட்டும் ஓடும் அமுதநாடியிலேயே மனிதனின் தெய்வத்தன்மைகள் விளங்குகின்றன. கைலாசம், வைகுண்டம், பரலோகம் எல்லாம் ஸஹஸ்ராரமே; அதுவே முச்சுடர் நிலயம்—ஸோம ஸூர்யாக்நி மண்டலம். இதுதான் சிவனுடைய முக்கண் என்பது. இது பொன்மயம் (ஹிரண்மயம்), பொற்சபை, சிற்சபை, கேவலானந்த ரூபம் எனப் படும். ஆக்ஞா சக்கரத்திற்குமேல் சுழுமுனையின் உச்சி

யில் பராகாச வெளியுள்ளது ; அதன்மேல் 16-மடலுள்ள சோமசக்ரம் (நிலாமணி மண்டபம்) உள்ளது. இதுதான் மதிமண்டலம் ; இதில் அமுதநிலா பொழியும் ; அதற்கு மேல் தலைகீழாக ஆயிரம் இதழ் வெண்டாமரையுள்ளது. கீழாதார கமலங்களின் மடல்கள் மொத்தம் 50. அவை இருபது மடங்காகி, உச்சித் தாமரையில் 1000 இதழ்களாக விரிகின்றன. இது தான் பரமண்டலம், காரண சரீரம், கடவுள் வான், சுத்தானந்த நிலயமாகும். சுஷும்நா, ஸங்கினி, சித்ரிணி வஜ்ரிணி என்ற நான்கு நரம்புகள் இதில் அற்புதங்கள் புரிகின்றன. இதில் தான் யோகி அமுதுண்கிறான். குண்டலி சக்தி ஆறு ஆதார கமலங்களையும் மலர்த்தி, ஹம்ஸ மந்திரத்துடன், இங்கே சிவனை, (ஜீவனை) அணையும் போது, மானிடத்துள்ள சிவசக்தி தத்துவம் (ஆண் பெண் தன்மை) இங்குக் கூடும்போது, பரமானந்தப் பரவசம் உண்டாகிறது. இதுதான் உண்மையான உட்புணர்ச்சி, பேரின்பப் புணர்ச்சி அல்லது உணர் வால் அர்ச்சித்தல் ஆகும். இதன்முன் சிற்றின்பம் காசுபெறாது ; இதுதான் சச்சிதானந்த அமுதவிண் ! ஆத்ம-வித்யா, நாத-பிந்து, உன்மனி-சமனி, இவற் கடந்த பரதத்துவத்தை அடைந்தோர்க்கே இந்த அமுதின்பம் தெரியும். யான் பெற்ற இன்பம் அனை வரும் பெறுக ! மனிதா, உண்டுறங்கி ஊடிக் கூடிச் செல்லும் தூலவாழ்விற்குமேல், எத்தனைத் தெய்வப் படிகள் உள்ளன ! புலன்களை ஊடுருவி உன்னுள் உள்ள உன் தெய்விக அற்புதங்களைக் காண்ப தென்று? எழுந்திரு, விழித்திரு, அமுதஞ் செழித்திரு! இந்த அமுத தாரணையால் பசி, தாகம், நரை திரை, மூப்பு, சாவச்சமின்றி நித்திய வாழ்வு பெறலாம்.

**வெண்டா மரையில் விளைதே னறிவருளால்**
**உண்டார்க்கு முண்டோ பசி ? 3**

ஆயிரம் இதழ் வெண்டாமரையான ஸஹஸ்ராரத்தில், மதிமண்டலத்தில், சிவசக்தி ஐக்யத்தால் ஊறிப் பொசியும் பொன்னொளி யமுதை ஆத்மஞானத்தாலும், இறைவனருளாலும் உண்ணும் பேறு பெற்றவர்களுக்குக் கீழான மன, வீரியத் தினைவுகளால் உண்டாகும் ஆசாபாசப் பசிகள் உண்டாமோ ?

**ஊற்றைப்போற் பொங்கி யுலகைச் செழிப்பிக்கும் ;**
**ஆற்றைப்போற் பாயு மருள். 4**

ஸஹஸ்ராரமே அருட்சுடர் நிலயமாகும். அங்கே அருட்சக்தி சுழித்துச் சுழித்து இன்ப வெள்ளமாக ஊறிப் பொசியும் ; உலகைச் செழிப்பிக்கும் ஆறு பாய்வதுபோல, இந்த அருளின்பம் மேலிருந்து கீழே இறங்கி, நாடி நரம்புகளை யெல்லாம் அமுத வாய்க் கால்களாக்கி, உள், உயிர், மனம், உடல் செழிக்கப் பாயும். பழத்தில் சுவைபோல், இந்தப் பரமண்டலத் தேன் உடலெல்லாம் இனிக்கும். குண்டலிக் கனல் விழித்து மேலேறி, ஸஹஸ்ராரத்தில் சிவக்கலப் பெய்தியதும், இந்த அமுதநிலை எய்தும். அப்போதுதான், எல்லாம் இறைவனருள் விளக்கமாகக் காணும். அந்நிலையில் மனப்பேய் ஒழியும் ; அதைப் பிடித்த ஆசை யாணவத் தினைவுகளும் ஒழியும்.

**கூற்றஞ்சி யோடுங் குலகுண் டலியுச்சிக்**
**கேற்றுக முக்கண் ணிடம். 5**

ஆதார கமலத்திலுள்ள குண்டலியை அஷ்டாங்க ராஜயோக சாதனங்களாலும், ஞானவிசாரத்தாலும், ஷட்சக்ர பேதத்தாலும், மனங் குவித்த

லாலும், மந்திரத்தாலும், அச்சம் அகந்தை ஆங்காராதிகளை யடக்கிய தூய வாழ்வாலும், குருவின் அருளாலும், கடவுளன்பாலும் மலர்ப்பித்து, மதி, ஒளி, அனல் ஆகிய முக்கண்ணுடன் ஸஹஸ்ராரத்தில் விளங்கும் சிவனிடம் ஏற்றிச் சேர்த்திடுக! பிறகு கூற்றும் நடுங்கும்; சாவையும் வெல்லலாம்.

இத்தகைய ஸஹஸ்ரார சித்தியால் எல்லா வுலகங்களுக்கும் முதல்வனை பரமனைக் காணலாம்; (தேவர், மக்கள், விலங்குகள், புட்கள், புழுக்கள், செடிகள் ஆகிய) வாழுயிரனைத்தின் உடல்களும் கடவுள் குடிகொண்டு விளங்கும் கோயில்களே என்றுணரலாம்.

மேல் விளக்கப் பெற்ற ஆதாரங்களையே ஸப்த லோகங்களாக வேதம் வர்ணிக்கும்.

உலகங்கள் ஏழு :—(1) மண்ணுலகு, சடவுலகு (பூலோகம்), (2) உயிர் அல்லது வீரிய வுலகு (புவர்லோகம்), (3) மனவுலகு (ஸ்வர்லோகம்)—இவை கீழியல் உலகங்கள்; (4) விஞ்ஞானம், அறிவுலகு (மஹர்லோகம்)—நடுவுலகம்; (5) இன்பம், ஆனந்தம் (ஜனலோகம்), (6) அருள், சித்துலகம் (தபோலோகம்), (7) உண்மை, ஸத்துலகம் (ஸத்யலோகம்)—இம்மூன்றும் மேலுலகம். அருளுணர்வால் இவை நம்முள்ளே புலனாகும். அனைத்திலும் இறைவன் அருளறிவாகப் பரவியுள்ளான். அந்த அறிவு கல்லில் உறங்குகிறது; புல்லில் தளிர்க்கிறது; விலங்கில் உயிர்க்கிறது; மானிடத்தில் மனங்கொண்டு நினைக்கிறது. மனத்திற்கு மேலுள்ள விஞ்ஞானமே நம்முள் விளங்கும் சச்சிதானந்த விண்ணரசின் பொற்கதவு; அப்பொற் கதவு திறந்தால் அமரவாழ் வெய்தலாம்; அந்நிலையிலே உலகம் இறைவனாலயமாகக் காணும்.

## 9. சாகாக் கலை

என்று மிருப்பதனி லென்று மிருப்பதுவே
என்று மிருக்கும் வகை. 1

*என்றுமுள்ள பொருள் எது? இயற்கையுடல் நலியினும், நலியாப் பொருள் எது? அதுவே, நித்திய மான* சுத்தான்மா. *நித்தியமாய், நின்மலமாய், நிஷ்கள மாய், நிராமயமாய் நிறைவாயுள்ள இந்தத் தெய்வப் பொருளை இதயத்திற் கண்டு, அதில் எப்போதும் நிலைத்து, அன்னியம் எண்ணாதிருப்பதே நித்தியமாக வாழும் வகையாகும். "ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில், அழிவின்றி நிற்கும் உடம்பு" என்றருளி னார்* ஔவையார்.

பிறப்பிறப் பில்லாப் பெருவாழ்வு வேண்டின்,
மறப்பறவுள் ளூன்று மனம். 2

*மனத்தை யடக்கி, உள்ளே யொளிரும் பூரண சிற்சுகமாகி, சுத்தான்மாவில் அசையாது ஊன்றச் செய்! நீ சுத்தான்மா; 'உடல் உனது சட்டையே' என்பதை ஒருகாலும் மறவாதே! அவ்வாறாயின், பிறப்பும் இறப்பும் இல்லாத நித்தியானந்தப் பேறு உனக்கெய்தும். பயிர் முளைத்தாலும் அறுவடை யானாலும் நிலம் இருந்தவாறிருப்பது போலவே, இயற்கையுடல் வந்தாலும் வராவிட்டாலும், சுத் தான்மா இருந்தபடி இருந்தவிடம் தானே தானாக உள்ளது. நித்தியப் பொருளில் நிலைத்தலே நித்திய வாழ்வாம்.*

தேகாதிக் கெட்டாத சிற்சுக மெய்வாழ்வே
சாகாத சக்திக் கலை. 3

பூதபௌதிக வுடலுக்கும் அந்தக்கரணத்திற்கும் எட்டாத சிற்சுகம், அறிவின்பம் அளிக்கும் உண்மையான சுத்தமுக்த சமத்வ வாழ்வே, சாகாது அமர வாழ்வெய்தும் சக்தியைத் தரும் கலையாகும். அழியுடலின் கட்டில்லாமல்; நித்தியமான பிரணவதேகமான அருளுடலில் வாழ்வதே சாகாக்கலையாகும். கலாந்தம், நாதாந்தம், போதாந்தம், சித்தாந்தம், வேதாந்தம் எல்லாம் எதை நாடுகின்றன? நாம் காணும் இயற்கையுடலுக்குள் இறவாமல், மாறாமல் இருக்கும் நித்தியப் பொருளையே குறித்து, அதனுடன் அதுவாயிருக்கவே இவை நாடுகின்றன. அதை யறி; அதுவே நீ யென்றறி! அதுவே சாவையும் வெல்லும் சக்தியை யளிக்கும்.

**கூற்றையுதைத் தாடுங் கொழுந்தடியைப் பற்றினல்,**
**மாற்றறு பொன்னுடல மாம்.** 4

இதயத்திலும் உச்சியிலும் இரண்டு திருவடிகள் மாறி மாறி மிதித்து ஆடுவதுபோல யோகிகளுக்கு உணர்வாகும்: அதுவே அருட்பொழிவு; அதுவே கூற்றையுதைக்கும் திருவடி. அதன் இன்பத்தில் சாவச்சம் ஒழியும்; 'நான் அமரன்' எனும் உணர் வெய்தும். இவ்வுணர்வு முதிர முதிர, உடல் பழுத்துப் பொன்னாகும்; நரம்புகளில் அமுதம் பொழியும்; உள்ளே ஒரு காந்தக் கனல் பரவும்; கண்களில் ஞானக் கனல் பறக்கும். மனத்திற்குமேல் ஓர் ஒளிப்பிழம்பு, கடவுட்கனல் நம்முள் கொழுந்துவிட் டெரிவதாகத் தியானிக்கவேண்டும். அந்தத் தியானம் முதிர முதிர, உள்ளெரி ஓங்கும்; அதை வளர்ப்பதே எரியோம்புவதாகும்; முட்டையும் கட்டையும் அடுக்கி, நெய்யும் வெண்ணெயும் அதில் வீணாகச்

சொரிவதல்ல. உள்ளம் வேள்விச்சாலை; இதயமே ஓமகுண்டம்: ஆதாரக் கனலை எழுப்பி, இதயகுண்டத்தை மூட்டி, அக்கனல் உச்சிக்கு ஏற உணர்வென்னும் நெய் வார்த்து, ஆசையாணவங்களைப் பலியிடுவதே உண்மையான வேள்வியாகும். இக்கனலால், கூற்றச்சம் ஒழியும்; நரைதிரை மூப்பின்றி உள்ள மட்டும் முருகனு யிருக்கலாம்.

**எப்போது மெண்ணி யிருப்பார்க் கியலுண்மை**
**தப்பாது வீசுந் தனல். 5**

எப்போதும் சுத்தான்மத் தியானத்தில் ஊன்றி யிருக்கும் யோகிகளுக்கு இயற்கை யுண்மை, தவறாது தணல்போல வீசி, ‘இதோ நான் இருக்கிறேன்’ என்னும். ‘நான் சுத்தான்மா; இவ்வுடற் சட்டை போனாலும் நான் இறப்பதில்லை; பிறப்பதுமில்லை. நான் இருந்தேன், இருக்கிறேன், இருப்பேன். பந்த தொந்தங்கள் எனக்கில்லை. என் சட்டையே பழசாகிக் கிழிகிறது. நான் உள்ளவாறே யுள்ளேன்’ என்றறிவதே இயலுண்மையை அறிவதாம். இவ்வுண்மையை எப்போதும் எண்ணியிருப்பவருக்கு, மூலக்கனல் எழுந்து, ஆதார கமலங்களை மலர்த்தி, உடலெல்லாம் அனல்போல வீசிப் பரவும்.

---

## 10. கூற்றிற் கஞ்சாமை

**சாதல், பழையவினைச் சட்டையறப் புத்துடலை**
**யீத லுயிர்க்கென் றியம்பு. 1**

ஒரு பழைய உடல் போனால், இன்னொரு புதிய உடல் வருகிறது. வினையிருக்கு மட்டும் உடலிருக்கும். உத்தியோகம் இருக்குமட்டும், அதற்கேற்ற

சட்டை யிருக்கும். அழுக்குச் சட்டையை வண்ணான் எடுத்துச் சென்று புதுக்கித் தருகிறான்; கிழிந்த சட்டையைத் தூர நீக்கிப் புதிய சட்டையணிகிறோம். பழைய சட்டை போய்ப் புதுச்சட்டை வந்தால் சந்தோஷந்தானே? "அர்ஜுனா, இந்தத் தேகங்கள் பிறக்கும், இறந்து பிறக்கும் தேகியான சுத்தான்மா நித்தியனுவன்; அவன் அழிவிலி; அவன் இறப்பதாகவும், கொல்லப்படுவதாகவும் நினைப்பது முழு மடமை: அவன் அஜன், நித்தியன், புராணன்; உடல் வீழ்ந்தாலும் தான் அழியாதவன்; அவனை அம்பும், நீரும், நெருப்பும், காற்றும் ஏதும் செய்யொணு" என்கிறான் கண்ணபிரான்.

மாரடிப்பு வேண்டா; மகிழ்மினே, யிவ்வுலகப்
போரொழிந்து போனதுயி ரென்று! 2

எனது பழைய சட்டை கிழிந்து புதுச்சட்டை வந்தால், இதற்கு மாரடிப்பேன்? மாரடித்தால், மாண்டது வருமோ? மாண்டது மண்ணும்; மாளாத ஆன்மா என்றும் உள்ளது: அது முற்றும் அமைதி; சுத்த சுதந்தரச் சுடர்; முற்று மறிவு; முற்றும் இன்பம்; பற்றொன்றிலது; பலவாம் அருளால். அந்த ஒன்றைக் கலந்து நின்றதே இன்பமாகும். இறந்தவருக்கு இங்கு இயற்றுவதென்னே! 'என்னருமைப் பாட்டனே, தந்தையே, தாயே, அண்ணலே, மகனே, மகளே, மனையே, நண்பனே, (எதுயாரோ, அது) உன்றன் யாக்கையை உதறிச் சென்றனை; அன்பு மிகுந்தனை; அறிவு பெருகினை; இன்பந் தந்தனை. எவர்க்கு மினியோய், உனது நற்குணம் எனதுயிர்க்காகுக! உள்ளமட்டும் கள்ளமின்றி, உன்னைப்போல நன்மை செய்து, உலகினில்

வாழ்ந்து உறுவினை தீர்ந்ததும், ஆண்டவன் என்னை ஆண்டுகொள்ளுக! புவிநாடகத்தில் போவதும் வருவதும், பழையன கழிதலும் புதியன புகுதலும், இயற்கையின் சட்டமாம்; அது திருவருளாணை! இறைவனே, என்றன் இனியன்,......க்கு அமைதி யருளுக; அமைதி யருளுக!' என்று சொல்லி இறந்தவன் தீமைகளை விலக்கி, அவன் நலங்களைப் பயில்வதே கருமமாகும். இறந்தவர் புதைகுழியின்மேல் அவர்கள் நினைப்பிற்காக ஏதாயினும் ஒரு பொது நலக் கட்டிடம் எழுப்பலாம்; அல்லது, அவர்பேரால் ஓர் ஏழைக்கு வீடுகட்டித் தரலாம். இறந்தவர் எலும்புகளைக் கங்கையில் போட்டுத் தண்ணீரைக் கெடுப்பதினும், அவற்றை உரம் போட்டு, அவர் பெயரால் கனிமரம் ஒன்று வளர்ப்பது நலம். இறந்தவர் நினைப்பிற்காக அறவியலிற் கூறப்பட்ட பயனுள்ள நல்லறங்களைச் செய்க; வறியோர்க் கிடுக; வேறெத்தகைய இடையீடுகளுமின்றி அவரவர்க்கு முடிந்த அறவினை யாற்றுக! அதுவே இறப்பவர்க்கும், செய்தவர்க்கும் இனிதாகும் வழி. வேறு சடங்குகள் வேண்டா! எனதுடல் வீழ்ந்தால், நடுக்காட்டில், காக்கை கழுகுகள் நன்றாகப் பசியாறப் போட்டுவிடுக; அதன் எலும்புகளை உரமாக்கி மா, பலா, தென்னை, ஆல் அரசு நடுக; அதுவே நலம். சட்டை கழற்றச் சடங்குக ளேனோ!

**'வா'வென்னும்; வந்தால், 'மனைமக்க ளைப்பிரியேன்,**
**போ'வென்னுங் கூற்றைப் புவி.** 3

"ஐயோ, இந்தக் கட்டை வீழாதா? எமனே, இப்படி இடர்ப்பட்டுக் கொண்டு இருப்பதினும், என்னை ஒரே யடியாக வாரிக்கொண்டு போய்

விடேன் - வா!' என்னும் உலகியல்பு; எமன் வந்தால், 'அதற்குள் வந்துவிட்டாயா? ஐயோ! நடுங்குகிறதே; என் மனைவி மக்களை எப்படிப் பிரிவேன்? சாவே, நீ போ!' என்று சொல்லும்.

ஓர் ஊரில் ஒரு பணக்காரன் பிணியால் மிகவும் வருந்தினான்: 'ஐயோ, எமனே என்னை வாரிக் கொண்டு போகமாட்டாயா?' என்று வெகுநாளாகப் புலம்பினான். எமதர்மராஜன் வந்து அவன் வீட்டுக் கதவைத் தட்டினான்; "யார்?". "எமன்"; "எங்கு வந்தாய்?", "உன்னைக் கொண்டு போக"; "ஐயையோ, அதற்குள்ளா?", "உம். உடனே"; "அப்பனே, என் மனைவி சிறு வயது; ஒரு குழந்தையாவது பிறந்து கண்ணாற் காணவேண்டும்; எமனே, அதற்குள் வராதே; உன்னைக் கெஞ்சி வணங்குகிறேன்!", "சரி". சில ஆண்டுகளாயின. "என்ன சம்ஸாரம்? எப்போதும் கவலை; வந்த எமனையும் விரட்டினேன்; எமனே, மீண்டும் வந்து என்னை அள்ளிக்கொண்டு போ! அல்லது ஒழியும்!", என்று புலம்பினான் பணக்காரன். மறுபடியும் இரவில் கதவுச் சத்தம் கேட்டது. "யார்?" "எமன்; உன்னைக்கொண்டு போகவேண்டும், வா!" "ஐயையோ, உனக்குக் காது கேட்குமா? வரமாட்டாயென்று நினைத்தல்லவோ புலம்பினேன்! எமனே, என் மகனுக்குக் கலியாணம்செய்து, இரண்டு பேரன் பேர்த்திகளைப் பார்த்து, அவர்களுக்கு விவாகஞ் செய்து, அவர்கள் வயிற்றுப் பிள்ளைகளை மடியில் வைத்துக் கொஞ்சிய பிறகு உன்னைக் கூப்பிடுகிறேன்!"...இதுதான் உலகாசை! இதன் பொருளென்ன? மனிதான்மா நித்தியத்

தையே விரும்புகிறது. ஆனால், அதற்கு வழி தெரியவில்லை. நித்தியப்பொருளில் சித்தம் நிலைத்தால், புறவுடல் எப்படியாயினும் ஒளியுடலாகிய உள்ளுடல் கொண்டு சுத்தான்மா நித்திய வாழ்வு பெறும்.

**உண்மைக் குயிர்வாழும் உத்தமருக் கச்சமிலை ;**
**திண்மையிலார்க் கென்றுந் திகைப்பு.** 4

தாம் கொண்ட ஒரு பொதுநலமான உண்மைக் கொள்கைக்கே உயிர்வைத்துப் பலருக்கும் உபகாரமாக வாழ்ந்து வருபவருக்குச் சாவின் அச்சமில்லை; அல்லது, தமது உயிர்வாழ்வை யெல்லாம் உண்மைப் பொருளான இறைவனுடன் கலந்த யோகமாகக் கழித்த உத்தமருக்குச் சாவின் அச்சமில்லை. ஏனெனில், உண்மையுள்ளமட்டும் அவர் பெயரும் இருக்கும். **மஹாத்மா, திலகர்** முதலிய உண்மை வீரருக்குச் சாவேது? உலகுள்ளமட்டும், பாரதநாட்டார் உள்ளத்தில் தேசாபிமானம் துடிக்குமட்டும் அவர் சிரஞ்சீவியாக வாழ்வர். உண்மையில் திண்மையற்ற, உறுதியற்ற பொய்யருக்கும், தீயருக்கும், கொடுங்கோலருக்கும் என்றும் அச்சமும் மயக்கமுமேயாம். உள்ளமட்டும் உண்மைக்கே வாழ்க! உண்மை அமரவாழ் வளிக்கும்.

**என்றுந்தான், எல்லாந்தான், எங்குந்தான் சுத்தாத்மா ;**
**பொன்றுவது முண்டோ ? புகல்.** 5

சாவது எது? இந்தப் பூத உடலேயாகும். அதனுள்ளே குடியிருந்த **ஆத்மராஜ**னுக்குச் சாவுண்டோ? இந்த வீடுபோனால் அவனுக்கு இன்னோர் வீடு வரும். சுத்தான்மா என்றும் தானேதானாகத் தாக்கற்றுள்ளது; எல்லாம் தானாகவேயுள்ளது: எறும்பில் இருக்கும் சுத்தான்மாவே திமிங்கிலத்திலும் உள்ளது;

மனிதனில் உள்ளதே மாட்டிலும் உள்ளது ; அறிவு தான் வேறுபடும். எங்கெங்கும் அந்தச் சுத்தான்மாவே நிறைந்துள்ளது. பார்க்குமிடமெங்கிலும் நீக்கமற நிறைந்த அந்தப் பரிபூரணப் பொருளையே பற்றி வாழ்க! ஒரு படத்தின் கண்ணாடி உடைந்தால் இன்னொரு கண்ணாடி போடுகிறோம். படத்திற்கு அதனாற் கேடில்லையே? அதுபோலப் பொன்றும் உடலிற் பொன்றாதுள்ள ஆன்மாவிற்கு என்றும் அழிவில்லை. அதை யறிந்தால், எமபயம் இல்லை, இல்லை!

இவ்வாறு சுத்தநிலையும், ஸஹஸ்ரார சித்தியும், அமரவாழ்வும் அளிக்கும் சுத்தான்ம யோகத்தைக் குழந்தைப்பருவம் முதலே பயிலவேண்டும். பிரமசரியவாழ்வில் அறிவொளி யளிப்பதும், இல்லற வாழ்வில் இன்பமளிப்பதும், பொதுநல வாழ்விற்குச் சக்தி யளிப்பதும், உலகவொற்றுமைக்குச் சர்வாத்ம சமதர்ஸனத்தை யளிப்பதும், உள்ளும் புறமும் பரிபூரணானந்தத்தைத் தருவதுமான இந்த யோகத்தைச் சாதி மத நிற கோத்திர வயது வேறுபாடில்லாமல் தொடங்கிச் சாதனஞ் செய்க! சாதனஞ் செய்யச்செய்ய இதன் உண்மையும், நன்மையும், இதில் முன்னேறும் வழியும் உள்ளிருந்தே உதிக்கும். அந்தராத்மாவே அவரவர் குரு என்று கருதுக! பொறுமையும், விடாமுயற்சியும் இருந்தால் சித்திபெறலாம். ஆதார விளக்கத்தையும், மற்ற ஹடராஜயோகப் பயிற்சிகளையும் வழிதெரிந்து அனுபவங்கண்ட ஒரு யோகியினிடமே பயிலவேண்டும் ; மற்றச் சாதனங்களையெல்லாம் மனவுறுதியுடன் அனைவரும் செய்து வரலாம்.

**பதினோராவது, யோக வியல் முற்றிற்று.**

# கஉ. சித்தியியல்

ஜீவன் முக்தியே இந்த யோகசித்தியாகும். ஜீவன் முக்தன் உலகில் நடமாடும் ஞானாலயம் ஆவன்; அவன், மனிதஉடல் போர்த்த தேவன். ஜீவன் முக்தன், முக்குண தொந்தங்கள் அலைவீசும் உலகில் உள்ளமைதியும், ஆத்மாராமமும், உள்ளின்பமும், எல்லையற்ற உயிர்க்கருணையும், தன்னறிவும், 'எல்லாரும் ஆத்ம சமானரே' என்னும் சமநோக்குங் கொண்டுலாவுகிறான். அவனுக்கு 'எனது, நான்' என்னும் இறுமாப்பிராது. அச்சம், அவா, ஆணவம், சினம்—இவை அவனிடம் அணுவும் இரா. ஆறுகள் பாயினும், ஆவியாய்ப் போயினும், நிறை குறை வற்ற நெடுங்கடல்போல, உலகின் இருவிகாரங்களால் அவன் மாறாது, எப்போதும் உபசாந்த நிலையிலிருப்பான். அவன் இல்லறத்தில் இருப்பினும் இழுக்கிலாத் துறவியேயாவன். 'நான் துறவி, சாமி' என்ற அகங்காரத்துடன், அவன் மனித சமுதாயத்தினின்று ஒதுங்கி வாழமாட்டான். 'உலகில் எத்தனையோ ஜீவர்கள் வருந்துகிறார்கள். நம்மால் ஆன பணியை அவர்களுக்குச் செய்து, துக்க நிவர்த்திக்கு வழி காட்டுவோம்' என்ற கருணையுடன் காலத்திற்கேற்றபடி, அவன் உலகப்பணியை ஆலயத்திருப்பணி யெனச் செய்வான். 'நான் செய்கிறேன்' என்ற எண்ணமே அவன் மனத்தில் இராது. கர்மபலன்களை அவன் உயிர்த்தொகுதியாக விளங்கும் கடவுளுக்கே நிவேதிப்பான். அவன் பூரணனாகிப் பூரணசக்தியைப் பரப்புவான். அவன் ஒரு தெய்வ

மின்சாரம் போலத் தன்னைச் சூழ்ந்திருப்பவருக் கெல் லாம் ஆத்மசக்தியை இயல்பாக வழங்குவான். அவன் அறிவேயாகி அறிவொளி பரப்புவான்; அன்பேயாகி அன்பைப் பரப்புவான். அவன் எண் ணங்கள் திருவருட் கடலின் பொன்னலைகளேயாம். பண்டிதப் புலமையைக் காட்ட அவன் தடபுடலாகச் சொற்பொழிவுகள் ஆற்றான். 'இன்ன ஜீவனுக்கு இன்னகுறை; அதை, இவ்வாறு தீர்க்கலாம்' என்று உள்ளத்திற் கருதி, அடக்கமாகச் சில கருணை மொழி களால் அவரவர்க்கு ஆவன சொல்வான். அவன் சொற்கள் அருளருவிபோல இயல்பாகப் போந்து மானிட சமுதாயப் பயிரைச் செழிப்பிக்கும்; அவை ஒவ்வொன்றும் இன்பவிதைகளாகும். அவனுடைய செயல்கள் அருள் வல்லபத்தால் நிகழ்வன: 'என்னை நிமித்தகாரணமாகக் கொண்டு, இறைவனே இவ் வாறு செய்கிறான்!' என்று அவன் உணர்வான். இறைவனிச்சையே அவன் மனமாகும். காணும் உலகிற்கு அவன் அடிமையல்லன். 'அடிமைத்தனம்' என்ற வார்த்தையே அவன் அகராதியில் இராது. அவன் இறைவனின் இளவரசன்; அவன் உள்ளம் ஞானவூற்று; உயிர் அன்பு வெள்ளம்; உடல் அருட் பணிக் காந்தம். சதாசிவப் பிரமமும், ஜனகனும், சிவாஜியும், புத்தனும், ஏசுவும் சேர்ந்த ஒரு ஞான - பக்த - கர்ம - சித் தனே சுத்தயோகி! பழைய நன்மைகளையும் புதிய நன்மைகளையும் போற்றி, அவன் ஒரு புதிய தெய்வ ஜாதியை உலகில் தோற்றுவிப்பான்; கடவுளின் அரு ளரசை நிலைநாட்டுவான்; எல்லா மாந்தரும் சாதிசமய வேறுபாடுகள் இல்லாமல், மூடமந்திரங்கள் இல்லா மல் சுத்தான்ம சித்திபெற்று வாழ, உலக வாழ்வையே

இறைவனை உட்கலந்த யோக வாழ்வாக்க அவன் முயலுவான். சாதி சமய சாத்திர கோத்திர நாடு நிற வேறுபாடுகளெல்லாம் அவன் சந்நிதி மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல மறைந்துபோம். அநாவசியமான கர்மங்களையும் சடங்குகளையும் பெருக்கிக் கொண்டு மனித வாழ்வு முன்னேற்றத்திற் கிடமில்லாது வீணாவதை அவன் வெறுப்பான். ஒவ்வொருவரும் உள்ளத்தில் உள்ள அந்தராத்மாவைக் கலந்து, தியானமே நித்ய கர்மானுட்டானமாகி, செய்யுந் தொழிலெல்லாம் கடவுள் வழிபாடாகி வாழவே, அவன் மனித சமுதாயத்திற்கு வழி காட்டுவான். மனச்சாட்சியின் கட்டளையே அவன் பின்பற்றச் சொல்லும் சட்டமாகும். பெண்களை அவன் மகா சக்தியின் அருள் வடிவாகவே காண்பான்; 'ஆணும் பெண்ணும் அத்யாத்ம உறவு கொண்டு இரண்டுடலிற் கலந்த ஒரே சுத்தான்மா' என்ற உணர்வுடன் சரிநிகர் சமானமாக வாழச் செய்வான்; ஒருவரையொருவர் மோகாந்தகாரத்தில் ஆழ்த்தாது, ஒருவரையொருவர் உயர்த்திப் பூரணமாக்கி யோகயுக்தராக வாழச் செய்வான். அவன் காணும் உலகில் யாருக்கும் தனிச் சொத்திராது; எல்லாம் திருவருளுடைமையாயிருக்கும்; அனைவர் பணியும், அதன் பயனும் திருவருளுக்கு நிவேதனமாகும்; எந்த மனிதனின் அசுர மாயமும் கொடுங்கோல் செலுத்தாது; உலகமெல்லாம் உலகோர் உடைமையா யிருக்கும்; எல்லாரும் இயல்பாகவே உள்ளிருந்து மனச்சாட்சியைப் பின்பற்றிப் பிறர்க்கு இடரில்லாது, எல்லையற்ற அன்புகொண்டு நடப்பர். இத்தகைய **சுத்த - சுதந்தர - சர்வ சமரஸ வாழ்வில்** மனித சமுதாயத்தைத் தெய்வ

சங்கமாக நிலைக்கச் செய்வதே சுத்தான்ம யோகசித்தியின் விரிவான நோக்கமாகும்.

## 1. மெய்த் துறவு

**மனத்தி லருண்மல்கி மானுலக முய்யுந்**
**தனைத்துறக்குந் தொண்டே தவம்.** 1

உலகம் உய்யவேண்டும். அருளாட்சி இங்கு விளங்கவேண்டும். போர் போட்டி பொறாமைகளின்றி மாந்தர் ஒருகுலத் தோழராக வாழவேண்டும். வறுமை, மடமை, அடிமைப்பிணிகள் நீங்க வேண்டும். அதற்கான அருட்பணியைத் தெய்வப் பணியாக இந்த உலகாலயத்தில் ஒவ்வொருவரும் புரியவேண்டும். இவ்வுலகம், 'இறைவன் ஆலயம்' என மாண்புற்றது. இதை விலக்கி ஓடுவது உண்மைத் துறவன்று. எங்கே ஓடுவது? எங்கே சென்றாலும் பூமாதேவியின் ஆதரவிலேதான் வாழவேண்டும்; இல்லறத்தார் தருமத்தை எதிர்பார்த்தே உண்ண வேண்டும். 'நான் துறவி, தவசி' யென்ற செருக்கையும் துறக்கவேண்டும்; மனத்தில் ஆருயிர்கள் பால் எல்லையற்ற அருளை வளர்க்கவேண்டும். 'உலகில் இத்தனை உயிர்கள் மடமையில் ஆழ்ந்து இன்ப வழி தெரியாமல் இடர்ப்படுகின்றனவே; இன்ப வழியைத் தெரிந்து கொண்டு நாம் உலகுயிர்கள் இன்புற நம்மாலான தொண்டு செய்வோம்' என்று செய்வதே உண்மையான தவமாகும்.

**கனத்த நிதிகண்டுங் கட்டின்றி வாழு**
**மனத்துறவே வாய்மைத் துறவு.** 2

காவியுடையும் தண்டு கமண்டலமும் கொண்டு. ஊர்ப்பிச்சை யருந்தி, உலகின் பாதுகாப்பிலேயே யிருந்துகொண்டு, உலகை வெறுத்து, 'மாயை, கானல்,' என்று உபதேசிக்கும் துறவி, சாத்விக அகங்காரம் கொண்டு தனக்கே வாழ்பவனுகிறான். அவன் உலகிற்கு எப்பணியும் செய்யாமல், உயிர்களின் இன்னல்களைக் கண்டும் கண்ணை மூடிக்கொண்டு வாழ்வின் கடமையைச் செய்யாது வீணுகிறான். உலகவாழ்வின் எல்லாத் துறைகளிலும் யோகிகள் புகுந்து மாந்தருக்கு நல்ல உதாரணம் காட்டவேண்டும். ஏராளமான செல்வம் படைத்தும், அதில் பந்தமின்றி வாழும் மனத்துறவே உண்மையான துறவாகும். சிவாஜி, சத்திரபதியானன். ஒருநாள் சமர்த்த குரு இராமதாஸ் தெருவில் பிச்சையெடுத்து வந்தார். "ஐய, என் அரசு முழுதும் தங்களுக்கே உரிமையா யிருக்கும்போது, தாங்கள் ஐயம் புகுவானேன்?" என்முன் சிவாஜி. "ஆகா, அப்படியானல் இந்தா, நீ பிச்சையெடுத்து உணவு கொண்டுவா! நான் நாடாளுகிறேன்" என்ருர் குரு. சிவாஜி பெருமகிழ்வுடன் பிச்சையெடுத்துக் குருவிற்கு உணவு கொடுத்தான். "நல்லது, இனி உன் அரசை நீ ஆள்!" என்ருர் குருமணி. "அரசு தங்களுக்கு நிவேதனமாய் விட்டது; நான் இனித் துறவியாக ஐயம் புகுந்து வாழுகிறேன்" என்முன் சிவாஜி. என்னே! இந்த வீரனின் மனத்துறவு! "ஐய, அப்படியன்று, நீ காஷாயக் கொடி கட்டி, உலகில் தருமம் நிலைநிற்கவே (கடவுளின் பிரதிநிதியாக) உலகை யாள்! உன்னைப் போன்ற வீரர் துறவிகளாகி, ஏகாங்கிகளாகக் கிளம்பி விட்டால், உலகில் தருமத்தைக்

காப்பவர் யார்? உள்ளே துறவும் புறத்தே வீரக் கனலும் கொண்டு, அசுர மாயத்தை ஒழித்து, பாரத தர்மத்தை நிலைநிறுத்தவே வாழ்வாயாக!'' என்று ஆசீர்வதித்தார் குருநாதர். அவ்வாறே ஆண்டான் சிவாஜி. அசோகனைப்போன்ற இராஜ ரிஷிகள் வறட்டுத் துறவுபூண்டு காட்டிற்கு ஓடிப் போனால், நாட்டின் நிலைமை என்னவாகும்? உலகப் பணிகளையே தவமாகச் செய்ய வேண்டும். மனத் துறவு கொண்ட அறவோர்களே இப்போது நமது நாட்டிற்கும், உலகிற்கும் தேவை.

**பத்தாறும் வென்று பழுதற்ற சுத்தான்ம**
**சித்தரைத் தேவரெனத் தேர். 3**

(பத்து—பத்துத் தீமைகள்; ஆறு=5 புலன்கள் +மனம்). சுத்தான்ம சித்தர் மானிடம் போர்த்த தேவராவர்; அவர் பழுதற்ற அறவடிவானோர். பழு தறுவதெப்படி? மனிதனைப் பழுதுறுத்துவன **பத்துத்** தீமைகள். அவையாவன :—காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மச்சரம், ஈர்ஷை, இடம் பம், தர்ப்பம், அசூயை. எவற்றால் இப் பழுதுகள் உண்டாகின்றன? நெறிதப்பித் திரியும் ஐம்புலன்க ளாலும், சங்கற்ப விகற்பங்களில் அகங்கரித்துத் திரியும் மனத்தாலும் இப்பழுதுகள் விளைகின்றன. சுத்தான்ம சித்தர் ஐம்பொறிகளை அடக்கி மனத்தின் ஆசையாணவ மாயங்களை அறவே யழித்துப் பரிசுத்தமான உள்ளந் தாங்கிய தர்மாத்மாக்கள் ஆவர். அவர்களே, வையத்தில் வானவர்; அவர் சேர்க்கையால் பிறமாந்தரும் தூய்மை யுறுவர்.

**அடிமைத் தளையுதறி யஞ்சாத வீரர்**
**மடமைத் துயர்மாற்றி னார். 4**

மாந்தரின் தெய்வசைதன்யம் விளங்காதிருப்பதற்கு முதற் காரணம் அடிமைத்தனமே யாகும். புலன்களுக்கும் பொய்ம்மாயமனதிற்கும் அடிமைப்பட்டு மாந்தர் ஆத்மசுகத்தை யிழக்கின்றனர்; மடமை, வறுமை, சோம்பல், சோர்வு, சாதிமதச் சண்டைகள்—இவற்றால் தமது வீட்டையும் நாட்டையும் பிறருக்கு உரிமையாக்கிப் புறவாழ்விலும் அடிமையாகின்றனர். உள்ளடிமை, புறத்தடிமை இரண்டையும் ஒழிக்கவேண்டும். ஆத்ம விடுதலை, தேச விடுதலை இரண்டும் அவசியமாகும். அடிமை நாட்டில் யோக சித்தி யெய்த முடியாது. நல்ல தர்மோபதேசம் செய்யும் துறவிக்கு 144 போட்டுப் 'பேசாதே!' என்றால், வாயை மூடவேண்டியதுதான்; அல்லது சட்டத்தை மீறிச் சிறைகாக்க வேண்டியதுதான். ஒரு நல்ல ஆசிரமங்கண்டு தூய தவம்புரியும் யோகியை, 'இன்னும் 24 மணி நேரத்திற்குள், நீர் இந்த இடத்தைக் காலி பண்ணவேண்டும்!' என்றால் பேசாது செல்ல வேண்டியதுதான். இந்த மாதிரி அத்யாத்ம சக்தி, இலௌகிக ஆட்சிக்கு உட்பட்டிருக்கு மட்டும் எத்தவமும் பூரணமாகாது. ஸ்வராஜ்யம், ஸாம்ராஜ்யம் இரண்டும் வேண்டும்; யோகசக்தியை வளர்த்துக்கொண்டு ஒரு காட்டு மூலையில் சமாதியில் உறங்கிக்கொண்டிருக்கக் கூடாது. அஃது, ஏராளமான செல்வமுள்ளவன் கடுஞ்செட்டும் கருமித்தனமுங் கொண்டு பிறருக்கு ஏதும் தராமல் தனது செல்வத்தைப் புதைத்துப் புதைத்து வைத்து இறப்பது போலாகும். யோக சித்தி பெற்றவர் அந்த யோகபலத்தைக் கொண்டு மனித சமுதாயத்தை உயர்த்தவேண்டும். தனியே காயக்கிலேசங்கள் செய்வதினும், மனித சமுதாயப்

பணிகளில் வரும் இடர்களைத் தாங்கும் வைராக்கிய சித்தமுள்ளவனே உண்மையான தவசியாவன்; உதாரணமாக: மகாத்மா காந்தி வறட்டுத் துறவு தாங்கி ஏதாயினுமொரு காட்டிற்கு ஓடிப்போய்ச் சமாதியில் ஆழ்ந்திருந்தால், நமது நாட்டின்கதி என்னவாயிருக்கும்? அச்சம் ஒழிக! அடிமைத்தளைகள் படபடவென முறிந்து தூளாகுக! ஆற்றல் பெருகுக! இருளிடர் நலிக! அறிவொளி பரவுக! வறட்டுத் துறவிகள் வேண்டா. தயானந்தர், விவேகானந்தர், இராம தீர்த்தர், மகாத்மா காந்தி, அருட்பிரகாசர், அப்பர் போன்ற வீரத் துறவிகள் எழுக! உலகின் மடமை வறுமை அடிமைத் துயர்களை மாற்றவே, அவர்கள் முற்றிலும் பிறர்க்காக வாழ்க! உலகில் பணி செய்வதுதான் மிகவும் அரிய தவமாகும். அகங்காரத்தை விட்டுத் தனது அன்பைக்கொண்டு பலர் வாழ வாழ்பவனே அற்புதமான துறவியாவன். நரி, புலி, கரடி, சிங்கம். மலைப்பாம்பு—இவை வாழும் காட்டில் தவம் புரிவதை விட, வஞ்சம், குரோதம், ஆணவம், பொறாமை ஆகியவை வாழும் உலகில், அன்பும், பொறுமையும், அருளும், பூண்டு இடர்களைத் தாங்கித் தொண்டாற்றுவதே அற்புதமான பொதுநலத் தவமாகும்.

அழகெனக் காட்டி யடிமை தருவ
முழுவதும் போக்க முயல். 5

அழகுபோல மினுக்கி எத்தனையோ ஆசைப் பேய்கள் நம்மைச் சுற்றி வஞ்சவலை வீசுகின்றன. அவற்றின் வலையில் விழுந்தால், நாம் சாசுவதமான அடிமைகளாயிருக்க வேண்டியதுதான். அத்தகைய அழகுத் தூண்டிலைக் கவனமாகப் பார்த்து முற்றிலும் விலக்கி வாழவேண்டும், சுத்தான்ம யோகி.

பேர், புகழ், பட்டம், பதவி, சுகபோக லீலைகள் —எதிலும் சுத்தான்ம யோகிக்குப் பற்றிருக்கக் கூடாது. அவன் அழகை மலர் போலக் காண்பவன்; அழகிற்கு அடிமைப்பட்டவ னல்லன். உண்மையழகு உள்ளத்திலிருந்து மலரும்; போலியழகு பூச்சினலும் வேடத்தாலும் மயக்கும்; போலியழகின் வஞ்ச வலைகளில் சுத்தான்மத் துறவிகள் ஒருகாலும் சிக்கமாட்டார்கள்; அவர்கள் வாழ்வை அருளழகாற் பொலியச் செய்வார்கள். இதன் விரிவை அடுத்த அதிகாரத்திற் காண்க:

---

## 2. பற்றறுத்தல்

பற்றே துயராகும்; பற்றறலே பேரின்பம்;
கற்றறிந்தோர் கொண்ட கருத்து. 1

எல்லாச் சமய நெறிகளையும் கற்று நின்று அனுபவம் பெற்ற மெய்ப்புலவரின் கருத்து, 'பந்தமே துக்கம்; பந்த நிவர்த்தியே பரமானந்தம்; நமது வாழ்வைக் கீழே வீழ்த்தி மாயத்திற்கும் போலிச் சுகத்திற்கும் அடிமைப்படுத்தும் ஆசையாணவப் பற்றுகளை நீக்கவேண்டும்' என்பதேயாகும்.

வெற்றெலும்பை நாய்கடிக்கும் விந்தையென மாயமனப்
பற்றுழன்று நோவார் பலர். 2

பசையில்லாது உலர்ந்து வெளுத்த வறட்டெலும்பை நாய் ஆவலாகக் கடிக்கும்; அதன் வாயெல்லாம் இரத்தம் வரும். நாய் அதை அந்த எலும்பிலுள்ள இரத்தமே என்று மயங்கி, மீண்டும் மீண்டும் கடிக்கும். யாராயினும் கிட்டவந்தால், 'என் உணவைப் பிடுங்கவா வருகிறாய்? வப், வெள்

ளொள் உள்!' என்று விரட்டும். என்ன விந்தை! என்ன மாயம்! இதுபோலவே, உலகில் ஆசை வந்து சித்து நோவுறுத்தும் மாயங்கள் பலவுள்ளன. புலன்கள் நெறி பிசகி அவற்றின் வழியே அலையும் மாய மனம், அந்த வெறுமைகளில் ஏதோ இன்பம் இருக்கிறதென்று பற்றுகிறது. இந்தப் பற்றிற் சிக்கி யுழன்று நோவுறும் மாந்தர் உலகில் மிகப்பலர். அவர்களுக்கெல்லாம் சுத்த யோகி தனது உதாரணத்தால் மெய்வழி காட்டவேண்டும். உதாரணம்: கிளிபோல மனைவி யிருப்பள்; ஒரு விலைமகள் மாயத்தில் விழுந்து உடலைக் கெடுத்துக்கொண்டு, பணத்தையும் இழந்து, மோக வலையிற் பட்டலைவர் சிலர். "அடா, இது பாழும் வஞ்சமடா; இது நரகப் படுகுழியடா; இதை விட்டு வெளியேறடா!' என்று பெரியோர்கள் புத்தி சொன்னல், 'உமக்கென்ன தெரியும் நான் அனுபவிக்கும் சுகம்!' என்று, பெண்சாதி தாலிக் கயிற்றில் திக்குச்சியைப் பொருத்தி, அதிற் கோத்த மாங்கல்யத்தையும் கவர்ந்து கொண்டுபோய் விபசார தேவதைக்குக் காணிக்கை வைப்பர். இஃதென்ன மாயம்!

**அழியாப் பொருளை யழியாது பற்றின்**
**அழியா வமரநிலை யாம்.** 3

உலகில் நாம் பற்றத்தக்க பொருள், என்றும் அழியாது நம்முள்ளத்திலும் உலகிலும் விளங்கும் பரமாத்மாவே யாகும். மனமழியாது, உறுதியழியாது வைராக்கியமாக அதையே பற்றி நின்ருல், உலகின் குணதொந்த விகாரங்களால் அழிவுருத அமரநிலை உண்டாகும். பொருட்பற்றுக் கூட அருட்பற்றினலுண்டாகவேண்டும். ஒருவன் இலாபமான தொழில்

செய்து பொருள் குவித்தாலனுல், அதைப் பூட்டி வைத்துக் கருமிப் பூதம்போற் காவாமல், 'இது திருவருளால் வந்த செல்வம்; இதை உலகில் வருந்தும் ஏழைகளுக்குத் தரலாம்; இதைக் கொண்டு பல நல்ல தொழில்களை வளர்க்கலாம்; அதனால் பலருக்கு உழைப்பும் பிழைப்பும் உண்டாகும்: பணம் அழியும் பொருள்; அதை நல்வழியிற் செலவிட்டு உலகில் திருவருளாட்சியை நிலைநாட்டத் துணைபுரிவது புண்ணியம்' என்று கருதி, அழியும் பொருளைக் கொண்டு அழியாப் பொருளைத் தேடி அதையே பற்றி நிற்க வேண்டும். அப்போது உலகில் அமரவாழ் வுண்டாகும்.

கொண்டுவந்த தில்லை; கொடுபோ வதுமில்லை;
வண்டார் கனிமரம்போல் வாழ்! 4

பிறந்தபோது எப்பொருளையும் கொண்டுவருவதில்லை. இடையே எத்தனையோ செல்வச் சிறப்புக்கள் வருகின்றன. முடிவில் எதையும் கொண்டு போக நமக்குச் சுதந்தரமோ, நினைப்போ, ஆற்றலோ இல்லை. உடல் மண்ணாகிறது. ஜீவன் அந்தக்கரணங்களில் அடைபட்ட சங்கற்ப விகற்பங்களுடனும் பாப புண்ணியங்களுடனும் பிரிந்து சென்று, வேறு உடலுட் புகுந்துறைகின்றது. கண்முன் உள்ள வாழ்வை நாம் நன்கு பயன்படுத்தி ஜன்ம சாபல்யம் பெறவேண்டும். நமது வாழ்க்கை ஊர்நடுவே செழிக்கும் ஒரு கனிமரம்போ லிருக்கவேண்டும்: ஒரு மாமரம் அருந்துவது பூசாரமும் நீருந்தான்; அது நமக்கு அளிப்பதோ, இனிப்பான பொன்னிறக் கனிகளாகும். மாந்தரும் உலகன்னை தரும் உணவை உண்கிறார்கள். அதற்குப் பதிலாகத் தம் ஊழியத்

தாலும், பொதுநலத்தாலும், உலகம் பலவகையினும் இன்புற வாழ வேண்டும். வாழ்வென்னும் மாமரத்தில் புண்ணியக் கனிகள் குலுங்க வேண்டும். இந்த மரத்தை நமனார் ஒருநாள் வந்து வெட்டி விடுவார். நிற்குமட்டும் நற்கனி கொடுத்து, அழைப்பு வரும் போது பேசாமற் போய்ச் சேரவேண்டும். ஒரு கனி மரத்தைச் சுற்றி எத்தனையோ வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன; எத்தனையோ புட்கள் கனியுண்டுவாழ்கின்றன. அதுபோல, 'நல்ல தருமவான், புண்ணியவான், அன்பிற் பெரியான்' என்று சுற்றி யுள்ளவர் மகிழ்ந்து போற்ற நாம் வாழவேண்டும்; பிறப்பும் இறப்பும் உடலுக்கு இயல்பென்றுணர்ந்து கலங்காதிருக்கவேண்டும்; நம்மதென்று எதையும் பூட்டி வைத்துக் கருமித்தனம் செய்யாமல் எல்லாருக்கும் தாராளமாகத் தரவேண்டும்.

நாளாக நாளாக நாளான மாயம்போய்,
ஆளாத லீசற்கென் றும். 5

வாழ்நாட்கள் செல்லச்செல்ல, அறிவும் அனுபவமும் முதிர முதிர, 'பழைய மாயங்கள் கழிந்து, உள்ளத்தும் உலகத்தும் விளங்கும் தனி முதல்வனாகிய அருளிறைவனுக்கே நாம் இனி ஆளாதல் வேண்டும்' என்ற வைராக்கியம் உண்டாகும். தனுகரண புவன போகங்களை, எதற்காக இறைவனருள் ஆன்மாக்களுக்குத் தந்தது? அவற்றைக்கொண்டு உலகியல்பும் உண்மையியல்பும் அறிந்து, அனுபவித்து அனுபவித்து, மனமாசகன்று திருவருளைக் கூடுவதற்கன்றோ? நெருப்பு வெகு அழகாயிருக்கிறது என்று ஒரு குழந்தை தாவிப் பிடிக்கச் செல்லுகிறது! 'ஐயோ வேண்டா, அப்பா, சுட்டுவிடும்' என்று

தாயார் குழந்தையை விலக்கி விலக்கி அப்புறப்படுத்து கிறாள். குழந்தைக்குத் தாயின் கருணை புரிவதில்லை; நெருப்பைப் பிடிக்கவே மீண்டும் ஆவலாகத் தாவு கிறது. ஒரு நாள் தாயில்லாத சமயம் குழந்தை நெருப்பைத் தொட்டதும், 'ஆ! அம்மா...அ!' என்று அலறித் துடிக்கிறது; தாய் ஓடிவந்து, 'என் கண்ணே! நான் சொன்னேனே' என்று பரிதபித்து மருந்துபோடுகிறாள். அப்புறம் குழந்தை நெருப் பண்டை போகாது; அதைத் தீண்டாது. சூடுகண்ட பூனைபோல அஞ்சும்; தாயைப் பணியும். அதுபோல, உலகின்பத்தைக் கொடுத்து, சிற்றின்பத்தின் இயல் பறியச் செய்து, பேரின்பப் பசியெடுக்கத் தூண்டும் திருவருள்! 'நாம் பற்றிக்கொண்டிருந்த ஆசாபாசங் களெல்லாம் பொய்; இறைவனருளே மெய்' என்று, அறிவுள்ள மாந்தர் ஒருநாள் உணரவே செய்வர்; உடனே தமது உடல் பொருளாவியெல்லாம் இறை வனுக்கே அடைக்கலமாக்குவர்.

---

## 3. மன மாயம்

சிரிப்பு மழுகையுஞ் சேர்ந்தமன மாயம்
அரிப்பு மெரிப்பும்போ லாம். 1

யோகி மனமாயத்தை வெல்ல வேண்டும்: அஃது இருவிகாரப் பேய்; அது நம்முள் சிரித்து வஞ்ச வலைவீசி உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும்; அதன் கையிற்பட்டால் வாழ்வு ஒரே அழுகையாய் முடியும்; அது பல துன்பங்களைச் செய்யும். ஓர் உதாரணம்:— மேகப்பற்றைச் சொறிந்தால் சுகமாகத்தான் இருக் கும்; பிறகு எரியும், பற்றுப் படரும், உடம்பைக்

கெடுக்கும். மேகப்பற்றைவிடக் கொடியது மோகப் பற்று!

**ஆசை, பொருமை, யகந்தையிவை, நெஞ்சத்திற்**
**பாசவலை வீசும் பகை.** 2

ஈசனையே சிந்திக்க வேண்டிய நெஞ்சத்தைப் பாசவலை போட்டிழுக்கும் பகைவர் மூவர் : ஆசை, பொருமை, அகங்காரம்—இம்மூவரே கவலையைப் பெருக்கி, வாழ்வைப் பாழாக்கும் மூன்று வலிய அரக்கர் ; இவர்களை முற்றிலும் வென்று வீழ்த்தவேண்டும், யோகி. பொன்னாசை, பெண்ணாசை, இன்னொருவன் பொருளைக் கவரும் துராசையெல்லாம் ஆசையாம். அதனால் பொருமையும், அதனால் தனது பிழை யுணராது அகங்காரமும் வளரும்.

**தூசியிலா ஆடியிலே தோன்றுமுகம் போலான்மா**
**ஆசையிலா நெஞ்சத்ததே யாம்.** 3

(ஆடி=கண்ணாடி). நன்றாகத் தூசி துடைத்த கண்ணாடியில் தெளிவாக முகந் தோன்றுகிறது. அது போல, ஆசை துடைத்து அறிவு மேலிட்ட நெஞ்சத்தில், சுத்தான்மா தோன்றும். இதயத்தானே எப்பொருட்கும் இறைவன், கடவுள், பரம்பொருள் என்க ! சுத்தமனமே அவனது சொரூபக் கண்ணாடியாம்.

**இன்பவலை வீசி யிழுக்கு மனமாயந்**
**துன்பவலை யாகுந் தொடர்ந்து.** 4

பேச்சிலும், நகையிலும், நடிப்பிலும் இன்பம் போலக் காட்டி வலைபோட்டு மாந்தர் மனத்தை யிழுக்கும் மனமாயத்தில் அகப்பட்டுக் கொள்ளாதே! அதில் சிக்கினால், அஃது உன்னை விடாது தொடர்ந்து பற்றும் துன்ப வலையாக முடியும். உஷார் !

தேவதேவியின் மாயத்திற் சிக்கிய விப்ர நாராயணர் என்ன பாடுபட்டார்! 'இது நமக்கு அருளைக் காட்டுமா, இருளைக் காட்டுமா? இதன் இன்பம் உண்மையின்பமா, போலி யின்பமா? இதனால் நமக்கு அமைதி வருமா? கவலை பெருகுமா?' என்று நன்கு ஆராய்ந்து தெளிந்த பிறகே, ஒன்றை நம்பி மேற்கொள்ள வேண்டும். ஆசையின் தூண்டுதலால் இராவணன், சீதையைக் கவர்ந்து குலத்தொடும் அழிந்தானல்லனோ? ஆசை வீசும் இன்பவலை துன்ப நரகத்திற்கே வழியாம். "முதலில் அமுதம் போலினித்து, முடிவில் விஷம் போற் கொல்லும் தாமஸ சுகத்தில் விழாதே; காமத்தை வெல்!" என்று கண்ணன் எச்சரிக்கை செய்கிறான்.

**ஆசையழுக் கில்லாமல் ஐம்பொறியை வென்றவனார்?**
**ஆசா னுலகிற் கவன். 5**

மெய் வாய் கண் மூக்கு செவி ஆகிய ஞானேந்திரியங்களையும், கை கால் வாக்கு குதம் குறி ஆகிய கன்மேந்திரியங்களையும் ஆசையாகிய அழுக்குப் படியாமல் அடக்கி வென்று பரிசுத்தமானவன் யார்? அவனே உலக குரு ஆவன்; அவனிடம் உலகம் ஞானங் கற்கலாம்.

சிதறிய புலன்கள் சித்த மலைக்கும்; அடங்கிய புலன்கள் ஆற்றலைப் பெருக்கும்; பொறி புலன்களை அடக்கி மனங் குவிந்திருக்கும் யோகிக்குப் புத்தகப் படிப்பில்லாமலே எல்லா ஞானமும் அனுபூதியால் உண்டாகும்: முகம்மது நபி, பரமஹம்ஸர், குருநானக் முதலியோர் உலகிற்கெல்லாம் ஆசிரியராக விளங்குகின்றமை அவரவர் யோகத்தாற் பெற்ற அருளறிவினாலேதான்.

## 4. தெய்வ வொளி

தெய்வ வொளிதனையே தேடு ; பிறவெல்லாம்
கைநழுவுங் காலத்தி லே. 1

தெய்வச் சுடரையே உள்ளும் புறமும் தேடு; உனக்குச் செல்வம் வந்தாலும், அதைக்கொண்டு நடமாடுங் கோயில்களான ஆன்மாக்களுக்கு உதவி செய்து, அந்த நன்மையால் தெய்வவொளியைத் தேடு! மற்றவெல்லாம் காலத்தில் நம்மைக் கைவிட்டும் போம்.

எத்தனையோ பொருட்களை நம்முடைமை யென்று சேர்த்துக் காக்கிறோம். அவை எப்படியோ நம்மை விட்டுப் போய்விடுகின்றன. நேற்றுக் கூடிக் குலாவிய நண்பர், இன்று சண்டை போட்டு வழக்குத் தொடர்கின்றமையைக் காண்கிறோம் ; நேற்றுச் செல்வன் இன்று கையிளைத்தவனாகிறான். உலக வாழ்வைத் தெய்வவொளி தேடும் யோகமாக்குக !

ஆர்வக் கனலுடனே யாண்டவனை வேண்டினருட்
பேரமுத வான்பொழியு மே. 2

இறைவனருளொளி, எல்லையற்ற பெரிய அமுத வானம் போன்றது ! குளிர்காற்று இங்கிருந்து அழைத்ததும், மேகம் மழை பொழிகிறதன்றோ? அதுபோலே, ஆர்வக் கனல் எழுந்து ஆண்டவனை வேண்டி முறையிட்டால், அவனது பெரிய அருளமுத மாரி பொழியும்.

அன்பின் தீவிரமே ஆர்வமாகும். இறைவனருள் எங்கும் உள்ளது. ஆர்வமுடன் உபாசித்து அழைத்தால், அவ்வருள் நம்முள் இறங்கும். அவ்வாறு அருளொளி பெற்றவரே உலகின் தீர்க்கதரிசிகளாயினர். ‘அருட் பெருஞ் சோதியே, என்

னுள் இறங்கு; என் உள்ளம் மாசற்ற பொற் கிண்ணம்; அதில் நிறைந்து விளங்கு; ஆசையாணவங்களை யொழித்து, உன்னைச் சரண்புகுந்தேன்; அருளே, பொழி, பொழி! எனது மானிடத்தில் உள்ள தெய்வத்தைத் துலக்கு! அருட்பெருஞ் சோதியே, எனக்கு அமர வாழ்வளி! ஓம் சுத்த சக்தி' யென்று கூவுக! அருள்மழை பொழியும்; அமுதக்கனி விளையும்; வாழ்வு பரிபூரணமாகும்!

**' இருக்கிறே னிங் ' கென் றிதயத்தா னுன்னை**
**யழைக்கிரு னுங்கே யடை.** 3

' இதோ! உன்னுள் நான் இருக்கிறேன்! உள் விழித்துப் பார்!' என்று இதயத்திலுள்ள சுத்த பரமாத்மா உன்னை எப்போதும் அழைக்கிருன். புறந் திரியும் மனத்தை உள்ளேயடக்கி மனம் எங்குதிக்கிறதோ அந்த இடத்தைக் கண்டு பிடி! அதுவே இதயம்; அங்கேதான் சுத்தான்மா உள்ளது. ' அதுவே நான் ' என்றறிந்து இன்புற்றிரு!

' நானுர்? ' என்னும் ஞானவிசாரத்திஞல், ' இதுவே நான் ' என்று இதயத்தில் உண்மை புலனுகும். ' யார் வீட்டில்? ' என்று கதவைத் தட்டினுல், பதில் வரும். நமது வீடு உள்ளம்; நாம் சுத்தான்மா; நமது வீடடைந்து, நாம் நாமாக வாழுவோம்.

**மனத்து ளுருவி மணிமன் ருெளிகாண்!**
**இனிக்கும் பரம்போ லிகம்.** 4

தூல சூக்கும சரீரங்களைத் தாண்டிக் காரண சரீரத்திற்கு நாம் உயரவேண்டும்; அன்ன, பிராண, மனேமய கோசங்களைத் தாண்டி விஞ்ஞான கோசத்திற்கு உயர வேண்டும்; அங்கிருக்கும் பொற்கத

வைத் தட்டித் திறந்தால் சச்சிதானந்த மெய்தலாம். "சுருள்மனமாயை வினையிருள் நீக்கி, அருள் விளக்கேற்றிய அருட்பெருஞ் சோதி!" என்றார் மகாத்மா இராமலிங்கர். சங்கற்ப விகற்பச் சுருளாகிய மனத்தை ஊடுருவி மேலே செல்லவேண்டும்; மணிமன்றமாகிய ஸஹஸ்ராரத்தின் ஒளியைக் காணவேண்டும்: கண்டால் இவ்வுலகமும், பரலோகம்போல மோட்ச சுகத்தால் இனிக்கும்.

இந்த விஞ்ஞான சித்தியை, வள்ளலார் வெகு அழகாக விளக்குகிறார்: "கடல் கடந்தேன், கரையடைந்தேன், கண்டு கொண்டேன் கோயில்! கதவு திறந்திடப் பெற்றேன்; காட்சியெல்லாம் கண்டேன்! அடர் கடந்த திரு அமுதுண்டு, அருளொளியால் அனைத்தும் அறிந்து தெளிந்து, அறிவுருவாய் அழியாமை அடைந்தேன்; உடல் குளிர்ந்தேன்; உயிர் குளிர்ந்தேன்; உள்ளமெலாந் தழைத்தேன்; **உள்ளபடி உள்ள பொருள் உள்ளவனாய்** நிறைந்தேன்!" இவ்வுலகில் அமரவாழ்வெய்தும் வழி, மனங்கடந்து, நம்முள் உள்ள விண்ணரசாகிய மணிமன்றத்தை யடைந்து, அங்கு முச்சுடரிற் குளித்து, ஜீவப் பிரமைக்யமாகிய இன்பத் தேனை யுண்ணலே யாகும்.

**துரியமலை மீதேறிச் சோதிநடங் காணின்,**
**அரிய செயலெல்லா மாம்.** 5

உலகில் விண்ணரசைக் கொணர்ந்து, அருளாட்சியை நிலைநாட்டலே அரிய செயல்; அதன்பாற் செய்யவேண்டுந் தொண்டுகள் அனந்தம்: அவற்றிற்கெல்லாம் சக்தி வேண்டும்; அருட்சோதி வழி காட்டவேண்டும்; சத்திய சோதி துணை செய்ய

வேண்டும். இவற்றை எங்கே பெறுவது? துரிய மலை மேலேறியே இவற்றைப் பெறலாம்.

'துரியம்' என்பது, 'சுத்தான்மா, நான்' என்று உணர்ந்து, அதனுடன் கலந்து ஒன்றாகும் நிலையாகும் விழிப்பு, துயில், மறப்பு, துரியம், துரியாதீதம் என்று ஐந்து உணர்ச்சிப்படிகள் உள்ளன : சாக்கிரத்தில் புற வுலகே நமக்குப் புலன்கள்மூலம் புலனாகிறது. சொப்ப னத்தில் சூக்குமதேகத்தின் கனவுகளைக் காண்கிறோம். சுழுத்தியிற் சூக்குமதேகக் கனவுகள் ஒழிந்து, உள்ளத் தில் மனம் ஆழ்ந்து விடுகிறது. அதற்குமேல், துரியா வத்தையிலே நமது சொரூபம் சித்திக்கிறது. துரியமலை யின் மேலேறி உச்சிக்குச் சென்றால், துரியாதீதக் கோயி லைக் காணலாம். அதில், அருட்சோதி நடம்புரியும். அஃதாவது : ஸஹஸ்ராரத்தைச் சேர்ந்து, அதிலுள்ள சக்கரங்களை யெல்லாம் கடந்து, பிரம்மரந்திரத் திற்குக் குண்டலி போய்ச் சேர்ந்தால், அங்கே சோதி தோன்றும் ; அச்சோதி இரண்டு கால் கொண்டு நடம் புரிவதுபோலக் குதிக்கும் ; அங்கு மிகவும் சூட்சுமமான நாடிகள் சிலவுள்ளன. அவற் றுடன் நாம் கலக்கும்போது, இன்பச் சோதியும் அருள் நடனமும் காணும். உச்சிமீதேறி மெல்லிய திருவடிகளுடன் யாரோ, 'திம், திம்' என்று குதிப் பது போல எப்போதும் உணர்வர், ஸஹஸ்ரார சித்தி பெற்ற யோகிகள். அதுதான், அருட்சக்தி இறங்கு வதற்கு அறிகுறியாம். அந்த நடனத்தால் ஒவ்வொரு நரம்பிலும் தெய்வசக்தி பாயும். அந்தச் சக்தி பெற்ற மகான்களே, உலகில் மனித சமுதாயத்தைத் தெய்வப்படிக்கு உயர்த்தும் அரிய செயல்களைச் செய்ய வல்லவர் ஆவர்.

## 5. ஆத்மசாந்தம்

பொன்னும், பொருளும், புவியு மளித்திடுமோ,
தன்னுள்ளா மின்பந் தனை ? 1

படபடப்பினாலும் இராஜஸத்தாலும் பெரிய நிலையான காரியங்கள் நிறைவேறா. ஆத்மசாந்தம் எய்தி, அருட்சக்தியும் இறங்கினாலே அரிய காரியங்கள் செய்யலாம். முதலில், தனக்குத்தான் இன்பந் தேடவேண்டும் ; அந்த இன்பம் புறப்பொருள்களில் இல்லை ; உள்ளத்திலேதான் இருக்கிறது. உலகில் நம் ஆசைகளைத் தீர்க்கும் காமகாஞ்சனப் பொருள்கள் இருந்தாலும் ஒரு பொருட்டல்ல ; உலகாட்சியே நமக்கெய்தினாலும் ஒரு பொருட்டன்று ; அவற்றில் இன்பமில்லை. ஒவ்வொருவருக்கும் தமது உள்ளமே இன்ப நிலயமாகும். பிறர் உண்டு தன் பசி யாறாததுபோலவே, புறப்பொருள்கள் ஈடும் இன்பத்தால் உட்பசி ஆறாது ; நாம் உண்டாலே நமது பசி ஆறும் : நமது சொரூபத்தைக் கண்டாலே மனப்பசி தீரும்.

உறவுந் துணையுமாம் உள்ளத்தான் ; உண்மை
யறிவின்ப மாவ னவன். 2

உன் அன்புள்ள உறவினனும், உனக்குத் தயவுடன் துணைசெய்பவனும் யார் ? உன் உள்ளத்தில் உள்ள ஆத்ம பந்துவே அவனாவன். " தனக்குத் தனதான்மாவே பந்து " என்னும் கீதை. அந்த உள்ளக்கடவுளின் இயல்பென்ன ? " பிரமம் சச்சிதானந்த லட்சணம் " என்னும் வேதாந்தம். அஃதாவது : 'இறைவனே உண்மை ; அவனே அறிவு ; அவனே இன்பம் ; அவனையன்றி இம்மூன்றையும் யாங்குங் காணவியலாது ' என்பதாம்.

**இயல்பான வுன்னை யியல்பா யறிந்தே,**
**யியல்பாகி யின்புற் றிரு.** 3

இயல்பான உன்னை, 'சுத்தான்மா' என்று இயலறிவால் அறிந்து, உன்னிடத்தில், உள்ளத்தில் இயல்பாயிருந்து ஆத்மானந்த முற்றிரு!

இயல்பு திரியாதிருத்தலே இன்பம். இயல்பு திரிதலே என்றுந் துன்பம்: உனது இயல்பு உண்மையறிவின்பமாம். நீ சுத்தான்மா ஆவாய்; புறத்தே சூழும் இடர்களெல்லாம் உன் மனவிகாரத்தால் வந்தன; மனங்கடந்து அறிவாயிரு: இயல்நிலை உனது பிறப்புரிமை; அதைக் கொள்ளைகொண்டு உன்னைக் கட்டுப்படுத்துவது ஆசை - யகந்தை மாய - மனம் ஆகும்; அதை வென்று, ஆத்மராஜ்யத்தைப்பற்றி உள்ளாட்சி புரி: நீயே உனக்கு அரசன்; நீ ஆன்மா; அது பொது; அஃது அறிவு; அஃது இயல்பு; எதுவும் அதுவே! ஓம் தத்ஸத்.

**அன்னிய மில்லாத தறிந்தடங்கி, யெக்காலுந்**
**தன்னிலையிற் றுஞ யிரு.** 4

'தான்வேறு, பிறர் வேறு' என்ற பேதபுத்தியிருக்குமட்டும், ஆத்மசாந்தம் எய்தாது; இவ்வாறு வேறு படுத்துவது மனத்தின் மடமையே ஆகும். 'என்னுள் எஃது உண்மையோ, அதுவே உலகுயிர்கள் அனைத்திலும் உள்ள உண்மை; நான் எவ்வுண்மையோ அதுவே அனைத்தும்; நான் யாரோ, அவனே அனைவரும்' என்று ஞானவிசாரஞ் செய்து, பேதபுத்தியை ஒழிக்கவேண்டும். அன்னியமாவது, பிறர் தனக்கு அன்னியர் என்றெண்ணும் தனியகந்தை (Separative ego) ஆகும். அதைச் சர்வாத்ம பிரேமையாலும், ஆத்மவிசா

ரத்தாலும், அருட்பணியாலும் ஒழிக்க வேண்டும். இத் தனியகந்தை யுள்ளமட்டும், எத்தனைச் சாதி சமய சமுதாயச் சீர்திருத்தங்கள் செய்தாலும் உலகில் அமைதியும், ஒற்றுமையும் இயலா. அன்னிய பாவனையை விட்டு, அனன்னிய பாவனையில், 'அனைவரும் தானே' என்று அறிய வேண்டும்; அகங் கரியாமல் தன்னறிவில் அடங்கி நிற்க வேண்டும்.

அந்நிலையில் எப்போதும் இருப்பதே சகஜ சமாதியாகும். தன்னிலை யாவது, தான் இருக்கும் இடமாம்; தானான சுத்தான்மா இருக்கும் இடம் இதயம். அந்த இடத்தில் தானாக நிலைத்திருத்தலே ஆத்ம சுகமாகும்.

"தானாயிருத்தலே தன்னை யறிவதாம், தானிரண் டற்றதால் உந்தீபற! தன்மய நிட்டையீ துந்தீபற" (இரமண மஹரிஷி).

**கண்ணைத் திறந்து, கருணையொளி காட்டியருள்**
**உண்மைப் பரம்பொருளே, ஓம்!** 5

உண்மையே தானான பரம்பொருளே, எனது ஊன் விழியால் நான் உன்னைப் பார்க்க முடியாது. உன்னையே, 'உண்மையான நான்' என்றறிந்தா லொழிய, எனக்கு இன்பம் வராது; நீ கருணை பூத்தா லொழிய, உன்னைக் காண முடியாது. என் உள்ளத் திலுள்ள பரமாத்மனே, எனது ஞானக் கண்ணைத் திற; உனது தனிப்பெருங் கருணையில் விளையும் அருட் பெருஞ் சோதியை எனக்குக் காட்டியருள்; உன்னை 'ஓம்' என்று வேதங்கள் வழுத்துகின்றன; அவ் வாறே, யானும் உன்னை வழுத்துகிறேன். ஓம் சுத்த சக்தி, ஓம்!

## 6. அறவோர்

பார்வாழ்க்கை முற்றும் பரமன் வழிபாடாம்
பூரணருக் கென்றே புகல். 1

சுத்த பரிபூரணரான அறவோர்க்கு இந்த உலக வாழ்க்கை முற்றும் பரமாத்மாவை வழிபடுவதேயாகும் என்க : அவர் ஒவ்வொரு செயலையும் அனைத்துங் காரண இறைவனுக்கே வேள்வியாகச் செய்வர். உள்ளும் புறமும் ஒன்றாய்ப் பரவி, எங்குங் கண்ணாய், எங்குங் காதாய், எங்குங் காலாய், அனைத்துமும் அறிவாய் விளங்குகிறான் இறைவன். ஆணவத்தையும் தனி யுணர்வையும் அவனுக்கே ஊணாக்கிய யோகியர், 'அவனன்றி யாதுமில்லை' யென்றறிவர். முக்குணச் சிக்கினிற் பட்டு வருந்தும் மானிடர்க்கு அறிவொளி விளக்க வேண்டியது அறவோர் கடமை; அதற்கே அவர் வாழ்வர். அவர் வாழ்க்கை முற்றும், இறைவனிச்சையை மனித சமுதாயத்தில் நிறைவேற்றும் கர்ம-ஞான-பக்தி யோகமாகும்.

அறிதற் கரிதை யறிந்தறிவாய் மாந்தர்க்
கறிவொளி யாவரற வோர். 2

அறவோர் அறிவதற்கு மிக்க அருமையான சுத்தான்மாவைச் சாதனங்களால் அறிவர்; தாமே அந்த அறிவுப் பொருளாக நிற்பர். "அறிந்தால் அது நீ" என்னும் வேதம். அந்த அறிவை மூடிவைத்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டார் அறவோர்; அவர் உலக மாந்தருக்கு அறிவொளியாக விளங்குவர்; அஃதாவது : சுத்தான்ம ஞானத்தை மாந்தர் பெற்று இன்புற எங்கும் பரப்புவர்.

தாம் பெற்ற அறிவொளியைக் கொண்டு, உலகின் மடமையிருளை யொழிப்பர் அறவோர். ஒரு

*பரம்பொருளின் உயிர்ப்பே உயிரினங்களாகும்; உயிர்களெல்லாம் இறைவனில் ஒன்று. யோகசித்தி பெற்ற அறவோர் ஆத்ம சாந்தத்தில் நிலைத்து, உலகில் அருட்பணி புரிவர்; உள்ளமைதியுடன் உலகில் உலாவுவர். மனப்பற்றில்லாது மன்னுயிர்க் கிரங்கி, உலகைத் தாம் அஞ்சாமல், உலகம் தம்மைக்கண்டு அஞ்சாமல், நேர்மையும் பொறுமையும் உண்மையும் கொண்டு, அன்பைப் பெருக்கி, ஒற்றுமையை நிலைநாட்டி, மனித சமுதாயத்தின் இன்பமே கருதி, ஆத்மஞான விளக்குகள் போல ஊர்தொறும் சென்று பணிபுரிவர் அறவோர்.*

**அருட்கோயில் சுற்றி யணியணியாய் மாந்தர்**
**திருத்தக்க வாழ்வமையச் செய்.** 3

*இறைவன் அருட்கோயிலைச் சுற்றி அணி அணியாக எல்லாத் தேவைகளும் எல்லா நுட்பங்களும் நிறைவுற்று மாந்தரின் அழகிய தெய்விக வாழ்வு இயல்பாக அமையும்படி யோகசித்தியாற் பணி செய்வாயாக!*

*ஒவ்வோர் ஊரும் ஒரு* **சுத்த சங்கம்** *என்க! அதன் நடுவே வட்டமான ஒரு பெரிய அருட்கோயில் உளது; அதில் அருளன்பர் கூடித் தியானிப்பர். தியானமண்டபம் பெரியதா யிருக்கும். அது, கிழக்கும் மேற்கும் கதிர்க் கணங்கள் புகும்படி அமைந்திருக்கும். அதில் பளிச்சென ஒரு விளக்கு எரியும்; வேறெந்த உருவமும் அதில் வைக்கப்படாது; அங்கே தியானிப்பார் அனைவரும், நேராக எல்லாம்வல்ல இறைவனிடமே உள்ளத்தைச் செலுத்தக் கடவர்; அருட்காந்தம் பெற்ற பெரியார்கள், முன்னணியில் முதல் வட்டத்தில் இருப்பர்; அவர்களது யோகசித்தி*

சுற்றும் பரவும். அவர்களும் தங்களை வணங்கச் சொல்லாது, எல்லாம் வல்ல சுத்த சக்தியையே, 'ஓம், சுத்த சக்தி' என்று, அனைவரும் மௌனமாக வெளிப் பகட்டும் ஆடம்பரமுமின்றி, வணங்கச் செய்வர். இதயநடுவிலும், உச்சித்தாமரையிலும் விளங்கும் சுத்தான்ம விளக்கை, அனைவரும் சிந்திப்பர்.

காலை 7 மணிக்கும், மாலை 7 மணிக்கும் தியானம் செய்வர்; இரவில், அருளாளர் திருவாக்கினின்றெழுந்த பாடல்களைப் பாடுவர்; அருள் நடமும் புரிவர். அவரவர் பக்குவத்திற்கேற்றபடி அங்கே சுத்தசாதனம் செய்யலாம். வேறு எவ்விதமான இலௌகிகப் பேச்சும், பணப்பேச்சும், உண்டி வகுலும், வேறு எதுவும் அங்கே கூடா. ஆத்ம நிவேதனமே நிவேதனமாம்; பணம்பிடுங்கி வியாபாரங்கள் அங்கு இரா.

இந்த அழகிய அருட்கோயிலின் தெற்கே ஒரு கனித் தோட்டம் இருக்கும். அதிலேதான் சுத்தான்ம சித்தர்கணம் சிறுசிறு வீடுகள் அமைத்துக் கொண்டிருக்கும். அத்தோட்டக் கனிகளே அவர்கள் உணவாகும். வாழை, தென்னை, மா, பலா, மாதுளை, கொய்யா, விளா, ஆப்பிள் முதலிய கனிமரங்கள் அதிற் செழிக்கும். புட்களும் மான்களும் அதில் சுதந்தரமாக விளையாடும். அதன் ஒவ்வோரங்குலமும் தவசக்திக் காந்தம் வீசும். அத்தோட்டம், அறவோர் பாதுகாப்பில் இருக்கும். சுத்தான்ம சித்தர் சங்க நலத்திற்காகத் தவம் புரிவர்; கோயிலில் தியானம் நிகழ்த்துவர்; அருட்கவிகள் புனைவர்; மௌனமாகச் சுத்தான்மச் சுடர் பரப்பிக் கொண்டிருப்பர். ஆயிரம்பேர் கொண்ட ஒரு சங்கத்திற்கு ஐந்து

சுத்தான்ம சித்தர் இருப்பர். தோட்டத்தின் இடப்புறம் அறநிலயங்கள் இருக்கும். அவை, அறவோர் காப்பில் இருக்கும். ஒவ்வொன்றிலும் சங்கத்திற்குப் பயனாகும் ஓர் அருட்பணி நடக்கும். அறவோர் நாளைக்கு 6 மணி நேரம் சங்கத்திற்காகப் பாடுபடுவர்; 6 மணி நேரம் சுத்தசாதனம் புரிவர் ; 6 மணி நேரம் இளைப்பாறுவர் ; 2 மணி நேரம் உடலைப் போற்றுவர்; 4 மணி நேரம் அவரவருக்கு இயன்ற துறையில் அறிவை வளர்ப்பர். 1000 பேர் கொண்டது ஒரு சுத்த சங்கமாகும். அதில் 50 அறவோருக்கு இடமுண்டு. 50 பேரும் சங்கத்தின் 50 உள்ளமும், கைகளுமா யிருப்பர். அனைவரும் சிறந்த அறிவாளிகள், ஆத்ம ஞானிகள், தருமாத்மாக்கள் ஆவர். இவர்களே சங்கத்திற்குக் கல்வியும், கலைகளும், யோகவித்தையும் பயிற்றுவர். இவர்கள், தங்கள் எளிய தேவைகளைத் தாமே உடலுழைப்பால் அடைவர். இவர்கள் எதையும் தமக்கெனச் சேர்த்து வைப்பதில்லை. சுத்த தருமோபதேசம், சுத்த சங்கீர்த்தனம், யோகப் பயிற்சி, இல்லறத்தோர்க்கு வழிகாட்டல், பிணிதீர்த்தல், கல்விச் சாலைகளை மேற்பார்த்தல், ஆசிரியர்களைத் தயாரித்தல், அரிய நூல்கள் எழுதி வெளியிடல், சுத்தான்ம சித்தரின் அருட்கவிகளையும், அருள் வாக்குகளையும் பரப்பல், ஓவியப் படங்கள் கொண்டு, உடல் நலம், உயிர் நலம், சரித்திரம், பூகோளம், கைத்தொழில் இவற்றைப் பொதுஜனக் கூட்டத்தில் போதித்தல், இல்லறத்தார் உண்ண அழைத்தால் தருமோபதேசம் செய்தே பிறகு உண்ணல், சிறுவர்களுக்குத் தூயவாழ்வு பயிற்றல், பொதுநலத்திற்கேற்ற குளம் கிணறு அறநிலயங்களை அமைத்தல்

முதலியன அறவோர் பணியாகும். அறவோரில் பெண்டிரும் இருப்பர். அவர்கள் பெண் கல்வியை மேற்பார்ப்பர்; பெண்களுக்குச் சிகிச்சை செய்வர்; கன்னியர் குருகுலத்தை நடத்துவர். அறவோர் கூட்டத்தைச் சேர்ந்த ஆண் பெண் இருவரும் தூய பிரமசரியமே வகிப்பர். இருவருக்கும் அருட்கலப்புத்தான் உண்டு; பெண்கள் 35, ஆண்கள் 40 ஆண்டுகள் மட்டும் இல்லறம் வகித்த பின்பு, 5 ஆண்டுகள் அதற்காகத் தேர்ச்சி பெற்ற பிறகே அறவோர் திருக்கூட்டத்தில் இடம் பெறுவர். இல்லறத்திலிருக்கும் போது இவர் பெற்ற பிள்ளைகள் சங்கத்தின் காப்பில் வளர்வர். நைஷ்டிக பிரமசாரிகள் 30 வயதில் சேர்க்கப்படுவர். சங்கத்தில் வழக்குகளைத் தீர்ப்பவரும் அறவோரே. அதற்கென ஆங்கே கோயிலுக்கு எதிரே ஒரு பஞ்சாயத்துச் சதுக்கம் இருக்கும். அறச்சாலைகளுக்கு அருகே பசுமடம், ஏழைகளுக்குப் பிழைப்பளிக்கும் பிழைப்புக்கூடம், ஆசிரியரைப் பயிற்றும் ஆசிரியர் சாலை, பிணிதீர்க்க ஆரோக்கியசாலை, கதியற்ற அநாதைக் குழந்தைகளை ஊட்டி வளர்த்துக் கல்விதொழில் பயிற்றும் குழந்தை யில்லம், வயதாலும் உடற்குறையாலும் உழைக்க முடியாத எளியோர்க்கு ஏழைவிடுதி (இங்கும் அவர்களுக்கு இயன்ற தொழில் தரப்படும்), அருள் நூல்களையும், யோக வித்தையையும் பயிற்றும் அருள்மன்றம், இசைக்கலை பயிற்றும் இசைமன்றம், நாடகம் பயிற்றும் நடனசபை, சங்கத்திற்கு வரும் பெரியார்கள் தங்குவதற்குப் பெரியார் மன்றம், சங்கத் திருவிழாக்கள், இல்லறத்தார் திருமணம் திருநாள்— இவை கொண்டாடும் திருமன்றம், கருநாட்கள் கொண்டாடும் கருமன்றம், பிரமசாரிகளைப் பயிற்றக்

குருகுலச்சாலை, கன்னியர்மாடம், இவற்றுடன் அச்சுக்கூடம், பத்திரிகைச்சாலை முதலியவையும் இருக்கும். கோயிலுக்குக் கிழக்கேயும் வடக்கேயும், அறநிலயங்களில், அறவோருடன் பாடுபடும் பொதுநல ஊழியர் குடும்பத்துடன் வீடுகட்டி வசிப்பர். அதற்கப்புறம் இல்லற வீதி காணும்; அதன்பின் இல்லறத்தார் வாழ்விற்கு வேண்டும் வைத்தியசாலை, கடைகண்ணிகள், பொதுக் களஞ்சியம், உடற்பயிற்சி மன்றம், தொழிற்சாலைகள், நெசவுச்சாலைகள், தச்சர் கன்னார் கருமார் முதலிய சங்கத் தொழிலாளர் விடுதிகள் எல்லாம் அணிஅணியாக அமைந்திருக்கும். தொழிலாளரிடம் வேலை செய்தே மாணவர் தொழிற்கல்வி பயில்வர். சங்கத்திற்கு வேண்டிய பொருள்களனைத்தும் சங்கத் தொழிலாளரே செய்வர். சதிபதிகள், இரண்டு பிள்ளைகள், பெற்றோர்—இவர்கள் வசிப்பதற்கேற்றபடியே ஒவ்வொரு வீடும் அமையும். வயது சென்றவர் சுத்தான்ம சாதனம் செய்து, அறவோர் காப்பில் முதியர் விடுதியில் வசிப்பர். குடும்பத்திற்கேற்றபடியே வீடமையும். எவருக்கும் தேவைக்கு மேலே அநுபவிக்கவோ, வீடெடுக்கவோ விதியில்லை. தொழிலியலிற் சொன்னபடி எல்லார் உழைப்பின் பயனும் பொதுக்களஞ்சியத்திற் சேரும்; அங்கிருந்து ஒவ்வொருவர் வீட்டிற்கும் தக்க படியளக்கப்படும். அதற்கென ஊழியர் வண்டிகளில் சாமானேற்றி வருவர். சங்கத்தில் எவனும் ஏழையல்லன்; எவனும் முதலாளியல்லன். எவனும் எவனுக்கும் அடிமையல்லன். எல்லாரும் உழைப்பாளிகள்; உழைப்பின் பயன் அனைவர்க்கும் பொது. இல்லறத்தார் 6 மணி நேரம் சங்கத்திற்காக உழைப்பர்; 5 மணி அறிவு

வளர்ச்சிக்கும் ஆன்ம வளர்ச்சிக்கும் செலவிடுவர்; 2 மணி உடற்பயிற்சிக்காக; 3 மணி வீட்டொழுங்கிற்காகச் செலவிடுவர்; மீதிநேரம் உல்லாசமாயிருப்பர்; இளைப்பாறுவர். சங்கஞ் சேர்ந்த இல்லறத்தார் இல்லறவியலிற் கூறியபடியே வாழ்வர்.

இவற்றிற் கெல்லாம் அப்புறம் ஊர்காவல், ஊரொழுங்கு பார்ப்போர், சிற்பிகள், வாத்தியக்காரர் முதலியோர் இருப்பர். அவர்களுக்குப்பின் அழுக்கெடுப்போர், சாக்கடைகளைச் சுத்தம் செய்வோர், உடைகளைச் சுத்தம் செய்வோர், தோல் பதனிடுவோர், பூந்தோட்டக்காரர், காய்கறித் தோட்டக்காரர், வயல் வேலை செய்வோர் முதலியோர் இருப்பர். இவர்களுக்கும் அதே சௌகரியந்தான். தொழிற் சௌகரியம்பற்றி இவர்கள் ஊர்முனையில் இருப்பதேயொழிய, வேறு மேல் கீழ், சாதிசமய வேறுபாடே இச்சங்கத்தில் இராது. எல்லாரும் எல்லாப் பொதுக்காரியங்களிலும் ஏற்ற பங்கு கொள்வர். இதற்கப்புறம் வயல்களும், வாய்க்கால்களும், தோட்டங்களும் இருக்கும். சங்கத்திற்கு ஆங்காங்கு நன்னீர் வாவிகளும், அதைச் சுற்றி ஒரு சிறு தோட்டமும் இருக்கும். இறைக்கும் தண்ணீர் தோட்டத்திற் பாயும்படி வாய்க்கால்கள் அமைந்திருக்கும். தண்ணீர் இறைத்துத் தொட்டிகளில் நிரப்பத் தனி ஊழியர் உண்டு. அவர்களுக்கு அதுவே பிழைப்பு. இல்லறத்தாருக்கு வேண்டியதை யெல்லாம் பொதுக் களஞ்சியம் முறைப்படி தரும். பௌர்ணமி தோறும் சங்கம் முழுதும் கூடும்; திருவிழா நடக்கும். இத்தகைய **சுத்த சங்கம்** ஒன்றை வெற்றி பெறகிறுவி என் கண்ணுற் காணவேண்டும்! பரதேவீ,

அருள்புரி ! ஆயிரம் சுத்த வீரர்களையும், ஆயிரம் சக்திகளையும் என் கையால் வளர்க்கவேண்டும். அவர்கள் ஓர் அருட்குலமாக வளரவேண்டும். உலகில் புத்துணர்வும், தேவஜாதியும், சத்யயுகமும் புலரவேண்டும். புதுயுகக் காலை புலர்க !

அதிமனிதர், தீரர், அருட்சக்தி மைந்தர்
புதுயுகவீ ரர்பொலிக வே ! 4

மனித நிலையைத் தாண்டின அதிமனிதர் (Supermen), அத்யாத்ம தீரர், இறைவனருட் சக்தியால் மாறிப்பிறந்த புனிதப்புதல்வர் ஆகிய புதுயுக வீரர் உலகில் பொலிக, பொலிக, பொலிக !

இனிவரும் மனிதன் தெய்வசக்திபெற்ற சுத்த சித்தனை அதிமனிதன் ; உலகம் அவனுக்குத் தவச் சாலை ; வாழ்வே யோகம் ; அவன் உயிர்க்கும் கீதை ; உலவும் அறநூல். அவன் சூரன் ; ஆனால் அசுரனல்லன்; அவன் திடசரீரி; ஆத்ம பலமும் உள்ளவன். அவன் உள்ளே விண்ணரசைக்கண்டு உலகிலும் அதை நாட்டுவான் ; ஆன்மாவில் அமைதியாக ஊன்றி உலகாடலை அருட்பணியாக மேற்கொள்வான் ; ஆத்ம பலத்தால் இயற்கையை வெல்வான். அச்சம், அடிமை, கோழைத்தனம், அகந்தை, ஆசை வெறி, அதர்மப் படைகள் எல்லாம் அவனது நிரக்கனலை அஞ்சியோடும். அவன் இறைவனுக்கே ஆட்பட்டவன் ; எங்கும் அந்த அருளிறைவனையே காண்பவன் ; சாதிசமய கோத்திர வேறுபாடுகள், கதிர்முன் பனியென அவனது அன்புச்சுடரைக் கண்டதும் மறையும். அவன் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு, எவ்விதப் புறச்சட்டங்களின் தேவையுமின்றிப் பொதுநலத்திற் கேற்றபடி நடப்பான்.

அவனது அந்தக் கரணத்தில் பரமாத்மா விளங்குவான்; அவனது வாக்கில் அருள்பொழியும்; அவன் நாடிகளில் சக்திக்கனல் பாயும்; அவனுடல் கண்ணாடி விளக்குப்போல உள்ளொளியை விளக்கும். அவனைச்சுற்றிச் சிற்கனல், தவக்காந்தம், யோக சக்தி பரவும்; அவன் சதாயோகி; எதையும் யோகமாகச் செய்பவன்; இறைவனுடன் இணைபிரியாது வாழ்பவன்; 'என்தேசம் உன்தேசம், என்சமயம் உன்சமயம்' என்பதின்றி, மாந்தரெல்லாம் ஓர் அருட்குலமாக ஆன்மநேய வொருமைப் பாட்டுரிமையுடன் வாழவே அவன் அல்லும் பகலும் பாடுபடுவான். கடவுட் கலப்பு, ஆருயிரன்பு, அருட்பணி விரதம், முத்தூய்மை, தன்மயமாகவே உலகைக் காணும் சர்வ சமரஸம், உடலுழைப்பால் உண்ணல், அருட்புலமையால் அறிதல், மனச்சான்றைப் பணிதல், பூரண நிறைவிற்குத் தவயோகம் புரிதல்—இவையே அதிமனிதன் கோட்பாடு. இத்தகைய தேவமனிதர் சங்கத்தை உலகில் ஆக்கியருள். பரதேவி! உனது அருள் வல்லபத்தாலேதான் எல்லாம் நடக்கும்; இந்த ஆர்வத்தைச் சிறுவயது முதல் என் உள்ளத்தில் கனல்போலத் தூண்டினை! அதை நிறைவேற்றி, இந்த மனித ஜாதியைத் தெய்வ ஜாதியாக்க உனது சக்தியைத் தா!

**அறக்கடவுள் வாழி! யறம்வாழி! வாழி**
**யறவோர் அருள்வெற்றி யே!** 5

தருமதேவதை வாழ்க! அதுவே மாந்தரை நேரிய வழியில் நடத்தித் தெய்வநிலைக்கு உயர்த்தும். மாந்தரை அமரராக்கும் சுத்ததருமம் வாழ்க! தருமச் சுடர்களான அறவோர், திருவருட் சத்தியாற் செய்

யும் பணிகள் வெற்றிபெற் ேறாங்குக! சுத்தான்ம சித்தரே அறவோர்: அவர், உலகில் அத்யாத்ம தருமம் பரவி, மாந்தர் ஒருகுலமாகித் தெய்வவாழ்வு பெறவே தொண்டு செய்யும் உத்தமராவர். உள்ளத்தில் இறைவனையும், வாழ்வில் சுத்த தருமத்தையும் கொண்டு அருட்சக்தியினால் மனித சமுதாயத்திற்கு எல்லையற்ற திருத்தொண்டாற்றும் அறவோர் அடைந்த அத்யாத்ம வெற்றி உலகிற்கெல்லாம் பயனாகுக!

---

## 7. போற்றி !

போற்றுகிறே னுன்னைப் புவியே யிறைவடிவென்
றேற்றுகிறேன் அன்புப் பணி ! 1

உலகே, உன்னை இறைவன் திருவடிவு, விசுவாத்மா, உலகநாதன், உலக மகாசக்தி என்று துதிக்கிறேன்; உனக்கு என் மனதார அன்புப் பணி புரிகிறேன்!

நடமாடுங் கோயில்காள் ! ஞாலத் துயிர்காள் !
கடவுட் குலமொன்றே காண் ! 2

உள்ளத்தில் கடவுளைக்கொண்டு உலவும் கோயில்களா! உலகின் உயிர்களா! உலகம் முழுதும் கடவுட்குலம் ஒன்றே யுள்ளது. நீவிர் அனைவரும் கடவுளருளிற் போந்து வளரும் ஒரே குலமென்பதை யுணர்மின்! போரை ஒழிமின்! ஒற்றுமை யுறுமின்!

வான்பழுத்த வாழ்வே மகிழ்ந்து மகிழ்ந்தின்பத்
தேன்செழித்து வாழ்க தினம் ! 3

கடவுட் கலப்பில் இயற்றும் யோகமாய் விளங்கி வானின்பத்திற் பழுத்த உலக வாழ்வே, நீ மகிழ்வா

யாக! ஏனெனில், நீ இறைவனிச்சைக்கே வேள்வி யாயினை. நீ சுத்த போகத்தால் மகிழ்ந்து மகிழ்ந்து, பரமானந்தத் தேன் செழித்து எந்நாளும் வாழ்க!

**இறைவ னருட்குடைக்கீழ் எல்லாரு மின்ப**
**நிறைவெய்தி வாழ்க நிதம் !** 4

எல்லாம் வல்ல ஆண்டவனின் அருட்குடைக் கீழ் எல்லா மனிதரும், எல்லாப் பெண்டிரும், எல்லா வுயிர்களும், எல்லா நாட்டினரும், இன்பநிறை வுற்றுப் பூரணானந்தமெய்தி நீடூழி வாழ்க!

**விண்குடை தாங்கியருள் வேந்தனுக்கே யாளாவோம்,**
**பண்ணும் பணியும் படைத்து.** 5

விரிந்த வானத்தையே குடையாகப் பிடித்து எம்மை ஆண்டருளும் இறைவனுக்கே நாங்கள் ஆளாவோம். அவனுக்கே நாங்கள் பாடும் பாட்டையும் (பண்), எங்கள் பணியையும், அதன் பயனையும் நிவேதித்து வழிபட் டுய்வோம்! (படைத்து = நிவேதித்து).

## 8. அனைத்தும் வாழ்க!

**இதயம்பூ ; மந்திர மின்சொல் ; லுன்னன்பு**
**துதியாக வேயருளாய் தொண்டு.** 1

எனது உள்ளமே உன்னை வழிபடும் மலராகுக! உன்னருளிற் பூத்துப் பிறருக்கு யான் கூறும் இன்சொல்லே மந்திரமாகுக! உனது அருளாணைப்படி நான் ஆருயிர்களுக்குப் புரியும் அருட்பணியே தோத்திரமாகுக! என் மனமலர் என்றும் உனது திருவடியி லிருக்கட்டும்! என் உள்ளத்தாமரை உனது அரியணையாகட்டும்! இதுவே யான் உனக்குச் செய்

யும் வழிபாடு ! எல்லா வுயிர்களிடத்தும் நீ கோயில் கொண்டு உலாவுகிருய். அருளிறைவனே, எல்லாரும் இன்புற்று ஒன்றுபட்டு, உனது அருட்குலமாக, உன்னறிவின்பத்தில் வாழும் உண்மையை என்றுட் பேசு ! அதையே யான் உலகுயிர்களுக்கு அகந்தை யின்றி வணக்கத்துடன் இனிது பேசுகிறேன் : நீ பாட்டு, நான் குழல்; நான் நாக்கு, நீ வாக்கு ; நான் ஆயுதம் ; நீ என் வீரத்தலைவன். அருளிறை வனே, நான் சும்மா பாடிச்செல்ல மாட்டேன் ; பணி புரிவேன் ; உன்னருள் வல்லபத்தால் பணி செய்ய அருள்! அதுவே தொழுகை. மனமடங்காது, வாயாற் சொல்லி உன் பெயரை எச்சிலாக்க மாட்டேன் ! உனது சிற்சக்தி இன்பத்திற்படைத்த கோடானு கோடி ஜீவராசிகளுக்கும் இன்பம் செழிக்க எனது ஜீவநதி பாய்க ! இதுவே உன்னைத் துதித்ததாகும். சுத்தனே, இதுவே என் வழிபாடு ; இதற்கு ஆற்றல் அருளுதி ! எனது முறையீட்டை ஏற்றருள் புரிதி ! ஓம் சுத்தசக்தி !

**போரற்றுப் பாரிற் பொறுமை விளங்கியுயிர்**
**சீருற்று வாழ்க செறிந்து!** 2

அருளிறைவனே, உலகில் சண்டை சச்சரவுகள் ஒழிக ! அமைதி பொலிக ! உயிர்க்குலங்கள், உனது அருட் பெருக்கத்தால், 'நீயே அனைத்தும், நீயே அனைத்துளும்' என்று அறிந்து சிறப்புற்று, ஒன்று பட்டு வாழ்க, வாழ்க !

சுத்தனே ! சாதிசமய சாத்திரகோத்திர ஆணவ அபிமான முக்குண தொந்த விகற்பப் போர்களெல் லாம் ஒழிக, உடனே ஒழிக ! நீயே தந்தை ; உன் னருளே தாய் ; நீ படைத்த உயிர்கள் உன் செல்வப்

புதல்வர் ; உன்னருட்குல மைந்தர். இந்த உணர்வில் எல்லாரும் ஒன்றுபட்டு வாழ்க, வாழ்க! அமைதி நிலவுக! அசுர மாயங்கள் அழிக, அழிக! மனிதத் தன்மை தெய்வத் தன்மைக்கு உயர்ந்து திருவுற் றொளிர்க! உன்னருட்சுடர் பொலிக, பொலிக! ஓம் சுத்த சக்தி!

**உன்பொற் றிருமுகத்தை யுள்ளும் புறமுங்கண்**
**டின்புற் றிருக்க வருள்.** 3

உள்ளும் புறமும் மங்கலமான அழகுச்சுடர் வீசும் உன் பொன் முகத்தைக் கண்டு இன்பமுற் றிருக்கத் திருவருள் புரிவாயாக!

அருளே! என் முகம் எங்கே நோக்கினும், எல்லா முகங்களினும் உன் முகமே கண்டு, அக்காட்சி யில் இன்புற்றிருக்கச் செய்!

எம்மதம், எந்நெறி, எத்தேயம், எம்மாந்தர் உள் ளத்தும் நீயே! எவ்வுயிர்ப்பும் உன்னுயிர்ப்பே! நீயின்றி யாதுண்டு? இயலான்மா, ஜீவான்மா, பரரான்மா, பரமான்மா எல்லாம் நீயே; உடலும், உயிரும், உயிர்ப்பும், கண்ணும், ஒளியும், காட்சியும் நீயே! விண்ணும் மண்ணும் உனது அருள் விளக்கமே! எங்கு நோக்கினும் என்னை நோக்கு! உலகில் பேதபுத்தி யொழிக; நீயே அனைத்தும் என் னும் உண்மையறிவு ஒளிர்க! எம்முகத்தும் நின் முகம் விளங்குக! ஓம் சுத்த சக்தி!

**இத்தல வட்டமெலா மென்மனைபோற் றொண்டுசெயச்**
**சக்திக் கனலெனக்குத் தா.** 4

இவ்வுலக வட்டமெல்லாம் எனது சொந்த வீடென்றே கருதி, உலகோரெல்லாம் ஒன்றுபட்டு, உனது அருட்பெருமை யுணர்ந்து, உன் அருட்குல

மாக வாழத் தொண்டுசெய்ய வேண்டும் ; இஃது என் ஆர்வம். அருளிறைவனே, உனது சக்திக்கனலை, தெய்வ பலத்தை என்னுட் பொழி! அஃதின்றி என்னால் அணுவளவும் அசைய முடியாது! நீ என்னை இயக்கு ! உன்னருளாணையின்றி, உனது அருளாற்றலின்றி யான் பிணம் ; நீயே என் உயிர் ; உன் இச்சைப்படியே இவ்வுயிர்ப் பாவையை இயக்கியருள் ! நீ என்னுள் வாழ்வதே வாழ்வு, உயிர்ப்பதே உயிர், நினைப்பதே நினைவு, மொழிவதே மொழி, செய்வதே செய்கை! ஓம் சுத்த சக்தி !

நல்லறிஞ ரோங்க நலமோங்கிப் பூவெங்கும்
எல்லாரும் வாழ்க வினிது ! 5

உலகில் பூரணஞானிகள் ஓங்குக ! உயிர்களுக்கெல்லாம் எல்லா நலங்களும் ஓங்குக ! எல்லாரும் ஓர் அருட்குலமாகி இன்புற்று வாழ்க ! ஓம் சுத்த சக்தி !

பன்னிரண்டாவது, சித்தி யியல் முற்றிற்று

யோக சித்தி முற்றிற்று.

அன்பு ! அமைதி ! அருளின்பம் !

# செய்யுளகராதி


| பாட்டு | பக்கம் |
|---|---|
| **அ** | |
| அகிலவாழ் | 58 |
| அசையா வுறுதி | 312 |
| அச்ச மடிமை | 240 |
| அச்ச மகந்தை | 317 |
| அடிமைத் தளை | 405 |
| அதிகாரஞ் சொற்ப | 318 |
| அதிமனிதர் | 429 |
| அந்தந்த நாட்டிற் | 277 |
| அப்பரைப் | 150 |
| அமைதியின் | 382 |
| அயற்பொறி | 270 |
| அருட்கோயில் | 423 |
| அருட்பணி யின்ப | 259 |
| அருளறிவி | 117 |
| அருளற்ற | 107 |
| அருளாலே | 19 |
| அவலப் படுவினை | 249 |
| அழகுநிறை | 114 |
| அழகெனக் | 407 |
| அழியாப் | 409 |
| அறக்கடவுள் | 430 |
| அறங்காக்கும் | 296 |
| அறமன்பு | 192 |
| அறமென் றறிந் | 65 |
| அறவின்பம் | 95 |
| அறவோர், தொழிற் | 320 |
| அறிதற் கரிதை | 422 |
| அறிவுச் சுடரோ | 21 |
| அறிவு தொழி | 101 |
| அறிவுந் திருவும் | 222 |
| அற்பம் பெரிய | 90 |
| அற்றுப் பசி | 353 |
| அன்புண்மை யாக | 27 |
| அன்புண்மை யின் | 81 |
| அன்புள் ளிருந் | 126 |
| அன்பே கடவு | 125 |
| அன்போடு | 217 |
| அன்னிய மில்லாத | 420 |
| அன்னை யளித் | 216 |
| அன்னையன் புக் | 324 |
| **ஆ** | |
| ஆக்க லழகு | 187 |
| ஆசா னருளு | 110 |
| ஆசை, பொறுமை | 413 |
| ஆசையழுக் | 414 |
| ஆட்சிபெற் | 55 |
| ஆண்பெண் | 175 |
| ஆயிரம்பேர் | 281 |
| ஆராய்ந்து | 299 |
| ஆருயிர்கட் கன்புற் | 289 |
| ஆருயிர்கட் கோ | 37 |
| ஆர்வக் கன | 415 |
| ஆலுக்கும் | 43 |
| ஆறுருவி | 384 |
| ஆற்றப் பொறுத்து | 325 |
| ஆற்ற லறி | 173 |
| ஆற்றலைப் போக்கி | 268 |
| ஆற்றல் பொறை | 145 |
| ஆற்றல் மிகப் | 104 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| இ | |
| இடித்துத் | 142 |
| இதயம்பூ | 432 |
| இத்தல வட் | 434 |
| இப்பொய்யே | 168 |
| இயல்பான வுன்னை | 420 |
| இயற்கையின் | 45 |
| இயற்கையே | 39 |
| இயற்கைவளத் | 102 |
| இயற்றுக | 284 |
| இயற்றுவ தெல்லா | 50 |
| இரத்தக் கலப் | 228 |
| இரவுபக லின்றி | 378 |
| இருக்கிறே னீங் | 416 |
| இருப்பதொரு | 43 |
| இல்லறமீச | 180 |
| இல்லறமே | 181 |
| இல்லாளோ | 197 |
| இல்விளக் | 223 |
| இவ்வழிச்செல் | 64 |
| இவ்வுலகைப் | 262 |
| இளமையிலே | 225 |
| இளைத்தோர்க் | 263 |
| இறந்தபின் னெப் | 66 |
| இறைவ னருட் | 432 |
| இன்சொல்லி | 130 |
| இன்ப வலை | 413 |
| இன்மை மடமை | 265 |
| இன்பத்தி லின்பம் | 372 |
| இன்றுசேய் | 223 |
| இன்றுவாள் | 313 |
| இன்னுத | 134 |
| ஈ | |
| ஈகையு ளீகையா | 106 |
| ஈசன் றிரு | 89 |
| ஈட்டிமனை | 196 |
| ஈதலிற் காத | 202 |
| ஈரெட்டு நான் | 349 |
| உ | |
| உடலுறுதி செய்க | 339 |
| உடல்பொரு | 143 |
| உண்டில்லை | 40 |
| உண்ண வுடுக்க | 76 |
| உண்ணுமை | 362 |
| உண்ணும் பணி | 363 |
| உண்மைக் குயிர் | 398 |
| உண்மையே திண்மை | 296 |
| உயிரைக் கொடு | 144 |
| உயிர்மேனி | 36 |
| உலகி லுன் ளுட்டை | 325 |
| உலகோ ரருட் | 77 |
| உலவுடலஞ் | 38 |
| உழைத்த வுண | 251 |
| உழைத்துவிளைத் | 273 |
| உள்ளத்தான் | 10 |
| உள்ளப் பொது | 34 |
| உள்ளொளியிற் | 79 |
| உள்ளொன்றி | 328 |
| உறவுந் துணையு | 419 |
| உன்பொற் றிரு | 434 |
| ஊ | |
| ஊற்றைப்போற் | 390 |
| எ | |
| எங்குற்றே | 95 |
| எண்குணத்தான் | 11 |
| எதுநீ தென | 74 |
| எத்தனையோ | 56 |
| எத்துணை யாரா | 88 |
| எந்தா யருட்பணி | 324 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| எப்போது மெண்ணி | 394 |
| எல்லார்க்கும் | 209 |
| எல்லா மவனுடைமை | 14 |
| எவரெவ ரெத் | 307 |
| எழுந்து விழுந் | 380 |
| எள்ளி யிழி | 166 |
| எனதென | 28 |
| என்றுந்தான் | 398 |
| என்று மிருப்ப | 392 |
| **ஏ** | |
| ஏதானு மொன்றை | 248 |
| ஏதேது | 67 |
| ஏரோசை | 271 |
| **ஐ** | |
| ஐங்கோட்டைக் | 17 |
| ஐந்த னணியி | 319 |
| **ஒ** | |
| ஒருபயி ராக்கி | 272 |
| ஒவ்வோ ருயிரு | 50 |
| ஒளிசெய்யுங் கல்வி | 305 |
| ஒற்றுமையே | 327 |
| ஒன்றினை | 370 |
| ஒன்றென்றுந் | 22 |
| **ஓ** | |
| ஓங்கார | 8 |
| ஓசைப் பட்டா | 48 |
| ஓம்சுத்த சக்தி | 337 |
| ஓம்வணக்க | 285 |
| ஓருண்மை | 261 |
| **க** | |
| கடன்செய் | 231 |
| கட்கஞ்சாத் | 275 |
| கட்டுக்கடங்கி | 318 |
| கண்ணைக் கருத் | 120 |
| கண்ணைத் திறந்து | 421 |
| கண்ணொத்த | 200 |
| கதறக்கொன் | 138 |
| கதிராற் கட | 48 |
| கர்ப்பூரத் தீபவொளி | 383 |
| கல்வி, தொழில் | 305 |
| கல்வியும் வாழ் | 109 |
| கற்கண்டு | 165 |
| கற்புயிர் | 189 |
| கற்ற வழி | 107 |
| கனகன்சேய் | 149 |
| கனத்த நிதி | 403 |
| கன்மீது | 130 |
| **கா** | |
| காக்கையிடம் | 284 |
| காதலரை | 163 |
| காதலுல காக் | 205 |
| காதல் மணமே | 185 |
| காந்தமுனை | 184 |
| காமம் வெகுளி | 33 |
| காலைபோற் | 314 |
| காலையி லாற் | 156 |
| காற்றைறக் | 12 |
| **கி** | |
| கிளையுரிமை | 327 |
| **கீ** | |
| கீண்மேற் | 90 |
| **கு** | |
| குடிகளை தேர்ந் | 297 |
| குடிசைத் தொழி | 266 |
| குடியிற் குடி | 295 |
| குலமோங்குஞ் | 201 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| குலனென் றணங் | 221 |
| குற்ற மிரங்கி | 155 |
| **கூ** | |
| கூரை பிடுங்கிக் | 309 |
| கூலி குறைத்தாற் | 279 |
| கூற்றஞ்சி | 390 |
| கூற்று மிடுகா | 139 |
| கூற்றை யுதைத் | 393 |
| **கை** | |
| கைதந்து | 282 |
| கைத்தொழி லொன் | 266 |
| **கொ** | |
| கொண்டுவந்த | 410 |
| கொலைபுலை | 82 |
| கொல்லேன் | 135 |
| **கோ** | |
| கோள்பொய் | 162 |
| கோதேறி | 315 |
| **ச** | |
| சக்திக் கதிராற் | 335 |
| சக்தியே முக்தி | 336 |
| சங்கடம் போன்று | 286 |
| **சா** | |
| சாதல், பழைய | 394 |
| சாவையு மஞ் | 215 |
| **சி** | |
| சிதையாம லெண்ணி | 380 |
| சிந்தை யடக்கிச் | 171 |
| சிரிப்பு மழு | 412 |
| சிலருக்குச் செல்வச் | 283 |
| சிற்றூரிற் | 302 |
| சினந்துடனே | 367 |
| **சீ** | |
| சீரியர் கேண்மை | 141 |
| **சு** | |
| சுமைபுமெளி | 127 |
| சுற்றம் புலன் | 219 |
| சுற்றும்பேய் | 366 |
| **செ** | |
| செய்யுங் கிணறுஞ் | 273 |
| செவிப்படக் கேட் | 374 |
| **சொ** | |
| சொல்லிற் குறை | 287 |
| சொற்போரும் | 271 |
| **சோ** | |
| சோர்வு விடுத்துச் | 76 |
| சோறூட்டும் | 213 |
| **த** | |
| தக்க மனை | 199 |
| தங்கு முயற்சி | 247 |
| தந்தை செயலே | 218 |
| தம்மைக் | 29 |
| தற்பெருமைத் | 164 |
| தன்பிழையைப் | 133 |
| தன்னடை | 154 |
| தன்னியல்புக் | 279 |
| தன்னியல் பாந் | 55 |
| **தா** | |
| தாக்கற்று | 22 |
| தாயன்பு காட் | 129 |
| தாய்சக்தி | 209 |
| தாய்சொல்லு | 217 |
| தாய்மா ரிடத் | 209 |
| தாய்மொழியுந் | 285 |
| தாராட்டிச் | 225 |
| தான முயர் | 298 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| தானாகக் கூடும் | 376 |
| தானா நிறை | 62 |
| தி | |
| திருநாள் | 235 |
| தின்றுபடுத் | 242 |
| தீ | |
| தீயமனத் | 358 |
| தீனி முயக் | 371 |
| து | |
| துணிந்துமுன் | 288 |
| துரியமலை மீதேறி | 417 |
| தூ | |
| தூசியிலா ஆடி | 413 |
| தூயவுடை யூனும் | 359 |
| தூயுணவு | 358 |
| தூய்மையும் | 167 |
| தெ | |
| தெய்வ மிக | 415 |
| தெய்வ வொளி | 153 |
| தே | |
| தேகாதிக் கெட்டாத | 392 |
| தேர்ந்தோர் | 300 |
| தேவா சுரர் | 254 |
| தேவைக்கு மேற் | 306 |
| தேவை யறிந்து | 230 |
| தொ | |
| தொடர்ந்தாரின் | 73 |
| தொண்டா னுறு | 258 |
| தொத்தடிமை | 301 |
| ந | |
| நடமாடுங் | 431 |
| நடுக் கியடக் | 315 |
| நடையை மதியை | 161 |
| நம்பு, நினை | 99 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| நயத்தால் | 310 |
| நல்ல குண | 187 |
| நல்ல துணை | 226 |
| நல்லறிஞா | 435 |
| நல்லாளைக் | 182 |
| நல்லொழுக்கம் | 326 |
| நல்வேலை யேசூழ | 258 |
| நன்மக்க ளின் | 224 |
| நன்றாக்கங் | 228 |
| நா | |
| நாடிப் பணிந் | 114 |
| நாட்டில் வினை | 264 |
| நாட்டிற் பெருந் | 113 |
| நாட்டி னடிமையு | 260 |
| நாந்திருந்தி | 323 |
| நாளாக | 411 |
| நானென்று | 24 |
| நி | |
| நிலநலத்தை | 238 |
| நிலைக்கு நல | 368 |
| நிலைத்த மனமே | 365 |
| நினைத்து நினைத்து | 379 |
| நினைப்பி னுரு | 369 |
| நூ | |
| நூற்றுத் தறி | 274 |
| நே | |
| நேசம் பதிந்து | 24 |
| ப | |
| பகட்டவணி | 193 |
| பக்குவத்திற் | 169 |
| பசிக்குத் தொழி | 238 |
| பசியு நசை | 262 |
| படையாலே | 312 |
| பணஞ்செய் | 281 |
| பணத்தா லுலகு | 282 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| பணிந்து நடக் | 326 |
| பத்தாஸனம் | 341 |
| பத்தாறும் | 405 |
| பயிர்செய்வான் | 272 |
| பயனுள கூறும் | 168 |
| பலர்பற் | 16 |
| பழமை பழமை | 69 |
| பற்றற்றுப் | 27 |
| பற்றற்று வாழ்ந்து | 373 |
| பற்றே துய | 408 |
| **பா** | |
| பாகத்தி | 227 |
| பாடுபட் டோருக்கு | 277 |
| பாட்டும் பரதமும் | 119 |
| பாருலக மெங் | 293 |
| பாரொரத்து | 316 |
| பார்தழுவிப் | 303 |
| பார்த்தால் | 328 |
| பார்மனம் பற்றிப் | 311 |
| பார்வாழ்க்கை | 422 |
| **பி** | |
| பிண்டத்தி | 23 |
| பிரம சரியம் | 172 |
| பிறப்பிறப் பில்லா | 392 |
| பிறர்க்கென | 87 |
| பின்னு வதனைப் | 285 |
| **பு** | |
| புண்ணுற்று | 203 |
| புலனைவென் | 108 |
| புவித்தாய் | 280 |
| புறத்தாய்மை | 170 |
| **பூ** | |
| பூணோடு பொன் | 183 |
| பூத வுடலுக் | 359 |
| பூரணத்தை யுட் | 334 |
| **பெ** | |
| பெண்ணிற் | 194 |
| பெண்ணின்றி | 53 |
| பெண்ணைப் பழிக் | 204 |
| பெயர்வடி | 15 |
| பெற்றோருங் | 221 |
| **பே** | |
| பேசாது பேசிப் | 46 |
| பேரைக் கெடுத் | 158 |
| **பொ** | |
| பொதுநலமே | 300 |
| பொறியா லொருவ | 269 |
| பொறுமை புவி | 148 |
| பொன்புக ழா | 128 |
| பொன்னும் | 419 |
| பொன்னாற்றிற் | 381 |
| **போ** | |
| போக்குவரவற்றபூரண | 52 |
| போக்குவர வற்ற | 97 |
| போக்கும் | 75 |
| போரற்றுப் | 433 |
| போற்றுக தாய்மொ | 116 |
| போற்றுகிறே | 431 |
| **ம** | |
| மகிழ்விற் | 30 |
| மடைவாய் | 235 |
| மண்ணுமு துண்ணர் | 275 |
| மதிநீ வழிநீயே ; | 338 |
| மலர்மெத்தை | 287 |
| மழையின் | 216 |
| மனங்கொண் | 308 |
| மனத்தி லருண் | 403 |
| மனத்தி லிரக்க | 136 |
| மனத்தா ருவி | 416 |
| மனிதனுக் கில்லை | 294 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| மனைவியுடன் | 198 |
| மன்னு மனச் | 63 |
| **மா** | |
| மாசற்ற வுள்ள | 330 |
| மாணப் பெரிய | 140 |
| மாமனிதன் | 253 |
| மாரடிப்பு | 395 |
| மாறித் திரிந்து | 44 |
| மாற்றான்செய் | 132 |
| மானிடர் தெய்வத் | 329 |
| **மு** | |
| முகத்தில் விள | 152 |
| முடிக்குந் திற | 250 |
| முயல்க | 246 |
| முயற்சிக்குச் | 247 |
| முரடர் துணையு | 157 |
| **மூ** | |
| மூவழுக்கு | 86 |
| **மெ** | |
| மெய்யன்பு | 32 |
| மெய்யு மறி | 105 |
| மெல்லியர்க்கு | 121 |
| மென்மை யுட | 189 |
| **மோ** | |
| மோகரிக | 71 |
| **யா** | |
| யானு முலகு | 98 |
| **வ** | |
| வகுக்கு மன | 42 |
| வசைசின | 84 |
| வட்டாஞ் | 160 |
| வந்தனையும் | 370 |
| வளமறிவு வீரம் | 322 |
| வறுமையற | 304 |
| வன்னியாய்க் | 176 |

| பாட்டு | பக்கம் |
|---|---|
| **வா** | |
| வாயடங்க | 375 |
| வாய்ப்பேச் சடங்க | 377 |
| வாய்மை நல | 31 |
| வாய்மை, பகை | 146 |
| வாவென்னும் | 396 |
| வாழ்க்கைத் துணை | 190 |
| வானும் விளை | 111 |
| வான்பழுத்த | 431 |
| **வி** | |
| விண்குடை | 432 |
| விண்ணின் விரிந்த | 80 |
| வித்தக நல் | 319 |
| விரிவா னுலகை | 38 |
| விருப்பினிய | 131 |
| விழுமி னெழுமி | 20 |
| விளைப்பானே | 278 |
| வினையளவே | 51 |
| வினையுலகை | 57 |
| **வீ** | |
| வீடுகளி னீட்டம் | 321 |
| வீட்டின் விரி | 180 |
| வீணணி | 232 |
| வீண்பகட்டும் | 243 |
| வீர மகனையே | 210 |
| **வெ** | |
| வெண்டா மரையில் | 390 |
| வெள்ளத் தனைய | 109 |
| வெற்றிபெற | 326 |
| வெற்றெறும்பை | 408 |
| **வே** | |
| வேறோ தொழிக | 159 |
| வேறுபா டெல் | 54 |
| **வை** | |
| வையமெலாம் | 255 |